தென்னிந்தியத் திருச்சபை - கன்னியாகுமரிப் பேராயம்

# அருளுரைக் கையேடு

## 2011



THAT THEY MAY HAVE LIFE
KANYAKUMARI DIOCESE C.S.I.

Good News for evil times

அருளுரைக் கையேடு

# தென்னிந்தியத் திருச்சபை

# கன்னியாகுமரிப் பேராயம்

# 2011

வெளியீடு : தொடர்புத்துறை

# ஆசியுரை...

தயாபரரின் தடயத்தினில் தன்னலமற்ற திருப்பணியை தொடரும் அன்பர்களே! நிமலன் கிறிஸ்து இயேசுவின் திருப்பெயரில் வாழ்த்துக்கள்.

மானிட வாழ்வினில் மறைவாக்கு மறுமலர்ச்சி ஏற்படுத்தும் ஊடகமே என்பதை நாம் அறிந்துள்ளோம். இவ்வாக்கினை அறிவிப்பதற்கு அழைப்பு பெற்றுள்ள நாம் அனைவரும் ஆண்டவரின் அங்கீகரிப்பிற்கும், அதிகாரப்படுத்துதலுக்கும் நெறியுடன் முறைப்படுத்தப்பட்டுள்ளோம். இந்த ஒப்படைப்பின் உறுதியினில் அறிவிக்கப்படும் இறைவாக்கு பொருள் நிறைந்த வாழ்வுக்கு நம்மை திருநிலைப்படுத்துகிறது. ஆகவே இறைப்பணியாளர்கள் அனைவரும் இறை திருவடி பணிந்து இறை விருப்பம் அறிந்து இறை வாக்கினை அறிவிக்கும் துணை நூலாக அருளுரை கையேட்டை பயன்படுத்திடுங்கள். இறைவேண்டுதலோடு ஆயத்தம் செய்து, இறை மக்களின் வாழ்வு சூழலை புரிந்து இறைவாக்கினை அறிவிக்க அன்புடன் வேண்டுகிறேன்.

இப்பணிவிடையில் ஒப்படைப்புடன் செயல்பட்டிருக்கும் தொடர்புதுறை இயக்குநர் அருள்திரு. N. விபின் ஜாண், தொகுப்பாசிரியராக முறையுடன் செயல்பட்ட அருள்திரு. R. சாம்பிறின்ஸ் மற்றும் அவர்களுடன் இணைந்து செயல்பட்டவர்கள், அருளுரைகள் வழங்கிய போதகர்கள், திருப்பணியாளர்கள், மேலும் அச்சுப்பணி செய்தோர் அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

***இறையாசி உங்களோடிருப்பதாக !***

**இறைவேண்டுதலோடு,**

பேரருள்திரு. **G. தேவகடாட்சம்**

துணை பிரதமப் பேராயர் C.S.I. & பேராயர், குமரிப் பேராயம்

## *இயக்குனரிடமிருந்து . . .*

திருவாய் மலர்ந்து கற்பித்த (மத். 5 : 2) ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருபெயரில் உங்களை வாழ்த்துகிறேன்.

அருளுரையின் வழியாக கடவுளின் திருவாக்கினை மக்களிடையே எடுத்தியம்ப அழைக்கப்பட்டவர்களே இறைப்பணியாளர்கள். நமது அருளுரைகள் கேட்பவர்களுக்கு தெளிவையையும், நம்பிக்கையையும், நல் எதிர்நோக்கினையும் தரவேண்டும். மட்டுமல்ல புது தீர்மானங்களை எடுப்பதற்குரிய வலுவினையும், வளமையினையும் தர வேண்டும். ஆகவே இறைவேண்டுதலோடும், இறை ஒப்படைப்போடும் தியானித்து தொழுகையினை சிறப்புப்படுத்தும் தொடர்பாக அருளுரையினை தொகுத்து தருவோம். அதுவே கிறிஸ்தவத்தின் பண்புகளை வளப்படுத்தும் வடிகாலாக அமையட்டும்.

2011 - ம் ஆண்டின் அருளுரை கையேடு தென்னிந்திய திருச்சபையின் தொழுகை அட்டவணையின் அடிப்படையில் தொகுக்கப்பட்டுள்ளது. இப்பணியில் ஆலோசனைகள் தந்து மிகவும் உற்சாகப்படுத்திய நமது அன்பு பேராயர் பேரருள்திரு. G. **தேவகடாட்சம்** அவர்களுக்கு மனமார்ந்த நன்றியினை கூறுகிறேன். அருளுரைகளை தொகுக்கும் பணியில் தொகுப்பாசிரியராக பொறுப்போடு செயல்பட்ட அருள்திரு. இரா. சாம் பிறின்ஸ் அவர்களுக்கும், இணைந்து செயல்பட்ட குழுவினருக்கும் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் அருளுரைகளை ஆயத்தம் செய்து தந்த போதகர்கள், திருப்பணியாளர்கள் அனைவருக்கும் நன்றி. சிறப்பாக உழைத்து அச்சுப்பணிகளை செய்து தந்த மார்த்தாண்டம் C.S.I. அச்சகத்தாருக்கும் அனைத்து பணியாளர்களுக்கும் மனப்பூர்வமான நன்றி.

தீய உலகில் அருளுரையின் வழியாக நற்செய்தியின் பொருளினை வெளிப்படுத்துவோம். ஆண்டவரின் அன்பிற்கு சான்றாவோம்.

தூய ஆவியரின் துணை உங்களோடிருப்பதாக!

இறைவேண்டுதலுடன்,<br>
அருள்திரு. **N. *விபின் ஜாண்***<br>
இயக்குநர், தொடர்பு துறை

## *தொகுப்பாசிரியரிடமிருந்து . . .*

***இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் வாழ்த்துக்கள்!***

உயிரூட்டம் நிறைந்த கடவுளின் வாக்கினை உலகிற்கு உணர்த்தும் ஊடகமே அருளுரை ஆகும். இந்த காலகட்டத்தில் ஆற்றல் நிறைந்த இறைவாக்கு அகிலத்தினை அறைகூவி அழைக்கிறது. மட்டுமல்ல அதுவே ஆன்மாவையும், ஆவியையும் பிரிக்கும் அளவிற்கு ஊடுருவி செல்கிறது. இறைவாக்கு என்ற பெயரில் திரித்து, பிரித்து, வலிந்து பரப்பப்படும் தவறான போதனைகள் அதிகரித்துக் கொண்டிருக்கும் தற்கால தீய உலகின் சூழலில் நற்செய்தியை அக தெளிவுடன், அசையாத உறுதியுடன், ஆண்டவர் வருகைக்கான எதிர்நோக்குடன், அர்ப்பண உள்ளத்தோடு அறிவிப்பது தான் நமது முக்கியமான கடமையாகும். ஆகவே இறைப்பணியாளர்களாகிய நாம் இறை வேண்டுதலோடும், இறை ஒப்படைப்போடும் இப்பணியை நிறைவேற்றி இறையாளுமையை அனுபவித்து மகிழ்ந்திடுவோம்.

2011 - ம் ஆண்டின் அருளுரை கையேடு தென்னிந்திய திருச்சபையின் வழி காட்டுதலின்படி தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு வடிவம் தந்து ஊக்கப்படுத்திய பேராயர் பேரருள்திரு G. **தேவகடாட்சம்** அவர்களுக்கு உளம் நிறைந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன். இப்பணிக்கு எல்லா நிலையிலும் ஆக்கம் தந்த பேராய தொடர்புத்துறை இயக்குநர் அருள்திரு. N. விபின் ஜாண் அவர்களுக்கும் தொகுப்புரை பணியில் உடனின்ற அருள்திரு. பாலஸ் செல்வமணி அவர்களுக்கும் மொழியாக்க பணியில் உதவிய அருள்திரு. R. ஹென்ஸ்லின் நேசராஜ், பிழை திருத்தப்பணியில் சிறப்புடன் செயல்பட்ட அறிவர். P. ஏஞ்சல் ஹென்ஸ்லின் நூல் வடிவம் பெற உழைத்த அருள்திரு. சலீம் தங்ககுமார், அருள்திரு. அஸ்வின், திருவாளர் J.J. இம்மானுவேல் ஆகியோருக்கும் முழுமையான பங்களிப்புடன் அச்சுப்பணி செய்த மார்த்தாண்டம் C.S.I. அச்சகத்தார், கணினி பணியாளர்கள், இதர பணியாளர்கள் அனைவருக்கும் நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன்.

அனைத்து மாட்சியும் கடவுளுக்கே ஏற்புடையதாகட்டும்!

இறைவேண்டுதலுடன்

அருள்திரு. ***இரா. சாம் பிறின்ஸ்***

(தொகுப்பாசிரியர்)

# LITURGICAL COLOUR - 2011

| | | | | | |
|---|---|---|---|---|---|
| January | 1 | to | January | 6 | - **White** |
| January | 7 | to | March | 8 | - **Green** |
| March | 9 | to | April | 23 | - **Purple** |
| April | 24 | to | June | 11 | - **White** |
| June | 12 | to | June | 18 | - **Red** |
| June | 19 | | | | - **White** |
| June | 20 | to | November | 26 | - **Green** |
| November | 27 | to | December | 24 morning | - **Purple** |
| December | 24 | evening to December 31 | | | - **White** |

**01-01-2011** **உடன்படிக்கையின் நாள்**

# புதிய உடன்படிக்கை

## A NEW COVENANT

எரே. 31:31-34 2கொரி. 2:14-17
திபா. 145 மத். 14:22-23

*"இயேசு கூட்டத்தினரை அவ்விடத்திலிருந்து அனுப்பிக்கொண்டிருந்தார். அப்பொழுது சீடரையும் உடனே படகேறித் தமக்குமுன் அக்கரைக்குச் செல்லுமாறு அவர் கட்டாயப்படுத்தினார்." மத்.14:22*

**மன்றாட்டு : நிலையான கடவுளே, தொடக்கமும், முடிவுமானவரே உம் அன்பும், அருளும், கரிசனையும், பாதுகாப்பும் இதுவரையிலும் எங்களை நடத்தி வருகிறது. மீண்டுமோர் வருட தொடக்கத்தை அருளியிருப்பதற்காய் நன்றி. உம் திருமைந்தர் இயேசுகிறிஸ்துவின் அன்பின் புது உடன்படிக்கையால் எங்களை திருத்தியமைத்து புதிதாக்கியருளும். நாங்கள் உம்மோடும், மக்களோடும், அனைத்து படைப்புகளோடும் உடன்படிக்கையின் உறவினில் இணைத்து வாழ ஆற்றல் அருள்வீராக. உம்மோடும், தூய ஆவியரோடும் என்றும் ஒரே கடவுளாக வாழ்ந்து ஆளுகை செய்யும் எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வழியாக வேண்டிக்கொள்கிறோம். - ஆமென்.**

இயேசு கிறிஸ்து கடலோரத்தில் திரளான மக்களுக்குப் போதித்து, அவர்களைப் போசித்த பின் அக்கரைக்கு அழைத்தார். 2010 ஆம் ஆண்டில் நமக்கு ஆலோசனை மற்றும் உணவு தந்து நடத்திய இறைவன் 2011 ஆம் ஆண்டிற்குள் பிரவேசிக்க அழைக்கிறார். மாற்கு நற்செய்தியில் (4:35) 'அக்கரைக்குப் போவோம் வாருங்கள்' என்று சீடர்களை அழைத்து, அவர்களுடன் படவில் சென்றார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இரண்டு நற்செய்தி நூற்களும் ஒரே நிகழ்வினை விவரிக்கும் முறை முக்கியமல்ல. அவர்களும் அவரும் அக்கரைக்குப் போக வேண்டும் என்பது தான் முக்கியம்.

அக்கரைக்குக் கடலை கடந்து தான் போக வேண்டும். நடுக்கடலைக் கடந்து, எதிர் காற்றை எதிர்கொண்டு அலைகள் வழியாகத்தான் அக்கரைக்குப் போக முடியும் என்பதே உண்மை நிலை. அக்கரைக்குப் போவதை, 'வளர்தல், முன்னேறுதல், மறுநிலைக்கு நகர்தல்' என்றும் சிந்திக்கலாம், அக்கரையை நாம் எதிர்நோக்கும் முன்னேற்ற நிலை எனக் கொள்ளலாம். அந்நிலையை அடைய நாம் அவருடைய ஆலோசனைப்படி செயல்பட வேண்டும். அதாவது, அவரது கிருபையும், நமது கிரியையும் அவசியம். நாம் அக்கரைக்குப் போகும்போது, அவர் நம்முடன் ஏற்படுத்தியிருக்கும் புதிய உடன்படிக்கையின் அம்சங்களை மனதில் கொண்டு பயணிப்போம்.

## அவர் நம்முடன் இருக்கிறார்

கப்பலில் பின்னணியத்தில் அவர் தலையணை வைத்து நித்திரையாயிருந்தார் (மாற்.4:38) அவர்களுடன், அவர்களது அக்கரைப் பயணத்தில், அலைகள் மத்தியில் அவர் இருந்தார். மத்தேயுவின் கூற்றுப்படி இரவின் நாலம் ஜாமத்தில் அவர் கடலின் மேல் நடந்து அவர்களிடத்திற்கு வந்தார். (மத்.14:25) மத்தேயுவின் குறிப்புப்படி அவர் கடல் மேல் நடந்தார், மாற்குவின் நற்செய்தியில் குறிப்பிட்டபடி அவர் படகில் இருந்தார். ஆண்டவர், அவரது சீடர்களுடன் இருந்த உண்மையை சீடர்கள் அறிந்து கொள்ள விரும்பினார்.

இறைவன் நம்முடன் எச்சூழலிலும் இருக்கிறார் என்ற உண்மையை அக்கரை நோக்கிய பயணத்தில் நாம் அறிந்து கொள்ள வேண்டும். நான் மரண இருளின் பள்ளத்தாக்கில் நடந்தாலும், தேவரீர் என்னோடே இருக்கிறீர் (சங்.23:4) அவர் நம்முடன் இருக்கும் போது அவரைப் போலச் செயல்பட நம்மை பயிற்றுவிக்கிறார். பேதுரு அவரைப் போல கடலில் நடக்க விரும்பினார். ஆண்டவர் அவருக்கு அனுமதித்தார். பேதுரு இயேசுவிடம் போக ஜலத்தின் மேல் நடந்தார். (மத்.14:29). ஆனால் காற்று பலமாயிருப்பதைக்க கண்டு, பயந்து அமிழ்ந்தார். அன்றாட வாழ்க்கையில் போராட்டங்களும், சவால்களும் யதார்த்தம். அவற்றின் மேல் ஆண்டவரின் வார்த்தையை நம்பி நடந்தால், அக்கரைக்குப் போவது நிச்சயம். மாறாக சவால்களைப் பார்த்து பயந்தால், அவைகளில் அமிழ்ந்து விடுவதும் நிச்சயம். கடல் ஆழம் என்றும், அலை பயங்கரம் என்றும் சொல்லலாமா? துணிச்சலுடன் பயணிப்போம். ஆண்டவரிடம் ஆலோசனை கேட்போம். நான் நடக்க வேண்டிய வழியை எனக்குப் போதியும் (சங்.27:11, 32:8) எனக் கேட்போம்.

## அவர் நம்மிடம் பேசுகிறார்

கடலில் பயணித்த சீடர்கள், ஆண்டவர் கடலில் நடக்கிறதைப் பார்த்து கலக்கமடைந்து, ஆவேசம் என்று சொல்லி, பயத்தினால் அலறினார்கள். கடலின் ஆழமும், அலைகளும், ஆண்டவரின் நடத்துதலும் அவர்களை அந்நிலைக்குத் தள்ளியதும் ஆண்டவர் அவர்களிடம் பேசியதை மறந்தனர். அக்கரைக்குப் போவோம். அக்கரைக்கு போங்கள் என்று அவர் சொன்னது அவர்கள் நினைவில் இல்லை. அக்கரையை விட ஆழமே அவர்கள் மனதில் நிறைந்திருந்தது. அந்நிலையில் அவர்களிடம் அவர் பேசியது நம்மை சிந்திக்க அழைக்கின்றது.

திடன் கொள்ளுங்கள்
நான் தான்
பயப்படாதிருங்கள் (மத். 14 : 27)

புதியன நோக்கிய புத்தாண்டுப் பயணத்தில் ஆண்டவரின் வார்த்தை நம்மை பெலப்படுத்தும் ஆற்றலுடையது. விடுதலைப் பயணத்தில் இஸ்ரவேலரை நடத்திய மோசே சுதந்திர நாட்டை சுதந்தரிக்கு முன் தெளிவுபடக் கூறினார். உன் தேவனாகிய கர்த்தர் தாமே உனக்கு முன்பாகக் கடந்து போவார் (உபா.31:3). எனவே நீங்கள் பெலங்கொண்டு திடமனதாயிங்கள். அவர்களுக்கு பயப்படவும், திகைக்கவும் வேண்டாம். உன் தேவனாகிய கர்த்தர் தாமே உன்னோடே கூட வருகிறார். அவர் உன்னை விட்டு விலகுவதும் இல்லை, உன்னைக் கைவிடுவதும் இல்லை. (உபா.31:6) சுதந்திரக் காற்றை சுவாசிக்க கர்த்தரின் வாக்கை நம்ப வேண்டும். அவர் பேசுவதைக் கேட்க நம் செவிகள் திறக்க வேண்டும். அவர் செய்வதைக் காண நம் கண்கள் திறக்க வேண்டும். (லூக் 24:30-32)

## *அவர் நமக்காகச் செயல்படுகிறார்*

அவர் எழுந்து, காற்றை அதட்டி, கடலைப் பார்த்து "இரையாதே அமைதலாயிரு" என்றார். அப்பொழுது காற்று நின்று போய், மிகுந்த அமைதல் உண்டாயிற்று. (மாற்.4:39) மத்தேயு, அவர்கள் படகில் ஏறின போது, காற்று அடங்கியது (14.32) என்று குறிப்பிடுகிறார். அதாவது ஆண்டவரின் சொல்லும் செயலும் அமைதியை ஏற்படுத்திற்று. கர்த்தர் நமக்காக யாவையும் செய்து முடிப்பார் (சங்.138:8).

நமது பெலமும், பெலவீனமும் இறைவனுக்குத் தெரியும். நாம் செய்யக் கூடியவற்றைச் செய்ய நம்மை ஆற்றல்படுத்துவார். நாம் செயல்படக்கூடாத நிலை வரும் போது, அவர் நமக்காகச் செயல்படுவார். நடைபயிலும் குழந்தையை தந்தை அல்லது தாய் கரம்பிடித்து நடத்துவது போலவும், நடக்க இயலாதபோது தோளில் தூக்கிச் சுமப்பது போலவும் இறைவன் நம்மிடம் செயல்படுகிறார்.

ஆண்டவர் வெண்கலக் கதவுகளை உடைக்கிறார். இரும்புத் தாழ்பாள்களை முறிக்கிறவர் (ஏசா.45:4) கழுகைப் போல் குஞ்சுகள் மேல் அசைவாடுகிறவர் (உ.பா.32:11) என்றும் திருமறை நம்பிக்கை தருகிறது.

புதிய ஆண்டில் ஆண்டவரின் வார்த்தை நமக்கு உண்டாயிருக்கிறது. அவருடைய வாக்குத்தத்தங்களும் நமக்குத் தரப்பட்டிருக்கின்றன. மட்டுமின்றி அவர் நம்முடன் உடன்படிக்கையும் செய்துள்ளார். புது நம்பிக்கையுடனும் பெரிய எதிர்பார்ப்புடனும் புத்தாண்டில் முன்னேறுவோம்.

**பேரருள்திரு. G. தேவகடாட்சம்**
பேராயர்

**02-01-2011**

***கிறிஸ்து பிறப்புக்கு பின்வரும்***
***இரண்டாம் ஞாயிறு***

# புதிய ஆசிர்வாதம்
## NEW BLESSEDNESS

ஏசா. 61 : 1-4 — 2கொரி. 6 : 3-10
திபா. 103 : 1-5, 19-22 — மத். 5 : 1-12

*"நெடுங்காலமாய் இடிந்து கிடந்தவற்றை அவர்கள் கட்டியெழுப்புவார்கள்."*
*ஏசா. 61 : 4*

**மன்றாட்டு : நலமானவைகளை அருளும் அன்புக்கடவுளே, வாழ்வை நிலைப்படுத்தும் தகவுகளை தொடர்ந்து எங்களுக்கு கற்றுத்தந்து, கடைபிடிக்க அருள்புரிவீராக. எங்களை தூய்மைப்படுத்தி இரக்கம், நீதி, சமாதானம் ஆகியவற்றை பகிர்ந்தளிக்கும் கருவிகளாக்க தயவாய் வேண்டிக்கொள்கிறோம். - ஆமென்.**

ஆயர் ஒருவர் தாம் புதிதாய் பொறுப்பேற்றுக்கொண்ட திருச்சபையில் முதல் தொழுகையை நடத்திக்கொண்டிருந்தார். அப்போது, அவ் ஆலயத்தின் வடிவமைப்பு, ஆலய இருக்கைகளின் நேர்த்தி மற்றும் ஆலய அலங்காரங்கள் ஆகியன அவரைக் கவர்ந்தாலும், அவ் ஆலயத்தினுள் ஏதோ ஓர் குறை இருப்பதைக் கண்ணுற்று நோக்கவே, அது ஆலய ஆல்ட்டர் மேஜையின் அளவு ஆல்ட்டரின் அமைப்புக்கு பொருத்தமற்றதாக சிறிய அளவில் இருப்பதைக் கண்டு, அறிவிப்பு நேரத்தின்போது, ஆலய ஆல்ட்டரின் அளவுக்கு ஏற்ற மேஜை ஒன்று தேவைப்படுவதால், ஏவப்படுவோர் இத்தேவையை சந்திக்க கேட்டுக்கொண்டார்.

தொழுகை முடிந்தவுடன், துடுக்கான வாலிபர் ஒருவர் போதகரிடம் பணிவாக வந்து நின்று, தன்னை அறிமுகம் செய்துகொண்டு, போதகரின் அறிவிப்பிற்கிணங்க ஆலயத்திற்குத் தேவையான ஆல்ட்டர் மேஜையை தாம் காணிக்கையாக படைக்க தீர்மானித்துள்ளதாகக் கூறினார். மேலும் அவ்வாலிபர் போதகரை தன் வீட்டிற்கு வந்து செல்லுமாறு அழைப்பு விடுத்துத் திரும்பிச் சென்றான். எனவே, போதகர் டீக்கன்மார் சிலருடன் மேற்கூறிய வாலிபன் வீட்டை நோக்கிச் சென்றனர். அப்போது டீக்கன்மாரில் ஒருவர் போதகரைப் பார்த்து ஐயா, அதோ தூரத்தில் தெரிகின்றதே அந்தப் பெரிய வீடு தான் நாம் செல்லும் வாலிபனின் வீடு எனப் போதகரிடம் கூற வியப்புடன் போதகர் டீக்கன்மாருடன் வீட்டை

நோக்கி விரைந்தார். உயர்ந்த மதிற்சுவர், நவீன இரும்பு கேட், கேட்டின் உள்புறம் மிடுக்கான நபர் நின்று கொண்டிருக்க, அவரை வீட்டின் தலைவர் என எண்ணி தன் இருக் கரங்களையும் கூப்பி போதகர் அவரை வணங்கினார். அப்போது போதகருடன் சென்ற டீக்கனார் ஒருவர் எஜமான் அல்ல, இவ்வீட்டின் காவலர் எனக் கூற, வீட்டின் எஜமான் எவ்வளவு அந்தஸ்தாக இருப்பதா ? என சிந்தித்துக்கொண்டு குழுவினர் சென்றடைய வேண்டிய வீட்டை அடைந்தனர். அப்போது, அவ்வீட்டின் தலைவர் வெளியே வந்து போதகரையும் அவருடன் சென்ற சபைக்குழு அங்கத்தினர்களையும் வீட்டினுள் அழைத்துச் சென்று வீட்டின் வரவேற்பு அறையில் அனைவரையும் அமர்த்தி உரையாடத் தொடங்கினார். உடனே போதகர் அவ்வீட்டுத் தலைவரிடம், ஐயா, கடவுள் உங்களை எவ்வளவாய் ஆசீர்வதித்திருக்கிறார் எனக் கூறினார். இதைக்கேட்ட வீட்டு எஜமானின் முகத்தில் பேரதிர்ச்சியும், கடுஞ்சினமும் வெளிப்பட, போதகர் அதிர்ச்சியில் உறைந்தார். ஐயா, நீங்க என்ன சொன்னீங்க ? என வீட்டுத் தலைவர் போதகரிடம் கேட்டுவிட்டு, போதகரை தன்னுடன் வருமாறு வீட்டின் அறை ஒன்றுக்குள் அழைத்துச் சென்று அவ்வறைச் சுவரில் மாட்டி வைத்திருந்த ஓர் வாலிப பெண்ணின்போட்டோவைக் காட்டி இது என் ஒரே மகள் விஜி. மருத்துவக் கல்லூரியில் இறுதியாண்டு படித்துக்கொண்டிருக்கும்போது தன் 21 வயதில் திடீரென ஒருநாள் இறந்துவிட்டாள். இதுதான் கடவுள் எனக்கு தந்த முதல் ஆசீர்வாதம் எனக் கூறிவிட்டு, தொடர்ந்து தன் வீட்டின் அடுத்த அறைக்குப் போதகரை அழைத்துச் சென்று பல வருடங்களாக முடக்குவாதத்தால் பாதிக்கப்பட்டு அசைவின்றிக் கட்டிலில் படுத்திருந்த தன் மனைவியைக் காட்டி இதுதான் கடவுள் எனக்கு வழங்கிய இரண்டாவது ஆசீர்வாதம் எனக்கூறவே அதிச்சியுற்ற போதகர் கண் கலங்கினார்.

ஆம் ! வசதி மிகுந்த அடுக்குமாடிகள் கொண்ட வீடு, உயர்ந்த கல்வி, அதிக செல்வம், உயர் பதவி சுருங்கக் கூறின் சுகபோக வாழ்வு இவைகள் தான் கடவுளின் ஆசீர்வாதம் என திருமறையின் உண்மையான செய்திக்கு புறம்பாக மக்களை நடத்திச் செல்லுகின்ற வேதப்புரட்டர்கள் மலிந்து விட்ட காலத்தில் திருமறை கூறும் ஆசீர்வாதங்கள் யாவை என சிந்திப்போம்.

## 1. கடவுளே ஆசீர்வாதத்தின் காரணர்

## (Not Human Effort but God's Gift)

மனிதர்கள் தாங்களாகவே ஆசீர்வாதமான வாழ்வை அமைத்துக் கொள்ளல் இயலாது. இறையவரின் அருள், நிறைவு, தேறுதல் இவைகளே

ஆசீர்வாதத்தின் அடித்தளங்கள். கடவுளின் ஆசீர்வாதம் அவரது அருளின் ஈவு ஆகும். ஆகவே, அதை அவரிடமிருந்து நாம் எடுக்கவோ பறிக்கவோ இயலாது. ஆதலால் ஆசீர்வாதத்தை நான் எடுத்துக்கொள்கிறேன் என்று நாம் வலுக்கட்டாயமாக இறையவரிடம் வேண்டுதல் செய்ய அவசியமில்லை. மேலும் இறைமக்களை ஊழியர்கள் ஆசீர்வதிக்கும்போது ஏதோ தங்களுடைய சொந்த ஆசீர்வாதத்தை வழங்குவதல்ல, கடவுளின் ஆசீர்வாதம் ஏற்கனவே அவர்களுக்கு ஈவாக வழங்கப்பட்டிருக்கிறது. மேலும் இறையவர் அருளும் ஆசியானது மனிதருடைய சட்டம் சார்ந்த வாழ்வால் வருவதல்ல; கடவுளின் அருளால் வரும் அனுபவமாகும்.

## 2. *ஆசீர்வாதம் பொருள் சார்ந்ததல்ல, இறையரசின் அருள் சார்ந்தது* (Not of Material, but of God's Grace )

பழைய ஏற்பாட்டில் ஆசீர்வாதம், நற்பேறு போன்றவைகள் பொருள், உடைமை சார்ந்து பேசப்படுகின்றன. கடவுள் யோபுவை செல்வத்தால் ஆசீர்வதித்தார். (யோபு 42 : 12). ஆனால் புதிய ஏற்பாட்டில் செல்வமுடைமையே ஆசீர்வாதம் என்று எந்த இடத்திலும் கூறப்படவில்லை. அதற்கு மாறாக, செல்வப் பெருக்கமுள்ளோரும், பணம் படைத்தோரும் சபிக்கப்படுகிறார்கள் (லூக். 6 : 24,25). ஆனால், இறையரசின் பண்புகளாகிய சமாதானம், தூய்மை, இரக்கம், சாந்தம், நீதி முதலியவைகளை செயல்படுத்துவோர் ஆசீர்வதிக்கப்பட்டோர் எனப்படுகின்றனர் (மத். 5 : 3-12). கடவுளின் ஆசியைப் பொருள் சார்ந்து அளவிடும் செழுமைக் கோட்பாடு (prosperity doctrine) கிறிஸ்தவத்துக்குள் புகுந்துவிட்ட ஒருவித பாகால் பக்தி ஆகும். ஆண்டவர் இயேசுவின் சிந்தனைக்கு முற்றிலும் புறம்பான இச்செழுமைக் கோட்பாட்டை போதித்தே தங்கள் வாழ்வை செழுமையாக்கிக் கொண்டிருக்கும் ஊழியங்களும் இன்று நிறையவே உண்டு. ஆண்டவரின் ஆசியைப் பொருளின் நிறைவு சார்ந்து அளவு செய்தால் இந்தியாவில் உள்ள பெரும்பாலான அரசியல்வாதிகளும், தொழிலதிபர்களும் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, ஆகவே புதிய ஏற்பாடு அதனை முற்றிலும் மறுக்கிறது (2 கொரி. 6 : 3-10). வ. 10-ல் துயருற்றோர் எனத் தோன்றினாலும் நாங்கள் எப்போதும் மகிழ்ச்சியாக இருக்கிறோம். ஏழையர் எனத்தோன்றினாலும் நாங்கள் பலரைச் செல்வர்களாக்குகிறோம். எதுவும் இல்லாதவர் எனத் தோன்றினாலும் நாங்கள் எல்லாவற்றையும் பெற்றிருக்கிறோம்.

### 3. ஆசீர்வாதம் சமய அனுபவம் அல்ல, சமூகக் கூட்டு வாழ்வின் அனுபவம் (Not Religious Experience, but Social Action)

ஆசீர்வாதத்தின் காரணர் கடவுளே என்பது உண்மை. ஆனால் இந்த ஆசீர்வாதமான வாழ்வு என்பது ஏதோ மந்திரமான சமய அனுபவமல்ல, கடவுளுடைய துணை கொண்டு மாந்தர் சக மாந்தரோடு வாழும் வாழ்வின் செயல்பாடு சார்ந்ததாகும். நீர் எனக்கு ஆசி வழங்கினாலொழிய உம்மைப் போகவிடேன் என மன்றாடிய யாக்கோபு விரும்பிய ஆசீர்வாதம் எது ? இப்பகுதியின் பிந்தைய பகுதியினைப் படிக்கையில் யாக்கோபு ஏறெடுத்த மன்றாட்டு பொருள் சார்ந்த ஒன்றல்ல, மாறாக தன் சகோதரன் ஏசாவோடு தாம் ஏற்படுத்திக்கொள்ள விரும்பிய உறவு சார்ந்த அனுபவமே ஆகும் (ஆதி. 32 : 29; 33 : 10; 33 : 11).

### 4. ஆசீர்வாதம் என்பது துன்பமற்ற நிலையல்ல, துன்பத்தை ஏற்பதே (Not Security and Safe, but Insecurity and Suffering)

பிறருடைய நல்வாழ்வுக்காக, நீதிக்காக, நேர்மைக்காக, உண்மைக்காக, மக்களின் விடுதலைக்காக துன்பத்தை ஒருவர் மனமுவந்து ஏற்றால் அது அவருக்கு ஆசீர்வாதமாகும். என் பொருட்டு மக்கள் உங்களை இகழ்ந்து, துன்புறுத்தி, உங்களைப் பற்றி இல்லாதவை பொல்லாதவையெல்லாம் சொல்லும்போது நீங்கள் பேறு பெற்றவர்களே (மத். 5 : 11).

ஆகவே, இயேசுவை நம்பினால் ஒரு துன்பமும் வராது என்பதும் திருமறையில் செய்திக்குப் புறம்பானதாகும். கடவுளின் தூதனால் பாக்கியர் என்று அழைக்கப்பட்ட மரியாள் (லூக். 1 : 24, 42) உலக மீட்பரை உலகிற்குத் தர ஏற்றுக்கொண்ட பாடுகளால் அவ்வாறு அழைக்கப்படுகிறார்.

### 5. சேர்த்து வைத்தல் அல்ல, பகிர்ந்து கொள்ளுதலே ஆசீர்வாதம் (Not Accumulation, but Sharing)

மத். 25 : 34-ல் அவர் தமது வலது பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து வாருங்கள் என் தந்தையால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே.... நித்திய வாழ்வை சுதந்தரித்துக் கொள்ளுங்கள் என்கிறார். ஆகவே, பொருளைச் சேர்ப்பது, வங்கியில் பணத்தின் இருப்பைக் கூட்டுவது, நிலம், வீடு, ஆடம்பரப் பொருட்கள் வாங்கி சேர்ப்பது முதலியவை ஆசீர்வாதம் அல்ல, இருக்கிற பொருளை இல்லாதவர்களோடு பகிர்ந்து கொள்வதால் இழக்கக் கொடுப்பதே ஆசீர்வாதம். தாங்கள் பகிர்ந்து கொண்டதைக் குறித்து கொஞ்சமும் பெருமை பாராட்டாதபடி இருக்க வேண்டும். ஏனெனில் தாங்கள் பிறரோடு பகிர்ந்து கொண்டதைக் குறித்துச் சிறிதேனும் கவலைப்படாதவர்களே இந்த பாக்கியர் (மத். 25:37-39; மத். 6:2,3).

அருள்திரு. **S. ஜாண் சகாயம்**

**06-01-2011**

*பிரசன்னத் திருநாள்*

# கிறிஸ்துவின் வெளிப்பாடு

## MANIFESTATION OF CHRIST

ஏசா. 45 : 22-25 | தி.வெ. 21 : 22-27

திபா. 67 | மத். 2 : 1-12

*"…. என் மக்களாகிய இஸ்ரயேலை ஆயரென ஆள்பவர் ஒருவர் உன்னிலிருந்தே தோன்றுவார்." மத். 2 : 6*

**மன்றாட்டு : மன்றாட்டு :** அனைத்துலகிற்கும் ஆண்டவரே, உமது மாட்சிநிறை நட்சத்திரத்தை கண்ட நாங்கள், மனுஉருவேற்று மண்ணில் வெளிப்பட்ட இறை மைந்தரால் அமைதியின் விடியலைக் காண்கிறோம். இவ்வெளிச்சம் எங்கள் வாழ்வை ஒளியூட்டி, பிறருக்கு வழிகாட்டவும், இணைந்து ஒளியில் நடக்கவும் அருள்புரிய என்றும் உம்மோடும், தூய ஆவியரோடும் ஒரே கடவுளாய் வாழ்ந்து ஆட்சிபுரியும் எங்கள் ஆண்டவர் இயேசுகிறிஸ்து வழியாக கேட்கிறோம். - ஆமென்.

கிறிஸ்துவின் வெளிப்பாடு பல நூற்றாண்டுகளுக்கு முன்பே இறைவாக்கினார்களால் முன்னுரைக்கப்பட்டு, மக்களால் எதிர்பார்க்கப்பட்டு வரலாற்றில் நிகழ்ந்த ஒன்று. உலக வரலாற்றையே இரண்டாக கிறிஸ்துவுக்கு முன் (கி.மு) கிறிஸ்துவுக்கு பின் (கி.பி.) என பிரித்தது. ஆதியிலே உலகை தம் வார்த்தையால் படைத்து நல்லதென கண்ட இறைவன் படைப்புகளை ஆளும்படியாய் தம் சாயலில் மனிதரைப் படைத்தார். ஆனால் மனுக்குலமோ பாவம் செய்து, இறைச் சாயலை இழந்து, இறை சமூகத்தை விட்டு தூரம் போனது. ஆகவே மாண்டுபோன மனுக்குலத்தை மீட்கும்படியாய் இறைவன் தம் திருமைந்தரான இயேசு கிறிஸ்துவை இவ்வுலகிற்கு வெளிப்படுத்தினார். இவ்வாறு வெளிப்படுத்தப்பட்ட கிறிஸ்து இயேசுவில் நாம் புரிந்து கொள்பவை.

### 1. பாங்குடன் அறியப்பட்டவர் மீட்பர் :

மேசியா என்றால் மீட்பர், விடுதலையாளர், அருள் பொழிவு செய்யப்பட்டவர் என பொருள்படும். இறைவாக்கினர்களால் முன்குறிக்கப்பட்டவர். இதோ ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள் (ஏசா. 1 : 14) ஒரு குழந்தை நமக்குப் பிறந்துள்ளார்; ஓர் ஆண்மகவு நமக்குத் தரப்பட்டுள்ளார். (ஏசா. 9 : 6) இறைமக்களால் எதிர்பார்க்கப்பட்டவர். (மீகா. 5 : 2) யூதேயாவில் பெத்லகேம் சிறியதாயிருந்தாலும் இஸ்ரவேலை ஆளும் பிரபு உன்னிடத்தில்

தோன்றுவார் என்ற மீகா தீர்க்கனின் வாக்குப்படி பெத்தலை பாலகனாய் பிறந்தார். (மத். 2 : 6-8). மேசியாவின் பிறப்பு உலகிற்கு நற்செய்தி பூமியில் சமாதானம், எல்லா ஜனத்திற்கும் மிகுந்த சந்தோஷம் காரணம் கடைநிலை பணியாளர்களாய் கருதப்படும் மேய்ப்பர்களும் பெத்தலை பாலனை கண்டு, பணிய வாய்ப்பு கிட்டியது. (லூக்கா 2 : 10-16) கர்த்தருடைய ஆலயத்தில், இஸ்ரவேலின் ஆறுதல் வர காத்திருந்த சிமியோன், பாலகனை கைகளில் ஏந்தி இரட்சண்யத்தை என் கண்கள் கண்டது என்றார். (லூக். 2 : 25-32) மேலும் இயேசு சமாரிய ஸ்திரியிடம் தாகத்துக்குதா என்றுகேட்டு அவளோடு பேசினபோது. அந்த ஸ்திரீ அவரை கிறிஸ்து எனப்படுகிற மேசியா எனக் கண்டு கொள்கிறாள்.

## *2. பணிவிடைக்கு பயிற்றுவிப்பவர் :*

மேசியாவாக தோன்றிய கிறிஸ்து ஒரு பணிவிடைக்காரர். (மாற்கு 10 : 45). மானிட மைந்தர் ஊழியம் கொள்ளும்படி வராமல் ஊழியம் செய்யும்படி வந்தார். தலைவராக வராமல் அடிமையாய் பணி செய்தார். பஸ்கா விருந்தின போது. சீடருடைய கால்களை கழுவி பணிவிடையைக் கற்றுக் கொடுத்து மாதிரியை காண்பித்தார். (யோவா. 13 : 5,14,15). மேலும் கடவுளுக்கு சமமாயிருப்பதை கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மை தாமே வெறுமையாக்கி, அடிமையின் நிலையில் மனுஷர் சாயலானார் (எபே. 2 : 6-8) இயேசு நன்மை செய்கிறவராகவே சுற்றித் திரிந்தார் (தி.ப. 10 : 38) சத்துருக்களை அன்பு செய்யவும், பகைவர்களை மன்னிக்கவும் கற்று தந்தார். வெறும் பேச்சில் அல்ல செயலில் நல்ல சாட்சிகளாம் வாழ வேண்டும் என்பதை வாழ்ந்து காட்டினார்.

## *3. பாவ பரிகார பலியானவர் :*

மனுக்குல பாவத்திற்கு, பாவமறியாத கிறிஸ்து பாவமாக்கப்பட்டார். பாவ நிவாரண பலியாக ஒப்புக் கொடுத்து வெளிப்படுத்தப்பட்டார். யோவான் இயேசுவை இதோ கடவுளின் ஆட்டுக்குட்டி (யோ. 1 : 29). திருத்தூதுவரான பவுல் கூறும்போது பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காக பலியிடப்பட்டிருக்கிறார். (1கொரி 5 : 7). மக்களின் பாவங்களை நீக்கி அவர்களை மீட்பதற்காகத் தோன்றியவர் (மத். 1 : 21). குற்றமில்லாத, மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப் பெற்ற இரத்தத்தினாலே மீட்பைப் பெற்றோம் (1பேது. 1 : 19) ஏசாயா இறைவாக்கினரை கூறும்போது நம்முடைய பாவங்களுக்கு பரிகாரமாக, பாடுபடும் தாசனாக, கிறிஸ்து அசட்டைப் பண்ணப்பட்டார். பாடு அனுபவித்தார். பாவங்களை சுமந்தார் அக்கிரமங்களை ஏற்றுக் கொண்டார். ஆகவே அடிக்கப்படும்படி கொண்டு போகப்படுகிற ஆடு எனவும். குற்ற நிவாரண பலியாக ஒப்புக்

கொடுக்கப்பட்டவர் எனவும் குறிப்பிடுகிறார். (ஏசாயா 53) பாவத்தினால் முன்னே தூரமாயிருந்த நாம் பலியாக்கப்பட்ட கிறிஸ்துவின் இரத்தத்தினால் சமீபமானோம் (எபேசி. 2 : 13).

## 4. பரம வாழ்வு தருபவர் :

கடவுள் ஆட்சியை பூமியில் உருவாக்குவது கிறிஸ்துவின் நோக்கம். நீதி, நியாயம், சமாதானம், சமத்துவம் பூமியில் நிலவ வேண்டும். சமூக அநீதியினாலும், சமய அடிமைத்தனத்தாலும் ஏற்றத் தாழ்வுகள் கொண்டுள்ள சமுதாயம் சீர்பெற வேண்டும். ஆகவே நீதியை போதித்தார். சந்தேகங்களை தெளிவுபடுத்தினார். இறையரசின் மேன்மையை சுட்டிக்காட்டி, மனுக்குல மக்களை இறை நீதியோடு வாழ்ந்து இறையரசின் பங்குள்ளவர்களாக்க வழி வகுத்தார். (ஏசாயா 45 : 22-25) அநீதி, அக்கிரமம் அருவருப்பு, பொய் ஆகியவற்றிற்கு இறையரசில் பங்கில்லை என்பதை தெளிவாக விளக்கி, ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தால் மீட்கப்பட்டு, கிறிஸ்துவின் போதனைகளின்படி வாழ்பவர்களே இறையரசின், புதுவாழ்வுக்கு உரியவர்கள் எனப்தை சுட்டிக் காட்டினார் (வெளி. 21 : 27). இரட்சகராகிய கிறிஸ்துவையல்லாமல் வேறொருவர் இல்லை என்பதை ஏசாய இறைவாக்கினர் மூலம் தெளிவுபடுத்தியுள்ளார் (ஏசாயா 45 : 21).

இவ்வாறு வெளிப்படுத்தப்பட்ட கிறிஸ்து பாங்குடன் அறியப்பட்டவராக பணிவிடைக்காரராக, பாவ பரிகார பலியாக, பரம வாழ்வு தருபவராக நம்மிடையே காட்சி தருகின்றார். காட்சி தரும் கிறிஸ்துவின் வழியாகவே பயணிப்போம் புத்தாங்கத்துடன் புதுவாழ்வு பெறுவோம்.

அருள்திரு. **P. நெல்சன்**

*ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஒரு சுவிசேஷகனே என்று வாழ முயலுங்கள். அதுவே கிறிஸ்து உங்களிடம் எதிர்பார்ப்பது.* யாரோ

**09-01-2011**

*பிரசன்னத் திருநாளுக்குப் பின் வரும்*
*முதலாம் ஞாயிறு*

# இயேசுவின் திருமுழுக்கு

**BAPTISM OF JESUS**

| | |
|---|---|
| ஏசாயா. 49:1-16 | Iபேதுரு. 3:13-17 |
| திபா. 2:1-8 | மத். 3:13-17 |

*"என் அன்பார்ந்த மைந்தர் இவரே, இவர் பொருட்டு நான் பூரிப்படைகிறேன்."*
*மத். 3 : 17*

**மன்றாட்டு :** நிலையான கடவுளே, உமது திருமைந்தர் இயேசு யோர்தான் ஆற்றில் யோவானால் திருமுழுக்கு பெற்று தம்மை பாவிகளுடன் அடையாளப்படுத்தினார். நாங்கள் குற்ற உணர்வடைந்து, உம்பக்கமாய் திரும்பவும், தூய ஆவியரால் பற்றுறுதியில் பெலனடைந்து இயேசுவே விடுதலையாளர் என உலகுக்கு உரைக்க துணை செய்வீராக, என்றும் உம்மோடும், தூய ஆவியரோடும் வாழ்ந்து ஆளுகை புரியும் எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்து வழியாக மன்றாடுகிறோம். - ஆமென்.

## முகவுரை :

இயேசுவின் பிறப்பு, இறப்பு அதன்வழி மீட்பு முதலானவை பழைய ஏற்பாட்டில் முன் குறித்திருந்தாலும், இயேசுவின் திருமுழுக்கைப் பற்றி எந்த இறைவாக்குகளும் இல்லை. யோவானின் திருமுழுக்கு சடங்கிலிருந்து சத்தியத்திறகும், நீதியை நிறைவேற்றும் தன்மையுடையதாக இருந்ததாகவும் இருந்ததினால் உலகம் இத்திருமுழுக்கை பின்பற்றலாம் என்பதை மக்களுக்கு சுட்டிக்காட்ட, தான் மாதிரியாகிறார். தனது முப்பது வயதுவரை சிலுவை திருமுழுக்குக்கு ஆயத்தமாகிறார். இதனை நீங்கள் அறியாத ஒரு பாத்திரம் (திருமுழுக்கு) உண்டு என்கிறார். யோவானின் திருமுழுக்கு பெற்றபின், இயேசு சிலுவை திருமுழுக்கை படிப்படியாக பருக தொடங்குகிறார். யோவானின் திருமுழுக்கு முற்றிற்று, சிலுவை திருமுழுக்கு தொடங்கிற்று. இந்த திருமுழுக்கின் பாதையின் இறுதியில், தனது பாத்திரத்தை மாற்றும்படியாக வேண்டுகிறார். மாற்றப்படாததினால் சிலுவை திருமுழுக்கைப் பருகுகிறார்.

## இயேசு அடைந்த சில மாற்றங்கள் பின்வருமாறு:

### 1. உலக பொறுப்புகளை விட்டு விண்ணின் பொறுப்பை ஏற்கிறார் :

**(From earthly responsibilities to Heavenly responsibilities)**

மரியாளின் மகன்; திருமுழுக்குப்பின் கடவுளின் மகன் ஆகிறார். பெற்றோருக்கு பணிவிடை செய்தவர் திருமுழுக்குப் பின்

இறைதொண்டாற்றுகிறார். ஒரு தடவை தீய ஆவியை துரத்திவிட்டு இருக்கும்போது, மரியாளும் சகோதரரும் தேட, ஒருவர் வந்து உம்முடைய தாயாரும் உம்முடைய சகோதரர்களும் பேச நிற்கிறார்கள் என்று கூற, இயேசு என் தாய் யார்..........? (மத். 12:46) அனைத்துலகோரும் என் தாய் சகோதரர்களே எனக் கூறுகிறார். அவர் தம்மைமரியாளுக்கு மாத்திரமல்ல உலகோர் அனைவருக்கும் உரியவர் என்பதை தெளிவுபடுத்துகிறார். அதனை கடவுளும் "இவர் என் நேசகுமாரன்" (No more Mary's Son) என்கிறார். மரியாளின் மகன் கடவுளின் மகனாகிறார்.

தச்சன் மகன் ரகி ஆகிறார். இதுவரை உலக பணிவிடை செய்த மனிதர் இப்போது போதக பணி செய்ய தொடங்குகிறார். சாதாரண மகன் அசாதாரண மகனாகிறார். தச்சன்மகன் போதகராக இயலாது. ஆனால் இத்திருமுழுக்கு இயேசு கிறிஸ்துவை போதகர் நிலைக்கு உயர்த்தியது. யோவான் 1:35 ல் கடவுளின் ஆட்டுக்குட்டியென்றும் யோவா. 1:38-ல் ரபி என்றும் அழைக்கப்படுகிறார். உயர்ந்த மலையில் ஏற்பட்ட தோற்றத்தினால் மலையில் பேதுரு, ரபி இங்கே இருப்பது நல்லது என்கிறார் (மாற்கு 9:5) இவருக்கு செவி சாயுங்கள் என் அன்பார்ந்த மைந்தர் இவரே என்று கூறி இயேசுவை கடவுள் அதிகாரப்படுத்தப்படுகிறார். திருமுழுக்குப்பின் உலகத்தை மீட்க புறப்படுகிறார் (ஏசா 1:35). தேடி வந்த பெற்றோரிடம் நான் தந்தைக்கடுத்தவைகளை செய்ய வேண்டும் என்கிறார். ஆலயத்தில் நின்று தன்னை தரித்திரருக்கு நற்செய்தி சொல்ல கடவுளின் ஆவியர் என் மேலிருக்கிறார் என்றார். திருமுழுக்கிற்கு பின் உலக மக்களின் பாரம் அவர்மேல் விழுகிறது.

## 2. உலக அமைதி வாழ்விலிருந்து அறைகூவல்களை ஏற்கிறார் :

(From comfort to confrantation)

தனது முப்பது வயது வரை பெற்றோரிடம் கற்றுக் கொண்டார். பணிவுடன் நடந்தார். அமைதி வாழ்வை மேற்கொண்டார். திருமுழுக்கு பெற்ற பின், பல அறைகூவல்களையும் எதிர்ப்புக்களையும் சந்திக்கிறார். அறைகூவல்களும், எதிர்ப்புக்களும் முன்னேறுவதற்கு மூலதனமாகும். இயேசு எதிர்ப்புக்களை, எதிர் கொள்ள திருமறை வசனங்களைக் கொண்டு பயன்படுத்தினர். சவால்கள் பல கோணங்களில் வந்தன. சமய அழுக்குகளை சுட்டிக்காட்டினார், பரிசேயரின் பரிசுத்தமற்ற வாழ்வை எதிர்த்தார். அரசியல் அதிகாரங்களை அசுத்தங்களை சுட்டிக்காட்டினார். இதனால் உலகம் அவரை எதிர்த்தது. அத்தனை தீமையான சவால்களுக்கு இயேசு உடன்படவில்லை. ஆகவே சிலுவை திருமுழுக்கு ஏற்க வேண்டியிருந்தது. உலக மக்கள் பாவமும் அவர்மேல் விழுந்தன. இது, அவர் பாவி என்பது அல்ல பதிலாளாகிறார்.

நாம் சாகவேண்டிய இடத்தில் இறைவன் பதிலாளாகிறார் (replacement theory). அதாவது மோசே அவர்கள் பாவத்தை மன்னித்தருளும் இல்லையேல் அவன் கடன் என் மேல் சுமத்தும். இப்படி உலகத்தின் பாவத்தை சுமக்கும் அடையாளமாக இயேசு திருமுழுக்கை ஏற்று, இப்படியாக நீதியை நிறைவேற்ற வேண்டியதாயிருக்கிறது என்கிறார். இந்த நீதி தண்ணீரில் வந்தது அல்ல சிலுவையில் சம்பாதித்ததாகும்.

**முடிவுரை:**

கிறிஸ்துவின் திருமுழுக்கு தனிச்சிறப்புள்ளதாயிருந்தது. இயேசு பாவ மன்னிப்புக்கென்று திருமுழுக்கு எடுக்கவில்லை. சடங்கு வாழ்வுக்கு முற்றுப்புள்ளி வைத்து உண்மை வாழ்வுக்கு மக்கள் அடியெடுத்து வைக்க வேண்டும் என்பதற்கு முன் சுவையாக ஏற்றார். எனவே வெளியான சடங்குக்கு முக்கியத்துவம் கொடாமல் அது கூறும் உண்மையான வாழ்வுக்கு முக்கியத்துவம் கொடுப்போம்.

அருள்திரு. V. **டேவிட்**

*தேவகுமாரன் மனித குமாரனானதலால் மனித குமாரர்கள் தேவகுமாரர்களாக முடிந்தது. குமாரன் பிதாவைப் பிரிந்து வந்து, நாம் உலகைப் பிரிந்து வாழ உதவி செய்தார். அவர் நம்மிடம் இறங்கி வந்ததால், நாம் அவரிடம் ஏறிச்செல்ல ஏதுவாயிற்று.*

ஆண்டனி

**09-01-2011**

*பிரசன்ன திருநாளுக்கு*
*பின்வரும் முதல் ஞாயிறு*

# கிறிஸ்து வழியாய் வாழ்வில் வளமை

## ENRICHMENT OF LIFE THROUGH CHRIST

| | |
|---|---|
| ச.உ. 6 : 1-12 | உரோ. 13 : 8-14 |
| திபா. 63 : 1-8 | மத். 19 : 16-26 |

*அதற்கு இயேசு - "நிறைவுள்ளவராக விரும்பினால் நீபோய் உடமைகளை விற்று ஏழைகளுக்கு கொடும், அப்போது விண்ணில் நீர் செல்வந்தராக இருப்பீர்"*
*மத். 19 : 21*

**மன்றாட்டு :** அருள் நிறைந்த கடவுளே, பெலனிழந்து தொய்வடைந்த எங்கள் நிலைகண்டு, உதவி செய்யும் உம் கரம் நீட்டி வலுப்படுத்துவீராக. எங்கள் பற்றுறுதியையும், நிலைப்பாட்டையும், தீர்மானங்களையும் தளர்வு நீக்கி வலுப்படுத்தியருளும். உமது நிறைவான பண்புகளை எங்களில் தர எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்து வழியாக வேண்டுகிறோம். - ஆமென்.

Business Management (வணிக மேற்பார்வை) வகுப்பில் ஒரு ஆசிரியர் செயல்முறை வகுப்பு நடத்திக் கொண்டிருந்தார். ஒரு கண்ணாடி பாத்திரத்தில் அந்த பாத்திரத்தின் உள் அளவிற்கு பொருத்தமான கல் ஒன்றை உள்ளே வைத்தார். மாணவர்களை பார்த்து இனி இதில் எதாவது வைக்க முடியுமா? என கேட்டார். மாணவர்கள் "முடியாது" எனக் கூற தனது பைக்குள் இருந்த ஒரு சிறு காகிதப் பையை எடுத்தார். அதன் உள்ளிருந்து சிறு சிறு கல்துண்டுகளை அக்கல்லை சுற்றிலும் இடம் இருந்த இடங்களில் சொருகினார். இனி இதற்குள் எதாவது வைக்கமுடியுமா? எனக்கேட்டார். இல்லை என மாணவர்கள் கூற, ஒரு பையில் இருந்த மணலை எடுத்து அச்சாடிக்குள் போட்டார். இனி எதாவது வைக்க முடியுமா? எனக் கேட்டார். வியப்பில் மாணவர்கள் முடியும் எனக் கூற பாட்டிலில் இருந்த தண்ணீரை அதன் மேல் ஊற்றினார். இனி ஏதாவது? மாணவர்கள் முகத்தில் கேள்விக்குறியுடன் பார்க்க, ஆசிரியர் 'முடியும்' எனக் கூற சுவரில் இருந்த உப்பை எடுத்து அதன்மேல் தூவினார். மாணவர்களை பார்த்து ஆசிரியர் கேட்டார் நீங்கள் புரிந்து கொண்டது என்ன? "நமது வியாபாரத்தை வளப்படுத்த இன்னும் வாய்ப்புகள் உண்டு" "மக்களுக்குள் எவ்வளவு வேண்டும் எனினும் நாம் திணிக்கலாம்" என ஒரு மாணவன் கூற ஆசிரியர் கூறினார், "அது அல்ல. செயலை முறைப்படி

செய்தால் வாழ்வில் வளமை பெருகும், முதலில் பெரிய கல்லைதான் வைக்க வேண்டும், பின்னரே மற்றவற்றை வரிசையாக வைக்க முடியும், மாறுபட்டுவிட்டால் நிறைவை தராது''. கிறிஸ்துவுக்கு முதலிடம் கொடுத்தால் கிறிஸ்து வழியாக நாம் பெற்றுக்கொள்ளும் வளமையே நிறைவை தரும். கிறிஸ்து வழியாய் வாழ்வில் வளமை பெற நாம் செய்ய வேண்டியவற்றை நற்செய்தி பகுதியை மையமாகக் கொண்டு சிந்திப்போம்.

Enrich என்கிற வார்த்தையின் பொருள் - “ஒன்றின் தகுதியை உயர்த்து”, “பெருக்கு”, “அழகுறச்செய்” என்பதாகும். மனித வாழ்வில் வளமை என்பது இறைவன் தந்த திறமைகள். தாலந்துகள், ஆன்மீக தகவுகள். இவையாகும். இவற்றை கிறிஸ்து வழியாய் பெருக்குவதே நிலைவாழ்வு பெற்றுக்கொள்ள வழிவகுக்கும்.

## *1. ஆவல் கொள்* (Have Desire)

நற்செய்தி பகுதியில் சொல்லப்படும் செல்வந்தரான இளைஞரை (மாற். 10 : 17-31; லூக்கா 18 : 18-30) சமநோக்கு நற்செய்தியாளர்கள் வாழ்விழந்து சென்ற செல்வந்தராக சித்தரிக்கின்றனர். இதில் இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகள் வாழ்வின் வளமை பெற பாதைகாட்டுகின்றன. நிலை வாழ்வை பெற்றுக்கொள்வதற்கு நான் என்ன நன்மை செய்ய வேண்டும் என கேட்ட இளைஞனிடம், ‘நீர் வாழ்வடைய விரும்பினால்..... கட்டளைகளை கடைபிடியும் என்கிறார்’ (மத். 19 : 17). “விருப்பம்” மனித வாழ்வில் தேவை. விருப்பமே முயற்சிக்கு அடிப்படை, முயற்சியே வெற்றிக்கு அடிப்படை. மனிதவாழ்வில் வளமை இறைவனுடன் இணைந்த நிலைவாழ்விற்கு நேராக என்பதை மறந்து இன்று உலக வளத்தை தன் வாழ்வில் எப்படி பெருக்கி கொள்ளலாம் என்றே மனிதன் சிந்திக்கின்றான். (ச.உ. 6 : 1,2). உலக வாழ்வில் ஒருவர் விரும்புவதை எல்லாம் கடவுள் கொடுக்கிறார். ஆனால் அதை அனுபவிக்கவோ அவனுக்கு வாய்ப்பு கிடைப்பதில்லை எனவே உலக வாழ்வை விரும்புவதை விட இறைவனோடிருக்கும் நிலை வாழ்வில் விருப்பம் கொண்டால் மட்டுமே வாழ்வின் நிறைவை பெற முடியும்.

புத்தரின், “ஆசையே அழிவுக்கு காரணம்” என்பது வாழ்வின் ஒரு பகுதியை மட்டுமே சுட்டிக்காட்டுகின்றது. அவரது சிந்தனைபடி “முற்றும் துறந்த நிலை'' அடைய வேண்டும் என்பதையே ஒரு விருப்பமாக காணலாம். இறைவனோடு இணைந்து வாழ வேண்டும் என்ற விருப்பமே (எனக்கொரு ஆசை உண்டு என் இயேசுவை காண வேண்டும் என்கிற பாடலின் வரிகள்) அறநிலைக்கு மனிதன் செல்ல, முயல வழிவகுக்கின்றது. Logo Therapy (லோகோ தெரப்பி) என்ற முறையை ஆற்றுப்படுத்தலுக்கு (Counselling) தந்த Victor Franckl (விக்டர் பிராங்கிள்) போலந்தில் நாசி படைமுகாமில் கிட்லரின் கொடுமைகளுக்கு உள்ளானவர். அவர்

கூறும்போது வேலை செய்ய இயலாத கைதிகளை வீரர்கள் சுட்டுக் கொன்றனர். நாம் இங்கிருந்து வெளியேற மாட்டோம் என சிந்தித்தவர்களே வேலை செய்யாமல் இருந்தனர். ஆனால் என்றாவது வெளிஉலகை காண்போம் என்ற நம்பிக்கை உள்ளவர்களும், வாழ வேண்டும் என விரும்பினவர்களும் தப்புவிக்கப்பட்டனர். இதனடிப்படையில் அவர் "Search of Meaning" என்ற நூலை இயற்றினார். ஆவலற்ற, அர்த்தமற்ற வாழ்வு, வாழ்வின் நிறைவை தராது. இயேசுவும் செல்வந்த இளைஞரிடம் ''நீ விரும்பினால்'' எனக்கூறிய வார்த்தையின் கருத்தும் மிகவும் ஆழமானதாகவே உள்ளது.

## 2. நற்குணங்களை வளர்த்திடு (Develop Good Qualities)

''கட்டளைகளைக் கடைபிடியும்'' எனக் கூறிய இயேசுவிடம் இளைஞன் எவற்றை எனக் கேட்கிறார். இறைவன் மோசேயின் வழி கொடுத்த பத்து கற்பனைகளில் ஐந்து நற்குணங்களின் கடட்ளைகளை கூறி அத்துடன் உன்மீது நீ அன்பு கூருவது போல உன் அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக என்றார். நற்குணங்களே மனித வாழ்வில் வளமையின் முதலிடம் அதுவே மனிதன் வாழ்வின் நிறைவை காண வழிவகுக்கும். Heraclitius என்பவர் (A man's character is his guardian divinity) ''ஒரு மனிதனின் நற்குணங்கள் அவனது ஆன்மீக பாதுகாவலராக, வழிகாட்டியாக உள்ளது'' எனக் கூறுகிறார் என்று கூறுவதன் மூலம் வாழ்வின் நற்குணங்களை கடைபிடி "உன்மீது அன்பு கூறுவது போல் உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூறுவாயாக" என கூறும் வார்த்தைகள் வாழ்வின் வளமைக்கு நற்குணங்களை பெருக்கிக் கொள்வதின் முக்கியத்துவத்தை உணர்த்துகின்றன.

Globalization என்ற உலகமயமாதலின் காலத்தினுள் நற்குணங்கள் மறைந்து, போட்டிகள் வலுப்பெறுகின்றன. (Survival of the fittest) வாழ தகுதியுடையவனே வளம் பெறுவான் என்ற சார்லஸ் டார்வின் கோட்பாடுபடி - உலகில் செல்வம், புகழ், உதவி என வாழ்வின் வளமைக்கு உலகு சார்ந்து வாழும் சமூகமாக மனுக்குலம் மாறிவிட்டது. மனிதனின் நற்குணங்கள் மறைந்து- தீய குணங்கள் வெளிப்படுகின்றன. எனவே தான் தீவிரவாதச் செயல்களும், சமூகவிரோத செயல்களும் வலுபெறுகின்றன. இயேசு கிறிஸ்துவில் வாழ்வு பெற நற்குணங்களை பெருக்கி கொள்வது அவசியம். எனவே நமது குணங்களை வளர்த்திடுவோம். வாழ்வில் நிறைவை காண்போம். ரோமர் 8 : 13,14 பவுல் கூறுகின்றார். பகலில் நடப்பது போல நடப்போம், தீமைகளை, தீயகுணங்களை களைந்து இயேசுவை அடைந்து கொள்வோம் என்றும் நற்குணங்களை பெருக்குவோம்.

## 3. உடைமைகளை பகிர்ந்திடு : (Share your possessions)

இயேசுவிடம் வந்த இளைஞரிடம் உம் உடைமைகளை விற்று ஏழைகளுக்குக் கொடும் என இயேசு கிறிஸ்து கூறினார். Possessions என்கிற ஆங்கில வார்த்தை “பெற்றுக்கொண்டு இருப்பவை” தாலந்துகள், திறமைகள், உடமைகள் அனைத்தையும் குறிக்கின்றது. இன்று மனிதன் தனது உடைமைகளை பெருக்கிக் கொள்ள அதிகமாக முயலுகின்றான். அதற்காக தனது முழு நேரத்தையும், திறமைகளையும் பயன்படுத்துகின்றான். ஆனால் உடமைகளை பிறரோடு பகிர்ந்திட விருப்பமற்றவனாக காணப்படுகின்றான். காரணம் வாழ்வின் வளமையை தானே அனுபவிக்க வேண்டுமென்கிற எண்ணமே. ச.உ. 6 : 1-12 வரையிலான திருமறை கூறுகின்றது அனுபவியாமல் இருப்பதைவிட, பிறவாமல் இருப்பதே மேல் என. எனவே பிறருக்கு பயன்பட கூடியவற்றை கொடுக்கும் மனநிலையே முக்கியம்.

(Supreme Court) உச்சநீதிமன்றம் மத்திய அரசிடம் கட்டளையிட்டுள்ள நிகழ்வான பொருட்களை தேக்கி வைத்து அழிந்துபோக அனுமதியாமல் அவற்றை எழைகளுக்கு மானியமாக வழங்க சொல்லியிருப்பதை மனதில் கொள்ளவேண்டும். தேக்க நிலை பயன்படாது அதை வெளிப்படுத்தும் போதே அது பயனுள்ளதாகின்றது.

ஒரு மின்கலத்தில் மின்சாரம் ஏற்றப்பட்டு (Charge) அது வெளிப்படாமல் (Discharge) இருந்தால் அது பயனற்றதாக கருதப்படுகின்றது. எப்போது நாம் கொண்டுள்ள உடமைகளை வெளிப்படுத்துகின்றோமோ அப்போதே வாழ்வில் வளமையை அடைகின்றோம். வாழ்வின் வளமை அதிகமாக சேர்த்துக் கொள்வதில் அல்ல அவற்றை பிறர் பயன்படத்தக்கதாக வெளிப்படுத்துதலே ஆகும். எனவே இயேசு உடைமைகளை விற்று ஏழைகளுக்கு கொடு என்றார் - ச.உ. 6 : 9 கூறுகிறது இல்லாத ஒன்றை அடைய விரும்பி அலைந்து திரிவதைவிட உள்ளதே போதும் என்ற மனநிறைவோடிருப்பதே மேல்- அது காற்றைப்பிடிக்க முயல்வதற்கு ஒப்பாகும். எனவே தனக்குரியதில் அதிகமானதை பிறருக்கு பகிரும் மன நிலையே மிகவும் தேவை.

வாழ்வின் வளமை என்பது உலகப் பொருட்களின் வளமை அல்ல என்பதை உணர்ந்து. கிறிஸ்து வழியாய் வாழ்வில் வளமை காண்போம். நிறைவு வாழ்வு பெற, நிலை வாழ்வுபெற ஆவல் கொள்வோம், நற்குணங்களை பெருக்குவோம். உடைமைகளை பிறருக்கு பகிர்ந்தளிப்போம். கிறிஸ்துவில் வளமை ஒரு தனிமனிதனின் வளமை. அல்ல; அது மனுக்குலம் முழுமையின் வளமை என்பதை உணர்ந்து செயல்படுவோம். இறைவன் நம் வாழ்வில் வளமை தருவாராக.

அருள்திரு. **J. டேனியல் ஜோசைய்யா**

**16-01-2011**

*பிரசன்ன திருநாளுக்குப் பின்வரும்*

***2 - ம் ஞாயிறு***

# கடவுளின் நிலையான அன்பு

## THE STEADFAST LOVE OF GOD

| | |
|---|---|
| வி.ப. 17 : 17 | எபே. 3 : 14-21 |
| தி.பா. 86 | மத். 22 : 34-40 |

***"உன் மீது நீ அன்புகூர்வது போல உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக."***
*மத். 22 : 39*

**மன்றாட்டு :** எங்கள் துணையாளரான கடவுளே, உம்மை நோக்கி பயணிக்கும் எங்களுக்கு புது தைரியமூட்டும். நீர் பாலைநிலத்தில் வாழ்வும், பாறையிலிருந்து தண்ணீரும் அருளுகிறீர். நாங்கள் எங்கள் சந்தேகங்களையும், கேள்விகளையும் நிறைவை எதிர்நோக்கி உம்மிடம் சமர்ப்பிக்கின்றோம். உம்பால் தாகம் கொள்ளும் இறைமக்களாகிய நாங்களும் ஒருவருக்கொருவர் உதவியாயிருக்க தூண்டியருளும். இறைமைந்தர் இயேசுவின் திருப்பெயரில் வேண்டுகிறோம். - ஆமென்.

கடவுளின் நிலையான அன்பை மானுடம் உணர கிறிஸ்துவின் வாழ்வும், போதனையும் துணை செய்கிறது. I யோ. 4 : 16 - ல் 'கடவுள் நம்மிடம் கொண்டுள்ள அன்பை அறிந்துள்ளோம், அதை நம்புகிறோம். கடவுள் அன்பாய் இருக்கிறார்'. என்கிறார். கடவுளின் அன்பு உன்னதமானது. நாம் எந்நிலையில் இருந்தபோது கடவுள் தன் அன்பை நம்மிடம் பாராட்டினார் என்பது தான் சிறப்பு. 'நாம் பாவிகளாய் இருந்தபோதே கிறிஸ்து நமக்காகத் தம் உயிரைக் கொடுத்தார். இவ்வாறு கடவுள் நம்மீது கொண்டுள்ள தம் அன்பை எடுத்துக்காட்டியுள்ளார்' (உரோ. 5 : 8). நம் தந்தை நம்மிடம் எத்துணை அன்பு கொண்டுள்ளார் என்று பாருங்கள். நாம் கடவுளின் மக்களென அழைக்கப்படுகிறோம். கடவுளின் மக்களாகவே இருக்கிறோம் (I யோ. 3 : 1). கடவுளின் அன்பு கிறிஸ்து இயேசுவில் வெளிப்பட்டது. 'தம் ஒரே மகன் மீது நம்பிக்கைக் கொள்ளும் எவரும்அழியாமல் நிலைவாழ்வு பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின் மேல் அன்பு கூர்ந்தார்' (யோ. 3 : 16). கடவுளின் நிலையான அன்பின் உச்சக்கட்டம் கிறிஸ்துவின் சிலுவை மரணத்தில் வெளிப்பட்டது. தன் நண்பனுக்காக உயிரை கொடுப்பதைவிட பெரிய அன்பு வேறொன்றும் இல்லை என்று போதனை தந்த கிறிஸ்து அதை தன் வாழ்வில் சாதனையாக காட்டினார்.

கடவுளின் தன்னலமற்ற இந்த தியாக அன்பு மனுக்குலத்திற்கு மீட்பு, வாழ்வு தந்தது. Dr. கார்ல் பார்த் என்ற இறையியலாளர் குறிப்பிடும்போது 'நான் திருமறையில் கண்டுபிடித்த மிகப்பெரிய உண்மை என்னவென்றால் இயேசுகிறிஸ்து என்னை அன்பு செய்கிறார் என்பதாகும்' என்றார். இந்நாளின் திருமறைப்பகுதிகள் அடிப்படையில் கடவுளின் நிலையான அன்பை சிந்திப்போம்.

## *1. மானுட தேவையை சந்தித்த இறை அன்பு (விப. 17 : 6)*

"நீ பாறையை அடி; மக்கள் குடிக்க அதிலிருந்து தண்ணீர் புறப்படும் என்றார்."

மனிதன் உயிர்வாழ தண்ணீர் இன்றியமையாதது. விடுதலை பயணத்தில் இஸ்ரவேல் மக்கள் சீன் பாலைவனத்திலிருந்து பயணத்தை தொடர்ந்த போது ரெவிதீமில் வந்தபோது குடிக்க தண்ணீர் கிடைக்கவில்லை. விடுதலை பயணத்தின் எல்லா நிலைகளிலும் தேவையை சந்தித்து வழி நடத்திய கடவுள் தங்கள் தாகத்தை தீர்க்க தண்ணீரை தருவார் என்ற நம்பிக்கையும், பொறுமையும் இல்லாத இஸ்ரவேல் மக்கள் மோசேக்கு விரோதமாக முறுமுறுத்தார்கள்.எங்களையும், எங்கள் பிள்ளைகளையும், கால்நடைகளையும் தாகத்தால் சாகடிக்கவா ? எகிப்திலிருந்து அழைத்து வந்தீர் என்றனர் (வி.பி. 17 : 3). கடவுள் பாறையை பிளந்து இஸ்ரவேல் ஜனங்கள் குடிக்க தண்ணீரை தந்து தேவையை சந்தித்தார். இறைவன் தன் ஜனங்கள் மீது கரிசனை, அன்பு கொண்டு அவர்கள் தேவையை சந்தித்து வந்தாலும், ஜனங்கள் கடவுளுக்கு விரோதமாகவே செயல்படுவதை காண முடிகிறது (விப. 17 : 2).

விடுதலை பயணத்தில் (வரலாற்றில்) மக்களின் அனைத்து தேவைகளையும் கடவுள் அதன் அதன் நேரங்களில் நிவிர்த்தி செய்ததை காண முடிகிறது. 'தண்ணீரை இரத்தமாக்கி' அடையாளம் செய்து விடுவித்த கடவுள் (விப. 7 : 15-23), செங்கடலை பிளந்து வழியை ஏற்படுத்திய கடவுள் (விப. 14 : 16-22), மாராவின் கசந்த தண்ணீரை மதுரமாக மாற்றி தாகம் தீர்த்த கடவுள், ஏலீமில் 12 நீரூற்றை தந்த கடவுள் (விப. 15 : 22-26), மன்னாவினால் போஜனம் தந்த கடவுள் (விப. 16 : 13-15), ரெவிதீமிலும் மக்கள் முறுமுறுப்பால் அதை பெற்றுக்கொள்ள கூடிய

தார்மீக உரிமை இல்லா நிலையிலும் மக்கள் மீது அன்பு பாராட்டி தேவையை சந்தித்து தன் அன்பை வெளிப்படுத்தினார். 'நானே உன் பரிகாரியாகிய கர்த்தர்' என்றார் (வி.ப. 15 : 26). 'உனக்கு நான் முடிவில்லாத அன்பு காட்டியுள்ளேன். எனவே பேரன்பால் உன்னை ஈர்த்துள்ளேன்' (எரே. 31 : 3).

கடவுள் அன்பு இன்று எல்லா நிலையிலும் நம் தேவைகளை சந்திக்கிறது. மனுக்குல வாழ்வில் நாம் வாழ்வு இழந்து, இறை உறவை இழந்து பாவிகளாய் வாழ்ந்தோம். இந்நிலையிலே கடவுள் அநாதி சிநேகத்தால் உன்னை சினேகித்தேன் என்கிறார். உண்பதற்கு உணவு, உடுக்க உடை, தங்குவதற்கு இல்லம், சுவாசிக்க காற்று, பருகுவதற்கு தண்ணீர், பணியாற்றுவதற்கு வாய்ப்பு, உழைப்பதற்கு ஆற்றல், அறிவு, வளமை, பிள்ளைகளுக்கு நல்ல கல்வி, பொருளாதார நிலையில் உயர்வு, உரிமைகள் பெற்று நிறைவு என்பவைகளோடு இறைவனை அறியக்கூடிய மேலான பாக்கியம் என்று நம் தேவைகள் சந்திக்கப்படுவது கடவுளின் நிலையான அன்பின் வெளிப்பாடே. ஏசா. 66 : 13 'தாய் தன் பிள்ளையை தேற்றுவதை போல் நான் உங்களைத் தேற்றுவேன்' என்ற இறை அன்பை புரிந்துகொண்டவர்கள் இவ்வுலகில் எந்த அன்புக்காகவும் ஏங்கி தவிக்க வேண்டியதில்லை. அந்த இறை அன்பு மட்டுமே முழுமையானது. நம்மை முழுமைப்படுத்த வல்லது. 'நம்மில் வல்லமையோடு செயல்படுபவரும், நாம் வேண்டுவதற்கும் நினைப்பதற்கும் மிகவும் மேலாக அனைத்தையும் செய்ய வல்லவருமான கடவுளுக்கே மாட்சி உரித்தாகுக' (எபே. 3 : 20,21).

## 2. மானுடத்திற்கு வாழ்வு தந்த இறையன்பு (எபே. 3 : 19)

"அறிவுக்கு எட்டாத இந்த அன்பை அறிவை அறிந்து கொள்ளும் ஆற்றல் பெறுவீர்களாக."

கடவுள் கிறிஸ்துவில் வெளிப்படுத்திய நிலையான அன்பில் இறைநீதி வெளிப்பட்டது. தந்தைக்கு சமமாய் இருந்ததை கொள்ளையாடின பொருளாக எண்ணாமல் தன்னைதான் வெறுத்து, அடிமையின் ரூபமெடுத்து மனுஷர் சாயலானார் என்கிறது திருமறை. மனுக்குல மீட்பிற்காக கிறிஸ்துவில் வெளிப்பட்ட இறை அன்பு சிலுவையின் தியாக மரணத்தால் மனுக்குலம் வாழ்வுபெற உதவியது.

அனைத்துலகமும் வாழ்வு பெற்றது. இறை உறவை பெற்றது. அறிவுக்கு எட்டாத இந்த அன்பை அறிந்துகொள்ளும் ஆற்றல் பெறுவீர்களாக ! என எபேசு திருச்சபைக்கு பவுல் அடிகளார் கூறுகிறார்.

மனிதனை படைத்த இறைவன், மனிதன் பாவத்திலும், சாபத்திலும் வீழ்ந்தபோது அவனை புறக்கணித்து தள்ளிவிடாமல், இதயபூர்வமாய் அவனை அன்பு செய்தார். அற்பமான மாந்தர்களை மீட்கவும், அவர்களைத் தம் பக்கமாய் திருப்பிக்கொள்ளவும், தன் அற்புதமான குமாரன் இயேசு கிறிஸ்துவை மனுவாய் அவதரிக்க செய்து, அவரை சிலுவையில் ஒப்புக்கொடுத்தாரே, இது எவ்வளவு பெரிய அன்பு, இயேசு கிறிஸ்து நம் பாவத்தை பார்த்து வேதனை அடைந்தார். நம் பாவத்தை போக்க வேதனை அனுபவித்தார். நாம் வாழ்வு பெற்றோம். தேவன்பின் எல்லை சிலுவை என்றால் அது மிகையாகாது. இந்த தேவ அன்பிலிருந்து பிரிப்பது யாது? என திருமறை கேட்கிறது. உரோ. 8 : 35-ல் ‘கிறிஸ்துவின் அன்பிலிருந்து நம்மை பிரிக்க கூடியது எது ? வேதனையா? நெருக்கடியா? இன்னலா.......?’

I யோ. 3 : 16 - ல் ‘கிறிஸ்து நமக்காக தம் உயிரை கொடுத்தார். இதனால் அன்பு இன்னதென்று அறிந்து கொண்டோம். ஆகவே நாமும் நம் சகோதரர் சகோதரிகளுக்காக உயிரை கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.’ கிறிஸ்துவிலிருந்த சிந்தை உங்களிலும் இருக்கக் கடவது என்று திருமறை நம்மை போதிக்கிறது. யோவா. 15 : 10 - ல் இயேசு கிறிஸ்து சொல்கிறார். ‘நான் என் தந்தையின் கட்டளைகளை கடைபிடித்து அவரது அன்பில் நிலைத்திருப்பது போல நீங்களும் என் கட்டளைகளை கடைபிடித்தால் என் அன்பில் நிலைத்திருப்பீர்கள்.’ ‘இறைவனிடம் அன்புகூர்வது. உன்மீது நீ அன்பு கூர்ந்து போல உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக.’ இவை திருச்சட்ட நூல் முழுமைக்கும் அடிப்படை என்றார் (மத். 22 : 38,39). மானுட தேவைகளை சந்தித்து, மானுடத்திற்கு வாழ்வு தந்த கடவுளின் நிலையான அன்பில் நாமும் நிலைத்திருந்து கனிதரும் வாழ்வு வாழ்வோம்.

அருள்திரு. **T. டேவிட் கிளேட்ஸன்**

**23-01-2011**

*NCCI ஞாயிறு*

*பிரசன்ன திருநாளுக்குப் பின்வரும்*
*3 - ம் ஞாயிறு*

# கடவுள் ஒருமைப்பாட்டின் ஆதாரம்

## GOD : SOURCE OF UNITY

எசே. 36:24,28 திபா. 16:11,15
திபா. 133 யோவா. 17.20,23

*"நாம் ஒன்றாய் இருப்பது போல அவர்களும் ஒன்றாய் இருக்குமாறு நீர் எனக்கு அருளிய மாட்சியை நான் அவர்களுக்கு அளித்தேன்." யோவா. 17:22*

**மன்றாட்டு : ஒருங்கிணைக்கும் தூய கடவுளே, திருமுழுக்கின் தண்ணீரால் எங்களை கூட்டுறவில் இணைப்பதற்காய் நன்றி படைக்கின்றோம். திருச்சபைகள் ஒரே நம்பிக்கை மற்றும் திருமுழுக்கில் செழித்து வளர துணைபுரிவீராக. நாங்கள் கிறிஸ்துவுக்கு சான்று பகரவும், எங்கள் அன்றாட வாழ்வின் அனைத்து சூழல்களிலும் திருச்சபை ஒருமைப்பாட்டில் வளரவும் ஊக்கப்படுத்துவீராக. எங்கள் ஆயுள் முழுவதும் உமது அழைப்பில் நாங்கள் உண்மையுடனிருக்க அருள்செய்ய வேண்டுமென்று திருமைந்தர் இயேசுகிறிஸ்து வழியாக வேண்டுகிறோம். - ஆமென்.**

அனைத்திற்கும் ஆதாரம் கடவுள்; என்ற விசுவாசக் கருத்தியல் மேலோங்கி நிற்கும் போது கடவுள் ஒருமைப்பாட்டின் ஆதாரம் என்பதில் வியப்பொன்றும் இல்லை. திருமறையில் தொடக்கத்திலிருந்தே ஒருமைப்பாட்டின் ஆதாரமாக விளங்கும் கடவுளின் செயல்பாட்டைத் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும். படைப்பின் வரலாற்றில் படைப்பின் கொடு முடியாக விளங்கும் மனுக்குலத்தை படைக்கும் முயற்சியில் கடவுள் கூறும் போது .... மானிடரை நம் உருவிலும் நம் சாயலிலும் உண்டாக்குவோம்... தொ.நூ. 1:26 என்று கூறும் போங்கு, இதிலடங்கியுள்ள பன்மையைப் பறைசாற்றுகின்றது. படைப்பின் சிறப்புப் பகுதியாகக் கடவுள் மனிதனைப் படைத்ததால் தம் விண்ணவர் குழுவுடன் கலந்தாலோசித்தார் என்றும் மும்மை கோட்பாட்டின் எதிரொலி என்றும்; இது உயர்வுப்பன்மை என்ற விளக்கங்களும் அறிஞர்களால் கொடுக்கப்படும் சூழலில் இங்கு புரிந்து கொள்ளப்படும் உண்மை ஒருமைப்பாடு; இதற்கு ஆதாரம் கடவுள் என்பதை மறுக்க முடியாது.

படைப்பின் சிகரமாம் மனிதனைத் தனிமனிதனாகப் படைக்கப் படவில்லை; மாறாக, ஆணும் பெண்ணுமாக அவர்களைப் படைத்தார் எனக் காண்கிறோம். தெ.நூ. 1:27. ஒருமைப்பாட்டின் ஆதாரமாம் கடவுள் மனிதனைப் படைக்கும் போதே அவனை ஓர் குடும்பமாகவே படைக்கின்றார். ஆணும் பெண்ணும் சமம் என்ற நிலையும் தாண்டி அவர்கள் இருவர் அல்லர் ஒருவர் அதாவது ஒன்று (Oneness) என்றப் பேருண்மையை அழுத்தம் திருத்தமாக உணர்த்துகின்றார்.

கடவுள் ஆபேலின் படையல்களை ஏற்றுக் கொண்டார். ஆனால் காயீனின் படையல்களை ஏற்றுக் கொள்ளவில்லை. இதனால் காயீன் ஆபேலை கொலை செய்துவிட்டார். இந்நிலையில் கடவுள் காயினிடம் உன் சகோதரன் ஆபேல் எங்கே. (தொ.நூ 4:9) என்று கேட்டுப் பேசுகின்றார் சகோதரருக்குள் ஒன்றிப்புத் தேவை அதுதான் வாழ்வின் அடித்தளம் என்று கூறி கடவுள் ஒருமைப்பாட்டின் ஆதாரம் என்பதை அழுத்தமாக வலியுறுத்துகின்றார்.

இன்றைய திருமறைப் பகுதிகளின் அடிப்படையில் ஒருமைப்பாட்டின் ஆதாரமாய் விளங்கும் கடவுளின் செயல்பாட்டை புரிந்து கொள்ள அழைக்கப்படுகின்றோம்.

## *1. பரிசுத்தப்படுத்தி ஒன்றிணைக்கும் ஆதாரம்*

(எசே. 36:24,28)

இறைவாக்கினர் எசேக்கியேல் எருசலேமின் வீழ்ச்சிக்கு, முன்னும் பாபிலோனியச் சிறையிருப்பின் போதும் இறைவாக்குரைத்தார். பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்டோருக்கு மட்டுமின்றி, எருசலேமில் எஞ்சியிருந்தோருக்கும் அவர் இறைவாக்குரைத்தார்.

இஸ்ராயேல் மக்கள் பாபிலோனிய அடிமைத்தன வாழ்வில் தங்கள் நடத்தையாலும் செயல்களாலும் தங்கள் நாட்டின் வாழ்க்கை நெறிகளை தீட்டுப்படுத்தினார்கள் அவர்கள் நடத்தை ஒரு ஸ்திரீயின் தீட்டுப் போல இருக்கின்றது (36:17) என கடவுள் வேதனை கொள்கிறார் மட்டுமல்லாது இத்தகைய ஒருமைப்பாடற்ற, ஒழுக்கமற்ற செயல்களை செய்தபோதிலும் தாயுள்ளம் கொண்ட கடவுள் தம் மக்களை ஒன்றிணைக்கும் சிந்தனையோடு நான் உங்களை வேற்றினத்தாரிடமிருந்து அழைத்து பல நாடுகளிடையே கூட்டிச்சேர்த்து, உங்கள் சொந்த நாட்டிற்குத் திரும்பக் கொணர்வேன். நான் தூய நீரை உங்கள் மேல் தெளிப்பேன் நீங்கள் உங்கள் எல்லா அழுக்கிலிருந்தும் தூய்மையாவீர்கள். நான் உங்களுக்குப் புதிய இதயத்தை அருள்வேன்.. சதையாலான இதயத்தைப் பொருத்துவேன்.. அப்பொழுது என் மக்களாய் இருப்பீர்கள் நான் உங்கள் கடவுளாய் இருப்பேன். என கருத்தாய் கரிசனைப்படுகிறார். பரிசுத்தப்படுத்தி ஒன்றிணைக்கும் ஆதாரமான கடவுள்.

## *2. பற்றுறுதியாளர்களை ஒன்றிணைக்கும் ஆதாரம்*

(தி.ப. 16:11,15)

பவுலாரின் திருத்தூதுப் பயணத்தில் ஏற்படும் ஒருமைப்பாட்டை இங்கே காண முடிகிறது. நாங்கள் என்று தொடங்கும் பன்மை இங்குதான் தொடங்குகிறது இதிலிருந்து லூக்காவும் பவுலோரோடு சேர்ந்து திருத்தூதுப்பயணம் மேற்கொண்டார் என்று எண்ண முடிகின்றது.

பவுலார் தன்னுடைய அருட்பணி பயணத்தில் பிலிப்பு நகருக்கு வந்து சில நாட்கள் தங்கி பணியாற்றினார். குறிப்பாக நகர வாயிலுக்கு வெளியே அமர்ந்திருந்து சில பெண்களோடு பேசியபோது தீத்தீரா நகரை சார்ந்த பெண் லீதியா செந்நிற ஆடைகளை விற்பவர்; பவுலாரின்

வார்த்தையை ஏற்றுக் கொள்ள கடவுள் அவள் உள்ளத்தை திறந்தார். அவரும் அவள் வீட்டாரும் திருமுழுக்குப் பெற்றனர்.

இங்கு பவுல் லூக்கா மற்றும் லீதியா வீட்டார் என்ற விசுவாசக் குடும்பம் ஒன்றிணைக்கப்படுகிறது. இந்த ஒன்றிப்புக்கு கடவுளே ஆதாரம்..... ஆண்டவரும் தாம் மீட்டுக் கொண்டவர்களை நாள்தோறும் அவர்களோடு சேர்த்துக் கொண்டேயிருந்தார். (தி.ப.2:47).

## 3. பரலோக மாட்சியில் ஒன்றிணைக்கும் ஆதாரம்

(யோ. 17:20,23)

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் மன்றாட்டில் மேலோங்கி நிற்பது ஒருமைப்பாடு, இதில் இரண்டு உண்மைகளை இங்கு குறிப்பிடுகின்றார்.

அடியார் தமக்குள்ளான ஒருமைப்பாட்டில் நிறைவடைய வேண்டும் (வ.21,23).

தாம் இருக்குமிடத்தில் அடியார்களும் இருக்க வேண்டும். (வ.24)

தந்தையாம் கடவுள் திருமைந்தனுக்குத் தந்த மாட்சியை அடியவர்களோடு பகிர்ந்து கொள்கின்றார்; அவர்களும் நான் இருக்கும் இடத்திலேயே என்னோடு இருக்க வேண்டும் என்கின்ற ஒன்றிணைக்கும் ஆதாரம். நீங்கள் உள்ளம் கலங்க வேண்டாம்........ நான் போய் உங்களுக்கு இடம் ஏற்பாடு செய்தபின் திரும்பி வந்து உங்களை என்னிடம் அழைத்துக் கொள்வேன். அப்போது நான் இருக்கும் இடத்திலேயே நீங்களும் இருப்பீர்கள். (யோவா 14;1,3) என்கின்ற பரலோக மாட்சியை மிக அழுத்தமாக தெளிவுபடுத்துக்கின்றார். பூலோகத்தில் மட்டும் அல்ல, பரலோகத்திலும் ஒன்றிணைப்பின் ஆதாரம் இறைவன் ஒருவரே என்றப் பேருண்மை தெள்ளத் தெளிவாகின்றது.

ஒப்பற்ற இறைவனின் ஒப்பற்ற இயல்பே ஒன்றிப்பு அல்லது ஒருமைப்பாடு (The very essence of God is Unity) என்பதை நாம் ஒருபோதும் மறந்திடலாகாது. அவரது தன்மை, இயல்பு, இயக்கம் அத்தனையும் ஒன்றிப்பு அல்லது ஒருமைப்பாடு ஒன்றே; அவர் ஒருமை இறைவன் அல்லர்; மும்மையில் ஒருமை இறைவன். ஒன்றிப்பில் தான் அவரால் இயங்க முடியும். எனவே தான் ஆண்டவர் கிறிஸ்துநாதர் ஏனெனில் இரண்டு அல்லது மூன்று பேர் என் பொருட்டு எங்கே ஒன்றாக கூடி இருக்கின்றார்களோ அங்கே அவர்களிடையே நான் இருக்கிறேன் என உறுதியாக உங்களுக்கு சொல்கிறேன். (மத்.18:20) எனத் திருவாய் மலர்ந்திருக்கின்றார். ஆம் ஒருமைப்பாட்டின் ஆதாரம் அவர் ஒருவரே நம் அன்றாட வாழ்விலும் அவரது ஒருமைப்பாடு எதிரொலிக்க வேண்டும்.

அருள்திரு. **S.M. டேனியல் தேவதாசன்**

## 26-1-2011

*குடியரசு நாள்*

# மக்களின் நலம் சார்ந்த உரிமை

**RIGHT AND WELFARE OF THE PEOPLE**

நெகே. 2: 1-9 திப. 15: 1-21
திபா. 101 மாற். 12: 13-17

*"நாட்டில் நம்பிக்கைக்குரியோரைக் கண்டுபிடித்து என்னோடு வாழச் செய்வேன்."* *திபா. 101 : 6*

**மன்றாட்டு : ஆற்றல் நிறைந்த கடவுளே, உலகின் அனைத்து நாடுகளையும் உமது மாட்சிக்காய் ஏற்படுத்தியிருக்கிறீர். அனைத்து மக்களும் விடுதலையுடனும், மரியாதையுடனும் வாழவேண்டுமென்பதே உம் விருப்பு. எங்கள் நாட்டில் அமைதி நிலைக்கச் செய்வீராக. நாட்டுமக்கள் நீதி வேட்கையும், உண்மையும் உள்ளோராய் ஒருங்கிணைந்து வாழ அருள்புரிய வேண்டுமென்று விடுதலையாளர் இயேசுகிறிஸ்து வழி வேண்டுகிறோம். - ஆமென்.**

வாழ்க்கை என்பது ஒரு விளையாட்டு மைதானம் அல்ல. அது தீர்மானங்கள் செய்ய வேண்டிய ஒரு அரங்கம். மக்களை குறித்த கரிசனை ஆட்சி செய்பவர்களுக்கு அவசியம் தேவை. மக்கள் நலம் காக்கப்பட அர்ப்பணிப்போடும், தியாகத்தோடும் நற்பணி செய்யும் தலைவர் தேவை. நாம் நாமே நம்மை ஆளும் தலைவர்களை தெரிந்து கொள்ளும் உரிமையினை குடியரசின் மூலம் பெற்றுள்ளோம். சமூக, பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் அன்றாட மக்களின் வாழ்வு தரத்தை சீரழிக்கின்றன. சீர்கேடுகளை மாற்ற நாம் ஒவ்வொருவரும் தீர்மானம் செய்ய வேண்டும். இதனை தாவீது அரசரின் அர்ப்பண சிந்தையோடு தியானிப்போம்.

### *1. மாசற்ற வழியில் நடத்தல்* திபா. 101:2

தாவீது அரசன் வாக்குறுதியாக மாசற்ற வழியே நடப்பதில் நான் கருத்தாயிக்கிறேன் என்கிறார். அதிகாரம் வகிப்போர், லஞ்சம், ஊழல், சுரண்டல், பணம், சொத்து சேர்க்க வேண்டும் என்ற வரையறை தாண்டிய பேராசையால் ஏழை எளிய மக்களின் உரிமைகள், கூலி பறிக்கப்படுகிறது. வாழ்வு நசுக்கப்படுகிறது. வஞ்சக நெஞ்சம் எனக்கு வெகு தொலைவில் இருப்பதாக திபா. 101:4 தாவீது கூறுகிறார். கேடு செய்ய நினைப்பது, மாய்மாலமான வாழ்வு இவையெல்லாம் அரசியல் தந்திரம். மக்களின் நலனுக்காக அர்ப்பணம் செய்யும் இதயம் தேவை. நெகேமியா எருசலேம் அலங்கம் இடிந்து கிடக்கும் செய்தி கேட்டு துக்கமடைந்தார். கடவுளை

நோக்கி வேண்டிக் கொண்டார். அரசரின் உதவி பெற துணிந்து செயல்பட்டார்.

நாமும் தாவீது அரசனை போல் மாசற்ற வழியில் நடப்போம். மக்களின் உரிமை காக்க பாடுபடுவோம்.

## 2. *மாசற்ற சிந்தனையை வளர்த்தல்* திபா. 10:1 -3

இழிவான எதையும் கண்முன் வைக்க மாட்டேன் நெறி தவறிய செயலை வெறுக்கிறேன்.

நாம் எதனை கவனித்து பார்க்கிறோமோ எதன் மீது நமது கண்ணை வைக்கிறோமோ அது நம்மை பாதிக்கும் தாவீது தன் வீழ்ச்சியின் பலனால் அடைந்த துன்பத்தை எண்ணிப் பார்த்திருக்கக் கூடும். தன் கண்கள் தீமையான காரியங்களை பார்ப்பதால் எண்ணங்கள் சிந்தனைகள் மாசுபடுகிறது. பில்லிகிரகாம் சொல்லும் போது முதல் பார்வையை நீ தவிர்க்க முடியாமல் போகலாம் ஆனால் இரண்டாம் பார்வையை குறித்து கவனமாயிரு என்றார்.

வாழ்க்கையில் தவறான மதிப்பீடுகளோடு, தவறான கண்ணோட்டத்தோடு வாழும் பலர் பொய்யையே பேசி மாய்மாலமாக வாழ்கின்றனர். கவர்ச்சிகளிலிருந்து தன்னை காத்துக் கொள்ள கவனமாயிருக்க வேண்டும். சமுதாய சீர்கேடுகள் ஒருபோதும் நம்மை பாதிக்க இடம் கொடுக்காது வாழ தூய ஆவியின் சிந்தை நம்மை தெளிவுடன் நடத்த அர்ப்பணிப்போம்.

## 3. *மாசற்ற வார்த்தையை பேசுதல்* திபா. 101:5

மக்கள் நலம் காக்க நமது வார்த்தை உண்மையானதாகவும், தூய்மையானதாகவும் இருக்க வேண்டும். அடுத்திருப்போரை மறைவாக பழிப்போரை நான் ஒழிப்பேன் என்கிறார் தாவீது அரசன்.

புறங்கூறுதலும், வீண்பேச்சும் மனிதனின் நேரத்தையும் பண்புநலனையும் கெடுக்கும் ஆயுதங்கள். நமது வார்த்தை பிறருக்கு பக்தி வளர்ச்சி உண்டாக்கும்படி ஆரோக்கியமான வார்த்தைகளை, பயனுள்ளவைகளை பேச பழக வேண்டும். கெட்ட வார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்து புறப்பட வேண்டாம் (எபே 4:29) நமது அன்றாட வாழ்வில் நம்மை பாதிக்கக் கூடிய தீய செயல்களை அகற்றி அர்ப்பணத்தோடு பிறர் நலம் காக்க பேசுவதும் நடப்பதும் அவசியம் ஆகும்.

எப்போதும் முகமலர்ச்சியோடு அரசருக்கு பணிவிடை செய்யும் நெகேமியா துக்க முகத்தோடு அமைதியாக விண்ணப்பத்தின் ஏக்கத்தோடு நின்ற செயலை புரிந்து கொண்ட அர்த்தக்சஸ்தா அரசன் விசாரிக்கிறார். நெகேமியாவின் விண்ணப்பத்தை நிறைவேற்றுகிறார். மக்களின்

வாழ்வுக்காக எருசலேமின் இடிந்து போன அலங்கத்திற்காக அமைதியிழந்து பகைவனை குறித்த பயத்தோடு வாழ்ந்த மக்களுக்கு துணிவுடன் அலங்கம் கட்டும் பணியில் ஈடுபட்டார். எத்தனையோ எதிரான, இழிவான பரிகாச வார்த்தைகள் வந்த போதும் கலங்காது தைரியமாக, 'எழுந்து கட்டுவோம் வாருங்கள்' என தேசத்தின் மக்கள் படும் அவல நிலைகள் நீங்க சிறுபான்மை மக்களின் உரிமைகள் மறுக்கப்படும் நிலைகள் வரும்போது நெகேமியாவை போல செயல்படுவோம்.

## 4. மாசுகளை அகற்ற செயல்படுதல் திபா. 101:7

வஞ்சனை செய்வோருக்கு என் மாளிகையில் இடமில்லை. பொய் உரைப்போர் என் கண்முன் நிலைப்பதில்லை. பொல்லாரை தீங்கு இழைப்போரை அழிப்பேன் என தாவீது அரசன் கூறுகிறார். நம்மை சுற்றிலும் இறுமாப்புள்ளோர் அகந்தையுள்ளோர் சுயநலவாதிகள் பொய் சொல்லி பிழைப்போர் போன்றோர் வாழ்கின்றனர். இவையெல்லாம் பாவத்தின் விளைவே. இன்று கிறிஸ்தவ பண்பு குன்றி முரட்டுத்தனமும், இரக்கமற்ற தன்மையும் கடுமையான நிலையும் கடின இரத்த வெறி உள்ள இதயமும் ஒவ்வொரு மனிதனையும் ஆட்கொள்கிறது. பலசாலி கூறுவதே சரி என அமைதி காட்டுகிறோம். தாவீது சொல்வது போல மாளிகையிலும், நாட்டிலும் தீமை செய்வோரை அழிப்பேன் என நாம் சொல்லாவிட்டாலும், தீமையை வேரறுப்போம். தீமை செய்வோரை திருச்சபையிலும் நாட்டிலும் தெரிவு செய்யாமல் நல்லோரை, நன்மை செய்வோரை அடையாளம் கண்டு செயல்படுவோம்.

## ஆபிரகாம் லிங்கன்

"அடுத்த மனிதனின் முதுகில் விழும் சவுக்கடியை பற்றி கவலைப்படாமல் இருக்கும் மனிதனுக்காக நான் மிகவும் வேதனைப்படுகிறேன்" என கூறியுள்ளார். மனிதனுடைய இயலாமைக்கும் ஏழ்மைக்கும் அக்கறை செலுத்தாமல் இரக்கமற்றவர்களாக வாழும் நிலை மாற வேண்டும். நமது ஆண்டவர் இயேசு நமது பாவகறைகளை அகற்ற தம்மையே பலியாக சிலுவையில் ஒப்புக் கொடுத்தார். சமூக சீர்கேடுகளை அகற்ற நம்மை கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுத்து கிறிஸ்துவின் வழியில் அன்பில் நடப்போம்.

மக்களின் நலம் காக்க நல்லதை செய்வோம், நல்லதை நினைப்போம், நலமானவற்றை பேசுவோம், தீமைகள் அகற்ற பாடுபடுவோம். இறை ஆசி நம்மோடிருப்பதாக.

அருள்திரு. **S. சுவாமிராஜன்**

**30-01-2010**

*பிரசன்ன திருநாளுக்குப் பின்வரும்*
*4 - ம் ஞாயிறு*

# தாழ்மை
## HUMILITY

மீகா 6:6-8 | ரோம. 12:14-21
தி.பா. 143:1-10 | லூக். 18:9-14

*"ஏனெனில் தன்னை உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான். தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்." லூக். 8:14*

**மன்றாட்டு : அருள் நிறைந்த கடவுளே, தம் திருமைந்தரை எங்கள் விடுதலையாளராக அனுப்பினீர். அவர் ஏழ்மையில் பிறந்து, பணியாளராய் செயலாற்றி, அவமானங்கள் ஏற்று எங்களுக்காக உயிர் விடுத்தார். எங்கள் பெருமையின் தடைகளை உடைத்தெறிந்து, வறட்சி கவுரவங்களைவிட்டு வெளியேறி, தாழ்மையுடன் உம் அருட்கொடையாம் வாழ்வினை ஏற்க அருள் செய்ய வேண்டுமென என்றும் வழிநடத்தும் இயேசு கிறிஸ்து வழியாக மன்றாடுகிறோம். - ஆமென்.**

தாழ்மை என்பது தன் நிலையிலிருந்து இறங்கி வருவது. அமெரிக்கா நாட்டின் முதல் ஜனாதிபதி ஜார்ஜ் வாஷிங்டன் தன்னை வேடமாற்றிக்கொண்டு நாட்டை உலாவருவது வழக்கம். இவ்வாறு ஒருமுறை வந்து கொண்டிருந்தபோது சாலையிலே முறிந்துகிடந்த மராமான்றினை அகற்றும் பணியில் பலர் ஈடுபட்டு இருந்தனர். இவர்களுக்கு அதிகாரியாக ஒருவர் இருந்து இவர்களை இயக்கிக்கொண்டிருந்தார். இதைப்பார்த்த ஜார்ஜ்வாஷிங்டன் தானும் அவர்களோடு சென்று அந்த மரத்தை சாலையிலிருந்து அப்புறப்படுத்தினார். பின்னர் அந்த அதிகாரியிடம் சென்று நண்பரே நீங்களும் இவர்களோடு இணைந்து இந்த பணியைச் செய்திருந்தால் விரைவாக இந்த பணி முடிந்திருக்கும் அல்லவா என்று கேட்டார். அதற்கு அவர் நான் ஒரு அதிகாரி, அவர்களை வேலை வாங்குவது தான் என் கடமை என்று சொன்னார். உடனே ஜார்ஜ் வாஷிங்டன் அந்த அதிகாரியைப்பார்த்து இனி இப்படிப்பட்ட பணிகள் இருந்தால் ஜார்ஜ் வாஷிங்டனுக்கு தகவல் கொடுங்கள் என்று சொல்லி வேடத்தைக் கலைத்தார். அவரைப் பார்த்த அந்த அதிகாரி செய்வதறியாது திகைத்து நின்றார்.

இன்றையச் சூழலில் உயர்வு பெற்ற மக்கள் உயர்ந்து நிற்கவே ஆவல் கொள்கிறார்களே தவிர தம்மைத் தாழ்த்தி உலகிற்கு உதவ

விரும்பவில்லை. திருமறை நமக்கு செல்லும் செய்தி இறைவனிடம் நம்மைத் தாழ்த்தி உயர்வு காண வேண்டுமென்று எந்தெந்த நிலைகளில் தம்மை இறைவனிடம் தாழ்த்த வேண்டும் என்பதை இன்றைய அருளுரை வழியாய் சிந்திப்போம்!

## 1. தாழ்மை இறைவன் விரும்பும் பலி

"உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதை அல்லாமல், வேறே எதை கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார். மீகா: 6:8[b]

அன்செல்வம் என்னும் இறையியலாளர் "மனிதன் தவறு செய்தான், தவறு செய்த மனிதன் எந்த மனிதருக்கெதிராக தவறு செய்தானோ அந்த மனிதரை திருப்தி செய்ய வேண்டும் அல்லது இறைவனைத் திருப்தி செய்ய வேண்டும். இவ்விரண்டையும் மனிதரால் செய்ய முடியாத நிலையில் கடவுள் தம் சொந்த மகனை உலகில் அனுப்பினார்."

அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம் அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத் தாமே தாழ்த்தினார். (பிலி: 2:8)

தன்னைத் தாழ்த்திய இறைவன் முன் மனிதர் தம்மைத் தாழ்த்த தயங்குகின்றனர். மாறாக காணிக்கை மற்றும் பலிகள் வழியாய் இறைவனைத் திருப்தி செய்ய முயல்கின்றனர். ஆனால் அவரோ நியாயம் செய்வதையும், இரக்கம் பாராட்டுவதையும், மனத்தாழ்மையாய் நடப்பதையும் விரும்புகிறார்.

இஸ்ரவேலரின் அநீதிகளைப்பார்த்த இறைவாக்கினர் ஆமோஸ் நியாயம் தண்ணீரைப் போலவும், நீதி வற்றாத நீரூற்றைப்போலவும் புரண்டுவரக்கடவது என்று சொல்கிறார். (ஆமோஸ்:5:24). ஏனெனில் அவர்கள் இறைபயமற்றவர்களாய் தங்கள் மனம்போன போக்கில் நடந்து நீதியையும், நியாயத்தையும் உதாசீனப்படுத்தி வாழ்ந்தனர். நீதியும், இரக்கமும் பாராட்ட வேண்டுமென்றால் இறைவனிடம் தம்மை முழுமையாய்த் தாழ்த்துகின்ற மனப்பக்குவம் இருக்க வேண்டும். அதாவது நம்மையே பலியாகக் கொடுக்க வேண்டும். கொரிந்தியத்திருச்சபை மக்கள் தங்கள் வறுமையிலும் இறைவனுக்குக் காணிக்கை படைத்ததோடு நின்றுவிடாமல் தங்களையே அவருக்காகத் தாழ்த்திக் கொடுத்தார்கள் (1 கொரி: 8:5[b]) தன்னையேக் கொடுக்கின்ற அனுபவத்தில்தான் கடவுள் பிரியப்படுகிறார். மகிழ்வு கொள்கிறார்.

## 2. தாழ்மை தீமையை வெல்லும் வழி

நீ தீமையினால் வெல்லப்படாமல் தீமையை நன்மையினாலே வெல்லு. (ரோமர்: 12:21)

கடவுளால் படைக்கப்பட்டு நல்லதென்று கண்ட உலகில் மனிதர்களின் தவறான செயல்களால் தீமை நிறைந்தது. இந்த தீமையிலிருந்து நம்மை விடுவித்துக்கொள்ள தாழ்மையை விலையேறப்பெற்ற அணிகலனாய் அணிந்து நம்மை அலங்கரித்துக்கொள்ள வேண்டும். தீமை உலகை விட்டு அகல வேண்டுமானால் தாழ்மைச் சிந்தை ஒவ்வொரு மனிதருக்குள்ளிருந்தும் உருவாக வேண்டும். நாம் பிறரைப் பார்த்து அவன் அல்லது அவள் நல்லவன் அல்லது நல்லவள், தீயவன் அல்லது தீயவள் என்று சொல்வதை விட நான் எப்படிப்பட்டவன் அல்லது எப்படிப்பட்டவள் என்னில் நல்ல குணம் இருக்கிறதா அல்லது தீய குணம் இருக்கிறதா? என்பதை அலசிப்பார்த்து இறைவனுக்கு முன்பாக நம்மைத் தாழ்த்த வேண்டும்.

இப்படிப்பட்ட அனுபவம் நமக்குள் வரும்போது தீமை என்பதை உலகில் இல்லாமல் செய்துவிடலாம். “ஒவ்வொருவருக்கும் தீமைக்குத் தீமை செய்யாதிருங்கள்.

திருமறையில் யோசேப்பின் வாழ்வு தீமையை நன்மையினால் வெல்வதற்கு நல்லதொரு வழியை நமக்குக் கற்றுத்தருகிறது. தன் சகோதரர்களின் தீய எண்ணத்தால் பல பாடுகளை அனுபவித்த யோசேப்பு வாழ்வில் உயர்வான நிலைக்கு வந்தபோது தமக்கு தீங்கிழைத்த சகோதரர்களுக்கு தீமைக்கும், தீமை செய்யாமல் தீமையை நன்மையினால் வென்று தீய குணம் படைத்த தன் சகோதரர்களையும் நல்வழிப்படுத்தினான். உறவு புதுப்பிக்கப்பட யோசேப்பிடமிருந்த தாழ்மைக்குணமே காரணமாயிருந்தது. யோசேப்பு தன்னை கடவுளுக்கு முன்பாகத் தாழ்த்தினான். (தொ.நூ. 39:9) தான் உயர்ந்த பதவியிலிருந்தும் தன்னைத்தாழ்த்தி சகோதரர்களோடு தன்னை ஐக்கியப்படுத்திக் கொண்டார். (தொ.நூ. 45)

மனுக்குலம் மீட்பிற்காய் தன்னை மனிதராக்கியஇயேசுக்கிறிஸ்து சிலுவை மரணம் வரைக்கும் தம்மைத் தாழ்த்தி சிலுவையிலிருந்து கொண்டும் தனக்கு தீங்கிழைத்தவர்களுக்கு தீமையை நன்மையினால் வெல்லும் வழியை நமக்குக் கற்றுத்தந்தார். (லூக்:23:34) அவர் வழி நின்று நம்மைத் தாழ்த்தி இறைவனுக்கு ஒப்புக்கொடுத்து தீமையை நன்மையினால் வெல்வோம்.

## 3. தாழ்மை வாழ்வு தரும் வழி

அவனல்ல இவனே நீதிமானாக்கப்பட்டவனாய்த் தன் வீட்டிற்குத் திரும்பிப்போனான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். (லூ: 18:14[a])

வாழ்வை விரும்பும் அல்லது உயர்வை விரும்பும் எந்த மனிதனும் எந்த மனுஷியும் தாழ்மையை அணிந்துகொள்ள வேண்டும். "மேன்மைக்கு முன்னானது தாழ்மை"(நீதி: 15:33)

தாழ்வான இடத்தில் தண்ணீர் தேங்கும் தண்ணீர் தேங்கும் இடத்தில் பயிர் வளரும். பயிர் வளரும் இடத்தில் செழிப்பு இருக்கும். இங்கு மனுக்குலம் மகிழ்வுடன் வாழும் அதைப்போன்று தாழ்மைக்குணமுடைய மனிதனால் அல்லது மனுஷியால் மட்டுமே ஆசிபெற்ற மகிழ்ச்சியான வாழ்வு வாழ முடியும். கர்த்தர் உயர்ந்தவராயிருந்தும் தாழ்மையுள்ளவர்களை நோக்கிப்பார்க்கிறார். (திபா. 138:6) "மனுஷனுடைய அகந்தை அவனைத் தாழ்த்தும், மனந்தாழ்மையுள்ளவனோ கனமடைவான்."

தன் செல்வம், கல்வி, பதவி, குலம் இவற்றைச் சொல்லி பெருமை பாராட்டுகிறவர்களை அல்ல "தாழ்மையுள்ளவர்களுக்கே கிருபை அளிக்கிறார்."(1 பேது: 5:5) கடவுளுக்கு முன்பாக நம்மைத் தாழ்த்தும்போது அவர் நம்மை உயர்த்துகிறார். (யாக்: 4:10) இயேசுகிறிஸ்து கூறும்போது இறை அரசின் வாழ்வைப்பெற விரும்புவோர் சிறுபிள்ளையைப்போல் தன்னைத் தாழ்த்த வேண்டுமென்று சொல்கிறார். ஏனென்றால் கள்ளம் கபடமற்ற ஒருவரால் மட்டுமே தன்னை முழுவதுமாக இறைவனிடம் தாழ்த்த முடியும். பரிசேயன் தன்னை உயர்வாகக் கருதி பிறரை அற்பமாக எண்ணினான். ஆனால் ஆயக்காரனோ கள்ளம் கபடற்ற மனதோடே தான் செய்த தவறுகளை உணர்ந்தவனாய் தன்னை முழுவதுமாய் இறைவனிடம் அர்ப்பணித்தான். "பாவியாகிய என்மேல் கிருபையாயிரும் என்று சொன்னான்"(லூக்: 18:13) குறைவுகளையெல்லாம் உணர்ந்து முழுமையாய்த் தன்மை அர்ப்பணித்ததால் அநீதிகள் அகற்றப்பட்டு நீதிமானாக்கப்பட்டு தன் வீட்டிற்கு திரும்பினான். (லூக்:18:14) "தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடைய மாட்டான். அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான்"(நீதி:28:13)

இன்று ஆலயத்தொழுகைகளில் பங்குபெறுகிற நாமும் சிலுவை மரணம் வரைக்கும் தம்மைத் தாழ்த்தி நமக்கு வாழ்வு தந்த இயேசுக்கிறிஸ்துவிடம் ஆயக்காரனைப்போல் நம்மைத் தாழ்த்தி அவர் அருளும் மகிழ்வினைக் கற்று நிலைவாழ்வின் பேற்றினைப்பெறுவோம்!

அருள்திரு. **S. ஜேக்கப்ராஜ்**

**01-02-2011** *அருணோதய ஆராதனை*

# உடனிருந்து வழி நடத்தும் கடவுள்

யோசுவா 1 : 1-9

*"........நான் மோசேயோடே இருந்தது போல உன்னோடும் இருப்பேன்....." யோசு. 1 : 5*

புதிய ஆண்டின் இரண்டாவது மாதத்தில் பயணிக்கும் இவ்வேளை '...........நான் உன்னோடும் இருப்பேன்' என்று யோசுவாவுக்கு வாக்கருளிய கடவுள் ஒவ்வொருவருக்கும் அதே வாக்குறுதியை அருளுகிறார். மோசேயின் வழியாக இஸ்ரயேலரை எகிப்திலிருந்து விடுதலையாக்கிக் கானானுக்கு நேராக வழிநடத்திவந்த கடவுள் மோசேயின் மரணத்துக்குப் பின் நிலை தடுமாறியவராக கலங்கி நின்ற யோசுவாவிடம், நீ கலங்கவோ, பயப்படவோ வேண்டாம். நான் மோசேயுடன் இருந்தது போல உன்னோடும் இருப்பேன் என்று கூறி அவரைத் தேற்றுகிறார். அதேவேளை கடவுள் யோசுவாவுக்கு அளித்துள்ள இவ்வாக்குறுதியில் நான் உன்னோடு இருப்பேன் என்று வெறுமையாக சொல்லாமல் சில நிபந்தனைகளையும் அளிக்கிறார் (யோசு. 1 : 8). எனவே யோசுவாவுக்கு அளிக்கப்பட்ட இவ்வாக்குறுதி நிபந்தனையுடன் கூடிய வாக்குறுதி (Conditional Promise) எனலாம். அதாவது, யோசுவாவுடனேயிருந்து அவரை வழிநடத்த வேண்டுமேயானால் யோசுவாவும் தமது வாழ்வில் நிறைவேற்றவேண்டிய சில பொறுப்பான கடமைகள் இருக்கின்றன என்கிறார் கடவுள். இப்புதிய ஆண்டின் தொடக்க நாட்களில் யோசுவாவிடம் கடவுள் எதிர்பார்க்கும் காரியங்களை நமது வாழ்விலும் செயல்படுத்த உடன்படுவோமென்றால் கடவுள் நம்முடன் இருந்து நம்மை வழிநடத்துவார் என்பதற்கு சந்தேகமில்லை. எனவே ஆண்டவர் யோசுவாவிடம் எதிர்பார்ப்பவற்றை (யோசு. 1 : 8) தியானிப்போம்.

### *1. வாக்கில் கவனமாயிருக்கவேண்டும் :*

(.........வாயைவிட்டுப் பிரியாதிருப்பதாக.......)

மோசேயின் வழியாக அளிக்கப்பட்ட நீதி சட்டங்கள் அல்லது கட்டளைகள் உன்வாயை விட்டு நீங்காதிருக்க வேண்டும் என்கிறார். கடவுள். அதாவது, உன்னுடைய வாயிலிருந்து பிறக்கும் சொற்கள் நீதி சட்டங்களின் வார்த்தைகளாகவே இருக்க வேண்டும் என்றார். ஆண்டவருடைய பிள்ளைகளின் வாயிலிருந்து வரும் வார்த்தைகள் நீதி, நேர்மை, உண்மை சார்ந்தவைகளாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மனித உறுப்புகளில் நாவு மிக முக்கியமான

உறுப்பாகும். இந்த நாவை பயன்படுத்துவதில் மிக கவனமாயிருக்க வேண்டும். வேதியியல் உப்பில் (Chemical salt) எளிதில் எரியக்கூடிய வெண் பாஸ்பரஸ் தண்ணீரில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருப்பது போன்று கடவுள் மனிதருடைய நாவையும் தண்ணீரில் பாதுகாப்பாக வைத்திருக்கிறார் என புரிந்துகொள்ளலாம். மேலும், 'நாவை காக்கிறவன் வாழ்வைக் காக்கிறான்' (நீதி. 21 : 23) எனவும், யாக்கோபு அடிகளார் நாவை நெருப்பு (யாக். 3 : 6) எனவும், நாவை அடக்காதவருடைய இறை பக்தி வீண் (யாக். 1 : 26) எனவும் கடுமையாக எச்சரிக்கிறார். ஏசாயாவின் உதட்டைத் தொட்டது போன்றும் (ஏசா. 6 : 6,7) இயேசு பேசமுடியாதவருடைய நாவைத் தொட்டது போன்றும் (மாற். 7 : 33-35) நமது நாவு தொடப்பட வேண்டும். அப்போது இயேசுவைப் போன்று அருள்நிறைந்த வார்த்தைகள் நம்மிலிருந்து வெளிப்படும் (லூக். 4 : 22). யோசுவாவிடத்தில் ஆண்டவர் எதிர்பார்பதைப் போலவே நமது வாக்கில் மிகவும் கவனமாயிருந்து அன்புறவு வாழ்வில் முனைப்புடன் முன்னேறுவோம்.

## 2. செயலில் கவனமாயிருக்க வேண்டும் :

(......நீ செய்யக் கவனமாயிரு....)

நீதி சட்டத்திலிருந்து வலது புறம், இடதுபுறம் விலகாதிருப்பாயாக என்று கூறி, செயல்களில் எந்த சாய்வுமின்றி நேராக, நீதியாக மிகவும் கவனமாகச் செய்யப்பட வேண்டும் என்று கடவுள் யோசுவாவுக்கு ஆலோசனையளிக்கிறார். உழைப்பில் அல்லது செயலில் உண்மை வெளிப்படும் போது குற்றம் கண்டுபிடிக்க இயலுவதில்லை (தானி. 6 : 4) எனவும், சோதனை சூழ்நிலைகளிலும் கடவுள் உடனிருந்து பாதுகாக்கிறார் (தானி. 6 : 22) எனவும் தானியேல் அடியாரின் வாழ்வினூடாய் அறிந்துகொள்ள முடிகிறது. இன்றும் கிறிஸ்தவர்களாக வாழும் ஒவ்வொருவருடைய வாழ்விலும் கிறிஸ்தவ தன்மைகள் வெளிப்பட வேண்டும். இதைத்தான் வாழும் சாட்சிகள் (Witnessing life) என்கிறோம். தூய யாக்கோபு அடிகளார் வாழ்வில் வெளிப்படாத விசுவாசம் (பற்றுறுதி) உயிரற்றது என்று எச்சரிக்கிறார் (யாக். 2 : 17 - 20). வாழ்வைக் காண்கிற ஒவ்வொருவரும் கிறிஸ்துவை அவ்வாழ்வினூடாய் அறிந்து கொண்டு அவர்களும் கிறிஸ்துவைத் தங்கள் வாழ்வில் ஏற்றுக்கொள்ள தூய்மையான செயல் சார்ந்த வாழ்வு மிகவும் இன்றியமையாததென உணர வேண்டும். பக்தர் ஒருவர் தமது பாடல்வரிகளிலே "இயேசுவை வாழ்க்கையில் காட்டுங்களே, பேச்சிலல்ல, செயலில் நல்ல இயேசுவை வாழ்வோராய் காட்டுங்களே" என்று அழகாகப் பாடுகிறார். நாமும் நமது செயல்சார்ந்த வாழ்வில் மிகவும் கவனமாயிருக்க ஆண்டவர் நம்மிடம் எதிர்பார்க்கிறார்.

## 3. தியானிப்பதில் கவனமாயிருக்க வேண்டும் :

(......தியானித்துக் கொண்டிருப்பாயாக)

யோசுவாவிடம் கடவுள் எதிர்பார்க்கும் அடுத்த பண்பு தியானம் ஆகும். மானுடர்க்கு தனிதியானம் மிக இன்றியமையாதது. புதிய நாளை தொடங்கு முன்னதாக இறை திருவடி அமர்ந்து தியானிப்பது புதிய காட்சிகளைக் கற்றுக்கொள்ள ஏதுவாகும். அதோடு நமது செயல்கள் அனைத்தையும் இறைவார்த்தையோடு உரசிப்பார்க்கக் கூடிய நேரமும் தியான நேரமாகும். திருபாடகர் முதலாம் பாடலிலேயே 'ஆண்டவரது வார்த்தையில் தியானமாயிருப்போர் பேறு பெற்றோர்' (தி.பா. 1 : 2) என்கிறார். 'நீங்கள் அமர்ந்திருந்து........அறிந்து கொள்ளுங்கள்' (46 : 10) என்று குறிப்பிடுகிறார். அதுமட்டுமல்ல, அமர்ந்திருந்து தியானிப்பது ஆண்டவர் தமது வழிகளைப் போதிக்கக் கூடியதாக அமையும் (32 : 8). இயேசு கிறிஸ்துவும் இறை விருப்பம் அறிய கெத்சமெனேயில் காத்திருந்தார் (மத். 26 : 39). நாமும் நமது வாழ்வில் இறை திருவடி அமர்ந்து தியான வாழ்வில் கவனமாயிருக்கும் போது இறை நடத்துதலை முழுமையாகப் புரிந்து கொள்ள முடியும்.

யோசுவா தமது வாக்கிலும், செயலிலும், தியான வாழ்விலும் கவனமாயிருக்கும் போது மோசேயோடே இருந்தது போல யோசுவாவோடும் இருப்பதாகக் கடவுள் வாக்கருளியுள்ளார். அவ்வாறே இம்மூன்றிலும் நாமும் கவனமாயிருப்போமென்றால் நம்மோடும் இருந்து பாதுகாத்து வழிநடத்துவார் என்பதற்கு சந்தேகமில்லை.

அருள்திரு. **பிரைட் சாலமோன்**

> *கிறிஸ்து நம்மைப்போல் மாறி நம்மை அவரைப் போல் மாற்றினார்.*
> அதனாஷியஸ்

**06-02-2011**

*பக்திமுயற்சி சங்க ஞாயிறு*

*பிரசன்னத் திருநாளுக்குப் பின் வரும்*
*5 -வது ஞாயிறு*

# கிறிஸ்துவின் மாதிரியைப் பின்பற்றுதல்

**FOLLOWING CHRIST'S EXAMPLE**

Iதெச. 1:2-10 நீமொ. 3:5-12
திபா. 119:73-80 யோவா. 13:31-35

*"நீங்கள் ஒருவர் மற்றவருக்குச் செலுத்தும் அன்பிலிருந்து நீங்கள் என் சீடர்கள்என்பதை எல்லாரும் அறிந்து கொள்வார்." யோவா. 13 : 35*

**மன்றாட்டு :** உன்னதரான கடவுளே, அனைத்து படைப்புகளும் உமது திருமைந்தரின் அருளால் நிறைக்கப்பட அவரை உயர்த்தி மேன்மைப்படுத்தினீர். எளியோரையும், ஓரங்கட்டப்பட்டோரையும் உயர்த்திய அவரது தியாக அன்பை உணர்ந்து எங்களை எளிமையாக்கி முழு படைப்பும் விடுதலைபெற்று உயர்த்தப்பட எங்கள் பணிதொடர தாள்பணிந்து வேண்டுகிறோம். - ஆமென்.

## மாதிரியா? மாடல்களா?

இன்றைய அதிநவநாகரிக அதிஅற்புத விஞ்ஞான உலகில் மாதிரிகளுக்கு-இல்லை, மாடல்களுக்குப் பஞ்சமா? கண் இமைக்கும் நேரத்தில் எத்தனை எத்தனை மாடல்கள்! அத்தனையும் புதுமைகள்! அதிசயங்கள்! விதம் விதமான, வகைவகையான கார்கள், பைக்குகள், செல்போன்கள், ஆசைகள், அணிகலன்கள், ஆபரணங்கள்- இப்படியே அடுக்கிக்கொண்டே போகலாம். மனிதன் என்ன சளைத்தவனா? 'மனித' நடிகர்கள், அரசியல்வாதிகள், உலகத் தலைவர்கள் - இப்படியே பட்டியல் நீண்டுகொண்டே இருக்கும் - ஐந்து நட்சத்திர நற்செய்தியாளர்களும் இப்பட்டியலில் அடங்குவர்.

ஆம்! மாடல்கள் ஏராளம்! ஏராளம்! ஆனால், மாதிரி ஒன்றே! ஒன்றே மாதிரி! ஒருவரே மாதிரி! அவருக்கு நிகர் அவரே! அவரே இயேசு கிறிஸ்து! அவரே மாதிரி! நெஞ்சில் துளிர்த்தச் சில சிந்தனைகளை முன்வைக்கிறேன்:

## வேதனையா? சாதனையா?

இயற்கை சுட்டிக்காட்டும் சான்றுகள் பலப்பல! சில சான்றுகளை ஈண்டு காண்போம்:

(அ) உலகிலேயே கொடிய வேதனை பிரசவ வேதனை! "வேதனையில் நீ

குழந்தைகள் பெறுவாய்'' என்பது இறைவனின் மாறாதப் பிரமாணம் (தொடக்கநூல் 3:16). ஆனால், மனிதனோ இறைவன் வகுத்தப் பிரமாணத்தையே மாற்ற முயலுகின்றான். எனவே, சிசேரியன், மாத்திரைகள் எனக்குறுக்கு வழிகளைத் தேடுகின்றான். ஆனால் இயற்கையைப் பாருங்கள் விலங்குகள் ஆகட்டும், பறவைகள் ஆகட்டும், ஏனைய உயிரினங்கள் ஆகட்டும்; அன்றும் சரி இன்றும் சரி, என்றும் சரி, 'பிரசவம் என்றால்' வேதனை, வேதனை என்றால் பிரசவம் - குறுக்கு வழிகளைத் தேடுவதே இல்லை; அழகிய பரிசு ஒன்றை உலகிற்குத் தருகின்றது; வேதனையைச் சாதனை ஆக்குகின்றது இயற்கை!

(ஆ) பட்டுப் பூச்சியைப் பாருங்கள் - தன் உயிரை மாய்க்கின்றது; விலை உயர்ந்தப் பட்டுப் புடவையைப் பரிசாகத் தருகின்றது. முத்துச்சிப்பியைப் பாருங்கள் தன் உயிரை மாய்க்கின்றது. விலை மதிக்கமுடியாத முத்தைப் பரிசாகத் தருகின்றது. விதைகளைப் பாருங்கள்; தங்களை மாய்த்து, விதம்விதமான மரங்கள், காய்கள், கொடிகள், வண்ண வண்ண மலர்கள், காய்கள், கனிகள் என எண்ணற்றப் பரிசுகளை அள்ளித் தருகின்றன; இயற்கை வழங்கும் பரிசுகளுக்கு ஓர் சாதனை ஆக்குகின்றது இயற்கை!

இன்றையத் திருமறைப்பாடம் கற்றுத்தரும் உண்மை இதுவே! வேதனையைச் சாதனை ஆக்குகின்றனர் தெசலோனிக்கர்: "மிகுந்த வேதனை நடுவிலும் நீங்கள் தூய ஆவி அருளும் மகிழ்வோடு இறை வார்த்தையை ஏற்றுக்கொண்டீர்கள்'' - நெஞ்சால் புகழுகின்றார் பவுல் அடிகளார் (Iதெச. 1:16). கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட காரணத்தால் அவர்களைப் சித்திரவதை செய்தனர் யூதர்கள். ஆனால் அத்தனை இன்னல்களையும் மகிழ்வோடு ஏற்றனர்; துணிவோடு சான்று பகர்ந்தனர் கிறிஸ்துவுக்கு! சுருங்கச் சொல்லின், சொல்லொணாத் துன்பத்தையே நற்செய்தி ஆக்கினர். தெசலோனிக்கா இறை மக்கள்! ஆம்! வேதனையை வேதனை என்று எண்ணவில்லை, மாறாக, வேதனையைச் சாதனை ஆக்கினர்! இது அன்றோ விசுவாசம்! இது அன்றோ மாதிரி!

கிறிஸ்துவின் சிலுவையைப் பாருங்கள்; அது வேதனையின் உச்சம் - துன்பத்தின் சிகரம்! ஆனால், துன்பம் சிலுவையைக் கண்டுத் துளியும் அஞ்சவில்லை; ஓடி ஒளியவும் இல்லை, மாறாக, சிலுவையை-கொடூரச் சிலுவையைச் சாதனை ஆக்குகின்றார் இறைமகன்! ஆம்! சிலுவையை 'மீட்பு' ஆக்குகின்றார் - 'வாழ்வு' ஆக்குகின்றார்!! சிலுவை ஒரு சுமையா? இல்லை, அது ஒரு சுகம் வேதனை என்பது ஒரு சோதனையா? இல்லை, அது ஒரு சாதனை! என்னே கிறிஸ்துவின் மாதிரி!

## நடிப்பா? நடப்பா?

'நடக்கச் சொல்லித்தாரும் இயேசுவே இயேசுவே அழகிய பாடல் இது. கிறிஸ்து முன்னே நடக்கின்றார், அவர் பின்னே நாம் நடக்கின்றோம்; தடுமாறுகின்றோம், விழுகின்றோம்; அவர் நம்மைத் தாங்குகின்றார், கைப்பிடித்து நடத்துகின்றார்! தடையின்றித் தொடர்கின்றது நம் நடைப்பயணம்! அற்புதமானப் பாடல்! ஆனால் இன்று, இப்பாடல் தலைகீழ் ஆகிவிட்டது! எப்படி, தெரியுமா? 'நடிக்கச் சொல்லித்தாரும் இயேசுவே'-இப்படி!

'நடக்கச் சொல்லித்தாரும் இயேசுவே' - இது அன்று 'நடிக்கச் சொல்லித்தாரும் இயேசுவே' - இது இன்று. ஆனால், பாவம், இயேசுவுக்கு நடிக்கத் தெரியாதே! என் செய்வது? நடிப்பவர்கள் - அதாவது, நடிகர்கள் மலிந்துவிட்டார்கள் இன்றுதிரையில் மட்டும் அல்ல, எல்லாத் துறைகளிலும் மலிந்து விட்டனர். அரசியல், சமுதாயம், சமயம் - என எங்கும் எதிலும் நடிக்கும் நடிகர்களையே இன்று காணமுடிகின்றது. இயேசு கிறிஸ்துவின் காலத்திலும் இத்தகைய நடிகர்களே பாமரமக்களை ஆட்டிப்படைத்தனர். இவர்களுக்கு ஆண்டவர் சூட்டும் அழகுப் பெயர்: "வெளிவேடக்காரர்", அதாவது, "மாயக்காரர்" - "வெளிவேடக்கார மறைநூல் அறிஞரே, பரிசேயரே, ஐயோ! உங்களுக்குக் கேடு! எனச் சாடுகின்றார் இறைமகன் (மத். 23:13-29 காண்க). அதே நிலைதானே இன்றும்! நடிப்பவர்கள் தானே மலிந்து கிடக்கின்றார்கள் எங்கும்! சொல் ஒன்று, செயல் ஒன்று - வார்த்தை ஒன்று, வாழ்க்கை ஒன்று - உதட்டில் அமுதம், உள்ளத்திலோ விஷம் - உள்ளே ஒரு வேஷம், வெளியே ஒரு வேஷம்! வேடமே இவர்கள் தம் வாழ்க்கை!

தெசலோனிக்கா இறைமக்களைப் பாருங்கள்: "எங்களைப் போலவும் ஆண்டவரைப் போலவும் நடப்பவரானீர்கள்" (Iதெச. 1:6) - அடிகளாரின் நற்சான்று இது. இயேசுகிறிஸ்துவுக்கும் நடிக்கத் தெரியாது, அவரது அடியவர்களுக்கும் நடிக்கத் தெரியாது; நடக்கத்தான் தெரியும்! நடிப்பவர்கள் அல்லர், நடப்பவர்கள் - உண்மையோடும், உத்தமத்தோடும் இறைவனின் - இறைமகனின் அடிச்சுவடுகளையேப் பின்பற்றி நடப்பவர்கள் இவர்கள்!

"வெளிவேடக்காரர்" என இயேசுகிறிஸ்துவில் பட்டம் சூட்டப்பெற்றவர்கள் அவருக்குக் கொடுக்கும் நற்சான்று:" உண்மையுள்ளவர்; எவரையும் பொருட்படுத்தாமல் கடவுளின் நெறியை உண்மைக்கேற்பக் கற்பிப்பவர்; ஆள் பார்த்துச் செயல்படாதவர்..." (மத். 22:16).

'உள் ஒன்று வெளி ஒன்று' 'உள்ளே ஒரு வேடம், வெளியே ஒரு வேடம் '-என்பதெல்லாம் என்ன என்றே தெரியாது அவருக்கு; அவரது அகராதியிலேயே, கிடையாது. 'வெட்டு ஒன்று, துண்டு இரண்டு - இதுதான் அவரது தாரக மந்திரம்! அநீதி - அநியாயம் - அக்கிரமங்களின் முகத்திரைகளைக் கிழித்து எறிவதே அவர் பணி! இவர் அன்றோ நமக்கு மாதிரி!

## *கர்த்தாதி கர்த்தரா? கறிவேப்பிலையா?*

'Use, and Throw'-அதாவது, 'பயன்படுத்து, எறி' -இதுவே இன்றைய நவநாகரிகக் கலாச்சாரம் - அதாவது, நுகர்வுக் கலாச்சாரம் (Consumeristic Culture)! இதன் தத்துவம் என்ன தெரியுமா? கசக்கும் மட்டும் கசக்கு! பிழியும் மட்டும் பிழி! சாறு எடுக்கும் மட்டும் சாறு எடு! சக்கையைத் தூக்கி எறி! அதாவது, மனிதனை வாயற்ற அந்த இரண்டுகால் பிராணியை - அவனது உழைப்பைச் சுரண்டும் மட்டும் சுரண்டு- உறிஞ்சும் மட்டும் உறிஞ்சு- அவன் உதவாக்கரை ஆகி விட்டால் அவனை வீசி எறிந்து விடு குப்பைத் தொட்டிக்குள்! அப்படி என்றால் அவன் மனிதனா? இல்லை, மாடா? இல்லை, வேப்பிலையா?

இன்றைய நற்செய்திப் பாடத்தைச் சற்று ஆழமாகச் சிந்திப்போம். அதிர்ச்சி தரும் உண்மை ஒன்று அங்கே பொதிந்து கிடப்பதைக் காணலாம் - யோவா. 13:13-15 படிக்க இயேசுவே ஆண்டவர்! அவரே அரசர்! அரசர்க்கெல்லாம் அரசர்! அவரே கர்த்தர்! கர்த்தாதி கர்த்தர்! உண்மையிலும் உண்மை! ஆனால் அரசர்க்கெல்லாம் அரசர்-கர்த்தாதி கர்த்தர் சீடரின் கால்களைக் கழுவுகின்றார்! கால்களைக் கழுவுபவர் யார்? அடிமை அன்றோ? அடிமை என்பவர் யார்? "You may sell him, or kill him"-விற்றுவிடு இல்லையேல், அவனைக் கொன்று விடு" இதுதான் ஒரு அடிமையின் சாசனம்! அவன் என்ன மனிதனா? மாடா? கறிவேப்பிலையா? அப்படி என்றால் இறைவன் யார்? ஓர் அடிமை-கொத்தடிமை- அதாவது, நாம் வீசி எறியும் கறிவேப்பிலை! சரிதானே!

என்னே அவரது மகிமை?
என்னே அவரது மாட்சிமை?
என்னே அவரது மாதிரி!
இவர் அன்றோ நமக்கு மாதிரி! ஆமென்!!

அருள்திரு. **அ. ஜோ. சந்திரகுமார்**

**13-02-2011** *குணமாக்கும் திருப்பணி ஞாயிறு*

*பிரசன்ன திருநாளுக்கு பின் வரும்*

*6-வது ஞாயிறு*

# மனதுருக்கமுள்ள அன்பும் குணப்படுத்துதலும்

## COMPASSIONATE LOVE AND HEALING

| | |
|---|---|
| ஏசா. 57 : 14-21 | யாக். 5 : 1-6 |
| திபா. 103 : 1-14 | மாற். 2 : 1-12 |

*"....உன் நோய்களையெல்லாம் குணமாக்குகின்றார்."* திபா. 103 : 3

**மன்றாட்டு : என்றும் வாழும் கடவுளே, உமது திருமைந்தர் இயேசுகிறிஸ்து நோயுற்றோரை குணமாக்கி வாழ்வின் முழுமைக்கு நடத்தினார். தூய கடவுளே, உலக மக்களின் உடல், உள நோவுகளை கரிசனையுடன் கண்ணோக்கி, உமது விடுவிக்கும் அருளாலும், ஆற்றலாலும் நிப்புவீராக. உமது விடுதலையின் வெளிச்சம் பெற்று நாங்களும் பிறரை வாழ்வின் முழுமைக்கு நடத்தும் கருவிகளாக்க வேண்டுமென்று விடுதலையாளராம் இயேசுவின் திருப்பெயரில் வேண்டி நிற்கிறோம். - ஆமென்.**

"குணமாக்குதல்" என்பதற்கு பழைய ஏற்பாட்டில் "ரிபுத்" என்னும் எபிரேயச் சொல் பயன்படுத்தப்படுகிறது. இச்சொல் 'உடைந்ததை ஒன்று சேர்த்தல் அல்லது பழுதடைந்ததைப் பழுது நீக்கி சரிப்படுத்துதல்' என்ற பொருளில் பயன்படுத்தப்படுகிறது. பலவீனம் அல்லது முடம் என்று பொருள்படும் "ராபா" என்னும் சொல்லும் (ஏசாயா 14:10), மருந்து என்பதற்கு 'ரபுஅ' என்னும் சொல்லும் பயன்படுத்தப்படுகிறது. "குணமாக்குதல்" என்பதற்கு புதிய ஏற்பாட்டில் "தெராபியுயைன்" (Theraphevein) என்னும் கிரேக்கச்சொல் பயன்படுத்தப்படுகிறது. 'சோட்சைன்' என்பது மீட்பு என்னும் பொருளில் பயன்படுத்தபடுகிறது (மாற். 5 : 25-34). அன்பும், உருக்கமும் நிறைந்த இயேசுநாதர் செய்த குணமாக்கும் பணியினை தியானிப்போம்.

### 1. *நல்ல நண்பர்களின் கரிசனை* (மாற்கு 2 : 1-12)

அருள்நாதர் இயேசு கிறிஸ்து கப்பர் நாகுமுக்கு சென்றபோது, அங்குள்ள வீடு ஒன்றில் போதகம் பண்ணினார். இச்செய்தி பக்கத்து கிராமங்களிலெல்லாம் பரவியது. இயேசுவிடம் சென்றால் நோயிலிருந்து விடுதலை கிடைக்கும் என்று மக்கள் திரள் அங்கு குவிந்தனர். முடக்குவாதமுற்ற மனிதர் ஒருவரின் நண்பர்களும் முடக்குவாதமுற்ற தன் நண்பனை இயேசுவிடம் கொண்டு வந்தால் அவனுக்கு சுகம்

கிடைக்குமென்று நம்பினர். "இரண்டு கைகள் ஒன்றானால் இகத்தினில் சாதனை புரிந்திடலாம்'' என்பதற்கு ஏற்ப நான்கு நண்பர்களும் இணைந்தனர். முடக்குவாதமுற்ற மனிதரின் உள் உணர்வோடு தங்களை ஒன்றிணைத்தனர். அவனுடைய விடுதலை வாழ்விற்கு தங்களை கருவிகளாக பயன்படுத்த முனைந்தனர். மக்கள் கூட்டம் தடையாக இருந்தது. வீட்டின் தலைவரின் அனுமதிபெற்று பிரித்தனர் கூரையை. படுக்கையை இயேசுவின் முன் இறக்கினர். நண்பர் நால்வரின் இறைப்பற்று. நம்பிக்கை, ஒற்றுமை, அன்பு, கரிசனை, முயற்சி, அர்ப்பணம், ஒப்படைப்பு ஆகியவைகள் முடக்குவாதமுற்ற மனிதன் இயேசு கிறிஸ்துவின் மூலம் விடுதலைபெற உதவியது.

## 2. கரிசனையுள்ள இயேசுநாதர்

இயேசுநாதரில் அதிகாரம், ஆற்றல், வல்லமை, விடுதலைக்கான வார்த்தைகள் இருந்தன, இயேசு, ''மகனே உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது" (மாற்கு 2 : 5) என்றார். இயேசுநாதர் முடக்குவாதமுற்ற மனிதனைப்பார்த்து அவன் நினைத்து கூட பார்க்க முடியாத ஆச்சரியமான செய்தியை கூறுகின்றார், மகனே உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது. முடக்குவாத முற்ற மனிதனின் வியாதிக்கு காரணம் அவன் பாவமே. அவன் ஆன்மீக விடுதலை பெற்றுவிட்டால் சரீர விடுதலை எளிதாகிவிடும். நாம் செய்யும் பாவங்கள் உடலையும், ஆன்மாவையும் கெடுத்து விடுகின்றனர். பாவத்தின் சம்பளம் மரணம் என்று விவிலியம் கூறுகிறது. முடக்குவாதமுற்ற மனிதனின் பாவத்தை மன்னித்து ஆன்மீக மீட்புபணியை அன்புள்ள ஆண்டவர் முதலாவது செய்கின்றார்.

ஒரு மனிதனின் ஆத்துமாவை பாவத்திலிருந்து சுத்திகரிக்காதபடி அவனுடைய சரீரத்தை மட்டும் குணப்படுத்துவது, முள்குத்தின காயத்திலிருந்து முள்ளை அகற்றாமல் அப்படியே அதன்மேல் கட்டுபோடுவது போலாகும். அப்படி செய்தால் சீள் பிடித்து முள்பட்ட இடத்தை முற்றிலும் அகற்ற நேரிடும். அருள்நாதர் உலகத்தில் வந்ததே பாவங்களை மன்னித்து பாவியை மீட்பதற்காகவே. அதோடு இயேசுநாதர் தமது மனதுருக்கத்தையும், வல்லமையையும், இந்நிகழ்வில் வெளிப்படுத்துகின்றார். மனிதன் உடல், ஆவி, ஆத்துமாவில் பூரணசுகம் பெற்று வாழ வேண்டும் என்பதை அருள்நாதர் விரும்புகின்றார்.

## 3. அதிகாரமும், ஆற்றலமுள்ள அருள்நாதரின் வார்த்தைகள்

"படுக்கையை எடுத்துக்கொண்டு உனது வீட்டுக்குப் போ (மாற். 2 : 11) நான் உனக்கு சொல்லுகிறேன். இயேசுவிடமிருந்த அதிகாரம், ஆற்றல், ஆளுமை இதனை காட்டுகிறது. உடனே முடக்குவாதமுற்ற மனிதன் எழுந்து தன் படுக்கையை எடுத்துக்கொண்டு அவனது வீட்டிற்கு

செல்கின்றான். இனிமேல் அவனை சுமக்க நண்பர்கள் தேவையில்லை. உங்கள் பெலவீனங்களை நான் சுமந்தேன் என்ற ஆண்டவரின் அருள்வாக்கு இங்கு செயலாக்கம் பெற்றது. ''இவ்வாறு தாமே சோதனைகுள்ளாகித் துன்பப்பட்டதினால் சோதிக்கப்படுவோருக்கு உதவிசெய்ய அவர் வல்லவர்" (எபி. 2 : 18). அருள்நாதரின் அதிகாரமும், ஆற்றலும் நிறைந்த வார்த்தைகளைக் கேட்ட எல்லாரும் ஆச்சரியப்படுகின்றனர்.

கடவுள் நாசரேத்து இயேசுவின்மேல் தூய ஆவியரின் வல்லமையைப் பொழிந்தருளினார். கடவுள் அவரோடு இருந்ததால் அலகையின் கொடுமைக்குட்பட்டிருந்த அனைவரையும் அவர் விடுவித்து எங்கும் நன்மை செய்துகொண்டே சென்றார். (திருத்தூதர் 110:38) இங்கு ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாசரேத்தூர் அறிக்கையை ஆண்டவர் அடியவர் மீண்டும் நினைவு கூருகின்றார் (லூக். 4 : 18). நம்பிக்கையிழந்த சீடர்களுக்கும். அவர்களின் பின்னடியார்களாகிய நமக்கும் தரும் நம்பிக்கை 'என்னை விசுவாசிக்கிறவன் என்னிலும் வல்ல செயல்களை செய்வான்' என்பதாகும்.

இன்று நோயினால் மட்டுமல்ல மனதளவில் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் அன்பும், மனதுருக்கமும் குணமாக்கும் பணியும், தேவை. இன்றும் செயல்படும் ஆண்டவர் அவரை வேண்டும் அடியார்களின் விண்ணப்பங்களை கேட்டு பாவமன்னிப்பையும், சரீர விடுதலையையும் அருள் செய்கின்றார்.

அருள்திருமதி. **சார்லெட் சௌந்தர்ராஜன்**

> *கிறிஸ்து நம் மாம்சத்தைத் தம்மேல் ஏற்றுக்கொண்டதினால், நம் பாவங்களையும் சுமந்துகொண்டார்.*
>
> *தாமஸ் வாட்சன்*

**20-02-2011**

*உயிர்த்தெழுந்த திருநாளுக்கு முன்வரும்*
*9-வது ஞாயிறு*

# படைப்பின் பொறுப்பாண்மை

**STEWARDSHIP OF CREATION**

ஏசா. 65 : 17-25 கொலோ. 1 : 15-20
திபா. 8 மத். 6 : 25-34

*"நான் படைப்பனவற்றில் நீங்கள் என்றென்றும் மகிழ்ந்து களிகூருங்கள்."*
*ஏசா. 65 : 18*

**மன்றாட்டு :** படைப்பாளராம் கடவுளே, பல்வேறுபட்ட படைப்புகளின் அழகிற்காய் அகமகிழ்ந்து நன்றி படைக்கிறோம். உலகின் அனைத்து படைப்புகளும் உமது ஆற்றலால் நிலைப்படுத்தப்பட்டுள்ளன. உம் அறிவாற்றலையும், அன்பையும் நாங்கள் எண்ணிப்பார்த்து படைப்புகளுடன் இணைந்து உம்மைப் புகழ கிருபைதாரும். நங்கள் படைப்புகளின் சார்புத் தன்மையையும், இசைவையும், அழகையும் உணர்ந்து பொறுப்பாண்மையுடன் செயல்பட துணைசெய்ய இயேசுகிறிஸ்து வழி வேண்டுகிறோம். - ஆமென்.

இஸ்ரவேல் மக்கள் தாங்கள் வழிபடும் கடவுள் அனைத்து அரசுகளுக்கும் ஆண்டவர் என்றும் அவர் உயிருள்ளவர், வரலாற்றில் செயல்படுகின்றவர் என்றும் உறுதியாக நம்பினர். இந்த கருத்திலிருந்துதான் கடவுள் உலகின் படைப்பாளர் என்ற கொள்கை தோன்றியது. இயேசு கிறிஸ்துவின் வழியாக தம்மை வெளிப்படுத்தினவரும், இவ்வுலகத்தை வார்த்தையால் படைத்தவருமான கடவுள் தான் முழு படைப்பை மீட்கவும் விருப்பம் கொண்டார். அவரின் நிலையான வல்லமை, இறைமை, நீதி ஆகியன இறைவனால் படைக்கப்பட்டதன் மூலம் தெளிவாகக் காணப்படுகின்றன. அவரே மீட்கப்பட்ட சமுதாயத்தை, திருச்சபையை உருவாக்கிய படைப்பின் ஆண்டவர். எனவே படைப்பின் பொறுப்பாண்மை என்பது படைப்பில் இறைவன் வெளிப்படுத்திய, அவருக்கே உரித்தான அருங்குணங்களை அழியாமல் பாதுகாப்பதாகும்.

### *1. மகிழ்வு காக்கப்படுதல் :* (ஏசா. 65 : 18)

கடவுள் புதிதானவைகளை செய்து நிறைவேற்றுகின்றார். இறைவன் விரும்பும் மகிழ்வும், அமைதியும் தனது புதிதாக்கும் பணித்திட்டத்தால் நிலைத்து நிற்கின்றன. பழைய பலவீனங்கள், வாழ்வு, இறை உறவு போன்றவைகளை சரிப்படுத்தி புதுப்பிக்கப்படுகின்ற போது மகிழ்வு உருவாகும். படைப்பால் வரும் மகிழ்வு என்பது பழையதை சரிப்படுத்தி புதுப்பிப்பதால் உருவாகின்ற மகிழ்வு. ஆற்றல் இல்லாத ஒன்றை கடவுள் தமது ஆற்றலால் வலிமைப்படுத்தி பயன்படுத்துகின்றார்.

திருவெளிப்பாடு 21 - ம் அதிகாரம் குற்றமற்ற முழுமையடைந்த உலகத்தை சித்தரிக்கிறது. இந்த முழுமை, ஆற்றலுடைய ஒன்றை ஆற்றல் இல்லாத இன்னொன்று மேற்கொண்டு வெற்றி பெறுவதால் உருவாகும் வாழ்வு கடவுள் தமது நீதியின் அடிப்படையில் செய்யும் சரிப்படுத்துதல் வாழ்விழந்தோருக்கு புது நம்பிக்கையை உருவாக்குகின்றது. இந்த வாழ்விழந்த, நம்பிக்கையிழப்பில் வாழ்வோரை உலகின் மற்ற மக்களுக்கு ஆசீர்வாதமுடையவர்களாக மாற்றுவதே புதுபடைப்பின் அனுபவம். “நான் சிருஷ்டிக்கிறதாலே நீங்கள் என்றென்றும் களிகூர்ந்திருங்கள்” என்பது கடவுளின் வாக்குத்தத்தம். இதனை காப்பதில் பொறுப்பாண்மையுடன் செயல்படுவது மிகத் தேவை.

## *2. ஒப்புரவாக்குதல் :* (கொலே. 1 : 20)

காணப்படுகிறவைகளும், காணப்படாதவைகளுமான அனைத்து படைப்புகளும் கடவுளால் உருவாக்கப்பட்டவைகள். ஆனால் கடவுள் படைப்பின் ஒரு பகுதி அல்ல (கொலோ 1 : 16). ‘அனைத்தும் அவர் வழியாக படைக்கப்பட்டது. அவருக்கென படைக்கப்பட்டது.’ ஆகவே படைப்பின் நோக்கம் கடவுள்தான். படைப்புகள் அனைத்தும் இறைவன் வகுத்த வடிவம் இழக்காமல், அவரோடு இணைந்து இருப்பதை பாதுகாத்துகொள்வது தேவை. படைப்பில் கடவுள் சில நியதிகளை உருவாக்கி, நியதிகளால் படைப்பு நிலைத்து நின்று செயலாற்ற அனுமதிக்கின்றார். தான் வகுத்த நியதிகளுக்கு மாறாக கடவுள் ஒரு போதும் செயலாற்றுவதில்லை. நியதிகள் மனித செயல்முறைகளால் அசைக்கப்படுகின்றபோது படைப்பிற்குள் ஆபத்துக்கள் நிகழுகின்றன (கொலோ. 1 : 17).

கொலோசேயர் 1 : 18 கிறிஸ்துவால் உருவாக்கப்பட்ட திருச்சபைக்கும் அவருக்குமிடையே உள்ள உறவை விளக்கி கூறுகின்றது. இறை மக்களின் நல்லுறவு வாழ்வு கிறிஸ்துவின் தலைமைத்துவத்தை பிரதிபலிக்கும் ஊடகமாக உள்ளது. திருச்சபையின் ஒற்றுமை, ஒருமைத்தன்மையை உருவாக்குகின்றது. இந்த ஒருமைத்தன்மைதான் திருச்சபையின் மதிப்பீட்டினை காட்டுகின்றது. ‘அனைத்து படைப்புகள்’ என்ற வார்த்தையில் உள் இடம் பெற்றுள்ள உலகம் மற்றும் திருச்சபை ஆகியவற்றில் கடவுளின் தலைமை, அதிகாரம், படைப்பாளர் - படைப்பு உறவு அடங்கியுள்ளது.

இயேசுநாதர் ஒப்புரவாக்குதல் வழியாக இந்த உறவை பாதுகாக்கின்றார். ஒப்புரவாக்குதல் என்பது படைப்பாளருக்கும் படைப்புக்கும் இடையே இருக்கின்ற அனைத்து தடைகளையும் மாற்றுவதாகும். தடைகள் மாறும்போது அமைதி உருவாக்கும். அமைதி என்பது கிறிஸ்துவின் ஒப்புரவாக்குதல் உருவாக்கிய புதுபடைப்பின் உற்பத்திப் பொருள் எனலாம். இந்த அமைதி இறைமக்கள் பெற்று

அனுபவிக்கும் உன்னத ஆசீர்வாதம். இதனையே இயேசுநாதர் தமது சிலுவைப்பாடுகள் வழியாக உருவாக்கித் தந்துள்ளார்.

### 3. இறை பற்றினை உறுதிப்படுத்துதல் : (மத். 6 : 33)

உலகப்பொருட்களை அதிகமாக சேமிக்கவும், அதற்காக கவலைகொள்வதையும்விட வாழ்வில் சரியான நோக்கமும், இறை நம்பிக்கையும் நிறைந்த வாழ்வு மிகவும் மேன்மையானது. வேத கற்பனைகளைப் பின்பற்றுவதால் கிடைக்கும் கைமாறுதான் உலக செல்வசெழிப்பு என்ற தவறான கருத்து பரிசேயரிடம் காணப்பட்டது. தற்கால நாகரிக உலகத்தின் பாவத்தின் அறிகுறியும் இதுதான். வாழ்வின் நோக்கம் மற்றும் இறைப்பற்று இழந்த நிலையை உணராமல் சமயத்தின் மறைவில் பொய்யான இறைப்பற்று என்ற பெயரில் உலக செல்வப்பெருக்கினை உருவாக்கிக் கொள்வதை தவறு என திருமறை உணர்த்துகின்றது.

மத்தேயு 6 : 26 - 28 ஆகிய வசனங்களில் இயேசுநாதர் பயன்படுத்துகின்ற ஆகாயத்துப்பறவைகள், காட்டு மலர்கள் போன்றவைகள் மனிதர்களோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் அவைகள் மிகவும் முதன்மையானவைகளோ முக்கியமானவைகளோ அல்ல. தாமாகவே எதையும் உருவாக்கி பசிபோக்க அறியாத பறவைகள், வாழ்ந்திருக்கும் வரை பகட்டாக வாழ்ந்து, பிறரையும் மகிழ்வித்து அதன்பின் காய்ந்து நெருப்பில் சாம்பலாகி, இருப்பிடம் கூற இயலாதபடி அழியும் மலர்கள், ஆகியவை வாழுவதையும் இறைவன் இவைகளை வாழ வைப்பதையும் அனுதினம் மனிதன் கண்டும், இவைகள் கூறும் மகிழ்வின் செய்தியை ஒவ்வொரு நாளும் கேட்டும், இறக்கைகளையும், மெல்லிய மலர் இதழ்களையும் தொட்டு உணர்ந்தும் இறைவன் இவைகள் மீது கொண்ட கரிசனையை மனிதனால் அறிந்துகொள்ள இயலவில்லை. மனிதனின் செல்வத்தைக் குறித்த ஆசை கண்களின் பார்வையையும், காதுகளின் கேட்கும் ஆற்றலையும், கரங்களின் தொடு உணர்வையும் இழக்கச் செய்து ஊனமாக்கி விடுகின்றது. உடைமைகள் பகிர்ந்து, வாழ்வின் ஆதாரமான இறைவனைக் குறித்த இறைபற்றில் நிலைத்து, நித்திய வாழ்வை உரிமையாக்கிக் கொள்வது மனிதனின் தலையாயக் கடமையாகும்.

கடவுள் தன் உலக படைப்பில் நீதியின் செயல்பாட்டினால் உருவாக்கும் மகிழ்வு, திருச்சபையிலும் உலகிலும் தம் ஒப்புரவாக்குதலால் உருவாக்கிய அமைதி, சமூகத்தில் காண்பிக்கும் கரிசனையால் உருவாக்கிய இறைபற்று இவைகள் சிதையாமல், அழியாமல் காப்பதில் பொறுப்பாண்மையுடன் செயல்பட அழைக்கப்படுகிறோம்.

அருள்திரு. **E. ஸ்டான்லிராஜ்**

**27-02-2011**

*உயிர்த்தெழுந்த திருநாளுக்கு முன்வரும்*
*8-வது ஞாயிறு*

# மானிடத்தின் தோல்விகளும் மன்னிப்பும்

## HUMAN FAILURES AND FORGIVENESS

நீமொ. 24 : 13-18 உரோ. 7 : 14-25
திபா. 121 லூக். 15:11-32

*.....“அவர் தந்தை அவரைக் கண்டு, பரிவு கொண்டு, ஓடிப் போய் அவரைக் கட்டித் தழுவி முத்தமிட்டார்.” லூக். 15 : 20*

**மன்றாட்டு : மன்னிக்கும் கடவுளே, இயேசுகிறிஸ்து வழியாக உம் விடுதலையின் நோக்கத்தை தெளிவுபடுத்தியிருக்கிறீர். எங்கள் வாழ்வின் தோல்விகளில் மன்னிப்பையும், விடுதலையையும் நாங்கள் பெற்றிருப்பது எங்கள் பெலத்தினால் அல்ல, உமது ஆற்றலாலும், அருளினாலுமே என உணரச்செய்யும். எங்கள் அன்றாட வாழ்வில் உமது மன்னிப்பின் அன்பை பிரதிபலித்து ஒப்புரவாகுதலின் சிறப்பை உலகுக்கு உணர்த்த அருள்தர உன்னதர் இயேசுகிறிஸ்து வழியாய் வேண்டுகிறோம். - ஆமென்.**

பேரரசன் நெப்போலியனுடைய படையில் பெரும் தவறு இழைத்த ஓர் போர் வீரனுக்கு தூக்கு தண்டனை தருவதென முடிவு செய்யப்பட்டது. அப்போது அந்த போர் வீரனின் தாய் பேரரசனை சந்தித்து தன் மகனுக்கு இரக்கம் வேண்டினாள். அதற்கு நெப்போலியன் “நீதியின் அடிப்படையில் பார்க்கும் போது அவன் சாவுக்குரியவன்” என்று பதிலளித்தார். அதற்கு அத்தாய் பணிவுடன் நான் வேண்டி நிற்பது நீதியல்ல இரக்கம் என்றாள். நெப்போலியனும் மறுமொழியாக இரக்கத்தைப் பெறுவதற்கு அவன் தகுதியானவன் அல்ல எனக்கூற, தாயும் விடாப்பிடியாக தகுதியைப் பார்த்து தரப்பட்டால் அது இரக்கம் அல்ல என்று சொல்ல நெப்போலியன் வேறு வழி இல்லாமல் அந்த தாயின் மகனுக்கு இரக்கம் காண்பித்து விடுதலை செய்தார்.

மானிடத்தின் பாவ வாழ்வும் இறைவனின் இரக்கமும் ஒன்றோடொன்று தொடர்புடையவையாக இருக்கிறது. மக்கள் பாவத்தில் மூழ்கிடும் போது இறைவன் அவர்களை அப்படியே கைவிட்டுப் போவதில்லை. மாறாக, தன் இரக்கத்தை அளவுக்கு அதிகமாக பொழிந்து அவர்களை மீட்கும் முயற்சியில் ஈடுபடுகிறார். (வி.ப. 34:6-7) ஏனெனில் மனம் மாறிய ஒரு பாவியை குறித்துக் கடவுளின் தூதரிடையே மகிழ்ச்சி உண்டாகும் (லூக். 15:10). இன்றைய நற்செய்திப் பகுதியில் இளைய மைந்தனின் பாவ வாழ்வும், மனம் மாறுதலும் தந்தையின் அன்பும்/ இரக்கமும் தெளிவாக கூறப்பட்டுள்ளது (லூக். 15 : 11-32). இறைவனின் இரக்கத்தைப் பெறும் மானுடம் புதுவாழ்வு பெறுகிறது.

## 1. மனிதனின் பாவ வாழ்வு (லூக். 15 : 13)

ஆன்மீக வாழ்வுப் பயணத்தில் மனிதன் தன்னுடைய விருப்பத்துக்கும், சிந்தனைக்கும் முக்கியத்துவம் தந்து சுய பலத்தை நம்பி கடவுளுடைய பலத்தையும் அன்பையும் நிராகரிக்கிறான். தன் திட்டத்துக்கும் விருப்பத்துக்கும் இணைந்து செயல்பட்டு பாவத்தில் விழுந்து விடுகிறான். தந்தையின் பராமரிப்பில் வாழ்ந்து வந்த இளைய மகன் தந்தையுடன் இருப்பதைவிட சிற்றின்பமான வாழ்வே சிறந்தது என எண்ணி சொத்தில் தன் பங்கை தர வேண்டுமென அடம்பிடித்தான். (லூக். 15 : 12). மகனின் சுதந்திரத்தை மதித்த தகப்பன் மகன் கேட்ட சொத்தினை கொடுத்தார் (லூக். 15 : 12). தூர தேசம் புறப்பட்டு போனான். தந்தையின் சொத்தினை தகுந்த முறையில் பயன்படுத்துவதற்கு பதிலாக சொத்தினை அழித்தான். துன்மார்க்கமாய் பாவ வாழ்வில் ஈடுபட்டான்.

மனிதன் இறைவனை சார்ந்து அவருக்கு ஏற்புடைய வகையில் வாழ வேண்டும் என்பதே இறைவன் மனிதனைப் படைத்ததின் நோக்கம் ஆகும். இறை உறவில் நின்று தற்சார்பு விடுத்து பொதுவாழ்வில் மானிட வாழ்வுக்கு நன்மை எது, தீமை எது என்பதை அறிந்து செயல்படவும் இறைவன் மனிதருக்கு நல் உணர்வளித்திருக்கிறார். ஆனால் மனிதன் தீய ஆற்றலுக்கு இடம் கொடுத்து, பாவத்தை வருத்திக் கொண்டு இறை சமூகத்தை விட்டு விலகினான். இறைவனின் விருப்பத்துக்கு முதலிடம் கொடுப்பதைவிட மனிதனின் திட்டத்துக்கு முதலிடம் கொடுக்க முற்படுவது அழிவுக்குரிய வாழ்க்கையாகும்.

## 2. மனிதனின் பாவ உணர்வு (லூக். 15 : 17)

பாவம் செய்கிற ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் பாவ உணர்வு அல்லது குற்ற உணர்வு உள்ளது. இந்த பாவ உணர்வு இறைவனிடம் திரும்பி வந்து மன்னிப்பு கேட்டு அவரது இரக்கத்தை பெற வழி செய்கிறது. பாவ உணர்வை நம் உடலில் நோய் காரணமாக வரும் வேதனைக்கு ஒப்பிடலாம். உடலில் வேதனை வரும் போது. நம் உடலில் ஏதோ நோய் இருக்கிறது என்பதை அறிந்து கொள்கிறோம். வேதனை உடலில் உள்ள நோயை சுட்டிக்காட்டுகிறது. அது போல் பாவ உணர்வு நமக்குள் இருக்கும் பாவத்தை சுட்டி காட்டுகிறது.

இளைய மகன் தன் துன்மார்க்கமான வாழ்க்கையில் நிலைத்து நிற்க முடியும் என எண்ணிக் கொண்டிருந்தான். ஆனால் வாழ்வு கசப்பாக மாறியது. தன்னிடமிருந்த பணம் செலவழிந்து போயிற்று தன் நண்பர்கள் அவனை தனியே விட்டுச் சென்றனர். உணவுக்கு வழி இல்லை (லூக். 15 : 16). வாழ்க்கையே வேதனை ஆயிற்று. தனது பாவத்தை உணர ஆரம்பித்தான்

(லூக். 15 : 17-19). அந்நிய நாட்டில் அனைத்தையும் இழந்து பாவத்தை மட்டும் சேர்த்துக் கொண்டவன், புதிய தீர்மானத்தை செய்கிறான் (லூக். 15 : 18,19). ஏசாயா தன் பாவத்தை உணர்ந்து அறிக்கையிட்ட பின் இறைவனால் தூய்மையாக்கப்பட்டு அவரது அழைப்பை பெற்றார் (ஏசாயா 6 அதி). மூன்று முறை இயேசுவை மறுதலித்தாலும் தன்னுடைய குற்றத்தை ஏற்றுக் கொண்டு பேதுரு மனம் வெதும்பி அழுத போது வாழ்வை பெற்றார்.

பாவ உணர்வு நல்லது. நம்முடைய பலவீனங்களை உணர்ந்து கொள்ள இது உதவுகிறது. இறைவனின் இரக்கத்தைக் கண்டடைய வழியைக் காட்டுகிறது. வாழ்வுக்கு ஆற்றலையும் வளர்ச்சியையும் தருகிறது.

### *3. மனிதருக்கு இறைவனின் இரக்கம்* (லூக். 15 : 20)

பாவம் செய்த மனிதன் தொலைந்து போவதை ஆண்டவர் விரும்புவது இல்லை. அவன் மனம் திருந்தி மீட்பு பெறுவதுதான் அவரது விருப்பம். அது தான் நிறைவான மகிழ்ச்சி. மனிதன் மீறினாலும் செவி மடுக்க மறந்தாலும் மனிதர் பேரில் இறைவன் கரிசனையுள்ளவராய் இருக்கிறார். தன் சாயலில் படைத்த மனிதனிடம் அவர் அதிகமாய் அன்பு கூருகிறார் (யோவா. 3 : 16). மனம் திருந்தும் பாவியை மன்னித்து தனது பிள்ளையாக்கி விண்ணக இன்பத்தில் இடம் தருகிறார்.

தந்தையிடம் திரும்பி வந்த இளைய மகனின் வரவை அன்புடன் தந்தை ஏற்றுக் கொள்கிறார் (லூக். 15 : 20) உயர்ந்த ஆடை, கைக்கு மோதிரம், காலுக்கு மிதியடி, மகிழ்விருந்து (லூக். 15 : 22) இவைகளெல்லாம் தந்தையின் இரக்கத்துக்கும் அன்புக்கும் அடையாளமாகும். மகன் என்னும் உரிமையை மறுபடியும் புதுப்பித்துக் கொள்கிறான். சுதந்திர மனிதனாக மறு உருவாக்கம் பெற்றான் இளையவன். அதற்கு காரணம் தந்தையின் இரக்கமும் அன்புமாகும்.

நம் தந்தையாகிய ஆண்டவர் அவரது பிள்ளைகளாகிய நாம் வழி தவறிப் போனாலும் நமது திரும்புதலுக்காக காத்துக் கொண்டிருக்கிறார். புது வாழ்வு பெற இரக்கம் காட்டுகிறார். இறைவனின் இரக்கத்தைப் பெற்று, அவர் பிள்ளைகள் என்ற உரிமைப்பேற்றை பெற ஆயத்தப்படுவோம்.

அருள்திரு. **P. ராஜா ஜெயசிங்**

**01-03-2011** *அருணோதய ஆராதனை*

# உடைந்த உள்ளத்தை அங்கீகரிக்கும் ஆண்டவர்

திபா. 51 : 10-17

*"......நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்தை நீர் புறக்கணியீர்"*

*திபா. 51. 17*

சாலையில் ஓடுகின்ற வாகனம் சிலகாலம் ஓடிய பிறகு அதற்கு தகுதி சான்றிதழ்ப் பெறப்பட வேண்டும். அதற்காக முழு பழுதுகளும் நீக்கப்பட்டு புதுப்பொலிவு பெறும். அதுபோல கிறிஸ்தவ வாழ்வின் வீழ்ச்சிகளாகிய தேய்ந்து போன தன்மைகள் மாற்றப்படக் கூடிய உயர்வான நேரமே லெந்து காலமாகும். (தவக்காலமாகும்) பழையன களைந்து புதியன பெறும் இக்காலம் கிறிஸ்தவ வாழ்வின் வசந்தகாலம் என்று அறியப்படுகிறது. இக்காலத்தில் ஒவ்வொருவரும் தம்மில் இருக்கும் குறைகளை அறிக்கை செய்து விட்டுவிட்டு புதிய வாழ்வைத் தரித்து கொள்ள வேண்டியது அவசியமாகும். மேய்ப்பராக இருந்த தாவீதைக் கடவுள் தெரிந்துகொண்டு, இஸ்ரயேலில் அரசராக்கி உயர்ந்த இடத்தில் வைத்தார். இதனை எண்ணி இறைவனைப் புகழ்ந்து மன நிறைவுடன் வாழவேண்டிய தாவீது அடுத்தவருடையதையும் தனதுடையதாக ஆக்ரமித்து எடுத்துவிடவே, கடவுளுடைய கோபத்திற்கு ஆளாகிறார். ஆனால் அத்தீச்செயல் குறித்து கண்டித்து உணர்த்தப்பட்ட போது பாவ உணர்வடைந்து மன்னிப்பு பெறுகிறார். லெந்து காலத்தில் அடியெடுத்து வைத்துள்ள நம் அனைவருக்கும் தாவீதின் வாழ்வில், அவர் மன்னிக்கப்பட காரணமாயிருந்த காரணிகள் குறித்த சிந்தை பொருளுள்ளதாக அமையும், அதனை தியானிப்போமாக.

### *1. தன் நிலை உணர்ந்தார்* (திபா. 51:3)

தாவீது அரசர் உரியா என்ற படைவீரரைக் கொடிய முறையில் கொன்று அவரது மனைவியாகிய பத்சேபாவை தமக்கு மனைவியாக்கிக் கொண்டார். இதனை நாத்தான் இறைவாக்கினர் கண்டித்தார் (2சாமு. 12:7) உள்நிலையில் தொடப்பட்ட தாவீது தனது தவறுகளை உணர்கிறார் (2சாமு. 12:13). அதோடு என் மீறுதல்களை நான் அறிந்திருக்கிறேன் (திபா. 51:3) என்கிறார். தன்னை உணர்தல் மிக மிக அவசியமான ஒரு பண்பாகும். இயேசுநாதர் கூறும் இளைய மைந்தர் உவமையில் பன்றியைவிடக் கேவலமான இழிநிலையில் தள்ளப்பட்ட இளைய மைந்தர் "புத்தி தெளிந்த பின்பு" தந்தையின் அன்பைக் குறித்து எண்ணிப் பார்க்கிறார். அதாவது, இப்போது தான் அவர் யார் என்பதை அவரால் உணர்ந்து கொள்ள முடிகிறது. ஆண்டவரால் மீட்கப்பட்டு அவருடைய பிள்ளைகளாக வாழ அழைக்கப்பட்டுள்ள நாம் ஒவ்வொருவரும் நமது வாழ்வைக் குறித்து உணர்ந்து கொள்ள வேண்டியது மிக அவசியமாகும். குறிப்பாக, தூய்மை பொருந்திய கடவுளின்

திருமுன்னிலையில் நாம் யார் என உணர்ந்து கொள்வது நமது வாழ்வைக் குறித்த உண்மை நிலையை உணர்ந்துகொள்ள ஏதுவாகும். யோபு பக்தர், தூய்மை பொருந்திய கடவுளுடைய திருமுன்னிலையில் தாம் இருக்க வேண்டிய இடம் சாம்பல் என உணருகிறார் (யோபு 42:5-6). வரி வசூலிப்பவர் தாம் பாவி என உணருகிறார் (லூக். 18:13). தம்மை உணரும் அனுபவம் அடுத்த நிலைக்கு நேராக இட்டுச் செல்லும் என்பதை தாவீதின் வாழ்வு உணர்த்துகிறது.

## 2. தவறினை அறிக்கைச் செய்தார் (திபா. 51:4)

இறைவனால் வாழ்வு பெற்று உயர் நிலையில் இருக்கும் தாவீது, தமது தவறிப்போன வாழ்வை உணர்ந்து அதனை அறிக்கை செய்து மன்னிப்புக்காக மன்றாடுகிறார். மிக முக்கியமாக, 'இறையே! உமக்கு விரோதமாகப் பாவம் செய்துவிட்டேன்' என்று கதறுகிறார். அதோடு 'கடவுளே! நீர் என்னைத் தூய்மையாக்க வேண்டும்' (51:10). தூய்மையான உள்ளத்தைத் தம்மில் உருவாக்க கடவுள் ஒருவராலேயே கூடும் என்பதை தாவீது தெளிவாக உணர்ந்திருந்தார். ஆகவே தான் தாவீது கடவுளே நீர் என் உள்ளத்தை ஆய்ந்தறிந்து வேதனை உண்டாக்கும் வழி என்னில் உண்டோ என்று பார்த்து என்றும் அழியா வழியிலே என்னை நடத்தும் என்றும் முறையிடுகிறார் (திபா. 139:23,24). இளைய மைந்தர் உவமையிலும், இளையமைந்தர் தம்முடைய குறைகளை உணர்ந்து தந்தையிடம் அறிக்கை செய்கிறார் (லூக். 15:21). கடவுள் பாவங்களை அறிக்கை செய்வோரின் அனைத்து அநியாயங்களையும் மன்னித்து வாழ்வருள உண்மையும் நீதியும் உள்ளவராவார் (1யோவா. 1:9). இறைவனின் திருமுன்னிலையில் குறைவுகளை அறிக்கை செய்து விட்டுவிட வேண்டியது மிகவும் அவசியமானதாகும்.

## 3. தயாபரனில் வாழ்வு பெற்றார்

மாபெரும் தவறிழைத்த தாவீது தம்முடைய குறைவுகளை உணர்ந்து. அதை நீக்க வல்லவர் ஒருவரே உண்டு என்று உணர்ந்து கொண்டவராக அறிக்கை செய்து வாழ்வு பெற்றுக் கொண்டார் (2சாமு. 12:13). 'பாவத்தை மறைக்காமல் அறிக்கை செய்து விட்டு விடுகிறவர்கள் வாழ்வு பெறுவர்......' (நீதி. 28:13) என்பதற்கேற்ப குறையுணர்ந்து அறிக்கை செய்து விட்டுவிடுவோர் ஆண்டவரால் வாழ்பெறுவர். இளைய மைந்தனது மன்றாட்டை அங்கீகரித்த தந்தை அவரை தமது மகனாகவே அங்கீகரித்து (மோதிரம், பாதரட்சை....) வாழ்வருளினார் (லூக். 15:22). குறையுணர்ந்து மன்றாடிய வரிவசூலிப்பவரின் மன்னாட்டை ஆண்டவர் அங்கீகரித்தார் (லூக். 18:14). இன்று நம்மையும் ஆண்டவர் அங்கீகரிக்கிறார் என்ற உணர்வோடு அவரை நோக்கிப் பார்க்க அழைக்கப்படுகிறோம்.

இறைவன் ஈவாக நமக்கு அருளியுள்ள இப்புதிய மாதம் நம்மை உணர்ந்து நமது குறைகளை அறிக்கை செய்து புதிய வாழ்வு பெற்றுக்கொண்டு பயனுள்ள வாழ்வு வாழ்வதற்காகவே. எனவே, இதனை உணர்ந்து கிறிஸ்துவின் அடியவர்களாகத் தொடர்வோமாக.

அருள்திரு. **பிரைட் சாலமோன்**

**06-03-2011**

*உயிர்த்தெழுந்த திருநாளுக்கு முன்வரும்*
*7-வது ஞாயிறு*

# புதுப்பித்தலும் மீட்சியும்

**RESTORATION AND REDEMPTION**

ஏசாயா 44:21-28 திப. 20:13-35
திபா. 6 மாற். 5:35-41

*“......ஆண்டவர் யாக்கோபை மீட்டருளினார்; அவர் மாட்சி பெறுகிறார்.” ஏசா. 44:23*

**மன்றாட்டு : அன்புக்கடவுளே, உமது திருக்குமாரனாகிய எங்கள் மீட்பர் இயேசுவை அனுப்பி படைப்புகள் அனைத்தையும் மீட்டீர். உம் அருளால் நாங்கள் புத்தாக்கம் பெற்று விடுதலையை அனுபவிக்கவும், உமது மீட்பின் அடையாளங்களாய் இவ்வுலகில் பரிணமிக்கவும் துணைபுரிய வேண்டுமென மீட்பர் இயேசுவின் திருப்பெயரில் வேண்டுகிறோம்.**
**- ஆமென்.**

இயேசு கிறிஸ்துவின் விடுதலை, முழு ஆளுமையின் விடுதலையாகும். நம்பிக்கையிலும், அன்பிலும் தம்முடன் இணையும் அனைவரையும் முழுமையான, நிரந்தர விடுதலையாளர்களாய் இயேசுகிறிஸ்து நிலை நிறுத்துபவர், இயேசு தம்மை உலகிற்கு அறிமுகம் செய்கையில், சிறைப்பட்டோர் விடுதலையடைவர் என அறிவிக்கவும் ஒடுக்கப்பட்டோர்க்கு உரிமை வாழ்வு வழங்கவும் வந்தேன் (லூக். 4:18) என்றார். தூய பவுல் கலாத்தியருக்கு எழுதும்போது “கிறிஸ்து அடிமை நிலையிலிருந்து நம்மை விடுவித்து உரிமை வாழ்வு அளித்தார். அதிலே நிலைத்திருங்கள் நீங்களோ சகோதரர்களே உரிமை வாழ்வுக்குஅழைக்கப்பட்டிருக்கிறீர்கள் (கலா. 55:1,13) 4:26.31. Iகொரி 7:22, II கொரி 3:17) என்கின்றார். தூய யோவான் நற்செய்தி நூலில் குமாரனாகிய இயேசுகிறிஸ்து விடுதலை அளித்தால் நீங்கள் உண்மையிலேயே விடுதலையாவீர்கள் என்று எழுதியுள்ளார். இயேசு மானுடர்களுக்கும் படைப்புக்களுக்கும் விடுதலையளிக்கிறார். குறிப்பாய் நோய், பாவம், சாபம், சாவு, பசி, கருத்தமைவு இவைபோன்றவைகளில் எங்கெல்லாம் குறைகள் இருக்கிறதோ, அதை கண்டறிந்து, முழு விடுதலை அருளுகின்றார்.

### 1. மனம் திருந்தி வருபவர்களை ஏற்கும் இயேசு

இயேசுகிறிஸ்து மனம் திரும்புதலை போதித்தார், முன் தூதனான முழுக்கினர் யோவானும் மனம் திரும்புதலையே போதித்தார். கிறிஸ்து

விரும்பாத வாழ்க்கையில் பயணிப்போர், நின்று, திரும்பிப் பார்த்து மனதை திருத்தி, கிறிஸ்துவுக்கு நேராக வருவதே மனம் திரும்புதல் ஆகும். மனம்திரும்பி வருபவரை மகிழ்வுடன் ஏற்று மரியாதைக்குரியவர்களாக நடத்தவேண்டும் என்பது இயேசுகிறிஸ்துவின் போதனையாகும். இதை ''மனத்திருந்திய மைந்தன்'' (மாற்கு 15:20) உவமையில் மிக உறுதியாக கோடிட்டுக் காட்டியுள்ளார். யூத சமூகத்து சமயம் மகாபிராதான ஆசாரியர், பிரதான ஆசாரியர், ஆசாரியர்கள், லேவியர்கள் என்னும் படி நிலை சமூக அமைப்புடையது. சிதறிய யூதர்கள் பத்து குடும்பங்கள் இருந்தாலே ஜெப ஆலயத்தை அமைத்து கடவுளை வழிபட்டனர். (ஜெப ஆலயம், தொழுகை கூடம், சினகாக்) சமய அமைப்புக்குள் இருந்த யவீரு, மரியாள் மகனாகிய (மத். 13:55) இயேசுவிடம் திரும்பி இயேசுவை கண்டவுடன் அவர் பாதத்தில் விழுந்து அவள் மேல் கைவைத்து பிழைக்கவைக்க மன்றாடினான். (மாற். 5:22,23) தனது சமய எல்லையோடும் வெளியேயும், இயங்கும் இறைமகனாக இயேசுகிறிஸ்துவை கண்டதால் அவர் மூலமாய் அவன் மகளுக்கு விடுதலை கிடைத்தது. சமூக மதிப்பீடுகளை நாம் பாராமல் இயேசுவை மீட்பராக கண்டு திரும்புவோர் பேறுபெற்றோர் . அதுபோல் இயேசுவை சமாரிய பெண்ணும் யூதனாக கண்டாள். அவள், அவர் பக்கமாக திரும்பி உரையாடியபோது மேசியாவாக காணும் பேறுபெற்றாள். (யோவா. 4:9-29)

## 2. மனதால் ஒன்றித்தவர்களை ஏற்கும் இயேசு

வடிவங்களிலும், பண்புகளிலும் ஒத்தவர்களாயும் மாறுபட்டவர்களயும் மனிதர்கள் உள்ளனர். முரண்பட்டவர்கள் சேர்ந்தால் மனித வாழ்வு முட்பாதையாக அமையும். ஒருமித்த கருத்துடையோர் ஒன்றித்தால் உலகம் உய்யும். நான்கு பேர் ஒன்று. இணைந்து ஒத்த மனதுடையவராய் இணைந்து செய்த செயல்பாடு திமிர்வாதக்காரன் குணம் பெற்ற திரு நிகழ்ச்சியாகும் (மத். 9:2) இயேசு யவீருவின் மகளுக்கு உயிர் கொடுக்கையில் தன்னுடன் அக்குழந்தையின் பெற்றோரையும், பேதுரு, யாக்கோபு, யோவான் என்னும் சீடர்களையும் தம்முடன் அழைத்துச்சென்றார். அழுது சந்தடிபண்ணிக்கொண்டிருந்தோரை அப்புறப்படுத்தினார். விடுதலை பணிக்கு செல்வோர் ஒத்த கருத்துடையவர்களாய் இருக்க வேண்டியது இன்றியமையாததாகும். ஒரே இலட்சியம் விடுதலை. இந்த இலட்சிய வீரர்களால் தான் இகத்தில் விடுதலை ஈய இயலும் பழைய ஏற்பாட்டில் கிதியோனுடன் 300 பேரை (நீத. 7:8) போருக்கு அழைத்துச்சென்றுள்ளார். லோத்துவையும் அவனோடு இருந்தவர்களையும் உடைமைகளை மீட்க முந்நூற்றி பதினெட்டு

ஆட்களை மட்டும் அழைத்து சென்றுள்ளார் (ஆதி. 14:14) முரண்பாடு உள்ளவர்கள் இணைந்தால் வாழ்வில் நிம்மதி இராது என்பதை குறிப்பிடவே தூய பவுலடிகள் "அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப் படாதிருப்பீர்களாக. நீதிக்கும் அநீதிக்கும் சம்மந்தம் ஏது? ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியம் ஏது?" (II கொரி. 6:14) என்கின்றார்.

## 3. மக்கள் கடமையே செய்ய தூண்டும் இயேசு

யவீருவின் மரித்துப்போன மகளின் கையைப்பிடித்து, அரமேய மொழியில் இயேசு "தலீத்தாகூமி" என்றார். இதற்கு சிறுப்பெண்ணே எழுந்திரு என்று உனக்கு சொல்லுகிறேன்" என்று அர்த்தமாம். சிறு பெண்ணே என்பதற்கு சின்ன ஆட்டுகுட்டியே என்று அழைத்தார் என்பாரும் உளர். (மாற்கு 5:41) இயேசு அந்த பன்னிரெண்டு வயதுடைய பெண்ணை குணமாக்கிய பின்னர், உயிரூட்டிய பின்னர், மக்கள் சமூகத்தை ஆச்சரியப் பட வைத்த பின்னர் அவளுக்கு உணவு கொடுக்க சொன்னார். இயேசுவின் விடுதலையை தொடர்ந்து அவள் மகிழ்வுடன் வளர அவளுக்கு உணவு கொடுக்க கட்டளையிட்டார். கிறிஸ்துவின் விடுதலை வரலாற்றில் தொடர அவரை சார்ந்திருப்போர் அவரவர் கடமையை செய்ய இயேசுகிறிஸ்து போதித்தார். இயேசு மரித்த லாசரை உயிர்பெற வைத்தார். உயிர் பெற்ற லாசருவின் கால்களும், கைகளும் சீலையினால் கட்டப்பட்டிருந்தது. அவனுடைய முகமும் சீலையால் சுற்றப்பட்டிருந்தது. இயேசு மக்களிடம் இவனை கட்டவிழ்த்து விடுங்கள் என்றார். (யோ. 11:44) மனித விடுதலைக்காய் மனிதர்கள் தங்கள் கடமை செய்ய வேண்டும் என்பதை யோபு நூலும் வலியுறுத்துகிறது. யோபுவின் சகோதர சகோதரிகள் அவனுக்கு ஆறுதல் சொல்லிஅவரவர் ஒவ்வொரு தங்க காசையும், பொன் ஆபரணத்தையும் கொடுத்தனர். (யோபு 42:11)

அழைக்கும் ஆண்டவர் இயேசு அழைக்காமல் தம்மண்டை வருவோரையும் அகம் திறந்து ஏற்கும் அகமுடையவர். தன் பக்கம் திரும்புவோரை தாய் உள்ளத்தோடு அணைத்து ஆசீர்வதிப்பவர். விடுதலைப் பணிக்காய், இறையரசின் விடுதலைப்பணிக்காய் இயங்கிய இயேசுவிடுதலை உணர்வுடையவர்களை வியப்புடன் ஏற்று வியத்தகு பணிச் செய்தார். வரலாற்றில் இயேசு கிறிஸ்துவின் பணித் தொடர்ச்சி வலுவானதாய் மண்ணில் மலர மக்களும் தம் கடமையை மனதார செய்தல் வேண்டும்.

அருள்திரு. C.S. **வெஸ்லி ஜெபராஜ்**

**09-03-2011**

*சாம்பற்புதன்*

# சிலுவை ஒப்புரவாகுதலின் அடையாளம்

## THE CROSS: THE SIGN OF RECONCILIATION

| | |
|---|---|
| மீகா. 2 : 1-13 | I தெச. 4 : 1-12 |
| திபா. 51 | யோவா. 3 : 13-21 |

*"பாலைநிலத்தில் மோசேயால் பாம்பு உயர்த்தப்பட்டதுபோல மானிட மகனும் உயர்த்தப்பட வேண்டும்."* யோவா. 3 : 14

**மன்றாட்டு : இரக்கம் நிறைந்த கடவுளே, உண்மையான மனவருத்தத்துடன் உம்மிடம் வரும் எவரையும் நீர் வெறுக்காமல் அன்புடன் ஏற்று மன்னிப்பருள்கிறீர். எங்களில் உண்மையான குற்ற உணர்வையும், உறவுகளின் உடைவுகளை புரிகின்ற நிலையையும் அருளி உமது மன்னிப்பையும், ஒப்புரவாக்குதலையும் அனுபவிக்க அருள்செய்ய விடுதலையின் நாயகர் இயேசுகிறிஸ்து வழியாக வேண்டுகிறோம்.**

**- ஆமென்.**

இயேசு நாதர் சிலுவையில் மனுக்குலத்திற்காக தம்மை தியாக பலியாக ஒப்புக்கொடுத்தது நடந்து முடிந்துவிட்ட ஓர் நிகழ்வானாலும் அது அந்நாள் முதல் இந்நாள் வரையிலும் மனித வாழ்வில் அனுபவமாகி ஆற்றல் தந்து மாற்றுருவாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது. யூதருக்கு தடைக்கல்லாகவும் பிற இனத்தாருக்கு மடமையாகவும் காணப்படும் சிலுவை நம்புவோருக்கு கடவுளின் நம்பிக்கையாக விளங்குகிறது.

இயேசுகிறிஸ்து மரிப்பதற்கு பல ஆண்டுகளுக்கு முன்பே சிலுவை ஓர் கொலைக்கருவியாக விளங்கி வந்திருக்கிறது. எகிப்தியர் நைல் நதியின் மட்டத்தை அளக்க பயன்படுத்திய "T" வடிவ கருவியின் பெயரான ‘‘கானோப்’’. என்னும் பெயரிலேயே சிலுவையும் குறிப்பிட்டார்கள். எகிப்தியர்கள் சிலுவையை தெய்வீகத்திற்கும், நிலை வாழ்விற்கும் அடையாளமாகக் கருதினர் என்று சீதாபீஸ் கோயிலின் கல்வெட்டுகளிலிருந்து அறியப்பட்டிருக்கிறது. உலகிலுள்ள அடையாளங்களில் வேறுபட்டு நிற்பது மீட்பின் அடையாளமாகிய சிலுவையாகும். அடையாளங்கள் அனுபவத்தை சுருக்கி விளக்குகின்றன. இதன்படி சிலுவையானது மீட்பின் வழியாகவும் (கலா. 6 : 14 கொலோ. 2 : 4 பார்க்க) மனித இனத்தின் பிளவுபட்ட நிலையை ஒன்றிணைக்கும் அடையாளமாகவும் விளக்குகிறது (எபே. 2 : 16; கொலோ. 1 : 20) சிலுவை எவ்வாறு ஒப்புரவாகுதலின் சின்னமாக திகழ்கிறது என தியானிப்போம்.

## *1. உயர்த்தப்பட்ட மானிட மகன்* (யோவா. 3 : 14)

சிலுவை பகட்டு சின்னமாகி உள்ளது. கோபுரச் சிலுவையும் சங்கிலி சிலுவையும் வெறும் அலங்கார அடையாளங்களாக காட்சி அளிக்கிறது. சிலுவையின் உண்மைப் பொருளை இச்சிலுவைகளால் வெளிப்படுத்த முடிவதில்லை. முதலாம் நூற்றாண்டில் மிக்க கொடியதண்டனை சிலுவையில் அறையப்படுதலாகும். ரோமர் ஆட்சி காலத்தில் சிலுவை தண்டனையின் கருவியாக இருந்தது. குற்றமற்ற இயேசு கிறிஸ்து பொய்யான குற்றஞ்சாட்டப்பட்டு சிலுவையில் அறையப்பட்டார். சிலுவையில் மாண்ட இயேசு மூன்றாம் நாளில் உயிர்த்து எழுந்ததால் இயேசு மரித்த சிலுவை தெய்வீக வல்லமையை விளங்கச் செய்து உயர்வு பெற்றது. மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என மோசேயால் எழுதப்பட்டபடி (உபா. 21 : 21-23) சிலுவையில் மரணமடைந்த இயேசுவும் சபிக்கப்பட்டவர் என எண்ணி யூதர் இயேசுவை வெறுத்தனர். யூதரான பரிசுத்த பவுலும் அவ்வாறே எண்ணி இயேசுவை வெறுத்தார். ஆனால் தமஸ்குவிற்கு செல்லும் வழியில் இயேசுவால் ஆட்கொள்ளப்பட்டார் பரிசுத்த பவுல், “என்னில் அன்பு கூர்ந்து எனக்காக தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த இறைமகன் இயேசு எனக் கண்டார் (கலா. 2 : 20) எனவே இயேசு மரித்த சிலுவை பெருமைக்குரியது என பறைசாற்றினார் (கலா. 6 : 14). மனித வாழ்வின் மீட்பிற்காக இயேசு சிலுவையில் உயர்த்தப்பட்டார் (ஏசாயா 53:6-10; உரோ. 5:6-8; 2கொரி 5:21). உலக மீட்பிற்காக இயேசு சிலுவையில் உயர்த்தப்பட்டார். சிலுவையும் மீட்பின் சின்னமாக உயர்வு பெற்றது.

## *2. உயிர்தரும் சிலுவை* (யோவா. 3 : 14,15)

யோவான் நற்செய்தி நூலில் இயேசு சிலுவையில் உயர்த்தப்பட வேண்டியதின் அவசியத்தை எண்ணிக்கை நூல் 21 : 4-9-ல் எழுதப்பட்ட சம்பவத்தோடு இணைத்து விளக்கம் தரப்பட்டிருக்கிறது. பாலை நில பயணத்தில் இஸ்ரவேலர் வழியை முன்னிட்டு கடவுளுக்கும் மோசேக்கும் எதிராக பேசினர். ஆண்டவர் முறுமுறுத்தோரை தண்டிக்க எண்ணி கொள்ளி வாய் பாம்புகளை அனுப்பினார். பாம்புகளால் கடிபட்டோர் பலர் மாண்டனர். அப்பொழுது பாம்புகளிடமிருந்து தங்களை பாதுகாக்க வேண்டினர். கடிப்பட்டவர்கள் உயிர் பிழைக்க கடவுள் கூறியபடி மோசே வெண்கலத்தால் பாம்பு ஒன்றை செய்து கம்பத்தில் பொருத்தி வைத்தார். பாம்பு கடித்தவர்கள் இந்த வெண்கல பாம்பை பார்த்து உயிர் பிழைத்தனர்.

இதுபோன்று பாவ நஞ்சால் பாதிக்கப்பட்டோர் உயிர் பிழைக்க சிலுவையில் அறையப்பட்ட இயேசுவை நோக்கிப்பார்த்தால் பிழைப்பர். உரோ. 3 : 13-ல் அவர்கள் உதட்டில் விரியன் பாம்பின் நஞ்சு உள்ளது என பவுலடிகளார் கூறுகிறார்.

தமிழ் செய்யுள் ஒன்றில் இவ்வாறு கூறப்பட்டுள்ளதை கவனிக்க "ஈக்குவிடம் (நஞ்சு) தலையில் எய்தும். இருந்தேருக்கு வாய்த்தவிடம் கொடுக்கில் வாழுமே. நோக்கரியபைங்கண் அரவுக்கு விடம் பல்லளவே, துர்ச்சனருக்கு அங்க முழுதும் விடமேயாம் (நீதிவெண்பா) இயேசுநாதர் சிலுவையில் சிந்திய இரத்தத்தால் பாவ நஞ்சு அகற்றப்படுகிறது. (1யோவா. 1 : 7-9; 1பேது. 1 : 19; எபே. 1 : 7; லூக். 23 : 49-43) சிலுவையில் உயர்த்தப்பட்ட இயேசுவைப் பார்த்து உயர்ந்த வீட்டின் வாழ்வை நாமும் பெற்றுக்கொள்வோம்.

ஒருமருந்தரும் குரு மருந்தே உம் பரத்தில் கண்டேனே
சிங்கார வனத்தில் செழித்த மருந்து
ஜீவ கனிமீதில் படர்ந்த மருந்து
மங்கை எவை பாவம் மாற்றும் மருந்து
வல்ல சர்ப்ப விஷம் மாய்த்த மருந்து. திபா. 34 : 5

### 3. *ஒப்புரவாக்கும் சிலுவை* (யோ. 3 : 16-18)

சிலுவை ஆண்டவரின் அன்பின் செயலை வெளிப்படுத்துகிறது. பொதுவாக மனிதன் நினைப்பதெல்லாம் கடவுள் நல்லவனை வாழ வைக்கிறார், தீயவனை அழிக்கிறார் என்பதாகும் (இஷ்ட பரிபாலனம் துஷ்டநிக்கிதகம்). ஆனால் இயேசு தீயோரை மீட்கவே சிலுவையில் மாண்டார் (ஏசாயா 53:12). பகைமை நீக்கி இருதிறத்தாரையும் ஒப்புரவாக்கினார் (கொலோ. 20 : 22). கடவுளோடு ஒப்புரவாகும் மனிதர்கள் சக மனிதரோடும் ஒப்புரவாகின்றனர். பிரிவினையும் பேதமும் ஒழிந்து புது உறவு சமூகத்தில் உருவாகிறது (1யோவா. 3 : 16).

ஒரு புதிய சமூகம் உருவாவதற்கு, உறவுச் சிதைவுகள் நீக்கப்பட்ட உறவு உறுதியாக வேண்டும், இந்த உறவை கிறிஸ்துவின் சிலுவை தருகிறது. மனித நிலை பாராமல் அவர்கள் பக்தியை பரிசீலனை செய்யாமல் பரமன் திருவடிகளில் அர்ப்பணித்து, தன் தவறிய நிலை அறிந்து வருந்துவோரை அகம் திறந்து ஏற்று, மன்னித்து, மகிழ்வித்து, விடுகின்றது. இந்த ஒப்புரவு விண்ணையும் மண்ணையும் மகிழ்விக்கும்.

அருள்திரு. **M. மோசஸ் சேம்ராஜ்**

**11-03-2011**

# லெந்து கால வெள்ளிக்கிழமை தியானங்கள்

## முகவுரை

வீடு ஒன்றில் அழகிய வேலைப்பாடுகளுடன் மூங்கில் ஒன்று தரையிலிருந்து நிறுத்தப்பட்டிருந்தது. வீட்டின் உரிமையாளர் அதற்கு அழகான வர்ணம் பூசி கவர்ந்திழுக்கும் மெழுகு பூசி வைத்திருந்தார். அந்த வீட்டில் வருவோரை எல்லாம் அந்த தூண் கவர்ந்தது, பாராட்ட செய்தது. ஒருநாள் அந்த மூங்கில் தூண் அப்படியே சாய்ந்து முறிந்து போயிற்று. வீட்டின் உரிமையாளர் கவலை கொண்டார். அது சாய்வதற்கான காரணத்தை ஆராய்ந்தார். அப்போதுதான் தெரிந்தது மூங்கிலின் மேலாக வர்ண பூச்சும், மெழுகு பூச்சும் இருந்ததே தவிர அதன் உள்ளான பாகம் தரையில் இருந்ததால் பூச்சி உள்ளேறி அரித்துப் போட்டிருந்தது.

இன்று நமது கிறிஸ்தவ வாழ்க்கையும் இப்படி தான் இருக்கின்றது. கிறிஸ்தவ கவர்ச்சி எங்கும் மேலோங்கி நிற்கிறது. எங்கு பார்த்தாலும் அழகிய ஆலயங்கள், கல்வி நிறுவனங்கள், கல்வி வளர்ச்சியின் விளைவாய் கல்விமான்கள், பட்டங்கள், அதிகாரங்கள், செல்வ செழிப்புகள், கவர்ச்சியான வளர்ச்சிகள். ஆனால் தகவுகள் சிதைந்து கொண்டே செல்கின்றன. மனித நேயமற்ற தன்மைகளால் பணத்தை மட்டுமே முதன்மைப் படுத்தி வாழும் வாழ்க்கை அதிகாரத்திற்காக பெயருக்காக எதையும் மனசாட்சியின்றி செய்ய துணியும் போங்குகள். கூட்டு குடும்ப அமைப்புகள் சிதைந்து உறவுகளுக்கு மதிப்பில்லாத நிலை. குடும்ப சிதைவுகள் (மண முறிவு), பெரியோரை மதிக்காத நிலை, முதியோர் பேணப்படாத தன்மை. இவைகள் எல்லாம் கிறிஸ்தவத்தை கேள்வி எழுப்புகிறது. சமூகம் தகர்ந்து நிற்பது போன்ற உணர்வுகள் ஏற்படுகின்றன.

இதற்கெல்லாம் காரணம் இன்று கிறிஸ்தவர்களிடத்தில் வளமை சிந்தனைகளும், ஆடம்பர ஆசையும், நுகர்வு கலாச்சார வளர்ச்சியும் மேலோங்கி நிற்பது என்றால் மிகையாகாது.

இதற்கு மாறான மாற்று சிந்தனையாக இயேசு கிறிஸ்துவின் சிலுவை நமக்கு வாழ்வு தருவதாக உள்ளது. உயிரூட்டமுள்ள வாழ்வுக்கு உலகம் தரும் சவால்களில் எதிர் நீச்சல் போட்டு பாடுகளை தாண்டுவதற்கு கிறிஸ்துவின் சிலுவை ஊக்கம் தந்துகொண்டேயிருக்கிறது.

அர்த்தமற்ற சடங்குகளும், திருவிழாக்களும், வளமையை மையப்படுத்தும் செய்திகளும், வாழ்க்கை முறைகளும் இன்று சிலுவையை அவமதித்துக் கொண்டேயிருக்கின்றன. நற்செய்தி என்ற போர்வையில் கிறிஸ்துவின் சிலுவையை வலுவிழக்க செய்துவிட்டனர் நம்மவர்கள்.

சிலுவை மாறயக்கூடியதல்ல, நல் மாற்றம் கொண்டுவரக் கூடியது. வளமையின் சின்னமல்ல, வாழ்வின் சின்னம். சிலுவை வணங்க கூடியதல்ல, அது வாழ்வுக்கு அர்த்தம் தருகிற ஒன்று. இத்தகு கிறிஸ்துவின் சிலுவை பவுலடிகளாரின் வாழ்வு சார்ந்து பலவிதங்களில் விளக்கப்படுகிறது. தபசு நாட்களில் வாழ்வுக்கும் வளர்வுக்கும் உரிய சிலுவையைக் குறித்து பவுலடிகளாரின் சிந்தனைகளில் சிலவற்றை சிந்திக்க அழைக்கப்படுகிறோம்.

*கடவுள் உலகத்தில் இவ்வளவாய் அன்பு கூர்ந்தது, உலகம் அன்பிற்குப் பாத்திரமாயிருந்ததால் அல்ல, அவர் அன்பாகவே இருந்ததால்.*

A.W. டோசர்

# கிறிஸ்துவோடு கூட அறையப்படல்

கலா. 2:15-21

*"கிறிஸ்துவோடு சிலுவையில் அறையப்பட்டிருக்கிறேன். எனவே இனி வாழ்பவன் நான் அல்ல; கிறிஸ்துவே என்னுள் வாழ்கின்றார்"* *கலாத்தியர் 2 : 19,20.*

மேற்கு வங்காளத்தில் கஜோல் என்ற கிராமத்தில் கணவனை இழந்த சகோதரி சோனா முனி என்பவர் மிஷனரிகள் வாயிலாக ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை மீட்பராக ஏற்றுக்கொண்டார். எனவே கிராமத்தாரால் ஒதுக்கி வைக்கப்பட்டார். நீ கிறிஸ்துவை மறுதலிக்காவிட்டால் நீ இறந்தபின் உடலை கூட எடுத்து யாரும் புதைக்கமாட்டோம். உன்னோடு எங்களுக்கு எந்த பந்தமுமில்லை, பங்குமில்லை என்றார்கள். மிரட்டினார்கள்.. சோனா முனி கூறினார் நான் கிறிஸ்துவோடு வாழுகிறேன். அழிவுக்குரிய இவ்வுடல் நான் இறந்தபின் என் வீட்டிலேயே புதைக்கப்படாமல் கிடக்கட்டும். ஆனால் இயேசுவே ஆண்டவர். அதுவே உண்மை என்பதில் நான் உறுதியாயிருக்கிறேன் என்று தைரியமாக கூறினார். கிறிஸ்துவிலே தன்னை பிணைத்துக்கொண்ட சகோதரி ஒருவரின் சாட்சி இது.

கிறிஸ்துவிலே தன்னை பிணைத்துக்கொண்டவர்களுக்கு இவ்வுலகம் தரும் பாடுகளால் எவ்வித சோர்வும் இல்லை என்பதற்கு சோனா ஓர் உயிரூட்டமுள்ள சாட்சி.

உலக பாடுகளால் அல்லலல்பட்ட பவுலடிகளார் சொல்லுகிறார், கிறிஸ்துவுடனே கூட சிலுவையில் அறையப்பட்டிருக்கிறேன். எனவே இனி வாழ்பவன் நான் அல்ல; கிறிஸ்துவே என்னுள் வாழ்கிறார். முன்னர் திருச்சட்டத்திற்காய் உலகியலினுள் இருந்த பவுலடிகளையும் தற்போது கிறிஸ்துவுடனே சிலுவையைப் பற்றிக்கொண்ட பவுலடிகளாரையும் இவ்வசனம் வழியாய் தியானிக்கலாம்.

## 1. திருச்சட்டத்திற்காய் உலகத்தினுள் பவுலடிகளார்

உயிர்த்த ஆண்டவரை தமஸ்கு பாதையில் சந்திக்கும் முன் பவுலடிகளார் திருச்சட்டத்தோடு கூட இணைக்கப்பட்டிருந்ததால் உலகம் அவருக்கு எல்லாமுமாயிருந்தது. தனது பிறப்பு, குடியுரிமை, கல்வி, இனம் எல்லாவற்றையும் குறித்து மேன்மையுடையவராயிருந்தார். யூத சமயம் சார்ந்த நம்பிக்கை வெறித்தனமாய் அவரை மாற்றியது. எனவேதான கிறிஸ்தவர்களை துன்பப்படுத்துவதில் அதிக ஆர்வம் எடுத்துக்கொண்டார். பெருமை, ஆணவம், வெறித்தனம் அதனையொட்டிய தீவிரவாதம் ஆகிய அனைத்தும் உலகத்தின் செயல்களாக பவுலடிகளாரோடு ஒட்டி உறவாடின.

இவைகள் எல்லாம் தன் வாழ்வின் லாபமென பவுலடிகளார் தப்பு கணக்கு போட்டிருந்தார். தமஸ்கு போன்ற பட்டணங்களில் சென்று

கிறிஸ்தவர்களை துன்புறுத்தினால் தனக்கு யூத ஆதிக்க வர்க்கத்திடமிருந்து (பிரதான ஆசாரியன், சனகரீம் சங்கம்) நற்பெயர் கிடைக்கும். அதுவே தனக்கு சிறப்பு, மேன்மை என்ற உலக சிந்தனை அவரிடமிருந்தது.

இன்றும் இத்தகைய உலக சிந்தனைகளோடு பதவியிலும், அதிகாரத்திலும் இருப்போரிடம் நற்பெயரை சம்பாதிக்கவும், தங்களுக்கு பெருமை சேர்க்கவும், ஆளும் ஆதிக்கவர்க்கத்தினரிடம் நன்மையை பெறவும் எச்செயலை செய்கின்றனர் தீமைக்கு துணை போவோர் பலர். இவர்கள் உலகத்தில் பிணைக்கப்பட்டு அதற்கு அடிமைகளாய் இருக்கிறார்கள்.

## 2. கிறிஸ்துவுக்காய் சிலுவையில் அறையப்படல்

உயிர்த்த ஆண்டவரை சந்தித்த பின்னர் தன் அனுபவத்தைக் கூறும் பவுலடிகளார், திருச்சட்டத்தை பொறுத்தமட்டில் நான் இறந்தவன் என்கிறார் (கலாத். 2:19). கிறிஸ்துவிலுள்ள பற்றுறுதி உயிரூட்டம் பெற்றிருக்கும் எவ்விடத்திலும் திருச்சட்டம் செத்துப்போன ஒன்று என்பது பவுலடிகளாரின் கருத்து. பற்றுறுதியினிமித்தம் அருளினால் நீதிமானாய் தீர்ப்பிடப்பட்டிருக்கிற தனக்கு திருச்சட்டம் செத்துப்போன ஒன்று. ஆனால் கிறிஸ்து இயேசு உயிரூட்டமாய் இருக்கிறார். அவரில் வைத்துள்ள பற்றுறுதி உயிரூட்டம் தருவதால் கிறிஸ்துவின் சிலுவையில் தானும் அறையப்பட்டுள்ளதாக பவுலடிகளார் கூறுகிறார்.

இதுவரை பெருமை எனவும் வாழ்வு எனவும் நம்பியிருந்த உலகங்கள் அனைத்தும் கிறிஸ்துவினாலே பவுலடிகளாருக்கு செத்தவைகளாயிற்று. இப்போது கிறிஸ்துவின் சிலுவியினாலே மேன்மை பெறும் அனுபவத்தை முன்வைத்து நான் கிறிஸ்துவுடனே கூட சிலுவையில் அறையப்பட்டேன் என்கிறார்.

பவுலடிகளாரின் இவ்வார்த்தைகளில் அவரது (a) உறுதி வெளிப்படுகிறது. (b) அவரது பற்று யாரிடத்தில் என்பது தெளிவாகிறது. (c) அவருக்கு நம்பிக்கையுள்ள எதிர்நோக்கு (பிழைத்திருக்கிறேன்) இருப்பது விளக்கப்படுகிறது.

இந்த தபசு நாட்களில் கிறிஸ்துவுடனே நாமும் நம்மை பிணைத்துக் கொண்டு பாடுகளை மேற்கொள்ளத் தக்கதாக அவருடனே சிலுவையில் அறையப்படுவதற்கு ஒப்புக்கொடுப்போம்.

அத்தகைய மேன்மையான எதிர்நோக்கில் சிலுவை காட்டும் உண்மை, தியாகம், அர்ப்பணம், உலகில் அல்ல உன்னதரில் பற்று ஆகியவைகளை நமது வாழ்வுக்குரியதாக்கிக் கொள்ளுவோம்.

இறையாசி நம்மனைவரோடும் இருப்பதாக ! ஆமென் !

அருள்திரு. **A. ஜெபகுஜி**

**13-03-2011**

*உயிர்த்தெழுந்த திருநாளுக்கு முன்வரும்*
*6-வது ஞாயிறு*

# இயேசுவின் தூய்மையாக்கும் ஆற்றல்

## CLEANSING POWER OF CHRIST

| | |
|---|---|
| செக். 13:1-9 | Iயோ. 1:5-10 |
| திபா. 130 | மாற். 1:40-45 |

*"இயேசு அவர் மீது பரிவு கொண்டு, தமது கையை நீட்டி அவரைத் தொட்டு.... உமது நோய் நீங்குக!" என்றார். மாற். 1:41*

**மன்றாட்டு :** அனைத்து காலத்துக்குரியவராய் எங்கும் செயலாற்றும் கடவுளே, சிலுவையில் உயர்த்தப்பட்ட விடுதலையாளர் இயேசு வழியாய் நிலைவாழ்வின் பாதையை எமக்குத் திறந்தீர். நாங்கள் கிறிஸ்துவின் தூய்மையாக்கும் ஆற்றலால் தூயவராக்கப்பட்டு மகிழ்வுடன் உம் தூயவழிகளில் புதுவாழ்வுக்கு நேராக நடந்து முன்னேற என்றும் உம்மோடும், தூய ஆவியரோடும் வாழ்ந்து ஆளுகை செய்யும் எங்கள் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் வழியாக வேண்டிக்கொள்கிறோம்.

- ஆமென்.

உடைபடாதவன் உடைபட்டவருக்கு கொடுப்பது போதனை
உடைந்தவன் உடைபட்டவரோடு இருப்பது சாதனை.

உடைந்த முகம் பார்க்கும் கண்ணாடியை ஒட்டி வைத்து முகத்தைப் பார்த்தால் மிக விகாரமாகவே தோன்றும். காரணம் உடைந்த துண்டுகளை ஒன்றுபடுத்தி ஒட்டிக்கொண்டாலும் உடைந்தவைகள் உடைந்தவைகளாகவே காட்சியளிக்கிறது. இப்படியே இன்றைய சமுதாயத்திலும் நோயினாலும், வயது மூப்பினாலும் துன்பப்படுகிறவர்கள் உடைந்த பொருட்களைப் போன்றே எண்ணப்படுகின்றனர். அவர்கள் குடும்பத்தினராலும், சமுதாயத்தினராலும் புறக்கணிக்கப்பட்டுள்ளனர். பழைய ஏற்பாட்டில் ஒருவருக்கு தொழுநோய் இருக்கிறது என்ற சந்தேகம் எழுந்தால் அவர் குருவிடம் சென்று காண்பித்து அதை நிரூபிக்க வேண்டும். குரு அவரை சோதித்து அவர் தீட்டுள்ளவர் என அறிவிப்பார். பின்பு அவர்கள் உறவை விட்டு, ஊரைவிட்டு, சமுதாயத்தை விட்டு ஒதுக்கப்படுவார்கள். (லேவி. 13:45,46)

இன்றைய உலகில் தீண்டாமை ஒரு பாவம், தீண்டாமை ஒரு குற்றம், தீண்டாமை மனித நேயமற்ற செயல் என்று கொள்கையளவில் மனிதன் ஏற்றுக்கொண்டாலும் வாழ்வியலில் தீண்டாமை முற்றிலும்

வேரறுக்கப்பட்டவில்லையென்பது உண்மையே. ஆனால் அன்று சமுதாயத்தில் தீட்டு என்று ஒதுக்கப்பட்ட தொழுநோயாளியை இயேசு சந்தித்து தமது தூய்மையாக்கும் ஆற்றலால் நலம் அருளுகிறார். உடலாலும், உள்ளத்தாலும் நலமடைந்த மனிதன் குணமடைந்த மகிழ்வோடு இயேசுவின் புதுமைகளையும், போதனைகளையும் அறிவிக்கும் மனிதனாகிறான். இந்த மனிதனில் இயேசுவின் தூய்மையாக்கும் ஆற்றல் எவ்வாறு வெளிப்பட்டது என்பதை கற்போம்.

### *1. பரிவு வழி தூய்மை* (மாற். 1:41a)

"இயேசு அவர் மீது பரிவு கொண்டு...

நோய்களும், துன்பங்களும், ஒருவர் செய்த பாவத்தின் விளைவாக வரக்கூடியவை என யூதர்கள் எண்ணினர். ஆகவே பிறப்பிலே பார்வையற்ற மனிதனைக் கண்ட இயேசுவின் சீடர்கள் "இவன் பார்வையற்றவராய் பிறக்க காரணம் இவர் செய்த பாவமா? இவர் பெற்றோர் செய்த பாவமா?" என்று வினா எழுப்பினர், (ரோ. 9:2) ஆகவே தொழுநோய் என்பது மிகக்கொடிய நோய், மிகக்கொடுமையான பாவம் செய்தவர்களுக்கே தொழுநோய் வரும் என்றும் எண்ணம் கொண்டனர் கடவுள் மட்டுமே அவர்களின் பாவத்தை மன்னித்தாலொழிய அவர்களின் நோய் நீங்காது என்றும் எண்ணினர். ஆகையால் தொழுநோயாளிகள் "பாவிகள்" "தீட்டுப்பட்டவர்கள்" என்று எண்ணி அவர்களை புறக்கணித்தனர். அவர்களை தீண்டத்தகாதவர்களாக கருதினர். ஆனால் கிறிஸ்து அவர்களை மனிதநேயத்துடன் பார்க்கிறார். அவர்களும் இறைவனின் சாயலில் படைக்கப்பட்டவர்கள், மனித மாட்சிமைக்குரியவர்கள் என்பதை வெளிக்காட்டும் வண்ணம் அவன்மீது பரிவு கொண்டு அவனை தூய்மைப்படுத்தினார் (மாற். 1:41a).

பரிவு என்பது உணர்வுகளில் ஆழமானதும், தன் உள்ளத்தில் பிறர் துன்பத்தை ஏற்பதும், அதன் வழியாக எழும் உணர்வுமாகும். இத்தகைய சிறந்த பரிவை இயேசு வெளிப்படுத்துகிறார். இதை தூய யாக்கோபு "ஆண்டவர் மிகுந்த பரிவுள்ளம் கொண்டவர்" என்கிறார் (யாக். 5:11). இறைமக்கள், எப்போதெல்லாம் துன்பப்படுகிறார்களோ அப்போதெல்லாம் இயேசு அவர்கள் மீது பரிவு கொள்கிறார் (மத். 9:36). இஸ்ரவேல் மக்கள் விடுதலைப்பயணத்தில் பல கடினப்பாடுகளை சந்தித்த நேரத்தில் அவர்களை கரம்பிடித்து நடத்துகிறார் இறைவன். காரணம் அவர் இரக்கமும், பரிவும் உள்ளவர் (விப.36:6). இப்படியே கடைநிலைக்கு தள்ளப்பட்டதொரு நோயாளியின் மீது பரிவு கொண்டு அவனை குணப்படுத்தி தனது தூய்மையாக்கும் ஆற்றலை வெளிப்படுத்தினார்.

## 2. ஏற்றுக்கொள்ளுதல் வழி தூய்மை மாற் 1:41b

"..... தமது கையை நீட்டி அவரைத் தொட்டு"...

தொழுநோயாளியை தொடலாகாது என்ற சட்டத்தை உடைத்து அவரை ஏற்றுக்கொண்டு தூய்மையாக்குகிறார் இயேசு. அன்றைய சூழலில் தொழுநோயாளி தெருவில் வரும்போது கிழிந்த உடை அணிந்து, தலைவாராமல், மேலுதட்டை மறைத்துக்கொண்டு, தீட்டு, தீட்டு என குரலெழுப்ப வேண்டும். நலமான மனிதன் பக்கமாக வரும்போது ஆறு அடி தாண்டி செல்லவேண்டும் என்ற பல சட்டங்கள் வகுக்கப்பட்டிருந்தன. (லேவி. 13:40-45) இயேசு இவைகளை உடைத்தெறிந்து அவரை தூய்மைப்படுத்துகிறார். தனக்கு அருகில் அந்த தொழுநோயாளிவர அனுமதித்தார். தீட்டுப்பட்டவர் என்று குத்தப்பட்ட முத்திரைக்கு எதிராக அவரை 'தொட்டு' ஏற்றுக்கொண்டு தூய்மைப்படுத்துகிறார். அனைவரும் தங்களின் பாதுகாப்பை பற்றி மட்டுமே கவனம் கொண்டனர். இந்த மனிதனை தொட்டால் தாங்களும் இதில் பாதிக்கப்படுவோமோ என்ற சுயநலப்பார்வை அனைவருக்குள்ளும் காணப்பட்டது. ஆனால் இயேசுவின் மனதிலோ அவரின் வேதனை மட்டும் தான் காணப்பட்டது. ஆகவே தான் அவரை தொட்டு ஏற்றுக்கொண்டார். மட்டுமின்றி தன் ஆற்றலைக் கொண்டு அவரை தூய்மைப்படுத்தினார்.

இன்றைய உலகம் துன்பத்தில் தவிக்கும் மக்களை ஏற்றுக்கொள்ளும் மனநிலை அற்றவர்களாய் காணப்படுகிறார்கள். ஒளியை களைந்து இருளை தேடிச்செல்லும் குருடர்களாக வாழ்கிறார்கள். ஆகவேதான் யோவான் திருமுகத்தில் இறை கட்டளைகளை கடைபிடிக்கிறவர்களாகவும், அன்புள்ளம் கொண்டோராய் அனைவரையும் ஏற்றுக்கொண்டு இணைந்து வாழுங்கள் என்கிறார். இவைகளை கடைபிடியாதோன் பொய்யர் என்றும், இருளர் என்றும் வெளிப்படுத்துகிறார் (Iயோ. 1:5-11). இயேசுவும் தம் திருப்பணிக்காலத்தில் பாவிகள் என்று ஒதுக்கப்பட்ட பார்வையற்றோர், காதுகேளாதோர், உடல் ஊனம் கொண்டோர் போன்றோரை தன்னோடு ஏற்றுக்கொண்டார். இவைகளையே தன் தந்தையின் விருப்பம் எனவும் விளம்பினார்.

## 3. நலம் வழி தூய்மை (மாற். 1:42)

"உடனே தொழுநோய் அவரைவிட்டு நீங்க, அவர் நலமடைந்தார்.

தொழுநோயின் காரணமாக உடலில் ஏற்பட்ட துன்பம், தீண்டத்தகாதவர் என்று முத்திரை குத்தப்பட்டதால் ஆன்மீகத்தில் ஏற்பட்ட வெறுமை, பாளையத்துக்கு புறம்பே தள்ளப்பட்ட தனிமை போன்ற துன்பங்களினால் சாவையே தன் கண் முன் கொண்டு வாழ்ந்து, எல்லா

சட்டங்களையும் மீறி, இயேசு தனக்கு நலம் தருவார் என நம்பிக்கையோடு வந்தவனுக்கு இயேசு நலம் அருளுகிறார். இந்த நலத்தைப் பெற்றவன் இயேசுவின் தூய்மையாக்கும் ஆற்றலை சமுதாயத்தில் பரப்பினார். (மாற். 1-45). காரணம் இயேசு நலம் அருளுகிறவரும், உருகுலைந்தவனுக்கு உருவம் கொடுக்கிறவருமாயிருக்கிறார் (மத். 8:17).

“நோயற்றவர்க்கு அல்ல நோயுற்றவர்க்கே மருத்துவர் தேவை” (மத். 9:12) என்ற இயேசுவின் கூற்றை அன்னை தெரசா போன்றோர் செய்து வருகின்றனர். மறைந்த அன்னை தெரசா ஒருமுறை கொல்கத்தா வீதி வழியாக நடந்து சென்று கொண்டிருந்தார். ஓட்டுனரிடம் வாகனத்தை மெதுவாக ஓட்டச்சொன்னார். ஏன்? என்று ஓட்டுனர் கேட்க, அன்னை “என் இயேசு தெரு வீதியில் கிடந்தால் அவரை என்னுடன் அழைத்துச்செல்வேன்” என்று கூறிய பதில் ஓட்டுனரின் கண்களில் கண்ணீரை வரவைத்தது. அன்னை உருகுலைந்து உடைபட்டு கிடந்த தொழு நோயாளிகளை அரவணைத்து இறைமகன் இயேசுவாக அவர்களை பாவித்து அவர்களுக்கு தொண்டு செய்தார். “ஆண்டவர் உடைந்த உள்ளத்தார்க்கு அருகிலிருக்கிறார்” என்பது மெய்யே (திபா. 34:18). அப்படியே சமுதாயத்தால் உடைக்கப்பட்ட தொழுநோயாளிக்கு இயேசு உருவம் (நலம்) கொடுத்து அவனை தூய்மைப்படுத்தினார்.

இறையன்பர்களே! அன்று தொழுநோயாளி மீது பரிவுகொண்டு, அவரை தொட்டு ஏற்றுக்கொண்டு, நலம் அருளிய இயேசு இன்றும் உடல்சார்ந்த, மனம்சார்ந்த, ஆன்மா சார்ந்த நோய்களை தம் ஆற்றலால் குணப்படுத்த எதிர்நோக்குகிறார். சமுதாயத்தில் கடைநிலையில் தள்ளப்பட்ட மக்கள் மீது பரிவு கொள்ளவும் அவர்களை ஏற்கவும், தேவைகளை சந்திக்கவும் அழைக்கப்படுகிறோம். நலம் கொடுப்பது பாறையை துளைப்பது போன்று கடினம் என்று எண்ணாமல் கடலில் குழிதோண்டுவது போன்று எளிதாக பரிவின் வழியாகவும், ஏற்றுக்கொள்ளுதலின் வழியாகவும், நலம் கொடுப்பதின் வழியாகும். தன் தூய்மையாக்கும் ஆற்றலை தொழுநோயாளியின் வாழ்வில் காண்பித்த இயேசுவை பின்தொடர்வோம்.

திரு. **J.J. இம்மானுவேல்**

**16-03-2011**

*லெந்து கால புதன் தியானங்கள்*

# கடவுளின் துன்புறும் பணியாளர்

**முன்னுரை**

ஏசாயா இறைவாக்கினர் தமது நூலில் ஏசா. 42:14; ஏசா. 49:16; ஏசா 50:4-9; ஏசா. 52:13; 53:12 ஆகிய நான்கு பகுதிகளையும் பணியாளரின் பாடல்களாக (Servent Songs) குறிப்பிடுகின்றார். இப்பாடல்கள் இஸ்ரவேலர் பாபிலோன் சிறையிருப்பில் வாழ்ந்த நாட்களில் (587 - 539) எழுதப்பட்டவை. கடவுளின் பணியாளரைப் பற்றி இரண்டாம் ஏசாயாவின் இறைவாக்குகள் அறிஞர்கள் நடுவில் பல கேள்விகளை எழுப்பியுள்ளது. பணியாளர் ஓர் தனிப்பட்ட வரலாற்று மனிதரா? அல்லது இஸ்ரவேல் மக்களின் பிரதிநிதியான தனி மனதனா? சமீபத்திய ஆய்வுகள் பணியாளரை ஓர் வரலாற்று நபராகவும் குறிப்பாக அவர் இறைவாக்கினராக இருக்கலாம் எனும் செய்தினைத் தருகிறது. ஓர் தனிநபர், அவரது தனிப்பட்ட பாடுகள், நம்பிக்கை, வெற்றி ஆகியவற்றை உறுதி செய்கிறது. பணியாளரின் தனிப்பட்ட அனுபவம் சிறையிருப்பின் மக்களின் வரலாற்றிலிருந்த சமூக- அரசியல் இழுவை நிலையினை வெளிப்படுத்துகிறது, இந்த இழுவை போராட்டத்தில் பணியாளர் பங்கு பெறுகிறவராகவும் பாதிக்கப்படுகிறவராகவும் சித்தரிக்கப்படுகின்றார். இச்சூழலில் இப்பணியார் சிறையிருப்பின் மக்களை விடுவிக்க கொள்ளப்பட்ட வேற்று நாட்டு அரசர் கோரேஸ் (Cyros) எனும் கருத்தியில் நிலவுகிறது. இக்கோரேஸ் இஸ்ரவேலரை விடுவிக்க கடவுளால் தெரிந்து கொள்ளப்பட்ட தகுதியுடைய அரசியல் தலைவர் என்பதை ஏசாயா இறைவாக்கினர் எடுத்துரைக்கிறார். (ஏசா. 45:1). ஆகவே பாரசீகமன்னன் கோரேஸ் தான் கடவுளின் துன்புறும் பணியாளர் எனும் நம்பிக்கை வலுப்பெறுகிறது.

ஆனால், ஆரம்ப கால கிறிஸ்தவர்களின் கடவுளின் பணியாளர் பாடல்களில் வருகின்ற கடவுளின் பணியாளரை கிறிஸ்துவுக்கு ஒப்புமைப்படுத்துகின்னறனர். அதில் குறிப்பாக நான்காவது பாடலை ஏசா. 13-53:12 கிறிஸ்துவோடு தொடர்புபடுத்துகின்றனர் (திப. 8:26-40). ஆனால் இரண்டாம் ஏசாயாவின் சூழலில், கிறிஸ்துவுக்கும் இதற்கும் தொடர்பில்லை. கடவுளின் பாடுபடும் பணியாளர்,

சிறையிருப்பிலிருக்கிறவர்களை மீட்டு அவர்களது சுய தேசத்தில் குடியிருக்க வைப்பவர். கிறிஸ்து பாவத்தில் வாழ்ந்த மனுக்குலத்தை மீட்பவர். சிறையிருப்பிலிருந்து மக்களை மீட்க கோரேசு பட்ட வேதனையும், பாவத்தில் வாழ்ந்த மனுக்குலத்தை மீட்க சிலுவையில் கிறிஸ்து பட்ட வேதனையும் ஒரே நிலையிலே இருக்கிறது. எப்படியிருப்பினும் இருவரும் கடவுளின் துன்புறும் பணியாளராக சந்தித்த பாடுகள் இன்று நமக்கு முன் சவாலாக நிற்கின்றன.

இவ்வாண்டு லெந்து கால புதன்கிழமைகளில் துன்புறு பணியாளர் பாடல்களின் பொருளினையும், அர்ப்பாடல்கள் நமக்குத் தருகின்றன சவால்களையும் நம் வாழ்வோடும், கிறிஸ்துவின் சிலுவையோடும் ஒப்புமை படுத்தி பொருள் கொள்வதும், சிலுவைக்கு சான்றாளர்களாய் வாழ்வதற்கு நம்மை அர்பணிப்பதும் நன்மை தரும் எனும் நிலையிலே இச்சிந்தனைகள் நமக்கு தரப்படுகின்றன. தொடர்ந்து வரும் ஆறு புதன்கிழமைகளிலும் நாம் சிந்திக்கின்ற சிந்தனைகள், நமது பாடுகள், துன்பங்கள் இவைகளிலே கிறிஸ்துவும் நம்மோடு பங்குபெற்ற நாம் மீட்பினைப் பெற்றிட உதவுகிறார் என்பதை அறிந்து கொள்ள வழிகாட்டுகிறது. எனவே கடவுளின் துன்புறும் பணியாளர் பற்றிய சிந்தனைகளையும் உண்மைகளையும், நமது வாழ்வாக்கி, புத்துயிர் பெற்று, கிறிஸ்துவின் சிலுவைப் பாதையில் புனித பயணம் மேற் கொள்வோம். நமது லெந்து கால ஆன்மீக வாழ்வு பயனுள்ள வாழ்வாக அமைவதாக.

***கிறிஸ்து நம் மாம்சத்தைத் தம்மேல் ஏற்றுக்கொண்டதினால், நம் பாவங்களையும் சுமந்துகொண்டார்.***

*தாமஸ் வாட்சன்*

**16-03-2011**

*லெந்து காலம் முதலாம் புதன்*

# பணியாளரின் தன்மை

**ஏசா. 42:1-4**

ஏசாயா இறைவாக்கினர் பாபிலோன் சிறையிருப்பில் வாழ்ந்த மக்களை விடுதலையாக்கி எருசலேமில் கொண்டு வருகின்ற விடுதலையாளரை ஆண்டவரின் பணியாளராய் காட்டுகிறார். ஏசா. 42:1-4 வசனங்கள் ஆண்டவரின் பணியாளரை துன்புறும் பணியாளராக அறிமுகப்படுத்துகிறது. இவ்வறிமுகத்தில் துன்புறும் பணியாளருக்கும் கடவுளுக்கும் உள்ள உறவு, பணியாளரின் பணியின் தன்மை, அதின் வெற்றி, மற்றும் தொலைநோக்குப் பார்வை போன்றவைகள் தெளிவுபடுத்தப்படுகிறது. இயேசு நாதரின் திருப்பணியின் நாட்களில் பரிசேயர் அவரை கொலை செய்யத் திட்டமிட்ட நேரத்தில் இயேசு தம்மை வெளிப்படுத்தாத படி கண்டிப்பாய் கட்டளையிட்டார் (மத்.12:14-16). இயேசுவுக்கு ஏற்பட்ட நெருக்கடியினை மத்தேயு ஆசிரியர் விளக்கும் போது ஏசா. 42:1-4 வசனங்களை எடுத்தாள்கிறார் (மத். 12:18-21). இதன்படி மத்தேயு ஆசிரியர் இயேசு தான் துன்புறும் பணியாளர் எனும் செய்தியை வெளிப்படுத்துவதை நாம் இங்கே அறியலாம். இந்த துன்புறும் பணியாளர் எப்படிப்பட்டவர்? அவரது தன்மை என்ன?

***1. நீதி வழங்குபவர் :*** **(ஏசா. 42:1)**

பாபிலோன் சிறையிருப்பில் நியாயமிழந்து நீதியை எதிர்நோக்கியிருந்த மக்களினத்துக்கு நீதி வழங்குகிறவராக பணியாளரை இவ்வசனத்தில் காணமுடிகிறது. நியாயத்தை வெளிப்படுத்தவது எளிதான ஒன்றல்ல, நியாயம் வெளிப்படுத்த சுயநலம் துறந்து பொதுநலம் பேணுதல் தேவை. பொதுநலம் பேணும்போது துன்பங்கள் வருவது இயல்பானது. ஆகவே துன்புறும் பணியாளர் நியாயத்தை வெளிப்படுத்த துன்பத்தை ஏற்கிறவராகிறார். நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பேறுபெற்றவர்கள் (மத். 5:10). நீதி வழங்குகிறவராக துன்புறும் பணியாளர் அறிமுகப்படுத்தப்படுவதால் அவர் பேறு பெற்றவர். அவர் உண்மையாகவே நீதியை நிலைநாட்டுகிறவர் (ஏசா 42:3).

கிறிஸ்துவின் சிலுவைப் பாதையில் அவரை பின்பற்றிட அழைக்கப்பட்டுள்ளோம். இப்பாதையில் பயணிக்க துன்புறும்

பணியாளரின் தன்மை நம்மில் வெளிப்பட வேண்டும். நீதியற்ற சமூகத்தில் நீதியற்றவர்களாய் நாம் வாழாது, நீதி செய்திட நம்மை அர்ப்பணித்து உழைக்கும்போது துன்புறும் பணியாளரின் தன்மையினை நாமும் அடைந்து, சிலுவைப் பாதையில் கிறிஸ்துவை தொடரமுடியும். ஏனென்றால் கிறிஸ்துவும் இவ்வுலகில் நியாயத்தை வெளிப்படுத்துகிறவராக வாழ்ந்து, இறைநீதி நிலைத்து நிற்கவே சிலுவைப் பாடகளை ஏற்றுக் கொண்டார்.

### 2. *நிதானத்தை கடைபிடிப்பவர் :* (42:2)

துன்புறும் பணியாளரின் இரண்டாவது சிறந்த தன்மை நிதானத்தை கடைபிடித்தல் அல்லது நிதானமாய் செயல்படுதலாகும். விடுதலையாளராய் ஏசாயாவால் அறிமுகப்படுத்தப்படுகிறவர், நீதி வழங்குகிறவராய் இருப்பதினால் தனது பெயர் பிரபல்யம் அடைய வேண்டுமென்று செயல்படுகிறவராயிராமல், நிதானத்தை கடைப்பிடிக்கிறார், ஏசா. 42:2யில் அவர் கூக்குரலிடமாட்டார்; தம் குரலை உயர்த்தமாட்டார். தம் குரலொலியைத் தெருவில் ஏழுப்பவும் மாட்டார் என வாசிக்கலாம். அதாவது, துன்புறும் பணியாளர் தமது மீட்பின் செயல்பாட்டிற்கு விளம்பரம் தேடாதவராயிருக்கிறார். தனது சுய விளம்பரத்திற்காக திருப்பணியினை நிறைவேற்றாது மக்கள் நன்மைபெறவே நிதானத்துடன் பணி செய்கிறவராயிருக்கிறார்.

சிலுவைப் பாதையின் வெற்றிக்கு நிதானம் தேவை, நிதானமாய் கிறிஸ்துவை தொடர அழைக்கப்படுகிறோம். இயேசுகிறிஸ்துவின் வாழ்வில் நிதானம் இருந்தபடியினால் சிலுவைப் பாதையில் அவர் வெற்றி பெற முடிந்தது. துன்புறும் பணியாளரின் தன்மையினை நாமும் நம்மில் தரித்து, கிறிஸ்துவை பின்பற்றிட நிதானத்தோடு செயல்படுவோம். உலகனைத்திலும் வாழும் மக்கள் மீட்பினை பெற்றிட நான் சிலுவை சுமக்கிறேன் என்ற மீட்பின் பணியினை நாமும் தொடருவோம்.

### 3. *நிறை வாழ்வு தருகிறவர் :* (42:3,4)

நீதி வெளிப்படுத்தி, நிதானமாய் செயல்படும் துன்புறும் பணியாளரின் இன்னொரு தன்மை, அடிமைகளாய், சுய மரியாதையின்றி, வாழ்விழந்து வாழும் மக்களுக்கு நிறைவாழ்வு தந்திடும் வாழ்வாகும். யாருக்கு நிறைவாழ்வு தருகிறார்? முறியும் நிலையிலிருக்கும் நெரிந்த நாணலைப் போன்றவர்கள் முறிந்து விடாதபடி காக்கிறவர். அதாவது, உடைந்து அழியும் நிலையிலிருக்கும் உறவுகள் உடையாதபடி அவைகளை உருவாக்கி நிறைவு தருகிறவர். அதோடு, மங்கி எரிந்து அணையும் நிலையில் இனி ஒளி கொடுக்க முடியாத நிலையிலிருக்கும் திரி அணைந்து விடாதபடி தொடர்ந்து எரியச் செய்கின்றவராக துன்புறும் பணியாளரின்

தன்மை சொல்லப்படுகிறது. அதாவது வாழ்வில் அழிவின் விளிம்பில் வாழ்கிறவர்கள் வாழ்வில் ஒளியேற்றி தொடந்து வாழும் மகிழ்வினைத் தருகிறவர். ஆகவே இனி வாழ்வில்லை எனும் வேதனையிலிப்போருக்கு நிறைவாழ்வினைத் தரும் தன்மையுடையவர் துன்புறும் பணியாளர்.

நிதானமாய் செயல்பட்டு, நீதி வெளிப்படுத்தி நாம் வாழும் போது நிறைவாழ்வினை பெறுவதோடு மட்டுமல்லாது , மற்றவர்களும் சிலுவை வாயிலாய் நிறை வாழ்வினை பெற்றிட நாமும் காரணமாகிறோம். எனவே துன்புறும் பணியாளரின் தன்மையான வாழ்வருளும் தன்மையினை நாம் நம்மிலே கொள்ள வேண்டும். இன்று நிறைவாழ்வு தருகிறவராகவே கிறிஸ்து, தனது சிலுவைப் பாதையில் நிதானத்தை கடைப்பிடித்ததை காண முடிகிறது. கிறிஸ்துவின் நிறைவான வாழ்வும் பணியும் நம்மை நிறைவாழ்வினுள் அழைத்துச் செல்கிறது.

அருள்திரு. **A. மகேர்ஷால் அஸ்பாஸ்**

*இயேசு கிறிஸ்து மனித உருவில் வந்த கடவுள். அவர் மனிதனாய் இருந்தும் முழுக்கடவுள். கடவுளாயிருந்தும் முழு மனிதன்.*

N.J.F. பெரமிண்ட்ஸ்

**18-03-2011**

*லெந்துகால இரண்டாம் வெள்ளி*

# சிலுவையில் வெளிப்படுத்தப்பட்ட கிறிஸ்து

கலா. 3:1-9

*"இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டவராய் உங்கள் கண்முன் படம் பிடித்துக்காட்டப்படவில்லையா?" கலாத்தியர் 3:1*

பவுலடிகளாரின் போதனைகளினால் கிறிஸ்துவில் நம்பிக்கை கொண்டவர்கள் கலாத்திய திருச்சபையார். தூய ஆவியாரின் செயல்களினாலே பல அருஞ்செயல்களையும் கண்டவர்கள். கிறிஸ்துவே இதற்கு காரணர். ஆனால் கிறிஸ்துவில் உள்ள விசுவாசத்தை உதறிவிட்டு திருச்சட்டத்தால் அதிக வளர்ச்சி பெறலாம் என்ற எண்ணத்தோடு மாற்றம் கொண்டனர். இந்நிலையில் கலாத்திய திருச்சபையோரிடம் பவுலடிகளார் இயேசு கிறிஸ்து சிலுவையிலறையப்பட்டவராக உங்கள் கண்முன் படம்பிடித்து காட்டப்பபட்டிருக்க, இவ்வளவு சீக்கிரமாய் விலகிப்போனீர்களே என்று கேள்வி எழுப்புகிறார். இவ்வசனத்தின் வாயிலாக வரலாற்று கிறிஸ்துவையும், அவரது வல்லமையையும், அவர்தரும் வாழ்வையும் உணர்ந்துகொள்ள முடியும்.

## 1. வரலாற்று கிறிஸ்து :

கிறிஸ்துவின் மரணம் வரலாற்று உண்மை என்பதை ஆணித்தரமாய் உறுதிப்படுத்துகிறார் பவுலடிகளார். இறைவன் அல்லது இறைமகன் மரணமடைவாரா ? என்ற கேள்விக்கு பிற சமயங்கள் இறைமகன் மரணம் அடைய இயலாது என்ற கூறினர். இஸ்லாம் சகோதரர்கள் இறைமகன் மரித்தார் என்பதை ஏற்றுக்கொள்ளவில்லை. 'இந்திய சமயத்தவர்களுக்கு கடவுள் இயேசுகிறிஸ்துவிலே மனிதனானார்' என்பது ஏற்கமுடியாததாயிருந்தது. யூதராக பிறந்து வளர்ந்த பவுலடியாருக்கு சிலுவையில் அடித்து கொலை செய்யப்படும் ஒருவரை மேசியா அல்லது கிறிஸ்து என்று சொல்வதை ஏற்க முடியாததாக இருந்தது. ஆனால் உயிர்த்த கிறிஸ்துவை தமஸ்கு பாதையில் சந்தித்த நாள் முதல் கிறிஸ்து மரித்தார், கிறிஸ்து உயிர்த்தார் என்ற உண்மையை மறுக்கமுடியாததாயிற்று. சிலுவையில் மரித்த இயேசு கிறிஸ்து அவர் இன்றும் சிலுவையில் அறையப்பட்டவராக காட்சி தந்து கொண்டேயிருக்கிறார் என்பதில் பவுலடிகளார் உறுதியாயிருக்கிறார்.

## 2. வல்ல கிறிஸ்து :

சிலுவையிலறையப்பட்டவராய் நம் மனக்கண்முன் நிறுத்தப்பட்டுள்ள கிறிஸ்து யார் ? அவர் வல்லமையுள்ளவர். அவரது வல்லமை சாபத்தை ஒழித்ததில் வலுப்பெறுகிறது. கலாத். 3 : 13 - இல் "மரத்தில் தொங்கவிடப்பட்டோர் சபிக்கப்பட்டோர்" என்று எழுதியுள்ளவாறு நமக்காக கிறிஸ்து சாபத்துக்கு உள்ளாகி நம்மை சட்டத்தின் சாபத்தினின்று மீட்டுக்கொண்டார். இது கிறிஸ்துவின் வல்லமையை சுட்டிக்காட்டுகிறது. பொதுவாக தன் பலத்தை பெருக்கி அதை ஊரறிய வெளிப்படுத்துவதையே ஆற்றல் என்கிறோம். ஆனால் கிறிஸ்து பேராற்றல் நிறைந்தவராயிருந்தும் தன் ஆற்றலை இறக்கிக்கொண்டு, தன் தியாகத்தால் பலிப்பொருளாகி சிலுவையில் உயர்த்தப்படுகிறார். இதனை பிலிப். 2 : 6-11 வசனங்களிலும் விளக்குகிறார். கிறிஸ்துவின் பலியினால் சாபத்துக்கு முற்றுபுள்ளி வைக்கப்பட்டது. அதுவே கிறிஸ்துவின் வல்லமை.

## 3. வாழ்வு தரும் கிறிஸ்து :

நம் மனக்கண்முன் சிலுவையிலறையப்பட்டவராய் காட்டப்பட்ட கிறிஸ்து யார் ? அவர் வாழ்வு தருபவர். இந்த வாழ்வு கிறிஸ்துவின் நற்செய்தியில் நாம் கொள்ளுகின்ற மாறாத பற்றுறுதியின் பலன் என பவுலடிகளார் தெளிவுப்படுத்துவதை கலாத். 3 : 2,11 - ம் வசனங்களில் காணலாம்.

பவுலடிகளாரின் கருத்தினடிப்படையில் சட்டம் சொல்லும், பற்றுறுதி வாழ்வுதரும் என்பதாகும். சட்டம் நம்மிடத்தில் ஒரு வரையறைக்குட்பட்டு வாழ கட்டளையிடுகிறது. வரையறையில் தடுமாற்றத்தையும் முரண்பாடுகளையும் கொண்டிருந்தோமானால் சட்ட விரோதம் தண்டனையை வருவிக்கும்.

ஆனால் கிறிஸ்துவின் பேரில் உள்ள பற்றுறுதியில் மன்னிப்பிற்கும், மனந்திரும்புதலுக்கும், இறையருளுக்கும் இடமிருக்கிறது. இதையே பவுலடிகளார் பற்றுறுதியினால் நீதிமானாக்கப்படுதல் என்கிறார் (ரோ. 1: 17).

சிலுவையை தியானிக்கும் லெந்து நாட்களில் சிலுவையில் அறையப்பட்டவராய் நம் கண்முன் காட்டப்படுகின்ற கிறிஸ்துவை நோக்கிப் பார்ப்போம். வரலாற்று நாயகராகிய கிறிஸ்து இன்றும் வாழ்கிறார் என்பதில் உறுதியாயிருந்து, தியாகத்தில் எழும்பும் அவரது வல்லமையையும், பற்றுறுதியால் அவர் தரும் வாழ்வையும் நமதாக்கிக் கொள்வோம்.

இறையருள் நம்முடனிருப்பதாக ! ஆமென் ! !

அருள்திரு. **A. ஜெபசுஜி**

**20-03-2011**

*உயிர்த்தெழுந்த திருநாளுக்கு முன்வரும்*
*5-வது ஞாயிறு*

# கிறிஸ்துவில் பற்றுறுதி

## FAITH IN CHRIST

| | |
|---|---|
| Iஅர. 17 : 17-24 | கொலோ 1 : 1-12 |
| திபா. 34 : 1-15 | மாற். 9 : 14-29 |

*"இயேசு அவனை நோக்கி; நீ விசுவாசிக்க கூடுமாகில் ஆகும். விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும் என்றார்." மாற். 9 : 23*

**மன்றாட்டு :** நிலைத்தன்மையுடைய கடவுளே, உம்மிடம் நம்பிக்கை கொள்வோருக்கு புகலிடமாகிறீர். உம்மாலன்றி ஆற்றலும், தூய்மையும், பெற இயலாது; உமதருளால் எமை நிறைத்து, வழிகாட்டி ஆளுகை செய்வீராக. நாங்கள் இவ்வுலக வாழ்வில் நலமானவைகளை ஏற்று, நிலைவாழ்விற்கு தகுதிபடுத்தப்பட இயேசுகிறிஸ்துவின் திருப்பெயரில் மன்றாடுகிறோம்.

நம்மில் விசுவாசத்தை ஆரம்பிப்பவரும். முடிப்பவரும் இறைவனே. கிறிஸ்துவில் நமது விசுவாசம் நாளுக்கு நாள் வளரும்படி இறைவனே உதவி செய்து வருகின்றார். நாம் அவரை கண்டு விசுவாசிக்கின்ற பாக்கியம் பெறாவிட்டாலும், காணாமல் விசுவாசிக்கின்ற பாக்கியத்தை பெற்றுள்ளோம். கிறிஸ்துவில் நமது விசுவாசம் வளர நாம் ஆண்டவரை அறிந்து, அவரைத் தேடி மற்றும் அவரிடத்தில் அன்பு கூர கடமைப் பட்டுள்ளோம். இது ஆண்டவருக்குப் பிரியமானது. நாம் அவரில் விசுவாசமுடையவர்களாக இருந்தால் நாம் பெற்றுக்கொள்ளும் அனுகூலங்களை திருமறை தெளிவாக விளக்குகிறது.

### *1. விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும் :*

மாற்கு 9 : 23 இல்......விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும் என்று ஆண்டவர் கூறினார். இதே வரலாறு மத். 17 : 14-21; லூக்கா 9 : 37-43 லும் வருகிறது. இப்பகுதிகளில் ஆண்டவர் சீடர்களின் நம்பிக்கையின்மையைத்தான் சுட்டுகிறார். அப்படியெனில் இயேசு சுட்டிக்காட்டும் நம்பிக்கையின்மை என்னவென்று உணர்ந்துகொள்வது இன்றியமையாதது இயேசு நம்பிக்கையோடு ஒருவர் ஒரு மலையையும் இடம் பெயரச் செய்யலாம் என்கிறார். கொரிந்து சபையில் ஒரு சிலர் எங்களிடம் அத்தகைய வல்லமையிருக்கிறது என்று பறை சாற்றினர். மேலும் பவுலார் 1 கொரி. 13 : 1,2 சில.....மலைகளை இடம்பெயரச் செய்யும் அளவுக்கு நிறைந்த நம்பிக்கை கொண்டிருப்பினும் என்னிடம் அன்பு இல்லையேல் நான் ஒன்றுமில்லை. எனவே இப்படிப்பட்டவர்களால்

திருச்சபைக்கு எந்த பயனும் இல்லையென்பதை நினைவில் கொள்ள வேண்டும். எனவே ஆண்டவரிடம் உள்ள நம்பிக்கை என்பது இறைத் திட்டம் பற்றிய தெளிவு, சொந்த விருப்பு வெறுப்புகளை ஒதுக்கும் அர்ப்பணம். இறைவன் நம்மோடு செயல்படுகின்றார் என்ற உறுதி ஆகிய மூன்றும் அடங்கியதே நம்பிக்கை. இந்நம்பிக்கையுடையோர்க்கு எல்லாம் கூடும். இந்த நம்பிக்கையினால் ஆபிரகாம் 'விசுவாசிகளின் தந்தை'என்று புகழப்பட்டு வருகின்றார். அவர் கடவுளுக்குக் கீழ்ப்படிந்தார். வாக்குத்தத்தை நம்பினார். மற்றும் தம்மை முழுமையாக அர்ப்பணித்தார். (ஆதி. 21-23 அ)

## *2. விசுவாசிக்கிறவனுக்கு விடுதலை :*

விடுதலை என்பது மாற்றத்தை விரும்பும் வாழ்வு எனலாம். அந்த மாற்றத்தை ஆண்டவரும் விரும்புகின்றார். எனவே நம்பிக்கையோடு செயலில் இறங்குவோமானால், அதுவே நம்பிக்கைக்கு சிறந்த அடையாளம் என்று புரிந்து கொள்ள வேண்டும். அந்த மாற்றத்தை தடுக்கும் தடைகளை நீக்கி விடுவிப்பவர் ஆண்டவர். அது அவரது ஈவு (அல்லது) அருட்கொடை எனலாம். இதனை நாம் சரியாக புரிந்து கொள்வது இன்றியமையாதது.

இதனை பவுலடியார் எபேசி. 2 : 8 இல் "நீங்கள் அந்த அருளாலே நம்பிக்கையின் வழியாக மீட்கப்பட்டிருக்கிறீர்கள். இது உங்கள் செயல் அல்ல, மாறாக இது கடவுளின் கொடை." மாறற்த்தை விரும்பும் வாழ்வு, பிறருக்கும் விடுதலை தருகிறது. ஆண்டவர் நிறைவேற்றிய அனைத்து வல்ல செயல்களிலும், [illegible] நிகழ்வுகளிலும், தவறான பழக்க வழக்கங்கள், பாரம்பரியங்கள் மற்றும் மூட பழக்க வழக்கங்கள் இவைகளின்று மாற்றம் பெற வேண்டும் என்று விரும்பிய மக்களுக்கு விடுதலை வாழ்வு வழங்குகிறார். எடுத்துக்காட்டாக ஓய்வு நாளில் குணப்படுத்தல் (மாற்கு 2 : 23-28). நம்பிக்கை உடைய பலரை குணப்படுத்தல் (மாற்கு 5 : 1-6) மற்றும் பெரும்பாடுள்ள பெண் நலம் பெறுதல் (மாற்கு 5 : 34) இன்னும் பல.

## *3. விசுவாசிக்கிறவனுக்கு பயம் இல்லை :*

பயப்படாதிருங்கள் என்பதே நம்பிக்கையின் நற்செய்தி. இன்று நாம் வாழும் சூழலில் பல நிலைகளில் மனிதர்களின் மனநிலைகளை தீவிரவாத செயல்கள், வன்முறைகள், கலவரங்கள், படுகொலைகள் வெகுவாக பாதிப்படைய செய்கிறது. I அரசர். 17 : 22 இல் "...சிறுவனுக்கு மீண்டும் உயிர் திரும்பி வரவே, அவன் பிழைத்துக் கொண்டான்". இதனால் மழலை பயம் நீங்கி மகிழ்வுடன் வாழ உதவினார் தீர்க்கன் எலியா. இன்னும் அவர் மீது கொண்ட நம்பிக்கையினால் சாவை ஏற்றுக்கொண்டபடியே இந்த நம்பிக்கையினை கிறிஸ்துவில் நாம் பெற்றுள்ளபடியால், மரண பயம் நீங்கி வாழ அவர் தமது உயிரை சிலுவையில் தந்து நித்திய வாழ்வினை தந்துள்ளார். அதுவே முழு வாழ்வாக யோ. 10 : 10 இல் யோவான் குறிப்பிடுகின்றார். இந்த முழுவாழ்வை பெற்று வாழும் நம்பிக்கையே கிறிஸ்துவின் வழி நாம் பெற்றுள்ளோம். அந்த நம்பிக்கையில் நாம் வளர இறைவன் தாம் அருள் செய்வாராக.

அருள்திரு. **A.R. செல்லையா**

**23-03-2011**

*லெந்துகால இரண்டாம் புதன்*

# பணியாளரின் பணி

**ஏசா. 49:1-6**

*"…..நீயே என் ஊழியன் நான் மாட்சியுறுவேன்." ஏசா. 49 : 3*

துன்புறும் பணியாளர் பணி செய்வதற்காகவே அழைக்கப்பட்டுள்ளார். பணியாளரின் பணி மீட்பு சார்ந்தது. இயேசு கிறிஸ்துவை துன்புறும் பணியாளராக காணும் கிறிஸ்தவர் புரிந்து கொள்ளுதலில் அவரது திருப்பணி துன்புறும் பணியாளரது பணியினைப் போன்றிருக்கிறது. தனது பணியினைக் குறித்து இயேசு குறிப்பிடும் போது பணிவிடைப் பெற அல்ல, பணியாற்றிடவே நான் உலகிற்கு வந்தேன் எனக் குறிப்பிடுகின்றார். இன்று பணிபுரிய நாம் அழைக்கப்பட்டுள்ளோம், ஆனால் எனக்காக மற்றவர் பணிவிடை புரிய வேண்டுமென எதிர்பார்க்கிறோம். ஆனால் கடவுளின் எதிர்பார்ப்பு என்னவென்றால் துன்புறும் பணியாளரை நமது வாழ்வில் மாதிரியாகக் கொண்டு பணிபுரிய வேண்டுமென்பதாகும் துன்புறும் பணியாளரின் பணி எப்படிப்பட்டதாயிருக்கிறது?

## *1. மாட்சிபடுத்துதல் :* (ஏசா. 49:3)

பணியாளரின் பணி கடவுளை மாட்சிபடுத்துதல் அல்லது கடவுள் மாட்சியடையும் படியாக பணியினை நிறைவேற்றுதலாகும். ஏசா. 49:3ல் கடவுள் பணியாளரிடம், நீ எனது ஊழியர், உமது செயல்பாட்டின் வழியாய் நான் மாட்சியுறுகிறேன், என்கிறார். ஒவ்வொரு மனிதருடைய செயல்பாடும் தமது பெயர் மாட்சியுறும் நிலையில் அமையாது, கடவுள் மாட்சியுறும் நிலையில் அமைதல் வேண்டும். கடவுள் மாட்சியடைவதற்கு பணியாளரை கருப்பையில் இருக்கும்போது கடவுள் அழைத்தார். தாயின் வயிற்றில் உருவாகும் போதே பெயர் சொல்லி கூப்பிட்டிருக்கிறார் (ஏசா. 49 : 1). அதோடு அவரது வாயை கூரான வாளாக மாற்றி, அவரைப் பாதுகாத்து, பளபளக்கும் அம்பாக மாற்றி, அப்பறாத்துணியில் மறைத்துள்ளார். (ஏசா. 49:2). கடவுளின் பெயர் மாட்சியடைய பணியாளரில் செயல்பட்டது போலவே இன்றும் நம்மோடு செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்.

கடவுளை மாட்சிபடுத்தும் பவுல் "இனி நானல்ல, அவரே என்னில் வாழ்கிறார்" என்று கூறுகிறார் (கலா. 2:20). இயேசு கிறிஸ்துவும் தாம்

கடவுளுக்கு சமமாக இருந்த நிலையிலும், அவரது பெயர் மாட்சியுறுவதை விரும்பாது தந்தையின் பெயர் மாட்சியுறுவதையே விரும்பினார். யோ. 17:4 ல் இயேசு பூமியிலே நான் உம்மை மகிமைப்படுத்தினேன் என்கிறார். நாமும் கிறிஸ்துவின் சிலுவையின் மாட்சி உலகிலே வெளிப்பட, சிலுவைக்கு உகந்தவர்களாய் நமது பெருமையினை பின்னுக்கு தள்ளி, சிலுவையினை முன்னிறுத்துவோம்.

## 2. *மக்களினத்தை ஒன்று திரட்டுதல்:* (ஏசா. 49:5)

துன்புறும் பணியாளரின் பணியாக சிதறுண்ட இஸ்ரவேலர் ஒன்று திரட்டும் பணி இங்கே சொல்லப்படுகிறது. கடவுள் பணியாளரை இத்திருப்பணியினை நிறைவேற்ற கருப்பையிலிருந்து உருவாக்கியுள்ளதாக சொல்லப்படுகிறது (ஏசா. 49:5). ஒன்று சேர்க்கும் திருப்பணி எளிதான ஒன்றல்ல. பாபிலோன் சிறையிருப்பிலும், எருசலேமில் மீந்திருப்பவர்களையும் ஒன்று திரட்டுவதோடு மட்டும் இப்பணி நின்றுவிடாது, யூதா, இஸ்ரவேலாக பிரிந்த நாடுகள் ஒன்றாகும் காட்சியினையும் இது வலியுறுத்துகிறது எனலாம். எதற்காக ஒன்று திரட்டப்படவேண்டும்? கடவுளின் மக்களினம் பிரிந்து நிற்பது கடவுளின் திட்டமல்ல, இன்று உறவு, பொருளாதாரம், அரசியல், சாதீயம், சமூக வேறுபாடுகளினால் பிரிந்து வாழும் மக்கள் ஒன்றாக வேண்டும் என்பது இறைவனது திட்டமாகும்.

இயேசுவின் திருப்பணியில் அன்றைய சமூகத்தோடு ஒன்றிணைய முடியாதிருந்த பாவிகள், ஆயக்காரர், தொழுநோயாளிகள், மாற்றுத் திறன் படைத்தோர், பெண்கள், சிறுவர்கள், புற இனத்தவர்கள் அனைவரும் ஒன்றாக வாழ ஒன்று திரட்டும் பணியினை நிறைவேற்றினார். கிறிஸ்துவின் சிலுவை அனைத்துதர மக்களையும் தன்னிடம் ஒன்றாகிடும் ஒன்றாயிருக்கிறது. கள்வர்கள் நடுவில் தொங்கின இயேசு, இச்செய்தியினை உண்மையாக்குகிறார். துன்புறும் பணியாளரது பணி இன்று நம்மை சிலுவையோடும், மற்ற மக்களோடும் ஒன்றாக்குகிறது. ஒன்றாக்கப்பட்டவர்கள் சிலுவைப் பாதையில் அவரைத் தொடர்வோம்.

## 3. *மக்களினத்திற்கு ஒளி கொடுத்தல் :* (ஏசா. 49:6)

ஒன்றாக்கும் திருப்பணியினை மேற்கொள்ளும் பணியாளரை இவ்வசனத்தில் மக்களினங்களுக்கு ஒளியாக காணமுடிகிறது. கடவுள், பணியாளரின் பணியினை உலகம் முழுவதும் கடவுளது மீட்பை அடைவதற்கு, மக்களுக்கு ஒளிகொடுப்பவராக காட்டுகிறார். ஒளி இருளை

அகற்றுகிறது. ஒளி கடவுளின் மீட்பின் அடையாளம். இருளில் இருக்கிற மக்கள் பெரிய வெளிச்சத்தை கண்டார்கள் என ஏசாயா கூறுகிறார் (ஏசா. 9:1,2) ஒளிகொடுக்கும் பணியினைப் பணியாளர் செய்வதினால் தீமை அகல்கிறது. மக்கள் மகிழ்வு அடைகின்றனர். ஒளி வாழ்விற்கு அடையாளமாயிருக்கிறது.

இயேசு கிறிஸ்து தனது திருப்பணியினை கலிலேயாவில் செபுலோன், நப்தலி இடங்களில் தொடங்கினபோது ஏசாயாவின் இறைவாக்கு நிறைவேறியதாக மத்தேயு ஆசிரியர் குறிப்பிடுகிறார். (மத். 4:14). இயேசு தன்னையே புற இனத்தவருக்கு ஒளியாக சுட்டிகாட்டி, தன்னால் காரிருளில் வாழ்ந்த மக்கள் பேரொளியைக் கண்டதாக கூறுகிறார் (மத். 4:16). அதோடு நான் உலகிற்கு ஒளியாயிருக்கிறேன் என்றும் என்னுடைய ஒளியிலே நடவுங்கள் எனவும் சொல்கிறார். மட்டுமல்லாது நீங்கள் உலகிற்கு ஒளியாயிருக்கிறீர்கள் (மத். 5:14) உங்கள் ஒளி மற்றவர்கள் முன்பு ஒளிரக்கடவது என்றும் கூறுகிறார் (மத். 5:16). கிறிஸ்துவாகிய ஒளிக்கு சான்று பகிர அழைக்கப்பட்டுள்ள நாம், துன்புறும் பணியாளர் போன்று இவ்வுலகில் ஒளி கொடுத்து வாழ நம்மை அர்பணிப்போம்.

அருள்திரு. **A. மகேர் ஷால் அஸ்பாஸ்**

*தேவன் பூமிக்கு என்றாவது வந்திருப்பாரானால் அது கிறிஸ்துவின் ரூபத்திலேயே.*
ஜோஹன்ஸ்

**25-03-2011**

*லெந்துகால மூன்றாம் வெள்ளி*

# கிறிஸ்து உருவாக பாடுகளை ஏற்றல்

கலா. 4:12-20

*"என் பிள்ளைகளே உங்களில் கிறிஸ்து உருவாகும் வரை உங்களுக்காக நான் மீண்டும் பேறு கால வேதனையுறுகிறேன்." கலாத்தியர் 4:19*

தூய பிரான்சிஸ் "எல்லா நேரமும் நற்செய்தியை அறிவியுங்கள். தேவையானால் மட்டும் வார்த்தைகளை பயன்படுத்துங்கள்." என கூறுகிறார்.

இவ்வாசகம் வார்த்தையல்ல 'வாழ்க்கையே நற்செய்தியாகட்டும்' என்பதை தெளிவுப்படுத்துவதாக உள்ளது. நற்செய்தியாகிய கிறிஸ்துவையும் துன்பப்படுதலையும் பிரித்து அறிதல் கடினமானது. காரணம் கிறிஸ்துவோடு இணைந்து சிலுவை எப்போதும் உணரப்படுகிறது. இரத்தம் சிந்துதல் இல்லாமல் மீட்பு இல்லை. சிலுவை இல்லாமல் மீட்புமில்லை, உயிர்ப்பும் இல்லை.

பவுலடிகளாரும் தன் நற்செய்தி பணியில் துன்பப்படுதலை மனதார தனக்குரியதாக ஏற்றுக்கொண்டார். உயிர்த்த ஆண்டவர் காட்சி தந்தபோது பவுலடிகளார் கற்றுக்கொண்ட பாடம் அது எனலாம். "நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே." நற்செய்தி பணி சூழலில் துன்பத்தை ஏற்று பிறர் வாழ்வை வலுப்படுத்துவதில் பவுலடிகளார் முன் நின்றார். இத்தகு செயல்களே உங்களில் கிறிஸ்து உருவாகும் வரை உங்களுக்காக நான் மீண்டும் (ஏற்கெனவே அவர்களுக்காக பாடுகளை ஏற்றியிருக்கிறார்) பேறுகால வேதனையுறுகிறேன் என்கிறார்.

இவ்வசன அடிப்படையில் நாம் பெற்றுக்கொள்ளும் உண்மைகள்.

## நம்பிக்கைக்கும் மகிழ்வுக்கும் முன்னானது துன்பம் :

துன்பம் நிலையானது அல்ல. மாறாக துன்பத்தை தாண்டி நிச்சயமாக வாழ்வு உண்டு என்பதுவே நம்பிக்கையையும் மகிழ்ச்சியையும் தருகிறது. இங்கே பவுலடிகளார் பேறுகால வேதனையடைகிறேன் என்று சொல்லும்போது அந்த வேதனை குறுகியகால அளவிலானது. அதைத் தாண்டி மகிழ்வு உண்டு என்ற நம்பிக்கையை வெளிப்படுத்துகிறார்.

கலாத். 4:6 - ல் கலாத்திய சபை உரிமை பேறுடைய கடவுளின் பிள்ளைகள். கலாத். 4:9 - ல் கடவுளால் ஏற்றுக்கொள்ளப்பட்டவர்கள்

என்கிறார் பவுலடிகளார். தொடர்ந்து கலாத். 4:12 முதல் தன்னை ஏற்றுக்கொண்ட பெருமையுடையதாக கூறுகிறார் பவுலார். அத்தகைய சபை தான் அறிவித்த உண்மை கிறிஸ்துவின் நற்செய்தியை விட்டுவிட்டு திருச்சட்டங்களை மட்டும் முக்கியப்படுத்தும் யூத கிறிஸ்தவர்களின் தாக்கங்களுக்கு இடமளித்துவிட்டனர். எனவே மீண்டும் கலாத்திய சபையிடம் நம்பிக்கையோடு தன்னுடைய கிறிஸ்து சார்ந்த உண்மைகளுக்கு செவிகொடுக்க வேண்டுகிறார். திருச்சட்ட நிலையிலிருந்து கிறிஸ்துவுக்குள்ளாக மாறுவார்கள் என்ற நம்பிக்கையோடும், மகிழ்வோம். பவுலடிகளார் பாடுகளை சகித்துக் கொள்வதாக கூறுகிறார்.

இங்கு பவுலடிகளாரின் இருவித நிலைகள்.

(i) பிள்ளை பிறக்கும் என்ற நம்பிக்கையில் வரும் மகிழ்வு நிலையில் வேதனையை சகித்துக்கொள்ளும் தாய்போல, கிறிஸ்துவின் நற்செய்தியின் உண்மைக்கு கலாத்திய சபை திரும்பும் என்ற நம்பிக்கையில் திரும்பும் வரை பேறுகால வேதனையாக அதை ஏற்கிறேன் என்கிறார் பவுலடிகளார்.

(ii) நம்பிக்கையில்லா நிலையிலும் நம்பிக்கை கொள்ளும் பவுலடிகளாரையும் நாம் இங்கே காணலாம். கலாத். 4:20; 5:11,12- வசனங்களில் கலாத்திய சபையோரை பொறுத்தமட்டில் தனக்கு ஒரே குழப்பமாக இருக்கிறது என்கிறார். உங்களோடிருந்து வேறு வகையாய் பேசிபார்த்தால் நலமாயிருக்கும் என்கிறார். கலாத். 5:12 - ல் உங்களில் குழப்பம் உண்டாக்குகிறவர்கள் தங்களை ஆவிகளாக ஆக்கி கொள்ளட்டும் என்கிறார்.

ஆக, நம்பிக்கையற்ற கலாத்திய சபை சூழலில் நிச்சயமாக மாற்றம்வரும், உண்மை அறியப்படும் என்ற நம்பிக்கையில் துன்பத்தை ஏற்பதாக கூறுகிறார்.

கிறிஸ்து உங்களில் உருவாகுமளவும் (4 : 19) என்பது நம்பிக்கையை வெளிப்படுத்துகிறது. கிறிஸ்துவுக்குள் கிறிஸ்தவன் இருப்பதும், கிறிஸ்தவனில் கிறிஸ்து இருப்பதும் பவுலடிகளாரின் அனுபவம் (IIகொரி. 5 : 17, ரோமர் 8 : 10) இந்த அனுபவம் கலாத்திய சபையும் பெறுவதற்காக துன்பத்தை ஏற்பதாக கூறுகிறார்.

நாம் அடிமைத்தனத்திலிருந்தபோது (சாதிய, சமய, கலாச்சார, பொருளாதார அடிமைத்தனங்கள்) நம்மை உயிரூட்டி எழுப்பியது நற்செய்தி. மிஷனெறிகள் வழியாக நாம் பெற்றக்கொண்டது கிறிஸ்துவின் நற்செய்தி. இன்று நாம் அதனை விட்டுவிட்டு ஆசீர்வாதங்கள் என்கிற

போர்வையில் வளமை சடங்குகளுக்கும் ஆடம்பரங்களுக்கும் இடங்கொடுத்து சிலுவையை மறந்துவிட்டோம். சிலுவை நாதரை விட்டுவிட்டோம். பிறரை வஞ்சித்து ஏமாற்றுகிறோம். நம்மிலும் உண்மை கிறிஸ்து மறுபடியும் உருவாக இடம் கொடுப்போம்.

வீண் ஆடம்பரங்கள், வளமை சடங்குகள், காட்சியில்லாத நுகர்வு தன்மைகள், சமூக பார்வை இல்லாத வாழ்வு, ஆணவம் மிகுந்த அதிகாரங்கள் இவற்றையெல்லாம் புறக்கணிப்போம். கிறிஸ்து நம்மில் உருவாக இடம் கொடுப்போம்.

"நானுன்னுள்ளும் நீ என்னுள்ளும் ஆயிருப்போம்
வானும் பூவும் வாசமுற இசைந்திடல் ஆமே"
இறையாசி நம்மோடிருப்பதாக ! ஆமென் !!

அருள்திரு. **A. ஜெபசுஜி**

*ஒரு பெண்ணை தாயில்லாமல் மனிதனின் விலாவிலிருந்தெடுத்த தேவன் ஒரு மனிதனை தகப்பனில்லாமல் பெண்ணில் உற்பவித்து எடுத்தார்.*

மத்தேயு ஹென்றி

**27-03-2011**

*உயிர்த்தெழுந்த திருநாளுக்கு முன் வரும்*
*4-வது ஞாயிறு*

# ஆவியுடனும் உண்மையுடனும் தொழுதல்

## WORSHIPING IN SPIRIT AND IN TRUTH

ஆமோ. 5:18-27 பிலி. 2:5-11
திபா. 96 லூக். 11:1-4

*"தூய கோலத்துடன் ஆண்டவரை வழிபடுங்கள், உலகெங்கும் வாழ்வோரே; அவர் திருமுன் நடுங்குங்கள்." திபா. 96:9*

**மன்றாட்டு** : எங்கள் ஆண்டவராகிய கடவுளே, துதிகளோடும் புகழ்பாக்களோடும் நாங்கள் உம்மிடம் வருகின்றோம். ஆவியோடும், உண்மையோடும் உம்மைப் பணிய அருள்தாரும். நாங்கள் எம்மை உயிருள்ள பலிகளாய் அர்ப்பணிக்கின்றோம். எங்களை அமைதி மற்றும் நீதியின் கருவிகளாக்கி எங்கள் வாழ்வின் செயல்களை ஏற்புடைய தூய தொழுகையாக அங்கீகரிக்க வேண்டுமென திருமைந்தர் இயேசுவின் திருப்பெயரில் வேண்டுகிறோம். - ஆமென்.

மேலைநாடு ஒன்றில் உள்ள மிகப் பெரிய ஆலயத்தில் ஞாயிறு தொழுகைக்கு மக்கள் குடும்பம் குடும்பமாக புறப்பட்டு சென்றனர். ஆலயத்தில் இருந்தவர்கள் அனைவரும் வெள்ளையர்கள். தொழுகை நடைபெற்றுக் கொண்டிருந்த போது சுற்றுலா சென்ற கறுப்பு இனத்தை சார்ந்த ஒருவர் ஆலயத்தினுள் நுழைந்தார். வெள்ளையர்கள் தொழும் ஆலயத்தில் கறுப்பர் நுழைந்ததைப் பார்த்ததும் அவரை அடித்து ஆலயத்தை விட்டு துரத்தினர். மிகவும் கவலையோடு தன் அறைக்குச் சென்று படுத்துக் கொண்டார். தூக்கத்தில் கடவுள் காட்சி கொடுத்தார். ஏன் கடவுளே இவர்கள் என்னை ஆலயத்தில் அனுமதிக்கவில்லை என்று கவலையோடு கேட்டார். மகனே நீ கவலைப்படாதே. இன்று ஒருநாள் மட்டுமே நீ புறக்கணிக்கப்பட்டிருக்கிறாய். ஆனால் நானோ கடந்த பல ஆண்டுகளாக முயற்சித்தும் ஆலயத்தினுள் நுழைய முடியவில்லை. என்னையும் அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை அப்படியிருக்க உன்னை ஏற்றுக் கொள்வார்களா? என்றாராம் கடவுள்.

தொழுகை என்பது கிறிஸ்தவ பற்றுமையிலும், வாழ்விலும் ஆணிவேராக காணப்படுகிறது. மனிதர் இறைசாயலில் படைக்கப்பட்டனர் என்ற உண்மை தொழுகையில் அழகுற வெளிப்படுகிறது. ஏனென்றால் இறைவனைச் சார்ந்து அவருடைய அன்புறவில் வாழ உருவாக்கப்பட்ட மனுக்குலம் தங்கள் வாழ்வின் தன்மையையும், நோக்கத்தையும் தொழுகையில் உணர்ந்து கொள்கின்றனர். பொருளுள்ள தொழுகையில்

இரண்டு தன்மைகள் வெளிப்படுகிறது. ஒன்று, எல்லாம் வல்லவராயிருக்கிற இறைவனின் விருப்பத்தை ஏற்பது, இரண்டு, பிற மனிதரோடும், படைப்பனைத்தோடும் நல்லலுறவு கொண்டு வாழ்வது உண்மையான தொழுகையின் தன்மைகளாகும். தொழுகை இறைவனுக்கும் மனிதனுக்குமிடையே உறவை உருவாக்குகிறன்றது, வலுப்படுத்துகின்றது, வளரச் செய்கின்றது. திருமறையை மையம் கொண்டால் இந்த உறவுக்கு முதல் முயற்சி எடுத்தவர் இறைவனே. ஆகவே இறைவன், தான் மனுக்குலம் தன்னை வணங்கி, பணிவிடை செய்து அதன் வழியாக சான்றாளர்களாக வாழ வேண்டும் என எதிர்ப்பார்க்கிறார். ஆகவே அவரால் தெரிவு செய்யப்பட்ட மனுக்குலம் தங்கள் பணிவிடையை தொழுகையின் வழியாய் நிறைவேற்ற வேண்டும் என்பது புலனாகிறது. எனவே தொழுகை வெறும் உள்ளுணர்வு சார்ந்ததாக மட்டுமன்று உடலையும், உலகிலுள்ள அனைத்துக் கொடைகளையும் உட்கொள்கிறதாக அமைய வேண்டும். உள்ளத்து உணர்வுகள் அடையாளச் செயல்களாக, பாடல்களாக, மன்றாட்டுகளாக வடிவம் பெறுகிறது. இத்தகைய வடிவம் பெற கலை, இசை, பண்பாடு போன்றவையும் ஏற்ற பங்கு வகிக்க வேண்டும், மேலும் இறைவன் அனைத்து ஆற்றலும் பொருந்தியவர், அஞ்சுதற்குரியவர். போற்றுதற்குரியவர், அனைத்து கடவுள்களுக்கும் மேலானவர், அவர் மாட்சியும், புகழ்ச்சியும், எழிலும் கொண்டவர். எனவே இறைவனை ஆவியுடனும், உண்மையுடனும் தொழுதல் அவசியம் என்கிறார் கவியரசர் தாவீது (திபா. 96:4-6). ஆக திருமறையும் ஒரு தொழுகை நூலாக காட்சியளிக்கின்ற படியால் பொருளுள்ள முறையில் ஆவியுடனும் உண்மையுடனும் இறைவனைத் தொழ திருமறையின் ஒளியில் சில உண்மைகளை சிந்திப்போம்.

### 1. அருவருப்புகளை அகற்றி தொழுதல் : (ஆமோ. 5:18-27)

ஆமோஸ் இறைவாக்கினர் இறைவனின் நீதியை அவரது உடன்படிக்கையின் அடிப்படையில் போதிக்கிறார். நாட்டில் பரவியிருந்த ஒழுக்க சீர்கேட்டை இரக்கமில்லாமல் கண்டிக்கிறார். அயலாருக்கு செய்யும் தீமை வெறும் சட்டத்தை மீறுவது மட்டுமன்று, மாறாக இறைவனுக்கு எதிராகச் செய்யும் கிளர்ச்சியும், அவரது உடன்படிக்கை உறவை முறிப்பதுமாகும். மக்களிடையே நிலவிய வகுப்பு வேற்றுமைகள், பலர் வறுமையில் திண்டாட சிலர் மட்டுமே சொகுசாக வாழுதல், ஏழைகளுக்கும் எளியோருக்கும் நீதி மறுக்கப்படுதல், அன்னிய கடவுள்களை வழிபடுதல் போன்ற இச்செயல்களை கடவுள் முழுமையாக அருவருக்கிறார் என்கிறார். தொழுகையிலும் வெறும் புறசடங்குகளும், தற்பெருமையும், சுயநேர்மையுமே மேலோங்கியது. எனவே இறைவன் அவர்களின் பண்டிகைகளையும், படையல்களையும், தொழுகைகளையும்,

பாடல்களையும், இசை ஓசைகளையும் வெறுக்கிறவராக காண்கிறார். ஆகவே இறைவன் அருவருக்கும் பண்புகளை களைந்து இறைபாதம் நாடி அவரை தொழ அழைப்பு விடுக்கிறார் (மீகா. 5:18-27). இறைவனின் வழிகாட்டுதலால் கானானில் குடியமர்த்தப்பட்ட இஸ்ரவேலர்களும் தங்களை மீட்டு வந்த இறைவனின் செயல்களை மறந்து ஆலயத்தில் பாகால், அஸ்தரோத்து போன்ற கடவுள்களுக்கு தூபங்காட்டி வழிபாடு செய்தனர். யோசியா அரசரின் காலத்தில் அனைவரையும் ஆலயத்தில் அழைத்து, உடன்படிக்கை செய்து அன்னிய கடவுள் வழிபாடுகளையும், அவற்றிற்கு தூபம் காட்ட பயன்படுத்திய பொருட்களையும் வெளியேற்றினர். இப்படியே இறைவன் அருவருப்பென எண்ணினவைகளை அகற்றி இறைவன் விரும்பும் வழியில் இறைவனை தொழுதனர் (IIஇரா. 23:1-24). ஆகவே இறைவன் விரும்புவதை செய்யாதவர்கள் இறைவனுக்கு அருவருப்பானர்கள். (தீத்து 1:16). இறைவனை தொழுது கொள்ளும் மனுக்குலம் மேன்மை, சுயநீதி, சிலைவழிபாடு, ஆணவம் போன்ற அருவருப்பான செயல்களை அகற்றுவது அவசியம் (லூக். 16:15) மேலும் இறைவன் அருவருக்கும் இறுமாப்புள்ள பார்வை, பொய்யுரைக்கும் நாவு, சதிதிட்டங்களை வகுக்கும் உள்ளம் குற்றமில்லாரை கொல்லும் கை, தீங்கிழைக்க விரைந்தோடும் கால், பொய்யுரைக்கும் போலிச் சான்று, நண்பரிடையே சண்டையை மூட்டிவிடும் செயல் (நீதி. 6: 16 -19) இவைகளை வெறுத்து இறைவனை உண்மை நிலையில் தொழ ஆயத்தமாவோம்.

## 2. *ஆதரவற்றோரை ஆதரித்து தொழுதல் :* (பிலி. 2:5-11)

தூய பவுல் பிலிப்பி திருச்சபைக்கு எழுதும் போது கிறிஸ்து இயேசு கொண்டிருந்த மனநிலையே உங்களிலும் இருக்கட்டும் என்கிறார் (பிலி. 2:5). கிறிஸ்து கொண்டிருந்த மனநிலை தந்தையின் விருப்பத்தை இம்மண்ணில் ஊன்றக் கட்டுவது ஆகும். அதையே நாசரேத்து தொழுகைக் கூடம் சென்ற இயேசு தாம் வாசித்த இறைவாக்கினர் ஏசாயாவின் சுருளேட்டின் மூலம் வெளிப்படுத்துகிறார் (லூக். 4:16-19). இதன் மைய கருத்து ஆதரவற்றோரை ஆதரிப்பது என்பது புலனாகிறது. கிறிஸ்து தன்னை முழுமையாக வெறுமையாக்கி அடிமையின் வடிவை ஏற்று மனிதருக்கு ஒப்பானது மட்டுமன்றி, சிலுவைச் சாவையே ஏற்கும் அளவிற்கு கீழ்ப்படிந்து தன்னை தாழ்த்தினார் (பிலி. 2:7,8). காரணம் ஆதரவற்றோரை ஆதரிக்க பணிவு, தாழ்மை தேவை. எருசலேம் ஆலயம் சென்ற இயேசு தொழ வந்தவர்களை புறக்கணித்த தொழுகை இடம் பெரிய பெரிய வியாபாரிகளால் வியாபரக் கூடமாக மாற்றப்பட்டதை கண்டு வியப்புற்றார். இறைவனை தொழ ஆதரவற்றவர்களாக வந்த மாற்றுத்திறனாளிகள் தொழுகை கூடத்திற்கு புறம்பாக்கப்பட்டதை கண்டு அவர்களை அணைத்து, அரவணைத்து ஆதிக்க, அதிகாரக்காரர்களை புறம்பாக்கினார். (மாற். 11:15-19). ஆக தொழுகை அல்லது தொழுதல் என்பது இறைவனைப் போற்றுவது மட்டுமன்று ஆதரவற்றோரை அரவணைப்பதும் என்பது புலனாகிறது. ஓய்வு நாளில் தொழுகை கூடம்

சென்று இயேசு தன் தந்தை விரும்பின நற்பணியை செய்தார். கை சூம்பியவரின் கரத்தை குணமாக்கினார் (லூக். 6:6-11). இயேசுவின் பாதையை பின்தொடர்ந்த பேதுரு, யோவானும் ஆலயம் சென்றபோது ஆதரவற்ற, அரவணைப்பாரின்றி காணப்பட்ட கால் ஊனமுற்ற மனிதனுக்கு அரவணைப்பு கொடுத்தனர் (அப். 3:1-10). ஆகவே இறைவனை தொழுதல் என்பது மன்றாட்டுகளை வரிசைப்படுத்துவதும், இறைவனை போற்றுவதும், மட்டுமல்லாது ஆதரவற்றோரை ஆதரிப்பதும் உள்ளடங்கியது என்பதை உணர்ந்து இறைவனை தொழ ஆயத்தமாவோம்.

### *3. அயலாரில் அன்பு செலுத்தி தொழுதல் :* (லூக். 11:1-4)

இறைவனின் விருப்பம் இறையாட்சியை இவ்வுலகில் நிறுவுவது. (லூக். 11:26). ஆகவே தனது ஒரே மைந்தனை இவ்வுலகில் அனுப்பினார். மைந்தனாகிய கிறிஸ்து இவ்வுலகில் வந்து அன்பு பாராட்டினவராக, நன்மை செய்தவராக, மன்னிக்கும் பண்பு கொண்டவராக வாழ்ந்தார். ஆகவே இறைவனைத் தொழ ஆயத்தப்படும் மனுக்குலமும் அன்பின் பண்பு கொண்டவர்களாக வாழவும், தமது விருப்பத்தை தங்கள் விருப்பமாக ஏற்று தொழ அழைக்கப்படுகிறோம். ஆகவே அன்பு இல்லாத் தொழுகை அசைவற்ற, ஆசியற்ற தொழுகையாக மாறுகிறது. இயேசுவின் சீடர்களில் ஒருவர் அவரை நோக்கி யோவான் தம் சீடருக்கு இறைவேண்டுதல் கற்றுக் கொடுத்தது போல் எங்களுக்கும் கற்றுக்கொடும் என்றார். இயேசு நல் உறவை வெளிக்காட்டும் அன்பை அடித்தளமாக கொண்ட இறைவேண்டலை கற்றுக் கொடுத்தார் (லூக். 11:1-4). மேலும் தன்னையே இலக்கணமாக்கினார். இதையே தூய பவுல் "கிறிஸ்து நமக்காக............ அன்பிலே நடவுங்கள் என்கிறார் (எபேசி. 5:2). மேலும் பக்தியிலும், தொழுகையிலும் அயலாரை ஏற்கும் அன்பு இல்லையெனில் அனைத்தும் அசைவற்றதும், அப்பிரயோஜனமானது என்கிறார் (Iகொரி. 13:1-8). நிலை வாழ்வை உரிமையாக்கி கொள்ள வந்த திருச்சட்ட அறிஞருக்கு இயேசு கொடுத்த போதனை சட்டங்களில் முக்கியமானதாக எண்ணப்படும் "உன் முழு இதயத்தோடும் ..........அன்பு கூருவாயாக"என்பதை (லூக். 10: 27,28) தொழுகையில் உறவுகள் ஒன்றுபடுவதால் அன்பு மிக மேன்மையானது என்பதை யோவான் "தான் கண்ட சகோதரரிடம் அன்பு கூராதவன் காணாத இறைவனிடம் எப்படி அன்பு பாராட்ட முடியும் (Iயோ. 4:20) என்கிறார். ஆகவே இறைவனை தொழ ஆயத்தப்படுவோர் முதலில் அயலாரோடு அன்பு செலுத்தி இறைவனைத் தொழ ஆயத்தமாவோம்.

வாழ்வைத் தொடாத தொழுகை வெறும் சடங்காக மட்டுமே அமையும். ஆகவே ஆவியரின் ஆற்றலைப் பெற்று உண்மை உணர்வுகளோடு இறைவனை தொழுபவராக அருவருப்புகளை அகற்றி, ஆதரவற்றவர்களை ஆதரித்து, அயலாரோடு அன்பு செலுத்தி இறைவனைத் தொழுது இறைவிருப்பத்தை அறிய அர்ப்பணிப்போம்.

திருவாளர் **J.J. இம்மானுவேல்**

**30-03-2011**

*லெந்து காலம் மூன்றாம் புதன்*

# பணியாளரின் தனித்துவம்

**ஏசாயா 50:4-9**

*“அடிப்போருக்கு என் முதுகையும், தாடியைப் பிடுங்குவோர்க்கு என் தாடையையும் ஒப்புவித்தேன்” ஏசா. 50 : 6*

தனித்துவம் என்பது சிறப்புக்குரிய பண்பு நிலையாகும். இப்பண்பு ஒருவர் மற்றொருவரிலிருந்து எப்படி வேறுபட்டிருக்கிறார் என்பதை உணர்த்துகிறது. கடவுளும் தனித்தன்மையுள்ளவராயிருக்கிறார். அதுபோல் ஒவ்வொரு மனிதரும் அவரவரிலே தனித்தன்மை வாய்ந்தவர்கள்,. ஏசாயா இறைவாக்கினர் கூறும் துன்புறும் பணியாளரும் தனித்தன்மை உடையவர்; இதனை அவரது ஒப்புடைப்புள்ள வாழ்வின் மூலம் புரிந்து கொள்ள முடிகின்றது. ஏசா. 50:4-9 வரையுள்ள பகுதியில் பணியாளரின் தனித்துவம் எப்படி மற்றவர்களைக் காட்டிலும் வேறுபட்டியிருக்கிறது என்பதை புரிந்து கொள்ளலாம். துன்புறும் பணியாளரில் இருந்த தனித்துவ பண்புகளை எவை?

## *1. இறைதிட்டத்தில் இணைந்திருந்தல் :*

நலிந்தவர்களை நல்வாக்கினால் ஊக்குவிக்கும் அறிவினைப் பணியாளர் பெற்றிட கடவுள் அவருக்கு கற்றோரின் நாவினைத் தந்து, செவி கொடுக்க செவியை திறந்தபோது, கடவுளை எதிர்த்து, விலகிச் செல்லாமையில் பணியாளரது தனித்துவத்தை நாம் புரிந்து கொள்ள முடிகிறது. இங்கே பணியாளர் இளைப்படைந்தவனுக்கு (நலிந்தவனுக்கு) சமயத்திற்கேற்ற வார்த்தையினைச் சொல்லி அமைதி காணச் செய்கிறார். அதாவது கடவுளின் திட்டத்திலிருந்து விலகிச் செல்லாமலிருப்பதை நாம் புரிய முடிகிறது.

இயேசுவும் தம் பணி நாட்களில் கடவுளின் வார்த்தையிலிருந்து விலகி செல்லாது, நலிந்தவர்களுக்கு நல்வாக்குரைத்தார். அன்று நலிந்து வாழ்ந்த மக்களிடமிருந்து விலகி வாழாது, நலிவுற்றவர்களுக்கு இளைப்பாறுதல் தருகிறவராகவும், சாந்தமும் மனத்தாழ்மையுள்ளவராகவும் செயல்பட்டார் (மத். 11:28-30). இன்று நாம் துன்புறும் பணியாளரில் காணும் தனித்துவ செயல்பாடான நலிவுற்றவர்களிடமிருந்து விலகிச் சொல்லாது அவரது பாடுகளில் பங்கு பெற்று, அவர்களிடம் கனிவாக பேசி,

அமைதியின் வாழ்வுக்கு நேராய் வழிநடத்திட கடவுள் நம்மை அழைக்கிறார். நமது வளமைக்காக செழுமையின் இறைவாக்குகளை எதிர்நோக்குகிறவர்களாக அல்ல. நலிந்தவர் நல் வாழ்வு பெற்றிட பாடுகளின் மையமான சிலுவையை முன்னிறுத்தி சுய நலனை வெறுத்து சிலுவைப் பாதையிலிருந்து விலகிச் செல்லாது, துன்புறும் மக்களின் விடுதலைக்கு சான்றாவோம்.

## 2. இறைமக்களின் வேதனையைச் சொந்தமாக்குதல்: (ஏசா. 50:6)

துன்புறும் பணியாளர் தனது தனித்துவ வாழ்வில் விலகிச் செல்ல வேதனையினைச் சொந்தமாக்குகிறார். கண்ணுக்கு கண், பல்லுக்கு பல் எனும் சூழலில் இப்பணியாளர் அடிப்பவர்களுக்கு தன் முதுமையும் தாடியை பிடுங்குவோருக்கு தாடையையும் ஒப்புவித்து, நிந்தனை செய்வோருக்கும் காறி உமிழ்வோருக்கும் தமது முகத்தை மறைக்காமலும் இருக்கிறார் (50:6). அதாவது துன்பப்படுத்துவோருக்கு எதிராக செயல்பாடாமல், துன்புறுத்துவோர் தரும் வேதனையினைச் சொந்தமாக்குகிறார்.

எதிராளியை எதிர்ப்பது கிறிஸ்தவ குணமல்ல, இயேசு தமது போதனையில் தீமையோடு எதிர்த்து நிற்க வேண்டாம்; ஒருவன் உன்னை வலது கன்னத்தில் அறைந்தால் அவனுக்கு மறுகன்னத்தையும் திருப்பி கொடு என்கிறார் (மத். 5:39). அதோடு சத்துருக்களை சிநேகிக்கவும், சபிக்கிறவர்களை ஆசீர்வதிக்கவும், பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யவும், நிந்திக்கிறவர்களுக்காகவும் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் வேண்டுதல் செய்யவும் வலியுறுத்துகிறார் (மத். 5:44). இதிலிருக்கும் உண்மை என்னவென்றால், எதிர்ப்பவனை எதிர்க்காமல், எதிராளித் தரும் வேதனையை சகித்துக் கொள்ள வேண்டுமென்பதே. இயேசுவும் தமது சிலுவை மரணத்தின் போது அடித்தவருக்கு தன் முதுகையும், நிந்தித்துவர்களுக்கு முகத்தையும் மறைக்காமல் வேதனையினை சொந்தமாக்கி, தான் தனித்தன்மையுடையவர் என்பதை நிருபித்தார். கிறிஸ்துவின் சிலுவையினை முன்னிறுத்தும் நாமும், கிறிஸ்துவிலிருந்த இந்த தனித்தன்மையினை சொந்தமாக்குவோம்.

## 3. இழிநிலை அடையாதிருத்தல் : (ஏசா. 50:7)

வேதனை மிகுந்த சூழலில் துன்புறும் பணியாளர் அவமானம் அடையவில்லை. முகத்தில் காறி உமிழ்ந்து அவமானம் செய்யும் சூழலில்,

அவர் இழிநிலை அடையவில்லை (50:7). ஏனென்றால் கடவுள் அவருக்கு துணை நிற்கின்றார். பணியாளருக்கு அவமானம் ஏற்படாமல் கடவுளே அவமானத்தை ஏற்றுக் கொள்கிறார். மட்டுமல்லாது, எல்லாரும் இழிவாக அவரைப் பார்த்தாலும், அவர் அவமானமடையவில்லை, காரணம் அவர் தம் முகத்தை கற்பாறையாக்கி கொண்டார் (50:7). அதோடு பணியாளரின் துன்பங்கள் மக்களின் மீட்புக்கானவைகள். ஆனபடியினால், அதனை அவமானமாக காணாது, மீட்பின் தகவுகளாக காணமுடிகிறது.

இயேசு கிறிஸ்துவின் சிலுவைப்பாடுகளில் ஏசாயா கூறும் துன்புறும் பணியாளருக்கு நேர்ந்த அனைத்தும் அவருக்கும் நேர்ந்தது. இயேசுவை பரியாசம் பண்ணி அவர்மேல் துப்பி அவரைத் தூசித்து அவமானப்படுத்தினர் (மத். 27:29,30,40). ஆடைகளை உரிந்து அவமானப்படுத்தி சிலுவையில் அறைந்தனர். ஆனால் சிலுவையின் வெற்றிக்காக இயேசு அவமானம் அடையவில்லை. இயேசு சந்தித்த அவமானம் அவமானமன்று அது அனைத்துல மக்களின் மீட்பிற்கான திட்டம், இதிலே அவரது தனித்துவம் வெளிப்படுகிறது. இன்றும் சிலுவைக்கு சான்று பகருகிறவர்களாகிய நாம் வாழும் போது ஏற்படும் அவமானங்கள் அனைத்தும் மீட்பின்பாதையின் படிகளேயன்றி அவமானமல்ல என்பதை புரிந்து சிலுவையை பின்தொடர்வோம்.

அருள்திரு. **A. மகேர் ஷால் அஸ்பாஸ்**

*கிறிஸ்து மகத்துவமானவர்களில் ஒருவரல்ல. அவர் மட்டுமே மகத்துவமானவர்.*

*கார்னீக்*

**01-04-2011** *அருணோதய ஆராதனை*

# மன்றாட்டைக் கேட்கும் கடவுள்

**Iசாமு. 1:1-20**

*"…..ஆண்டவரை நோக்கி மன்றாடினார்."* **Iசாமு.** *1 : 10*

மன்றாட்டு (ஜெபம்) என்பது கிறிஸ்தவ வாழ்வில் மிக முக்கியமான பண்பாகும். மன்றாட்டு, இறைவனோடு பேசவும் அவரது திருவுளவிருப்பத்தைப் புரிந்து கொள்ளவும் இன்றியமையாததாகும். ஜெபமில்லா வீடு கூரையில்லாத வீடு என்று குறிப்பிடுவர். இது முற்றிலும் உண்மையான கூற்று ஆகும். கூரையில்லாத வீடு பாதுகாப்பு இல்லாத வீடு, என்பது போன்று மன்றாட்டில்லா வீடும் பாதுகாப்பில்லா வீடாகும். அன்னாள் என்ற ஒரு பெண்மணி கடவுளின் திருமுன்னிலையில் வேதனை நிறைந்த இதயத்துடன் அழுது மன்றாடும் மன்றாட்டின் படிநிலைகள் நமது வாழ்விற்கு அறைகூவல் விடுக்கும் செய்தியாகும். அவரது மன்றாட்டு, மன்றாட்டிற்கு இலக்கணம் வகுத்துள்ளது. அவரது மன்றாட்டை அங்கீகரித்து வாழ்வருளிய ஆண்டவர் இப்புதிய மாதத்தில் அடியெடுத்து வைத்துள்ள நம் ஒவ்வொருவருடைய மன்றாட்டுகளையும் அங்கீகரித்து வாழ்வருள்வார் என்பதற்கு சந்தேகமில்லை. அன்னாளின் மன்றாட்டு வாழ்விலிருந்து நாம் கற்றுக் கொள்ளும் உண்மைகளாவன;

## *1. இறையடி பணிந்தார்* : (Iசாமு. 1 : 10)

அன்னாள் தமது வாழ்வில் ஒரு குறையோடு வாழ்ந்து வந்தார். இதனால் அவரது தனிப்பட்ட வாழ்விலும், குடும்ப வாழ்விலும், குறிப்பாக அவரது வீட்டிற்குள்ளேயே அமைதியற்ற சூழ்நிலை காணப்பட்டது (Iசாமு. 1:16). இந்த நெருக்கடிகளின் மத்தியில் யாரிடத்தில் சென்றால் இதிலிருந்து விடுபடமுடியும் என்று அவர் அறிந்திருந்தார். எனவே அவர் இறையடி நாடிவந்தார். அதுமட்டுமல்ல ஆண்டுதோறும் அவர்கள் எருசலேம் வந்து பண்டிகை கொண்டாடுவது வழக்கம் (Iசாமு. 1 : 3). அந்நேரத்தில் அன்னாள் ஆண்டவரின் திருமுன்னிலையில் மன்றாடுவார். அம்மன்றாட்டில் அவர் எவ்விதப் பின்மாற்றமும் காட்டவில்லை. பலவேளைகளில் வாழ்வின் தேவைகளும், ஏமாற்றங்களும் நிறைந்திருக்கும்போது இறை இல்லம் வருவவரையும், திருச்சபை கூட்டுறவையும் கூட நாம் மறந்து விடுவது உண்டு. ஆனால் இந்த அன்னாள் தேவைகளோடு இறையடி வந்து மன்றாடுவது நன்மைகளைத் தரும் என்று அறிந்திருந்து ஆண்டவர் திருவடி கருத்தோடு மன்றாடுகிறார். ஆண்டவர் திருக்கோயிலிருந்து விண்ணப்பத்தைக் கேட்கிறார் (2குறி. 7 : 15) என்று சாலமோனுக்குப் பதிலுரைத்திருக்கிறார். இறைவனின் திருவடி பற்றி அவரது திருமுகத்தை நோக்கிப் பார்ப்போர் வெட்கமடைந்து

போவதில்லை. (திபா. 34 : 15) என்கிறார் திருப்பாடகர். என்ன தேவைகளிருந்தாலும் தயவுள்ள ஆண்டவரின் திருவடி கடந்து வர அழைக்கப்படுகிறோம்.

## 2. இதயத்தை ஊற்றி வேண்டுதல் செய்தார் : (1 : 15 ஆ)

அன்னாளின் மன்றாட்டிலிருந்து கற்றுக் கொள்ளும் அடுத்த உண்மை அவர் இதயத்தை இறைவனிடம் ஊற்றி (pouring) மன்றாடினார், அன்னாளைத் தவறாகப் புரிந்து கொள்ளும் ஆசாரியர் ஏலி, அவர் குடித்து வெறித்திருக்கிறார் என எண்ணம் போது தமது இதயம் துக்கத்தால் நிறைந்திருக்கிறது என்கிறார். அதோடு அந்த வேதனைகளையும், துக்கங்களையும் தூயவரின் திருமுன்னிலையில் ஊற்றிவிட்டேன் என்று உறுதிபட எடுத்தியம்புகிறார் (1 : 15ஆ). அன்னாளின் இதயத்தின் வேதனைகளை மீண்டுமாக இதயத்தில் சுமக்காதபடி இறையடி ஊற்றிவிடும் பண்பு இறைமக்கள் ஒவ்வொருவருக்கும் தேவையானதாகும். வாழ்வின் கடினங்களை எண்ணி துக்கத்தோடு சோர்போடு வாழவில் விரக்தியோடு நாட்களை நகர்த்தாதபடி இறையடி ஊற்றிவிடுவது மகிழ்வான அனுபவத்துக்கு இட்டுச் செல்லும். அன்னாள் இதயத்தை ஊற்றிவிட்ட பிற்பாடு அவர் துக்கமுகமாயிருக்கவில்லை (1 : 18ஆ). இயேசு கிறிஸ்துவும், பாரத்தை முழுவதுமாக இறக்கி வைக்க, வருந்தியழைத்துப் பாரம் சுமப்பவர்களை வருந்தியழைக்கிறார் (மத். 11 : 28). நமது வாழ்வின் எல்லா தேவைகளையும் அவர் திருவடிகளில் ஊற்றிவிடுவோம்.

## 3. இறை தேறுதல் பெற்றார் : 1 : 17,18

கடவுள், உடைந்த உள்ளத்தை அங்கீகரிப்பார் (திபா. 51 : 17), உள்ளங்களை ஆராய்ந்து அறிபவர் (Iகுறி. 28 : 9) என்பதை அறிந்திருந்த அன்னாள் தம்மையும் அவர் உற்று நோக்கிக் கொண்டிருக்கிறார் என்பதை உணர்ந்து அவரோடு பேசுகிறார். இதய உணர்வுடன் அவர் பேசுவது மனிதர்களுக்குக் கேட்கவில்லை மாறாக ஆண்டவருக்குக் கேட்கிறது. காரணம் ஆர்ப்பாட்டங்களிலும் ஆரவாரங்களிலும் அல்ல; அமைதியான, மெல்லிய தென்றலில் ஆண்டவரின் குரல் கேட்ட எலியா போன்று (Iஅர. 19 : 12) அமைதியான நிலையில் அன்னாள் ஆண்டவரிடம் பேசுகிறார் தேவையைச் சொல்கிறார். எங்கெல்லாம் ஆண்டவரின் பிள்ளைகள் வேதனைகளோடு, துக்கம் தொண்டையை அடைத்துக் கொண்ட நிலையில் வார்த்தையால் விவரிக்க முடியாதபடி பெருமூச்சுகளை எழுப்புகின்றனரோ அங்கெல்லாம் அவர்களது சத்தத்தைக் கேட்கிறார் (விப. 3 : 7). அன்னாள் அமைதியாய் இறைபாதத்தில் மன்றாடினார்; நிறைவோடு இல்லம் சென்று தம்முடைய வாழ்வில் சாமுவேலைப் பெற்று மீண்டும் இறைபாதம் வந்த சன்றி செலுத்தினார் (Iசாமு. 1:28)

புதிய மாதத்தில் அடியெடுத்து வைத்துள்ள நாம் ஒவ்வொருவரும் தவறாது இறைபாதம் வந்து, நமது இதயத்தை ஊற்றி, இதயத்தை அறியும் ஆண்டவரோடு கருத்தோடு மன்றாடி, மன்றாட்டைக் கேட்கும் கடவுளின் சமூகத்திலிருந்து நன்மைகளைப் பெற்று வாழ்வோமாக.

அருள்திரு. **A. பிரைட் சாலமோன்**

**01-04-2011**

*லெந்துகால நான்காம் வெள்ளி*

# சிலுவையிலறையப்படும் கிறிஸ்துவினுடையவர்கள்

கலா. 5:16-26

*"கிறிஸ்து இயேசுவுக்கு உரியவர்கள் தங்கள் ஊனியல்பை அதன் இழிவுணர்ச்சிகளோடும் இச்சைகளோடும் சேர்த்துக் சிலுவையில் அறைந்து விட்டார்கள்." கலாத். 5:24*

மகாராஷ்டிரா மாநிலத்தில் கட்டப்பாடா பகுதியில் ரோஸ்மாஸ் கிராமத்தில் தாபுபாய், என்பவர் ஆண்டவரை ஏற்றுக்கொண்டதால் அக்கிராமத்தார் வீடு, நிலம் அனைத்தையும் எடுத்துவிட்டு அவரை குடும்பத்தோடு ஊரைவிட்டு விரட்டியடித்தனர். உள்ளூர் காவல்துறையில் புகார் கூறியும் கண்டு கொள்ளவில்லை. தற்போது மைனாரிட்டி கமிஷன் வாயிலாக காவல்துறை விசாரணை நடத்திக் கொண்டிருந்தாலும் அந்த குடும்பத்தின் பற்றுறுதி பெரியது.

பவுலடிகளார் கலாத்தியர் 5 : 24-ல் கிறிஸ்து இயேசுவுக்குரியவர்கள் தங்கள் ஊனியல்பை அதன் இழிவுணர்ச்சிகளோடும் இச்சைகளோடும் சேர்த்து சிலுவையில் அறைந்துவிட்டார்கள் என்கிறார். தாபுபாய் கிறிஸ்துவோடு உலகத்தின் ஊனியல்புகளையும் அதன் இச்சைகளையும் சிலுவையில் அறைந்து விட்டமையால் உலக துன்புறுத்துதலையும், இழப்புகளையும் குறித்து சோர்ந்து போகாமல் விசுவாசத்தில் உறுதியாயிருக்கிறார்.

பவுலடிகளார், இயேசுகிறிஸ்துவின் அடியவர்கள் ஊனியல்பையும் அதன் ஆசை இச்சைகளையும் விட்டுவிட்டு தூய ஆவியின் கனியினை வெளிப்படுத்துவார்கள் என்கிறார்.

## 1. ஊனியல்பும் அதன் இச்சைகளும்

கலா. 5 : 19-21 வசனங்களில் சில ஊனியல்பு சார்ந்த இச்சைகளை பவுலடிகளார் பட்டியலிடுகிறார். கொலோ. 3 : 5-14, ரோமர் 1 : 29-31, Iகொரி. 6 : 9,10 ஆகிய பகுதிகளில் இதை போன்ற பட்டியல்கள் உண்டு. பவுலடிகளார் ஊனியல்பின் இச்சைகள் என கூறுவது முழு ஆள்தத்துவத்தை சீர்கெடுக்கும் மனித சீர்கேடுகள் ஆகும். இதனை மூன்று பகுதிகளாக பிரிக்கலாம்.

1. பால் உறவு சார்ந்தவை - விபச்சாரம், அசுத்தம், காமவெறி
2. சமயம் சார்ந்தவை - சிலை வழிபாடு, பில்லிசூனியம்
3. சமுதாயம் சார்ந்தவை - பகைமை, சண்டை, சச்சரவு, பொறாமை, சினம், கட்சி மனப்பான்மை, பிரிவினை, சமய பிளவு, அழுக்காறு, குடி வெறி, களியாட்டம்

இவையெல்லாம் இறையரசிற்கு மாறானவை. கடவுளின் அன்பின் சட்டத்திற்கு எதிரானவை, மனிதனை தீயோனுக்கு அகற்ற முடியாது. மாறாக கடவுளின் ஆவியாரே அவைகளை அகற்றி மனிதனை மீட்க முடியும்.

இத்தகு தீச்செயல்களால் நம்மில் நாமே உறவு சீர்கெட்டு ஏன் வாழ்கிறோம் ? என்கிற விரக்தியும், தீச்செயலுக்கு அடிமைப்பட்டு வாழும் வாழ்க்கையும் மேலோங்குகிறது. நம்மிலே உள்ள ஒருமைப்பாடு சீர்குலைகிறது.

## 2. ஆவியாரின் கனி

கலா. 5 : 21-23 வசனங்களில் பவுலடிகளார் ஆவியாரின் கனி என ஒன்பது பண்புகளை சுட்டிக்காட்டுகிறார். அன்பு, மகிழ்ச்சி, அமைதி, பொறுமை, பரிவு, நன்னயம், நம்பிக்கை, கனிவு, தன்னடக்கம் இவை அனைத்தையும் இணைத்து ஆவியாரின் கனி என்று ஒருமையிலேயே பவுலடிகளார் கூறுகிறார். ஊனியல்பு செயல்கள் ஒருமைப்பாட்டை உணர்த்தாது. எனவே ஊனியல்பு செயல்களை பன்மையில் குறிப்பிடுகிறார் ஆசிரியர். ஆவியாரால் நடத்தப்படுபவர்களே இயேசுநாதரின் அன்பினை தன் வாழ்க்கையின் மையமாகக் கொண்டுள்ளதால் அவரில் ஒருமைப்பாட்டினை காணமுடியும். எனவேதான் ஆசிரியர் ஆவியின் கனி ஒன்பது குணங்களையும் இணைத்து கூறுகிறார்.

ஆவியின் கனி மேலோங்கும் போது உலகீகம் ஊனியல்பு ஆகியவை சிலுவையில் அறையப்பட்டு அடங்கிப் போகிறது.

இன்றைய உலகமயமாதல் கோட்பாடு உலகில் எல்லாமே பணத்தை முதன்மைப்படுத்தியே நடைபெறகிறது. முதலாளித்துவத்தின் லாப நோக்கு சார்ந்த உலக சந்தையால் பணம் முதன்மை பெறுகிறது. குணம் பின்னுக்குத் தள்ளப்படுகிறது. தாராள மயமாக்குதலினால் சீர்கேடுகள் மலிந்துள்ளன. தகாத உறவுகள், தகாத உணவுகள், தகாத களியாட்டங்கள் என்று சீர்கேடுகள் எங்கும் வளர்ந்துள்ளன. சமூக நிலையில் ஏழைகள் இன்னும் ஏழையாகிகொண்டேயிருக்கின்றனர். செல்வர்கள் இன்றும் செல்வத்தை குவிப்பதிலே குறியாயிருக்கின்றனர். உலகளாவிய நிலையில் முதல் உலக நாடுகள் மூன்றாம் உலக வளரும் நாடுகளை, வளராத நாடுகளை வளரவிடாமல் முட்டுக்கட்டை போடும் நிலையிலுள்ளனர். அதே வேளையில் அதிகபடியான நுகர்வு கலாச்சாரத்தினால் புவி வெப்ப அதிகரிப்பும், அதன் காரணமாக நிர்ணயமற்ற தட்ப வெப்ப நிலையும் இன்று உலகத்தின் எதிர்காலத்தையே கேள்விக் குறியாக்கி உள்ளது.

இத்தகு சீர்கேடுகளிலிருந்து மாற்றம் பெற உலகீகத்தினின்றும், ஊனியல்பு இச்சைகளிலிருந்தும் விடுதலையாகி கிறிஸ்துவோடு சிலுவையில் அறையப்படும் மாற்றம் தேவையாகிறது. சமூக கேடுகள் மறையும்போது பொது நலமும், தியாகமும் மலர்ச்சிபெறும். அங்கே இயற்கையோடும் இறைவனோடும் இணைந்து வாழுவோம். இறைமாட்சி பெற வாழுவோம்.

அருள்திரு. **A. ஜெபகுஜி**

**03-04-2011**

*உயிர்த்தெழுந்த திருநாளுக்கு முன்வரும் மூன்றாம் ஞாயிறு*

# கிறிஸ்துவில் புதிய சமூகம்

## NEW COMMUNITY IN CHRIST

நீத. 4:4-10 கலாத். 3:19-29

திபா. 89:1-16 மத். 9:9-17

*"கிறிஸ்து இயேசுவின் மீது கொண்டுள்ள நம்பிக்கையால் நீங்கள் அனைவரும் கடவுளின் மக்களாய் இருக்கிறீர்கள்." கலாத். 3:26*

**மன்றாட்டு : வாழ்வை வளமாக்கும் கடவுளே, உம்தொடர் அழைப்பு எம்மை அசைக்கிறது. உமது அழைப்புக்கு செவிமடுத்து, கிறிஸ்துவுக்குள் புது சமூகமாகி சமாதானத்தின் முன்னோடிகளாய் செயல்பட அருள்தாரும். அதன் வாயிலாய் அருட்செய்தி தொண்டர்களாய் எமை அர்ப்பணித்து தைரியமாய் ஒப்புரவாக்குதலையும், சமாதானத்தையும் பூமியின் எல்லைகளெல்லாம் அறிவிக்க ஆற்றல்படுத்த வேண்டுமென அரவணைக்கும் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் திருப்பெயரில் வேண்டுகிறோம். - ஆமென்.**

சமூகம் (Community) என்பது ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஒரு குறிப்பிட்ட நோக்கத்தோடு ஒட்டு மொத்த மக்களின் நலனுக்காக உழைத்து வாழ்கின்ற மக்களின் கூட்டமாகும். ஒவ்வொரு சமூகத்தினுள்ளும் பகிர்தல், பொருட்களை பொதுவாக அனுபவித்தல் போன்ற நிலைப்பாடுகளும் காணப்படும். Community என்ற சொல்லை come+unity என்று பிரித்துப் பார்த்தால் ஒற்றுமையோடு வருதல் என்ற பொருளைக் கொடுக்கிறது. சமூகத்தின் எல்லா குணங்களையும் உள்ளடக்கிய கிறிஸ்துவை தலைவராகக் கொண்டு அவரது தகவுகளை தன்னகத்தே கொண்டுள்ள சமூகமே கிறிஸ்துவுக்குள்ளான சமூகம். திருச்சபை உருவான தொடக்க காலத்தில் இந்நிலை நிலவியதாக அப். 2:44 கூறுகிறது.

கிறிஸ்துவுக்குள்ளான புதிய சமூகம் எப்படிப்பட்டது என்பதை சிந்திப்போம்.

### *1. ஏற்ற தாழ்வற்ற சமுதாயம்* (கலாத். 3:28)

பவுலடிகளார் கருத்துப்படி கிறிஸ்துவுக்குள்ளான சமூகம் ஏற்றத் தாழ்வில்லாதது என்கிறார். அவர் வாழ்ந்த சமுதாயத்தில் பல்வேறு ஏற்றத்தாழ்வுகள் இருந்தன. அவை யூதன் கிரேக்கன், அடிமை சுயாதீனன்

ஆண், பெண் போன்ற நிலையிலிருந்தன. ஆனால் கிறிஸ்துவுக்குள்ளான புதிய சமூகத்தில் உயர்ந்தவன், தாழ்ந்தவன், பெரியவர், சிறியவர், அதிகாரி, பணியின் ஆளுகிறவன் ஆளப்படுகிறவன் போன்ற நிலைகளுக்கிடையே வேற்றுமைகள் இல்லை. மாற்கு 10:43-45-ல் இயேசு நாதர் தமது சீடர்களுக்கு இவ்விதம் கற்பிக்கிறார். புற இனத்தாருக்கு அதிகாரிகளாக எண்ணப்பட்டவர்கள் இறுமாப்பாய் ஆளுகிறார்கள். பெரியவர்கள் அவர்கள் மேல் கடினமாய் அதிகாரம் செலுத்துகிறார்கள். ஆனால் நீங்கள் அவ்விதம் இருக்கக் கூடாது. உங்களில் பெரியவனாயிருக்க விரும்புகிறவன் எல்லோருக்கும் பணியாள். ஆளுகிறவன், ஆளப்படுகிறவன் போன்ற நிலைகளுக்கிடையே வேற்றுமைகள் இல்லை. மேலும், இயேசு நாதர் தம்மைத் தாமே கூறும் பொழுது ஊழியங் கொள்ளும்படி வராமல் ஊழியம் செய்ய வந்தேன் என்று கூறினார். அதனை சாதாரண செயல்கள் வாயிலாக கூட செய்து காண்பித்தார். இன்று நமது திருச்சபையில் இப்படிப்பட்ட ஏற்ற தாழ்வு நிலை காணப்படுகின்றதா? திபா. 89:14 கூறுகின்ற நீதியும் நியாயமும் எல்லா தரப்பினருக்கும் ஒன்றாக காணப்படுகின்றதா? கேள்வி எழுப்புவோம்.

## 2. எளியவர்களை மையம் கொண்ட சமுதாயம் (மத். 9:13-14)

இயேசு நாதர் தாம் வாழ்ந்த காலத்தில் சமுதாயம் உதவாதவர்கள் என்று ஒதுக்கியவர்களை தமக்கு முதன்மையானவர்களாக தெரிந்து கொண்டார். கிறிஸ்துவுக்குள்ளான புதிய சமூகமும் அதைத்தான் செய்யும். மத். 9:20-ல் பல ஆயக்காரரும், பாவிகளும் வந்து இயேசுவோடும் அவரது சீடரோடும் பந்தியிருந்தார்கள் என்று சொல்லப்பட்டுள்ளது. ஆயக்காரர்கள் என்பவர்கள் ரோம அரசாங்கத்தின் அடியாட்களாக இருந்து தங்கள் சொந்த மக்களிடமிருந்து வரி பிரித்து அனுப்பியதால் ஒதுக்கப்பட்டிருந்தார்கள். ஆனால் இயேசுநாதர் மத். 9:9-ல் ஆயத்துறையில் உட்கார்ந்திருந்த மத்தேயுவை அவற்றை விட்டு விட்டு தமது சீடனாக பின் வரும்படி அழைத்தது ஒரு வித்தியாசமான புரிந்து கொள்ளுதலை தருகிறது. மேலும் கிராமத்து ஏழைகள், உழைப்பாளிகள், மீன்பிடித் தொழில் செய்வோர், தோல் சம்பந்தமான தொழில் செய்வோர், கிராமத்து கைவினைஞர்கள், சமாரியர், யூதரல்லாதோர், உடல் ஊனமுற்றோர். சமயச் சட்டங்களை எழுத்தின்படி கடைபிடிக்காதோர் எல்லோரும் பாவிகள் என்று அழைக்கப்பட்டிருந்தார்கள். சமயவாதிகள் இவர்கள் கடவுளின் சாபத்தால் தான் இவ்விதம் துன்புறுகின்றனர் என்றும் அவர்கள் பாவிகள் என்றும் தவறாக விளக்கினர். ஆனால், இயேசுநாதர் இவற்றையெல்லாம் தூக்கியெறிந்து விட்டு நீதிமான்களையல்ல

பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்க வந்தேன் என்று கூறுகிறார். பரலோக இராஜ்யம் ஆவியில் எளிமையுள்ளவர்களுடையது (மத். 5:3) என்றார் இயேசு. கிறிஸ்துவுக்குள்ளான புதிய சமூகமும் எளியவர்களை மையம் கொண்டதாக இருக்கிறது. திருச்சபை அத்தகைய பணிகளில் மையங்கொண்டுள்ளதா?

### 3. என்றென்றும் நிலை நிற்கும் சமுதாயம் (சங். 89:4)

கிறிஸ்துவுக்குள்ளான புதிய சமுதாயம் என்றென்றைக்கும் நிலை நிற்கக் கூடியது. கர்த்தர் தாவீது அரசரோடு உடன்படிக்கை பண்ணினார். உன் வீடும் உன் இராஜ்யமும் என்றென்றைக்கும் நிலை பெற்றிருக்கும் (1 சாமு 7:16) என்ற அவருடைய வார்த்தை திபா. 89:4-லும் சொல்லப்பட்டுள்ளது. புதிய ஏற்பாட்டில் தாவீதின் சந்ததியில் தோன்றியவர் இயேசு கிறிஸ்து என்று புரிந்து கொள்ளப்பட்டது. இயேசு கிறிஸ்துவின் சிங்காசனம் என்றென்றும் நிலைநிற்கும். எனவே அவரை உள்ளடக்கிய புதிய சமூகமும் என்றென்றும் நிலைநிற்க கூடியது. ஏசாயா 9:7-ல் ஏசாயா தீர்க்கன் அவருடைய அரசு என்றென்றும் நிலைநிற்கின்ற ஒன்று என்று முன்னுரைத்துள்ளார். நேபுகாத் நேச்சார் என்ற பாபிலோனின் அரசன் என் வல்லமையால் என் பராக்கிரமத்தால் என்று பெருமை கொண்டபோது அவரை கடவுள் மனுஷனிடத்திலிருந்து தள்ளி, புத்தி அவருக்குள் திரும்பி வருமட்டும் அவரை கடினப்பாடுகளுக்குட்படுத்தினார். அதன் வழியாக அவர் கடவுளின் ஆட்சியே நித்தியமானது, அவரது ஆட்சி தலைமுறை தலைமுறையாக நிற்கும் என்று புரிந்து கொண்டார் (தானி. 4:34). அவருக்குள் உருவாகிய சமுதாயமும் என்றென்றும் நிலைநிற்கும். இதில் ஏற்கனவே அங்கம் வகித்துள்ளவர்கள் மென்மேலும் விரிவடைய உண்மையுள்ள பணியாளராய் விளங்கவேண்டும். இதில் சேர விரும்புகிறவர்கள் ஏற்ற தாழ்வற்ற சிந்தனைகளை தனக்குள் நிலைப்படுத்தி இறையரசின் தகவுகளை தனக்குள் உருவாக்கி கொள்ள வேண்டும். ஞானமுள்ள மகன் இந்த அழியாத சமூகத்தினுள் நிலைபெற்றிருப்பான்.

திருச்சபையாக இத்தகு சமுதாயத்தை அமைப்போம்.

அருள்திரு. **கு. சாம் ரிச்சர்டு நெல்சன்**

**06-04-2011**

*லெந்துகாலம் நான்காம் புதன்*

# பணியாளரின் தாழ்மை

ஏசா. 52:13-53:3.

*"…..அவர் இழிவு படுத்தப்பட்டார் அவரை நாம் மதிக்கவில்லை" ஏசா. 53:3*

துன்புறும் ஊழியர், மக்களுக்காக துன்பத்தை ஏற்றுக் கொள்ளும் போது அவரது நிலை எங்ஙனம் அமைந்திருந்தது என இங்கே சொல்லப்படுகிறது. இந்த பணியாளர் சிறப்புக்குரியவர், மேன்மைபடுத்தப்பட்டு உயர்த்தப்பட்டு மாட்சியுறுகிறவர் (ஏசா. 52:13) ஆனால் அவர் தாழ்மையுடையவராயிருக்கிறார். பணியாளரின் தாழ்மையினைக் கண்ட பலர் பிரமிப்படைந்ததாக (ஏசா. 52:14) காணமுடிகிறது. தாழ்மையினை உருவாக கொண்டவர், தாழ்மையின் பணியினை நிறைவேற்றி, மக்களை மீட்கிறவராக தோற்றமளிக்கிறார். இச்சூழலில் இயேசு கிறிஸ்துவை பணியாளரின் தாழ்மையோடு ஒப்பிடுகையில், பிலிப்பியர் 2:6-8 இல் அவர் கடவுளுக்கு இணையானவர் கடவுளின் தன்மையுடையவர், கடவுளின் சாயலுடையவர், கீழ்படிந்தவராகி சிலுவையில் தன்னைத் தாழ்த்தினார். பணியாளர் தாழ்மையின் அடையாளம், அத்தாழ்மையினை நாம் தரிக்கவேண்டும். பணியாளரின் தாழ்மையினை அடையாளம் காண்பதெப்படி?

### 1. *உருக்குலைந்த தோற்றமேற்றார் :* (ஏசா. 52:14)

பணியாளரது தாழ்மையினை அவரது உருக்குலைந்த தோற்றம் வாயிலாக அடையாளம் காண முடிகின்றது. உருக்குலைந்ததால் மனித சாயலும், மனித உருவத்தையும் இழக்கின்றார் (52:14). உருக்குலைந்த தோற்றத்தினால் மக்கள் விரும்பக்கூடிய தோற்றம் அவருக்கில்லை (52:2) மனித சாயலை உடையவர், உருக்குலைந்ததால் அதனை இழந்து, கொடூரமாக, அலங்கோலாமாக காட்சி தருகிறார். இந்த உருக்குலைந்த தோற்றம் அவரது வெற்றியினை உணர்த்துகிறது. அதனை தோல்வி எனக் கருதக்கூடாது. உருக்குலைந்த தோற்றத்தின் வாயிலாகத் தமது தாழ்மையினை வெளிப்படுத்தி, மக்களை மீட்கும் மீட்பராகிறார்.

இயேசுவிலும் இத்தகைய உருக்குலைந்த தோற்றத்தினை நாம் காண்கிறோம். நாம் உருவத்தை பெற்றிட அவர் தமது உருவத்தை இழந்தார். இன்று உருக்குலைந்த நிலையில் வாழும் மக்களோடு அவர்

தன்னை இணைந்து, அவர்கள் தங்கள் தோற்றத்தினை திரும்ப பெற்றிட காரணராகிறார். சிலுவையில் தொங்கின இயேசுவில் கேடடைந்த முகம், உருக்குலைந்த தோற்றம், அழகின்மை, விரும்பும் ரூபம் இன்மை இவைகளைக் காண்கிறோம். இது கிறிஸ்துவிலே நாம் காண்கிற தாழ்மையின் தன்மையாகும். இன்று சிலுவையில் உருக்குலைந்த தோற்றமுள்ள கிறிஸ்துவை நாம் காணாமல், சிலுவையில் கிறிஸ்துவை செழுமையுடையவராய் காண்கிறோம். உருக்குலைந்த தோற்றமுடைய கிறிஸ்து மட்டுமே உருக்குலைந்த நமது வாழ்வில் உருவம் தரமுடியும். ஆகவே அத்தாழ்மை தன்மையினை நாம் சொந்தமாக்குவோம்.

### 2. உயர்நிலையை இழந்தார் : (ஏசா. 53:3)

சுய மரியாதையுடன் வாழும் வாழ்வை அனைவரும் விரும்புகிறோம். சுய மரியாதையில்லாதவர்கள் வாழ்வதை விரும்புவதில்லை. துன்புறும் பணியாளர் இகழப்பட்டார், இழிவுபடுத்தப்பட்டார், அல்லது அசட்டைப் பண்ணப்பட்டார். ஆகவே அவரது சுயமரியாதையை இழந்தார் என நாம் அவரை மதிக்கவில்லை (53:3) என அறிகிறோம். சுயமரியாதை இழந்த நிலையிலும் அவர் கோபம் கொள்ளாமல் தாழ்மையுடன் காணப்படுகிறார். தனது சுய மரியாதையினை இழந்து இன்னொரு சாரார் சுய மரியாதையோடு வாழ்வதற்கு உதவிச் செய்கிறார். பாபிலோனில் சுயமரியாதை இழந்து வாழ்ந்த இஸ்ரவேலர், தங்களது சொந்த இடத்தில் சுயமரியாதையுடன் வாழ, பணியாளர் அவரது சுய மரியாதையினை இழக்க வேண்டிய அவசியமில்லை ஆனால் இழந்து இறைவாக்கு நிறைவேற காரணமானார்.

இயேசு கிறிஸ்து "யூதன்" என்ற சமூக அடையாளத்துடன் சுய மரியாதையோடு வாழ விரும்பாமல், அன்றைய சமூக பொருளாதார அரசியல் சமய நிலைகளில் சுயமரியாதையின்றி வாழ்ந்த மக்கள் தங்களின் சுயமரியாதையினைப் திரும்ப பெற்றிட பணியாற்றினார், உரோம அரசால் சமூககொடுமைகளை நிறைவேற்றின குற்றவாளிகளுக்கு கொடுக்கும் கொடூரத் தண்டனை சிலுவை, சிலுவையில் அறையப்பட்டவன் சபிக்கப்பட்டவன், சுயமரியாதை இழந்தவன் எனும் புரிந்து கொள்ளுதலின் சூழலில், சுய மரியாதையுடன் வாழ்ந்திட துணை புரிகிறார். நாமும் தாழ்மையுடையவர்களாய் வாழ்ந்து, சுயமரியாதையில்லாதவர்களாய் வாழ்கிறவர்கள் உரிமைப் பேறு நிலையினை அடைய உழைப்போம்.

### 3. உலக மானிடராய் புறக்கணிக்கப்பட்டார் :

சுயமரியாதையினை இழந்து இகழப்பட்ட நிலையில் துன்புறும் பணியாளர் மனிதரால் புறக்கணிக்கப்பட்டார். அவர் புறக்கணிக்கப்பட

காரணம் அவரது அழகும், சரீர தோற்றமும் வேதனை, மற்றும் நோயினால் நலிவடைந்தது அவரைக் காண்பவர்கள், அவரை பார்க்ககூடாமல் கண்களை மூடும் நிலையில் அவரது முக அழகு கெட்டிருந்தது. துன்புறும் மக்களின் துயர் துடைக்கும் பணியினால் தன்னழகை இழந்தவரை மக்களே ஒதுக்கி விடுகின்றனர், ஏளன பொருளாக கருதினர். இன்றும் துன்பத்தினால், நோயினாலும், ஒடுக்குதலினாலும் அழகிழந்தவர்கள் புறக்கணிக்கப்பட்ட மக்களோடிருக்கிறார் எனும் சவால், அவர்களை அரவணைக்க தூண்டுகிறது.

இயேசுவும் தமது சொந்த ஊரில் புறக்கணிக்கப்பட்டபோது அதை தாழ்மையோடு ஏற்றார். ஆனால் புறக்கணித்த மக்களை அவர் புறக்கணிக்கவில்லை. புறக்கணிக்கப்பட்டவர்களை மீட்பதற்காக சிலுவையின் துன்பங்களை ஏற்றுக் கொண்டார். சிலுவைப்பாடுகளை தாழ்மையோடும், பொறுமையோடும் ஏற்றுக் கொண்டு, புறக்கணிக்கப்பட்ட சூழலிலும் மெய் வாழ்வின் உறுதி உண்டெனும் நம்பிக்கையினை நமக்கு தருகிறார்.

அருள்திரு. **A. மகேர் ஷால் அஸ்பாஸ்**

*கிறிஸ்துவின் மனிதத்துவம்; அவர் மாம்சத்தில் வந்தார் என்ற உண்மை எல்லா மனித அறிவுக்கும் அப்பாற்பட்ட புதிராயிருக்கிறது.*

மார்டின் லூத்தர்

**08-04-2011**

*லெந்துகால ஐந்தாம் வெள்ளி*

# இயேசுகிறிஸ்துவின் சிலுவையே மேன்மை

கலா. 6:11-18

*"நானோ நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் சிலுவையை அன்றி, வேறு எதையும் பற்றியும் ஒருபோதும் பெருமை பாராட்ட மாட்டேன்." கலாத்தியர் 6:14*

சிலுவை ரோமானியர்கள் அரசியல் மற்றும் குற்றவாளிகளை தூக்கும் கொலை கருவி. நம் நாட்டின் தூக்கு கயிறு போன்றது. அத்தகைய சிலுவையில் அறையப்பட்ட இயேசுநாதர் என் ஆண்டவர், அவரினாலேயே மீட்பு என்பதில் பவுலடிகளார் உறுதியாயிருக்கிறார். பவுலடிகளார் ஒரு யூதன் என்கிற முறையில் மேன்மைகொள்ள பல காரியங்கள் உண்டு. அவை எல்லாவற்றையும் பார்க்கிலும் இயேசுகிறிஸ்துவின் சிலுவையே எனக்கு மேன்மை என்கிறார்.

கிறிஸ்துவின் சிலுவை குறித்து அவரோடு சிலுவையில் அறையப்பட்ட கள்வனின் சாட்சி முக்கியமானது. "நாமோ நியாயப்படி தண்டிக்கப்படுகிறோம். ஆனால் இவரோ இதற்கான குற்றங்கள் ஒன்றும் செய்யவில்லையே !" ஆக குற்றங்கள் செய்யாத பட்சத்தில் பிறருக்காய் வாழ்ந்ததினால் தியாகமாய் ஏற்றுக்கொண்ட சிலுவை, அதுவே கிறிஸ்துவின் சிலுவை. அத்தகைய சிலுவையே தனக்கு மேன்மை என்று பவுலடிகளார் கூறுகிறார். ஆக நற்செய்தியினிமித்தம் நீதிக்காக (கிறிஸ்துவுக்காக) தன்னை தியாகிப்பதினாலே வரும் துன்பம் எனக்கு மேன்மை என்று பவுலடிகளார் தைரியமாக கூறுகிறார். ஒருவேளை இத்தகு தைரியம் உயிர்த்த ஆண்டவர் கூறினாரே நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே, "முள்ளில் உதைக்கிறது உனக்கு கடினமாம்" என்ற கிறிஸ்துவின் பாடுபடும் அனுபவத்தினின்று பவுலடிகளார் பெற்றிருக்கலாம்.

இந்த கூற்று பவுலடிகளாரின் இருவித நிலைப்பாடுகளை நமக்கு விளக்கிக் காட்டுகிறது.

(i) கிறிஸ்துவில் பற்றுறுதியைக் காட்டுகிறது.

(ii) புதுவாழ்வு பெறுதலை சுட்டுகிறது.

## 1. கிறிஸ்துவில் பற்றுறுதி கொள்ளல் :

உண்மை கிறிஸ்தவனின் சார்பு கிறிஸ்துவே. பவுலடிகளார் நியாயப்பிரமாணத்திற்கு கீழ்ப்பட்டவர் என்பதை விட்டுவிட்டு கிறிஸ்துவில் கொள்ளும் பற்றுறுதிக்கு கீழ்ப்பட்டவர் என்பதில் உறுதியாயிருந்தார். கிறிஸ்துவில் கொள்ளும் பற்றுறுதியில் அவர் மேன்மையாகக் கொள்வது சிலுவையே. ஏனெனில், சிலுவை அல்லது துன்பத்தை ஏற்கும்

கிறிஸ்துவையே பவுலடிகளார் தனது மனமாற்றத்திற்கு காரணமாகக் கொண்டுள்ளார். "நீ துன்பப்படுத்தும் இயேசு நானே" என்ற வார்த்தையால் கிறிஸ்து யார் ? என்பதில் பவுலடிகளார் தெளிவு கொள்கிறார். நீதிக்காக துன்பத்தை ஏற்பவரே கிறிஸ்து என்பதையும், நீதிக்காக துன்புறுபவர்களோடு துன்புற்று உடனிருப்பவர் என்பதையும் உணர்கின்றார் பவுலடிகளார்.

உலகைப் பற்றிக்கொண்டு உல்லாச வாழ்வு வாழ்ந்து சடங்குகளை மட்டும் மேற்கொள்பவர் கிறிஸ்துவுக்குரியவர்கள் அல்லர். கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டேன் என்று சொல்லி சடங்காச்சாரங்களை மேற்கொண்டுவிட்டு வாழ்க்கையில் மனம்போல வாழுபவர்கள், பிறரைக் குறித்தோ, சமூகத்தைக் குறித்தோ, அக்கறையில்லாதவர்கள், சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவுக்கு புறம்பானவர்கள், முரண்பட்டவர்கள்.

ஆனால் உலகீக ஆடம்பரங்களால் சிலுவை சுமந்து (நீதிக்கான போராட்டத்தில் துன்பங்களை ஏற்று) வாழ்பவர்கள் கிறிஸ்துவின் பற்றுறுதியாளர்கள். இத்தகைய பற்றுறுதியும் நிலைப்பாடுமே பவுலடிகளாரை இயேசுகிறிஸ்துவின் சிலுவையே எனக்கு மேன்மை என உறுதிபட வைத்தது.

## 2. கிறிஸ்துவில் புதுவாழ்வை பெறுதல் :

இயேசு கிறிஸ்துவின் சிலுவையே மேன்மை என்பதில் பவுலடிகளாரின் புதுவாழ்வு புலனாகிறது. அவருடைய பழைய வாழ்வில் சிலுவை என்பதுவே சாபம், தகாத ஒன்று என்றிருந்தார். எனவே தான் தனது கருத்துக்கு ஒத்துவராத மற்றவர்களுக்கு (கிறிஸ்தவர்களுக்கு) சிலுவையை (துன்பத்தை) கொடுக்க வேண்டும் என்றிருந்தார்.

மட்டுமல்லாது தனது பிறப்பு (யூதன், பரிசேயத்துவம்), வளர்ப்பு (விருத்தசேதனம், கல்வி), தனது குடியுரிமை இவைகளைக் குறித்தெல்லாம் பெருமை கொண்டிருந்தார்.

ஆனால் புதிய வாழ்க்கையில் புதிய பார்வை பெற்றார். பிறருக்கு துன்பம் கொடுப்பதில் இன்பம் கண்ட அவர், பாடுகளை ஏற்றக்கொள்ளவும், அதில் சோர்வுறாமல் முன்னேறிச் செல்லவும் கற்றுக் கொண்டுள்ளார். காரணம் நீதிக்காய், தியாகமாய் துன்புற்ற இயேசு நாதர் அவருக்குள் மாதிரியாக இருக்கின்றார். "நாங்கள் எப்பக்கம் நெருக்கப்பட்டும் ஒடுங்கிப் போவதில்லை" என்கிற அவருடைய வாசகம் இதை மெய்ப்பிக்கிறது. அவரது மூன்று மிஷனெறி பயணங்களும், இறுதியில் ரோம பயணமும் அதற்கு சான்றாக நிற்கிறது.

கிறிஸ்துவில் வைத்திருக்கும் மாறா பற்றுறுதியால் வரும் புதுவாழ்வு நிலை வாழ்வுக்கு நேராய் நடத்தும் என்பதில் உறுதி பெற்றவராய் கிறிஸ்து இயேசுவின் சிலுவை எனக்கு மேன்மை என்கிறார். இந்த சிலுவையில் அன்பு இருந்தது, தாழ்மை இருந்தது, மன்னிப்பு இருந்தது, தியாகம் இருந்தது. அதையே நாமும் கொண்டு வாழ கிறிஸ்து இயேசுவில் இருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக் கடவது என்கிறார் (பிலிப். 2 : 5) ஆமென்.

அருள்திரு. **A. ஜெபகுஜி**

**10-04-2011**

*உயிர்த்தெழுந்த திருநாளுக்கு முன்வரும்*
*2-ம் ஞாயிறு*

# சிலுவையும் துன்புறும் மானிடமும்

**CROSS AND THE SUFFERING HUMANITY**

எரே. 8:18- 22 — 2கொரி. 4: 7-12

திபா.73 — மாற். 10: 35-52

*"என் மகளாகிய மக்களுக்கு ஏற்பட்ட முறிவு எனக்கே ஏற்பட்டதாகும். நான் துயருகிறேன். திகில் என்னை பற்றிக் கொண்டுள்ளது." (எரே. 8:21)*

**மன்றாட்டு :** வாழ்வு வழங்கும் கடவுளே, புறக்கணித்து ஓரங்கட்டப்பட்டிருந்த படைப்புகளை உமது திருமைந்தரும் எங்கள் ஆண்டவருமாகிய இயேசுகிறிஸ்து சிலுவையில் மாண்டதால் விடுவித்திருக்கிறீர். அவர் சிலுவையில் பாடுகளை ஏற்றதன் வாயிலாய் புறக்கணிப்பின் துயரிலிருப்போருடன் தம்மை அடையாளப்படுத்தியுள்ளார். நாங்கள் இப்பேருண்மையினை உணர்ந்து நம்பிக்கையுடன் தீமை, அடக்குமுறை, அநீதி ஆகியவற்றை எதிர்கொள்ளவும் சிலுவை சார்ந்து மானுடத்தை விடுதலைக்கு வழிநடத்தவும் ஊக்கமருள வேண்டுமென ஆற்றல்படுத்தும் ஆண்டவர் இயேசுகிறிஸ்து வழி மன்றாடுகிறோம்.
- ஆமென்.

சிலுவை அது பாடுகளின் சின்னம். மனிதர்களுக்காக துன்பங்களை ஏற்க வருபவரே இயேசு என்பதை உறுதிபடுத்தி துன்புறும் ஊழியன் என்று ஏசாயா இறைவாக்குனர் முன்னுரைத்தார் (ஏசா. 53: 5-12). இயேசுவின் துன்புறுதல் அல்லது சிலுவை சுமத்தல் ஏதோ கடந்த காலத்தின் ஓர் சம்பவமாக மாத்திரமல்ல, இன்றும் அவருடைய அனுபவமும் அதுவே. துன்புறும் மனிதருக்காக துன்புறுதல் பிதாவுக்கு செய்யும் சேவையாக கண்ட இயேசு (மத். 16: 21-23) துன்புறுதலையே தெரிந்தார்.

## 1. பாவத்தின் கடினத்தை ஏற்கிறார் :

கடவுள் மனிதனைப் படைத்தபின் ஏதேன் தோட்டத்தின் நடுவிலுள்ள மரத்தின் கனியை புசியாதிருப்பதின் மூலம் அவன் கடவுளிடம் கீழ்படியும் பதிலை எதிர்பார்த்தார். ஆனால் ஆதாமும், ஏவாளும் கீழ்படியாமையை பதிலாக உரைத்தனர். அவர்களின், கீழ்படியாமை எனும் பாவத்தால் சகல படைப்புகளும் ஏகமாய் துன்பப்பட காரணமாயிற்று ஆதி பெற்றோர், சாபத்தை பரிசாக பெற்றனர். அவர்கள் தவறு அவர்களை தோட்டத்திற்கு புறம்பாக்கிற்று (தொநூ. 3:23). இளைய மைந்தனின் பிரிவை

காயமாக பெற்று வேதனையுடன் அவன் வரவுக்காக காத்திருந்த அவன் தந்தையைப் போல (லூக். 15:11-32) ஆண்டவர், அவர்கள் பாவத்தால், தன்னைவிட்டு பிரிந்ததை அதிக வேதனையோடு உணர்ந்தார். இதை எரேமியா இறைவாக்கினர் கூறும் போது என் மகளாகிய மக்களுக்கு ஏற்பட்ட முறிவு எனக்கே ஏற்பட்டதாகும். நான் துயருகிறேன் திகில் என்னை பற்றிக் கொண்டுள்ளது (எரே 8:21).

நம் பாவத்தால் ஏற்பட்ட துன்பங்களை நாம் அனுபவித்து துன்புறும் போது நம் துன்பத்தை களைய நம்மில் முனைப்புடன் செயலாற்றுவது அதிக நிச்சயம். கடவுளின் இந்த செயலை ஆரிகன் என்ற மேலை நாட்டு இறையியலார், பின்வருமாறு கூறுகிறார். "ஆண்டவர் தம் இரக்கத்தால் நம்மிடத்திலுள்ள துன்பங்களில் பங்கு பெறுகிறார். அங்ஙனம் பங்கு பெறாதிருக்க அவர் இருதயமற்றவரல்ல" என குறிப்பிடுகிறார். இதன் மூலம் இயேசு சுமந்த சிலுவையை உலகிற்கு பயப்படுத்தும் ஓர் அடையாளமாக வையாமல் இரக்கத்தின் அடையாளமாகவே ஏற்படுத்தினார். (ரோமர் 5: 6-8)

உண்மையான அன்பு தம் அன்புக்குரியவருக்காக துன்பப்டுகிறது. கடவுள் மனிதரோடு நடப்பவர் (ஏசா. 1:2 4, எரே. 4 : 10-12) தவறிய தன் குழந்தைக்காக துயருறும் தந்தை (எரே. 31:20). குழந்தை பெறும் தாயின் வேதனையை உணர்பவர் (எரே. 4:31) மனைவியை பிரிந்த கணவனின் துக்கம் (ஓசியா 3:1 3, 11:1-8), மகனை இழந்த தந்தை (லூக் 15:11-32) போன்ற நிகழ்வுகள் வழியாய் ஆண்டவர் மனிதர் பாவத்தின் விளைவால் ஏற்படும் கடினத்தை ஏற்று மனிதரை துன்பங்களின்று விடுவிப்பவர் என அறிகிறோம்.

## 2. பாடுகளை ஏற்க கற்றுக் கொடுக்கிறார் :

இயேசு சிலுவைப்பாடுகளை ஏற்றது அவர் தந்தையிடம் கொண்டிருந்த கீழ்ப்படிதல் மற்றும் அவர் சித்தம் ஏற்கும் மனப்பக்குவம் இவைகளின் விளைவு. அவ்விதமாக தம் சீடரும் இருக்க வேண்டுமென போதித்தார். பதவிகளை கேட்ட சீடருக்கு பணி புரியவே கற்பித்தார் (மாற். 10: 37, 43I- 44). மேலும் பணிவிடை செய்தல் வழி துன்பம், ஏற்போரை நித்திய வாழ்வில் கிரீடம் பெறமுடியும் என குறிப்பாய் உணர்த்தினார் (மாற். 10:38-40).

உலகில் தனக்கென்று எதுவும் இல்லாதிருந்த வெறும் நிலையில்தான் பணிவிடை புரிய இயேசு இறை அதிகாரத்தைப் பெற்றிருந்தார் (மாற். 8:20). பாலைநில சோதனையில் பிசாசின் வாக்குறுதியை உதறி தள்ளினார் (லூக். 4:1-14)

இயேசுவின் பணிவிடையின் உச்ச கட்டம் மனிதருக்காய் சிலுவையை ஏற்றது ஆகும். இயேசுவின் பாடுகளை ஏற்கும் மனநிலை அல்லது துன்பப்படுவோரின் சார்பில் செயல்படும் அவர் வாழ்வு என்பது மனுக்குலத்தோடு கொண்ட அன்பின் நிமித்தமாகும். அவரைப் போல விடுதலை பணியில் ஈடுபடும் அனைவருக்கும் தந்தையின் அரசில் பிரவேசிக்கும் பாக்கியம் வழங்கப்படும் (மத். 25:34-40). இந்த அன்பு கூறும் பணிவிடையில் ஏற்படும் துன்பத்தால் இறையுறவினின்று ஒருவரை பிரிக்கமாட்டது (ரோமர் 8:35-39). நல்ல போராட்டத்தை போராடிய மனநிறைவு கிடைக்கும். (IIதிமொ. 4:7-8)

இயேசுவின் வார்த்தைக்கு செவி கொடுத்த சீமோன் பேதுரு தன் சுய ஆற்றல் பயனற்றது என உணர்ந்தார் (லூக். 5:8), ஆனால் முடிவில் ஆதாயம் தரும் எல்லாவற்றையும் விட்டு அவருக்கு பின் சென்றார் (லூக். 5:11). இயேசுவிடம், எல்லாவற்றையும் விட்டு விட்டு வந்தேன் இனி என்ன கிடைக்கும் என்ற கேள்விக்கு இம்மையில் துன்பங்களை சகிக்கும் பெலனோடு மறுமையில் நித்திய வாழ்வு கிடைக்கும் என்றார் (மத். 19:28, மாற். 10:28-30).

### 3. பாடுபடுவோர்க்கு துணை நிற்கிறார் :

கிறிஸ்துவை பின்பற்றுபவர்க்கு துன்பம் வழங்கி வந்த பவுலார் தான் கிறிஸ்துவால் சந்திக்கப்பட்ட பின் அவருக்காக அவர் சார்பில் மனிதர்காய் துன்பப்பட தன்னை அற்பணித்தார். இருளில் வாழ்பவர்களுக்கு வெளிச்சம் வீச கடவுள் என்னை அழைத்தார் என தன் அழைப்பை உணருகிறார் (2கொரி. 4:8). இறை அழைப்பில் துன்பம் உண்டு (4:8,9) என்பதை உணர்ந்து கிறிஸ்துவின் வாழ்வு எங்களில் விளங்குகிறது என பவுலார் சாட்சியிடுகிறார்.

இருட்டை பழி கூறாமல் அதை களைய நாம் ஒரு விளக்காயிருத்தல் நல்லது என்ற கூற்றின்படி பவுலார் கிறிஸ்துவின் அடிச்சுவடுகளை பின்பற்றி உலகிற்கு வெளிச்சம் வீசும் விளக்கானார். பாடுபட்ட கிறிஸ்துவின் சிலுவையின் ஆற்றல் இன்றும் கிறிஸ்து நிமித்தம் துன்பப்படுபவர்க்கு ஆறுதலாயுள்ளது.

அன்பர்களே ! இந்த உலகை மறுரூபப்படுத்தும் கிறிஸ்துவின் பணியில் நாம் கிறிஸ்துவுக்காக சிலுவையை ஏற்க முன் வரும் நாளை அவர் ஆவலோடு எதிர்பார்க்கிறார். அவர் ஆவலை நிறைவேற்ற நம்மை முழுமையாய் அற்பணிப்போம்.

அருள்திரு. **P. சேம் இம்மானுவேல் தோமஸ்**

13-04-2011

*லெந்துகாலம் ஐந்தாம் புதன்*

# பணியாளரின் பாடுகள்

**ஏசா. 53:4-6**

*"அவரோ நம் குற்றங்களுக்காகக் காயமடைந்தார்." ஏசா. 53 : 5*

பாடுகள் இல்லாத வாழ்வு முழுமையடைந்த வாழ்வல்ல. இரண்டு நிலைகளில் மனிதன் தனது வாழ்வில் பாடுகளை தமதாக்குகிறார். தனது நல்வாழ்வுக்காக பாடுகளை தமதாக்குதலும், அடுத்தவர்கள் வாழ்வுக்காக பாடுகளை தமதாக்குதலுமே அவை. ஆனால் துன்புறும் பணியாளரது பாடுகள் அவரது நல்வாழ்வுக்குரிய ஒன்றல்ல, மாறாக துன்புறும் மக்கள் விடுதலை கண்டிட அரசர் தம்மை ஒப்புவித்து ஏற்றுக்கொண்டது. அதாவது துன்புறும் பணியாளர் பாபிலோன் சிறையிருப்பில் வாழ்ந்து கொண்டிருந்த மக்களின் பாடுகளை தமது பாடுகளாக மாற்றி, அப்பாடுகளின் நடுவிலிருந்து விடுதலையாக்குகிறவராய் இருக்கிறார். கிறிஸ்துவின் பாடுகளும் அவருக்குரியதல்ல, மாறாக அவர் அவரது அடியவர்களுக்குரியது அடியவர்கள் வாழ்வு பெறுகின்றனர். இச்சூழலில் துன்புறும் பணியாளரின் பாடுகளை புரிந்து கொள்வதெப்படி? அவரது பாடுகள் எத்தகையவை?

### *1. மானிட துன்பம் ஏற்றார்* (ஏசா. 53 : 4)

முற்காலத்தில் துன்பங்களுக்கான ஆதாரத்தை இஸ்ரவேல் மக்கள் தங்கள் தீமையின் விளைவு என நம்பினர். அதாவது ஒருவருடைய துன்பத்திற்கு காரணி அவரே, துன்பதிற்கேற்ற காரணத்தை(தீமையை) அரசர் நிறைவேற்றியிருக்க வேண்டும். (ANE Understanding). யோபுவின் நூல் இக்கருத்தினை வலியுறுத்துகிறது. அதோடு ஏன் ஒன்றுமறியாதவர் துன்பத்தை ஏற்க வேண்டும்? என்பதையும் விவரிக்கிறது. ஆனால் துன்புறும் பணியாளரின் துன்பம் innocent suffering என்பதாகும் துன்புறும் பணியாளர் தமது துன்பங்களுக்கேற்ற தீமைகளைச் செய்யவில்லை மக்களின் பிணிகளைத் தாங்கி மக்களின் துன்பங்களை சுமக்கிறார் (ஏசா 53:4). தாமே துன்பத்தை ஏற்றுக் கொள்வது பலிக்கு பயன்படுத்தப்படும் விலங்குகளைப் போன்றது. பலிக்கு பயன்படுத்தப்படும் விலங்குகள் பலிசெலுத்துகிறவர்களின் பாவங்களை ஏற்றுக்கொள்கின்றன. ஆகவே பலி

செலுத்துகிறவர்கள் தங்கள் தீமைகளை சுமக்கவேண்டிய அவசியம் இல்லை. இதைப்போல் துன்புறும் பணியாளரும் மக்களின் பாவத்தை ஏற்றுக் கொண்டுள்ள படியினால், மக்கள் துன்பத்தை சுமக்க வேண்டிய அவசியமில்லை. பணியாளர் துன்புறுதலின் பதிலாளாக இருக்கிறார், இதனை சுமத்தல் மற்றும் ஏற்றுக் கொள்ளுதல் போன்ற நிலைகளில் அறிந்து கொள்ள முடிகிறது.

கிறிஸ்துவின் சிலுவையில் மக்களின் துன்பத்தை கிறிஸ்து சுமந்து தன்னை இழந்து வாழ்வு தரும் உன்னத நிலையினைக் காணமுடிகிறது. கிறிஸ்துவாகிய பணியாளர், நமது துன்பங்களை சுமந்து, நாம் விடுதலையோடு வாழத் துணைபுரிகிறார். ஆகவே துன்புறும் பணியாளரது பாடுகளை நமது விடுதலையின் மூலம் புரிந்து கொள்ள முடிகிறது. அதோடு நாமும் மற்றவர்களின் விடுதலைக்காக அவர்களது பாடுகளை சுமக்க நம்மை தூண்டவும் செய்கிறது.

## *2. மரண தண்டனை ஏற்றார் :* (ஏசா. 53:5)

பணியாளர் இங்கே தண்டிக்கப்படுகின்ற ஒருவராக காட்டப்படுகின்றார். தவறு செய்கிறவன் தண்டிக்கப்பட வேண்டும். ஆனால் இங்கே தவறு செய்யாதவர் தண்டிக்கப்படுகிறார். காயமடைதல், நொறுக்கபடுதல் தண்டிக்கப்படுதல் இவைகளெல்லாம் மனுக்குலம் குணமடைவதற்கு. ஏன் ஒருவர் குணமடைவதற்கு மற்றவர் தண்டிக்கப்பட வேண்டும்? பணியாளரது தவறுதல், தீமைகள் இவைகளினால் கடவுள் அவரைத் தண்டிக்கிறார் என்று சாதாரணமாக சிந்திக்கும் சூழலில், நாம் கடவுளை எதிர்த்து நின்று தீமை செய்ததால் அவர் தண்டிக்கப்பட்டார் என்பது தான் உண்மை. இப்படி தண்டனையினைத் தன் வாழ்வில் ஏற்றுக் கொள்ளுதலின் மூலம் மக்களின் பாடுகளை அவரே சுமந்து, மக்கள் தங்களது தீமையின் விளைவுகளை தங்களது வாழ்வில் தொடர்ந்து பெற்றுக் கொள்ளாதவாறு காக்கிறார். மனுக்குலம் அமைதியுடன் வாழ்வதற்கு அவர் தண்டனையை தனதாக்கி மக்களை மீட்கிறார்.

சிலுவை தவறு செய்கிறவர்களின் தண்டனையின் கருவியாக இருந்தாலும், இயேசு சிலுவையைத் தண்டனையாக ஏற்பதற்கு அவர் தவறு ஒன்றும் செய்யவில்லை, குற்றமில்லாத அவர் நமக்காக குற்றவாளியானார். மனுக்குலம் தனது தீமைகளின் விளைவினைத் தொடர்ந்து அனுபவிக்ககூடாது என்பதற்காக, இயேசு காயமடைந்தார், நொறுக்கப்பட்டார், தண்டிக்கப்பட்டார். இத்தகைய தண்டனையினை அவர் ஏற்றுக் கொண்டதால் நாம் குணமாக்கப்பட்டுள்ளோம். கிறிஸ்துவை

போல் மற்றவர்களின் தண்டனையினை நாம் நமதாக்க வேண்டும்.

### 3. *மானிடரின் தீச்செயல்களை ஏற்றார் :* (53:6)

கடவுள் மக்கள் அனைவரின் தீச்செயல்களையும் துன்புறும் பணியாளர் மீது சுமத்துகிறார் (53:6). கடவுளின் வழிகளை விட்டுத் தூரம் போகும் தீமை பணியாளர் மீது விழுகிறது. அதனை புரிந்து கொள்வதற்கு ஆடுகள் அலைவது உதாரணமாக பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆடுகள் தனி மனநிலையுடையவைகள் (Single-minded). அதோடு தங்களது வாழ்வு சூழலைக் குறித்த விழிப்புணர்வு அவைகளிடம் இல்லாதிருக்கிறது. ஆடுகள் மேய்ச்சலுக்காக செல்லும் போது அவைகளின் சிந்தை அடுத்த புல்வெளிகளை குறித்ததாக இருக்கும், இப்படிப்பட்ட சிந்தனையிலிருக்கும் போது, அவைகளுக்கு பய உணர்வு ஏற்படுத்துகையில் தாங்கள் சென்று கொண்டிருக்கும் குழுவிலிருந்து பிரிந்து தவறான தெரிதலோடு தங்களின் பாதுகாப்புக்காக ஏதாவது திசையில் ஓடும். பயந்து பாதுகாப்புக்காக ஆடுகள் ஓடுகையில் தவறிச் செல்வதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது. இதே நிலையில் தான் மனித வாழ்வும் உள்ளது. விளைவுகளைக் குறித்து சிந்திக்காமல் தவறான தெரிவுகளை மேற்கொள்கிறோம், தீமைகள் வருகிறது. இத்தீமைகள் பணியாளர் மீது சுமத்தப்படுகிறது.

இயேசுவின் சிலுவை நமது தீமைகள் நிறைந்த வாழ்வினால் நாம் விடுதலை பெற அவர்மீது சுமத்தப்பட்ட ஒன்று. நமக்காகவே பணியாளரான இயேசு சிலுவைப் பாடுகளை ஏற்றுக்கொண்டார். சிலுவையில் பாடுகளை ஏற்றுக் கொள்வதற்கு அவரில் குற்றமில்லை, நாமே குற்றவாளிகள். சிலுவைப் பாதையில் அவரை பின் தொடர நாம் அழைப்பு பெற்றுள்ளோம், மற்றவர்களின் பாடுகளை நமதாக்கி கொள்வோம்.

அருள்திரு. **A. மகேர் ஷால் அஸ்பாஸ்**

> *நித்திய தேவன் அநித்திய மாந்தரை நித்தியத்தில் சேர்த்திட அவனியில் அவதரித்ததற்காக தேவனைத் துதியுங்கள்.*
>
> ஜேன் ஹஸ்

**15-04-2011**

*லெந்துகால ஆறாம் வெள்ளி*

# இயேசுகிறிஸ்துவின் மனநிலை

பிலிப். 2:1-11

*"கிறிஸ்து இயேசு கொண்டிருந்த மனநிலையே உங்களிலும் இருக்கக்கடவது" பிலிப்பியர் 2:5*

லெந்து நாட்களின் இறுதியில் இறை மக்களிடம் வேண்டிக் கொள்வதெல்லாம் கிறிஸ்து இயேசு கொண்டிருந்த மனநிலையே உஙகளிலும் இருக்கக்கடவது என்பதுவே.

நமது மாவட்டத்தின் முதல் சீர்திருத்த சபை மிஷனெறியான நம் முதல் மிஷனெறி ரிங்கல் தௌபே ஐயர் அவர்கள் மயிலாடியில் பணி செய்தபோது பலர் அவர்களிடம் பணம் கடன் பெற்றிருந்தனர். அவைகளை தன் இல்ல சுவற்றில் கரியால் எழுதி வைத்திருந்தார். தான் இந்தியாவை விட்டு திரும்பும்போது அவைகளை அழிக்க மறந்துவிட்டார். கொச்சின் துறைமுகத்திலிருந்து கப்பல் புறப்பட்டபோது தான் கடன் பெற்றோரது பெயர்களை அழிக்க விட்டுவிட்டது நினைவில் வந்தது. கப்பல் குளச்சலில் வந்து நின்றபோது உடனே தரையிறங்கி விரைவாய் மயிலாடி வந்து அந்த கடன் பெற்றோரின் பெயர்களை அழித்துவிட்டு சென்றாராம். இந்நிகழ்ச்சி இரு காரியங்களை நமக்கு உணர்த்துகிறது.

(i) அவரது தாழ்மை, அதாவது ஆணவமற்ற தன்மை. தன்னிடம் கடன்பெற்றோரது பெயர்கள் தானே; அது அப்படியிருப்பதால் அவர்கள் பெயருக்கு களங்கம் ஏற்பட்டால் நமக்கென்ன ? என்ற நிலை இல்லாது தன்னால் எவரும் பாதிக்கப்படக் கூடாது என்கின்ற தாழ்மையின் வெளிப்பாடு.

(ii) மிஷனெறியிடம் கடன் பெற்று வந்தவர், பெற்ற கடனை திருப்பி கொடாதவர் என்கிற களங்க பெயர் அவர்களுக்கு ஏற்படுத்துவதால், சமுதாயத்தில் பிரிவினைகள் தான் வளருமே ஒழிய ஒருமைப்பாடு வலுப்பெறாது என்கிற உணர்வை ரிங்கல் தௌபே ஐயர் பெற்றிருந்தார்.

ஆக கிறிஸ்துவின் சிந்தையுடைய மிஷனெறி தாழ்மையுடையவராக, ஒற்றுமையை கருத்தில் கொண்டவராக விளங்கினார் என்பது மிகையாகாது.

பிலிப்பியர் 2:5 முதல் உள்ள வசனங்களின் அடிப்படையில் பார்ப்போமாயின் இயேசு கிறிஸ்துவின் மனநிலை தாழ்மைக்கும், ஒற்றுமைக்கும் அடிப்படையாக அமைகிறது என்பதை பவுலடிகளார் வெளிப்படுத்துகிறார். சிலுவையின் வழி வாழும் வாழ்வு நெறி தாழ்மையையும் ஒற்றுமை வாழ்வையும் வலுப்படுத்தும்.

## 1. தாழ்மையின் மனநிலை :

எல்லாவித மேன்மைக்கும் அடித்தளமானது உயர்வுக்கு முன்னானது தாழ்மை என்பதுவும், வீழ்ச்சிக்கு முன்னானது அகந்தை என்பதுவும் திருமறை தருகிற செய்தி.

உலகம் தோன்றும் முன்பே கடவுளோடிணைந்திருந்த கிறிஸ்து உலகில் வந்தது அவரது தாழ்மை என்கிறார் பவுலடிகளார்.

ஏசாயா 42:1-4 - ல் வரும் பாடுபடும் தாசனின் நிலையை சுருக்கமாக பவுலடிகளார் பிலிப். 2 : 7 - ல் தருகிறார். இயேசுநாதர் ஒரு வேலைக்காரனை போல தன்னை தாழ்த்தி கடவுளின் விருப்பத்தை நிறைவேற்றுகிறார். அனைவருக்கும் ஆண்டவராயிருக்கிறவர். தன்னை அடிமையாக்கிக் கொள்கிறார். அவரது தியாகம் சிலுவையை ஏற்றுக்கொள்ளுமளவும் இறங்கி வருகிறது. இறுதி இரவு உணவின் போது இயேசுநாதர் சீடர்களின் கால்களை கழுவின நிகழ்ச்சியும் இவ்விடம் நினைவுகூரப்பட கூடியதாகும்.

'தாழ்மையுள்ள இடத்தில் தான் தண்ணீர் தேங்கும்' என்பார்கள். கடவுளே தாழ்மை என்கிற பண்பை அங்கீகாரம் செய்திருக்கும்போது மனித தகவுகள் தாழ்மையை சற்று ஒதுக்கி வைக்கிறதாகவே உள்ளது. தன்னை உயர்வாக தன் நிலைக்கு மேல் எண்ணிக்கொள்வதும் ஆடம்பரம், பகட்டு இருந்தால் தான் மற்றவர்கள் தன்னை உயர்வாக நினைப்பார்களென எண்ணும் காலம். சிறிது வருமானத்தை உயர்வு என நினைத்துகொண்டு அடங்காத்தனமான செயல்களில் ஈடுபடுவது. இவைகள் நம்மிடமிருந்து மாற்றம் பெறவேண்டும். அதுபோல எந்த ஒரு மனிதனுக்கும் சமூகம் கொடுத்திருக்கும் அதிகாரம் நிரந்தரமானதல்ல என்பதை உணர வேண்டும். இறையருளால் சமூகம் நமக்கு தந்திருக்கம் அதிகாரத்தை அகங்காரமாக பயன்படுத்துவது, ஆணவமாய் நடந்து கொள்வது தனது அதிகாரத்துக்கு முன் மற்றவர்களது நிலை எல்லாம் அற்பமானது என எண்ணுவதும் நிச்சயம் கிறிஸ்துவின் மனநிலைக்கு மாறானது.

எந்நிலையிலும் தன்நிலை உணர்ந்து கடவுள் பயத்தோடு, தான் எதற்காக சமூக அமைப்பில் கடவுளால் நியமிக்கப்பட்டிருக்கிறேனோ அந்த கடமையை தாழ்மையுடன் அனுதினமும் செய்து எல்லோருடனும் இணைந்து வாழ்வதே கடவுளின் மனநிலை.

## 2. ஒற்றுமையின் மனநிலை :

தாழ்மை மனநிலை மற்றவர்களோடு இணைந்து வாழும் ஒற்றுமை வாழ்வுக்கு வழிகாட்டுகிறது. கிறிஸ்துவின் தாழ்மையினால் வானோர், பூதலத்தோர் எல்லோரும் அவரது திருப்பெயரை இணைந்து போற்றும் நிலைபெறுகிறன்றனர். இதனை கூர்ந்து கவனித்தால் கிறிஸ்துவின் தாழ்மை வானத்தையும் பூமியையும் இணைத்து ஒற்றுமைப்படுத்துவதைக் காணலாம்.

ஒரு மனிதனுடைய வாழ்வின் முழுமை விண்ணையும் மண்ணையும் இணைத்து வருகின்ற ஒற்றுமையில் விளங்குகிறது எனலாம். எனவேதான் கிறிஸ்துவின் பிறப்பில் மாந்தர்களுள் பிரியம் இருப்பதால் கடவுளுக்கு மாட்சிமை அது பூவுலகில் அமைதிக்குரியது என்கிற பொருளில் இறை தூதர்கள் பாடுகிறார்கள்.

தாழ்மை வெளிப்படும்போது தன்னிலை உணருகிறோம். சூழ்நிலையை உணர்கிறோம். நம்மைச் சுற்றிலும் நமது வாழ்வுக்காக தியாகித்துக் கொண்டிருக்கிற இயற்கையையும், நமக்காக பணி செய்துகொண்டிருக்கிற மனிதர்களையும், உயிரினங்களையும் (உழவர்கள், சுத்தம் செய்வோர், பொதுப் பணி செய்வோர், பயன் தரும் விலங்குகள் முதலியன) உணர்ந்து கொள்ள முடியும். அத்தகைய உணர்வு வந்தாலே நாம் இயற்கையுடனும், மற்றவர்களோடும் இணைந்து இசைந்து வளருவோம்.

அத்தகைய உணர்வோடு தாழ்மையும் ஒற்றுமையும் இணைந்த வாழ்வில் வளர்வோம். இறைவனோடும், இயற்கையோடும் இசைந்து சமூக வாழ்வில் மற்றவர்களோடு ஒற்றுமையோடு வாழுவோம்; வளருவோம். இறையாசி நம்மோடிருப்பதாக ! ஆமென் !!

அருள்திரு. **A. ஜெப சுஜி**

**17-04-2011** **குருத்தோலை ஞாயிறு**

# ஓசன்னா எங்களை விடுவியும் ஆண்டவரே
# எருசலேமுக்கு பயணிக்கும் கிறிஸ்து

**HOSANNA, SAVE US O LORD : JESUS ENTERS JERUSALEM**

செக. 9:9-12 எபே. 1:15-23

திபா. 24 மாற். 11:1-11

*"இயேசு ............................அதைப் பார்த்து அழுதார்." லூக். 19 : 41*

**மன்றாட்டு : மாட்சிக்குரிய கடவுளே, இயேசு கிறிஸ்து வழியாய் உலகை மீட்கும் திருத்திட்டத்திற்காய் உம்மைப் புகழுகிறோம். இன்று எங்கள் மீட்பரின் எருசலேம் நோக்கிய பயணத்தின் பாதையில் மரக்கிளைகளும், ஆடைகளும் பரப்பிய மக்களின் செயல் அவர் வெற்றி சிறக்கும் மேசியாவும், அரசருமானவர் என்பதை தெரிவிக்கின்றது. நாங்கள் அவரது அடிச்சுவடுகளை தொடர்ந்து சிலுவையினூடே இறையரசில் இணைய துணைசெய்ய வேண்டுமென என்றும் உம்மோடும், தூய ஆவியரோடும் வாழ்ந்து ஆளுகை செய்யும் மேசியாவாம் இயேசுகிறிஸ்து வழி கேட்கிறோம். - ஆமென்.**

ரோம மாமன்னர் போரில் வெற்றி பெற்று வரும் போது பேரணியாக வருவார். முதலில் கொள்ளையடித்த பெரும் செல்வங்களைக் கொண்டுவருவார். மன்னன் அமர்ந்து வரும் வாகனம் பொன்முலாம் பூசப்பட்ட குதிரை வண்டியாக அமையும். படைவீரர்கள், பெண்கள் நறுமணங்களைப் பொழிந்து வரவேற்பார்கள். மக்கள் அரசனின் பெயரைச் சொல்லி ஆர்ப்பரிப்பார்கள்.

நிறைவில், பவனி ஓர் அரங்கத்தை வந்து அடையும். சிறைபிடிக்கப்பட்டு இழுத்து வரப்பட்டவர்கள், அடிமைகளாக வன விலங்களோடு மோதவிடப்படுவார்கள். இறந்த உடல் குவியல்களுக்கு இடையே மாமன்னன் போற்றப்படுவான். மக்கள் 'மன்னன்-வாழ்க' என வாழ்த்துவார்கள். இது ரோம மன்னனின் வெற்றிப் பவனி.

இங்கு இறைமகன் இயேசுவினால் நடத்தப்படும் மற்றொருப் பவனி. அது பெத்தானியாவிலிருந்து எருசலேமுக்கு, சுமார் 2 மைல் தூரம் ஆகும். ஆனால் வாகனம் கழுதை. அது சமாதானத்தின் சின்னம். மக்கள் கரங்களில் குருத்தோலை. அது சமாதானத்தின் கொடி. பேரணி சேருமிடம் எருசலேம். அது சமாதானத்தின் நகரம். (தொ.நூ. 49 : 10,11; லேவி. 23 : 40;

நெகே. 8 : 5; யோவா. 12 : 12-13; தி.வெ. 7 : 9; அர. 1 : 38; நீ.த. 10 : 3,4). இந்த பவனியில் கலந்து கொண்டவர்கள் யார்?

1. எருசலேமின் யூதர்கள்
2. கலிலேயா மக்கள்
3. லாசரு உயிருடன் எழுப்பட்டதை பார்க்க கூடிய மக்கள் (யோவா 12:12)
4. திருவிழா (பஸ்கா) கூட்டத்தார் (யோவ. 12:17)

பவனியின் தொனி - ஓசன்னா. இது ஓர் எபிரேய வார்த்தை. இதன் பொருள் 'விடுவித்தருளும்' என்பதாகும். ஏபிரேய வழக்கத்தில் - வாழ்த்தைத் (Greetings) தெரிவிக்கவும், வெற்றியை (Victory) பறைசாற்றவும் இவ்வார்த்தை பயன்பட்டது. (திபா. 118 : 25-26; சக. 9 : 9). இப்பவனியின் நிறைவிடம் ஆலயம். தலைவரின் பெருமையை நிரூபிக்கும் பேரணி அல்ல இது, மக்கள் மீட்பு இதன் நோக்கு ஆகும். பண்டிகையின் போது எருசலேம் அழகாக காட்சியளிக்கும். ஒவ்வொரு யூதனும் இக்காட்சியை கண்டு பெருமைப்படுவர், அக்களிப்பர். ஆனால் அதற்கு மாறாக பவனியாக வந்த இறைமகன் இயேசு பட்டணத்தைப் பார்த்து அழுதார் (லூக் 19:41). இயேசுவின் கண்ணீருக்கு காரணம் என்ன? அவரின் கண்ணீரில் அநேக எதிர்பார்ப்புகள் அடங்கியுள்ளன. இயேசுவின் கண்ணீரில் செயலாக்கம் தேடும் இரண்டு காட்சிகளைத் தியானிப்போம்.

## *1. கண்ணீரில் கனியும் கனிவு :* (மத் 21 : 14)

"பின்பு பார்வையற்றோரும், கால் ஊனமுற்றோரும் கோவிலுக்குள் இருந்த அவரை அணுகினர்" (மத். 21:14).

இயேசுவின் பவனியில் கலந்து கொண்டவர்களில் மிக முக்கியமானவர்கள் பார்வையற்றோர், கால் ஊனமுற்றோர் போன்றவர்கள். (மத். 21 : 14). மகா பெரிய பேரரசன் தாவீது தன் நாட்டை விரிவாக்க படையெடுத்து எபூசியரை வெற்றி பெற முயன்றான். எபூசிய மன்னன் இதைத்தடுக்க பார்வையற்றோரையும், முடவர்களையும் பாதையில் குவித்தான். 'தாவீது முடவர்களையும், பார்வையற்றோரையும் கொன்று, வென்று தாவீதின் நகரை கைப்பற்றட்டும்' என்றான் எபூசிய மன்னன். தாவீது தடைகளைத் தகர்த்தார், ஏபூசியரை வென்றார். அன்று முதல் முடவர்கள், பார்வையற்றோர் போன்றவர்கள் இறை இல்லத்தில் செல்ல தடை ஏற்பட்டது (II சாமு 5:5,6).

இயேசு இவர்களை இறை இல்லத்திலே கொண்டுவந்து குணப்படுத்தினார். பாலகர்கள் வாயிலாக மாட்சியை ஏற்படுத்தினார். (மத் 21:14). விடிவின்றி இறை இல்ல வீதியில் காத்திருந்தவர்களின் மேல் கனிவு

கொண்டு மனதுருகிறார். மனதுருகி கனிவதற்கு கிரேக்கத்தில் 'Spla-chni-zeslthai' (பிளாஸினி யிஸ்தய்) என்ற பதம் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதன் பொருள் உள் உறுப்புகளில் ஏற்படும் அசைவு அல்லது சிதறிய உள் இதயம் என்பதாகும் (ஏசாயா 31:20; ஓசியா 11:8; ஏசாயா 63:15).

ஆண்டவரின் கண்ணீரில் கனியும் அன்பு மாற்று திறனாளிகளை இறை இல்லத்தில் இணைத்தது அவர்கள் முழு வாழ்வு அடையும் படி கனிந்தது.

## *2. கண்ணீரில் அகலும் அழுக்கு :* (லூக். 19 : 45)

"இயேசு கோவிலுக்கு சென்று அங்கு விற்பனை செய்து கொண்டிருந்தோரை வெளியே துரத்தத் தொடங்கி" (லூக். 19 : 45).

இறை இல்லம் கடவுளுக்குரியது. இறைவேண்டல் செய்யும் இடம் அனைத்து மக்களுக்கும் உரியது. அது ஆதிக்க வர்க்கத்தாலும். சுய-அரசியல் அதிகாரங்களாலும் மாசுபட்டது. அதன் காரணம் என்ன? "Happiness without Holiness is Hypocrasy" தூய்மையில்லாத மகிழ்ச்சியே காரணம் ஆகும்.

### *வியாபாரம்*

யூதர்கள் புற இனமக்களை இறை இல்லத்திற்குள் அனுமதிக்கவில்லை. புற இனத்தவர்கள் வெளிப்பகுதிகளிலே அமர்ந்து கடவுளை தொழ வேண்டும். திரையிடப்பட்டு அப்பகுதிகள் தனியாக பிரிக்கப்பட்டிருந்தன. இப்பகுதியில்.

1. புறா விற்கும் கடை
2. வெள்ளாட்டுக் குட்டி விற்கும் கடை
3. எண்ணெய், வாசனைப்பொருட்கள் விற்கும் கடை
4. நாணயம் மாற்றும் கடை

ஆகியவை தஞ்சமடைந்திருந்தன. இரண்டு சேக்கல் ஆலய வரி. ரோம அரசனின் சொரூபம் அடங்கிய 'அரசனே ஆண்டவன்' என்ற வாசகம் பொறித்த ரோம நாணயத்தை சேக்கலாக (யூத நாணயமாக மாற்ற / கையூட்டு, ஆசாரியர்கள் சான்றிதழ் தந்த புறாக்களுக்கு தனி கட்டணம், ஆட்டுக்கடாவுக்கு தனி கட்டணம், (புறா வெளியே 9 காசு, உள்ளே 15 காசு, ஆட்டுக்கடா வெளியே விற்பனை செய்வதைவிட உள்ளே 20 மடங்கு அதிக சேக்கல் காசுகள்) வசூலிக்கப்பட்டன. ஆசாரியர்களும் வியாபாரிகளும் இதில் பங்கு கொண்டனர். இயேசு இந்த அநீதியைக் கண்டு அழுதார். பணத்தை மையப்படுத்தும் பக்தியை நீக்கி நீதி, பரிசுத்தம் நிறைந்த பக்தியை ஏற்படுத்தி, மனிதத்தை பெலப்படுத்தினார். சமய, அரசியல். தனிமனித அழுக்குகளை சீர்திருத்தி வழிகாட்டினார் (மத். 21 : 12).

***மாய்மாலம் :*** **(லூக். 19 : 42)**

"........ மறைக்கப்பட்டுள்ளது"

சமாதானத்தின் நகரம் ஆகிய எருசலேம் கொள்ளையிடும் இடமாக இருந்தது. சமாதானத்துக்கு ஏற்புடையவைகள் மறைக்கப்பட்டு இருந்தன. அவர்களின் அறியாமை (Spiritual ignorance), குருட்டுதன்மை (Blindness) போன்றவைகளை ஆண்டவர் உணர்ந்தார். எருசலேம் இறை இல்லம் பஸ்கா. விழாக் கோலம் பூண்டிருந்தாலும் கள்ளர்களின் கூடாரமாக இருப்பதைக் கண்டு இயேசு அழுதார். பட்டணம் முழுவதும் புனித பயணிகளின் கூட்டம் நிறைந்து இருந்தது. மக்களின் இதயங்களில் பாவ செயல்களும், வாழ்வு சுமைகளும் நிரம்பியிருந்தது. எனவே நியாயத்தீர்ப்பு நெருங்கி விட்டது என்று உணர்த்தினார். இயேசு சமய சந்தையை (religious marketplace) வேரறுக்க அத்திமரத்தை சபித்ததை பாடமாக்கினார் (மாற். 11-13). பார்வையாளர்களாக அல்ல; கிறிஸ்துவில் பங்கு கொள்கிறவர்களாக வாழ அழைப்பு கொடுத்தார். பசுமையான இலைகள் அல்ல, பரிசாக நற்குணங்களாகிய பழங்கள் தேவை என கற்றுத்தருகிறார்.

'Double Digit Growth' (It means more jobs more employment more income more wealth and more resources) அதிக தொழில், வேலைவாய்ப்பு, வருமானம், பொருளாதாரம் மற்றும் உபகரணங்கள் அதிகமாக பேசப்படும் இக்காலங்களில் மாய்மாலம், வியாபாரம் போன்ற தனிமனித, சமய, அரசியல் அநீதிகளை அடையாளம் கண்டு, சீர்திருந்தி, அழுக்ககன்று, அன்பில் கனிந்து, இயேசுவின் கண்ணீருக்கு விடையாய் வாழ்வோம்.

அருள்திரு. **M. பிரேம்சிங் ஜெயக்குமார்**

*மனித சாயலில் ஜொலிக்கும் தேவனின் தத்ரூபமே கிறிஸ்து அந்த ஜொலிப்பு நிரந்தரமானது.*

A.W. டோசர்

**18-04-2011** | *புனிதவாரம் திங்கள்*

# மாய்மால மரம்
## HYPOCRITE TREE

மத்தேயு 21:18-22 | மாற்கு 11:12-24

*"....இலைகளைத் தவிர வேறு எதையும் அவர் காணவில்லை." மாற். 11:13*

மருத்துவ குணம் கொண்ட அத்திமரம் இஸ்ரவேல் மக்களின் வாழ்வுடன் இணைந்த ஒன்று. இது வருடத்தில் 10 மாதங்கள் கனிதரும். இலைகள் செழித்திருந்தால் அந்த மரத்தில் கனி இருக்கும். அத்திமர நிழலில் எவ்வித அச்சுறுத்தலும் இல்லாமல் அமைதலாக அமர்ந்திருப்பர் (மீக்கா 4:4).

இயேசு கிறிஸ்துவின் பார்வையில் பட்ட ஏமாற்றின அத்திமரம் தன் சீடர்களுக்கு விண்ணப்பத்தின் வல்லமையை விளக்கி நம்பிக்கை வாழ்வில் நிலைக்க செயல்முறை விளக்கமளிக்கிறார்.

### 1. செழித்திருந்த அத்திமரம்

சாலையோரம் நின்ற அத்திமரம் மாயத் தோற்றத்துடன் காட்சியளித்தது. அத்திமரம் செழித்திருந்தால் கனி இருக்கிறது என்று பொருள் அது வசந்தகாலம் (மத். 24:32). கனியற்ற வாழ்வை இறைவன் வெறுக்கிறார். சமயவாதிகள் நீதிமான்களைப் போல சமூகத்தை ஏமாற்றி வந்தனர். மாய்மாலமான வாழ்வு, வெளியரங்க விண்ணப்பம், உபவாசம், நீதியைப் புரட்டுதல் இவை செழித்திருந்த அத்திமரத்தைப் போன்றது (மத். 23:23). நமது வாழ்வு என்பது இவ்வுலகில் எவ்வளவு காலம் வாழ்ந்தேன் எவ்வளவு செல்வம் சேர்த்து செழிப்போடிருந்தேன் என்பதல்ல மாறாக எப்படி வாழ்ந்தேன் பிறருக்கும் சமூகத்திற்கும் கனியுள்ள வாழ்வாகப் பயன்பட்டேனா? என்பது தான் முக்கியம். கனியுள்ள வாழ்வுடையோருக்கு நிலை வாழ்வை இறைவன் அருளுகிறார். ஏமாற்றுவோர் வாழ்வு அத்திமரத்தின் நிலை என்பதை ஆண்டவர் வெளிப்படுத்துகிறார். சிலரை பலநாள் ஏமாற்றலாம் பலரை சிலநாள் ஏமாற்றலாம் ஆனால் எல்லாரையும் எல்லா நாளும் ஏமாற்ற முடியாது. செழித்த அத்திமரம் இயேசு கிறிஸ்துவை ஏமாற்றினது பட்டு போனது.

## 2. நம்பிக்கையை கற்று தந்த அத்திமரம்

கனியற்ற அத்திமரம் இயேசுவால் சபிக்கப்பட்டபோது காய்ந்து போனது. மறுநாளில் பேதுரு நினைவுகூர்ந்து ரபீ இதோ நீர் சபித்த அத்திமரம் பட்டுபோனது என்றான். உடனே இயேசுநாததர் காய்ந்து போன அத்திமரத்தினூடாக நம்பிக்கை வாழ்வை கற்று தந்தார். மட்டுமல்ல உலக படைப்பு அனைத்தின் மீதும் அதிகாரம் உண்டு என்பதையும் வெளிப்படுத்தினார். அத்துடன் இறை வேண்டலின் வல்லமையை உணர்த்தவும் முற்படுகிறார் (மாற். 11:23,24). நீங்கள் சந்தேகப்படாமல் முழு நம்பிக்கையுடன் விண்ணப்பம் ஏறெடுக்கும் போது எதைக் கேட்டாலும் பெற்றுக் கொள்வீர்கள் என்றார். முழு நம்பிக்கையின் விண்ணப்பத்திற்கு உடனே பதில் கிடைக்கும் என்பதை (மத். 21:10) உறுதிபடுத்தினார். இறைமகனாகிய கிறிஸ்து மனித சாயலில் நின்று இந்நிகழ்ச்சியினூடாக நம்பிக்கை வாழ்வை கற்று தந்தார்.

நாமும் கனியில்லாமல் செழித்திருந்து மாய்மாலமான வாழ்க்கை வாழ்ந்து உலகை ஏமாற்றினால் அத்திமரத்தினுடைய நிலை ஏற்படும் என்பதை கிறிஸ்து வெளிப்படுத்தினார். குன்றக்குடி அடிகளார் கூறும் போது எல்லா சமயமும் மோட்சத்தைச் சொல்லுகிறது. ஆனால் சிலுவையில் இயேசு தன்னை கொடுத்து பெற்றுத் தந்தது மீட்பின் கனி அது மேலானது இவ்வுலகில் கிறிஸ்துவின் சிலுவையினூடாக மீட்கப்பட்ட நாம் கனியுள்ள வாழ்வு வாழ்வோம்.

அருள்திரு. **G. சதிலால் விஜின்**

**19-04-2011** *புனித வாரம் செவ்வாய்*

# மருள வைத்த கேள்விகள்

## STRUGGLING QUESTIONS

மத். 22 : 15-40

> *"சீசருக்கு உரியவற்றை சீசருக்கும், கடவுளுக்கு உரியவற்றைக் கடவுளுக்கும் கொடுங்கள்."*
> *மத். 22 : 21*

இயேசு கிறிஸ்து வாழ்ந்த காலத்தில் ரோமர்கள் யூதேயாவை ஆட்சி செய்தனர். "கடவுள் அவரோடு இருந்ததால் அலகையின் கொடுமைக்குட்பட்டிருந்த அனைவரையும் அவர் விடுவித்து எங்கும் நன்மை செய்து கொண்டே சென்றார் (திப. 12 : 38 ).

எனவே இயேசுவானவர் மக்களிடையே புகழ் பெற்று விளங்கினார். மக்கள் கூட்டம் இயேசு கிறிஸ்து சென்ற இடமெல்லாம் அலை மோதியது. இதைக் கண்ட அக்கால சமய பற்றாளர்கள் என நினைத்துக் கொண்டு ஆடம்பரமாக வாழ்ந்து வந்த பரிசேயர்கள், சதுசேயர்கள், திருச்சட்ட அறிஞர்கள் இயேசு கிறிஸ்துவை மருள வைக்ககூடிய நிலையில் மூன்று கேள்விகளை கேட்டனர். (மத். 22:15-40). அவர்களுக்கு இயேசு கிறிஸ்து மிக ஞானத்தோடும், விவேகத்தோடும் பதிலளித்தார். தனது வாழ்வில் சிக்கலான சூழ்நிலைகள் உருவாகும்போது இயேசு கிறிஸ்து நிதானமாக செயல்பட்டார்.

"என்ன பேசுவது! எப்படிபேசுவது என நீங்கள் கவலைப்பட வேண்டாம். நீங்கள் என்ன பேச வேண்டும் என்பது அந்நேரத்தில் அருளப்படும்". (மத். 10 : 19) என்றும், உங்கள் எதிரில் எவராலும் உங்களை எதிர்த்து நிற்கவும், எதிர்த்து பேசவும் முடியாது என்றும் கூறிய இறைமகன் அப்படியே தன்னை மருள வைத்த கேள்விகளுக்கு தக்க பதில் கொடுத்து தலைகுனியவைத்தார்.

அவற்றுள் குறிப்பாக, பரிசேயர்கள் கேட்ட கேள்வியை குறித்து சற்று விளக்கமாக சிந்திக்கலாம்.

***சீசருக்கு வரி செலுத்துவது முறையா? இல்லையா? நீர் என்ன நினைக்கிறீர்*** (மத். 22 : 17).

யூதேயாவை ரோமர்கள் ஆட்சி செய்ததால் ஒவ்வொரு குடிமகனும் வரி செலுத்தி வந்தனர். அதாவது ஆட்சியாளர்களுக்காக தானியத்தில் பத்தில் ஒன்று, கனியில் ஐந்தில் ஒன்று, வருமானத்தில் ஒரு சதவீதம், அதோடு நிலவரி, சொத்துவரி, தலைவரி, சுங்கவரி, எருசலேமில் வீட்டுவரி, ஆலய பராமரிப்புக்காக ஆண்டுவரியாக அரை செக்கேல்.

இதனை வசூலிக்க ஆயக்காரரும், வரிதண்டுபவரும் நியமிக்கப்பட்டிருந்தனர்.

இயேசு கிறிஸ்துவிடம் இக்கேள்வியை கேட்க அனுப்பிய பரிசேய கூட்டம் மறைவாக வரி செலுத்தி வந்தனர். உடன் நின்ற எரோதியர்கள் ரோமர்களுக்கு வரி செலுத்துவது மக்களின் கடமை என்றவர்கள். தீவிரவாதிகள் ரோமை ஆட்சியாளர்களுக்கு வரி செலுத்துவது பாவம், எனவே வரி கொடுக்க கூடாது என்றவர்கள். இன்னும் மக்கள் வரி வசூலிப்பவர்கள் மீது கோபமும், வெறுப்பும் கொண்டிருந்தனர்.

இப்படிபட்ட தடுமாறும் சூழ்நிலையில் இயேசு கிறிஸ்து அவர்களின் தீய நோக்கத்தை அறிந்து கொண்டு செயல்படுகிறார். தீய நோக்கம் தான் எனன்?

1. வரி செலுத்த வேண்டும் என்றால் நாட்டுப்பற்று இல்லாதவர், விடுதலை தாகம் இல்லாதவர் என்று யூத மக்களின் எதிர்ப்புக்குள்ளாக்குதல்.

2. வரி செலுத்தக் கூடாது என்றால் ரோம ஆட்சிக்கு எதிராக மக்களை தூண்டி வருகிறார் என்று குற்றம் சுமத்தி அவரை எளிதில் ரோமையர்களிடம் கையளிக்கவும், சிலுவைச்சாவை பெற்றுக் கொடுக்கவுமே. ஆனால், இயேசு கிறிஸ்து அறிவுக் கூர்மையைப் பயன்படுத்தி விவேகத்துடன் பதில் கொடுத்தார்.

“சீசருக்கு உரியவற்றை சீஷருக்கும், கடவுளுக்கு உரியவற்றை கடவுளுக்கும் கொடுங்கள்” (மத். 22:21). இங்கு இறைமகன் இயேசு கிறிஸ்துவின் பதில் தன்னைத் தப்பித்துக் கொள்வதற்கல்ல. மாறாக, அன்று நிலவிய சமுதாய அவலங்களையும், அரசியல் நிலைப்பாட்டையும் சமுதாய நெறிமுறைகளையும் கருத்தில் கொண்டு இயேசு அவ்வாறு பதில் அளித்தார்.

இயேசு கிறிஸ்து வரி கொடுப்பதற்கான நாணயம் ஒன்றை காட்டுங்கள் என்றார். அதன் வழியாக வரலாற்று உண்மை ஒன்றை விளக்கினார். பாலஸ்தீன நாட்டிலே இரண்டு வகை நாணயங்கள் இருந்தன.

### 1. சீசர் உருவம் பொறித்த நாணயம் :

இது மக்களின் அன்றாடக வாழ்க்கைக்கு வரி செலுத்தவும், பொருட்களை வாங்கவும் பயன்படுத்தப்பட்டது. இது கலப்பட உலோகத்தால் ஆனது.

### 2. செக்கேல் நாணயம் :

இது சுத்தமான உலோகத்தால் ஆனது. சுத்தமான தங்கத்தைப் போன்றது. கலப்படமில்லாதது. இந்த செக்கேல் நாணயம் தான் கடவுளுக்கென பயன்படுத்தப்பட்டது. இங்கே ஆலயத்தில் காணிக்கை கொடுக்கும் போது சீசரின் உருவம் பொறித்த நாணயத்தை காணிக்கையாக படைக்க முடியாது. எனவே ஆலயத்திற்கு காணிக்கைப் படைக்க

அன்றாடம் மக்கள் பயன்படுத்திய நாணயத்தை அதிகமாக கொடுத்து செக்கேல் நாணயத்தை வாங்கி கோவிலுக்கு காணிக்கை செலுத்த வேண்டும். காண்க: நாணயம் மாற்றுவோரின் மேசைகளை கவிழ்த்துப் போட்டார் (மத். 21:12).

ஆக, நாணயம் அடிமைத் தனத்தின் அடையாளமாக இருந்தது. இறைவன் அடிமைத்தனத்தை விரும்புபவர் அல்ல. இஸ்ரவேல் மக்கள் அடிமைப்பட்ட வேளையில் விடுதலை வாழ்வை வழங்கியவர். இங்கேயும் சீசருக்கு உரியவற்றை சீசருக்கு கொடுங்கள் என்பதன் விதி, ரோமரின் அடிமைத் தனத்தை தூக்கி எறியுங்கள் என்ற ஆழமான சவால் மிக்க செய்தியை சுட்டிக் காட்டுகிறார் எனலாம்.

## *கடவுளுக்குரியவற்றை கடவுளுக்கு கொடுங்கள்*

“மண்ணுலகம் அதில் நிறைந்துள்ள அனைத்தும் ஆண்டவருடையவை. நிலவுலகும் அதில் வாழ்வனவும் அவருக்கே சொந்தம்” (திபா. 24 : 1).

இந்த உலகத்தில் உள்ளவைகள் அனைத்துமே கடவுளுக்கு சொந்தமானவை. அவருக்கு சொந்தமல்லாதது எதுவும் இல்லை. ஏனெனில் அவரே அனைத்தையும் படைத்தார். கடவுளுக்கு காணிக்கை செலுத்த கலப்படமில்லாத சுத்த உலோகத்தினால் செக்கல் நாணயத்தை படைக்கின்ற நீங்கள் உங்களை ஆண்டவருக்கு படையுங்கள். சுத்த நாணயத்தைவிட தூய உள்ளத்தைக் கொடுங்கள். “தூய்மையான உள்ளத்தோர் பேறு பெற்றோர்” (மத். 5 : 8). “உங்கள் நடத்தையிலெல்லாம் தூய்மை உள்ளவர்களாயிருங்கள்” (1பேது. 1 : 15). “தூய உள்ளத்தோடு ஒருவருக்கொருவர் ஆழ்ந்த அன்பு காட்டுங்கள் (1பேதுரு. 1 : 22). “தூய்மையான மனிதன் கடவுள் பயன்படுத்தும் வலிமையான ஆயுதம்”. ஆக இயேசு கிறிஸ்து தூய்மை வாழ்க்கையை ஆண்டவருக்கு படையுங்கள் என்ற ஆழமான உண்மையை எடுத்துரைத்தார்.

இவ்வாறு இயேசு கிறிஸ்து ஞானத்தோடும் அறிவுக் கூர்மையோடும், விவேகத்தோடும் பதிலளித்ததைக் கண்ட பரிசேயர்கள், ஏரோதியர்கள் வியந்து அவரை விட்டு போய்விட்டார்கள்.

எனவே நாமும் வாழ்வின் இக்கட்டான சூழ்நிலைகள் வரும்போது ஞானத்தோடும், விவேகத்தோடும் பேசும் மன நிலையை பெறுவோம். ஒருமுறைக்கு பலமுறை சிந்தித்து தூய உள்ளத்தோராய், நிதானமாக செயல்படுவோம். அமைதி காக்க வேண்டிய இடத்தில் அமைதிகாத்து, பேசவேண்டிய இடத்தில் தேவையான கருத்தை மட்டுமே பேசுவோம். கேள்வி கேட்பவர்களாக அல்லாமல் வாழ்வால் கேள்விகளுக்கு பதிலளிப்பவர்களாக வாழ்வோம்.

அருள்திரு. **N. ஜாண் பென்டிங்**

**20-04-2011** புனித வாரம் புதன்

# மங்கா செயல் செய்த மங்கை

**மத். 26:6-13**

*"உலகம் முழுவதும் எங்கெல்லாம் இந்நற்செய்தி அறிவிக்கப்படுமோ அங்கெல்லாம் இப்பெண் செய்ததும் எடுத்துக் கூறப்படும்." மத். 26:13*

தோன்றின் புகழோடு தோன்றுக.... (திருவள்ளுவர்) இப்படிப்பட்ட வார்த்தைகளை கருத்தில் கொண்டு மண்ணில் பிறக்கின்ற ஒவ்வொருவரும் உயர்ந்தவராக, சிறந்தவராக, வல்லவராக, பெரியவராக வாழ வேண்டும். கின்னஸ் புத்தகத்தில் தன்னுடைய செயல் மங்கா செயலாக இருக்க வேண்டுமென நினைக்கிறார்கள். கடந்த மே மாதம் அமெரிக்க சிறுவன் ஜேதர்மான் ரொமேரா தனது 13 வயதில் எவரெஸ்ட் சிகரத்தில் ஏறி என்றும் மங்கா செயலை படைக்க புறப்பட்டு வருகிறான். அவனது பேராவல், தனக்கு மிக இளவயதில் எவரெஸ்ட் சிகரத்தில் ஏறி சாதனை படைத்தவன் என்ற புகழ் என்றென்றும் இருக்க வேண்டும் என்பது தான். (தினத்தந்தி 10,11,2010,) இயேசு கிறிஸ்துவின் திருப்பணிக்காலத்தில் பெத்தானியாவில் தொழுநோயாளர் சீமோன் இல்லத்தில் இருக்கும் போதுபெண் ஒருத்தி விலையுயர்ந்த தைலம் கொண்ட படிகச் சிமிழுடன் வந்து அதை இயேசுவின் மீது ஊற்றி அவரை அபிஷேகம் பண்ணின அந்த மனப்பூர்வமாக செயல் இன்றும் மங்கா செயலாக கருதப்படுகிறது. இந்நிகழ்வு நான்கு நற்செய்தி நூல்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (மத். 26:6-13; மாற்கு.14:3-9; லூக்.7:36-48; யோ 12:1-8) யோவான் நற்செய்தியாளர் மட்டும் இந்த பெண் மரியாள் என்றும் மற்ற 3 பேரும் ஒரு பாவியான பெண் எனவும் குறிப்பிடுகிறார்கள். எப்படியாயினும், இன்றையத் தியான பகுதியின் அடிப்படையில் ஒரு பாவியான பெண் என கோடிட்டுகாட்டப்பட்டுள்ளது. யூத சமூகத்தில் இரண்டாம் தர குடிமக்களாக தீட்டானவர்களாக கருதப்பட்ட பெண் ஒருத்தி மங்கா செயலை செய்ததை கண்ட சீடர்கள் ஆச்சரியமடைந்தனர் மேலும் இன்றுமட்டும் இந்த மங்கையின் செயல் பாரெங்கும் நறுமணம் வீசி கொண்டிருக்கிறது. அப்படியானால் அவளுக்குள் காணப்பட்ட சிறந்த பண்புகள் குறித்து நாமும் தியானித்து அறிவது நலமானதாகும்.

## 1. பாரம்பரியங்களை உடைக்கும் துணிவு

பாரம்பரியங்கள் மக்களின் அன்றாட வாழ்வோடு பின்னிப்பிணைந்ததாகும். அதே வேளையில் மனித நேயமில்லாத

பாரம்பரியங்கள் மக்கள் வாழ்க்கைதரம் முன்னேற இடையூறாக இருந்தது. யூத வழக்கப்படி பாஸ்கா கொண்டாடவரும் மக்கள் பெத்தானியாவில் இரவு தங்குவதும் உறவுகளோடு இணைந்து விருந்துண்ணுவதும் இயல்பு. இப்படிப்பட்ட ஒருவிருந்தில் தான் இயேசு கிறிஸ்துவும் கலந்து கொண்டார். இந்த விருந்தில் பல பாரம்பரியங்கள் உடைக்கப்பட்டதை பார்க்கமுடிகிறது.

மத் 26 : 7 ன் படி அங்கு அவர் பந்தியில் அமர்ந்திருந்தபோது விலையுயர்ந்த நறுமணத் தைலம் கொண்ட படிகச்சிமிழுடன் பெண் ஒருவர் அவரிடம் வந்து அதை அவர் தலையில் ஊற்றினார். இங்ஙனம் அவ்வீட்டின் தலைவர் செய்யவேண்டிய இந்த செயலை பாவியான பெண் செய்தார். ஒரு பெண் இப்படிப்பட்ட பொது இடங்களில் பணிவிடை செய்யக்கூடாது என்ற தடையை இவள் மீறி செயல்பட்டாள். அந்த அளவிற்கு பாவியான பெண் பாரம்பரியங்களை உடைக்கும் துணிவுடையவளாக செயல் பட்டாள். இந்த துணிவுக்கு காரணம் அவளுக்குள் இருந்த ஆழமான இறைப்பற்றாகும். இதைக் கண்ட சீடர்கள் கோபமடைந்து, முறுமுறுத்தார்கள்(மத் 26 : 8) அத்துடன் அப்பெண்ணுக்கு தொல்லை கொடுத்தார்கள். நல்லது செய்யநினைக்கும் எந்த நபரும் அல்லலை ஏற்றுக் தான் ஆக வேண்டும். அதோடு பாரம்பரியங்கள் வாழ்வின் முன்னேற்றத்தை, வாழ்வின் மகிழ்ச்சியை தடைசெய்யக்கூடாது என்னும் உயரிய எண்ணத்துடன் துணிவுடன் செயல்பட்டாள். ஆகவே தான் இந்நாள் மட்டும் இந்த மங்கை மங்கா செயல் செய்தவள் என்னும் புகழ் பெற்றார். நாமும் வாழ்வு என்கிற துணியில் ஒட்டியிருக்கும் பாரம்பரியம் என்னும் கறையை உண்மையான ஆன்மீகம் என்ற சோப்பை போட்டு கழுவி அப்புறப்படுத்தினால் நம் வாழ்வும் நலமடையும்.

## 2. பரமனின் பாதம் அமரும் பணிவு

லூக்கா நற்செய்தியாளர் கூறும் போது (7 : 38) இயேசுவுக்குப்பின்னால் கால்மாட்டில் வந்து அவர் அழுது கொண்டே நின்றார். அவருடைய காலடிகளை தம் கண்ணீரால் நனைத்து... என்கிறார். விருந்தில் அமர்ந்திருந்த அனைவரும் பாவியாகிய பெண் இயேசுவை மாசுபடுத்திவிட்டாள் என்று கண்டனர். ஆனால் அவளோ பாவ உணர்வடைந்து கண்ணீரோடு இயேசு கிறிஸ்து எந்த பாவியையும் தள்ளாதவர் அல்லவோ! ஆகவே என்னை ஏற்றுக்கொள்வார் என்ற உறுதியுடன் பரமன் பாதம் பணிவுடன் அமர்ந்தாள்.

பழைய ஏற்பாட்டின் காலத்தில் இறைவாக்கினர்கள் அரசர்களை அபிஷேகம் செய்வது போல இந்த பாவியான மங்கையும் விலையுயர்ந்த பரிமளத்தைலத்தால் அபிஷேகித்தாள். கண்ணீரால் துடைத்தாள்.

பொதுவாக கூந்தல் பெண்களுக்கு அழகு. மேலும் பரிமளத்தைலம் அவள் சொத்து . இவைகளை அந்த பெண் இயேசுவின் பாதத்தில் படைத்து தன்னை வெறுமையாக்கி பணிவுடன் பணிவிடைசெய்தாள். மேலும் பணிவுடன் செய்த செயலே இன்னும் மங்கா செயலாக நிலைக்கிறது.

எல்லார்க்கும் நன்றாம் பணிதல்.... என்ற திருவள்ளுவரின் ஆலோசனை போலவே பணமோ, அதிகாரமோ, செல்வாக்கோ, ஒருவரை ஒருபோதும் உயர்வடைய செய்யாது ஆனால் பணிவு உள்ளம் தான் ஒருவரை வாழ்வில் உயர்வடைய அல்லது புகழடைய செய்யும். வரலாற்று சான்றுகளின் அடிப்படையில் பார்க்கும் போது இவ்வுலகில் அழிந்தவர்கள் எல்லாம் பதவிச் சண்டையிலேதான், ஆனால் உயர்ந்தவர்கள் எல்லாம் அவர்களது பணிவினாலே தான். ஆகவே இறைமக்களாகிய நாமும் அனுதினமும் பணிவுடன் பரமனின் பாதம் அமருவோமாயின் கனமடையலாம்.

### 3. பாராட்டுதலை பெறும் அர்ப்பணிப்பு

மத் 26:7.... பெண் ஒருவர் அவரிடம் வந்து அதை அவர் தலையில் ஊற்றினார். இது ஒரு முழுமையான அர்ப்பணிப்பை வெளிப்படுத்துகிறது. எப்படியெனில் தன்னால் இயன்றதை தக்க சமயத்தில் செய்ய முந்திக் கொண்டார். பொதுவாக எப்பொழுதும் இயேசு கிறிஸ்து அன்பினாலும், அர்ப்பணிப்பினாலும் முழுமனதுடன் பிறர் வாழ்வு மேன்மையை செய்யும் நற்செயல்களை புகழ்ந்திருக்கிறார். பாராட்டியிருக்கிறார். அங்ஙனமே இந்த பாவியான பெண் அர்ப்பணிப்போடு செய்த நற்செயலை அங்கீகரித்த ஆண்டவர் அவளை பாராட்டினார். எப்படியெனில் நாம் “Well done” என்பது போல ஆண்டவரும் என்னிடத்தில் நற்கிரியைச் செய்திருக்கிறார். She has performed a good service for me (NRSV(மத்.26:10) என புகழ்ந்து ஆசி வழங்குகிறார்.

நமதாண்டவருக்கு நாம் செய்யும் மனமகிழ்ச்சியூட்டும் நற்செயல்களை உலகத்தார் கண்டு இயேசுவின் சீடர்களை போல கோபமடையலாம், வீண் என்று கண்டிக்கலாம். பரியாசம் பண்ணலாம் தூற்றலாம் ஆனால் அது கடவுளின் பார்வையிலே நனறாகக் காணப்பட்டால் கடவுளும் மகிழ்கிறார். நம்மையும் புகழுகிறார்.

இறை மக்களாகிய நாம் செய்யும் ஒவ்வொரு செயலையும் கண்டு கொண்டிருக்கிற கடவுள் நம் நற்செயல்கள் மூலம் மகிழட்டும். எனவே பல்வேறு சாவல்கள், விமர்சனங்கள் நடுவில் வாழும் நாம் மங்கா செயல் புரிய நம்மையும் பாவியான மங்கையைப் போல அர்ப்பணிப்போம்.

அருள்திரு. **G.S. ஆல்வின் ஜெய்சிங்**

**21-04-2011** | *புனித வாரம் வியாழன்*

# இறையுறவின் விருந்து: நினைவு கூரும் திருவிருந்து

## EUCHARIST : IN REMEMBRANCE

ஒசே. 6:1-6 | Iகொரி. 11:23-26
திபா. 116 | லூக். 22:7-20

"*என்னை நினைவு கூரும்படி இதைச் செய்யுங்கள்.*" I*கொரி 11:24*

**மன்றாட்டு : எங்கள் நடுவினில் தங்கும் கடவுளே, நீர் திருமைந்தர் இயேசுவோடும், அவரது சீடர்களோடும் மேல்மாடி அறையில் செயலாற்றினீர். நாங்களும், இத்திருப்பந்தியினில் உம் மாட்சிநிறை பிரசன்னத்தை உணர திருவாக்குகள் வாயிலாய் எம் கண்களைத் திறந்தருளுவீராக. இடையறா இடையூறுகள் நிறைந்த உலகில் சிலுவையின் மாண்பினை எண்ணி உமது அன்புக்கும், அமைதிக்கும், நீதிக்கும் எங்களை அடையாளங்களாக்க வேண்டுமென இறைமைந்தர் இயேசுகிறிஸ்து வழி வேண்டுகிறோம். - ஆமென்.**

திருவிருந்து இறை அன்பை வெளிப்படுத்தி இறை உறவில் வளர்க்கும் விருந்து. மட்டுமின்றி ஓர் நினைவின் அடையாளமும் ஆகும். இவ்வுலகினிலே பல நினைவு சின்னங்கள் (Momentos) எழுப்பப்பட்டுள்ளன. ஆனால் ஆண்டவர் இயேசு திருச்சபைக்குத் தந்த இந்த முறை அவரது மரணத்தை வெளிக்காட்டும் நோக்கத்துடன் அளிக்கப்பட்டுள்ளது. திருவிருந்தில் இறை அருள் வெளிப்படுத்தப்பட்டு பிறரை இரட்சிக்கும் கிருபையின் ஈவாக அமைகின்றது. இன்று திருவிருந்து பல வேளைகளில் ஒரு சடங்காக மாறிவிடுகின்றது. நினைவுகூரப்பட வேண்டிய முக்கிய கருத்துக்கள் மறக்கப்பட்டும் மறைக்ககப்பட்டும் போய்விட்டது.

திருவிருந்தினை சடங்காச்சாரமாக நிறைவேற்றும் ஒரு பிரிவினர் அது எப்பொழுதும் காலையில் தான் நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் மற்றொரு பிரிவினர், தூய திருப்பீடத்தண்டை முழங்காற்படியிட்டே ஏற்க வேண்டும் எனவும் கூறுகின்றனர். திருவிருந்து ஒரு சடங்கின்படி சபைகுரு மட்டும் திராட்சை ரசத்தில் பங்கு பெற சபையார் அப்பம் மட்டுமே புசிக்கின்றனர். திருவிருந்து ஒரு எளிய நினைவு சின்னம் என்றும் நம்மை மீட்டெடுக்கும் கிருபையின் ஈவு என்பதனையும் பல வேளைகளில் மறக்கப்பட்டு போகின்றது.

திருவிருந்தில் பகிரப்படும் 'அப்பம்' கிறிஸ்துவின் திருவுடலோடும் திராட்சை கிறிஸ்துவின் இரத்தத்தோடும் ஒன்றுப்படுத்துவதின் வெளியீடான நினைவு கூருதலை வலியுறுத்துகிறது. Max Thurian என்பவர் தொகுத்த 'Churches respond to BEM' என்ற தொகுப்பிலே, "திருவிருந்து நமது இரட்சிப்பை உறுதிப்படுத்தி, வாழ்வை பெலப்படுத்தி வருங்கால திருப்பணிகளுக்காய் நம்மை ஒன்றிணைக்கின்றது" என்று திருவிருந்தின் முப்பணி குறிப்பிடப்பட்டுள்ளது.

இறை உறவினை வெளிப்படுத்தும் திருவிருந்து நினைவு கூரப்பட வேண்டிய கட்டாயங்கள் என்ன என்பதனை கற்றுக் கொள்வோம்.

### 1. அறிவிப்பதற்கு நினைவு கூற வேண்டும் :

**Remember so as to proclaim** I கொரி. 11:26

"நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்த பாத்திரத்தில் பானம்பண்ணும் போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்."

பவுலார் திருவிருந்தின் மூலம் இயேசுவின் மரணத்தை வருகை மட்டும் அறிவிப்பதாக கூறுகின்றார். பிறர் வாழ கிறிஸ்து தன்னை அர்பணித்தது போல கிறிஸ்துவை பின்பற்றுவோரும் பிறரை வாழ்விக்க தங்களை அர்ப்பணம் செய்வது அவசியம். அப்பம் பிட்குதல் கிறிஸ்துவோடு நம்மை இணைக்கின்றது என்பதை உலகோருக்கு அறிவிக்கவே இவ்விருந்தினை நினைவு கூர வேண்டும்.

திருவிருந்தின் மூலமாக கிறிஸ்துவோடு வாழும் புது வாழ்வு பிறக்கின்றது. திருவிருந்தின அறிமுக உரையாகிய லூக்கா 22:15 ல், "நான் பாடுபடுகிறதற்கு முன்பாக உங்களுடனே கூட இந்த பஸ்காவைப் புசிக்க மிகவும் விருப்பமாயிருந்தேன்" என்று ஆண்டவர் இயேசு தான் தன் அடியவரோடு விரும்பும் கூட்டுறவினை வெளிப்படுத்தினார். 'Communion' என்று திருவிருந்தினை குறிக்கும் ஓர் ஆங்கில வார்த்தை 'Come into union with God and fellow creatures' என்று பொருள்படும் Holy communion is a feast of relationship.

இறை உறவில் விருந்தாகிய திருவிருந்து அதில் பங்கு பெறும் போதெல்லாம் கிறிஸ்து என் பாவங்களுக்காக மரித்தார் என்ற உணர்வை நம்மில் எழுப்புவதுடன் அந்நற்செய்தினை உலகிற்கு அறிவிக்கவும் அழைக்கின்றது. உலகத்தால் வெறுக்கப்பட்ட எவரும் இறைவனிடம் தாராளமாக வரலாம் என்பதை அறிவிப்பதற்காகவே இறை உறவின் விருந்து ஏற்படுத்தப்பட்டுள்ளது.

லூக்கா 4:18, 19 ல் நாசரேத் அறிக்கையிலே இயேசு கிறிஸ்து, "சிறைபட்டவர்களுக்கு விடுதலையையும் குருடருக்குப் பார்வையையும் பிரசித்தப்படுத்தவும், நொறுங்குண்டவர்களை விடுதலையாக்கவும் கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தைப் பிரசித்தப்படுத்தவும் என்னை அனுப்பினார்" என்று தமது பணியின் சிறப்பு நிலைகளை வெளிப்படுத்தினார்., வாழ்வில் பலவித நிலைகளிலே கட்டப்பட்டுள்ள மானிடத்திறகு இறை உறவினையும் அதின் மூலம் அருளப்படும் விடுதலை வாழ்வினையும் வெளிப்படுத்தும் ஊடகமாய் திருவிருந்தினை அறிவிக்கவே இந்த சாக்கிரமந்து நினைவு கூரப்பட வேண்டும்.

## 2. நன்றி செலுத்த நினைவு கூர வேண்டும் :

## (Remember so as to give thanks)

திருவிருந்திற்கு பயன்படுத்தப்படும் **(Euharist)** என்ற லத்தீன் வார்த்தை 'நன்றி செலுத்ததுதல்' என்ற பொருளைக் கொண்டது. நினைத்து நினைத்து போற்றி மகிழும் ஓர் அனுபவம் திருவிருந்தின் சிறப்பாகும். பஸ்கா பண்டிகைக்கு புதிய வடிவம் திருவிருந்தில் தரப்படுகின்றது. இஸ்ரவேலர் ஒன்றிணைந்து எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து பெற்ற விடுதலையினை நினைவு கூர்ந்து கொண்டாடுவதாய் விளங்கியது. பஸ்கா பண்டிகை அல்லது பஸ்கா விருந்து விப. 12:1-28 அடங்கிய வசனங்களில் பஸ்கா பண்டிகை ஆசரிக்கும் முறை குறிப்பிடப்பட்டுள்ளது. குறிப்பாக விப. 12:14 ஆம் வசனம் அந்த நாள் உங்களுக்கு நினைவு கூறுதலான நாளாய் இருக்கக்கடவது; அதை கர்த்தருக்குப் பண்டிகையாக ஆசரிப்பீர்களாக; அதை உங்கள் தலைமுறைதோறும் நித்திய நியமமாக ஆசரிக்கக்கடவீர்கள் என்று பஸ்கா பண்டிகை நினைவு கூரப்படவும் ஆசரிக்கபடவும் வேண்டியதின் அவசியம் கூறப்பட்டுள்ளது. பஸ்கா பண்டிகையின் அன்று நமது ஆண்டவர் இயேசுவால் திருவிருந்து நிறுவப்பட்டதால் அவரது மீட்பின் செயல்களளையும் ஒப்பற்ற தியாகத்தையும் நமக்கு வெளிப்படுத்தி அதனை நன்றியோடு நினைவுகூரும் விருந்தாகவும் அமைகின்றது. லூக். 22:15-18 வசனங்களில் பஸ்கா விருந்து ஆசரிக்கப்படுவதையும் 19,20 வசனங்களில் புதிய உடன்படிக்கையாக திருவிருந்து ஆண்டவர் இயேசுவால் நிறுவப்படுவதனையும் காணமுடிகிறது. திருவிருந்தின் போது இயேசு அப்பத்தை எடுத்து நன்றி செலுத்தி அதனை பிட்டு சீஷர்களுக்கு கொடுத்தது போல இவ்விருந்தில் பங்கு பெறும் அனைவரும் தாங்கள் பெற்றுள்ள வாழ்விற்காய் நன்றி சொல்லுவது மட்டுமின்றி தங்களது

வாழ்வை பிறர் நலனுக்காய் பகிர கொடுத்தலும் வேண்டும். அனை தெரசா. பிளாரன்ஸ் நைட்டிங்கேல், 'சிராம்பூர் டிரையோ' என்று அழைக்கப்படும்.

வில்லியம் தொபியாஸ் றிங்கல் தௌபே, ஐடா ஸ்கடர் மற்றும் வில்லியம் கேரி போன்ற பலர் தங்கள் வாழ்வினை தியாகம் செய்ததின் விளைவாய் இன்று நாம் பல திருப்பணிகளையும் நிறுவனங்களையும் பெற்றுள்ளோம். வெறுமையாக்குதலும் அடிமையாக்குதலும் இந்த விருந்தின் சிறப்பு அம்சங்கள். யோவான் 13:4-8 வசனங்களில் சீஷருடைய கால்களை கழுவி தன்னை பிறருக்கு சேவை செய்யும் பணியாளனாய் வெளிப்படுத்தின இயேசுவின் அன்பும் செயலும் நினைவு கூறப்பட்டு நன்றி செலுத்தப்பட வேண்டும். நான் உங்களுக்கு செய்தது போல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன்''(யோவான் 13:15) என்று மாதிரி வாழ்வை நமக்கு காண்பித்துள்ளதை நினைத்து நன்றி கூர வேண்டும், இறை உறவினை வளப்படுத்தும் திருவிருந்து நன்றி செலுத்த நினைவு கூறப்படவேண்டும்.

### 3. இரட்சிக்கப்பட நினைவு கூர வேண்டும் :

### (Remember so as to be saved)

இறை உறவின் விருந்து நம்மை மீட்பின் வழி சேர்க்கவும் உறவினை புதுப்பிக்கவும் ஊடகமாய் அமைகின்றது. (Remembrance) என்ற நினைவுகூர்ந்தலுக்கான ஆங்கில வார்த்தை பகுக்கப்பட்டு பார்க்கையில் Re-Member' (மீண்டும் அங்கமாதல்) என்ற பொருள் தருகின்றது. திருவிருந்து வாழ்வு தரும் விருந்தாகும். லூக்கா நற்செய்தியாளர் மட்டுமே திருவிருந்து அருளும் இறை உறவினை வெளிப்டுத்த 'உங்களுக்காக கொடுக்கப்படுகிற' (Given for you) லூக்கா 22:19 மற்றும் 'உங்களுக்காகச் சிந்தப்படுகிற' (Poured out for you) லூக்கா 22:20 என்கின்ற கருத்தாழம் மிக்க சொற்றொடர்களை பயன்படுத்தி உள்ளார். லூக்கா 22:20இல் சொல்லப்பட்டுள்ள புதிய உடன்படிக்கையின் இரத்தம் மன்னிப்பு அருளும் நம்பிக்கையையும் அவ்வுடன்படிக்கையினை நிறைவேற்ற தூய ஆவியர் தரும் வழிகாட்டலையும் உணர்த்துகின்றது. பஸ்கா பலி எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை கொடுத்தது போல சிலுவை பலி பாவ அடிமைத்தனத்திலிருந்து விடுதலை தருகின்றது. உடல் உறுப்புகளை மாற்றம் செய்து பேறு பெறுவோர், தானம் செய்தவரின் பண்பு நலன்களை பெற்றுக் கொள்வதுபோல (In communion, we get transformation from the innor most parts of our soul to the outermost tips of our finger into

the glory and likeness of Jeses Christ) திருவிருந்தில் கிறிஸ்துவின் திருவுடலோடும் இரத்தத்தோடும் பங்கு பெறுபவர் அவரது பண்பு நலன்களை பெறுவது அவசியம். யோவான் 6:53-58 இல் வரையுள்ள வசனங்களில் அருள்நாதர் இயேசு நானே வாழ்வு தரும் அப்பம் என்கிறார். யோவான் 4:14ல் நான் கொடுக்கும் தண்ணீரை குடிக்கிறவனுக்கோ ஒரு போதும் தாகமுண்டாகாது நான் அவனுக்கு கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள்ளே நித்திய வாழ்வாக ஊறுகிற நீருற்றாயிருக்கும் என்கிறார். இரட்சிப்பு என்பது நிறைவுப் பெற்ற வாழ்வு நிறைவற்ற நிலையில் வாழ்வின் பல சவால்களையும் சிக்கல்களையும் சந்திக்கின்றோம். நிறைவாழ்வு பெற நம்மில் உள்ள குறைவுகளை அடையாளம் காண்பதும் அதனை சரி செய்ய வழி காண்பதும் அவசியம். திருவிருந்து தொழுகை முறையில் இயேசு கிறிஸ்துவின் விலைமதியாத திருவுடலாலும் இரத்தத்தாலும் பாவமுள்ள நம் உடலும் ஆன்மாவும் தூய்மையாகி எப்பொழுதும் நாம் அவருக்குள்ளும் அவர் நமக்குள்ளும் உறைந்திருப்பதற்கு ஏற்புடைய நிலையிலே அவருடைய திருவுடலை உண்டு அவருடைய இரத்தத்தை பானம் பண்ணுகிறோம் என்று அறிக்கை செய்கிறோம். தன்னையே நமக்காக தந்து தன்னை முற்றிலும் வெறுமையாக்கின இறை இயேசுவின் தியாக செயலினை திருப்பந்தியில் நினைவுகூருகையில் இரட்சிப்புக்குள்ளாய் நிறைவிற்குள்ளாய் வழிநடத்தப்படுகின்றோம். அந்தியோக்கியாபைச் சார்ந்த இக்னேஷியஸ் திருவிருந்தில் பிட்கப்படும் அப்பத்தினை சாவாமைக்கான மருந்து என்கிறார்., தூய பவுல் கூட கிறிஸ்து நமக்காகத் தம்மை கடவுளுக்கு நறுமண காணிக்கையாகவும் பலியாகவும் ஒப்புக் கொடுத்து நம்மில் அன்பு கூர்ந்தது போல நீங்களும் அன்பின் வாழ்க்கை வாழுங்கள் என இரட்சிப்பின் வழிகாட்டுதலை தருகின்றார்.

இறை அன்பை வெளிப்படுத்தி இறை உறவில் வளர்க்கும் திருவிருந்தினில் பங்கு பெறுகின்ற போது இயேசுவின் மரணத்தை நினைவு கூர்ந்து, அறிவித்து பெற்ற, மற்றும் பெறவிருக்கும் நன்மைகளுக்காய் நன்றி சொல்லி, இரட்சிப்பின் நிறைவுக்குள்ளாய் வழி நடத்தப்படுவோம். ஆமென்.

அருள்திரு. **P. சேம் பிளஸ்சிங்**

**22-04-2011** | *புனித வாரம் வெள்ளி*

# இறையன்பின் திருவெளிப்பாடு

## Revelation of God's love

ஏசாயா. 52:13-53:6 | Iபேதுரு 3:13-22
திபா. 22 | மாற்கு 15:21-41

*இயேசுவினது மரணத்தண்டனைக்கான காரணத்தை அறிவிக்க "யூதரின் அரசன்" என்று அவர்கள் எழுதி வைத்தார்கள். மாற்கு 15:26*

**மன்றாட்டு : அளவில்லா அன்புநிறைந்த கடவுளே, மானுடத்தின் விடுதலைக்காய் தமது மைந்தர் இயேசுவை சிலுவையில் மரிக்க அருளினீர். தம்மை சிலுவையில் எங்களுக்காய் அர்ப்பணித்த செயல் உடைக்கப்பட்ட நிலையிலும், ஒதுக்கப்பட்ட சூழலிலும் இருப்போருக்கு பணியாளர்களாக எங்களை அர்ப்பணிக்கவும், அன்பின் பணியற்றத் தூண்டுவதாகயும் அமைந்தருள வேண்டுமென அன்பர் இயேசுகிறிஸ்துவின் வழியாக வேண்டிக்கொள்கிறோம். - ஆமென்.**

தொடக்கமுதல் யூதேயா நாட்டினர் யூதர் என அழைக்கப்பட்டுள்ளனர். மூதாதையரில் ஒருவரான யாக்கோபு இஸ்ரவேல் எனும் பெயர் மாற்றம் பெற்றப்பின் அவரது சந்ததியினரில் யூதா குலத்தினர் 'யூதர்' என்றழைக்கப்பட்டனர். காலப்போக்கில் யூதா குலமும் பென்யமீன் குலமும் ஒன்றிணையவே வலுமிக்க 'யூத அரசு' உருவாயிற்று என்பது உலக வரலாற்று உண்மை.

தொடர்பாக மத்தேயு 2:1-4, ஏசாயா 9:6, மத்தேயு 2:5,6 படித்து விட்டு யோவான் 1:17,18 படித்துப்பார்த்தால் நம் விவிலியம் தரும் இறையன்பின் திருவெளிப்பாடு இயேசுகிறிஸ்து ஒருவரே எனத் தெளிவாகக் கண்டிடலாம்.

இயேசுகிறிஸ்துவின் பாடு மரணச் சூழலை லூக்கா 22:63-23:38 வரை தொடர்ந்து படித்தால் இறையன்பின் திருவெளிப்பாடு முழுமையாக அறிந்துணர முடியும். உலகின் மீட்பராகி கிறிஸ்து துன்ப நிலைக்கும், பழித்துரைத்தலுக்கும் தொடர் விசாரணைகள் எனத் தலைமை சங்கத்தில் மூப்பர்கள், தலைமைக் குருக்கள், மறைநூல் அறிஞர்கள் முன்னிலையிலும், இரவு பகலென ஆளுநர் பிலாத்துவிடமும், பின்பு கலிலேய அரசன் ஏரோதிடமும், மீண்டும் பிலாத்துவிடமும் விசாரணைகள் நடத்தப் பெற்று இறுதியில் சிலுவையில் அறைய தீர்ப்பளித்து மரணத்திற்கு உட்படுத்தப்பட்டார். கொல்கதா மலைக்குச் சிலுவைமரத்துடன் சுமந்த வரச்செய்த அச்சிலுவையில் ஆணிகளில் அறைந்துத் தொங்கவிடப்பட்டார்.

இயேசுவினது மரணத் தண்டனைக்கான காரணத்தை அறிவிக்க 'யூதரின் அரசன்' என்று எபிரேயம், இலத்தீன், கிரேக்கம் ஆகிய மொழிகளில் எழுதி சிலுவையின் மேல் தொங்கவிடப்பட்டிருந்தது. இன்றும் அதே இடத்தில் ஓர் ஆலயம் கட்டப்பட்டு, உலகச் சரித்திர அடையாளமாய் உள்ளதனை நாம் காணவும் முடிகிறது.

## 1. துன்புறும் ஊழியரில் இறையன்பின் திருவெளிப்பாடு

**(ஏசாயா 52:14)**

"துன்புறும் ஊழியரைக்கண்ட பலர் திகைப்புற்றனர். அவரது தோற்றம் பெரிதும் உருக்குலைத்ததால் மனித சாயலே அவருக்கு இல்லாதிருந்தது; மானிடரின் உருவமே அவருக்கு இல்லை" (ஏசா. 52 : 14) மூதாதையரில் ஒருவரான யோசேப்பு-குறித்து தொடக்க நூல் 39-ம் அதிகாரம் நாம் படிக்கையில், பார்வோன் எனும் எகிப்து நாட்டின் அரசன் தன் படைத்தலைவன் போத்திப்பாரால் இஸ்மயேலரிடமிருந்து விலைக்கு வாங்கப்பட்டு கையளிக்கப்பட்டார். ஆனால் அங்கும் ஆட்சி, அரண்மனை பொறுப்புக்கள் முழுவதும் நேர்த்தியாய் செய்து நிறைவேற்றவே, பார்வோன் அரசனின் மனைவி தீச் செயலுக்கு உட்படுத்த முயற்சிக்கையில் (வச.9) "இந்த மாபெரும் தீச்செயலைச் செய்து கடவுளுக்கு எதிராய் பாவம் செய்யலாமா?" என்றார். கிடைத்தது சிறைத்தண்டனை. ஆனால் இறையன்பின் வெளிப்பாடாக (வச.21-23) அவர் செய்த யாவற்றிலும் வெற்றி அளித்தார் ஆண்டவர்.

அதிகாரம் 41:37 முதல் 45 வரை உயர்வுகள் பெற்று, எகிப்தின் ஆளுநர் ஆனார் என இறைவன் அருளும் உயர்வுகளையும் காணமுடிகிறதல்லவா?

தீவிரமாய் திருச்சபையைத் துன்பப்படுத்திய சவுல் எனப்பட்ட பவுல் (தி.பணி.13:9) கூட துன்புற்று, பார்வையே இழந்தச் சூழலில் அனனியா ஜெபிக்க பார்வை பெற்றுக்கடவுளின் சாட்சியாக மாறி திருப்பணித் துவக்கினார். உடனே யூதர்கள் பவுலைக் கொன்றுவிடத் தேடிய சூழலில் இரவில் கூடையில் வைத்து, நகர மதில்வழியாக இறக்கிவிடப்பட்டு திருப்பணித் தொடர்ந்தும் இறையன்பின் திரு வெளிப்பாட்டின் நிகழ்வுகளே.

## 2. உயிர் விடுதலில் இறையன்பின் திருவெளிப்பாடு

**(மாற்கு 15:37,39)**

இயேசுவோ உரக்கக் கத்தி உயிர்துறந்தார் (37) அவருக்கு எதிரே நின்றுகொண்டிருந்த நூற்றுவர் தலைவர், அவர் இவ்வாறு உயிர் துறந்ததைக்கண்டு, "இம்மனிதர் உண்மையாகவே இறைமகன்" என்றார் (39) இது இயேசுவின் உயிர்விடுதலில் இறையன்பின் திருவெளிப்பாடு.

தொடக்கத் திருச்சபையின் திருத்தொண்டர் ஏழு நபரில் ஒருவரான ஸ்தேவான் (தி.பணி. 6:5; 7:52-60) முழந்தாள் படியிட்டு உரத்தகுரலில்,

“ஆண்டவரே, இந்த பாவத்தை இவர்கள் மேல் சுமத்தாதேயும்” என்று சொல்லி உயிர்விட்டார். இதுமுதல் மூப்பர் ஒருவரின் உயிர்விடுதலில் இறையன்பின் வெளிப்பாடு நிகழ்வன்றோ?

கி.பி. 68-ம் ஆண்டில் இயேசுகிறிஸ்துவின் சீடரில் பேதுரு சிலுவையில் அறைந்து கொல்லப்பட நேர்ந்தபோது, இறுதி வேண்டுகோளாய் தன்னைச் சிலுவையில் தலைகீழாக அறையப்பட்டு இறையன்பின் இரத்த சாட்சியானாரே.

சீடர் தோமா நம் குமரி, கேரளா, கோவா பணிகள் முடித்து சென்னை மயிலாப்பூரில் உயிர்விடுதலிலும் சாட்சிகளாய் இன்றும் இவ்விடங்களில் இறையன்பின் திரு வெளிப்பாடு மிளிர்ந்து காணப்படுகிறதே.

தி.பணி. 9:36-42-ல் யோப்பா நகரில் தபித்தா அல்லது பெண்மான் எனும் பொருள் கொண்ட தொற்கா எனும் பெண்சீடர், இரக்கச் செயல்புரிந்தவள் உடல் நலம்குன்றி இறந்து உடலை குளிப்பாட்டி மேல்மாடியில் கிடத்தியிருக்க, பேதுரு முழந்தாளில் நின்று இறைவேண்டல் செய்தபோது உயிருடன் எழுந்து நின்றாளேயது இறையன்பின் ஓர் திருவெளிப்பாடன்றோ?

## 3. *ஆவிக்குரிய இயல்புடையோரில் இறையன்பின் திருவெளிப்பாடு* (I பேதுரு 3:18)

“கிறிஸ்துவும் உங்கள் பாவங்களின் பொருட்டு ஒரே முறையாக இறந்த ........இறந்தாரெனினும் ஆவிக்குரிய இயல்புடையவராய் உயிர்பெற்றெழுந்தார்” பாவ வாழ்க்கையைப் பொறுத்தமட்டில் நாமனைவரும் இறந்தவர்கள். ஆனால் இயேசுகிறிஸ்துவோடு இணைந்து வாழ்ந்தால் நாம் கடவுளுக்காக வாழ்கிறவர்கள் ஆயிடுவோம் அன்றோ? (உரோமர் 6:11)

மேகம் திரண்டு வருவதுபோல ஆவிக்குரிய வாழ்வு வாழ்ந்தோர் யாவரும் நம்முடன் உள்ளதால் பாவ வாழ்வை உதறி தள்ளிவிட்டு நமக்கு தரப்பட்டுள்ள வாழ்வான ஓட்டப்பந்தயத்தில் கிறிஸ்துவோடுள்ளோம் என்னும் மனவுறுதியோடு ஓடுவோம். எபிரேயர் 12:1

உலகச் சரித்திரத்தையே உடைத்து கிறிஸ்துவுக்கு முன் BC எனவும் கிறிஸ்துவுக்கு பின் AD எனவும் உருவாக்கி இன்று 2010 ஆண்டுகள் கடந்தள்ளது. நம் பாவ வாழ்வுக்கு மரித்து ஆவிக்குரிய இயல்புடையோராக நாம் உயிர்ப்பிக்கப்பட்டுள்ளோமெனில் இறையன்பின் திருவெளிப்பாடுகளுக்கு நாமும் சாட்சிகளாகச் செயல்படுவோம்.

அருள்திரு. **காட்பிரே சாமுவேல்**

*சிலுவை திருமொழி : 1* *முதலாம் திருவாக்கு*

# உறவின் தொடக்கம்

லூக். 23 : 32-37

*அப்பொழுது இயேசு, "தந்தையே, இவர்களை மன்னியும். ஏனெனில் தாங்கள் செய்வது என்னவென்று இவர்களுக்கு தெரியவில்லை" என்று சொன்னார். லூக். 23:34*

இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணம் என்பது ஆதிக்க சக்திகளினால் கொடுக்கப்பட்ட அநீதியான தண்டனை, சட்டத்துக்கு உட்படாத மன்ற கூடுகைகள், குற்றப்படுத்துவோரால் குற்றத்தை உறுதிச் செய்ய இயலாத நிலை (லூக். 23:22, மத் 26:60), படைவீரர்களின் ஏளனம் (மத். 27:29-30) இச்சூழல்களில் சிலுவையில் தொங்கி நிற்கின்ற இயேசு கிறிஸ்து அனைத்தையும் உய்த்துணர்ந்தவராய், தந்தையே இவர்களை மன்னியும், தாங்கள் செய்வது என்னவென்று தெரியவில்லை" என்று கூறினார்.

இக்கூற்றில் இயேசு கூறிய "மன்னிக்கப்பட வேண்டிய இவர்கள்" யார்?

❖பொய் சான்று சொல்லாதே (வி.ப. 20 : 16) என்ற கட்டளையைச் செயல்முறைப்படுத்த தவறிய, பொய் சான்றுகளை உருவாக்கிய தலைமை மன்றத்தினரின் கூட்டமா? (மத். 26:59)

அல்லது

❖கடவுளின் மகனாகிய கிறிஸ்து (மத். 16:18) என்று அறிக்கை செய்து கற்பாறை என்ற பட்டத்தினைப் பெற்றும், கடவுளின் மகனை சபிக்கவும், ஆணையிடவும் செய்த பேதுருவா? (மத். 26: 73-74)

அல்லது

❖ஆட்சியாளரிடம் நற்பெயர் பெறுவதற்காக, அநீதியான செயல்களால் அவர் சொன்னதையும், சொல்லாதையும் நிறைவேற்றிய படைவீரரா? (மத். 27:27-31)

அல்லது

❖ ஆட்சியாளருடைய தூண்டுதல்களினால் இயேசுவை சிலுவையில் அறையும் என்று கூக்குரல் எழுப்பிய சாதாரண மக்கள் கூட்டமா? (மாற். 15:11)

ஆம், அத்துணைக் கூட்டத்தினரையும் இணைத்து, இச்சமுதாயத்தில் தெரிந்து தவறுகள் இழைத்தவரையும் தெரியாமல் செய்கிறார் என்று காண்கின்ற தந்தையின் உள்மனநிலையின் வெளிப்பாடே இக்கூற்றாகும்.

இயேசு கிறிஸ்து கூறிய மன்னிப்பு எப்படிப்பட்டது மூன்று குறிப்புகளில் சிந்திக்கலாம்.

### 1. மன்னிப்பு : நிரந்தரமானது

சிலுவையில் தொங்கி நிற்கும் இயேசு கிறிஸ்து அநீதியாக துன்புறுத்தப்பட்டார். நீதிக்கு மாறாக துன்பப்படுத்தப்பட்ட ஆண்டவரே மன்னிக்க ஆற்றல் படைத்தவர் என்பதை இக்கூற்று வெளிப்படுத்துகிறது. மானிட மகன் பாவங்களை மன்னிக்க ஆற்றல் உடையவராய் உலகினில் வந்தார் (லூக். 5:24). இம்மன்னிப்பு நிரந்தரமானது, மாற்றமில்லாதது. துன்புறுத்தப்பட்டவர் துன்புறுத்தியோரை மன்னியாவிட்டால் கடவுள் மன்னிப்பதில்லை (யோவான் 20:23). இன்றும் அநீதியாக துன்புறுத்தப்பட்டவர், துன்புறுத்தியோரை மன்னித்தால் அம்மன்னிப்பு நிரந்தரமானதாகும்.

### 2. மன்னிப்பு : நிபந்தனையற்றது

இயேசு கிறிஸ்துவின் மன்னிப்பு நிபந்தனையற்றதாகும். எத்தனை முறை மன்னிக்க வேண்டும்? ஏழுமுறை மட்டுமா? என்று கேட்ட பேதுருவுக்கு "ஏழு முறை மட்டுமல்ல; எழுபது தடவை ஏழுமுறை" என்றார் ஆண்டவர் (மத். 18:21). அதாவது இவ்வளவு முறை மட்டுமே மன்னிக்க வேண்டும் என்ற நிபந்தனையில்லாதது மன்னிப்பு. தீமைச் செய்வோருக்கும் நிபந்தனையில்லாத மன்னிப்பு வழங்க வேண்டும் என்பது கடவுளின் திருவுளம் (மத். 5: 43 44, மத். 12,18:35). நாம்சிலுவைப் போன்ற துன்பச் சூழலிலும், மகிழ்வின் நிலையிலும் மன்னிப்பு வழங்க அழைக்கப்படுகிறோம் (லூக். 23:34). மன்னிப்பு வழங்க எச்சூழல்களும் தடையாக இருக்க முடியாது.

### (3) மன்னிப்பு: நடு தீர்ப்பளிப்பது :

கிறிஸ்துவின் மன்னிப்பு வன்முறைக்குத் தீர்ப்பளித்தது. அதிகார ஆற்றல்களுடன் இருந்த சமயகுருக்கள் மற்றும் ஆளுநர் வன்முறையின் வாயிலாகச் சிலுவையைக் கொடுத்தனர். சிலுவையின் அடையாளங்களான பொய், ஏளனம், வாரினால் அடிகள், அநீதியான மன்ற தீர்ப்புகள்................. (மத். 26:59, 27: 27 31) இவைகளின் நடுவில் ஆண்டவரின் மன்னிப்பு அத்துணை வன்முறைக்கும் சாவு மணி அடித்தது. உலக புரிதலில் வன்முறைக்குத் தீர்வாக வன்முறை, அடிபணிதல் என்ற நிலையினை மாற்றி மன்னிப்பு என்ற கூற்றால் வன்முறையாளனும் மனந்திரும்பி வாழ அழைப்பு கொடுப்பது கிறிஸ்துவின் மன்னிப்பாகும்.

சிலுவையில் வெளிப்பட்ட மன்னிப்பால் மக்கள் கூட்டம் இயேசுவின் பக்கம் திரும்பியது. (யோவா.12:32)

அன்புக்குரியோரே மன்னிப்பு கடவுளின் பண்பு. நிரந்தரமான, நிபந்தனையற்ற தீர்ப்பளிக்கிற மன்னிப்பை வாழ்வுக்குச் சொந்தமாக்குவோம்.

“இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண
நன்னயம் செய்து விடல்” - திருக்குறள்

சிலுவையில் கசக்கப்பட்ட
இயேசுவாகிய திராட்சைச்செடி
பூக்க தவறவில்லை முதல் பூ
‘மன்னிப்பு’

நாமும் மன்னிப்போம்; மனநிறைவடைவோம்; தூயாவியார் அதற்குரிய பாதைகளில் நடத்துவாராக. ஆமென்.

**அருள்திரு. S. கிரீஷ்குமார்**

*மனித சாயலில் ஜொலிக்கும் தேவனின் தத்ரூபமே கிறிஸ்து அந்த ஜொலிப்பு நிரந்தரமானது.*

A.W. டோசர்

**சிலுவை திருமொழி : 2** **இரண்டாம் திருவாக்கு**

# உலக பிணைப்பின் இயக்கம்

லூக். 23 : 38-43

*"நீர் இன்று என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர்." (லூக்கா 23 : 43)*

சிலுவை மரணம் ரோமை அரசு கொடிய குற்றம் புரிந்தோர்க்கு கொடுக்கும் அதிகபட்ச தண்டனையாகும். கொடியவருள் ஒருவராகக் கருதப்பட்டார் (ஏசாயா 53: 12) என்ற தீர்க்க உரைப்படி இரு குற்றவாளிகள் நடுவில், குற்றமற்றவர் குற்றம் சாட்டப்பட்டு அறையப்பட்டார். இந்நிலையில் ஒருவன் அவரை இகழ்கிறான் (லூக்கா 23: 39) மற்றவனோ உணர்வடைந்தவனாய் இறையரசில் தன்னையும் ஏற்றுக்கொள்ள மன்றாடுகிறான். தன் தவறுணர்ந்த கள்வனுக்கு இயேசு நாதர் அருளிய மீட்பின் உறுதிமொழியே இது.

## இன்று

இறை அன்பு இடையறாமல் இயங்கும் அன்பு. நேற்றும் நாளையும் அல்ல, இன்று. விடுதலை வாழ்வு பார்க்க முடியாத என்றோ வரப்போகிற ஒன்றல்ல, இன்றைக்கே என கூறுகிறார். எனது பேரப்பிள்ளையின் வாழ்வில் அல்ல, என் வாழ்விலேயே விடுதலையைக் காண்பேன் எனும் உறுதி. நாளை என்பது தொய்வு கொடுக்கும் சிந்தனை. இன்று என்பதே சிறப்பு. தென்னாப்பிரிக்காவில் இருக்கும் கறுப்பு இனமக்கள் இன்று இப்போதே என்று பேராடியதால் தான் அவர்கள் விடுதலை வாழ்வு வரவும், அப்பார்த்தைடு (Aparthied) எனும் இனவெறி சித்தாந்தம் ஒழியவும் காரணமாக இருந்தது.

## என்னுடன் இருப்பீர்

தாம் இருக்கும் இடத்தில் தம்முடையவர்களும் இருக்க வேண்டும் என்பதே இயேசு நாதரின் விருப்பமும், மன்றாட்டும் (யோவான் 17:24). கிறிஸ்துவுடன் இருக்கும் பேறு கிறிஸ்துவால் மட்டுமே கிடைக்கும் பேறு. (I யோவான் 5:12). என்னோடு இராதவர் எனக்கு எதிராக இருக்கிறார்; என்னோடு இணைந்து மக்களைக் கூட்டி சேர்க்காதவர் அவர்களைச் சிதறடிக்கிறார். (லூக். 11 : 23)

"கிறிஸ்துவோடு இருப்பதே மோட்சம் என்கிறார் சாது சுந்தர்சிங்".

## பேரின்ப வீடு

பரதீசு (பேரின்ப வீடு) என்பது பெர்சிய சொல். இதற்கு அடைப்புள்ள தோட்டம் அல்லது மதில்களால் சூழப்பட்ட தோட்டம் (walled garaden) என்பது பொருள். பாரசீக மன்னன் தன் குடிமக்களுள் யாரையாவது சிறப்பிக்க விரும்பினால் அவரைத் தன் இன்பவனத்திற்குத் தன்னுடன் அழைத்துச் சென்று உண்டு, உலாவி, உறவாடி மகிழ்ந்திருக்கும் பெரும் பேற்றினை அருள்வான் என அறிஞர் வில்லியம் பார்க்லே (william barclay D.D. The commentany on St. Luke P.No.299) குறிப்பிடுகிறார். இங்கு இயேசு நாதர் அப்பெரும் பேற்றினை இக்கள்வனுக்கு அருளுகிறார். தி.வெ. 2:7 ஜெயங்கொள்ளுகிறவனுக்கு பரதீசின் மத்தியில் இருக்கிற ஜீவ விருட்சத்தின் கனி.

இயேசுவோடு இருப்பது மட்டுமல்ல அவரது அரசுரிமையில் பங்கு பெறும் பேறு பெற்றான் கள்வன் என பூளுமர் எனும் இறையியலாளர் கூறுகிறார்.

தன் நிலை உணர்ந்த கள்வனுக்கு இறையரசில் கிறிஸ்துவோடு இருக்கும் பாக்கியம் கிடைத்தது. பால் திலக் என்னும் இறையியலாளர் மீட்பு பற்றி கூறும் போதும் "Accept the fact that you are accepted" (நீ இருக்கிற வண்ணமாகவே ஏற்றுக்கொள்ளப்பட்டாய்) என கூறுகிறார். மா பாவியான கள்வனும் பாவம் போக்கும் ஜீவநதியாம் இயேசு நாதரின் குருதி ஊற்றில் முழ்கி மன்னிப்பும் பேர் வாழ்வும் பெற்றான்.

நாமும் இந்நிலை அடைய
பண்ணின துரோகமெல்லாம் எண்ணினாலெத்தனை கோடி
பாதகத்துக்குண்டே எல்லை பரிதவித்தேனே தேடி
கண்ணினாலுன் திருவடி காண நான் தகுமோ தான்
கடையனுக் கருள் புரி மடியுமன் இயேசு சுவாமி என்ற பாடல் வரிகளை அக்கள்வனின் நிலையில் நின்று பாடி மீட்படைபோம்.

**திருப்பணி D. சாது டேனியல்**

*சிலுவை திருமொழி : 3* — *மூன்றாம் திருவாக்கு*

# உயிரூட்டம் பெறும் உறவு நிலை

யோவா. 19 : 23-27

> *"...அம்மா, இவரே உம் மகன்...இவரே உம் தாய்..."* *யோவா. 19 : 26,27*

சிலுவையில் சிதைக்கப்பட்ட மீட்பரான இயேசுவின் திருவார்த்தைகள் மானுட வாழ்வினில் திருத்தத்தையும், திருப்பத்தையும், திருவுறவையும் வெளிப்படுத்துகிறது. முதல் இரண்டு வார்த்தைகளில் இதயத்தின் ஈரத்தை வெளிப்படுத்தியவர், மூன்றாம் திருவாக்கினில் இறையாளுமையின் தகவுகளோடு உயர்ந்து நிற்கிறார். மறக்கப்பட்ட, மறைக்கப்பட்ட, மனித விழுமிய சிந்தைகளுக்கு மறு வடிவம் தரும் மகனாக, மா மரி மைந்தனார் சிலுவையில் வாழ்வின் முறையை நெறிப்படுத்தி தருகிறார். வறண்டு வரும் உலகின் உறவு நிலையில் சிந்திப்போம்.

## 1. கலங்கி நிற்கும் மரியாள் :

அருள் நிறைந்தவளே வாழ்க என்று வாழ்த்தப் பெற்றவர் என் ஆண்டவருடைய தாயார் என்று சிறப்புப்படுத்தப்பட்டவர் இப்போது நொறுங்கின உள்ளத்தோடு உறைந்து நிற்கிறார். மரியன்னையின் உள் நிலையில் நிறைந்து நிற்கும் நிகழ்ச்சிகளை நினைத்து கொள்கிறார். வானதூதரின் சந்திப்பு, தூய ஆவியாரின் நிறைவு, இடையர்களின் பணிவு, ஞானிகளின் வருகை, சிமியோனின் வாழ்த்துதல், அன்னாளின் ஆசி இவையெல்லாம் நீங்கா நினைவுகளாக அழுத்தும் நிலையில் ஆவியிலே உள்ளுறைந்து நிற்கிறார்.

லூக். 2:35 உமது உள்ளத்தையும் ஒரு வாள் ஊடுருவிப்பாயும் என்று சிமியோன் இயேசுவாகிய குழந்தையை கையில் ஏந்திய போது குறிப்பிட்ட வார்த்தையை நினைத்து நிலை தடுமாறி சிலுவைக்கருகில் நிற்கிறார். ஆன்மாவின் கலக்கத்தில் ஆண்டவரைப் பார்க்கிறார். இயேசுவின் கைகளிலும், கால்களிலும் அறையப்பட்ட ஆணிகளால் ஆன்மா ஊடுருவப்பட்ட நிலையில் வேதனையுறுகிறார். துன்பங்களும், துயரங்களும் ஏற்படும் போது ஓரமாய் ஒதுங்கி செல்லும் குடும்ப உறவுகளின் நடுவில் மரியன்னை மேன்மையான சான்றாகிறாள்.

## 2. காயத்தின் வலியிலும் கடமை நிறைவேற்றும் இயேசு

சுயம் என்ற வட்டத்தில் உறவுகளை தகர்த்து, ஏன் பெற்றவரின் உயிரையே தீர்த்திடும் உலக அரங்கத்தில் இயேசுவின் கடமை கண்ணியமாகிறது. மரணபிடியின் நடுவிலும் கட்டளையை மறக்காமல்

கடமையினை நிறைவேற்றுகிறார். மானிட மகனாக வந்தவர் ஊன் நிலைகளில் செய்ய வேண்டியவைகளையும் உண்மையுடனும், உறுதியுடனும் சிறப்பாக செய்கிறார். பழிச்சொற்கள், அவமரியாதை, அலைக்கழிக்கப்படுதல், போன்றவைகளுக்கு தள்ளப்பட்டவர். நிலையற்று எகிப்துக்கு ஓடியவர். இவையெல்லாம் மரியன்னையைக் குறித்துஇயேசுவிலிருந்து வெளிப்பட்ட வெளிப்பாடுகள் ஆகவே பரிவோடும் பண்பட்ட அக்கரையோடும் மரியன்னையை பார்க்கிறார். வி.ப. 20 : 12 ன் படி கனம் பண்ணுவதில் முந்திக் கொள்கிறார். கானா ஊர் திருமண இல்லத்தில், எருசலேம் இறை இல்லத்தில் கூறிய வாக்கினையெல்லாம் நினைத்து புனிதராக கடமையினை நிறைவேற்றுகிறார். மார்பிலே சாய்ந்திருந்த சீடராகிய யோவானிடம் இந்த உன்னதப் பொறுப்பை தருகிறார். வரையறை தாண்டி செல்லும் அன்பின் வெளிப்பாடு இன்றைய குடும்பங்களுக்கும் நல்லதொரு சான்றன்றோ.

### 3. கல்வாரியில் மலரும் திருச்சபை எனும் உறவு

உறவுகளை நிலை நாட்டுவதில் முனைப்பு காட்டுவோர் சிலரே. அதிலும் குடும்ப உறவுக்காக பிற உறவுகளை நிராகரிப்போரும் பிற உறவுக்காக குடும்ப உறவுகளை விட்டு வருபவரும் உண்டு. இத்தகைய நிலையில் இயேசு நாதர் இரண்டு உறவையும் இணைத்து திருச்சபை எனும் புதிய உறவை உருவாக்குகிறார். மத். 13 : 55-56 இல் இயேசு நாதருக்கு பிற சகோதரத்துவங்கள் இருந்தனர் என்ற குறிப்பினை நாம் காணலாம். இதனடிப்படையில் இயேசு நாதர் இவர்களை பொறுப்பற்றவர்களாக கண்டதாய் கேள்வி எழலாம். அதற்கு பதில் இல்லவே இல்லை என்பதே. இங்கு இயேசு நாதர் இருந்த தொடர்புக்கப்பால் புதிய உறவினை ஏற்படுத்தவே சீடரிடம் தாயை ஒப்படைத்தார். அந்நேரமே யோவான் அந்த பொறுப்பை நிறைவேற்ற அற்பணித்து இணங்குகிறார். மரியன்னையும் மகிபனின் எதிர்பார்ப்பு நிறைந்த விருப்பத்திற்கு பணிகிறார். மட்டுமல்ல மானிட மகனுக்கு சான்றாகிறார். புதிய உறவின் அடித்தளமாக “ஒரே மனம்”(திபா. 1:14) கொண்டவர்களோடு இறைவேண்டலில் இணைந்திருந்தார்கள்.

ஆக குடும்பம் எனும் உறவினில் குவலயத்தின் மீட்புக்காக கல்வாரி சிலுவையினடியில் பிறந்தது தான் திருச்சபை. இன்றைய திருச்சபை கடமையை எவ்வாறு நிறைவேற்றுகிறது என்பதை திறனாய்வு செய்து முன்னேறுவது தான் இறையாளுமையில் ஏற்புடையதாகிறது.

அருள்திரு. **இரா. சாம் பிரின்ஸ்**

*சிலுவை திருமொழி : 4*

*நான்காம் திருவாக்கு*

# உலக மானிடத்தோடுள்ள அடையாளத்துவம்

**மத்.** 27:45-40

*"என் இறைவா என் இறைவா, ஏன் என்னைக் கைவிட்டீர்?" மத் 27:46*

நானும் தந்தையும் ஒன்றாயிருக்கிறோம். என்னைக் காண்பது தந்தையைக் காண்பது ஆகும். நான் தந்தையுள் இருக்கிறேன்; தந்தை என்னுள் இருக்கிறார் தந்தை மகன் மேல் அன்பு கூர்ந்து அனைத்தையும் அவர் கையில் ஒப்படைத்துள்ளார் என்று தனக்கும் தந்தையாம் கடவுளுக்குமிடையேயுள்ள அன்புறவையும், பற்றுறுதியையும் வெளிப்படுத்திய இயேசு கிறிஸ்து சிலுவையில் துன்பத்தின் உச்சத்தில் கடவுளை, நோக்கி, ஏன் என்னை கைவிட்டீர்? என்று கேள்வி எழுப்புவது சிந்திக்கத் தூண்டுகிறது. உண்மையிலே இயேசு கிறிஸ்து கடவுளால் கைவிடப்பட்டாரா? கைவிடப்பட்டிருந்தால் கடவுள் கைவிடுபவரா? கைவிடப்படவில்லையெனில் பிறகு ஏன் இயேசு கிறிஸ்து ஏன் என்னை கைவிட்டீர் என்று கூக்குரலிட்டார், என்று பல கேள்விகள் உள்ளத்திலே எழுந்தாலும் இயேசு கிறிஸ்து சிலுவையில் மொழிந்த இந்த நான்காம் திருமொழியில் தான் கிறிஸ்தவ நம்பிக்கையின் ஆழ்ந்த உண்மை அடங்கியுள்ளது. இயேசு கிறிஸ்து முழு மனிதனாக இவ்வுலகத்திற்கு வந்தார் என்பதை இத்திருமொழி வெளிப்படுத்துகிறது. இயேசு கிறிஸ்து மனுமக்களின் பாவமேற்று பாவிகளோடு தன்னை ஒன்றிணைத்து கொண்டார் என்பதையும் இவ்வார்த்தை எடுத்தியம்புகிறது.

## *கைவிடப்படுவோரோடு தம்மை இணைக்கும் இயேசு :*

இயேசு கிறிஸ்துவோடு மூன்றரை ஆண்டுகாலம் திருப்பணியில் பங்கு பெற்ற சீடர் குழாம் அவருடைய சிலுவைப் பாதையில் சிதறிப் போயினார். யூதாஸ் காட்டிக் கொடுத்தார். மரணமே வரினும் மறுதலிக்கமாட்டேன் என்றுரைத்த பேதுரு தருணம் பார்த்து மறுதலித்தார். இயேசு கிறிஸ்துவின் அருஞ்செயல்களாலும், அருளுரைகளாலும் கவரப்பட்டு அவரைப் பின்பற்றின மக்கள் கூட்டம் அவரது சிலுவைப்பாடுகளில் பங்கேற்க முன்வரவில்லை. எவர்களுடைய ஈடேற்றத்திற்காக இயேசு கிறிஸ்து மனுவுருவேற்றாரோ அவர்களே அவருடைய சிலுவை சாவுக்கு காரணமாயினர். இவ்வாறு தம் அடியவர்களாலும், அன்பு செய்த மக்களாலும் கைவிடப்பட்ட இயேசு கிறிஸ்து சிலுவையில் தொங்கிக் கொண்டிருக்கின்றார். இக்காட்சியை கண்ணுற்ற கதிரவன் கூட தன் முகத்தை மறைத்துக் கொண்டான். நண்பகல் நாடு முழுவதும் இருள் உண்டாயிற்று மனுமக்களின் பாவத்தின் அகோரத்தால் இறைவனின் பிரசன்னம் கூட தன்னை விட்டு விலகி நிற்பதை போல ஓர் உணர்வு இயேசுவுக்கு ஏற்பட்டது. உடனே என்

இறைவா என் இறைவா ஏன் என்னை கைவிட்டீர் என்று கேள்வி எழுப்புகின்றார். இது கைவிடப்பட்ட நிலையில் அல்ல; இவ்வுலகில் கைவிடப்பட்டு கலங்கி நிற்கிற மக்களோடு இயேசு கிறிஸ்து தம்மை இணைத்துக் கொண்டு அவர்களின் கூட்டுப் பிரதிநிதியாக இக்கூக்குரலை எழுப்புகின்றார். இறைவன் கைவிடுபவரல்ல. ஏனெனில், கடவுளாகிய ஆண்டவர் இரக்கமிகு இறைவன் அவர் கைவிடமாட்டார் என்கிற தமது ஆழ்ந்த பற்றுறுதியையும் வெளிப்படுத்துகின்றார். (இ.ச. 4:31, ஏசா. 49: 4,10) கைவிடப்படுதல் என்பது ஒரு கொடிய அனுபவம், நாம் வாழுமிடத்திலும் உறவுகளாலும், உற்றாராலும் சமூகத்தாலும் கைவிடப்பட்டு விரக்தியோடு வாழ்வோரை தாராளமாக காணமுடியும். இன்றைய தற்கொலைகளுக்கும் பெரிதும் காரணமாயிருப்பது உறவுகளால் கைவிடப்படுதலே ஆகும். இத்தகையோரை நாம் அடையாளம் கண்டு அவர்களுக்கு கைகொடுப்பதும் அவர்களது வாழ்வு உய்வு பெற நாம் பாடுபடுவதுமே இயேசு கிறிஸ்துவின் பாடுகளில் நாம் பங்கேற்பதற்கான அடையாளமாகும்.

### *கடினப்படுபவரோடு கரம் கோர்க்கும் இயேசு:*

இயேசு கிறிஸ்துவை சிறைபிடித்ததிலிருந்து சிலுவையில் மரிக்கும் வரை படைவீரர்கள் அவருக்கு உடல்ரீதியாகவும் உணர்வுரீதியாகவும் துன்பம் விளைவித்துக் கொண்டே இருந்தனர். ஏளனம் செய்தனர். இகழ்ந்தனர் அடுக்கடுக்காய் அபாண்டமான குற்றச்சாட்டுக்களை தொடுத்தனர். சிலுவைச் சாவுக்கு ஒப்புக் கொடுத்தனர். அடித்தனர். உமிழ்ந்தனர், ஆடைகளை அபகரித்துக் கொண்டனர். தலையில் முள்முடி அணிவித்தனர். சிலுவையை சுமத்தினர். கரடுமுரடான பாதை வழியே கல்வாரி வரை இழுத்து வந்து சிலுவையில் அறைந்தனர். இதுவரை தனக்கு செய்திட்ட நன்மைகளை எல்லாம் மறந்து அவர் மரணத்தை விரும்பினர். ஆனால் பச்சை மரத்துக்கே இவ்வாறு செய்கிறார்கள் பட்டமரத்துக்கு என்னதான் செய்யமாட்டார்கள் (லூக். 23:31). என்று இவ்வுலகில் ஆதிக்க சக்திகளும், அநீதியாளர்களும் அப்பாவி மக்களை எங்ஙனம் துன்புறுத்துவர் என்று தன் வேதனையை தந்தையாம் கடவுளிடம் வெளிப்படுத்தி துன்புறும் மக்களோடு இயேசு தம்மை ஒன்றுபடுத்திக் காட்டுகிறார். இறைவன் துன்புறுத்துகிறவரல்ல மாறாக துன்புறும் மக்களோடு தம்மை இணைத்துக் கொள்ளுகிறவர் (தொநூ. 6:6, திப 9:4) கடவுள் தம் மக்களின் பாவத்தைக் கண்டித்தாலும், அதற்காக அவர்களை தண்டித்தாலும், அத்தண்டனைகளிலும் பங்கேற்கிறவர். (எரே. 8:21) என்பதை இயேசு சிலுவையிலே சிறப்புறக் காட்டுகின்றார்.

லிசியூக்சைச் சேர்ந்த தெரேஸ் என்ற இறைபணியாளர், மற்றவர்களுக்காகப் பாடுகளை மகிழ்ச்சியோடு சகித்துக் கொள்ளும் போது அநேக குருக்களாலும் முடியாததை அப்பாடுகள் அநேக மக்களை மனமாற்றம் செய்யும் என்கிறார் நாம் வாழும் சூழலிலும் பல்வேறு துன்புறும் மக்களின் துன்பங்களில் பங்கேற்பதே அவர்களும் இயேசுவை அறிவதற்கான சிறந்த வழி.

திருவாளர். **B. சாம் ஜெபசிங்**

*சிலுவை திருமொழி : 5*

*ஐந்தாம் திருவாக்கு*

# உலர்ந்த நிலையின் ஏக்கம்

யோவா. 19 : 28-30

*இயேசு, "தாகமாய் இருக்கிறது" என்றார். யோவா. 19 : 28*

இயேசு கிறிஸ்து தாம் வாழ்ந்தபோது எத்தனையோ மனிதர்களுடைய தாகத்தைத் தீர்த்தவர். யோவா. 2-ஆம் அதிகாரத்தில் திராட்சை ரசம் இல்லாதிருந்த போது சாதாரண தண்ணீரை எல்லாரும் வியக்கும் வண்ணமாக திராட்சை ரசமாக மாற்றியவர். யோவா. 4 : 13. நான் கொடுக்கும் தண்ணீரைப் பருகுவனுக்கு எப்போதும் தாகமே வராது என்றும் தாகமாயிருப்போர் என்னிடம் வரட்டும், விருப்பம் உள்ளோர் வாழ்வு தரும் தண்ணீரை இலவசமாய் குடிக்கட்டும் வெளி. 22 : 17 என்றும் அழைப்பு விடுத்தவர் இப்படி தாகமே வராத தண்ணீரை வழங்கிய இயேசு கிறிஸ்துவுக்கு தாகம் ஏற்பட்டது.

இயேசு கிறிஸ்துவுக்கு ஏற்பட்ட தாகம் என்ன தாகம்? உடல் சார்ந்த தாகமா? ஆன்மீக தாகமா?

இன்று மனிதன் அனுபவிக்கும் பாடுகளில் தாகத்திற்கு நிகரான வேறு வேதனை இருக்க முடியாது. அன்று இயேசு கிறிஸ்து தாகமாய் இருக்க காரணம் என்ன? முந்தின நாள் இரவு முழுவதும் தோட்டத்தில் இறை வேண்டல் செய்யும்போது வெளிப்பட்ட வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாக தரையில் விழுந்தது. அந்த நேரமே தாகம் ஏற்பட்டிருக்கலாம். ஆனால் இயேசு கிறிஸ்து பாடுகளின் பாதையில் ஒரு நாளுக்கு மேல் தண்ணீர், உணவு உட்கொள்ளாமல் இருந்தார். அது மட்டுமா? அடி, உதை, வேதனை துன்பம் அவர் உடல் சோர்வுற்றிருநத்து. அதுவும் நண்பகல் நேரம். கண்டிப்பாக தாகம் இருந்திருக்க வாய்ப்பு உண்டு.

1. உடல் தளர்வுற்றிருந்தார்
2. உள்ளத்தினில் வலுவற்றிருந்தார்

இயேசு வாழ்ந்த நாட்களில் திருமறை வாக்கின்படியே நடந்தார். இதனால் தான் மறை நூலில் எழுதியுள்ளது போல தாகமாயிருக்கிறேன் என்றார். (எ.கா) தொநு. 3 : 15; இச. 18 : 18; 2சாமு. 7 : 12; ஏசா. 53 : 3;

ஏசா. 53 : 7,9,12; தி.பா. 41 : 9, 31 : 11; 325 : 11; 22 : 16,18,1, இவைகள் சான்றாக அமைகின்றது.

## 1. தாகம் தணித்திட அழைக்கிறார் :

மனித தாகம் என்பது உடல் சோர்வடையும் போது ஏற்படுவது ரோம. 12 : 20.

அழிந்து போகின்ற காரியங்கள் மீது ஏற்படும் தாகம் இவ்வுலக ஆசை சார்ந்த, இன்ப தாகம், செல்வந்தராகும் தாகம் இத்தாகத்தை தீர்க்கும் பானம் எது -2 நிலையில் ஒன்றாக தான் இருக்க முடியும் இன்று உலக செல்வம், நண்பர்கள் எல்லாம் வேண்டும். 2. இவற்றினை தவிர்த்து இறைவன் மட்டுமே போதும் என்கிற தாகம். மத். 5 : 6-நீதியின் மேல் பசி தாகம் கொள்ளுபவர்கள் பேறு பெற்றோர். எனவே உலக பற்று, செல்வம் இவைகள் எல்லாம் நீதியின் படி இருக்க வேண்டும் என்கிற தாகம் ஏற்பட வேண்டும். ஆனால் இன்றைய மனிதர்களின் தாகம் பொறாமை. எப்படியாவது பணம் சம்பாதித்தல், பிறரை ஏமாற்றுவது இவற்றிலே அதிகமாக காணப்படுகின்றது.

ஏசா. 55 : 1- பணம் இல்லாதவர்களை கடவுள் அழைக்கிறார்.

ஏப்ரல், மே, மாதங்களில் வெயில் அதிகமாக இருக்கும் அந்நாட்களில் ஒருவர் ஒரு தண்ணீர் பந்தலை அமைத்திருந்தார். காரணம் அவர் தந்தை மரிக்கும்போது தண்ணீர் தண்ணீர் என்று கத்தினார். அவர் தாகத்தை தீர்க்க இயலவில்லை. எனவே அவர் ஆசையை நிறைவேற்றவே என்றார்.

ஆம் பலருக்கு தாகம் வராத தண்ணீரை வழங்கிய இயேசு கிறிஸ்துவின் அடியார்களாகிய நாம், பிறரின் தாகத்தை தீர்க்க என்ன செய்கிறோம். இன்று குடிக்கும் தண்ணீரை கூட பொது கிணறுகளில் எடுக்க முடியாத ஏழைகள் மற்றும் குடிக்கும் தண்ணீரையே வியாபாரமாக்கிய நிலை காணப்படுகிறது. இவற்றுக்கு நாம் என்ன செய்ய போகிறோம்.

இந்த சிறியரில் ஒருவருக்கு எதை செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள் என்றார் இயேசு கிறிஸ்து.

தாகத்தோடு இருக்கும் மக்களின் தாகத்தை தீர்த்து தாகமாயிருந்தேன், என் தாகத்தை தீர்த்தீர்கள் என்ற கிறிஸ்துவின் வார்த்தைகளை செயல்வடிவமாக்கி, அவரது உண்மையான அடியார்கள் நாம் என்பதை இல்வுலகிற்கு காட்ட முற்படுவோம்.

நாங்கள் தாகமாக இருக்கிறோம். எங்களுக்கு குடிக்க நல்ல தண்ணீர் வேண்டும் என்று கதறும் மக்களின் கூக்குரலை நிச்சயம் 5-ம் திருமொழி வெளிக்கொணர்கிறது.

தாகத்தை மறைக்கும் இன்றைய நிலைக்காக துன்புறுகிறார்

தாகமாயிருக்கிறேன் என்று கதறுகிற இயேசுவின் தாகத்தை போக்கும்படி அன்று என்ன செய்யப்பட்டது? பக்கத்தில் நின்ற தலைவர்களும் போர்வீரர்களும் கடற்காளானை காடியில் தோய்த்து அதை ஆண்டவர் இயேசுவுக்கு கொடுத்தார்கள். யோவா. 19 : 29. இந்த காடி என்பது புளித்த திராட்சை ரசம் ஆகும். ஏன் இதை கொடுத்தனர் என்றால் அவருடைய வலியும் நாவறட்சியும் மறந்து போகும்படிக்கு அவருக்கு மயக்கத்தை உண்டு பண்ணவே ஆகும். அதன் பிறகு ஒலி எழுப்ப மாட்டார். உரிமை குரல் எழுப்ப மாட்டார் அல்லவா?

இன்றும் இப்படிப்பட்ட சூழலே காணப்படுகிறது. மக்கள் படும் பாடுகளை உணர்ந்து தங்களுக்கு விடுதலை கிடைக்க வேண்டும் என்று கூக்குரலிடும் போது சமூகத்தில் பெரியவர்கள் என்று எல்லாராலும் கூறப்படுகின்றவர்கள் தங்கள் பண பலத்தால், அதிகார பலத்தால் அந்த மக்களை மயக்க நிலைக்கு கொண்டு செல்லவே முயற்சிக்கின்றனர்.

(எ.கா) பண முதலாளிகள் லாபத்திற்காக போதை பழக்கத்தை மக்களுக்கு ஏற்படுத்துவது.

போலி சலுகைகளை அறிவிக்கின்றனர். கிறிஸ்தவ மக்களுக்குள்ளே உட்கட்சி பூசலை உருவாக்குகின்றனர்.

எனவே இயேசு கிறிஸ்து சிலுவையில் இருந்து மொழிந்த ஐந்தாம் (வார்த்தை) மொழி இயேசுவின் முழு மனித தன்மையின் வேதனையால் எழும் நாவறட்சியல் ஏற்பட்ட தாகம் என கூறலாம்.

திருவாளர். **J.S. *ஜெய்சிங்***

*சிலுவை திருமொழி : 6* *ஆறாம் திருவாக்கு*

# உன்னத பணியில் எழுச்சி

யோவா. 19 : 29-30

***இயேசு, "எல்லாம் நிறைவேறிற்று" என்று கூறித் தலையை சாய்த்து ஆவியை ஒப்படைத்தார். யோவா. 19 : 30***

இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டது மானிடரின் பாவம் அகற்றும் இறை திட்டத்திற்காய் என்பதை நாம் நம்புகிறோம். பாவம் இல்லாத பரிசுத்தர் பாவிகளுக்காய் பாடுகள் ஏற்பது இறைவன் திட்டம். இயேசு கிறிஸ்துவும் என்னை அனுப்பின தந்தையின் திருவிருப்பத்தின் படி செய்து அவருடைய வேலையை செய்து முடிப்பதுவே என் உணவு என்றார். யோவான் 4:34 முடிவில்லாதவர் முடிந்தது என்று கூறுவது இறைவனின் திட்டம் நிறைவேறியது என்று எடுத்துக் கொள்வது ஏற்புடையதல்லவா.

## *1. பலிமுடிந்தது :*

இரத்தம் சிந்துதல் இல்லாமல் மன்னிப்பு உண்டாகாது(எபிரே. 9:22) என்ற பவுல் அடியாரின் வாக்கின் படி இறைவன் கிறிஸ்துவை பலியாக நமக்குத்தந்தார். உலக வாழ்வினை கிறிஸ்து மானிடருக்காய் முடித்து முடிவில்லா உலகத்துக்கு ஆயத்தப்படுத்தினார். பிறப்பு முதல் சிலுவையில் தொங்கி வேதனை அடையும் வரை கசப்பான அனுபவங்களைத்தான் கிறிஸ்து உலகில் ஏற்றார். ஆனாலும் தன்னுடைய பணியினை நிறைவேற்றும் திட்டம் மட்டுமே தன் உள்ளத்தில் ஆழம் பெற்றிருந்தது. ஆகவே கிறிஸ்து விண்ணிலிருந்து வந்தது அனுப்பினவருடைய விருப்பம் நிறைவேற்றவே (யோவான் 6:38 )

ஆட்டுக்குட்டிகள் பாவங்களை போக்கும் பலிக்காய் அடிக்கப்படும் காலத்தில் திருமுழுக்கு யோவான் தம்மிடம் வருவதைக் கண்டு இதோ கடவுளின் ஆட்டுக்குட்டி, இவரே உலகின் பாவத்தை போக்குபவர் என்றார். இதனை கிறிஸ்துவும் நன்கு அறிந்திருந்தார். 12 வது வயதில் இறைஇல்லத்தில் வைத்து தன்னுடைய பெற்றோரிடம் நான் என் தந்தையின் அலுவல்களில் ஈடுபட்டிருக்க வேண்டும் என்று உங்களுக்குத் தெரியாதா என்று கேட்டார். இயேசு கிறிஸ்து தந்தையின் திட்டம் அறிந்து அதற்கு தன்னை அற்பணித்து நிறைவேற்றி நிறைவுடன் முடிந்தது என்றார். இறைவன் திட்டம் நிறைவேற்றுவது இறைநீதி.

பூமியிலே போராட மனுஷனுக்கு குறிக்கப்பட்ட காலம் உண்டு என்று யோபு 7 : 1 ல் படிக்கிறோம். குறிக்கப்பட்ட காலத்தில் இறை நீதிக்கு நம்மை அற்பணிப்போம். நாமும் இறைவன் திட்டத்தில் பங்குள்ளவர்கள். நாம் அனுபவிக்க வேண்டியது முழுமையாக முடிவு பெற்றதை மட்டுமே. அதுவே கிறிஸ்து நமக்கு முடித்து தந்த மீட்பு.

## 2. பாடுகள் முடிந்தது :

கிறிஸ்து பாடுகள் வழியே நிறைவு கண்டார். மீட்புப் பணி நிறைவு பெற மேடையாகத் தெரிந்து கொண்டது சிலுவை. மேடையை தாமே சுமந்து சென்று அதில் தொங்கி நின்று நிறைவுபடுத்தினார். பெத்லகேம் முதல் கல்வாரி வரையில் பாடுகளை ஏற்றவர். காணாத கண்களைத் திறந்தார். கேளாத காதுகளை கேட்கச்செய்தார். பேசாத வாய்களைத் திறந்தார். தீராத வியாதிகளைத் தீர்த்தார். இவை பாடுகளினால் உண்டாகும் வெற்றி. விரோதங்களையும், துரைத்தனங்களையும், அதிகாரங்களையும், வெளியரங்கமான கோலமாக்கி சிலுவையில் ஆணிஅடித்தார் (கொலோசேயர் 2:14,15).

இறைநீதிக்காய் பாடுபடுவதினால் வெற்றி உண்டாகும். எதுவும் வீணாய் போவதில்லை. கர்த்தரைப் பற்றும் பயம் முடிவை உருவாக்கும்.நீதி. 23:17,18 தாயகத்தால் பகை அகன்று போகிறது மூர்க்கம் பகையை உருவாக்கும். பாடுகள் ஏற்பது வெற்றிகளுக்கு ஆதாரமாய் அமைகிறது. பகை அகன்று போகிறது. மூர்க்கம் பகையை உருவாக்கும். பாடுகள் ஏற்பது வெற்றிகளுக்கு ஆதாரமாய் அமைகிறது. பகை சிலுவையினால் கொல்லப்பட்டது. பாடுகளை ஏற்க வந்த கிறிஸ்து மனித குமாரனுக்கு தலை சாய்க்க இடமில்லை என்றார் (மத்தேயு 8 : 20). சத்தியத்திற்கு போராட பிறந்தார். சத்தியத்தை நிலைநாட்ட பாடுபட்டார். தன்னை பலியாக அற்பணித்து பாடுபட்டு பாவம் போக்கினார். இவ்வாறு பாடுகளின் நிறைவை முடிந்தது என்று கூறி மீட்பின் உறுதியை வெளிப்படுத்தினார்.

கிறிஸ்துவின் பாடுகளில் பங்கடைவோர் மீட்பைப் பெற்றுக் கொள்கிறார்கள். கிறிஸ்து நமக்காய் பலியானவர் என்னும் நம்பிக்கை, வெற்றியை உருவாக்கும். கிறிஸ்து வெற்றி சிறந்தார். நாமும் பாடுகளின் வழியாய் வெற்றி பெற கிறிஸ்துவுடன் இணைந்து வாழ்வோம்.

அருள்திரு. **N. றஸ்கின் றாய்**

*சிலுவை திருமொழி : 7* *ஏழாம் திருவாக்கு*

# உயர்த்தப்பட்ட உன்னதரில் நிறைவு

லூக். 23 : 44-49

*"தந்தையே உம் கையில் என் உயிரை ஒப்படைக்கிறேன்." லூக். 23:46*

பணி பொறுப்பு பெறும் நபர் தனக்கு கொடுக்கப்பட்டுள்ள பணிக்காலம் நிறைவுற்றதும் தான் பெற்ற பொறுப்பினை மேல் அதிகாரியிடம் அல்லது பொறுப்பு ஒப்படைத்தவரிடம், பொறுப்பினை ஒப்படைப்பது நியதி. அந்நியதியினை நம் நாதர் இயேசு கிறிஸ்து சிலுவையில் தொங்கும் நேரமதில் தன் மனித வாழ்வு நிறைவுற்றதை உணர்ந்து தன்னிடம் தரப்பட்ட பொறுப்பினை நிறைவு படுத்தி தன் தந்தையிடம் உயிரினை ஒப்படைத்தார். ஒப்படைப்பு தரும் செய்தியினை ஆராய்வோம்.

### *1. உறவு உறுதிபடும் ஒப்படைப்பு :*

அழிவுக்குரியவர்கள் என்று தங்களை ஆக்கிக் கொண்ட மனித சமூகம் அழியாமை பெற வேண்டுமென தந்தை தாமே தம் மகனை உலகினில் தந்து உலகின் மீது அன்பு செலுத்தினார். (யோவா: 3:16). அம்மைந்தன் திருமுழுக்கு பெற்று தண்ணீரின்று கரையேறினவுடன் "இவர் என் நேச குமாரன் இவரில் நான் பிரியமாயிருக்கிறேன்" என தந்தை உறவினை உறுதி செய்தார் (மத். 3:16,17). மைந்தனாம் இயேசு கிறிஸ்து தந்தையின் சித்தம் செய்வதே மைந்தனின் பணி என தன்னை ஒப்புக் கொடுத்தார் (யோவா. 5:19, 20). ஐயாயிரம் பேருக்கு உணவு வழங்கியபோது தந்தையிடம் வேண்டி இயேசு உணவினை பங்கிட கட்டளையிட்டார் (மாற். 6:41). மரித்து போன லாசர் உயிர் பெறச் செய்த போது தந்தையே நீர் என் வேண்டலுக்கு செவி கொடுப்பீராக என்றார் (யோவா. 11:41). வாழ்வு முழுவதும் தந்தை, மைந்தன் என்ற உறவில் வாழ்ந்தவர். தான் சிலுவையில் தொங்கி ஆவியை விடும் இறுதி வேளையிலும் தந்தை மைந்தன் உறவினில் நின்றார். ஆகவே மறவாது தந்தையே என அழைத்து ஆவியை ஒப்புவித்தார். சிலுவை மரண பரியந்தம் சிறுமைப்படுத்தப்பட்டும் சிந்தையை கடந்த அன்புடைய ஆண்டவர் இயேசு கிறிஸ்து உறவின் உறுதியை உலகிற்கு காட்டவே உறுதிபடுத்தவே 'தந்தையே' என்றார்.

இன்று நாம் வாழும் உலகின் நெருக்கங்கள் பாடுகள், துன்பங்கள், ஆசைகள், சிற்றின்பங்கள் இறை உறவை உடைத்து விடாது வாழ்வின்

இறுதிவரை இறைவனின் தூய சித்தப்படி வாழ்வின் எல்லா படி நிலைகளிலும் உறவினை உறுதிபடுத்தி உறவுடன் வாழ்வோம். நம் நாதர் இயேசுவை போன்று வாழ்வினை ஆவியை ஒப்படைப்போம் . இது ஆசீர்வாதம்.

## 2. உரியவரிடம் உயிர் ஒப்படைப்பு :

இயேசு நாதர் பரிசுத்தாவியால் உற்பவித்து பிறந்தவர். திருமுழுக்கின் போது தந்தை மைந்தன் உறவு உறுதிசெய்யப்பட்டது (மத். 3:16,17). தந்தையின் சித்தம் செய்வதே மைந்தனின் பணி (யோ. 5:19,20). இயேசு கிறிஸ்து மனிதனின் பணி இயேசு கிறிஸ்து மனிதரில் முதல்வராக மனித குமாரானாக இறைசித்தத்தின் படி பணிபுரியவே வந்தார். பாடுகளையும், வேதனைகளையும் பணிக்காய் ஏற்றார் (லூக். 22:42). தந்தையே உமக்கு விருப்பமானால் இத்துன்பக் கிண்ணத்தை என்னிடமிருந்து அகற்றும் ஆனாலும் என் விருப்பப்டி அல்ல உம் விருப்படியே நிகழட்டும் என்று முழுமையாக இறைபணிக்கெனவும் இறைதிட்டத்திற்கெனவும் ஒப்பு கொடுத்தார். தன் உயிர் எடுபடும் நேரம் வந்த போதும் தடுமாற்றமின்றி தந்தையிடம் ஒப்படைத்த இயேசுவே நம் மாதிரி. உயிர்கள் அனைத்தும் கடவுளால் படைக்கப்பட்டது. மனிதனும் கடவுளால் படைப்பின் மகுடமாய் உருவாக்கப்பட்டு நாசியில் ஊத உயிர் பெற்றான். தந்தையிடமிருந்து உயிர் பெற்ற நாம் உலகில் அவர் பணி செய்யவும் அவர் திட்டத்திற்குட்பட்டு வாழவும் வாழ்வின் முடிவில் வாழ்வை தந்தையிடம் ஒப்படைப்பதும் நம் கடமையாகும். அப். 7:59 பரிசுத்த ஸ்தேவான் தனது வாழ்வின் இறுதி வேளையில் “எனது ஆவியை ஏற்று கொள்ளும்” என இயேசு கிறிஸ்துவிடம் வேண்டி கொண்டார். எனவே மனிதர்களாகிய நம்மாலும் இது சாத்தியமானது. அதிகாரம் கொண்ட மக்கள் இயேசுவை பிடித்தும் அடித்தும், சிலுவையில் அறைந்து கொன்றுள்ளனர். ஆனால் ஆவியினிடம் அக்கரை கொண்ட இயேசு ஆவியை உரியவரிடம் ஒப்படைத்தார். நாம் ஆவியின் மீது அதிகார மற்றவர்களாயிருப்பினும் அதை பொறுப்புடன் பாதுகாத்து வளர்த்து உரிமை உடைய ஆண்டவரிடம் ஒப்படைப்பது நமது கடமையாகும்.

## 3. உயிர்த்தெழுதலுக்காய் உறுதிப்படுத்தும் ஒப்படைப்பு :

மரணம் முடிவல்ல அதற்கு பின்னும் வாழ்வு உண்டு. மரணம் நித்திரைக்கு ஒப்பானது மத். 9:24 விலகி போங்கள் சிறுமி இறக்கவில்லை உறங்குகிறாள்”. யோ. 11:11 “என் நண்பன் லாசர் தூங்குகிறான்”. தூங்குகிறவன் தன் நித்திரை விட்டெழுவது இயல்வு. யூதர்கள் தாங்கள்

நித்திரைக்கு செல்வதற்கு முன் இறைவனிடம் உயிரை ஒப்படைப்பது வழக்கம் காலையில் இறைவன் உயிருடன் எழச் செய்வார் என்பது நம்பிக்கை. இயேசுகிறிஸ்து இறைவனாம் தந்தையிடம் தம் உயிரை ஒப்படைத்தார். வாழ்வு இறைவனால் நமக்கு நல்கப்படும் ஆசி இயேசுவை வாழ்வு நல்குபவர் யோவா. 11:25. நானே உயிர்த்தெழுதலும் வாழ்வுமாயிருக்கிறேன் என்றார். நம் வாழ்வு இவ்வுலகத்துடன் நிறைவு பெறுவதில்லை, நிலை வாழ்வு உண்டு, எனவே அதனை பெறும் உரிமம் பெற்று, வாழ நம்மை நாம் தந்தையாம் இறைவனிடம் ஒப்படைக்க வேண்டும் (மாற். 10:45). ஏனெனில் மானிட மகன் தொண்டு ஏற்பதற்கு அல்ல, மாறாகத் தொண்டு ஆற்றுவதற்கும் பாலருடைய மீட்புக்கு ஈடாக தம் உயிரை கொடுப்பதற்கும் வந்தார். அவர் ஊடாய் உயிர் பெறுவோம் உயிர்த்தெழுதலை உறுதிப்படுத்துவோம்.

மாதிரியாய் பிற்நத இயேசு நாதர் வழி நின்று உறவை உறுதிப்படுத்தி, உயிர்த்தெழுந்தலுக்கு உரிமையாக்கி உரியவரிடம் உயிரை ஒப்படைப்போம். அதுவே நம் மேல் விழுந்த கடமையாகும். ஆமேன்.

அருள் திரு. **V. டேவிட் றாபி ஜேக்கப்**

*திருச்சபையின் முழு முதல் வேலை உலகம் முபவதும் சுவிசேஷத்தை அறிவிப்பதே.*

ஆஸ்வால்டு ஸ்மித்

**24-04-2011**

# கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் : வாழ்வின் கொண்டாட்டம்

**CHRIST'S RESURRECTION: CELEBRATION OF LIFE**

IIஅர. 4:26-37 1கொரி. 15:42-58
திபா. 118:1-4, 14-17 யோவா. 20:1-18

*"இயேசு மரியாளே என்றார். அவள் திரும்பிப் பார்த்து ரபூனி என்றார்." யோ: 20:16.*

**மன்றாட்டு : மாட்சிமை பொருந்திய வாழ்வருளும் கடவுளே, உம் திருமைந்தரின் உன்னத உயிர்த்தெழுதலால் பாவம், மரணம் ஆகியவற்றின் பழைய நியமங்களை மாற்றி, அனைத்தையும் அவரில் புதிதாக்கினீர். கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை மகிழ்வுடன் கொண்டாடும் நாங்களும் பாவத்தின் சாவை வென்றெழுந்து நீதியின் வாழ்வினுள் புக அருள்புரிய வேண்டுமென்று என்றென்றும் உம்மோடும், தூய ஆவியரோடும் வாழ்ந்து ஆளுகை செய்யும் உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் திருப்பெயரில் வேண்டுகிறோம். - ஆமென்.**

உலக வரலாற்றை மாற்றி அமைப்பது இயேசு நாதரின் உயிர்த்தெழுதல். A.M. Ramsay கூறும்போது Gospel without recurrection is not gospel at all. உயிர்த்தெழுதல் இல்லாத நற்செய்தி, நற்செய்தி அல்ல என்கிறார். நற்செய்திக்கு வலுவூட்டுவது இயேசு நாதரின் உயிர்த்தெழுதலும் வரலாற்றின் வெறுமையான அல்லது திறக்கபட்ட கல்லறையையுமே ஆகும். இயேசுநாதர் உயிர்த்தெழுந்த போது சீடர்கள் வந்து பார்த்து விட்டு அமைதியாக சென்று விட்டனர். ஆனால் மகதலேனா மரியாளோ கல்லறை புறமாகத் திரும்பி கிறிஸ்துவை வாழ்வில் காண வேண்டும் என்ற வேட்கையோடு நின்றாள். கண்கள் பனித்தன. இயேசு அவளை உணர்ந்து உயிரூட்ட பெயர் சொல்லி அழைத்தார். அந்த சில வார்த்தைகள் ஆழ்நிலையில் வலுவூட்டியது, வாழ்வின் நிறைவாக ஏற்றுக் கொண்டான்.

## வாழ்வின் கொண்டாட்டம் என்பது

### 1. உறவுகளை சார்ந்தது :

மகதலேனா மரியாள் இயேசுவிடம் அதிக நன்மை பெற்றவள், 7 பிசாசுகள் துரத்தப்பட்டவள். (மாற். 16:10, லூக். 8:2) அவருடன் பணியில் பங்கு கொண்டவள். அசாதாரண நிலையிலிருந்து சுய உணர்வு கொண்டவளாக மாற்றப்பட்டவள்.

மரியாளின் மன அதிர்ச்சி. தனது கடமை, மரித்த சரீரத்திற்கு நறுமணமிட்டு மன அமைதி பெறவந்தாள் (லூக். 23:55,56; 24:1) முயற்சி தோல்வி அடைந்தது. மன வேதனையை மாற்ற என் ஆண்டவர் என்ற உறவு சொல்ல இயலவில்லை. மூத்த சீடரின் உறுதியான பதில் கிடைக்காத நிலையில் உணர்வு உள்ளத்தில் பொங்கி வர அது அன்புக் கண்ணீராக வெளிவந்தது. அழுது கொண்டே நின்றாள். உன்னைக் காண்கிற கடவுள் (திபா. 33:13-14) உன் கண்ணீரை அவரது குப்பியில் வைக்கிறவருமானவர் வல்லமையுள்ளவர். உன் இதய துடிப்பை உணர்ந்து பெயர் சொல்லி அழைக்கிறார்.

## 2. உயர்ந்த குறிக்கோள் சார்ந்தது :

வாழ்க்கையின் குறிக்கோள் நிறைவடைய ஆவல் தேவை. இயேசுவை அடைய வேண்டும் என்ற ஆவல். ஆனால் தீயவர் அவர் உடலைக் களவாடினார் என்ற சிந்தனை இழைந்தோடியது (யோ. 20:2-13)

ஆவலைத் தூண்டும் காட்சிகள் (i) தூதர்களின் காட்சி யோ. 20:2 அவர்கள் உரையாடல் (20:13) (ii) வெறுமையான கல்லறை.

மரியாளின் உள்ளத்து உணர்வெல்லாம் இயேசுநாதர் என் ஆண்டவர் (20:13,15) இயேசு இல்லாத வாழ்வு வெறுமையானது என்பதே.

மரியாளின் உத்வேகம் நான் அவரைபோய் எடுத்துக்கொள்வேன். ஆக மரியாளின் உறுதியான தீர்மானம் இயேசுவுடன் மட்டுமே திரும்பி செல்வேன். அதுவே வாழ்வின் கொண்டாட்டமாக அமைய விரும்பினாள்.

## 3. உன்னத தேறுதல் சார்ந்தது :

வாழ்வின் சிகரமான கொண்டாட்டத்திற்கு மரியாளை ஆயத்தம் செய்ய விரும்பிய இயேசு அவளைப் பெயர் சொல்லி மரியாளே என்றார். மனித வாழ்வின் கவலை நீக்கும் இறைவன் இன்றும் மனிதனை பெயர் சொல்லியே அழைக்கிறார் 1 சாமு 3:6-8. வரலாற்றில் சாது சுந்தர்சிங் வரலாறு காண்க.

கனிவான குரலை அறிந்தாள் மகிமையின் சரீரத்தை கண்டு புரிந்துகொள்ள இயலவில்லை. ஆக அவரை கல்லறைக் காவலாளி தோட்ட பாதுகாவலர் என நிதானித்து அவரை நீர் எடுத்து மறைத்த இடத்தைச் சொல்லும் நான் போய் அவரை எடுத்துக் கொள்வேன்

என்றாள். நமது கணிப்புகள் வாழ்க்கையின் தோல்வியை கொண்டு வரலாம். மரியாளின் கணிப்புகள் தடம் புரண்டன. தடம்புரளும் கணிப்புகள் வாழ்வின் கொண்டாடத்திற்கு அடித்தளம் அல்ல. கண்ணீர் திரை அகற்ற அன்பு உணர்வு வேகம் இவை அனைத்தையும் ஒன்று சேர்த்து மரியாளே என்றார். மரத்துப் போன வாழ்வை இந்த வார்த்தைகள் தொட்டு உயிரோட்டம் அளித்தது. (He visits us at the depth of our personality that we one often unconcious that he has been visiting us) மரியாள் கல்லறையைப் பார்த்தவள் திரும்பி ரபூனி என்று பாதத்தை தழுவ முயற்சித்தாள். வாழ்க்கையின் உயிரோட்டத்தில் பங்கு கொண்டாள்.

### 4. உள் மாற்றம் சார்ந்தது :

உயிர்த்தெழுதல் இயேசுவின் திருக்காட்சி மரியாளை மாற்றுகிறது. ஆகவே தான் சீடருக்கு நற்செய்தியாளராக அனுப்பபட்டாள் (யோ. 20:17). கிறிஸ்துவுக்கும் சீடருக்கும் உள்ள உறவை புதுப்பிக்க அல்ல, இறைவனுக்கும் சீடருக்கும் உள்ள கனிவான உறவை உறுதி செய்ய அனுப்பினார். வாழ்வின் கொண்டாட்டம் என்பது இயேசுவின் உயிர்த்தெழுதல் இறைத் தொடர்பின் ஏற்படுத்துதல்.

இத்தாலியில் டொமோடொவாலா கிராம மலையில் ஓர் சிற்றாலயம் உண்டு. அங்கு இயேசு நாதரின் பாடு மரண காட்சிகள் வரையப்பட்டுள்ளன. இங்கு வருபவர்கள் பாடு மரண காட்சியை பார்த்து விட்டு சென்று விடுவார்களாம். W.Y. Fuller ton இக்காட்சியைப் பார்க்கச் சென்றார். கல்வாரிக்கு அப்பால் உள்ள காட்சியைப் பார்க்க விரும்பினார். புல்படர்ந்த ஒற்றையடி பாதை மட்டுமே இருந்தது. பாதை வழியாகச் சென்று உயிர்த்தெழுந்த காட்சி மிக தத்ரூபமாக வரையப்பட்டிருந்ததைப் பார்த்தார். இச்சிறப்பான காட்சியின் மூலம் கிறிஸ்துவை மரித்தவராக அல்ல உயிர்த்தவராக அறிந்து திரும்பினார். நாமும் கிறிஸ்துவை மரித்தவராக அல்ல (எபே. 13:7) என்றும் வாழும் உன்னத கிறிஸ்துவாக அறிந்து உயிரோட்டம் உள்ள பண்டிகையை கொண்டாடி மகிழ்வோம்.

அருள்திரு. Y.J.J. **பாக்கியநாதன்**

**25-04-2011**

*வேதமாணிக்கம் - ரிங்கல் தௌபே தினம்*

# மாபெரும் கட்டளை

மத். 28 : 16-20

*"நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள்." மத். 28:19.*

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து தன்னுடைய சீடர்களுக்குக் கொடுத்த மாபெரும் கட்டளையை தூய மத்தேயு நற்செய்தியாளர் மத். 28:16-20 வரையுள்ள திருவசனங்களில்பதிவு செய்துள்ளார். இயேசுகிறிஸ்துவின் திருக்கட்டளைக்குள்ளிருந்து மூன்று குறிப்புக்களை தியானிப்போம்.

## 1. சீடராகுங்கள் :

கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் சீடர்களாக அழைப்பு பெற்றவர்கள். ஒவ்வொரு கிறிஸ்தவ சீடனுக்கும் இயேசு கிறிஸ்து அருளும் மிகப்பெரிய முதல் கட்டளை சீடராக்குங்கள் என்பதுதான் (மத். 28 : 19). ஜெர்மானீய நாட்டிலிருந்து தென்னிந்தியாவுக்கு வந்து, சிறந்த இறைப்பணி செய்தவர் ரிங்கல் தௌபே. இவர் "தென் திருவிதாங்கூர் அப்போஸ்தலன்" என்று கிறிஸ்தவ மக்களால் புகழப்படுகின்றார். ரிங்கல் தௌபே என்பதற்கு "மணிப்புறா" என்று பொருள். இந்த நாளை நாம் ரிங்கல் தௌபே நாள் என சிறப்பாக கொண்டாடுகிறோம். அரசர்கள் செய்தியை பரிமாறிக்கொள்வதற்கு மணிப்புறாவை பயன்படுத்தினர். கடவுள் இறைசெய்தி பரிமாற்றத்திற்கு ரிங்கல் தௌபேயை பயன்படுத்தினார். 1804-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 4-ம் தேதி தரங்கம்பாடி வந்த இவர் கிராம மக்களிடம் சிறப்பாக திருப்பணியாற்றினார். 1808-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 13-ம் தேதி திருவாங்கூருக்கு வந்தவர். மைலாடி கிராமத்தை மையமாகக் கொண்டு திருப்பணியாற்றினார். மாற்கு 16 : 15,16-ல் கூறியிருக்கிற படி உலகமெங்கும் போய் இறைசெய்தி கூறி சீடராக்குவதை தன் பணியாகக் கொண்டார். இன்று கிறிஸ்தவர்களாகிய நமக்கு ஆண்டவர் இயேசு கிறிஸ்து தருகின்ற கட்டளை இதுவே. நாம் சீடராக இருப்பது மட்டுமல்ல, பிறரை சீடராக்கும் திருப்பணியை உற்சாகமாய் செய்ய வேண்டும். மண்ணில்

மனிதருக்கு மனிதர் சீடராகும் அவலம் அதிகரித்து வருகிறது, தன்னை நமக்குக்தந்த கிறிஸ்துவிற்கு நாம் சீடர்களாகி மற்றவர்களையும் சீடர்களாக்குவோம்.

## 2. திருமுழுக்குக் கொடுங்கள் :

ஆண்டவர் இயேசுகிறிஸ்து சீடர்களிடம் திருமுழுக்குக் கொடுங்கள் என்றார். தந்தை, மகன், தூய ஆவியார், பெயரால் திருமுழுக்கு கொடுங்கள் என மத்தேயு 28 : 19-ல் கட்டளையிடுகிறார். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மாற்கு நற்செய்தி நூல் 16 : 16 - இல் கூறும் போது நம்பிக்கை கொண்டு திருமுழுக்கு பெறுவோர் மீட்பு பெறுவர் என்றார். மைலாடி கிராமத்தில் சில நாட்கள் தங்கி இறைப்பணி ஆற்றிய ரிங்கல் தௌபே அவர்கள் ஒரு வீட்டின் முற்றத்தில் தொழுகை நடத்தி 40-பேருக்கு திருமுழுக்கு கொடுத்தார். இவர்தம் திருப்பணியில் இறைமகன் இயேசுவின் இறுதி கட்டளைகளின் இரணடாம் கட்டளையை சரியாக நிறைவேற்றினார் என்பது புலனாகிறது. யோவான் திருமுழுக்கைக் குறித்து பிரசங்கித்ததாக திப. 10 : 37 நமக்கு சுட்டிக்காட்டுகிறது. பேதுரு திருமுழுக்கு கொடுக்க தன் சீடர்களுக்கு கட்டளையிட்டதை திபா. 10 : 48 கூறுகிறது. இதற்கு அடிப்படை இயேசு கிறிஸ்து மத்தேயு 28 : 19-ல் கொடுத்த கட்டளை ஆகும். இன்று இயேசுகிறிஸ்துவினால் திருச்சபைக்கு தரப்பட்டுள்ள பொறுப்பு சீடராக்குவதுடன், திருமுழுக்குக் கொடுத்து நம்பிக்கையில் உறுதிபட செய்து மீட்புக்கு வழிகாட்டுவதுமாகும்.

## 3. கற்பியுங்கள் :

மத்தேயு நற்செய்தி நூல் 28 : 20 இல் இயேசுகிறிஸ்து உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்களும் கடைப்பிடிக்கும்படி கற்பியுங்கள் என்று சீடர்களுக்குச் சொன்னார். மத். 11 : 29-ல் நான் கனிவும், மனத்தாழ்மையும் உடையவன். ஆகவே என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு என்னிடம் கற்றுக் கொள்ளுங்கள். அப்பொழுது உங்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். என் நுகம் அழுத்தாது என் சுமை எளிதாயுள்ளது என கற்றுக் கொடுத்த ஆண்டவர் தன் மானுட வாழ்வின் இறுதியில் தன் சீடர்களுக்கு கற்றுக்கொடுங்கள் என கட்டளையிட்டார். இறைப் பணியாளராய் மைலாடி கிராமத்தில் நற்பணியாற்றின ரிங்கல் தௌபே இறைகட்டளைகளையும், இறை கற்பனைகளையும் கற்றுக் கொடுத்தார். மட்டுமல்லாமல் உயிட்லே. புளூரி என்ற இரண்டு வாலிபர்களை அனுப்பி இறை இல்லங்களிலும், பள்ளிக் கூடங்களிலும் இறை அன்பை

கற்றுக்கொடுக்கும் ஊடகங்களாகப் பயன்படுத்தினார். அருட்தொண்டு பணியில் தனக்குக் கிடைத்த பணத்தைக் கொண்டு பள்ளிக்கூடம் கட்டுவதற்கு அனுமதிப் பெற்று இறை இயேசுவின் இறுதிக் கட்டளையை நிறைவேற்றினார்.

தி.ப. 1 : 8-ல் தூய ஆவி உங்களிடம் வரும்போது நீங்கள் கடவுளது வல்லமையைப் பெற்று எருசலேமிலும், யூதேயா, சமாரியா முழுவதிலும் உலகின் கடை எல்லை வரைக்கும் எனக்கு சாட்சிகளாயிருப்பீர்கள் என்று இயேசுகிறிஸ்து நாம் உலகமெங்கும் சாட்சிகளாய் இருந்து கற்பிக்க வேண்டுமென நமக்குப் போதிக்கிறார். ஆனால் நாம் பல வேளைகளில் மத்தேயு நற்செய்தியாளர் 19 : 16-ல் குறிப்பிடும் பணக்கார வாலிபனைப் போல தன்னிலேத் தானே தேறினவர்களாயும், குறைவு சுட்டிக்காட்டப் படும்போது அதை ஏற்றுக்கொள்ள மனதில்லாது திரும்பிச் செல்கிறவர்களாயும், கற்பதற்கும் கற்பிப்பதற்கும் மனதின்றிக் காணப்படுகிறோம்.

கிறிஸ்தவர்களாக அழைக்கப்பட்டிருக்கும் நாம் ஆண்டவரிடம் கற்றுக் கொள்வது மட்டுமல்லாது கற்றுக் கொடுக்கவும், இறைப்பாதையில் வழிநடத்தவும் அழைக்கப்பட்டிருக்கிறோம்.

இறை இயேசுவின் இறுதிக் கட்டளைக்கு இணங்கி இறைப்பாதையில் இணைவோம்! சீடராக்கும் திருப்பணியினைச் செய்வோம்! மீட்புக்கு நேராய் இறைக்கட்டளைகளைக் கற்றுக்கொடுத்து வழி நடத்துவோம் இறையாசிப் பெற்றுக் கொள்வோம்!

திருவாளர். **N. ஜெசின்**

**01-05-2011** *அருணோதய ஆராதனை*

# உழைப்பில் ஆசி அருளும் கடவுள்

இச. 28 : 18

*"ஆசீர்வாதம் கட்டளையிடுவார்." இச. 28 : 8*

கடவுள் படைப்பு செயலினூடாய் தாம் ஒரு சிறந்த உழைப்பாளி என்பதைத் தெளிவுபடுத்தினார். அதோடு ஆறுநாளும் தம்முடைய கடின உழைப்பின் காரணமாக ஏழாம் நாள் ஓய்ந்திருந்தார். (தொநூ. 2 : 2) என திருமறை கூறுகிறது. இவ்வாறு உழைத்த கடவுள் தாம் படைத்த மனுக்குலமும் உழைத்து வாழ வேண்டும் என்று கட்டளையிட்டார் (தொநூ. 2 : 15) மனுக்குலம் கடவுளுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிய மறுத்த போது கடவுள் உழைப்பை சபிக்காதபடி உழைப்பைக் கடினப்படுத்தினார் (3 : 17,18). எனவே கடினமாய உழைத்தால் மட்டுமே நிரம்ப நன்மை பெற்றுக் கொள்ள இயலும் என கற்றுக் கொள்ள முடிகிறது. அதோடு கீழ்ப்படியாத மனுக்குலத்தால் கடினமாக்கப்பட்ட உழைப்பில், கீழ்படிந்து வாழ்ந்தால் நன்மைகளைப் பெற்றுக் கொள்ள முடியும் (இச. 28 : 1,2) என்று போதிக்கப்பட்டுள்ளது. எனவே உழைப்பவர் திருநாளாகிய இந்நாளிலே நமது உழைப்பை ஆசீர்வதிக்க ஆவலாய் காத்திருக்கும் அண்டவரின் திருவடியைப் பற்றிக் கொள்ள அழைக்கப்படுகிறோம். இந்நாளிலும் ஆண்டவர் நமது உழைப்பினை ஆசீர்வதிக்க நாம் என்ன செய்ய வேண்டும் என்பதனைத் திருமறை சார்ந்து தியானிப்போம்க.

## *1. கட்டளைகளை வாழ்வில் செயல்படுத்த வேண்டும் :* (இச. 28 : 1)

கடவுள் உழைப்பை ஆசீர்வதிப்பார், என்று ஆசியருளும் திருமறைப் பகுதிக்கு முகவுரையாகச் சொல்லப்பட்டுள்ள உண்மைகளில் முதலாவதாக ஆண்டவரின் கட்டளைகளின்படி செய்ய வேண்டும் (28 : 1) என்று கூறப்பட்டுள்ளது. இஸ்ரயேலரின் வாழ்வில் கட்டளைகளைத் தந்து அவற்றை அவர்கள் வாழ்வில் கடைபிடிக்கும் போது அதிக நன்மைகளை பெற்றுக் கொள்ள முடியும் என்று போதிக்கப்படுகிறது. இவ்வாறு வாழ்வில் வெளிப்படுத்தப்படும் கட்டளைகள் மூலமாக அதிகமான ஆசிகளைப் பெற முடியும் என இணை சட்ட நூலின் 28 ஆம் அதிகாரத்தின் முன் பகுதியில் பட்டியலிடப்பட்டுள்ளது (28:1 14). அதே வேளை கட்டளைகளை வாழ்வில் செயல்படுத்தாமல் போனால் உழைப்பில் கடவுளுடைய சாபம்

வெளிப்படுகிறது என்பதை 28 : 15 முதல் காணலாம். கடவுளால் படைக்கப்பட்ட முதல் மனுக்குலமும் கடவுளுடைய கட்டளைக்கு முரண்பட்டுச் சென்ற வேளை உழைப்பின் பலன் எதிர்பார்ப்பது போல் இருப்பதில்லை என்று சொல்லப்பட்டுள்ளது (தொநூ. 3 : 17, 18). திருப்பாடகர் ஆண்டவருக்குப் பயந்து அவர் வழிகளில் நடக்கின்ற மனிதர்......... உழைப்பின் பலனை உண்டு நிறைவடைவர் (திபா. 128 : 2) என்றும் கூறுகிறார். உழைப்பவராகிய நாம் ஒவ்வொருவரும் இறைவனுடைய கட்டளைகளை நமது வாழ்வில் செயல்படுத்தி நிரம்ப நன்மை பெற்று வாழ அழைக்கப் படுகிறோம்.

## *2. கட்டளைக்குக் கீழ்ப்படிய வேண்டும் :* (இச. 28 : 1)

உழைப்பில் இறையாசி பெற கடைபிடிக்க வேண்டிய இரண்டாவது உண்மை ஆண்டவரின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து வாழவேண்டும் என்பதாகும். இறை வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து உழைப்பதின் மூலம் மேன்மையடைய முடியும் என்பதை இயேசுகிறிஸ்துவின் சீடர்களது வாழ்வில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்று தெளிவாக உணர்த்துகிறது. உயிர்த்தெழுந்த இயேசு கடற்கரையில் சந்திக்கும் சீடர்கள் இரவு முழுவதும் உழைத்துச் சோர்ந்திருந்தனர். மனிதர்களைப் பிடிக்க வேண்டிய இவர்கள் அழைப்பினை மறந்து மீன்களைப் பிடிக்க முயற்சித்து களைத்துப் போயிருந்தனர். அவ்வேளை இயேசு வந்து வலது புறமாக வலையைப் போடுங்கள் என்று கூறினார். இது அவர்கள் இன்னும் சிறப்பாய் கடினமாய் உழைக்க வேண்டும் என்பதையும் அவர்களது உழைப்பு சிறப்பாக அமைய ஆண்டவரும் அடியார்களுடன் இருக்க வேண்டும். (Presence) என்ற உண்மையும் புலப்படுகிறது. உடனே சீடர்கள் அதற்கு கீழ்படிந்து உழைக்கச் செல்வதினால் 153 பெரிய மீன்களைப் பிடித்து நிறைவு கண்டார்கள். (யோவா. 21 : 1-11). உழைத்து வரும் சீடர்களுக்காகச் சுடப்பட்ட அப்பத்தை முதலில் உழைக்கச் செல்வதற்கு முன்னால் கொடுக்காமல் உழைத்துவந்த பிற்பாடே உணவளித்து, ஒவ்வொருவரும் உழைத்துச் சாப்பிட வேண்டும் என்பதை உறுதி செய்கிறார். தூய பவுலாரும், உழைக்காதார் சாப்பிடலாகாது (2தெச. 3 : 10) என்று கூறுவதையும் இங்கே நினைவில் கொள்ளலாம். ஆண்டவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து உழைத்து நன்மை பெற்ற சீடர்கள் போன்று கீழ்படிந்து உழைக்க அழைக்கப்படுகிறோம்.

## 3. கடின உழைப்பின் பலன் ஆண்டவரிடம் கொடுக்கப்பட வேண்டும் :

கடின உழைப்பின் பலனை ஆண்டவர் தொட்டு ஆசீர்வதிக்க அவரது கரத்தில் அதன் மேன்மையானது தரப்பட வேண்டும். இஸ்ரயேலருக்கு அருளப்பட்டக் கட்டளையில் நீ பயிரிடுவதின் முதற்பலனை சேர்த்து கடவுளின் திருப்பெயர் மாட்சிக் கென்று அவர் தெரிந்திருக்கும் இடத்தில் போய் (ஆலயம்)..... அன்று இருக்கும். ஆசாரியரின் பாதத்தில் வைத்து வரலாற்றை நினைவு கூர அழைக்கிறார். (இச. 26:1-11). இதனால் அவர்கள் வாழும் காட்டில் செழிப்பான வாழ்வைச் சுதந்தரித்துக் கொள்ளமுடியும் என்று கூறப்பட்டது. இயேசுவின் போதனைகளைக் கேட்டத் திரள் கூட்டம் மக்கள் உணவுண்டு மகிழ ஒரு சிறுவன் இயேசுவின் கரத்தில் அளித்த ஐந்து அப்பமும் இரண்டு மீனும் ஆசீர்வதிக்கப்பட்டது (யோவா. 6 : 8-11) நமது தொழுகைமுறையில் ‘உமது கரத்தில் வாங்கி உமக்கே அளிக்கிறோம்’ என்னும் வரிகள் ஆழமான அழுத்தத்தையும் உண்மையையும் உள்ளடக்கியுள்ளது. மீன்களைப் பிடித்த சீடர்கள் அதில் சிலவற்றை ஆண்டவரிடம் அளிக்கும் போது அவர்களுக்கு அது பகிரப்படுவதோடு இரவு முழுவதும் உழைத்த களைப்பு நீங்க உண்டு மகிழ்ந்தனர் (யோவா. 21:10-12). கடவுள் நமது உழைப்பினை ஆசீர்வதித்து தொடர்ந்து நன்மையருள நாம் அவரது கட்டளைக்குக் கீழ்ப்படிந்து அதனை நமது வாழ்வில் செயல்படுத்துவதோடு நமது உழைப்பின் பலனை ஆண்டவர் தொட அதனை அவரிடம் அளிப்போம். உழைப்பிற்கு மாதிரியான நமது ஆண்டவர் நம்மையும் நமது உழைப்பினையும் ஆசீர்வதிப்பாராக.

அருள்திரு. **A. பிரைட் சாலமோன்**

**01-05-2011**

***உயிர்த்தெழுந்த திருநாளுக்கு பின் வரும் முதலாம் ஞாயிறு***

# நீரே என் ஆண்டவர்! நீரே என் கடவுள்!

**MY LORD AND MY GOD**

| | |
|---|---|
| வி.ப. 3:7-15 | 1பேதுரு. 1:3-9 |
| திபா. 93 | யோவா. 20:24-29 |

*"நீரே என் ஆண்டவர்! நீரே என் கடவுள்!" யோவா. 20 : 28*

**மன்றாட்டு :** எங்கள் மீட்பரான கடவுளே, உமது திருமைந்தரை எங்கள் பாவங்களுக்காக உயிர்விடவும், எங்களை நீதிவழியில் நடத்த மாட்சியோடு மரணத்தை வென்றெழவும் அருள்கூர்ந்தீர். நாங்கள் நம்பிக்கையுடன் உயிர்த்தெழுதலை ஏற்று இறைநம்பிக்கையில் தளர்வின்றி முன்னேற வழிகாட்ட வேண்டுமென மகிபன் இயேசுகிறிஸ்து வழி கேட்கிறோம். - ஆமென்.

இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் நிகழ்வு முரண்பாடான நிலைகளில் பேசப்பட்டு வந்த சூழ்நிலையில், தோமாவிற்கு ஆண்டவரின் தரிசனம் இயேசுநாதரின் உயிர்த்தெழுந்த செயலை உறுதியாக்கியது என்று உணரப்பட்டது. தனது செயலால் எதையும் எளிதில் ஏற்றுக்கொள்ளா தடங்கலுடையவர். இயேசுநாதரோடிருப்பதை தனது சந்தேகங்களை விசாரித்து அறிந்து கொண்டவராய் இருந்தார் (யோவான் 14 : 5). உயிர்த்தெழுந்த இயேசுவின் தரிசனம் பெற்ற சீடர்களில் தோமாவின் தரிசனம் தனிச் சிறப்பு வாய்ந்தது. தோமாவின் காட்சி இயேசு நாதரின் (Bodily Resurrection) உயிர்த்தெழுதலை உலகிற்கு உறுதிப்படுத்தியது.

## 1. ஆவல் கொண்ட தோமா : (யோவா. 20 : 25)

மற்ற சீடர்கள் அவரிடம் "ஆண்டவரைக் கண்டோம்" என்றார்கள். தோமா அவர்களிடம் "அவருடைய கைகளில் ஆணிகளால் ஏற்பட்ட காயத் தழும்பைப் பார்த்து, அதில் என் விரலை விட்டு அவர் விலாவில் என் கையை இட்டாலன்றி நான் நம்பமாட்டேன்" என்றார்.

இயேசு நாதரின் சிலுவை மரணத்திற்குப் பின் சீடர்கள் சிதறிப் போய் இருந்தார்கள். இந்நிலையில் மற்ற சீடர்கள் இயேசு நாதரை கண்டோம் என்றவுடன் அதனை அப்படியே ஏற்றுக்கொள்ள தோமா துணியவில்லை. நான் அவரை காண வேண்டும் மற்றவர்கள இயேசுநாதரை எனக்கு காட்டுவது அல்ல. நான் அவரை தொட்டு பார்க்கும் நிலையில் தகுதிபெற வேண்டும் என ஆவல்கொண்டார். சிலுவையில் இயேசு நாதரின் காயத்தை கண்ட தோமாவின் மனதில் அது நீங்கா காயங்களாய் பதிந்திருந்தது. காயப்பட்ட இயேசுநாதரை காணத்தே

தனது பற்றுறுதி வாழ்விற்கு ஏற்றது என்பதை உணர்ந்து இயேசு நாதரை காயப்பட்டவராய் பார்க்க விரும்பினார். (Wounded Christ) தனது சொந்த அனுபவத்தினூடாய் அவரை பார்க்க ஆவல் கொண்டார். (Knowing Christ in his own experience) (M.M. தாமஸ் என்ற இந்திய இறையியலாளர் சொல்வது போல், "இந்திய கிண்ணத்தில் நற்செய்தி" அதாவது நற்செய்தியை நாம் நமது சூழ்நிலையில் ஏற்றுக்கொள்ளல் அவசியம்.)

வி.ப. 3 - ல் மோசே கடவுளிடம் இதோ இஸ்ரயேல் மக்களிடம் சென்று உங்கள் மூதாதையரின் கடவுள் என்னை உங்களிடம் அனுப்பினார் என்று நான் சொல்ல, அவர் பெயர் என்ன ? என்று அவர்கள் என்னை விசாரிப்பாரேல் அவர்களுக்கு என்ன சொல்வேன் என்று கேட்டார் மோசேயின் ஆவல் கடவுளை மற்றவர்களுக்கு அறிவிக்க தனது சொந்த அனுபவத்தில் அவரை அறிந்து கொள்தல் ஆகும். இருக்கின்றவராக இருக்கிறவர் (Yaweh) என்ற தெளிவு பெற்ற மோசே அவரை எகிப்தின் ராஜாவுக்கும் திரள் கூட்டம் இஸ்ரவேலருக்கு தயக்கமின்றி அறிவித்து, விடுதலை வாழ்வுக்கு வழிநடத்த துணிவு பெற்றார்.

இறைப்பற்று குன்றிப் போயுள்ள, செழுமை இறையியல் பெருகியுள்ள இன்றைய சமூகத்தில் நமது பற்றுறுதி உறுதிப்பட தோமாவைப் போல் நமது சொந்த அனுபவத்தில் கடவுளை கண்டுகொள்ள ஆவல் உடையவர்களாய் காணப்படுவோம்.

## 2. *அறிந்துகொண்ட தோமா :* *(யோவா. 20 : 27)*

பின்னர் அவர் தோமாவிடம், "இதோ என் கைகள், இங்கே உன் விரலை இடு. ஐயம் தவிர்த்து நம்பிக்கைக் கொள்" என்றார்.

ஆவல் கொண்ட தோமாவிற்கு ஆண்டவர் தம்மை வெளிப்படுத்தினார். அத்திருக்காட்சியை தரிசித்த தோமா ஆண்டவரை உள்ளபடியே அறிந்துகொண்டார்.

(i) ஆண்டவர் அனைத்தும் அறிபவர் என்பதை அறிந்துகொண்டார். காயங்களை தொட்டுப் பார்க்க ஆவல் கொண்ட தோமா ஆதலால் மற்ற சீடர்களோடு சேர்ந்தோர் சற்றும் எதிர்பாராமல் அவரை வீட்டிற்குள் ஆண்டவரை கண்டார். அத்துடன் எதற்காக ஆவல் கொண்டாரோ அதனை நிறைவேற்ற ஆண்டவர் தன்னிடம் சொன்னபொழுது இங்கே உன் விரலை இடு. உன் கையை என் விலாவில் இடு என்றபொழுது 'He knows everything' ஆண்டவர் எல்லாம் அறிபவர் ஆவல் நிறைவேற்றுபவர் என்பதை அறிந்து ஐயமற்றவராய் மாற்றப்பட்டார்.

(ii) ஆண்டவரின் காயம் எத்தகையது என்பதை அறிந்து கொண்டார். (ஏசாயா 53 : 5) 'அவரோ நம் குற்றங்களுக்காக காயமடைந்தார்............. என்ற ஏசாயா தீர்க்கரின் வாக்குப்படி கிறிஸ்துவின் காயங்கள் மானிடர்க்காய் ஏற்பட்டதாகும்.' ஒரு தந்தை கீழ்படியாத மகனை குறித்து மிகவும் வேதனைப்பட்டார். அவனை நல்வழிப்படுத்த ஒருநாள் ஒரு அழகான துண்டு மரப்பலகையையும் சில ஆணிகளையும், சுத்தியல் ஒன்றினையும் அவன் கையில் கொடுத்து மகனே நீ தவறு செய்ய

தூண்டும்பொழுது இந்த ஆணியை எடுத்து பலகையில் அறைந்துவிடு என்றார். மகனும் அப்படியே செய்யத் துவங்கினான். ஆரம்பத்தில் அதிகமான ஆணிகளை அடித்துக்கொண்டான். பின்னர் படிப்படியாக குறைந்து ஆண்கள் இல்லை என்ற நிலை ஏற்பட்டது. இதனை கவனித்த தந்தை மகனே நீ அறைந்த ஆணிகளை ஒவ்வொன்றாக பிடுங்கி எடுத்துவிடு என்றார். மகன் அப்படியே செய்தான். முடிவில் ஆணிகளால் காயப்பட்டிருந்த பலகையை பார்த்து எவ்வளவு அழகான பலகை ஆணிகளால் காயப்பட்டு அருவருப்பானதே. இந்த காயம் என்னால், என் தவறுகளால் தானே என வேதனை அடைந்தானாம்.

தோமாவும் ஆண்டவரை காயப்பட்டவராய் கண்டு, அந்த காயங்கள் என்னால் தானே என அறிந்து, நான் ஐயப்படுவது மறுபடியும் அவரை காயப்படுத்தும் என உணர்வு பெற்றார்.

நமது அறிவீனம் ஆண்டவரை காயப்படுத்தும் என்பதை அறிந்து கொள்வது அவசியம்.

### *3. அறிக்கை செய்த தோமா : (யோவா. 20 : 27)*

தோமா அவரைப் பார்த்து, நீரே என் ஆண்டவர் நீரே என் கடவுள் ! என்றார்.

அறிந்துகொண்டதோமா அறிக்கை செய்தார் (தொநூ. 16 : 13). ஆகார் வனாந்தரத்தில் அறிந்துகொண்ட இறைவனுக்கு “காண்கின்ற இறைவன் நீர்” என்று பெயர் சூட்டினாள். தோமா தான் அறிந்து கொண்ட ஆண்டவரை பார்த்து “நீரே என் ஆண்டவர் நீரே என் கடவுள்” (My Lord and my God) என்று அறிக்கை செய்தார்.

(i) **ஆண்டவர் : (Lord)** : வல்லமையையும் அதிகாரத்தையும் வெளிப்படுத்தும் பதம் : பழைய ஏற்பாட்டில் கடவுளின் வல்லமை (eg. Adonai, El-shaddai, Yahweb) (அடோனாய், எல்-சடாய், யாவே) என்ற நிலைகளில் வெளிப்படுத்தியபடி தோமா இயேசு நாதரை மேசியா என வெளிப்படுத்துகிறார். (Humanity of Jesus)

(ii) **கடவுள் : (God)** : எபிரேய பதம், El-Elohim எல் எல்லோஹிம், படைப்பாளர், பாதுகாப்பாளர். கிரேக்க பதம் (Theos) தியோஸ்.

**தோமாவின் அறிக்கை :** (a) ***உறவு சார்ந்தது* :** என் ஆண்டவர், என் கடவுள். கடவுளோடு தோமா ஏற்படுத்திக்கொண்ட உறவு நிலையை காட்டுகிறது.

(b) ***உரிமை சார்ந்தது* :** உரிமையோடு ஏற்றுக்கொள்கிற நிலை,

இவ்வாறு உயிர்த்தெழுந்த இயேசுவை பார்க்க ஆவல் கொண்ட தோமா, பார்த்து, அறிந்து, அறிக்கை செய்தார். தோமாவின் அனுபவம் உயிர்த்தெழுந்த இயேசுவை சந்தேகமின்றி நம்புவதற்கு அடையாளமாய் அமைந்துள்ளது.

அருள்திரு. **S. டார்வின்**

**08-05-2011**

*உயிர்த்தெழுந்த திருநாளுக்கு பின் வரும்*
*2-வது ஞாயிறு*

# உயிர்த்தெழுந்த கிறிஸ்துவில் வாழ்வு

**(RED CROSS SOCIETY DAY)**
**LIFE IN THE RISEN CHRIST**

எசேக்கியேல் 37:1-14 உரோ. 6 : 1-14
தி. பா. 23 யோவா. 21:1-14

*"…..மானிடா! இந்த எலும்புகள் இஸ்ரயேல் வீட்டார் அனைவரையும் குறிக்கும்!!" எசே. 37:11*

**மன்றாட்டு :** வாழ்வின் ஆதாரமான கடவுளே, தமது திருமைந்தரால் மரணத்தை மேற்கொண்டு நிலைவாழ்வின் வாயிலைத் திறந்திருக்கிறீர். எங்கள் ஆண்டவரின் உயிர்த்தெழுதலைக் கொண்டாடும் நாங்கள், தூய ஆவியரின் ஆற்றலால் புனரமைக்கப்பட்டு, பாவ மரணத்திலிருந்து விடுதலையாகி நீதியின் வாழ்வை அனுபவிக்க வாழ்வருளும் வல்லவர் இயேசு வழி மன்றாடுகிறோம். - ஆமென்.

சுவிஸ் நாட்டில் பிறந்த பிரபல வியாபாரி ஹென்றி டுனாண்ட்ஸ் (Henry Dunand) 1959-ம் ஆண்டு தனது வியாபாரம் விஷயமாக இத்தாலியில் தங்கியிருந்த பிரான்சு நாட்டு அரசர் மூன்றாம் நெப்போலியனை (Nepolian III) சந்திக்க சென்றார். அவர் சல்போரினோ (Salforino) என்ற கிராமத்தில் வந்தபோது ஆஸ்திரிய சார்டீனிய (Austrio Sardinian) போரின் மூலம் ஒரு நாளில் மட்டும் சுமார் 40,000 பேர் காயம் பட்டும் இறந்தும் காணப்பட்ட நிலையை பார்த்தார். காயம் பட்டவர்களுக்கு மருத்துவ வசதி போதுமானதாக இல்லை. இதைகண்டு கண்ணீர் விட்டு சிந்தித்து ஆதரவற்ற நிலையில் இருப்போருக்கு மருத்துவம், பாதுகாப்பு, உணவு, போன்றவற்றை கொடுத்து வாழ்வதற்கு நம்பிக்கை ஊட்ட உருவாக்கப்பட்டது தான் செஞ்சிலுவை சங்கம். இன்று உலகம் முழுவதும் செஞ்சிலுவை சங்கம் நாளாக நினைவு கூரும் நாளில் சுமார் கி.மு. 587க்கும் 571க்கும் இடைப்பட்ட நாட்களில் நேபுகாத்நேசர் யூதா நாட்டை மிகவும் ஒடுக்கி சிறைபிடித்த சென்று மிகவும் துன்புறுத்தி சித்திரவதை செய்த காலகட்டத்தில் எசேக்கியேலின் காலத்தில் நாடுகடத்தப்பட்டவர்கள். மெசபத்தோமியரின் கனவு காட்சி இலக்கியத்தை அறிந்திருந்தனர். இறையியல் சிந்தனையில் இது முழுவதுமாக எதிர்கால நம்பிக்கை பற்றியது (eschatalogical). ஒடுக்கப்படும் அனுபவத்தில் இருக்கும்போது இந்த

இலக்கியத்தை ஒடுக்கப்படுபவர் பயன்படுத்துவார்கள். மறைபொருள் வெளிப்பாட்டு இலக்கியத்தில் வாழும் பகுதி சார்ந்து குறிப்பிடுவது தெளிவாக புரிந்துகொள்ள முடிகிறது. எபிரேயத்தில் பள்ளத்தாக்குக்கும் சமபூமிக்கும் ஒரே சொல் பிக்குயா (biqa) என்பது பயன்படுத்தப்படுகிறது. S-22-ல் இதே சொல் காணப்படுகிறது. மேலும் சொல்லப்படும் தரிசனங்கள் கடவுள் செயல் சார்ந்து விளக்கப்படுகிறது. இப்பகுதியை கீழ்க்கண்டவாறு நாம் சிந்திக்கலாம்.

## *1. உயிரற்று உலர்ந்தவர்கள்* **(Lifeless People)**

சிறை இருப்பினாலும் , சிதறுண்டதினாலும் நம்பிக்கை இழந்து நின்ற கடவுளின் உலர்ந்த எலும்புகள் என்ற உருவகம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. எலும்புகள் திரளாய் கிடந்தது என்பது புதையுண்ட பிணங்கள் என்பதும் சிறைப்பட்டவர்களை அடக்கம் செய்யப்பட்டிருக்கிற நாடு எனவும் பொருள் கொள்ளலாம். இந்நிலையில் கடவுள் எசேக்கியேலிடம் மக்கள் நம்பிக்கை பெற தீர்க்கதரிசனம் உரை என்கிறார். இன்றும் சமுகத்தில் ஏழைகளுக்கு, ஒரு நீதி, செல்வந்தர்களுக்கு மற்றொரு நீதி, ஆளுகிறவர்களுக்கு ஒரு நீதி, சாதாரண மக்களுக்கு மற்றொரு நீதி, தன்னல நோக்கோடு நீதி, நியாயம் புரட்டப்பட்டு கொண்டிருக்கும் சூழலில் வாழ்வில் அடிமைபடுத்தப்பட்டு, ஓரம்கட்டபட்ட மக்களுக்கு இப்பகுதி ஒருசவாலாக இருக்கிறது. எலும்புகள் என்றாலே பலத்திற்கு ஒப்பிடலாம். எலும்புகளுக்கு தன் பெலன் தெரியாமல் இருக்கலாம் ஆனால் எலும்பின் பெலன் மற்றவர்களுக்கு தெரியும். (நீ.தி. 15:15) (Bone is used as a weapon) எலும்பு போர்க்கருவியாக பயன்படுத்தப்பட்டது. இன்று சிறுபான்மையோர், எளியோர், ஏழைகள், மாற்றுதிறனாளிகள் என ஓரம்கட்டப்பட்ட நிலையில் இருக்கும் மக்கள் உயிரற்ற எலும்புகளாக இருந்தாலும் பெலன் மறைந்து இருக்கிறது என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

## *2. உயிரற்றவர்கள் உயிரூட்டப்படல்* **(Life to Lifeless)**

தீர்க்கதரிசனம் உரைத்தபோது ஆங்காங்கே சிதறிக்கிடந்த எலும்புகள் மாம்சமும் நரம்புகளும் கொண்ட சரீரமாக மாறியது. தனிப்பட்ட உடல்களாக மாறியது. ஆனால் உயிரடையவில்லை. (தொ.நூ. 2:7) ஜீவசுவாசம் கொடுக்கப்படும்போது உலர்ந்த எலும்புகள் உயிரடைகிறது. உலர்ந்த எலும்புகள் உயிரடைவது உயிர்த்தெழுதல் போன்றது. காற்று திசை நான்கு பக்கம் என்பது நான்கு பக்கங்களிலும் சிதறிப் போனவர்கள் கூட்டி சேர்க்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது.

வார்த்தையாகிய கடவுளின் மூச்சு நம்மில் செயலாற்றுகிறபோது நாம் உயிர்பெறுகிறோம். யோவான் 21:1-14 வசனங்களில் சாப்பிடுவதற்கு ஒன்றுமில்லையே என்ற நிலையில் இயேசுவின் வாக்கிற்கு இணங்கியபோது திரளாக வலை கிழியும்படியாக மீன்கள்.

இயேசுவின் அன்பை வார்த்தையாக மட்டுமல்ல. செயல்வடிவத்திலே மக்களிடம் நடைமுறைபடுத்திய அன்னை தெரசா அவர்களால் வாழ்வு பெற்றோர் ஏராளம். தொழுநோய், பசி, பட்டினி, AIDS வியாதி, கைம்பெண்கள் ஆதரவற்றோர் என வாழ்வின் உயிரற்ற நிலைகளில் இருந்தவர்களுக்கு உயிர்கொடுப்பதாக அமைகிறது.

உயிரற்ற, நம்பிக்கையற்ற நிலையில் இருக்கும் மக்களுக்கு நம் திருச்சபை வாழ்வின் மூச்சினை கொடுக்கின்ற நிலையில் காணப்படுகிறதா? என சிந்தித்து உயிரற்றவர்கள் உயிரூட்டப்பட கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை வெளிப்படுத்தும் ஊடகங்களாவோம்.

## *3. உயிரற்றவர்கள் உறுதிபெறல்* (Hope to lifeless)

இது எப்படி ஆகும்? என கேட்ட மரியாளுக்கு கடவுள் நம்பிக்கை கொடுக்கிறார். நான்கு நாளாயிற்றே நாறுமே என்ற மார்த்தாளுக்கு நம்பிக்கை கிடைக்கிறது.

சிறையிருப்பில் இருக்கும் மக்களுக்கு நம்பிக்கை உண்டா?

1. நாங்கள் உலர்ந்து போனவர்கள்
2. எங்கள் நம்பிக்கை அற்றுப் போயிற்று
3. நாங்கள் தனித்தனியே இருக்கிறோம்.

ஒன்று சேரமுடியுமா (வச. 11) என்ற நிலையில் இருப்போருக்கு மறுவாழ்வு உண்டா? என்ற நிலையில் கடவுள்மேல் நம்பிக்கை வை என தீர்க்கதரிசனம் சொல் என்கிறார் (ஆமோஸ் 9:14,15).

ஒடுக்குதல்கள் நிரந்தரம் அல்ல என நம்பிக்கை கொடுக்கிற கிறிஸ்துவை தன்னலத்திற்காக சிலுவை அறைந்தவர்கள், பரிகசித்தவர்கள் வெட்கப்பட்டு போய் விட்டார்கள்.

இன்றும் உயிர்த்தெழுந்த இயேசு உடலளவிலும், உளம் சார்ந்தும் சமூக, அரசியல் பொருளாதார நிலையிலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நம்பிக்கை கொடுக்கிறார். உயிர்த்தெழுந்த கிறிஸ்துவில் நம்பிக்கை கொள்வோம், வெற்றி பெறுவோம்.

அருள்திரு. **R. *பிரேம் செல்வசிங்***

**15-05-2011**

***உயிர்த்தெழுதலுக்கு பின்வரும்***
***3-வது ஞாயிறு***

# இயேசுவே உலகின் ஒளி: ஒளியில் நடப்போம்

**JESUS THE LIGHT OF THE WORLD: WALKING IN THE LIGHT**

ஏசாயா 60:1-7 — எபேசியர் 5:8-21

தி.பா. 27 — லூக். 24:13-35

*"ஆண்டவரே என் ஒளி; அவரே என் மீட்பு" தி.பா. 27:1*

**மன்றாட்டு : ஒளியாகிய கடவுளே, அனைத்து இருளையும் அகற்றும் நிலையான வெளிச்சமாய் ஆண்டவர் இயேசுவை உலகில் அனுப்பினீர். உமது மாட்சிநிறை பிரசன்னத்தால் நாங்கள் ஒளியூட்டப்பெற்று தெளிவும், நீதியுமுள்ளவர்களாய் வாழவும், எங்களை சூழ்ந்து நிற்கும் இருளின் ஆற்றல்களை எதிர்த்து நிற்கும் வலுவழங்கவும் வேண்டுமென வல்லவர் இயேசுகிறிஸ்து வழியாய் பணிந்து கேட்கிறோம். - ஆமென்.**

இறைவனால் அருட்பொழிவு செய்யப்பட்ட தாவீது, இறைவனை வெளிச்சத்திற்கு ஒப்பிட்டு, சங். 27:1-ல் "கர்த்தர் என் வெளிச்சம்"அவரால் தான் மனுக்குல மக்கள் ஒளி பெற முடியும், மீட்பு பெற முடியும் என குறிப்பிடுகிறார். இறை படைப்புகளில், (தொநூ. 1:3-ல்) "தேவன் வெளிச்சம் உண்டாகக்கடவது என்றார் வெளிச்சம் உண்டாயிற்று"அதன்பின் தொநூ. 1:4-ல்"வெளிச்சத்தையும் இருளையும் தேவன் வெவ்வேறாக பிரித்தார்" இதன்மேல் அதிகாரமுடையவராக இறைவன் செயல்படுகிறார். பாவத்தால் வீழ்ந்த, இருளான வாழ்வுக்குள் தள்ளப்பட்ட மனிதர்கள் கிறிஸ்துவினால் வெளிச்சம் பெறுகிறார்கள். இந்த வெளிச்சம் தான் மானிடரின் அக இருளைப் போக்குகிறது. முதல் நூற்றாண்டில் இந்தியாவில் அருட்பணியாற்ற வந்த இறையடியார் தோமா முதல் இன்று வரை அருட்பணியாளர்கள் கிறிஸ்துவிடம் ஒளி பெற்று, மானிடரின் அக இருளை பல நிலைகளில் போக்குகின்றனர். உதாரணமாக கல்வியற்ற இருள் நிலைமாற கல்வி நிறுவனங்களை உருவாக்கி கல்வி ஒளியளித்தனர். மூடபழக்கவழக்க இருள்மாற, சமூக தீமைகள் களைய குரல் கொடுத்தனர். கிறிஸ்து என்ற ஒளியில் நாம் நடந்தால், நம் வாழ்வு ஏற்றம் பெறுகிறது. அந்த ஒளியில் நடக்க, கிறிஸ்து எவ்விதம் நம் வாழ்வில் ஒளியாக செயல்படுகிறார் என சிந்திப்போம்.

## 1. வழிகாட்டும் ஒளி :

லூக் 24:31 "அவர்களுடைய கண்கள் திறக்கப்பட்டு அவரை அறிந்தார்கள்"கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்கு பிற்பாடு, பெயர் குறிப்பிடப்படாத இரண்டு பேர் எருசலேமுக்கு ஏழு அல்லது எட்டு மைல் தூரமான எம்மாவு என்னும் கிராமத்துக்கு போனார்கள். இவர்களுடன் இயேசு கிறிஸ்துவும் சேர்ந்து நடந்து போனார். அப்போது கிறிஸ்து என்னும் அக ஒளி இல்லாததினால் (லூக். 24:16-ல்) "அவரைஅறியாதபடிக்கு அவர்கள் கண்கள் மறைக்கப்பட்டிருந்தது" கிறிஸ்து அவர்களுடன் பேசுகிறார், அவர்கள் அறியாமை அகல துணை செய்கிறார். அப்போது அவர்கள், கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் சம்பவத்தை சொன்னார்கள். (லூக். 24:22-ல்) "அவரையோ காணவில்லை" என்றார்கள். அப்பொழுது வழிகாட்டும் ஒளியான இயேசு கிறிஸ்து, அவர்களுக்கு வழிகாட்டுகிறார். இறைவாக்கினர்கள் சொன்ன யாவையும் விசுவாசிக்கிறதற்குப் புத்தியில்லாத மந்த இருதயமுள்ளவர்களே, கிறிஸ்து இவ்விதமாக பாடுபடவும் தமது மகிமையில் பிரவேசிக்கவும் வேண்டியதில்லையா என்று சொல்லி மெய்யான வழிகாட்டுகிறார். மேலும் இவர்களுடன் கிறிஸ்து இறைவிருந்து ஆசரிக்கும்போது, ஒளி பெறுகிறார்கள். அவர்கள் இருதயம் கொழுந்துவிட்டு எரியதக்கதாக இந்த ஒளி அருள்செய்தது. கிறிஸ்து நம் வாழ்வில் ஒளியாக இருந்தால், வழிகாட்டும் ஒளியாக செயல்படுகிறார். நாம் நடக்கும் வழியை சரியாக காண்பிப்பார்.

யோ. 12:46-ல் 'என்னிடத்தில் விசுவாசமாயிருகிறவன் எவனும் இருளில் இராதபடிக்கு, நான் உலகத்தில் ஒளியாக வந்தேன்.'இருள் போன்ற உலக வழிகளில் நடவாதபடிக்கு மனிதர்களை உண்மையான, மெய்யான வழிக்கு, வழிகாட்டும் ஒளியாக கிறிஸ்து செயல்படுகிறார். யோ. 1:9-ல் மனிதரிடத்தில் இருக்கும் இருளை அகற்ற மெய்யான ஒளியாக இயேசுகிறிஸ்து வந்தார். (லூக். 1:78,79-ல்) அந்தகாரத்திலும், மரண இருளிலும் உட்கார்ந்திருக்கிறவர்களுக்கு வெளிச்சம் தரவும், நம்முடைய கால்களைச் சமாதானத்தின் வழியிலே நடத்தவும் கிறிஸ்து அருணோதயமாக வழிகாட்டும் ஒளியாக செயல்படுகிறார். கலங்கரை விளக்கு (light house) கடற்கரை அருகே நிறுவப்பட்டிருக்கிறது. இது வெகுதொலைவில் கடலில் பயணம் செய்யும் கப்பல்களுக்கு வழிகாட்டவும், கடலில் உள்ள பாறைகளில் கப்பல்கள் மோதாமல் இருக்கவும் ஒளியாக வழிகாட்டும் ஒளியாக செயல்படுகிறது. இதுபோல், கிறிஸ்து வழிகாட்டும் ஒளியாக நம் வாழ்வில் செயல்பட்டால் நம் வாழ்வு ஒளிமயமாகிறது.

## 2. வாழ்வு தரும் ஒளி :

யோவான் 1:9 "உலகத்திலே வந்து எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி"

மனிதர்களின் வாழ்வு ஏற்றம் பெற பிரகாசமான வாழ்வு கொடுக்க கிறிஸ்து உலகில் வந்தார், வாழ்வு கொடுத்தார். ஏசாயா இறைவாக்கினர் கிறிஸ்துவை குறிப்பிடும்போது ஏசாயா 42:8-ல் "உம்மை ஜனத்திற்கு உடன்படிக்கையாகவும், ஜாதிகளுக்கு ஒளியாகவும் வைக்கிறேன்." இயேசுகிறிஸ்து என்ற ஒளியை வாழ்வில் ஏற்றுக் கொள்ளும் போது வாழ்வு வளம் பெறுகிறது. ஏமிகார் மைக்கேல் (1867-1951) அவர்கள் 1859-ல் இந்தியாவிலிருந்து (Church of England Zenana Mission) அருட்பணியாளராக வந்தார்கள். 1900-ம் ஆண்டு முதல் திருநெல்வேலி மாவட்டத்தில் டோனாவூரை மையமாக கொண்டு இறை பணியாற்றினார்கள். 1901-ம் ஆண்டு, பண்ணை விளை கிராமத்தில் உள்ள தேவதாசி இல்லத்தில் அடைத்து வைக்கப்பட்ட 7-வயது சிறுமியை உயிருடன் மீட்டு, அதன் பிள்ளையாக வளர்த்து வாழ்வு கொடுத்தார்கள். தன் பிற்பாடு இப்படிப்பட்ட வாழ்விலிருந்த குழந்தைகளை மீட்டு 1926-ல் 'டோனாவூர் ஐக்கியம்' (Dohnavur Fellowship)" என்ற அமைப்பை உருவாக்கி, இவர்கள் வாழ்வில் ஒளியேற்றினார். தேவதாசி முறை ஒழிக்கப்பட்டது போல கொடிய, திருட்டு வேலையில் ஈடுபட்டு ஒளியிழந்த, வாழ்வில் கள்வன் செம்புலிங்கத்தை மனமாற்றம் செய்து, வாழ்வு தரும் ஒளியினுடையவராக மாற்றினார். கிறிஸ்துவும் வாழ்வுதரும் ஒளியாக, மனிதர்கள் செயல்படுகிறார்.

1800-ல், 'Baptist Missionary'இயக்கம் மூலம் செராம்பூரில் அருட்பணி செய்த, வில்லியம் கேரி, ஜோஸ்வா மார்ஸ்மென், வில்லியம் வார்டு ஆகியோர் சமூக தீமைக்கு எதிராக குரல் கொடுத்தனர். பிஞ்சு குழந்தைகளை ஓடும் கங்கை நதியில் வீசி பலிகொடுப்பது, கணவன் இறந்தால், அவன் மனைவி எரியும் கணவன் சிதையில் வீழ்ந்து மடியவேண்டும், மறுத்தால் வலுக்கட்டாயமாக சிதையில் தூக்கிப்போட்டு உயிர்பலியாக்கினர். இந்த சமூக தீமைமாற, வில்லியம் கேரி, செயல்பட்டு சட்டப்படி தடைபெற்றார். ஆகவேதான் இந்த அருட்பணியாளர்கள் "இருளில் ஒளிரும் மெழுகுவர்த்தி " (Candle in the darkness) என அழைக்கப்பட்டனர். கிறிஸ்து நம் வாழ்வுக்கு வழிகாட்டியாக, வாழ்வு தருபவராக செயல்பட நம் வாழ்வில் கனிகொடுக்க நம்மை அழைக்கிறார்.

## 3. கனிகளால் அறியப்படும் ஒளி

I யோவான் 1:7-ல் ''கிறிஸ்து ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம்; அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும்''

இயேசுகிறிஸ்து மனிதர்கள் வாழ்வில் வழிகாட்டும், வாழ்வுதரும் ஒளியாக செயல்படும்போது, மனிதர்கள் கனிகொடுத்து சாட்சியாக வாழ இறைவன் விரும்புகிறார். கிறிஸ்து என்ற ஒளி மனிதர்களின் கனிகளால் அறியப்படுகிறது. கிறிஸ்துவின் ஒளியில் நடந்தால், நம் மனித உறவுகளில் ஐக்கியம் (Fellowship) ஏற்படும். உலகில் மனித உறவுகளில் உண்மையான அன்பு, ஐக்கியம் இல்லாத சூழலால், குடும்பம், தனிநபர், திருச்சபை வாழ்வில் சமாதானமின்மை ஏற்படுகிறது. Iயோவான் 1:5-ல் ''தேவன் ஒளியாயிருக்கிறார், அவரில் எவ்வளவேனும் இருளில்லை'' I யோவா. 2:8-ன் பின்பகுதியில் ''இருள் நீங்கி போகிறது, மெய்யான ஒளி இப்பொழுது பிரகாசிக்கிறது''இந்த திருமறைப்பகுதிகள் எப்படி இந்த ஒளி கனிகளால் அறியப்படுகிறது என்பதை தெளிவுபடுத்துகிறது. Iயோவா. 2:9-ல் ''ஒளியிலே இருக்கிறேன் என்று சொல்லியும் தன் சகோதரனைப் பகைக்கிறவன் இதுவரைக்கும் இருளிலே இருக்கிறான்'' மேலும் Iயோவா. 2:10-ல் ''தன் சகோதரனிடத்தில் அன்பு கூருகிறவன் ஒளியிலே நிலைகொண்டிருக்கிறான்; அவனிடத்தில் இடறல் ஒன்றுமில்லை''தன் சகோதரனைப் பகைக்கிறவன் இருளிலே இருந்து இருளிலே நடக்கிறான்; இருளானது அவன் கண்களைக் குருடாக்கினபடியால் தான் போகும் இடம் இன்னதென்று அறியாதிருக்கிறான்''. கிறிஸ்து என்னும் ஒளி நம்மில் இருந்தால், நம் கனிகளால் இந்த ஒளியின் தன்மை அறியப்படும். பழைய ஏற்பாட்டு திருமறையில் யோசேப்பை, அவன் சொந்த சகோதரர்கள் குழியில் தள்ளிபோட்டு, இஸ்மவேல் வியாபாரிகளுக்கு விற்றுப்போட்டனர். அவர்கள் யோசேப்பை எகிப்துக்கு கொண்டு சென்றனர், யோசேப்போடு இறை கிருபை இருந்ததால், சோதனைகள் பலவந்தபோதும், இறை உறவில் பலம் கொண்டு, இறை ஞானத்தால், எகிப்தின் இரண்டாம்நிலை அதிபதியாக உயர்த்தப்பட்டார். தன் நிர்வாகத்தின் நாட்களில் எகிப்தின் 7 வருடம் செழிப்பு 7 வருடம் பஞ்சம் நிலவும் (தொநூ. 41:54) என கூறினது போல நிகழ்ந்தது. பஞ்சத்தினால் காக்கப்பட யோசேப்பின் சகோதரரும் எகிப்து சென்றனர். இறை ஒளியினால் நிரப்பட்ட யோசேப்பு தன் சகோதரர் இன்னார் என்பதை அடையாளம் கண்டு (தொநூ. 42:8) அவர்கள் தனக்குசெய்த துரோகத்தை, தீமையை எண்ணாது உதவி செய்கிறார்.

தொநூ. 45:4. 5-ல் நீங்கள் எகிப்துக்கு போகிறவர்களிடத்தில் விற்றுப்போட்ட உங்கள் சகோதரனாகிய யோசேப்பு நான்தான், என்னை இவ்விடத்தில் வரும்படி விற்றுப்போட்டதினால் சஞ்சலப்பட வேண்டாம்; ஜீவரட்சணை செய்யும்படிக்கு தேவன் என்னை உங்களுக்கு முன்னே அனுப்பினார். அதோடு யோசேப்பு வெகுகாலம் பிரிந்திருந்த தன் தகப்பன் யாக்கோபை சந்தித்து ஆசி பெற்றார்.

எபேசியர் 5:8-ல் “வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்து கொள்ளுங்கள்” எபேசியர் 5:9-ல் “ஆவியின் கனி சகல நற்குணத்திலும் நீதியிலும் உண்மையிலும் விளங்கும்”எபே 5:11-ல் ‘கனியற்ற அந்த கார கிரியைகளுக்கு உடன்படாமல் அவைகளை கடிந்து கொள்ளுங்கள். விழிப்பிலிருந்து கிறிஸ்து நம்மை பிரகாசிப்பிக்க கனிகளால் அறியப்படும் ஒளியின் தன்மையை தரிப்போம்.

நிறைவாக, வழிகாட்டி, வாழ்வுதரும் ஒளி, நம் வாழ்வின், கனிகளால் அறியப்பட, கிறிஸ்துவே உலகின் ஒளி என்பதற்கு சான்றுகளாக நம்மை அர்ப்பணித்து, கிறிஸ்துவுடன் ஒப்புரவாக்குவோம். இறைபடைப்புகளுடன், ஒப்புரவாகி உலகில் உப்பாக, ஒளியாக செயல்படுவோம்.

அருள்திரு. **S. டேவிட் ஜோசப் ராஜ்**

***தேவன் பேரில் பற்றுதலாய் வாழ்ந்தவர்களுக்கு, இறுதிகாலம் தேவ வருகையினை எதிர்பார்க்கும் காலம். தேவனற்றவர்களுக்கோ அது கொடிய காலம்.***

ஸ்டான்லி ஜோன்ஸ்

**22-05-2011**

***உயிர்த்தெழுதலுக்கு பின்வரும் நான்காம் ஞாயிறு***

# இயேசுவே வழி, வாய்மை, வாழ்வு

## JESUS, THE WAY, THE TRUTH AND THE LIFE

நீமொ. 4:10-19 | 2பேதுரு. 1:3-11
திபா. 33:1-9-20-22 | யோவா. 14:1-7

*"..........வழியும் உண்மையும் வாழ்வு நானே" யோவா. 14 : 6*

**மன்றாட்டு : எங்கள் கடவுளே, வழி, வாய்மை, வாழ்வினை திருமைந்தர் வாயிலாய் எங்களுக்கு உணர்த்தியிருக்கிறீர். நாங்களும் திருச்சபையாக அவரது வழிகளில் வாழ்ந்து, பிறர் உண்மையினை உணரவும், முழுமை வாழ்வினைப் பெறவும் எங்களை ஊடகங்களாக்க வாழ்வாகும் ஆண்டவர் இயேசுகிறிஸ்து வழியாய் இறைஞ்சுகின்றோம். - ஆமென்.**

யோவான் நற்செய்தி நூல் 'வாழ்வின் நற்செய்திநூல்' என எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள நூலாகும் குறிப்பாக மக்கள் வாழ்வு பெறும் பொருட்டு, அதுவும் நிறைவாகப் பெறும் பொருட்டு (யோ. 10:10) வந்த இயேசுவின் நற்செய்தி வாழ்வை கருப்பொருளாக கொண்டதாக இந்த நற்செய்தி நூலின் சிந்தனைகள் அமைந்திருக்கின்றன. யோவான் நற்செய்தி நூலில் மக்களின் வாழ்வுக்கு துணை புரியும் இயேசுகிறிஸ்துவின் மதிப்பீடுகளும் பார்வைகளும் உண்மையாகவே எடுத்துரைக்கப்பட்டிருக்கின்றன. யோவான் நற்செய்தி நூல் எழுந்த காலத்தில் திரிபுகொள்கையின் (மார்சியோன்) ஆதிக்கம் எங்கும் பரவியிருந்தது. கொடிய திரிபுக் கொள்கையிலிருந்து இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாற்றின் உண்மைநிலை வழியாக வாய்மை, வாழ்வு, வழி என்ற தனிப்பெரும் ஆன்மீக ஆயத்தத்தோடு யோவான் இந்நூலை எழுதி கிறிஸ்துவின் தனித்தன்மையைப் பாதுகாத்து, அவரின் வழியாக வரும் வாழ்க்கையே இவ்வுலகத்திற்குரிய உண்மை வாழ்வு என அறுதியிட்டுக் கூறினார். யோவானின் நூலின் முக்கிய கருத்தோட்டம் இயேசுவே வழி, வாய்மை, வாழ்வு ஆகும். நூலின் துவக்கம் முதல் இறுதிவரை இந்த கருத்தை வெளிப்படுத்தும் அளவில் அனைத்து நிகழ்வுகளையும் தொகுத்து இயேசுவின் தனி சிறப்பை வெளிப்படுத்தியதோடு திரிபுகொள்கையினரின் முகத்திரைகளைக் கிழித்து கிறிஸ்துவின் உண்மை நிலையை கிறிஸ்தவ திருச்சபைக்கு வழங்கியுள்ளார். யோவானைப் போன்று இக்காலத்திருச்சபையில் மலிந்துகிடக்கும் திரிபுக் கொள்கைகளிலிருந்து (கிறிஸ்தவ நம்பிக்கைக்குப் புறம்பான செய்திகள்) திருச்சபையைப் பாதுகாக்க இயேசுவே, வழி, வாய்மை, வாழ்வு என்ற

அருட் செய்தி நமக்கு நிச்சயமாக துணை செய்யும் என்ற உறுதியான நம்பிக்கையோடு நற்செய்தியை கவனித்துக்கேட்டு இயேசுவின் வாழ்க்கையின் உண்மைநிலையை நமதாக்கிக் கொள்வோம்.

## 1. இயேசுவே பாதை

இறைவாக்கினர் ஏசாயாவின் இறைவாக்கின் அடித்தளம் ஆண்டவருக்காக வழியை ஆயத்தமாக்குங்கள். அவருக்காக பாதையைச் செம்மையாக்குங்கள். இந்த இறைவாக்கை முழுக்கு முனிவர் யோவான் தன்னுடைய அருளுரையின் அடித்தளமாகக் கொண்டு மக்களிடம் பறை சாற்றிவந்தார். மக்களின் வாழ்விற்குரிய சரியான பாதை இல்லாதிருந்த வேளையில் சமூகத்தில் மேடு, பள்ளங்களும், குன்றுகளும், மலைகளும் எங்கும் எதிலும் வெளியரங்கமாக இருந்தன. கோணலான குறுக்கு வழிகளும், கரடு, முரடான, ஏதேச்சாதிகாரமும், தற்பெருமையும், பழிவாங்குவதும் பறைசாற்றப்பட்டும், போற்றப்பட்டும், புகழ்ந்துரைக்கப்பட்டும் இருந்தன. இத்தகைய பாதைகள் வழியாக இறைவனுக்குப் பணி செய்யலாம் என்ற இறை நிந்தையை கைகொண்டிருக்கும் வேளையில் 'முழுக்கு முனிவர் யோவான் இத்தகைய இறைநிந்தனையை அகற்றி மக்களை சரியான பாதையில் வழிநடத்த மேசியாகியாக இயேசு வருகிறார். அவரின் பாதையில் பள்ளத்தாக்குகள் எல்லாம் நிரப்பப்டும், மலை, குன்றுயாவும் தரைமட்டமாக்கப்படும், மனிதர் அனைவரும் கடவுள் அருளும் மீட்பின் பாதையில் பயமின்றி பயணம் செய்வார்கள். இயேசு அவர்களுக்குரிய பாதையாகவும், கூட செல்லும் பயணியாகவும் இருப்பார். அவரின் பாதையில் பின் தொடர்ந்துவருவோர் பாதை தவறிச் செல்வதுமில்லை, பயணத்தில் பாடுகளும், இடையூறும் இருப்பதில்லை. அந்த பாதையில் மக்களை திசை திருப்பி தீயவழியில் கொண்டு செல்லும் கள்ளத்தீர்க்கர்களும், கள்ளப்போதகர்களும், புரட்டுப் போதனையாளர்களும் இந்த பாதையில் இருக்க மாட்டார்கள். இக் கருத்தினை வலியுறுத்தி செல்லும் பொழுது 'எனக்கு முன் வந்தவர்கள் எல்லோரும் கள்ளர்களும், கொள்ளையர்களும், கொலைபாதகர்களும், ஆடுகளை சிதறடிப்பவர்களுமாயிருந்தார்கள். அவர்களுக்கு செவி கொடுக்க வேண்டாம் என இயேசு வீரமுழக்கமிட்டு கூறினார். என யோவான் நற்செய்தியாளர் குறிப்பிடுகிறார். சரியான பாதை தெரியாமல் திசை கெட்டு கேடுகெட்டு அலையும் மாந்தரே கவனியுங்கள். 'நானே பாதை' என் வழியாய் வந்து யதார்த்தமான வாழ்வை அடைந்து கொள்ளுங்கள் என இயேசு நம்மை அழைக்கிறார். நாம் வாழும் இந்த உலகில் மக்கள் சரியான பாதையை அறிந்து கொள்ளாமல் பாதை மாறி, திரிபு கொள்கைகளில் சிக்கியுள்ளார்கள். யோவானின் காலத்தில் மக்கள் திசைமாறிய போது தகுந்த வார்த்தைகளை இயேசுவின் விருப்பபடி எடுத்துரைத்து கிறிஸ்தவ சமூகத்தை கட்டி எழுப்பினார்கள். நாமும் திசை மாறி திரிபு கொள்கையில் சிக்கியுள்ள மக்களுக்கு இயேசுவே யதார்த்தமான பாதை என எடுத்துக்கூறுவோம்.

## 2. இயேசுவே வாய்மை :

யோவான் நற்செய்திநூலில் இயேசுவே பாதை என்ற உயரியக் கருத்தோடு வாய்மை (உண்மை) என்ற கருத்துக்கும் இணையான இடத்தை யோவான் வழங்கியுள்ளார். யோவான் நற்செய்தி நூல் எழுந்த காலத்தில் மெய்யியல் சிந்தனை (Philosophy) அதிக ஆதிக்கம் பெற்றிருந்தது. இந்த சூழ்நிலையில் இயேசுவே மெய்ப்பொருள் (வாய்மை) என்ற உண்மையை நிலை நிறுத்த யோவான் நற்செய்தியாளர் கிரேக்க மெய்யியலின் சொற்களை எடுத்து இயேசுவின் வாய்மையை வெளிப்டுத்துகிறார். குறிப்பாக லாகாஸ் என்ற சொல்லை எடுத்து, அந்த வார்த்தையின் அடித்தளம் இயேசுகிறிஸ்து. எனவே வார்த்தை (வாக்கு) மனிதர் ஆனார். நம்மிடையே குடிகொண்டார். அவரது மாட்சியை நாங்கள் காண்போம். அருளும் உண்மையும் நிறைந்து விளங்கிய அவர் தந்தையின் ஒரே மகன் என்னும் நிலையில் இம்மாட்சியைப் பெற்றிருந்தார். (யோ. 1 : 14). மேலும் அனைத்து மனிதரையும் ஒளிர்விக்கும் உண்மையான ஒளி உலகிற்கு வந்துவிட்டது. அந்த உண்மையான ஒளி இயேசு என யோவான் திட்டவட்டமாக எடுத்துரைக்கிறார் (யோ. 1 : 9).

நாம் வாழும் உலகிலும், திருச்சபையிலும் வாய்மைக்கு வாய்ப்பு இல்லை என மக்கள் தங்களின் ஆதங்கங்களையும், விரக்திகளையும் வெளியிடுகிறார்கள். வாய்மையாக வாழுபவர்களுக்கு வாய்ப்புகள் வருவதுமில்லை, வழங்கப்படுவதுமில்லை எனவும் வேதனைப்படுகிறவர்களும் இருக்கிறார்கள். வாய்மையே வெல்லும், உண்மைக்கு ஒப்பானது எதுவும் இல்லை என நம்பிக்கையோடு வாழுகிறவர்களும் இருக்கிறனர். பொய்மையும், போலியும், பேலியாளின் மக்களும், பித்தலாட்டமும், பொய்யை மெய்யென காட்டிக்கொள்பவர்களும் உலகிலும், திருச்சபையிலும் வாழ்ந்து வருகிறார்கள். இவர்களின் பக்கம் செல்வமும், செல்வாக்கும், மக்கள் கூட்டமும், பெருபான்மையும் இருக்கிறது. ஆகவே வாய்மை வலிமையிழந்துபோய் விடுகிறதே என ஏங்கி அழுபவர்களும் இருக்கிறார்கள். இயேசு வாழ்ந்த காலத்திலும் இதே நிலை மக்களின் வாழ்க்கை சூழலில் இருந்தது. இந்த இழிநிலையில் உலகம் அழிந்துவிடாமலிருக்க இயேசுவே வாய்மை என யோவான் அழுத்தமாக எடுத்துரைக்கிறார். குறிப்பாக வாய்மையின் வலிமையையும், இயேசுவே அந்த வாய்மை என பிலாத்து கேட்டவுடன் கலங்கினார். பெரும்திரள் கூட்டத்தின் குற்றச்சாட்டை பிலாத்து ஏற்காமல் இயேசுவே வாய்மை என்பதை உணர்ந்து, அவரை விடுவிக்க யூதர்களிடம் இயேசுவிடம் எந்த குற்றமும் காணவில்லை என்றார் (யோ. 18 : 37-38). ஆகவே இயேசு வாய்மைக்கு எடுத்துக்காட்டாக விளங்கினார். எனவே அவர் வாய்மையாகவே விளங்கி, பொய்மையையும், போலிகளையும் முறியடித்தார். எனவே வாய்மைக்கு வாழ்வு உண்டு எனப்து யோவானின் ஆன்மீக அறிவுரையாகும். ஆகவே இயேசுவே வாய்மை என உறுதிபட கூறினார்.

## 3. இயேசுவே வாழ்வு :

பாதையும், வாய்மையுமாகிய இயேசுவேதான் வாழ்வு என யோவான் தெளிவாக எடுத்துரைக்கிறார். கிறிஸ்தவ நம்பிக்கையை ஆழப்படுத்திக் கிறிஸ்தவ வாழ்வை வலுப்படுத்துவது நற்செய்தி நூலின்முக்கிய நோக்கமாகும். மேலும் பல ஆண்டுகள் கிறிஸ்தவ வாழ்வு வாழ்ந்து தளர்ச்சியடைந்துபோன கிறிஸ்தவர்களுக்கு கிறிஸ்தவ நம்பிக்கை வெறும் வார்த்தைகளின் ஜாலமாகவும், வழிபாடுகள் வாழ்க்கையை வெறும் சடங்குகளாய் மாறிவிட்ட காலகட்டத்தில் கிறிஸ்தவ வாழ்வை ஊக்கப்படுத்த கிறிஸ்தவ நம்பிக்கையை ஆழப்படுத்த, கிறிஸ்தவ வழிபாட்டை வாழ்வோடு தொடர்புபடுத்திக்காட்டி, யூதர்களால் துன்புறுத்தப்பட்ட இரண்டாம் தலைமுறை கிறிஸ்தவர்களுக்கு இயேசு கிறிஸ்துவை சான்றுபகரவும், தவறான கொள்கைகளிலிருந்து கிறிஸ்தவத்தைப் பாதுகாக்க இயேசுவே வாழ்வு என யோவான் அழுத்தமாக கூறினார். குறிப்பாக கூறினால் யோவான் நற்செய்தி நூலில் வருகின்ற அனைத்து நிகழ்வுகளுக்கும் அடிப்படையாக இயேசு பாதை, வாய்மை, வாழ்வு என்பதை இணைத்து பொருள்பட இறையியல் சிந்தனையை அமைத்துள்ளார். இயேசுவே இறைமகனாகிய மேசியா என மக்கள் நம்பிக்கைகொள்ளவும், அவரின் வழியாக மக்கள் நிலையான வாழ்வைப் பெறமுடியும்.

கிறிஸ்தவ நம்பிக்கையில் ஏற்பட்ட தளர்ச்சியை அகற்ற யோவான் நற்செய்தி நூலில் ‘அன்பே கிறிஸ்தவ நம்பிக்கைக்கும் வாழ்விற்கும் உரைகல்’ அன்பு வாழ்க்கைதான் கிறிஸ்தவ வாழ்க்கை. ஆனால் அக்கால கிறிஸ்தவர்கள் தற்காலத்தைப்போல அன்பற்ற, விசுவாசமற்ற வாழ்க்கை நடத்தினார்கள். இத்தகைய வாழ்க்கை கிறிஸ்தவ வாழ்க்கையல்ல அது இருளின் வாழ்க்கை, சாவில் நிலைத்திருக்கும் வாழ்க்கை. ஆகவே இந்நிலை மாறி அன்பு வாழ்வு மலர, நம்பிக்கை துளிர்க்க யோவான் நற்செய்தி நூல் வழியாக பெரும் முயற்சி செய்தார். வாழ்வோடு தொடர்புடைய வழிபாடு (தொழுகை) துன்பங்களின்போது ஆறுதல் கூறி வழி நடத்தும் தூய ஆவியர் போன்ற முறைகளின் வழியாக கிறிஸ்தவ நம்பிக்கையை ஆழப்படுத்தி, கிறிஸ்தவ வாழ்வை வலுப்படுத்த இயேசுவே வாழ்வின் அடித்தளம் என உறுதி செய்கிறார். நாம் வாழும் சூழலில் கிறிஸ்தவ வாழ்வில் தளர்ச்சியடைந்தவர்களை மீண்டும் உயிரோட்டம் அடையச் செய்ய இயேசுவே பாதை, வாய்மை, வாழ்வு என்ற உண்மையை எடுத்துரைப்போம்.

அருள்திரு. **E. கென்றி தாஸ்**

**29-05-2011**

# அருட்பணிக்கான புனரமைப்பு

**RENEWAL FOR MISSION**

ஏசா. 1:10-17 யாக். 1:19-27

திபா. 113 மத். 25:31-46

*"அப்பொழுது அவர், 'மிகச்சிறியோராகிய இவர்களுள் ஒருவருக்கு நீங்கள் எதையெல்லாம் செய்யவில்லையோ அதை எனக்குச் செய்யவில்லை என உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன் எனப் பதிலளிப்பார்." மத்தேயு. 25:45*

**மன்றாட்டு :** மேன்மைமிகு கடவுளே, உமது ஆவியினாலும், அறிவினாலும் எங்களை புத்தாக்கம் செய்து சிலுவையின் வழி நடக்க துணைபுரிவீராக. உமது எதிர்பார்ப்பின்படி எங்கள் பணி அமைய அருள்தாரும். உமது திருத்திட்டம் உணர்ந்து, வளமையடைய அல்லாமல் ஈகை புரியவும், ஓய்வு தேடாமல் பாடுபடவும், பலன் நாடாது உழைக்கவும் எங்களை வழிநடத்த பாடுபடும் தாசன் இயேசுகிறிஸ்து வழி கேட்கிறோம். - ஆமென்.

'மிஷன்' (mission) என்ற லத்தீன் வார்த்தையின் பொருள் 'அனுப்புதல்' என்பதாகும் மிஷன் என்ற சொல் வெறும் அனுப்புதல் என்ற செயலோடு நின்றுவிடாமல், அனுப்புதலில் இருக்கும் நோக்கம், செயல்முறை போன்ற பல்வேறு உண்மைகளை வெளிப்படுத்துகிறது. எனவேதான் 'மிஷன்' என்ற சொல் 'அருட்பணி' 'தூதுப்பணி' என்றெல்லாம் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

கிறிஸ்தவ சமூகத்தில் மிஷன் என்று சொல்லும்போது சில தனிப்பட்ட அடித்தளங்கள் அதற்கு இருக்கின்றன கிறிஸ்தவம் அல்லது திருச்சபை இறைவன் அனுப்பிய அருட்பணி இயக்கம் என்பது கவனிக்கத்தக்கது.

கடவுள் அனுப்பிகிறவர் என்பதே அருட்பணிக்கு மையம். அவர் குறிப்பிட்ட நோக்கத்தோடு, குறிப்பிட்ட மக்களை, குறிப்பிட்ட காலங்களில் அனுப்புகிறார். எடுத்துக்காட்டாக ஆபிரகாம், ஏசாயா இறைவாக்கினர்கள் போன்றோர்.

நிறைவாக கடவுள் தன் குமாரனையே அனுப்பினார். கடவுளின் திருவுளத்தை உலகறியச் செய்வது இந்த அனுப்புதலுக்கு அடிப்படை நோக்கமாக இருந்தது. இதில் புதிய மதிப்பீடுகளின்படி வாழுதல், போதித்தல், கண்டித்தல், விடுதலைப் பணி செய்தல் ஆகியவை உள்ளடங்கும்.

தற்கால சூழலிலே அருட்பணி சிறக்க இறையரசு கட்டப்பட புதிய மதிப்பீடுகளின்படி நாம் நம்மை புதுப்பிக்க வேண்டி உள்ளது. திருமறையின் வெளிச்சத்திலே ஏசாயா இறைவாக்கினர் தரும் சில நிலைகளை ஈண்டு காண்போம்.

## *1. மாதிரியான வாழ்வு* (ஏசா. 1:16)

ஏசாயா தீர்க்கர் காலத்திலே இஸ்ரவேல் நாடு செழிப்படைந்திருந்தது. பலிகளுக்கும் மன்றாட்டுகளுக்கும், சமய சடங்குகளுக்கும் எந்த குறைவும் இல்லை. ஆனால் சமய பக்தி வாழ்க்கை செயலில் இல்லை. இதனால் இஸ்ரவேல் மக்களைப் பார்த்து இறைவாக்கினர். ‘உங்களைக் கழுவி தூய்மைப்படுத்துங்கள், உங்கள் தீச்செயலை என் திருமுன்னிருந்து அகற்றுங்கள்’என கண்டிக்கிறார். எரேமியா: 4:14-ல் நீ இரட்சிக்கும்படிக்கு உன் இருதயத்தைப் பொல்லாப்பற கழுவு எந்த மட்டும் அக்கிரம நினைவுகள் உன் உள்ளத்திலே தங்கும் என தீர்க்கன் வினவுகிறார். இஸ்ரவேலர் மாதிரியற்ற வாழ்வு வாழ்வதை கோடிட்டுக்காட்டுகிறார். இஸ்ரவேலர் கடவுளின் மக்கள் இவர்களின் மாதிரியான வாழ்வின்மூலம் பிற மக்கள் கடவுளை காணவேண்டும் என்பதுதான் கடவுளின் திருவுளமாய் இருந்தது.

இயேசு நாதர் மத். 5:16-ல் ‘உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது என்கிறார். மேலும் லூக்கா 11:23-ல் விளக்கு மறைத்து வைத்தால் மற்றவர்களுக்கு பயன்தராது, விளக்குத்தண்டின்மேல் வைத்தால்தான் அது மாற்றவர்களுக்கு பிரகாசத்தை அரும். அதுபோல நாமும் நம்முடைய மாதிரியான வாழ்வின் மூலம் உலகம் நம்மை இறைவனின் பிள்ளைகள் என அறிய வேண்டும்.

நமது வெளிச்சம் நல்ல செயல்கள் மட்டுமல்ல, எந்த நிலையிலே நாம் அதை செய்கிறோம் என்பதை பொறுத்துதான் நமது வெளிச்சம் ஏற்றுக்கொள்ளப்படுகிறது அதாவது. நமது வாழ்வே. நம் செயல்களும்தான் வெளிச்சத்தினை அடையாளப்படுத்தப்பட்டுள்ளது அதுவே மாதிரியான வாழ்வு ஆகும்.

## *2. நீதியை நாடித்தேடுகிறவர்களாய் இருக்கவேண்டும்* (ஏசாயா 1:17a)

ஏசாயா இறைவாக்கினரின் காலத்தில் இஸ்ரவேலில் அநீதி ஓங்கி நின்றது. ஏழைகள், விதவைகள் சுரண்டப்பட்டனர். இதனால் இறைவாக்கினர் மக்களைப்பார்த்து நியாயத்தை தேடுங்கள் என வலியுறுத்துகிறார்.

கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள் மேல் நோக்கமாயிருக்கிறது (திபா. 34:15) என தாவீது கூறுகிறார். ஆமோஸ் இறைவாக்கினரும் நீதியையும், நியாயத்தையும் குறித்து மிக ஆழமாக சுட்டிக்காட்டுகிறார். (ஆமோஸ் 5:24).

இச. 16:20 நீங்கள் தேசத்தை சுதந்தரித்து பிழைக்க நியாயம் செய்யுங்கள் என்று சொல்லுகிறார். ஓசியா 10:12-ல் நீங்கள் நீதிக்கென்று விதை விதையுங்கள் என கூறுகிறார்.

இயேசுநாதர் தன் திருப்பணிக்காலத்தில் அதிகமாக நீதி, நியாயத்தை வலியுறுத்தினார். உங்கள் நீதி வேதபாரகர், பரிசேயரிலும் அதிகமாய் இருக்க வேண்டும் (மத்: 5:20) என்கிறார்.

பலியை விட நீதி செய்வதிலே கடவுள் அதிகமாய் பிரியப்படுகிறார். இறையரசின் தகவு நீதி, நியாயம் என திருமறை வலியுறுத்துகிறது. அருட்பணி செய்ய நம்மை புதுப்பிக்கும்போது நமது நீதியை மறு ஆய்வு செய்ய அழைக்கப்படுகிறோம்.

## 3. தேவையிலிருப்போர்க்கு நன்மை செய்கிறவர்களாய் இருக்க வேண்டும் (ஏசா. 1:17)

ஏசாயா இறைவாக்கினர் இஸ்ரவேல் மக்களைப் பார்த்து பலியைவிட, காணிக்கையைவிட பிறருக்கு நன்மை செய்யுங்கள். நன்மை செய்ய கற்றுக்கொள்ளுங்கள் என சாடுகிறார். யாக்கோபு 1:27-ல் தந்தையாம் கடவுளின் பார்வையில் தூய்மையானதும் மாசற்றதுமான சமயவாழ்வு என்னவெனில், துன்புறும் ஆதரவற்றோர், கைம்பெண்கள் ஆகியோருக்கு நன்மை செய்தலாகும்.

இயேசுநாதர் சீடர்ககளை பார்த்து நீங்கள் பூமிக்கு உப்பாயிருங்கள் (மத். 5:13) என கூறுகிறார். உப்பு தனியாக சாப்பிட முடியாது. மாறாக மற்ற பொருள்களை சுவையூட்டக்கூடியது. அதாவது தான் கரைந்து சமனப்பட்டு சுவை தருகிறது. கிறிஸ்தவனின் தியாக வாழ்க்கை சமூகத்தில் சமாதானத்தை தருகிறது அல்லது வாழ்வை தருகிறத. எடுத்துக்காட்டாக, நல்ல சமாரியன் உவமை, அவன் தனது வாகனம், பொருள், பணம், நேரம் முழுவதையும் தியாகம் செய்து நன்மை செய்தான். கிறிஸ்தவ வாழ்க்கை உப்பாய் கரைந்து சுவையூட்டும் வாழ்க்கை ஆகும். ரவீந்திரநாத் தாகூர் கீழ்வரும் கூற்றை சேவை செய்தலை குறித்து கூறுகிறார். "நான் தூக்கத்தில் கண்ட நித்திரை வாழ்க்கை மகிழ்ச்சி என காட்டிற்று. நான் விழித்து பார்த்தபோது வாழ்க்கை என்பது சேவை என்று கண்டுகொண்டேன். நான் சேவை செய்துவிட்டு பார்த்தபோது சேவையை மகிழ்வு என்று கண்டுகொண்டேன்"

தீத்து 2:7-ல் பவுல் தீத்துவை பார்த்து நீயோ எல்லாவற்றிலும் உன்னை நற்கிரியைகளுக்கு மாதிரியாக காண்பி என்கிறார்.

இயேசுநாதர் தாம் அனுப்பப்பட்டதின் நோக்கத்தை லூக்கா 4:18,19 வசனங்களில் மிக தெளிவாக கூறுகிறார்.

மேலும், மத். 25:31-46 வரையுள்ள வசனங்களை படிக்கும்போது பிறரக்கு நன்மை செய்தலின் அடிப்படையிலேதான் கடைசி நியாயத்தீர்ப்பு நடைபெறும் என வலியுறுத்துகிறார்.

ஆகவே, நாம் நன்மை செய்கிறவர்களாய் காணப்பட வேண்டும்.

தற்கால சூழலில் கிறிஸ்தவ தகவுகள் மக்களை சென்றடைய அருட்பணியில் புத்தாக்கம் தேவை. மாதிரியான வாழ்வு வாழ்ந்து, நீதியை நாடித்தேடி, நன்மை செய்கிறவர்களாய் இருந்தால் அருட்பணி வளர்ச்சியடையும், இறையரசு விரிவடையும். அதினால் இறைநாமம் மகிமைப்படும்.

அருள்திரு. **இரா. இராஜபால்**

# ஞானம் அருளும் ஆண்டவர்

1 அர. 3:1-14

" ............ ஞானமும் உணர்வுமுள்ள இதயத்தை உனக்குத் தந்தேன்.........." 1அர. 3:12,13

புதிய கல்வியாண்டில் அடியெடுத்து வைத்துள்ள இறைமக்களே! ஞானம் அருளி ஆதரிக்கின்ற ஆண்டவரின் அருளால் மகிழ்வுடன் முன்னேறிச் செல்ல ஆயத்தமாவோமாக. கடவுள் ஞானம் அருளுகிறார் என்றும், அவருக்குப் பயந்து வாழ்வதே ஞானம் பெற்றுக் கொள்வதற்கான தொடக்கம் என்றும் திருமறை எடுத்தியம்புகிறது. இறைவனைச் சார்ந்து இறையறிவில் வளரும் போது தான் நிறைவான அல்லது முழுமையான அறிவு மலர்கிறது. முன்னாள் குடியரசு தலைவர் A.P.J. அப்துல்கலாம், 'தாம் மிகுந்த இறைநம்பிக்கையுடையவர் என்றும், தம்முடைய அறிவு 50 விழுக்காடு என்றும், இந்த 50 விழுக்காடும் இறைவன் அருளும் இறை அறிவோடு இணைந்து தான் 100 விழுக்காடாக வெளிப்படுகிறது என்கிறார். இறைஞானம் பெற்றுக் கொண்ட சாலமோனின் ஞானம் பலரால் பாராட்டப்படுகிறது. அதோடு சாலமோனுக்கு இணையான ஒருவர் இதுவரை இருந்ததில்லை, இனி எழும்ப போதுமில்லை என்றே அவருக்கு ஆண்டவர் ஆசி வழங்கினார். இறைவனிடம் மன்றாடி ஞானம் பெற்றுக் கொண்ட சாலமோனின் வாழ்வு கற்றுத் தரும் உண்மைகளாவன :

### 1. *இறைஞானம் வேண்டியவர் :* (Iஅர. 3:9)

இளவயதில் அரசராகத் திருப்பொழிவு செய்யப்பட்டவர் சாலமோன். இவர் தம்முடைய பணியைத் திறம்பட செய்வதற்காக இறைஞானம் தேவை என்பதை உணர்ந்து கொண்டார். இந்த ஞானம் அருள்பவர் ஆண்டவர் ஒருவரே என்பதைத் தெரிந்து கொண்டவராக, மக்களுக்கு நீதி செய்யவும், நன்மை எது? தீமை எது? என்று ஆண்டவரிடம் மன்றாடினார். நீதிமொழிகள் நூலில் ஞானத்தை அருள்கிறவர் ஆண்டவர் (நீதி. 2:6) என்றும், ஆண்டவருக்குப் பயப்படுவதுவே ஞானத்தின் தொடக்கம் (நீதி. 1:7) என்றும் குறிப்பிடுகிறார். இதனை தமது வாழ்வில் நன்குணர்ந்த சாலமோன், ஆண்டவரின் திருப்பாதம் பணிந்து ஞானத்தை நாடி நிற்கிறார். யாக்கோபு அடிகளார் ஞானத்தில் குறைவுள்ளவர்கள் நிரம்ப ஞானம் படைத்தவரும், கேட்கிற அனைவருக்கும் அளிக்கிறவராயுமிருக்கிற

ஆண்டவரிடத்தில் கேட்கக்கடவன் (யாக். 1:5) என்கிறார். கேட்கிற எவரும் பெற்றுக் கொள்கின்றான் என்பதற்கிணங்க ஆண்டவரிடத்தில் ஞானம் கேட்க வேண்டியது மிக அவசியமாகும். நீதிமொழிகள் ஆக்கியோன் மேலும் குறிப்பிடும் போது உன்னுடைய சுய புத்தியின் மேல் சாயாது இறையறிவை நாட வேண்டும் (நீதி. 3:5) என்கிறார். மனிதர் தமது சுய அறிவால் எதையும் சாதித்துவிட இயலாது. இறைவனை சாராத ஞானம் அழிவுக்குரிய பைத்தியமானது என பவுலார் எச்சரிக்கிறார் (Iகொரி. 1:19,20). எனவே இறைவன் அருளும் ஞானத்திற்காக அவரிடம் மன்றாடுவோம்.

## 2. *இறைஞானம் பெற்றவர் :* (Iஅர. 3:12)

சாலமோனின் மன்றாட்டை அங்கீகரித்த கடவுள் சாலமோன் விரும்பியபடியே ஞானத்தை அருளினார். அதோடு அவரது ஞானத்திற்கு இணையானவர்கள் இதுவரை பூமியில் இருந்ததுமில்லை; இனி எழும்புவதுமில்லை என்ற ஆசியையும் அளித்தார். சாலமோன் கடவுளுடைய ஞானத்தால் நிரப்பப்பட்டிருக்கிறார் என்பது ஒரு பிள்ளைக்காக வழக்காடி நிற்கும் இரு தாய்மார்களுக்கு அவர் நீதி செய்த நிகழ்வினூடாய் வெளிப்படுத்தப்பட்டுள்ளது (Iஅர. 3:16-28). இதினிமித்தம் அரசர் சாலமோனுக்கு ஞானம் உண்டென்று இஸ்ரயேலர் அனைவரும் அறிந்து அரசருக்குப் பயந்தார்கள். கேட்கிற அனைவருக்கும் அருளுகின்ற ஆண்டவர் (யாக். 1:5, மத். 7:8) இறைஞானம் வேண்டி நிற்கும் ஒவ்வொருவருக்கும் ஞானம் அருளுகிறார். அதுமட்டுமல்ல, இறைவார்த்தைகளைக் கருத்தாய் கற்றுத் தரும் பெற்றோர் மூலமாகவும் (விப. 10:2; 12:26.................) திருச்சபை மூலமாகவும் இறைஞானத்தில் வளர முடியும். தூய பவுலார் இறைஞானத்தில் வளரவும், சிறந்த ஞானியாக விளங்கவும் அடிப்படையாக அமைந்தது அவரது ஆசிரியராக இருந்த கமாலியேலாவார் (திரு.ப. 22:3). ஆண்டவர் அவரை சந்தித்த போது அவரது அறிவு தெளிவிக்கிறதைக் காண முடியும். இன்றும் நமது வகுப்பறை, ஆசிரியர்கள் மிக முக்கியமானவர்கள். சாமுவேல் இறைஞானம் பெற ஆலயத்தில் வளர்க்கப்பட்டது காரணமாக அமைந்தது (Iசாமு. 1:28). இயேசு நாதரின் இறைஞானம் ஆலயத்தில் போதகர் நடுவில் அமர்ந்து விவாதிப்பதிலிருந்து (லூக் 2:46), அவரது பணிகளினூடாகவும் வெளிப்படுகிறது இன்று இறைஞானத்தில் வளர ஆண்டவர் அருளும் எல்லா வாய்ப்புகளையும் சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

### 3. இறைநன்மைகளால் நிறைக்கப் பெற்றவர் : (Iஅர. 3:13)

சாலமோனுக்குத் தரிசனம் தரும் ஆண்டவர் நீ விரும்பியதைக் கேள் (Iஅர. 3:5) என்று சொல்லும்போது, சாலமோன் ஞானம் தாரும் என்று கேட்டார் (Iஅர. 3:9). நலமானதையே சாலமோன் கேட்டிருக்கிறார் என்று கடவுள், சாலமோனுக்கு ஞானத்தோடு இணைத்து அவர் கேட்காத அனைத்தையும் அருளுகிறார். (அர. 3:13,14). அதாவது பொருளாதாரம், நீடிய ஆயுள் உள்ளிட்ட அனைத்து நன்மைகளையும் அளிக்கிறார். நீதிமொழிகள் நூலிலும் இறைஞானத்தில் வளரும் போது ஆரோக்கியம் (Health), பொருளாதாரம் (wealth) போன்ற அனைத்து நன்மைகளும் கிடைக்கும் என்கிறார் (நீதி. 3: 5 10). இவ்விடத்தில் இயேசு நாதர் கூறும், முதலாவது விண்ணரசையும் அதின் நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் கூட கொடுக்கப்படும் என்று கூறுவதையும் இணைத்து சிந்திப்பது சிறப்பாகும் (மத். 6:33). இறைஞானம் வரும்போது இவ்வுலகின் அனைத்து நன்மைகளும் அதனுடன் இணைந்து இலவசமாக தரப்படுகிறது என்பதுதான் திருமறையின் போதனை. எனவே இத்துணை அளவிற்குச் சிறப்பான இறைஞானம் அருளும் ஆண்டவரை நோக்கிப் பார்த்து அவர் அருளும் ஞானத்தால் நிறைவடைந்து இப்புதிய கல்வியாண்டில் முன்னேற அழைக்கப்படுகிறோம்.

அருள்திரு. **A. பிறைட் சாலமோன்**

**02-06-2011** | *குமரிப் பேராய தோற்ற நாள்*

*விண்ணேற்ற திருநாள்*

# உயர்த்தப்பட்ட கிறிஸ்து

**EXALTED CHRIST**

தானி. 7 : 9,10 | தி.ப. 1 : 1-11
திபா. 47 | லூக் 24 : 44-53

**மன்றாட்டு :** உன்னதரான கடவுளே, அனைத்து படைப்புகளும் உமது திருமைந்தரின் அருளால் நிறைக்கப்பட அவரை உயர்த்தி மேன்மைப்படுத்தினீர். எளியோரையும், ஓரங்கட்டப்பட்டோரையும் உயர்த்திய அவரது தியாக அன்பை உணர்ந்து எங்களை எளிமையாக்கி முழு படைப்பும் விடுதலைபெற்று உயர்த்தப்பட எங்கள் பணிதொடர தாள்பணிந்து வேண்டுகிறோம். - ஆமென்.

**05-06-2011**

*உயிர்த்தெழுந்த திருநாளுக்கு பின்வரும்*
*6-வது ஞாயிறு*

# வாக்குப்பண்ணப்பட்ட தூய ஆவியார்

**PROMISE OF THE HOLY SPIRIT**

யோவே. 2:26-28 கலா. 5:22-26
திபா. 42 யோவா. 14:15-21

*"உங்களோடு என்றும் இருக்கும்படி மற்றொரு துணையாளரை உங்களுக்கு அருள்வார்"* *(யோவா. 14:16)*

**மன்றாட்டு :** புதுவாழ்வு வழங்கும் கடவுளே, தூய ஆவியரின் ஆற்றலை எங்களில் அருளி புது நம்பிக்கையில் எங்களை உயிரூட்டம் செய்யும். அதன் வாயிலாய் நாங்கள் உலகுக்கு சான்றாகும் தூரக்காட்சியுடனும், நம்பிக்கையுடனும் உமது நீதியை உலகினில் நிறுவ வழிகாட்ட வேண்டுகிறோம். - ஆமென்.

இயேசு கிறிஸ்து தம் பிரியாவிடை உரையில் தாம் அனுப்பப்போகும் துணையாளர் பற்றி நான்கு இடங்களில் பேசுகிறார் (யோ. 14: 15-21; 15:26;16:7-15) தூய ஆவியானவர் உலகத்தோற்றமுதற் இவ்வுலகில் செயல்பட்டுக்கொண்டிருக்கிறார். திருமறையில் தொடக்கமுதல் இறுதி வரை தூய ஆவியாரின் செயல்பாடுகளைக் காணலாம். தொடக்கநூலில் ஆரம்ப வசனங்களில் "நீர்திரளின் மேல் கடவுளின் ஆவி அசைந்தாடிக்கொண்டிருந்தது" (தொ.நூ. 1:2) எனவும், திருமறையின் இறுதிப் பகுதியில் "தூய ஆவியாரும், ஆட்டுக்குட்டியின் மணமகளும் வருக! வருக! "எனவும் கூறப்பட்டுள்ளது. திருமறை எழுதுவதற்கு பக்தர்களைத் தூண்டியது தூய ஆவியாரே. அறிஞர் வீலர் இராபின்சன் திருமறையைத் "தூய ஆவியாரின் நூல்" என விளக்குகின்றார். திருமறையின் உண்மையான செய்தியை விளக்குவதும் தூய ஆவியாரின் வேலையே.

எபிரேயத்தில் "ரூவஹ்" (Ruah) என்றும், கிரேக்கத்தில் "ப்நியூமா" (Pnewma) என்றும் பல பரந்த பொருள் பொதிந்ததாக தூய ஆவியாரை அழைக்கப்படுகிறார். தூய ஆவி (Holy Spirit) , கடவுளின் ஆவி (Spirit of God), ஆண்டவனின் ஆவி (Spirit of a Lord), கிறிஸ்துவின் ஆவி (Spirit of Christ), தேற்றரவாளன் (Comforter, Advocate, Counsellor), துணையாளர் (Helper) என்ற பலவகையான பெயர்களால் தூய ஆவியரை திருமறையில் காணலாம். வாக்குப்பண்ணப்பட்டவரைப் பற்றி சிந்திப்போம்.

## துணையாளர்

கிரேக்கத்தில் உள்ள “பாராகிளேத்தோஸ்” (Paracletos) என்னும் சொல் ‘துணையாளர்’ என மொழிபெயர்க்கபட்டிருக்கிறது. ‘தேற்றரவாளன்’ என்பதும் துணையாளரைக் குறிக்கும் சொல் ஆகும். ‘பாராகிளேத்தோஸ்’ என்னும் சொல்லுக்கு நான்கு பொருள்கள் உண்டு. 1) வாதாடுபவர், வழக்குரைஞர் (Advocate), 2) பரிந்துபேசுபவர், பரிவாகப் பேசுபவர் (1யோவா. 2:1) 3) ஆறுதல் அளிப்பவர், தேற்றரவாளன் (Comforter) 4) ஊக்கம் ஊட்டுபவர் இந்த அனைத்து நிலைகளிலும் துணையாளராக செயல்படுகின்றார். யோவான் நற்செய்தி நூலில் இத்துணையாளராம் தூய ஆவியானவர் பாவம், நீதி, தீர்ப்பு பற்றி உலகினர் கொண்டுள்ள கருத்துக்கள் தவறானவை என வாதாடுகிறார். உலக மக்களின் தவறை நிரூபிக்கும் ஒருவராகவும் செயல்படுகிறார் (யோவான். 16:8-11) இவர் சீடர்கள் சார்பாக பேசுவதையும் காண முடிகிறது. (மத். 10:20; தி.ப. 6:10)

## உடனிருப்பவர்

இயேசு கிறிஸ்து தம் தந்தையாம் கடவுளிடமிருந்து அனுப்புவதாக வாக்குப்பண்ணின தூய ஆவியார் இவ்வுலகில் நம்மோடு என்றும் இருப்பதாகக் கூறுகிறார். (யோவா. 14:16). இந்த துணையாளராம் தூய ஆவியாரின் வருகையால் பயன் உண்டு என்றும் கூறுகிறார். (யோவா. 16:7) இயேசுகிறிஸ்துவின் ‘தொடர்ச்சி’யாகவே யோவான் இத்தூய ஆவியாரைக் கூட்டுகிறார். இத்தூய ஆவியார் ஆற்றும் அத்தனைப் பணிகளும் இயேசுவும் செய்ததாக அறியலாம். இயேசு கிறிஸ்துவைப்போன்று தூய ஆவியார் நம்முடன் இருந்து நம்மைத் தந்தையாம் கடவுளோடு இணைக்கும் பாலம் போன்றவர். தந்தையின் விருப்பத்தை நிறைவுசெய்ய இயேசு தொடங்கிய பயணம், இறுதியில் தந்தையின் கரங்களில் ஆவியை ஒப்படைக்கும் வரை அவருக்கு உறுதுணையாக இருந்து ஊக்கம் தந்தவர் இத்தூய ஆவியார். தொடக்க காலத்திருச்சபையில் நெருக்கடி நேரங்களில், குழப்பகாலங்களில் அப்போஸ்தலர்களை உறுதியாக செயல்பட செய்தது மட்டுமல்ல அவர்களிடம் தோன்றிய பிரிவினைகளை தகர்த்து, ஒற்றுமையில் ஒருங்கிணைக்க செய்தவர் தூய ஆவியார். அவர் இன்று நம்முடன் இருந்தால் நன்மை தீமைகளை அறிய நமக்கு கற்றுத்தருவார். உண்மைகளை அறிந்து கொள்ள துணை நிற்பார்.

## அனைவருக்குமுரியவர் (யோவே. 2:26-28)

‘தூய ஆவியாராகிய கடவுள் எங்களுக்கு மட்டுமுரியவர், அவர் எங்களிடம் தான் இருப்பார்’ என தூய ஆவியாருக்கு சொந்தம்

கொண்டாடும் தனித்துவ திருச்சபை பிரிவுகளுக்கிடையில் வாழும் நாம் 'தூய ஆவியார் அனைவருக்காகவும் வாக்குப்பண்ணப்பட்டவர்' என்பது இறைவாக்கு (யோவேல் 2:28) தூய ஆவியார் ஆண், பெண், புதல்வர், புதல்வியர், முதியோர், இளைஞர், பணியாளர், பணிப்பெண்கள் என அனைவருக்கும் தரப்படுகிறார் (யோவேல். 2:29) பெந்தேகோஸ்தே நாளில் கூடி வந்தவர்கள் ஏறத்தாழ 20 பிரிவினர்களாயிருந்தார்கள் (தி.ப. 2:9-11). இவர்கள் அனைவரும் தூய ஆவியாரின் வருகையின் நிறைவை பெற்றனர். எனவே, வாக்கு பண்ணப்பட்ட தூய ஆவியார் அனைவருக்குமுரியவர், நாம் அனைவரும் அவரால் ஆட்கொள்ளப்பட்டால் தான் பலவற்றை அறிந்து கொள்ள முடியும்.

### ***செயல்வடிவமானவர் :*** (கலா. 5:22-26)

தூய ஆவியார் குடிகொள்ளும் எவரும் கடவுளின் விருப்பத்தை செயல்களில் வெளிப்படுத்த வேண்டும். 'தூய ஆவியார் என்னில் இருக்கிறார்' என்று கூறுவதில் பயனில்லை. மாறாக, அவர் இருப்பதன் செயல்பாடு வாழ்வில் காண வேண்டும். சண்டை, சச்சரவு, பிளவுகள், பிரிவினைகள் இருக்குமிடத்தில் தூய ஆவியார் குடிகொள்ள முடியாது. தூய ஆவியாரின் துணையுடன் வாழ்ந்தால் வேறுபாடுகள் இன்றி ஒன்றுபட்டு வாழ முடியும் (கலா. 3:27,28) இன்றைய திருமுகப் பகுதியும் இதற்குச் சான்றாகிறது.

தூய ஆவியாரின் செயல்பாடுகள் நிறைந்த இடத்தில் தெளிவான முடிவு இருக்கும்; அங்கே குழப்பம் இருக்காது. தூய ஆவியாரின் துணை இருக்குமிடத்தில் அன்பும், அமைதியும் ஆட்சி செய்யும். வேறுபட்ட, மாறுபட்ட கருத்துக்களுக்கு நடுவில் ஒன்றுபட்ட கருத்துக்களால் தூய ஆவியார் அனைவரையும் ஒருங்கிணைக்கிறார். மேலும், தூய ஆவியின் கனிகளாக அன்பு, மகிழ்ச்சி, அமைதி, பொறுமை, பரிவு, நன்னயம், நம்பிக்கை, கனிவு, தன்னடக்கம் இவைகள் வாழ்வில் வெளிப்படும் (கலா. 5:22-23). இவற்றின் வழியாக தூய ஆவியார் செயல்படுகிறார்.

எனவே, வாக்குப்பண்ணப்பட்ட தூய ஆவியார் அனைவருக்குமுரியவர் என்பதை தெளிவாய் அறிந்து, அவரது உடனிருப்பை உணர்ந்து, அவர் துணையோடு உண்மை வழி நடந்து, வாழும் கடவுளை நம் வாழ்வின் செயல்களில் வெளிப்படுத்தி, நம்பிக்கையை உறுதி செய்து அவருக்கு சான்றுகளாவோம்.

அருள்திரு. **T.P. ஸலீம் தங்ககுமார்**

12-06-2011

# தூய ஆவியாரே வாரும் எங்களை மாற்றுருவாக்கும்

## COME HOLY SPIRIT, TRANSFORM US

| | |
|---|---|
| எசே: 36:22-32 | தி.ப. : 2: 1-13 |
| திபா. 29 | யோவா. 20:19-23 |

*"நான் உங்களுக்கு புதிய இருதயத்தை அருள்வேன். புதிய ஆவியை உங்களுக்குள் புகுத்துவேன்." எசே. 36:26a*

**மன்றாட்டு :** நல்மாற்றம் அருளும் கடவுளே, உம்மில் நம்பிக்கை கொள்வோரின் உள்ளங்களை தூய ஆவியரால் ஒளிரச்செய்கிறீர். தூய ஆவியரால் நாங்கள் நல்மாற்றம் பெறவும், சீரான வழிகாட்டுதலை ஏற்கவும், அருட்கொடைகளால் நிறைந்து பணி செய்யவும் எங்களை வலுப்படுத்த என்றும் உம்மோடும், தூய ஆவியரோடும் வாழ்ந்து ஆளுகை புரியும் எங்கள் ஆண்டவர் இயேசுகிறிஸ்து வழி வேண்டுகிறோம்.
- ஆமென்.

எசேக்கியா தீர்க்கர் இஸ்ரவேல் நாட்டில் சிறையிருப்புக்குப் பின்னர் மீதியாய் இருந்த மக்கள் மத்தியில் இறைவனின் வார்த்தையை எடுத்துரைக்கிறார். நாடு அழிந்து, ஆலயம், நகரம் இவை இல்லாத நிலையில், மக்களின் நம்பிக்கை தளர்ந்திருந்த காலம் அது. இத்தகைய நிலையில் உங்களுக்கு புதிய இருதயத்தை தந்து, புதிய ஆவியை அருளுவேன் என்ற இறைவனின் வார்த்தையால் மக்களை திடப்படுத்துகிறார். இறைவன் (ஆதி 1:2) மோசே போன்ற தலைவர்கள் இந்த ஆவியரின் துணையுடன் இறைவனின் திட்டத்தை இந்த உலகில் செயல்படுத்தினர். தீர்க்கர்கள் ஆவியரின் தூண்டுதலால் கடவுளுடைய வார்த்தையை தீர்க்கதரிசனமாக உரைத்தனர், புதிய ஏற்பாட்டின் காலத்தில் இயேசுவின் பிறப்பு முதல் திருச்சபையின் தோற்றம், வளர்ச்சி என தூய ஆவியர் தொடர்ந்து செயல்பட்டு வருகின்றார். இறைவனுடைய வார்த்தையாகிய திருமறை தூய ஆவியரின் தூண்டுதலாலும், வழிநடத்துதலாலும் பல்வேறு மக்களால் பல்வேறு காலங்களில் எழுதப்பட்டது (2 தீமோ. 3:16). ஒவ்வொரு தனிமனிதனும் இறைவனுக்குள் வாழ்வதற்கு இந்த தூய ஆவியரை இறைவன் நமக்குள் தந்துள்ளார் (யோவா. 14:16). இன்று ஆவியரின் செயல்களில் சிலவற்றை திருமறை அடிப்படையில் சிந்திப்போம்.

## 1. தூய்மைப்படுத்தும் ஆவியர் (Cleansing Spirit) எசே. 36:27

ஆவியரின் மிக முக்கியமான பணி தூய்மைப்படுத்துதலும், தூயவாழ்வுக்குள் நம்மை வழி நடத்துதலும் ஆகும். எனவேதான் எசேக்கியேல் தீர்க்கர் “என் ஆவியை உங்களுக்குள் புகுத்துவேன், என் நியமங்களை கடைபிடிக்கவும், என் நீதி நெறிக்களைக் கவனமாய்ச் செயல்படுத்தவும் செய்வேன்” என்கிறார். பவுலடியார் கிறிஸ்தவ அழைப்பை பற்றி கூறும்போது ரோமர் 1:2; 1கொரி. 1:2 ஆகிய வசனங்களில் தூயவர் ஆக்கப்படும்படி அழைக்கப்பட்டவர்கள் என்கிறார். 2தெச. 2:13 ல் பிற்பகுதியில் தூய ஆவியினால்தூய்மை ஆக்கப்பட்டு நீங்கள் உண்மையை நம்பி மீட்படையும்படி கடவுள் உங்களை முதல்முதலாக தெரிந்துகொண்டார் என்றும், ரோமர் 8:13ல் பிற்பகுதியில் ஆவியின் துணையால் உடலின் தீச்செயல்களைச் சாகடித்தால் நீங்கள் வாழ்வீர்கள் என்றும் கூறுகிறார். இந்த திருமறை வாசகங்கள் தூய ஆவியர் நம்மை தூய்மைப்படுத்துவதுடன், அந்த தூய்மையில் நிலைத்திருக்கவும் செய்கிறார் என அறிகிறோம். மேலும் தூய வாழ்வில் நாம் நிலைத்திருந்து வளருவதின் அடையாளமே ஆவியின் கனிகள் (கலா. 5:22,23) இந்த கனிகளை ஒருவன் தன்னில் வெளிப்படுத்த வேண்டுமானால் தன்மை முழுமையாக ஆவியரின் கட்டுப்பாட்டிற்குள் அர்ப்பணிக்க வேண்டும் (கலா. 5:25).

## 2. ஆற்றல்படுத்தும் ஆவியர் (Empowering Spirit)

யோவா. 20:22,23

தூய ஆவியரின் மற்றொரு பணி ஆற்றல்படுத்துதல் இங்கு இயேசுகிறிஸ்து தூய ஆவியை பெற்றுக்கொள்ளுங்கள் என்று கூறி பாவங்களை மன்னிக்கும் அதிகாரத்தை சீடருக்குக் கொடுக்கிறார். மேலும் பெந்தேகோஸ்தே நாளில் தூய ஆவியர் சீடர் மீது இறங்கும் வரைக்கும் அவர்களது செயல்பாடுகள் மறைவாய் இருந்தது. காரணம் யூதத் தலைவர்களுக்கும், யூத ஆட்சியாளர்களுக்கும் பயந்திருந்தனர். ஆனால் தூய ஆவியரால் ஆட்கொள்ளப்பட்ட பின்னர் உரத்த சத்தமிட்டு பேசத் தொடங்கினர். இந்த சத்தம் எருசலேமில் கூடி வந்த பல தேச மக்களின் காதுகளிலும் தொனித்தது (அப். 2:4) அப். 3:6,5ல் பிறந்ததுமுதல் சப்பாணியாய் இருந்தவனை திருத்தூதுவர் பேதுரு இயேசுவின் பெயரால் குணப்படுத்துகின்றார். அப். 4:20 ல் இயேசுவைக் குறித்து பேசக்கூடாது என்று கட்டளையிட்ட சனகரீம் சங்கத்தின்முன் “நாங்கள் கண்டதையும் கேட்டதையும் எடுத்துரைக்காமலிருக்க எங்களால் முடியாது” என்று சவால் விடுகின்றனர். இவை அனைத்தும் தூய ஆவியர் கொடுத்த ஆற்றலின் விளைவு.

## 3. கட்டளையிடும் ஆவியார் (Commissioning Spirit) அப். 13:2

இங்கு அமைதியாய், மகிழ்ச்சியாய்இறைவனை ஆராதித்துக்கொண்டிருந்த அந்தியோகியா திருச்சபையின் வாலிபருக்கு தூய ஆவியார் கட்டளை கொடுக்கிறார். இங்கு புறப்பட்டு போங்கள் என்று பவுலடியார், பர்னபா ஆகியோருக்கும், அனுப்புங்கள் என்று ஏனைய திருச்சபையின் மக்களுக்கும் இந்த கட்டளை அறிவுறுத்துகிறது. மத். 28:19ல் இயேசுகிறிஸ்து கொடுத்த கட்டளையை தூய ஆவியர் திருச்சபை செயல்படுத்த தூண்டுகின்றார். எனலாம். இதேப்போன்று வனாந்தரத்தில் சென்று கொண்டிருந்த பிலிப்பு தூய ஆவியரின் கட்டளைபடி கந்தாதே மந்திரிக்கு நற்செய்தி சொல்கிறார் (அப். 8:29-35). இன்றும் தூய ஆவியர் நற்செய்தி பணிக்கு திருச்சபையை தூண்டி கொண்டிருக்கின்றார்.

அன்புடையீர் தூய்மைப்படுத்தும் தூய ஆவியர் நம்மை தூய்மைபடுத்த அனுமதிப்போம். அவரது ஆற்றலை நம்மில் பெற்று உறுதியுடன் இறைவனுக்கு சான்று பகர்வோம். அவரது கட்டளையை ஏற்று இந்த உலகில் இறைவனின் நற்செய்தியை எடுத்துச் செல்வோம். தூய ஆவியர் நம்முடன் இருந்து வழி நடத்துவார்.

அருள்திரு. **J. விக்டர் ஞானராஜ்**

12-06-2011

சுற்றுப்புற சூழல் ஞாயிறு

# படைப்பின் ஒருங்கமைவு

## INTEGRITY OF CREATION

லேவி. 25 : 8-28 | தி.வெ. 22 : 1-7
திபா. 148 | யோவா. 15 : 15-21

*"நகரின் தெருநடுவே பாய்ந்தோடியது ...................... மரங்கள் இருந்தன." திவெ. 22 : 2*

திருமறையில் படைப்பு முக்கிய இடம் பெறுவதும், முதல் இடம் பெறுவரையும் காண்கிறோம். தொடக்க நூலில் கடவுள் தன் ஆவி மூலமாக படைப்பில் தாங்குகிறார். அவைகளை ஒன்றாகத் தாங்கி வாழ்வுக்குள் நிலைக்க செய்கிறார். கடவுள் ஏழாம் நாள் ஓய்ந்திருந்தார் என்பதின் உள் இரகசியமே கடவுள் படைப்பின் மேல் உறைந்திருந்தார் என்பதே. அவர் தம் பொறுப்பை மனிதரிடம் பகிர்ந்து அவற்றை பண்படுத்தவும் பாதுகாக்கவும் அழைக்கிறார். மனிதர் தன் பொறுப்பை தவறாக பயன்படுத்தியபோது பேரழிவுகள் ஏற்பட்டன.

சில கிறிஸ்தவ பிரிவுகள் இவ்வுலகம் தீயது, தற்காலிகமாக இங்கு குடியிருக்கிறோம். நம் நிரந்தர வீடு விண்ணுலகமே, கிறிஸ்துவின் வருகைக்குப்பின் நாம் இங்கிருந்து சென்று விடுவோம் என்கின்ற கருத்துக்களை பரப்புவதால் இவ்வுலகில் படைப்புகளை தொடர்ந்து பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணத்தை தடுத்துவிட்டன. மாறாக எவ்வளவுக்கு அதிகமாக அதனை சுரண்ட முடியுமோ, காயப்படுத்த முடியுமோ அவ்வளவுக்கு அதிகமாக செய்துவிட்டனர். இந்த உலகத்தைவிட்டு வேறு உலகத்திற்கு செல்லலாம் என்ற கருத்து நிலைத்து விட்டது. இன்றைய கிறிஸ்தவம் இந்த உலகத்தினை நல்ல உலகம் என உறுதி செய்து அதில் மனிதரும் ஏனைய படைப்புகளும் வாழும் சூழலை ஏற்படுத்துவதே அவசியம் என்பதை மறந்து விட்டது.

மனிதர் எல்லா படைப்புகளோடு நாம் கொண்டிருக்கும் நல்லுறவையும் இணக்கத்தையும் வைத்தே புரிய முடியும், கடவுள் தம் படைப்பை தம் சாயலில் படைக்கப்பட்ட மனிதரிடம் ஒப்படைத்திருக்கிறார். உக்கிராணத்துவம், கடமை, கணக்கு கொடுக்கும் பொறுப்பு போன்ற கிறிஸ்தவ வாழ்வின் அடிப்படை கூறுபாடுகள் இங்கு கவனிக்கத் தக்கவையாகும்.

இவ்வுலகை படைத்த கடவுள் இவ்வுலகோடு நெருங்கிய தொடர்புடையவராக இருக்கிறார். அவர் தொடர்ந்து செயல்பட்டும் கொண்டிருக்கிறார். அவர் படைப்பாகிய மனிதன் செய்த தவறினால் படைப்பு தன் மகிமையை இழந்துவிட்டது. ஆகவே கிறிஸ்துவின் மூலம் உலகம் புதுப்படைப்பாகிறது (ஏசா. 65 : 17-18; 66 : 22; எரே. 31 : 12; எபே. 2 : 15; திவெ. 21 : 1-5; கொலோ. 3 : 10; 2கொரி. 5 : 17; கலா. 6 : 15; ரோம. 8 : 20-23).

கடவுள் படைத்த படைப்புகள் நிறைவுடன் காணப்பட

## 1. சுற்றுப்புற சூழல் தூய்மையுடன் இருக்க வேண்டும் :

(திவெ. 22 : 1)

அனைத்தும் படைத்து எல்லாம் நல்லதென்று கண்ட இறைவன் படைத்த படைப்புகளை மனிதரிடம் ஒப்படைக்கிறார். அனைத்தையும் செம்மையாக பாதுகாக்க வேண்டிய மனிதன் படைப்பின் மகிமையை இழக்க செய்து வருகின்றான் இதனால் இன்பமாய் வாழ வேண்டிய மனிதன் துன்பத்தையே அனுபவிக்கிறான். காரணம் சுற்றுப்புறச்சூழல் மாசுபடுவதே. உலகில் தொழில் மயமாக்குதலால் தொழிற் கூடங்களிலிருந்தும் வாகனங்களிலிருந்தும் வெளிவரும் புகை குப்பைகளை திறந்த வெளியில் கொட்டுவதாலும் செத்துப்போன ஊரும் பிராணிகளை திறந்த வெளியில் வீசிவிடுவதாலும் அதிலிருந்து எழும் துர்நாற்றம் காற்றை மாசுபடுத்துகிறது, மனிதன் உயிர்வாழ கடவுள் தந்த தண்ணீரும் மாசுபட்டு விடுகின்றன. சாயப்பட்டறை கழிவுநீர், சாக்கடைநீர்; நச்சு நன்மையுள்ள தொழிற்சாலை கழிவு அமிலங்கள் நல்ல நீருடன் கலப்பதால் மாசுபடுகின்றன. மாசுபட்ட காற்று மண்டலத்திலுள்ள நச்சு தன்மை மழை நீரில் கலந்து விடுகிறது. நச்சுதன்மையுள்ள நீரையே பூமி பெற்றுக் கொள்வதால் தூய்மைக்கேடு அவை சந்திக்கிறது. செம்மையான படைப்பு தூய்மை இழந்து போகிறது. இதனால் கடவுள் யோவானுக்கு மறுபடைப்பின் நிலையை சுட்டிக் காட்டுகிறார்.

திவெ. 22-ல் பளிங்கைப்போன்ற தெளிவான ஜீவ தண்ணீருள்ள சுத்தமாக நதி கடவுளும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனத்திலிருந்து புறப்பட்டு வருகிறதை கண்டேன் என்கிறார் யோவான். இன்று மனிதர் உயிர்வாழ சுத்தமான தண்ணீர் மிகமிக தேவை. இதனை பெற மனிதர் சுற்றுப்புறச் சூழலை தூய்மையுடன் பாதுகாக்கவேண்டும்.

## 2. சுற்றுப்புற சூழல் பழுதின்றி இருக்கவேண்டும் :

(திவெ. 22 : 2)

கடவுள் உலகைப்படைத்து, இயற்கையை படைத்து அதன் வழி மனிதன் உயிர் வாழும் உயிர்ச்சூழலை தந்திருக்கிறார். அது பழுதுபடாமல் காக்க வேண்டியது நமது பொறுப்பு. ஏனெனில் அதன் விளைவை அனுபவிப்பவர் நாமே. சுற்றுப்புறச் சூழல் பழுதுபட்டால் நாம் தான் பழுதுபடுகிறோம். படைப்பில் பழுது ஏற்படும் போது செம்மையான படைப்பு பொலிவிழந்து விடுகிறது பாதிப்படைந்து விடுகிறது.

இன்று அரசு பொருளாதார வளர்ச்சி, முன்னேற்றம், உற்பத்தி பெருக்கம் போன்றவைகள் மீது அதிக அக்கரை காட்டி பசுமைபுரட்சி, வெண்மைபுரட்சி, நீலபுரட்சி என பல புரட்சி திட்டங்கள் மக்கள் மத்தியில் நடைமுறைப்படுகிறது. இவைகளின் விளைவு உற்பத்தி பெருக்கம். செயற்கையான சூழ்நிலை உருவாக்கம் போன்றனவாகும். இச்செயற்கை சூழ்நிலை சுற்றுச்சூழலை பல்வேறு விதங்களில் பாதிக்கிறது. கரியமிலவாயு அதிகரிப்பு, காற்று, தண்ணீர் மாசுபடுதல், கதிர்வீச்சு, வான் வெளியின் பாதுகாப்பு அரணான ஓசோன் அடுக்குகளில் ஓட்டை விழுதல் போன்றவைகளால் கடுமையான பாதிப்பு ஏற்படுகின்றன. இன்று சுற்றுச்சூழல் மனித உயிருக்கும் ஏனைய உயிருக்கும் வாழ்வளிப்பதற்கு பதிலாக ஓர் அச்சுறுத்தலாக மாறி வருகிறது.

இன்று இயற்கையாகிய செடி, கொடி, மரங்களில் விஷப்பொடிகளை தூவியும், இரசாயன உரங்களை வைத்தும், நச்சு மருந்துகளை தெளித்தும் சுற்றுப்புற சூழலுக்கு கேடு விளைவிப்பதுடன், தான் பெற்றுக் கொள்ளும் விளைச்சலில் நச்சுதன்மை நிறைத்திருப்பதை நினையாமற் போகிறான். இவ்விளைபொருட்களை உண்டு ஆரோக்கியத்தை இழக்கிறான்.

திவெ. 22 : 2-ல் சுற்றுப்புறச்சூழல் பழுதின்றி காக்கப்படுவதால் அச்சூழலில் வளர்ந்த மரத்திலிருந்து பெறப்படும் இலை மற்றும் கனிகள் ஆரோக்கியம் தரக்கூடியதாய் இருக்கிறது என யோவானுக்கு வெளிப்படுத்தப்படுகிறது. அந்த ஆரோக்கியமான இலைகனிகளை தரும் மரங்கள் மாசற்ற தெளிந்த நீர்பாயும் இடத்தில் நிற்கும் மரங்கள். அவைகள் தவறாது கனிகொடுத்து மனிதனுக்கு சுகத்தை தந்து கொண்டே இருக்கிறது. சுற்றுப்புற சூழல் பழுது படாமல் காக்கப்பட்டால் நாம் நலமுடன் ஆரோக்கியமாக வாழலாம். இதைக்குறித்து எசேக்கியேல் தீர்க்கன் முன்னுரைத்திருக்கிறார் (எசே. 47 : 12).

### 3. சுற்றுப்புறசூழல் (படைப்பு) நல் உறவுடன் இருக்க வேண்டும் :

இயற்கையோடு மனிதன் நல் உறவுடன் இருக்க கடவுள் படைத்தார். மனிதன் நல் உறவு கொள்ளாத நிலையில் இறைவன் படைத்த படைப்பு நிலை குலைந்து போனது. இயற்கையை ரசித்து ருசித்து வாழ படைக்கப்பட்ட மனிதன் அந்த இயற்கையை காயப்படுத்தி குற்றுறுயிர்ஆக்கி அதில் வேடிக்கைப் பார்த்துக்கொண்டிருக்கிறார். இதனால் கடவுளின் செம்மையான படைப்பின் நோக்கம் நிறைவேறாமல் போய்விடுகிறது மனிதன் இன்று இறைவனோடும் இயற்கையோடும் உறவை முறித்துக்கொள்வதால் இயற்கை சேதங்களாகிய காடு அழிதல், வெள்ளபெருக்கு, வறட்சி , பருவமழையின்மை, பருவமழை மாற்றங்கள், மண்வள அழிவு, விளைச்சலின்மை நிலத்தடி நீர்வறட்சி, நீர் மாசுப்படுதல், புது நோய்கள் அதிகரிப்பு போன்றவை ஏற்படுகின்றன. கடவுள் மனிதன் இயற்கை சூழல் இவை மூன்றும் நல்உறவுடன் இருக்கும் சூழ்நிலையை ஏதேன் தோட்டமாகவும், இந்த அடிப்படை உறவில் முறிவு ஏற்பட்ட போது அது பாவமாகவும் அதனால் மனிதன் அதன் விளைவை சந்திக்கிறவனாகவும் மாறுகிறான். இயற்கையை பராமரித்து காக்க வேண்டிய மனிதன் அவைகளை அழித்துதான் செழுமை காண விரும்புகிறான். எனவேதான் மனிதனின் உறவற்ற நிலையிலிருந்து அவன் அடிமைப்படுத்தி வைத்திருக்கும் நிலையிலிருந்து விடுபட இயற்கை தவித்து பிரசவ வேதனைப்படுகிறது என்று பவுல் எழுதுகிறார். (ரோ. 8:22)

இவ்வுலகில் மனிதர் உட்பட எல்லாப்படைப்புகளும் ஒன்றையொன்று சார்ந்துள்ளதால் ஒன்றின் வளர்ச்சி அல்லது அழிவு இன்னொன்றில் பாதிப்பை ஏற்படுத்தும் மனிதன் பிறபடைப்புகளோடு இணைந்து உறவுடன் வாழ வேண்டியது மிகவும் அவசியம். அவைகளோடுள்ள உறவை முறித்துக் கொள்வதால் சீரான உறவில் விரிசல் ஏற்பட மனிதனே முதல் காரணமாக இருந்து வருகின்றான். திவெ. 22 : 3-ல் யோவானுக்கு கடவுள் காட்டிய காட்சியில் சாபமில்லாத ஆசீர்வாதமான நிலையை காண்கிறான். அங்கு கடவுள் மனிதன் படைப்பின் உறவு பலமாக இருப்பதை காண்கிறான் இந்த உறவு இருக்கும் இடத்தில் இனி அழிவோ சாபமோ இராது என்கிறார். யோவான்.

அருள்திரு. **A. இயேசுதாஸ்**

**19-06-2011** **திருத்துவ ஞாயிறு**

# மூவொரு கடவுளைப் புகழ்ந்து பாடுங்கள்

விப. 3:1-15, திவெளி. 4:1-11
திபா. 98 மத். 28:14-20

*"நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள்; தந்தை, மகன், தூய ஆவியின் பெயரால் திருமுழுக்கு கொடுங்கள்." மத். 28:19*

**மன்றாட்டு : அருள்நிறைந்த மும்மைக்கடவுளே, காணப்படுகிறவைகளும் காணப்படாதவைகளுமானவற்றின் படைப்பாளராய் உம்மை அறிந்துணர்கின்றோம். அருகிலும், தொலைவிலும், உள்ள அனைவரின் மீட்பை புரிகின்றோம். தூய ஆவியரால் எங்களை உற்சாகப்படுத்தி, விண்ணரசின் கூட்டாய்மையுடன் இணைந்து தூய, தூய, தூயரே! விண்ணும், மண்ணும் உம்மாட்சியால் நிறைந்திருக்கின்றன என்று இடையறாது போற்ற என்றென்றும் உம்மோடும், தூய ஆவியரோடும் வாழ்ந்து ஆளுகை செய்யும் எங்கள் ஆண்டவர் இயேசுகிறிஸ்து வழி வேண்டுகிறோம். - ஆமென்.**

கிறிஸ்தவ பற்றுறுதியின் (நம்பிக்கையின்) வழியில் இறைவன்: தந்தை, மகன், தூயஆவியார் என்னும் மும்மையை (மூவொரு) உள்ளடக்கியுள்ளார். ஆயினும் கடவுள் ஒருவரே. இறைவனை ஒருவராகவும், ஒருவருள் மூவராகவும், மூவருள் ஒருவராகவும் துவக்க கால திருச்சபை புரிந்து கொண்டது. தந்தையாகிய இறைவன், மகனாகிய இயேசு கிறிஸ்து, தூய ஆவியார் வழியாக மக்களிடையே உடனிருக்கிறார் என நம்பிக்கை கொண்டார்கள். இந்த நம்பிக்கையின் ஒளியில் மூவொரு (மும்மைக்) கடவுளைப் புகழ்ந்து போற்றினார்கள்.

கடவுளின் மீட்பின் வரலாற்றில் நிகழ்ந்த முக்கியமான மூன்று நிகழ்ச்சிகளின் அடிப்படையில் மும்மைக்கடவுள் (மூவொருஇறைவன்) என்ற எண்ணம் திருச்சபையில் ஏற்பட்டது. முதலாவதாக இறைமகனாகிய இயேசுவின் வருகை, அவரது பணி, பாடுகள், உயிருற்று எழுதல், அவர் 'கடவுளின் மனு உரு' என்ற விளக்கமாகும். இரண்டாவதாக தூய ஆவியாரின் வருகை, அவரின் செயல்பாடு மக்களிடையே உணர்ந்து கொள்ளப்பட்டு, ஆவியின் கனிகளாக வெளிப்படுத்தப்பட்டது. மூன்றாவதாக இஸ்ரவேலரின் வாழ்க்கை வரலாற்றில் தந்தையாகிய இறைவனின் செயல்பாட்டை, இறைவாக்கினர் வாயிலாக புரிந்து கொள்ளப்பட்டது. இந்த மூன்று முக்கியமான கருப்பொருளின் அடிப்படையில் திருவிவிலியம் நமக்கு கடவுளைப் பற்றிய செய்தியை குறிப்பிடுகிறது. இவற்றின் அடிப்படையில் தான் கடவுள் மூவரில் ஒருவர் என்று திருச்சபை விளக்கமளித்து, பற்றுறுதி அறிக்கையிலும்,

வழிபாட்டுமுறைகளிலும் குறிக்கப்படுகிறது. இதுவே மூவொரு இறைவன் பற்றிய துவக்க காலத்திருச்சபையின் விளக்கம். தொடர்ச்சியாக திருச்சபை வரலாற்றில் மூவொரு இறைவனைப் புகழ்ந்து பாடும் வழக்கம் ஏற்பட்டது. இதனடிப்படையில் இரண்டு கருத்துக்களை நாம் இணைந்து சிந்தனைச் செய்யலாம்.

## திரிபுக் கொள்கையை முறியடித்த மூவொரு இறைவன்

திருச்சபை வரலாற்றின் துவக்க நூற்றாண்டுகளில் ஏற்பட்ட பல திரிபு கொள்கைகளுக்கு எதிராக கிறிஸ்தவ நம்பிக்கையின் (பற்றுறுதியின்) அடித்தளத்தையும் ஆழங்களையும் தெளிவுபடுத்த மூவொரு இறைவன் கோட்பாடு (மும்மைக் கோட்பாடு) துணையாக அமைந்தது. எனவே கிறிஸ்தவ வரலாற்றில் விவிலியம், பற்றுறுதி அறிக்கை, வழிபாட்டு முறை ஆகியவற்றில் மூவொரு இறைவனை துவக்க கால திருச்சபை முக்கியப்படுத்தியது. மேலும் கடவுள் தம்முடைய இருப்பு நிலையில் தந்தை, மகன், தூய ஆவியார் என்ற நிலையில் இருக்கிறார் என திருச்சபையின் தந்தையர்கள் விளக்கமளித்தார்கள். குறிப்பாக மகனின் மனு உரு நிலையை திரிபு கொள்கையினர் திரித்துக் கூறினார்கள். அதாவது அவர் மனிதனைப் போல காட்சி அளித்தாரே தவிர உண்மையான மனித நிலையில் அவர் பாடுகளையும், மரணத்தையும் சந்திக்கவில்லை எனக் கூறினார்கள். இயேசுவின் உண்மையாளர் மனித தன்மைக்கு திரிபுகொள்கையினர் முக்கியத்துவம் அளிக்காததால் திருச்சபை இயேசுவின் மனித தன்மைக்கு அதிக முக்கியத்துவம் வழங்க மூவொரு இறைவன் கோட்பாட்டை வலியுறுத்தி திரிபு கொள்கையை முறியடித்தார்கள். மும்மை கோட்பாட்டை முக்கியப்படுத்தினார்கள்.

இன்று நாம் வாழும் சூழலில் கடவுளின் இருப்பு நிலைக்கெதிரான திரிபுக் கொள்கைகள் பரப்பப்பட்டு வருகின்றன. குறிப்பாக தந்தையாகிய இறைவனின் ஒரே மகனாகிய இயேசு கிறிஸ்துவின் பணிகள், பாடுகள், அறிவுரைகள், உலகத் தீமைகளுக்கெதிரான அவரின் போராட்ட செயல் பாடுகள் இவைகளுக்கு இடமளிக்காமலும், அவரின் தாழ்மை, அன்பு, எளிமை, ஆன்மீகம், தந்தையோடு வைத்திருந்த உறவு இவைகளுக்கும் இடமளிக்காமல் அவரின் திருப்பெயரை மட்டும் உச்சரித்து, அவரின் நற்செய்தியில் வரும் பாடுகளை மறுதலித்து உலகத்தின் தீமைகளை திருப்பணியிலும் இணைத்துக்கொண்டு இறைவனின் திருப்பெயருக்கு புகழ்மாலை சூட்டி வருகிறார்கள். இவர்கள் தங்கள் நாவினால் அவரைப் புகழ்ந்து பாடுகிறார்கள். அவர்களின் உள்ளமோ, பொல்லாப்பு, பொறாமை, போட்டி, வைராக்கியம், பணஆசை, பதவி வெறி, ஒருதலைபட்சமான செயல்பாடு இவைகளில் அதிக நாட்டம் கொண்டிருக்கிறார்கள். இத்தகைய ஆன்மீகம் இருபத்தியோராம் நூற்றாண்டின் திரிபுக் கொள்கை என கருதி, மூவொரு கடவுளின் முழுமையான உடனிருத்தலை உணர்ந்து கொண்டு

இயேசு கிறிஸ்துவின் உண்மையான திருப்பணிக்கு நம்மை அற்பணித்து அவரின் வழி, வாய்மை, வாழ்வு, வழியாக அவரைப் புகழ்ந்து பாடுவதோடு, அவரின் எளிமையான வாழ்வையும், நீதியான பணிவிடைகளையும், சமூக, சமய, அரசியல் மாற்றத்திற்கான அரும் செயல்களையும் செய்து அவரின் மாட்சிமையை வெளிப்படுத்தி, திரிபு கொள்கையை முறியடிப்போம்.

## திருச்சபை வரலாறுக்குத் திசைக்காட்டும் மூவொரு இறைவன் :

மூவொரு இறைவனிடத்தில் இருக்கும் இடையறாத உறவு திருச்சபை வரலாறுக்கு ஒரு புதிய உறவு முறையை கையளிக்கிறது. குறிப்பாக தந்தை - மகன் -தூய ஆவியார் இடையே இருக்கின்ற உறவு மாற்றமில்லாதது, மறைக்க இயலாதது, மறக்க முடியாத ஒன்றாகும். எனவேதான் துவக்க காலத்திருச்சபை மக்களிடையே இத்தகைய உறவுநிலை ஏற்பட வேண்டும் என்ற நோக்கில் திருச்சபைக்கு திசைகாட்ட மும்மைக் கோட்பாட்டை துவக்க கால கிறிஸ்தவ பற்றுறுதியாளர்கள். கடைபிடித்தார்கள். உலகில் இல்லாத அடிப்படையான அதை வலியுறுத்திக் காட்டினார்கள். உறவுகளுக்கெதிரான ஆற்றல்கள் உலகில் இருக்கும் போது, உறவுமயமான இறைவன் வாழ்வின் ஒவ்வொரு பகுதியிலும் மூவருள் ஒருவராகவே இருக்கிறார். இயங்கிக்கொண்டேயிருக்கிறார்.

நாம் வாழும் உலகில் இன்று உறவுகள் சீர் கெட்டுப் போய் தனியாளைத் தனிப்படுத்தும் போங்கு உலகில் வளர்ந்து வருகிறது (கூட்டு குடும்ப சூழல் மாறி, தனித்தாளர் குடும்ப உறவு). இதனால் வாழ்வின் உறவுகள் முக்கியப்படுத்தப்படாமல், விரக்தியும், தற்கொலை விருப்பமே மேலிருக்கின்றன. தனியார் மையத்திலிருந்து அடுத்தவரை நோக்கிச் செல்லும் உறவோட்டத்திற்கு மும்மை, ஆழமான, அர்த்தமான, அர்த்தமான, அன்பான உந்துதலைத் தருகிறது. இறைவன் தம்முள் தாமே ஒரு சமூக உயிரியாக, அன்கூர்ந்தும், அன்பு கூரப்பட்டும் விளங்குகிறார். அவர் ஒருவர் என்பதைக் கணித அடிப்படையில் புரிந்து கொள்ள வேண்டும். முழுமையான உறவு இருக்கும் போது ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் ஒன்றாகச் செயல்பட முடியும். இந்த ஒன்றிப்பும், இயக்கமும் இறைவனுக்குள் என்றென்றும் இருக்கிறது என்பதை மும்மைக் கருத்து எடுத்துக்காட்டுகிறது. இறைவனை இவ்வாறு நோக்குவோர் பிறரிடம் உறவு கொள்ள நாடுவர். மேலாதிக்கத் தனித்துவங்களைச் சாடுவர். அனைவரின் பங்கேற்போடு திருச்சபையை நடத்திச் செல்வர். இந்நிலை துவக்க காலத் திருச்சபை வரலாற்றுக்கு திசை காட்டும் ஒன்றாக மும்மை திகழ்ந்தது. எனவே மூவொரு இறைவனை உறவுகளின் இருப்பிடமாக புகழ்ந்து பாடினார்கள். நாமும் உலக தீமைகளை அகற்றி உறவுகளின் இருப்பிடமாகிய இறைவனில் இணைந்து வாழுவோம். ஆமென்

அருட்திரு. **எ. கென்றிதாசு**

**26-06-2011**

# கிறிஸ்தவ சீடத்துவம்

**CHRISTIAN DISCIPLESHIP**

2அர. 2:1-15 தீத். 2:1-15

திபா. 119:33-48 லூக். 14:25-33

*"தம் சிலுவையைச் சுமக்காமல் என் பின் வருபவர் எனக்குச் சீடராய் இருக்க முடியாது."*
*லூக். 15:27*

**மன்றாட்டு** : எங்களை அன்புடன் ஏற்கும் கடவுளே, சீடர்களாய் நாங்கள் பின்தொடர எங்கள் தலைவராய் திருமைந்தர் இயேசுகிறிஸ்துவை அருளினீர். நாங்கள் அவரது போதனைகளை எங்களுள் பதித்து, எம்மை வெறுத்து, சிலுவை சுமந்து பாதச்சுவடுகளை தொடரவும், கிறிஸ்துவையொன்றிய வாழ்வில் உண்மை சான்றுகளாய் செயல்பட அருள்வேண்டி எம்தலைவர் இயேசுகிறிஸ்து வழி மன்றாடுகிறோம். - ஆமென்.

போதை பொருள் எதிர்ப்பு தினமான இன்று நமது சிந்தனைக்காக தரப்பட்டிருக்கும் கிறிஸ்தவ சீடத்துவம், மாதிரி வாழ்வின் தன்மைகளை வலிமைப்படுத்தும் தலையங்கமாகும். கிறிஸ்தவ சீடத்துவம் என்பது சமூக மேம்பாட்டில் கவனம் செலுத்தி தீய சக்திகளின் ஆதிக்கத்திலிருந்து மக்களை விடுதலைப்படுத்தி கிறிஸ்துவின் வாழ்வில் இணைப்பதாகும். எண்ணெய் செக்கில் இணைக்கப்பட்ட காளைகள் செக்கையே சுற்றிவரும். ஆனால் வண்டியில் பூட்டப்பட்ட காளைகள் குறிப்பிட்ட இடத்தை அடைவதற்காக ஓட்டுநரின் இயக்கத்தில் குறித்த நேரத்தில் இடத்தை சென்றடையும். கிறிஸ்தவ சீடத்துவம் என்பது லட்சியத்துடன் கிறிஸ்துவுக்காய் வாழ்வதிலும், சமூக மேம்பாட்டிற்காய் தூரப்பார்வையுடன் விசாலமான வழியை ஏற்படுத்துவதிலும் முழுமையடைகிறது. சீடத்துவம் என்ற வார்த்தை நற்செய்தி பகுதியில் 262 முறை வருகிறது. இந்த சீடத்துவ பண்பு மூன்று நிலைகளில் வெளிப்பட வேண்டும். வெறுத்தல் (hate) அல்லது குறைவாக அன்பு செலுத்துதல் (love less) கிறிஸ்துவிடம் வருதல் (come to me) சிலுவை சுமத்தல். (Carry cross), அதாவது சுயத்தை வெறுத்து கிறிஸ்துவில் கற்று முன் சென்றால் சிலுவை சுமக்கும். சீடனாக வாழ்ந்து தடயங்களை ஏற்படுத்த முடியும். திருமறைப் பகுதிகளில் உண்மையாய் குருவை பின் தொடரும் சீடன் ஆற்றலை காண்பதும், (IIஅர. 2:1-15), உடமைகளை கிறிஸ்துவுக்காய் விட்டு கொடுப்பவர் (லூக்கா 14:25-33) உண்மை சீடனாக மாறுவதும், தூய்மையான வாழ்வு வாழ மக்களுக்காய்

துன்பங்களை ஏற்றுக் கொள்வதும் சீடத்துவத்தின் உண்மை தன்மைகளாக சொல்லப்பட்டுள்ளது. திருமறை பகுதிகளில் வெளிப்படும் உண்மைகளை கிறிஸ்துவின் சீடர்கள் என்ன செய்வ வேண்டும்? எதை வெறுக்க வேண்டும்? எதற்காக இழக்க வேண்டும்? போன்ற கேள்விகளுக்கு விடைகாணும் முயற்சியாக திருமறை பகுதிகளை தியானிப்போம்.

## 1. இறை உறவை முதன்மைப்படுத்தும் சீடத்துவம் :

(லூக். 14:26)

- இயேசுவுக்காக குடும்ப உறவுகளை துறக்க துணிந்தவர்கள் சீடராயிருக்கும் தகுதி பெறுவர். (9. 57– 62)
- குடும்ப உறவுகளை முதன்மையாக காண்பவர்கள் அவர்களுக்கு பணித்த பணிகளை நிறைவுபடுத்தும் தகுதியிழந்தவர்கள் இத்தகையவர்கள், தம்மை பாதுகாத்துக் கொள்ளும் சிந்தனைக்கு அடிமையாகி போலித்தனமான சீடத்துவத்தை வெளிப்படுத்துபவர்கள்
- உலகில் உண்மையான அமைதி ஏற்பட அதற்கு தடையாயிருக்கும் குடும்ப உறவுகளை துண்டித்துக்கொள்ள சீடன் கடமைப்பட்டவன்.
- குடும்ப உறவுகள் உலகத்துக்குரியவைகள், இறைஉறவு வேற்றுமைகளை தாண்டி, பரந்த கண்ணோட்டத்தில் சமூக மக்களை ஒன்றிணைக்கும் ஆற்றல் கொண்டது.
- தமிழக அரசு முத்திரையில் வாய்மையே வெல்லும் என்ற வாசகம் எழுதப்பட்டுள்ளது. உண்மை சீடன் இறை உறவை வலிமைப் படுத்தி குடும்ப உறவை இரண்டாம் நிலையில் பார்த்து உண்மையை பிரகடனபடுத்தி வெற்றி காண்பவன்.
- சீடன் சமூக வாழ்விற்காய் குடும்ப உறவை சுமந்துச் செல்லும் சுயநல குடும்ப பிரியராய் வாழாமல் நீதி, நியாயம், இவைகள் புரட்டப்படும் போது தான் வாழும் சூழலில் கேள்விகளை எழுப்பி முதல்நிலைபணியாளராக இறை உறவை முதன்மைபடுத்தி வாழ முன் வரவேண்டும்

**உலகத்தில் உயர்வாக கருதும் அனைத்தையும் கிறிஸ்துவுக்காக விட்டுவிட முன்வருதல்.**

உலகம் எதை மதிப்பற்றதாக கருதுகிறதோ அதை கற்றுக்கொள்ளும் மனநிலைக்கு (Iகொரி. 1:26–31) சீடன் தன்மை மாற்றிக் கொள்ள வேண்டும்.

## 2. இறையவரில் செயல்படும் சீடத்துவம் : (லூக். 14:28-33)

- சீடத்துவம் என்பது வியாபாரமல்ல லட்சியத்திற்காக தன்னை இழந்து விடுதல் இத்தகைய அருட்பணியில் திட்டமிடுதல் மிகவும் அவசியமானது.
- ஏழை, பணக்காரன், நகரம், கிராமம் எந்த சூழ்நிலையில் வாழ்ந்தாலும் கிறிஸ்துவின் சீடராவதற்கு முன்பு நன்றாய் சிந்தித்து திட்டமிட்டு இறுதிவரை முழுமையாய் தன்னை வெறுத்து செயல்படுவதற்கு முன்வர வேண்டும். அப்படி முழுமையாக திட்டமிட்டு செயல்பட முடியவில்லை என்றால் சீடராகும் எண்ணத்தை விட்டுவிட்டு மாற்று பணியை தெரிந்துக் கொள்ள வேண்டும். அதற்கு திருமறையில் வழிகள் சொல்லப்பட்டுள்ளளது.
- திட்டமிட்டு செயல்படுதல் என்பது அனைத்தையும் விட்டுவிடுதல், விற்றுவிடுவதல்ல (லூக். 14:26) (give up, to say farewell, to take leave- off, to say good bye) தமக்குரியதை விட்டு தன்னிடமுள்ள தலைவன், முதலாளி என்ற முகவரியை திட்டமிட்டு அளந்து எல்லா உரிமைகளை நமக்கு தந்தவர் இறைவனே என்ற உறுதிபாட்டில் செயல்பட முன்வர வேண்டும். (Disciple is a steward, following Jesus Christ, both his teachings and life).

  இத்தகைய கட்டுபாட்டுடன் கூடிய திட்டமிடுதல் சீடத்துவத்தின் முழுமையான பிரதிபலிப்பாகும்.

- திட்டமிட்டு செயல்படாத வாழ்வு பயனில்லாத வாழ்வாகும். கவிஞர் காம்ஸாதோவ் என்பவர் வாழ்க்கையில் எச்சரிக்கையாக எதிலும் மாட்டிக்கொள்ளாமல் வாழ்ந்த ஒருவனை பற்றி இவ்விதமாக எழுதினார். நீண்டகாலம் வாழ்ந்துவிட்டால் எவருக்கும் நன்மையில்லை, நண்பர்களும் உனக்கில்லை, நீ இறந்தபோதோ மக்கள் உன்னை பார்த்து சொன்னார்கள், ஒரு நாள் கூட இவன் வாழவில்லை திட்டமிட்டு செயல்படும் சீடன் சமுதாயத்தின் அடிமட்டத்தில் வாழும் மக்களை குறித்த விசாலமான பார்வையுடையவன் மக்களில் வாழும் வாய்ப்புகளை ஏற்படுத்துவான்.
- திட்டமிட்டு செயல்படுதல் சீடனின் பண்பாக மாறினால் தன்னைவிட எளிய நிலையில் வாழும் உடன் சகோதர சகோதரிகளுக்கு தம்மிடமிருப்பதை பகிர்ந்து ஏழ்மையில் பங்குபெறுவர் (Identifying with the economical Poverty)

- திட்டமிட்டு செயல்படுதல் மன ஏழ்மை உடையவர்களாக தன்னை சமூகத்திற்கு காட்ட தூண்டுகிறது (Spiritnal Poverty). நான், என்பதைவிட்டு விட்டு நாம், நமக்கு என்ற நிலையில் வாழ சீடனில் வாய்ப்புக்களை உருவாக்குகிறது.
- திட்டமிட்டு செயல்பட்டால் சுயநல வெறி ஆதிக்கம் உடைக்கப்பட்டு பொது நலசிந்தை உருவகம் கொண்டு பொது உடமை கொள்கையை சமூகத்தில் கொண்டு வரமுடியும்.

சமுதாயத்தை கிறிஸ்துவின் வழியில் கொண்டு வரும் திட்டமிட்டு செயல்படும் அவசியத்தை உணர்ந்த கிறிஸ்தவ சீடராக மாறுவோம்.

## 3. இறையரசில் துன்பங்களை ஏற்றுக்கொள்ளும் சீடத்துவம் (லூக். 14-27)

- தூய்மையான வாழ்வுக்காய் துன்பங்களை ஏற்றுக்கொள்ளும் மனநிலை கொண்டவர்களாய் கிறிஸ்தவ சமூகம் தெளிவாய் நடக்க கற்றுக் கொடுத்தல் (தீத்து 2:1-15)
- குருவிடமிருந்து நன்மைகளை கண்டடைய எத்தகைய துன்பங்களையும் பொருட்படுத்தாமல் பின் தொடரும் சீடன் (IIஅர. 2:1-15)
- அமைதி இல்லாத நேரத்திலும் தன்னை முதன்மையாக்காமல் அடுத்தவர் வாழ்வுக்காய் துன்ப சூழல்களிலும் தூய்மையான வாழ்வில் ஆர்வம் காட்டுதல் (திரு. 119:33-48)
- துன்பம் என்றதும் துவண்டு போகாமல், துயரம் என்றதும் ஓடி ஒளியாமல், சிலுவை என்றதும் முறுமுறுக்காமல் திறந்த மனநிலையில் கிறிஸ்துவுக்காய் பாடுகளை ஏற்றுக்கொள்ளுதல்.
- துன்பங்களை ஏற்று தன்னலத்தை விட்டுவிடும் இடங்கள் ஆண்டவரின் இருப்பிடமாக மாறுகிறது.
- சிலுவை பாதை எல்லா மக்களாலும் புகழ்பாடும் வாழ்வாக இருப்பதற்கு வாய்ப்பில்லை. திறந்த மனதோடு இத்தகைய துன்பம் ஏற்கும் மன உறுதி கொண்டவர்களே கிறிஸ்துவின் சீடர்கள், பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் பொருட்காட்சி சாலையில் ஓர் அதிசய சிலை வைக்கப்பட்டுள்ளது. அதற்கு வரலாறு ஒன்று சொல்லப்பட்டுள்ளது. கலைதிறன் கொண்ட ஏழை மனிதன் தனது கரத்தினால் களிமண்ணில் சிலை ஒன்றினை செய்தான். மழை பெய்தது. அந்த சிலையை பாதுகாப்பதற்குரிய வீடும், வசதியும் அவனிடமில்லை. ஆகவே குளிருக்காக வைத்திருந்த தனது கம்பிளியினால் சிலையை

மூடி தனது உடலால் மறைத்து கட்டிபிடித்தான். காலையில் அந்த வழியில் வந்தவர்கள் ஒருவன் ஏதோ ஒன்றை கட்டிபிடித்து நிற்பதுபோல் கண்டு அருகே சென்று பார்த்தபோது அவனில் உயிரில்லை ஆனால் சிலை சேதமில்லாமல் பாதுகாக்கபட்டது. சிலை அழிந்துவிடக் கூடாது என்பதற்காக தனது வாழ்வையே கொடுத்த ஏழை மனிதன் நினைவாக அந்த சிலைபொருட்காட்சியில் வைக்கப்பட்டுள்ளது.

கிறிஸ்துவுக்காய் துன்பங்கள், எதிர்ப்புகள் ஆகியவற்றை திருச்சபை, சந்திப்பதற்கு ஆயத்தமாக வேண்டும். சீடத்துவத்தின் உயிர்துடிப்பு, அர்த்தம், சாட்சி இத்தகைய வாழ்வில் வெளிப்படுகிறது. நல்ல தடயங்களை படைக்க துன்பத்தை ஏற்றுதான் ஆக வேண்டும். உலகமயமாதலை விரும்புதல், நுகர்வு கலாச்சாரத்திற்கு ஆதரவு தருதல், கவர்ச்சி வாழ்வை ஏற்றுக் கொள்ளுதல், தவறான வழியில் பணம் சேர்ப்பதை ஊக்குவித்தல், களியாட்டத்தை கைவிடாமலிருத்தல், இப்படிப்பட்ட தவறான வாழ்வில் உறைந்து கிடக்கும் சமூக மக்களுக்கு கிறிஸ்தவ சீடத்துவத்தின் பண்புகளாகிய இறை உறவின் சிறப்பு, திட்டமிட்டு செயல்படுதலின் அவசியம் துன்பங்களை ஏற்றுக்கொள்ளும் மனநிலை போன்ற சமூக மேம்பாட்டுக்குரிய கிறிஸ்தவ சீடத்துவத்தை வெளிபடுத்தும் உண்மை சீடர்களாக மாறுவோம்.

அருள்திரு. **முத்துசுவாமி கிறிஸ்துதாஸ்**

**01-07-2011** அருணோதய ஆராதனை

# கண்ணீரைக் காணும் கடவுள்

2அர. 20:1-11

*" ..................... உன் கண்ணீரைக் கண்டேன் ................." 2அர.20:5*

புதிய மாதத்தில் பல்வேறுபட்ட எதிர்பார்ப்புகளோடு அடியெடுதது வைத்துள்ள அனைவருக்கும் எசேக்கியா அரசரின் வாழ்வு வெளிப்படுத்தும் செய்தி கடவுள், கண்ணீரைக் காண்பவர் என்பதாகும். யூதாவை அரசாண்ட சிறந்த அரசர்களில் எசேக்கியாவும் ஒருவராவார். இவர் 25 வயதில் அரசராகி, கடவுளின் அருளால் 29 ஆண்டுகள் ஆட்சி செய்தார் (2அர. 20:21). இவர் மேடைகளை அகற்றி வெண்கலப் பாம்பை உடைத்து ஆலயத்தின் தொழுகைகள் சிறப்பாய் நடைபெற உதவி செய்தார் (2அர. 18:2-12; 18:22). இஸ்ரயேலின் ஒருங்கிணைந்த அரசு விழுந்த பின்பு சிதறியிருந்த அனைத்து மக்களையும் இணைத்து (இஸ்ரயேல், யூதா) சிறப்பு பஸ்கா விழாவை நடத்தினார் என 2குறிப்பேடு 30 ஆம் அத்தியாயத்தில் காண முடிகிறது. மேலும் இவர் பல போர்களில் வெற்றி புரிந்து நாட்டைச் சிறப்பாக ஆண்டு வந்தார். இந்நிலையில் திடீரென இவர் சுகவீனப்பட்டார். அவ்வேளை இவரைச் சந்திக்க ஏசாயா இறைவாக்கினர், 'நீர் மரித்துப் போவீர்' என்று இறைவாக்குரைத்தார் (2அர. 20:1). உடனே எசேக்கியா என்ன செய்தார் என்பதையும் கடவுள் அவருக்கு எவ்வண்ணம் பதிலுரைத்தார் என்பதையும் இவண் தியானித்து, நாம் அடியெடுத்து வைத்துள்ள புதிய மாதத்திற்கான கடவுளின் செய்தியைத் தியானிப்போமாக.

## 1. *உள்ளமுடைந்து அழுது மன்றாடினார் :* (2அர. 20:3)

கடுமையான வியாதியின் காரணமாக மரணத்திற்கான நாள் குறிக்கப்பட்டவுடன் எசேக்கியா ஆண்டவரிடம் அழுது மன்றாடினார். அழுகையின் குரல்களெல்லாம் ஆண்டவரின் காதுகளில் எதிரொலிக்கின்றன. ஏனென்றால், அவர் அழுகையைக் கேட்பவராவார். நமது ஆண்டவர் அழுகையைக் கேட்டு உதவி செய்பவர் என்பதற்கு ஏராளம் எடுத்துக்காட்டுகள் காணக்கிடக்கின்றன. ஒருமுறை ஆகார் தமது பிள்ளையோடு பாலைநிலத்தில் பயணம் செய்யும்போது தண்ணீரின்றி கண்ணீர் விட்டு அழுதார். அழுகையின் குரலை அண்டவர் கேட்டு

ஆகாருக்குப் புதுவழி காட்டினார்(தொநூ. 21:16-19). நெகேமியா என்ற இறையடியார் அழுது மன்றாடி அலங்கம் கட்டும் பணியினை அற்புதமாய் நிறைவேற்றினார் (நெகே. 1:14). திருப்பாடகர், ஆண்டவர் தம்முடைய அழுகையைக் கேட்டதாக அறைகூவல் விட்டுச் சொல்கிறார் (திபா. 6:8). இது மட்டுமல்ல, சீடர் குழுவின் தலைவரான பேதுரு இயேசுவை மறுதலித்தபின் உள்ளத்தில் உணர்வடைந்து அழுகின்ற குரல் ஆண்டவரால் அங்கீகரிக்கப்பட்டது (மத். 26:75). கடவுளிடம் அழுது மன்றாடுகின்ற மக்களுடைய மன்றாட்டை அவர் அங்கீகரிக்கிறார். மட்டுமன்றி அவர் அழுகையைக் கண்டு உதவி செய்ய ஓடி வருகிறவராயிருக்கிறார். இதை உணர்ந்த எசேக்கியாவும் இறைவனின் திருமுன்னிலையில் அழுகிறார். எனவே நமது கண்ணீரையும் அவர் திருமுன்னிலையில் ஊற்றி மன்றாடுவோமாக.

## 2. *உத்தமத்தை நினைந்திட மன்றாடினார் :* (2அர. 20:3)

எசேக்கியா அரசர் தாம் மரணத்திற்கு ஏதுவான தீமைகள் எதுவும் செய்யவில்லை என்றும் நன்மைகளே செய்துள்ளதையும் கடவுள் முன்னிலையில் நினைவு கூருகிறார். தமது வாழ்வின் உண்மை நிலையை இறைவனுடைய திருவடியில் வைக்கிறார். கடவுளுக்கு முன்பாக உண்மையாய், மன உத்தமாய் உழைத்ததைத் தெரிவிக்கிறார் (2அர. 20:3). ஏனெனில் உத்தமமாய் நடக்கிறவர்களைக் கடவுள் கனப்படுத்துகிறார் என்பதை காலேபின் வாழ்வின் மூலம் அறிந்து கொள்ள முடியும் (இச. 1:36). திருப்பாடகரும், உத்தமமாய் வாழ்வோருக்குக் கடவுள் நன்மையை வழங்குவார் (திபா. 84:11) என குறிப்பிடுகிறார். மட்டுமல்ல, தானியேல் என்னும் இறையடியார் தம்முடைய உண்மையும், உத்தமுமான வாழ்வினூடாய் சிங்கக் கெபியிலிருந்து தப்புவிக்கப்பட்டார் என சான்று பகருகிறார் (தானி. 6:22). நம்முடைய நற்செயல்கள் அனைத்தும் இறைவனுடைய திருமுன்னிலையில் நினைப்பூட்டுதலாகவே இருக்கின்றன என்பதை நூற்றுவர் தலைவர் கொர்நெலியுவினுடைய வாழ்வு தெளிவுபடுத்துகிறது (திரு. 10:4). மேலும் தொற்காள் என்ற பெண்மணியின் நற்செயல்கள் அவர் மரித்த பின்பும் உயிர் பெற காரணமாக அமைந்தது (திரு.ப. 9:36-41). எசேக்கியா தம்முடைய வாழ்வில் வெளிப்படுத்திய நற்செயல்களை ஆண்டவரின் திருமுன்னிலையில் நினைவு கூர மன்றாடுகிறார். நாமும் உண்மையும் உத்தமுமான வழியில் நடந்து நமது கடமைகளை திறம்பட செய்து நினைவு கூர மன்றாடுவோம்.

### 3. உன்னதராலே வாழ்வு பெற்றார் : (2அர. 20:5)

எசேக்கியாவின் அழுகையும், நினைவுகூர மன்றாடும் மன்றாட்டும் கடவுளுடைய திட்டத்தையே மாற்றி அமைத்துவிட்டது. (நினிவேயைக் குறித்த இறைவனுடைய திட்டத்தை மூன்று நாள் நோன்பிருந்து மன்றாடிய மன்றாட்டு மாற்றியமைத்தது (யோனா 3:10). முதலில் இறைவாக்குரைத்து விட்டு, வீட்டு முற்றத்தில் வந்தவுடனேயே அடுத்த இறைவாக்கை ஏசாயா பெற்றுக் கொண்டவார். அத்துணை அளவிற்கு வேகமாக நன்மையருளுகிறார் ஆண்டவர். (Iஅர. 20:4). எனவே ஏசாயா உனது கண்ணீரைக் கண்டேன், உனக்கு முழுமையான சுகமும் 15 ஆண்டுகள் கூடுதலாக வாழும் பேறும் கிடைக்கிறது என்ற இறைவாக்குடன் மீண்டும் எசேக்கியாவை சந்தித்தார் (2அர 20:5,6) (மருந்தின் தேவையையும் உணர்ந்து கொள்ள வேண்டும்) எளிய மருந்தான, அத்திப்பழ அடையின் மூலம் கடவுளின் ஆற்றல் புறப்பட்டு கொடிய மரணத்திலிருந்து எசேக்கியாவுக்கு விடுதலை தருகிறது. மரணத்தோடு போராடிக் கொண்டிருந்த எசேக்கியா இறை இல்லத்தில் நன்றியுணர்வுடன் செல்ல ஆயத்தப்படுகிறார்.

வாழ்க்கையில் விரக்தியோடும், கண்ணீரோடும் நாட்களை நகர்த்துகிறோமென்றால், இந்த புதிய மாதத்தில் கடவுள் நமது கண்ணீரைக் காண்கிறார் என்பதை உணர்ந்து கொள்வோம். காரணம் நமது கடவுள் காணும் கடவுள் (God of seeing). இந்த நம்பிக்கையோடு நமது கண்ணீரை அவர் திருமுன்னிலையில் ஊற்றி வெற்றியாய் முன்னேறிச் செல்வோமாக.

அருள்திரு. **A. பிறைட் சால்மோன்**

*ஜெபத்தில் துவங்காத எல்லா ஊழியத்தைப் பற்றியும் சரித்திரம் பாரா முகமாக அமைதியாகவே இருந்திருக்கிறது.*

யாரோ

**03-07-2011**

*கிறிஸ்தவ பொறுப்பாண்மை ஞாயிறு*

# கிறிஸ்தவப் பொறுப்பாண்மை : பற்றுறுதியோடும் முன் கருதலோடும் வாய்ப்பு, வளங்களைப் பயன்படுத்துதல்

## CHRISTIAN STEWARDSHIP: FAITHFUL AND PURPOSEFUL USE OF RESOURCES

மலா. 3:6-18 IIகொரி. 8:1-9

திபா. 147:1-11 மத். 25:14-30

"*இறைமக்களுக்குச் செய்யும் அறப்பணியில் பங்குபெறும் பேறு தங்களுக்கும் அளிக்கப்பட வேண்டும் என மிகவும் வருந்திக்கேட்டுக்கொண்டார்கள்.*" II *கொரி. 8:4*

**மன்றாட்டு :** ஆசிகள் வழங்கும் கடவுளே, உமது கரம் படைப்புகளில் சிறப்பையும், மானுடராம் எங்களில் அழகையும் அருளியிருப்பதைக் காண எம் கண்களைத் திறந்தருளும். உமது தொடுதலால் உலகு தூய்மையாக்கப்பட்டுள்ளது. நீர் வழங்கியிருக்கும் படைப்பின் அருட்கொடைகளையும், வளங்களையும் கிறிஸ்தவ பொறுப்பாண்மையோடும், முன்கருதலோடும் பயன்படுத்தி எங்கள் சகோதர, சகோதரிகளும் வாழ்வின் நிறைவையும் மகிழ்வையும் பெற எங்களை ஊடகங்களாக்க இயேசுகிறிஸ்து வழி வேண்டுதல் செய்கின்றோம்.

\- ஆமென்.

பழைய ஏற்பாட்டில் 'பொறுப்பாளர்' (Steward) என்பவர் வீட்டு விசாரணைக்காகரர் என புரிந்து கொள்ளப்படுவதை காணலாம். (தொ நூ. 43:19; 44:4; ஏசா. 22:15). புதிய ஏற்பாட்டில் 'பொறுப்பாளர்' என்பதற்கு இரு கிரேக்க வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. 'எபிட்ரோபோஸ்' (epitropos) எனும் சொல் 'பொறுப்புள்ள பணி ஏற்றவர்' 'பாதுகாவலர்'போன்ற பொருள்களை உள்ளடக்கியுள்ளது (மத். 20:8, கலா 4:2). 'ஆய்கோனோமாஸ்' என்ற பதத்தில் 'ஆய்கோஸ்' (oikos) முழு உலகையும் 'நெமோ' (nemo) பகிர்தலையும் குறிப்பிடுகிறது (IIகொரி. 9:7). இவ்வார்த்தைகளில் கிறிஸ்தவ பொறுப்பான்மையின் தன்மைகளை தெளிவாக புரிந்துகொள்ள இயலும். கடவுள் தம் படைப்புகளை கரிசனையுடன் கண்ணோக்கி ஆளுகை செய்கிறார். இப்பணியில் கரிசனையுள்ள பொறுப்பாளர்களாக பற்றுறுதியுடன் பகிர்ந்து வாழ நம்மை ஏற்படுத்தியுள்ளார். மாசிதோனியாவில் வாழ்ந்த இறைப்பற்றாளர்கள் சந்தித்த நெருக்கடிகளிலும், சோதனைகளிலும் மிகுந்த பொறுப்பாண்மையுடன் செயல்பட்டதை தூய பவுலார் கொரிந்து நகர இறைமக்களுக்கு மேற்கோள் காட்டுகிறார். இன்று, கடவுள் நமக்கு அருளும் வழிகாட்டுதலை திருவாக்குகள் சார்ந்து தியானிப்போம்.

## 1. பணிவுடன் படைப்பாளரை காண்போம் :

மலா. 3:8 மனிதர் கடவுளைக் கொள்ளையடிக்க முடியுமா? நீங்கள் என்னைக் கொள்ளையடிக்கிறீர்கள்!

இஸ்ரவேலர் கடவுளை கொள்ளையிடுவதாக இறைவாக்கினர் வாயிலாக கூறுகின்றார். அவர்கள் அதை ஏற்காமல் மறுத்தபோது, காணிக்கை படைத்து பணிவுடன் படைப்பாளரிடம் செல்லாததை தெளிவான விளக்கங்களுடன் புரியவைக்கிறார். மலா. 3:5 முறை தவறி வாழ்வோர், பணியாளருக்கு கூலி கொடாதோர், எளியோரை ஒடுக்குவோர், வழக்கைப் புரட்டுவோர், இறைவனுக்கு அஞ்சாதோர் அனைவரும் தண்டனைக்குத் தப்பவியலாது என எச்சரிக்கிறார். இத்தகைய துணிச்சலான செயல்களில் இஸ்ரயேலர் ஈடுபடக்காரணம் கடவுளின் மேன்மையை மறந்து, அவரது ஆளுகையை ஏற்காததேயாகும். கடவுள் படைப்பாளர் என்பதையும் அனைத்து நிறைவிற்கும், ஆசிகளுக்கும் அவரே காரணர் என்பதையும் மறந்துவிட்ட நிலையையே அவர்களது செயல் வெளிப்படுத்துகிறது. இங்கு, கொள்ளையிடுதல் என்பது நமக்குரியதல்லாததை எடுத்துக்கொள்வது மட்டுமல்ல, பிறருக்குரியதை நம்மிடமே வைத்துக்கொள்வதையும் குறிப்பிடுகிறது. திபா. 147:9 கால்நடைகளுக்கும் கரையும் காக்கைக் குஞ்சுகளுக்கும் அவர் இரை கொடுக்கின்றார். படைப்பாளராகிய கடவுள், நமது சிந்தனையில் எளிய படைப்புகளானவற்றையும் மிக கவனமாக நடத்தி உணவு வழங்கி பராமரிக்கும்போது, அவரது படைப்புகளாகிய நாம் ஏனைய படைப்புகளை பாதுகாக்க வேண்டிய பொறுப்பும், கடமையும் உண்டு. அதுவே, படைப்பின் கடவுளை பணிந்து அவரை மாட்சிபடுத்தும் செயலாகும். “எனது கரங்களில் எத்தனையோ பொருட்களை பத்திரப்படுத்தினேன், அனைத்தையும் இழந்தேன்; ஆனால் கடவுளின் கரங்களில் கொடுத்தவைகளோ இன்னும் பத்திரமாக உள்ளன” - இது மாபெரும் மறுமலர்ச்சியாளர் மார்ட்டின் லுத்தர் அவர்களது அனுபவ வாக்கு. நம்மிடம் ஆண்டவர் வழங்கியுள்ள வளங்களில் அவருக்கு படைத்து, ஏனைய படைப்புகளிடம் கரிசனை கொண்டு வாழ்வதே கிறிஸ்தவ பொறுப்பாண்மையின் சிறந்த பிரதிபலிப்பு.

## 2. பற்றுறுதியுடன் படைப்புகளை காப்போம் :

மலா. 3:11 “பயிரைத் தின்று அழிப்பனவற்றை உங்களை முன்னிட்டுக் கண்டிப்பேன். அவை உங்கள் நிலத்தின் விளைச்சலைப் பாழக்கமாட்டா; உங்கள் தோட்டத்தில் உள்ள திராட்சைக்கொடிகள் கனி கொடுக்கத் தவறமாட்டா”, என்கிறார் படைகளின் ஆண்டவர், இஸ்ரவேலர் கடவுளுக்கான படையல்களை தங்களுக்கென கொள்ளையடித்து பதுக்கியதால் நாடு முழுவதும் சாபத்தால் நிறைந்தது; களஞ்சியங்கள் காலியாகவே இருந்தன. கடுமையான முயற்சியின் பலனாகிய விளைச்சலை பெறவியலாமல் பயிர்களை பூச்சிகள் பாழாக்கின. அந்நிலையினின்று ஆசிக்கு திரும்பும் வழியாய் இறை இல்லத்தின்

களஞ்சியத்தை நிரப்புங்கள்; அப்போது பயிர்கள் பாழ்படுவதில்லை, நிறைவு ஏற்படும் என ஆண்டவர் கற்றுக்கொடுக்கின்றார். உலகம் கடவுளின் இல்லம், நாம் அதிலோர் அங்கம். தொநூ. 2:15 ஏதேன் தோட்டத்தைப் பண்படுத்தவும் பாதுகாக்கவும் ஆண்டவராகிய கடவுள் மனிதனை அங்கு கொண்டுவந்து குடியிருக்கச் செய்தார். கடவுள் மானுடரை பொறுப்பாண்மையுடன் படைப்புகளை கண்காணிக்க ஏற்படுத்தினார். அதில் சுயநலமன்று, பொதுநலம் விளங்கவேண்டும். பண்படுத்துதல் என்பது பாழ்பட்டதை பயனுள்ளதாக்குதலாகும். நாம் எதை இப்போது செய்து கொண்டிருக்கிறோம்? கடவுள், படைப்புகள் அனைத்துக்கும் மணிமுடியாய் அவரது சாயலில் நம்மை படைத்ததின் நோக்கம், அவரது பண்புகளுடன் படைப்பினை பராமரிக்க வேண்டுமென்பதே. நமது, தற்போதைய நலனுக்காய் படைப்புகளை பாழ்படுத்தும் நம் செயல்கள் இளையதலைமுறைக்கு என்ன விட்டுவைக்கப் போகிறீர்கள் என்ற பெரிய கேள்வியை நம்முன் நிறுத்துகிறது. மத்.25:14-30 ஆண்டவரின் அடியவர்களான நம்மிடம் கண்காணிக்கும் பணியினை ஒப்படைத்திருக்கிறார். கரிசனையுடன் கண்காணித்து படைப்புகளுக்கு பலம் சேர்க்கும் பொறுப்பு நம்முடையது. கணக்கு சமர்ப்பிக்க வேண்டிய நேரம் வருமென்பதையும் தெளிவுபடுத்தியிருக்கிறார். மனமடிவுடன் அல்ல, மகிழ்வுடனும் மனநிறைவுடனும் அவர்முன் நிற்க பற்றுறுதியுடன் படைப்புகளை பராமரித்து வளமாக்குவோம்.

### 3. பண்புடன் வளங்களை பகிர்வோம் :

IIகொரி 8:4 தூய பவுலாரிடம் மாசிதோனிய இறைமக்கள் விடுத்த வேண்டுகோள் பிறரது வாழ்வின் கடினங்களிலிருந்து தங்களை விலக்கிக்கொள்ள விரும்பாமல் அவர்களுடன் தங்களை இணைத்துக்கொள்ள துடிக்கும் விருப்பத்தை வெளிப்படுத்துகிறது. ‘எனக்குரியதெல்லாம் எனக்கே’ எனும் நிலை இன்றி பொதுமை சிந்தை அவர்களில் பளிச்சிடுகிறது. பிலி. 2:4-5 நீங்கள் யாவரும் உங்களைச் சார்ந்தவற்றில் அல்ல, பிறரைச் சார்ந்தவற்றிலேயே அக்கறை கொள்ள வேண்டும். கிறிஸ்து இயேசு கொண்டிருந்த மனநிலையே உங்களிலும் இருக்கட்டும். உண்மையான உறவு பகிர்தலுக்கு அடிப்படையான தேவை. இயேசுநாதர் நம்மோடு நல்லுறவை ஏற்படுத்தினார். அதற்காக அவர் தாழ்மை ஏற்றார்; மன்னிப்பை வழங்கினார். அவரது அதே மனநிலையையே நம்மில் எதிர்பார்க்கிறார். படைப்புகள் அனைத்தையும் நம்மைப்போல் கருதி, உலகமக்கள் அனைவரையும் உடன்பிறப்புகளாய் ஏற்கும் மனநிலையே அது. இஸ்ரயேலர் பூரிம் கொண்டாட்டத்தின்போது தங்களைவிட எளியோரை தேடிக்கண்டுபிடித்து அவர்களுக்கு உதவுவது மரபு. தேடுவதற்கு தேவையின்றி நம் கண்முன்னே தெரியும் எளியோரை கண்டுகொள்ளாமல் கண்மூடிக்கொண்டோமா? திப. 4:32 தொடக்ககால இறைமக்கள் ஒன்றிணைந்து வாழ்ந்தனர்; உடமைகளை பொதுவாய்

பகிர்ந்தனர். பற்றுறுதியும், முன் கருதலும் அந்த பகிர்வில் வெளிப்பட்டது. அந்த பற்றுறுதி இறையவரை வாழ்வில் வெளிப்படுத்தும் பற்றுறுதி, எளியோரை எண்ணும் முன் கருதல். இன்று நம்மில் வெளிப்படும் பற்றுறுதி செல்வத்தின் மேலும், செல்வாக்கின் மேலும், நமது முன்கருதல் நம்மையும், நம் வழித்தோன்றல்களையும் சார்ந்ததாய் அமைகிறது. பகிர்தலில் மக்களின் நல்லெண்ணத்தை பெற்று மலைபோல் உயர்ந்த சான்று பகர்ந்த இறைமக்கள் கூட்டத்தில் பதுக்குவதற்கு முந்திக்கொண்ட அனனியா, சப்பிராவும் பதுங்கியிருந்தனர். பகிர்தலால் குறைவிலிருப்போர் பெறும் மகிழ்ச்சி, பதுக்குதலால் கிடைக்கும் மகிழ்ச்சியை விட பலமடங்கு வலுவும், நிறைவுமுள்ளது. பகிர்தலுக்கு வளம் முக்கியமன்று, மனமே இன்றியமையாதது. மானுடமைந்தருக்கு தலைசாய்க்க இடமில்லை; ஆனால் அவரது மனமெல்லாம் கொடையெண்ணத்தால் நிறைந்திருந்தது. அவரது பகிர்வு தமதென்றும், எதுவுமில்லாது தம்மையே முழுமையாய் நமக்கு வழங்கி வாழ்வு தந்த கொடை. அவரது பகிர்தலில் நாம் அனுபவித்ததும், அனுபவிப்பதும் பணிவிடை, பரிவு, பாசம், மன்னிப்பு, விடுதலை, நிறைவாழ்வு. இவற்றை பெற்றுக்கொண்டுள்ள நம்மை பகிர அழைக்கின்றார். நம்மில் வற்றிப்போன இப்பண்புகள் மீண்டும் வளமை பெற வல்லவர் எதிர்நோக்குகிறார்.

உலகையே உலுக்கிய உயிர்காக்கும் மருந்துகளில் போலி, காலாவதியானவற்றை விற்று சம்பாதித்தல், உணவு கலப்படம் போன்றவைகள் சுயநலத்தின் உச்சமன்றோ! சேமிக்கும் கட்டமைப்புகள் குறைபாட்டால் நம் நாட்டில் வீணாகும் பெருமளவு தானியங்கள் பொறுப்பாண்மையுடன் பாதுகாக்கப்பட்டால் பட்டினியால் வாடும் பல்லாயிரக்கணக்கானோர் பயன்பெறலாமே. நம் இல்லங்களில் உணவுகள் வீணாவதை தவிர்த்து வறியோர்க்கு பகிரலாமே, செயல்வடிவாக்குவோம்.

'மன்னர் எவ்வழியோ மக்கள் அவ்வழி' என்பது பழமொழி கடவுளின் ஆளுகையில் பொறுப்பாண்மையுடன் வாழ்வதே, அவரது மக்களாக நம்மை அடையாளப்படுத்தும் வழி.

'அர்ப்பணித்தேன் என்னை முற்றிலுமாய்
அற்புதநாதா உம் கரத்தில்
அனைத்தும் உமக்கே சொந்தம் என்று
அன்பரே என்னையே தத்தம் செய்தேன்'

உதட்டிலிருந்து வெளிப்படும் வார்த்தை மாயங்களா? கிறிஸ்தவ பொறுப்பாண்மை நம்மில் வெளிப்பட வளம் வழங்குபவரை பணிவுடன் தொழுவோம், பற்றுறுதியுடன் படைப்பினை காப்போம், பண்புடன் வளங்களை பகிர்வோம்.

**அருள்திரு. R. ஹென்ஸ்லின் நேசராஜ்**

**10-07-2011** **இறையியல் கல்வி ஞாயிறு**

# இறைமக்களின் இறையியல் கல்வி

**THEOLOGICAL EDUCATION OF THE PEOPLE OF GOD**

எரே. 1:4-10 எபே. 4:7-16

திபா. 119:89-154 மத். 7:24-29

***“இதோ என் வார்த்தைகளை உன் வாயிலே வைக்கிறேன்.” எரே. 1 : 9***

**மன்றாட்டு :** ஆற்றல் நிறைந்த கடவுளே, அருளாசி பெற்ற உம் திருமைந்தர் பன்னிரு திருத்தொண்டர்களை அழைத்து, இறையாளுகையின் இரகசியங்களை கற்பித்தார். உமது திருச்சபையின் தூய பணிக்கு ஆயத்தப்படுவோரும் உம்மிடம் கற்கவும், வழிகாட்டுதல் பெறவும் அருள்தாரும். அர்ப்பணமுள்ள தூய வாழ்வுடன், உமது திருவார்த்தைகளையும், திருவருட்சாதனங்களையும் இறைமக்களுக்கு வழங்கி அன்பும் தூய்மையுமுள்ள வாழ்வுக்கு வழிகாட்ட வழியாகும் ஆண்டவர் இயேசுகிறிஸ்து வழி வேண்டுகிறோம். - ஆமென்.

இறைமக்கள் அனைவரும் இறையவரால் அழைக்கப்பட்ட இறைப்பணியாளர்களே. இறைப்பணியை ஆற்றலுடன் தொடர இறையியல் கல்வி வழிகாட்டியாகவே அமைந்துள்ளது. மேலும் இறைப்பணிக்கு இறைமக்களை பக்குவப்படுத்துவது இறையியல் கல்வியாகும். கல்வி என்ற வார்த்தை ‘கற்றுக்கொள்தல்’ அல்லது ‘தோண்டுதல்’ என்ற வார்த்தையிலிருந்து வந்ததாகும். இறையியல் கல்வி என்பது இறைவனைக் குறித்து முறையாக, ஆழமாக கற்றுகொள்வதாகும். பேச அறியேன் என்ற எரேமியாவுக்கு அவரது வாயில் தமது வார்த்தையை வைத்து அவரை தெளிவடைய செய்தார் கடவுள். இறைப் பணிக்கு இறையியல் கல்வி தரும் செய்தியை சிந்திப்போம்.

### *1. இயலாமையை அகற்றுகிறது :* (எரே. 1 : 16)

ஒரு கிராமத்திலிருந்து ஒரு வாலிபன் வேலைக்காக ஒரு பெரிய தொழிற்சாலைக்கு சென்றான். அவன் பணியமர்த்தப்பட்ட முதல் நாளில் அங்கு காணப்பட்ட பெரிய இயந்திரங்களை பார்த்து அச்சமுற்று என்னால் இதனை இயக்க இயலாது என்று சொல்லி வீடுதிரும்ப தீர்மானித்தான். உடனே அங்கு காணப்பட்ட அதிகாரிகள் அவனது சோகமான முகத்தை பார்த்து விசாரித்து அவனிடம் தம்பி இந்த இயந்திரங்களை இப்போது நீ இயக்க வேண்டாம். உனக்கு பயிற்சி தருவோம் என அமைதிப்படுத்தி அவனுக்கு பயிற்சி தந்தார்கள். பின் அவன் புது நம்பிக்கை அடைந்தான்; பயம் மாறியது. அந்த தொழிற்சாலையில் ஒரு சிறந்த பணியாளனாய் மாறினான்.

இறைப்பணியை செய்ய என்னால் இயலாது என்று எண்ணும் ஒருவரை இறையியல் கல்வி மாற்றம்பெற செய்கிறது. ஒரு மனிதருக்குள் மறைந்து கிடக்கும் திறன்களை உருவாக்கி வெளிக் கொணர செய்கிறது. இன்றைய சமூகத்தில் எதிர்கொள்ள வேண்டிய சவால்களை சந்திக்க இறைமக்களை உருவாக்கி வளப்படுத்துவது இறையியல் கல்வி ஆகும். மேலும் வாழ்வில் நம்பிக்கை இழந்து போனோர், வருங்காலத்தை குறித்த கேள்வியுடன் வாழுவோரை மாற்றி நம்பிக்கை கொள்ள செய்து எல்லாவற்றையும் செய்ய இயலும் என்ற நிலைக்கு மாற்றுகிறது. மோசே இறைப்பணி செய்ய அழைக்கப்பட்டபோது "நான் எம்மாத்திரம் என்றார்" (யாத். 3:11). மோசே தனது இயலாமையை வெளிப்படுத்தினார். ஆனால் அவர் கடவுளின் வார்த்தைகளால் ஆற்றல்படுத்தப்பட்டபோது துணிவுடன் இறைப்பணி செய்தார். இறையியல் கல்வி இறைமக்களின் வாழ்வில் வெளிச்சம் தருவதுடன், அதிகாரத்துடன் போதிக்க தூண்டியெழுப்புகிறது (மத். 7 : 28).

## *2. இறை அழைப்பை நினைவூட்டுகிறது :* (எரே. 1 : 15)

எரேமியாவுக்கு கடவுளின் அழைப்பு தாயின் கருவில் இருக்கும்போதே உண்டாகிறது. ஆனால் அதை கடவுள் அவருக்கு தெளிவுபடுத்தினார். அந்த அழைப்புகான நோக்கமும் அதன் உடனடியான தேவையினையும் புரிந்து கொள்ள இயலாத எரேமியாவுக்கு நினைவூட்டப்படுகிறது.

இறைப்பணி ஆரோனை போல் அழைக்கப்பட்டாலன்றி தானாய் ஏற்படுவதில்லை என திருமறை கற்றுத் தருகிறது. இறைமக்கள் இறைப்பணியில் பல நிலைகளில் பணி செய்ய அழைக்கப்டுகின்றனர். எபே. 4 : 11-ல் சிலரை திருத்தூதுவராகவும். சிலரை இறைவாக்கினராகவும் போதகராகவும் ஏற்படுத்தினார். எனவே பல தரப்பட்ட நிலைகளில் இறைப்பணி செய்ய கடவுளின் அழைப்பை இறைமக்கள் பெற்றுள்ளனர்.

இறையியல் கல்வி கடவுளின் அழைப்பு அவரது எதிர்ப்பார்ப்பு ஆகியவைகளை உணர்ந்து கொள்ள ஊக்குவிக்கிறது. மேலும், தூய்மையான வாழ்வு நேர்மையான நடத்தை வழியாகவே கடவுளின் அழைப்புக்கு கீழ்ப்படிய முடியும் என்பதையும் கற்றுத்தருகிறது.

## *3. இயங்க தூண்டுகிறது :* எரே. 1 : 10

கடவுளின் அழைப்பை பெற்ற எரேமியா தயக்கம் காட்டினார். தனது இயலாமையை உணர்ந்தார். கடவுளால் ஆற்றல்படுத்தப்பட்டவர் கடவுளால் இயக்கப்படுகிறார். அவர் செய்ய வேண்டிய கனமான பணியை குறித்தும் அதனது அவரசத்தை குறித்தும் உணர்த்தப்பட்டபோது மிகவும் வேகமாக இயங்கினார்.

இறையியல் கல்வி அச்சத்தை, தடுமாற்றத்தை அகற்றி புது நம்பிக்கையுடன் இயங்க தூண்டுகிறது. சமூகத்தில் காணப்படும் தீமைகளை எதிர்த்து நிற்க ஆற்றலை தருகிறது. தொநூ. 39 : 9-ல் “கடவுளுக்கு விரோதமாக பாவம் செய்வதெப்படி என்று யோசேப்பு கேள்வி எழுப்பி தீய நிலையை தாண்டுகிறார். பாவம் என்னும் தீமைக்கு உடன்படாமல் புதிய இயக்கத்திற்கு இணங்குகிறார். எபே. 4 : 15-ல் அன்பின் அடிப்படையில் உண்மை பேசி.......நாம் வளர வேண்டும் என்று பவுலார் குறிப்பிடுகிறார். இறையியல் கல்வி நம்மை இறை அன்பில் வளரவும், தீமையை விட்டு முன்னேறுவதற்கும் வழி காட்டுகிறது.

இறையியல் கல்வியால் தெளிவுபெற்ற, அருட்தொண்டர்கள் தங்கள் குழந்தைகளை சாவுக்கு கொடுத்தபோதிலும், துணைவியரை இழந்த போதிலும், தங்களுக்கு முன்பாக பல சவால்கள் நின்ற போதிலும் தயங்காமல் இறை அழைப்புக்கு தங்களை விட்டுக்கொடுத்து, இயலாமையை தாண்டி இறைப்பணி தொடர ஒப்படைத்தனர். மட்டுமல்ல இரத்த சாட்சிகளாகவும் தங்களை கொடுத்தார்கள்.

இன்றைய சூழலில் இறைமக்கள் இயலாமையை விட்டு, இறை அழைப்பை நினைந்து இறைபணி புரிய அர்ப்பணிப்பதில்தான் இறையியல் கல்வியின் தேவை பறைசாற்றப்படுகிறது. ஆகவே இந்த நல் எதிர் நோக்குடன் முன்னேறி செல்வோம்.

அருள்திரு. **Y. லாறன்ஸ்**

**17-07-2011**

# பகிர்ந்து இணைந்து வாழும் சமூகம்

## COMMUNITY OF SHARING AND GROWING TOGETHER

விப. 36:1-7 திப. 4:32-37

திபா. 136:1-9; 23-26 மாற். 8:1-10

*"....அது அவரவர் தேவைக்குத்தக்கவாறு பகிர்ந்து, கொடுக்கப்படும்." திபா. 4 : 35*

**மன்றாட்டு :** அனைத்து தலைமுறையினருக்கும் ஆண்டவரே, இறைமக்கள் கூட்டமாக நீர் எங்களை அழைத்து ஏற்படுத்தியிருக்கிறீர். தொடர்ந்து நாங்கள் பகிர்தலுடன் இணைந்து வாழும் மக்களாக செயல்பட உம் அருளால் நிறைப்பீராக. நாங்கள் உமது தன்மையினை ஏற்று அனைவரையும் ஆதரிப்பவர்களாயும், பிரிவினையின் சுவர்களை தகர்த்து, அனைவரையும் ஆதரிப்பவர்களாயும், பிரிவினையின் சுவர்களை தகர்ந்து, சமாதானத்தையும், நீதியையும் பிரகடனம் செய்து உறவினை வளர்க்கவும் உந்துதல் அருள இறைமைந்தர் இயேசுவழி கேட்கிறோம். - ஆமென்.

பகிர்தலும், இணைந்து வாழ்தலும், கிறிஸ்தவ சமூகத்தின் இரண்டு கண்களாகவும், நாணயத்தின் இருபக்கங்கள் போலவும் அமைந்திருக்கிறது. பகிர்ந்து, இணைந்து வாழும் சமூகத்தில் குறைகள் இராது. கறைகள் இராது. பிரிவினைகளும், பிரச்சனைகளும் இராது.

"கூடி வாழ்ந்தால் கோடி நன்மை" - எனும் முதுமொழிக்கு ஏற்ப, பகிர்ந்து இணைந்து வாழ்தலின் பயன்பாடுகள் - பற்றி ஆய்ந்தறிதல் நல்லது.

### 1. உணவில் பகிர்வு :

"அவர்கள் நட்புறவிலும், அப்பம் பிடுவதிலும்,

இறைவேண்டலிலும், உறுதியாய் நிலைத்திருந்தார்கள்". - திப. 2 : 42

கூப்பிடும் காக்கைக்குஞ்சுகளுக்கும் உணவூட்டி பிழைப்பூட்டும் பரமன், "காக்கைகளைக் கவனித்துப்பாருங்கள்" - என்கிறார் (லூக். 12 : 24). காரணம் அவைகள் கரைந்துண்ணும். பகிர்ந்துண்ணும். கவலையின்றிவாழும்.

கேரீத் ஓடைக்கரையில் எலியாவுக்குக் காகங்கள், தங்களுக்கு கிடைத்த உணவைப் பகிர்ந்து கொடுத்து உண்கின்றன. எலியா அப்பமும், இறைச்சியும் புசிக்கக் காகங்கள் கொண்டுவந்து கொடுக்கின்றன. (Iஅர. 17 : 6)

படைப்பின் மகுடமாம் மனிதர் பறவைகளாகிய காகங்களைக் கண்டு பிறருக்கு உணவைப் பகிர்ந்து கொடுக்கும் பண்பு பெருக்கிட வேண்டும். இன்றைய உலகில் பலகோடி மக்கள் உண்ண வேண்டிய

உணவுப்பொருட்களை ஒருசிலர், தங்களுக்கென்று ஒதுக்கியும், பதுக்கியும் வைத்து வாழ்தல் வருந்தத்தற்குரிய நிலையாகும்.

தொடக்கக்காலத்திருச்சபையில் உணவைப் பகிர்ந்து உண்டனர், ஒருவருக்கொருவர் இணைந்து வாழ்ந்தனர். அவர்கள் வாழ்வில் வறுமை இருந்ததில்லை எனத் தொடக்கக்கால சரித்திரம் சான்று பகர்ந்திடக் கண்டிடலாம் (திப. 2 : 42).

அன்றொரு ஓய்வுநாளில் வயல்வெளிகதிர்களைக் கொய்து உண்ட சீடர்களைக்கண்ட பரிசேயர் இயேசுவிடம் வந்து இச்செயலை இடித்துரைக்கின்றனர். இயேசுவின் பதில் “தாவீதரசரின் காலத்தில் தாமும். தம்முடன் இருந்தவர்களும் உணவின்றி தவித்தபோது, தாவீது இறை இல்லத்திற்குள் சென்று, குருக்களைத்தவிர வேறு எவரும் உண்ணக்கூடாத அர்ப்பண அப்பங்களைத் தாமும் உண்டு தன்னுடன் இருந்தவர்களுக்கும் பகிர்ந்து கொடுத்த வரலாற்று உண்மை நிகழ்வினைச் சுட்டுகிறார் (மாற். 2 : 23-26).

ஆலயத்திருந்த உணவை குருக்கள், அரசர், இறைமக்கள் எல்லாரும் இணைந்து, பகிர்ந்து உண்டு வாழ்ந்ததைக் குறிப்பிட்டு காட்டுகிறார் இயேசு.

பஸ்கா பண்டிகை சமீபித்திருந்த காலம் அது.

பசும்புல்மேல் பசித்திருந்த, பெருந்திரள் மக்களைப் பார்த்து, இவர்களுக்காய் பரிதவிக்கிறேன். இவர்களைப் பசியுடன் அனுப்பிவிட்டால், சோர்ந்திடுவார்களே எனப் பிலிப்பிடம் கூற, பிலிப்பு மறுமொழியாக இருநூறு தெனாரியத்திற்கு அப்பம் வாங்கினாலும் போதாதே” - என்கிறார்.

எனினும் சிறுவனிடம் இருந்த ஐந்து அப்பங்களும் இரண்டு சிறுமீன்களும் கொண்டு ஆசீர்வதித்து அங்கிருந்த ஐயாயிரத்துக்கும் மேலானோருக்கு பகிர்ந்தளித்திடச் செய்தார் இயேசு (யோவா. 6 : 11).

இதுவண்ணம் பாலை நிலத்தில் பசித்திருந்த இஸ்ராயேலருக்கு மன்னாவைப் பகிர்ந்தளிக்கிறார் கடவுள், இணைந்து வாழ்ந்து பயணித்த இஸ்ரவேலரிடம் பகிர்வு நிலைப் பண்பாட்டைக் கண்டிடலாம்.

இக்காலச்சூழலில்..வயல்காட்டுப்பெரும் எலிகள் வரப்புக்களில்... பலரும் புசிக்கவேண்டிய கதிர் மணிகளைக் கல்விக்கொண்டு குவிக்கின்றன. வர்த்தகத்தின் உணவை சுரண்டியும், சுருட்டியும் வாழ்கின்றவண்ணமாக... வலியோர்களின் வன்முறைகளால், வறியோர்கள்... பசிப்பிணியில் சிக்கி வாழ்வழிந்து தவிக்கின்ற காட்சிகள் அவலம் இத்தகையோரின் பசிப்பிணி போக்கிட பசுமைப்புரட்சிகள் வேண்டும்.

இறைவனின் குரல்யாதெனில் ‘‘பசியாயிருந்தேன்.... உணவு கொடுத்தீர்கள்’’ (மத். 25:35). மிகவும் வறுமைக் கோட்டிற்குள் வாழ்வோருக்குக் கொடுக்கும் உணவு கடவுளுக்குக் கொடுக்கும் உணவாகக் கருதப்படுகிறது. பசிப்போரைக்கண்டு வாசலைப்பூட்டுவதும், “நாய்கள் ஜாக்கிரதை” - எனப்பலகை மாட்டுவதும் தவிர்க்கப்படல் வேண்டும்.

பஸ்காவின் விருந்தை மேல் வீட்டறையில் பகிர்ந்தளித்த இயேசுவின் பண்பை வெறுத்து. இதுவரை இணைந்து வாழ்ந்தவன் இப்போது விருந்தை விட்டு வெளியேறுகிறான். உணவுப் பகிர்வை வெறுத்தவன். கிறிஸ்தவ வாழ்வினின்று வேரறுக்கப்படுகிறான். “இதைப் பெற்று உங்களுக்குள்ளே பகிர்ந்து கொள்ளுங்கள்” என்கிறார் இயேசு (லூக். 22:14).

சோமாலியா நாட்டுப் பஞ்சம் போக்க வீசப்பட்ட பொட்டலங்கள் உணவைப்பொறுக்கிக்கொள்ளும் மோகத்தில், வேகத்தில்.. இருநபர்கள் முட்டிமோதினர். ஒருவருக்கொருவர் எட்டி உதைத்தனர். ஒருவர் பார்க்க தந்தையும். மகனும் என்றறிந்தனர். இணைந்து பகிர்ந்து கொடுத்து சண்டையின்றி உண்பதும். வாழ்வதும்தான் சிறப்பு!

## 2. உலக பொருளாதாரத்தில் பகிர்வு :

“நில புலன்களை அல்லது வீடுகளை உடையோர் விற்று. அந்தத் தொகையைக் கொண்டுவந்து. திருத்தூதுவருடைய காலடியில்வைப்பர், அது அவரவர் தேவைக்குத் தக்கவாறு பகிர்ந்து கொடுக்கப்படும்’’ (திப. 4 : 34,35).

மனித வாழ்வுக்கு மிகவும் முக்கியமான ஒன்றாக பொருளாதாரம் காணப்படும் இக்கால சூழலில், தனிமனிதன் கூட்டுக் குடும்பம், திருச்சபை அரசு சார்ந்த நிலைகளில் பொருளாதாரம் மிகவும் சிறப்பிடம் பெறுகிறது.

தொடக்க காலத்திருச்சபையில் இறை மக்கள் தங்கள் நிலபுலன்களை விற்றுகிட்டிய பணத்தைப்பெற்று. இறையடியார்களிடம் ஒப்படைத்தனர். தவறிய அனனியா, சப்பீராள் போன்றோர் தண்டிக்கப்பட்டனர். அனைத்தும். அனைவரும் பொதுவாக ஒருங்கிணைந்துப் பகிர்ந்து வாழ்ந்தனர்.

இயேசுவிடம் வந்த செல்வந்தர் ஒருவர், நிலைவாழ்வினைப் பெற்றிட - என்ன செய்ய வேண்டும் என எழுப்பிய வினாவுக்கு விடையாக.. ‘‘உமக்குள்ள யாவற்றையும் விற்று ஏழைகளுக்குக் கொடும். அப்போது விண்ணகத்தில் நீர் செல்வராய் இருப்பீர்’’ என்றார் (லூக். 18 : 22). இயேசுவின் இக்கூற்றுக்கு வருந்திய செல்வந்தரின் நிலை, கண்ட இயேசு.. “செல்வர் இறையாட்சிக்கு உட்படுவது எவ்வளவு கடினம்! செல்வந்தர்

ஒருவர் இறையாட்சிக்கு உட்படுவதைவிட ஊசியின் காதில் ஒட்டகம் நுழைவது எளிது" (லூக். 18 : 25) என்றுரைக்கிறார்.

இந்தியக்கணக்கெடுப்பில் பல்லாயிரக் கணக்கானோர் குடிசைகள் கூட இல்லாமல், காணி நிலங்கள் கூட இழந்தும் தவிக்கின்றனர். ஆனால் பிறிதொரு பல்லாயிரங்கள் ஆயிரக்கணக்கில் நிலபுலன்களை வைத்தும் அதை பிறருக்கு மறைத்தும் வாழ்வது வருந்தற்குரியது.

தொடக்ககாலத்திருச்சபையில், இறைமக்கள் தங்கள் நிலபுலன்களை விற்றுக் கிடைத்த பணத்தைப்பெற்று இறையடியவர்களிடம் ஒப்படைத்தபோது இறையரசு மலர்ந்தது. இறை மக்கள் முகமலர்ச்சியுடன் வாழ்ந்த வரலாறு சிறப்பிற்குரியது.

காசில்லா கரங்களுடன், கப்பர்நகூமிற்கு சென்ற இயேசு தூண்டிலிட்டுக்கிடைக்கும் கடல்மீனின் வாயினின்றிக் கிடைக்கும் ஒரு வெள்ளிப்பணத்தை எடுத்து "எனக்காகவும் உனக்காகவும், வரி தண்டுவோரிடம் கொடு" - என பேதுருவிடம் கூறிடுகின்றார். தன்கடன் போல் பிறன்கடன் தீர்க்கும் ஆண்டவரின் பொருளாதாரப் பகிர்வின் செயல் சிறப்பிற்குரியது. (மத். 17 : 27). தொடக்ககாலத்திருச்சபையில். கிளாதியு பேரரசர் காலத்தில் கொடிய பஞ்சம் யூதேயாவில் வந்தது. சீடர்கள் ஒவ்வொருவரும், தங்களால் இயன்ற பொருளுதவியை. பர்ணபா, சவுல் ஆகியோர் மூலமாய் அனுப்பிவைத்தனர் (திப. 11 : 27-30).

தாலந்து உவமையிலும், ஐந்து, இரண்டு, ஒன்று எனத் தகுதிக்கேற்பப் பகிர்ந்து கொடுக்கிறார் மனிதர் ஒருவர்!. இத்தகையப் பகிர்வைப் புரிந்து கொண்டு (மத். 25 : 15). இன்றைய உலகில்... வாழ்ந்திடும் இறை மக்கள் தங்களுக்கும் பொருளாதாரங்களை.. பகிர்ந்து பிறருடன் அவர் தம் வாழ்வுடன் இணைந்து செயல்படல் தன்று!

நலிந்தோருக்கென பொருளாதார உதவி கேட்டுச்சென்ற அன்னைத் தெரசாவின் வலக்கையில் காறி உமிழ்ந்து கொடுத்தார் செல்வந்தர் ஒருவர். அதையேற்று அடுத்தகரத்தை நீட்டினார் அன்னை! முதலில் கொடுத்த உமிழ்நீர் தனக்கென்றும். இனிகொடுப்பது நலிந்தோர் நலனுக்கு எனக் கூறி நின்றார் அன்னை!

இன்றைய உலகில் நாமும் நமது பொருளாதாரத்தை பிறர் வாழ்வுக்கெனப் பகிர்ந்து கொடுப்பது தனிச்சிறப்பாகும்.

### 3. உலக பொறுப்புக்களில் பகிர்வு :

"நாங்கள் கடவுளது வார்த்தையை கற்பிப்பதை விட்டுவிட்டுப் பந்தியில் பரிமாறும் பணியில் ஈடுபடுவது முறையல்ல.. நற்சான்று

பெற்றோரும். தூய ஆவி அருளும் வல்லமையும், ஞானமும் நிறைந்தவர்களுமான எழுவரைக் கவனமாய் தெரிந்தெடுங்கள். நாங்களோ...இறை வேண்டலிலும், இறை வார்த்தைப் பணியிலும் உறுதியாய் தரித்திருப்போம்". (திப. 6:2-4).

பொறுப்புக்கள் என்பது ஒவ்வொருவருக்கும் பகிர்ந்து கொடுக்கப்பட்டால்தான் திருச்சபை வளரும், திருப்பெயர் மலரும். இக்காலத்திருச்சபைகளில் பெரும்பாலும். பலப்பொறுப்புக்களை ஒருவர் அல்லது ஒரு சாரார் மட்டும் தக்கவைத்திருக்கின்றனர். விட்டுக் கொடுக்கும் மனம் அற்றோராய்... 'உடும்புப்பிடி' - எனக் கொண்டு எத்தகைப் பொறுப்புக்களும் தங்களால் இயலாதது இல்லை என தங்கள் கைவசம் வைத்திருக்கின்றனர். சில வேளைகள் தங்கள் குடும்பப் பாரம்பரியங்களுக்கு உட்பட்டு ஆட்சிமுறைகள் தொடர்கின்றன! இத்தகைய இடங்களில் சாட்சிமுறையும், இறைக்காட்சி முறையும் அற்றுப்போகின்றன!

திறமைகள் கொண்டவர்களுக்கு... அவர்தம் திறமைகளுக்கு ஏற்ப வாய்ப்புக்கள் பகிர்ந்தளித்திடல் நன்று. அப்படியெனில் பிரிவினைகள், பிரச்சனைகள் இருக்காது. ஒற்றுமையும், ஒருமனமும் கொண்ட இணைந்து வாழும் நிலை தொடரும்.

விடுதலைப்பயணத்தின்போதும் மக்களிடம் காணப்பட்ட சிக்கல்களைத்தீர்த்துவைத்திட மக்கள் அனைவரிலும். திறமையும். இறையச்சமும், நாணயமும் கொண்டு கையூட்டை வெறுக்கும் பண்பாளரைக் கண்டு பிடியும். அவர்களை ஆயிரமவர். நூற்றுவர், ஐம்பதின்மர், பதின்மர் ஆகிய குழுக்களின் தலைவர்களை நியமிப்பீர் (விப. 18 : 21) எனக் கூறிய மீதியானின் அர்ச்சகரும், மோசேயின் மாமனுமாகிய எத்திரோவின் ஆலோசனை மிகச்சிறந்ததாகும்.

இதுவரை மக்களுக்கு சச்சரவுவரும் போது நீதி வழங்கிடவும், மற்றும் அனைத்துப் பொறுப்புக்களையும் தன்னகத்தில் வைத்திருந்த மோசேக்கு, தன்மாமன் கூறியது சிறப்பெனக்கண்டு பொறுப்புக்களைப் பகிர்ந்தளிக்கிறார். (வி.ப. 18 : 22).

நெகேமியா யூதநாட்டின் ஆளுநராகப் பதவி நியமனம் பெற்றபோது. எருசலேம் மதில்களைபழுது தீர்த்துப் புதுப்பிக்கும் பணியில், மக்களை ஒருங்கிணைத்து, வரலாற்றில் ஒரு இணைப்பின் பாலமாக நின்றார். அலங்கத்தை பலமாகப் பழுது தீர்க்கப் பொறுப்புக்களைப் பகிர்ந்தளிக்கின்றார் (நெகே. 2 : 17). தொடர்ந்து குருக்களும், லேவியரும், ஏனையோரும், தங்கள் பொறுப்புக்களை இணைந்து நிறைவேற்றினர்.

இஸ்ராயேலரின் பயணத்தின்போது இடம்பெற்ற போர்கள் அதன் வெற்றிகள் எல்லாம் திருப்பாடல் 136-ல் கூறப்பட்டிருக்கிறது. இத்தகையப் போர்களில் வெற்றிகிடைப்பதற்குக் காரணம் படைகளின் தலைவர் கடவுள் எனக் கொண்டு. இணைந்து செயல்படப் பொறுப்புக்கள் பகிரப்பட்டன.

பொறுப்புக்கள் பகிர்வும், பொறுப்பாளர்கள் இணைப்பும் இருக்கும் இடங்களில் உயிர்மீட்சியுண்டு. லாசருவை உயிருடன் எழுப்பும், நிகழ்வில் கல்லெறிய நின்றோரை ஒருங்கிணைத்து பெரும் கல்மூடியை எடுத்திடும் பொறுப்பினைக் கொடுக்கிறார் இயேசு (யோவான் 11 : 38-44).

5 அப்பம் 2 மீன் உணவு பரிமாறும் நிகழ்விலும். 12 சீடர்கள், 12 கூடைகள் என ஒவ்வொருவருக்கும் பொறுப்பினைக் கொடுக்கிறார் இயேசு சீடர்களும் இணைந்து செயல்பட்டதால் அற்புதம் இடம் பெற்றமை சிறப்பு.

தொடக்கக்காலத் திருச்சபையில் பிரிவினைகள் வந்தபோது பவுலை சார்ந்தவர், அப்பல்லோவை சார்ந்தவர் எனும் சிக்கல்களில், கட்டினவர்கள் தொடர்ந்து கட்டினவர்கள், நட்டவர்கள், தொடர்ந்து நீர் விட்டவர்கள் எனப்பொறுப்புக்கள் பகிர்ந்தளிக்கப்பட்மையும், இணைந்து வாழும் நிலையில் இறைபலன் உண்டு எனப் பவுலாரின் முழக்கமும், விளக்கமும், இக்காலத் திருச்சபைகளுக்கும் தகும் (Iகொரி. 3 : 10,11). பகிர்ந்து, இணைந்து வாழும் சமூகத்தில் இறைவனும் உடன் இருக்கிறார் எனக்கண்டு வாழ்தல் சிறப்பு தரும். மயிலாடியை சார்ந்த ஜாண் பால்மரின் பாடல் நினைத்திடற்குரியத.

பாடல் : கீர்

நாம் பலர் கூடியொரு மனைமுடிக்க
நாளெலா முழைத்திட்டாலும் நாள் பிடிக்குமே
மரமுயிர் தாது இன்னும் வான்புவி அனைத்தையும் ஓர்
வார்த்தையால் கணப் பொழுதில் நேர்த்தியாய் உணடர்க்கிவைத்தார்

அருள்திரு. **D.S. செல்வராஜ்**

**24-07-2011**

# இறைமக்களின் திருத்தூதுப்பணி

## THE APOSTOLATE OF THE PEOPLE OF GOD

யோசு. 1:1-9 | 1பேது. 2:1-10

திபா. 5:2 | மாற். 6:7-13

*"அப்படியே அவர்கள் புறப்பட்டுச்சென்று மக்கள் மனம் மாற வேண்டுமென்று பறைசாற்றினார்கள்."*
*மாற். 6:12*

**மன்றாட்டு : முழுமானுட மீட்பின் கடவுளே, அனைத்து மக்களும் இறையுண்மை உணர்ந்து மீட்படைவது உம்விருப்பம். உமது திருமைந்தர் இயேசுகிறிஸ்து தொடக்கத்தில் இறைத்தொண்டர்களை அனுப்பினார். அவரது திருப்பெயரில் திருச்சபையும் நற்செய்தி அறிவிக்கவும், எளியோர்க்கு அன்பை பகிரவும், நோயுற்றோருக்கு குணமளிக்கவும், ஒடுக்கப்பட்டோருக்கு விடுதலை அறிவிக்கவும் ஆற்றல்படுத்த வேண்டுமென தாழ்மையுடன் மன்றாடுகிறோம். - ஆமென்.**

திருத்தூதுவர் (Apostle) என்ற வார்த்தை இரண்டு குறிப்பிட்ட பொருள்களில் புதிய ஏற்பாட்டில் சொல்லப்பட்டிருக்கிறது.

1. கிறிஸ்தவ வரலாற்றின் தொடக்ககாலத்தில் குறிப்பிட்ட சிலரை குறிக்க.

2. நற்செய்தியை சுமந்து திரிகின்ற அருட்தொண்டர்களை குறிக்க. இவைகளை குறிப்பிட்டு சொல்லப்பட்டிருந்தாலும் இவைகளோடு வரையறை பண்ணப்படவில்லை. மாறாக, கிறிஸ்துவைப் பின்பற்றுகின்ற அனைத்து பற்றாளர்களும் திருத்தூதுவர்களே என்ற நிலையைப் புதிய ஏற்பாடு வலியுறுத்துகிறது. எனவே நாம் இறைவனின் பிள்ளைகள் என்ற உரிமையுடன் வாழ்கின்றோம் என்றால் நாம் அனைவரும் திருத்தூதுவர்கள் என்பதை நன்றியுடன் நினைவு கூர்ந்திட வேண்டும். "பற்றுறுதி கொண்டோர் அனைவரும் ஆயர்களே" என்று குறிப்பிடுகிறார் மார்ட்டின் லுத்தர். இந்த உணர்வுடனே திருச்சபை வாழ்வில் அனைத்து மக்களும் தங்கள் கடமைகளை பொறுப்புணர்வுடன் நிறைவேற்றி நல்ல பண்பு நெறிகளோடு திருத்தூதுப்பணியினை நிறைவேற்றிடுதல் சிறப்புடையது. இறையாட்சிப் பணிக்கென்று இயேசு தமது சீடர்களை திருத்தூதுவர்களாக பயிற்சி கொடுத்து பயன்படுத்தின விதத்தை மாற்கு 6-ஆம் அதிகாரத்தின் அடிப்படையில் கற்றுக்கொள்வோம்.

### *1. அழைத்து அனுப்பினார் :*

அழைப்பும் அனுப்புதலும் இறைமைந்தன் இயேசு தம் இறைபணியின் தொடர்ச்சிக்கென்று விரும்பிய ஒன்று. சீடர்களை அழைத்தார். பல பின்னணியங்களுடன் வாழ்ந்து வந்தவர்களை

அழைத்தார். ஆயத்துறையில் பணியாற்றியோர், மீன்பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டோர் என பலவகைப்பட்டோர் அழைப்பை ஏற்று இயேசுவை பின்தொடர்ந்தனர். பன்னிருவரையும் அழைத்தபோது அழைப்பின் நோக்கம் என்ன என்பதையும் அவர்களுக்குத் தெளிவுப்படுத்தினார். தம்மோடு இருக்கவும் நற்செய்தியை பறைசாற்ற அனுப்பப்படவும் பேய்களை ஓட்ட அதிகாரம் கொண்டிருக்கவும் (மாற். 6 : 7) என அவர்கள் பணி விளக்கப்பட்டுள்ளது.

இதுவரையிலும் இயேசு கிறிஸ்துவுடன் இருந்து அவர் ஆற்றிய இறைபணிகள் அனைத்தையும் கவனித்துக் கொண்டிருந்தனர். பேய்களை ஓட்டியது, நோய்களை குணப்படுத்தியது, காற்றையும் கடலையும் அமைதிப்படுத்தியது, மரித்தோரை உயிர்பெறச்செய்தது இவைகள் அனைத்தும் இயேசுகிறிஸ்துவின் மேசியாத் தன்மையை அவர்கள் அறிந்து கொள்ளவும் அவர் மீது பற்றுறுதி கொள்ளவும் காரணமாய் அமைந்தன. இங்கே இயேசு அவர்களுக்கு வேறு பயிற்சியினைத் தர விரும்புகிறார். தமக்குப் பிறகு அவர்கள் தொடர வேண்டிய இறையாட்சிப்பணியில் கவனம் செலுத்த விரும்புகிறார். அதற்குத் தேவையான பயிற்சியைத் தருகிறார். இருவர் இருவராக திருத்தூதுப்பணியினை நிறைவேற்ற கிராமங்களுக்கு அனுப்புகிறார். விதைக்கப்படுகிற நற்செய்தி பலன்தரவேண்டும் என்ற நோக்கில் பல ஆலோசனைகளை வழங்கி அனுப்புகிறார். (மாற் 6 : 8-10). ஒரு செய்தி ஏற்றுக்கொள்ளப்பட இருவரின் சாட்சியம் தேவை என்பது யூதச்சட்டம் (உபா. 19 : 15) யூதச்சட்டத்தை மதித்த இயேசு சீடர்களை இருவர் இருவராக அனுப்புவதிலும் ஒரு திட்டத்தை வைத்திருந்தார் எனலாம். அழைப்பதிலும் அனுப்புவதிலும் குறிப்பிட்ட நோக்கத்தை வைத்திருக்கும் ஆண்டவர், திருச்சபையையும் உண்மையான திருத்தூதுப்பணிக்கென ஆயத்தப்படுத்துகிறார். அழைக்கப்பட்ட கூட்டமாய் இறைமக்களின் மனமாற்றத்திற்காக திருத்தூதுவர்களாய் புறப்பட்டுச்செல்லும் அறைகூவலை ஏற்பதே இறைவிருப்பம்.

## 2. அதிகாரம் கொடுத்தார் :

இயேசு கிறிஸ்து நிலைநிறுத்த வந்த இறையாட்சி இவ்வுலகில் வரவேண்டுவது அவரது திட்டம். இத்திட்டம் நிறைவேற தீயசக்திகளின் ஆட்சி அகற்றப்படவேண்டும். இதனை இயேசு கிறிஸ்து தம் திருப்பணிக்காலத்தில் தொடங்கினார். இதனை தொடர்வதே சீடர்களின் முதற்பணி என்பதை கற்றுத்தந்தார். இதற்கு அவர்கள் தகுதி பெற இயேசு அவர்களுக்கு அதிகாரம் கொடுக்கிறார். தம் தந்தையாம் கடவுளிடமிருந்து பெற்ற அதிகாரத்தை இயேசு தம் சீடர்களுக்கு பகிர்ந்து கொடுக்கிறார்.

ஏழைகளுக்கு நற்செய்தியை அறிவிக்கவும்
சிறைப்பட்டோர் விடுதலை அடைவர்
பார்வையற்றோர் பார்வைபெறுவர் என முழக்கமிடவும்
ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்பவும்
அவர் என்னை அனுப்பியுள்ளார். (லூக். 4 : 18).

என்று தந்தையாம் கடவுளால் இயேசுகிறிஸ்து அனுப்பப்பட்டதின் நோக்கத்தை நிறைவேற்றிட சீடர்களுக்கு அதிகாரத்தைக் கொடுக்கிறார். அரசாட்சி செய்யும் அதிகாரமல்ல அது; இறையாட்சி மலரச் செய்யும் அதிகாரம். சுய வாழ்வுக்கான அதிகாரமல்ல; பிறர் வாழ்வு மாற்றத்திற்கான அதிகாரம் (மாற். 6 : 21). தமக்குப்பின் தம்சீடர்கள் தம்மைவிட அரிய பெரிய சாதனை புரிவார்கள் என்ற எதிர்பார்ப்பினையும் கொண்டிருந்தார் (யோவா. 14 : 21). தங்களுடைய காலத்திற்குப்பின் தங்கள் பணியை செய்வதற்குக்கூட யாரையும் பயிற்றுவிக்கத் தயங்கும் உலகத்தில் இயேசுவின் இச்செயல் ஒரு புதுமைச்செயல் ஆகும். தீமைகளை அகற்றி இறையாட்சியை மலரச்செய்வதற்கு அனைத்து இறை மக்களாகிய திருத்தூதுவர்கள் பெற்றிருக்கும் ஆற்றல் பயன்படட்டும்.

### 3. அர்ப்பணிக்க கற்றுக்கொடுத்தார் :

இறைமக்களின் திருத்தூதுப்பணிக்கு அர்ப்பணம் மிக முக்கியத்துவம் உடையது. அழைப்பையும் அதிகாரத்தையும் பெற்றுக் கொண்ட திருத்தூதுவர்கள். அர்ப்பணத்துடன் தியாக உணர்வுடையவர்களாய் செயல்படவேண்டும் என்பது இயேசுகிறிஸ்துவின் குறிக்கோள். தாங்கள் பெற்றுக்கொள்ளும் இறையாற்றலையும், அதிகாரத்தையும் சரியாகப்பயன்படுத்த தியாகத்தை இயேசு கற்றுக்கொடுக்கிறார். சீடர்கள் பெற்ற நற்செய்தியே அவர்கள் அதிகாரத்தின் அடிப்படை எனக்கருதி அவர்கள் சுயநலத்திற்கான வசதிகள் அனைத்தையும் சீடர்கள் துறக்க வேண்டும் என்பது இயேசு கிறிஸ்துவின் கட்டளை. உடையைப் பற்றியோ, உணவைக்குறித்தோ, பணத்தை நினைத்தோ கவலை கொள்ளாமல் சுயநலம் சார்ந்த இவைகளைச் சுமந்து சொல்லாமல் (மாற். 6 : 8,9) நற்செய்தியை சுமந்து செல்ல கட்டளை கொடுக்கிறார். திருத்தூதுப்பணியில் கவனம் செலுத்துவதுவே நோக்கம். எஞ்சிய தேவைகள் இறைவனால் நிறைவு படுத்தக்கூடியவை. இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றுவோர் சிலுவை சுமந்தே பின்தொடர வேண்டும் (லூக் 9:23) அவனவன் தனக்கானவைகளையல்ல பிறனுக்கானவைகளையும் நோக்குவானாக (பிலிப். 2 : 4). அர்ப்பணமின்றி நம்பிக்கை வாழ்வு வாழ்வது முழுமை வாழ்வாகாது. திருத்தூதுவப்பணியினை நிறைவேற்றுகிறோம் என்று வெளிப்படையாக

சொல்வோரும் இன்று சுயநல சிந்தனை மேலோங்க வாழ்வது இயல்பாகிவிட்டது. அர்ப்பணமற்ற வாழ்க்கை வாழ்ந்து ஆடம்பரத்தை நாடி அதிக ஆடம்பர வாழ்வுக்காக நற்செய்தியைப் பயன்படுத்துவோர் வளர்ந்து வரும் காலம் இது. செழுமை வாழ்வுக்காக மட்டும் இயேசு கிறிஸ்து தியாக வாழ்வுக்கு அல்ல என்று கருதும் பற்றாளர் கூட்டமும் ஏராளம்.

அதிகாரத்தையோ, ஆற்றலையோ ஆட்சி உரிமையையோ கிறிஸ்து தமது திருச்சபையில் நிலைநிறுத்தவில்லை. மாறாக திருப்பணி புரிவதையே நிலைநிறுத்தினார்.

திருச்சபை உண்மையான திருத்தூதுவர்களை உள்ளடக்கியது. இறையாட்சியை உலகில் விரிவாக்கம் செய்வது திருச்சபையின் கடமை. சீடர்களுக்கு இயேசு கட்டளையிட்டார், சீடர்களை உருவாக்க (மத். 28 : 19-20). சீடர் கூட்டமாகிய திருச்சபை சீடர்களை உருவாக்க கிறிஸ்துவின் அழைப்பை ஏற்கவேண்டும். ஆண்டவர் தந்திருக்கும் வாய்ப்புகளையும், அதிகாரத்தையும், இறையாற்றலையும் சுயநலத்திற்காக அல்ல மக்களின் விடுதலை வாழ்வுக்காக பயன்படுத்த வேண்டும். நாங்கள் ‘கிறிஸ்துவுக்கு அடிமைகள்’ என்ற திருத்தூதுவர்களின் பாதைகளை பின்தொடர்வது சிறப்புடையது. அர்ப்பணமுள்ள எளிய வாழ்வை வெளிப்படுத்தி இறையாட்சிக்கு இறைமகக்ளை ஆயத்தப்படுத்துகின்ற திருப்பணியினை தியாகத்துடனே நிறைவேற்றுவது சிறப்புடையது. ஆண்டவரையும் நற்செய்தியையும் அடிப்படையாகக்கொண்டு திருத்தூதுவர்களாகிய அனைத்து இறைமக்களும் செயல்பட அழைக்கப்படுகிறோம். அர்ப்பணித்து அருளாசி பெற்றிடுவோம்.

அருள்திரு. **J. வின்சென்ட் ராபர்ட்**

*தேவன் பேரில் பற்றுதலாய் வாழ்ந்தவர்களுக்கு, இறுதிகாலம் தேவ வருகையினை எதிர்பார்க்கும் காலம். தேவனற்றவர்களுக்கோ அது கொடிய காலம்.*

ஸ்டான்லி ஜோன்ஸ்

31-07-2011

# அருள் பொழிவு திருப்பணி : பணி செய்வதற்கான அழைப்பு

## ORDAIND MINISTRY : CALLED TO SERVE

எசே. 33:1-9 Iபேதுரு 5:1-4

திபா. 99 யோவா. 21:15 -19

*"என் ஆடுகளை பேணிவளர்." யோவா.21:17*

**மன்றாட்டு :** நலமானவைகளை வழங்கும் கடவுளே, பல நிலைகளில் இறைப்பணிகளை உமது திருச்சபையில் ஏற்படுத்தியிருக்கிறீர். குருத்துவப்பணி செய்ய உமது அழைப்பை பெற்று செயலாற்றும் பணியாளர்கள் மேல் பரிவானஉம்பார்வை பதியட்டும். தூய ஆவியரால் எங்களை நிறைத்து வாக்கிலும், செயலிலும் நல்ல மாதிரிகளாய் உண்மையோடும், உவகையோடும் இறைப்பணி நிறைவேற்றிட அருள்வேண்டி நிற்கிறோம். - ஆமென்.

இறைவன் மண்ணில் மானுடத்துடன் இணைந்து வாழ விரும்புகின்றார். இறைமகன் இயேசு கிறிஸ்துவின் மனுவுருவேற்பு இதனை உறுதி செய்கின்றது. மானுடம் இறையுறவை சிதைப்பதால், சிதைப்பவர்களுக்கும், சிதைக்காமலிருப்பவர்களுக்கும் பாடுகளும், வேதனைகளும் மரணமும் வருகின்றது. மானுட பாடுகள், மரணம் இறைவனின் இதயத்தை வேதனைக்குள்ளாக்குகிறது. தீங்கும், கேடுமில்லாத உலகம், புதுயுகம் உருவாக இறைவன் விரும்புகிறார் (ஏசா. 11:9). மரணத்திற்குள்ளானவர்களுக்கும் உயிரூட்டுவதே ஜீவனின் அதிபதியான, இறைமகனின் திருவுளம், அவருக்குள் ஜீவன், இருந்தது, இருக்கிறது (யேவா. 1:4). இயேசுகிறிஸ்துவுடன் மனிதன் இணைந்து வாழ்ந்தால் சாவாமையை பெறுகிறான், ஆவி, ஆன்மா, சரீரமுடைய மனிதன் முழு ஆளுமையிலும் வாழ்வு பெறுகிறான். மானுட வாழ்வை, விரும்பும் இறைவன் வரலாற்றுள். அதற்கென எடுக்கும் முயற்சிகளை ஈண்டு காண்போம்.

### 1. இறைவனின் அழைப்பு :

மானுட தலைவனைக் கண்டு நலிவுற்ற மக்களை தன் மக்களாய் ஏற்று, அவர்களை மீட்க இறைவன் விரும்பினர். மேசேயிடம் நீ இஸ்ரவேல் புத்திரராகிய என ஜனத்தை எகிப்திலிருந்து அழைத்து வரும்படி உன்னைப் பார்வோனிடத்திற்கு அனுப்புவேன் வா என்றார் (யாத். 3:10). இதே இதய

வேதனையின் வெளிப்பாடு ஏசாயா நூலில் யாரை நான் அனுப்புவேன் யார் நமது காரியமாய்ப் போவான் என்றுரைக்கிற கடவுளின் சப்தத்தில் வெளிப்படுகின்றது (ஏசா. 6:8). இறைமகன் மக்களை, அன்பின் கயிற்றால் அணைத்து. இறையாட்சிக்குள் கொண்டு வர விரும்பினார். பலதரப்பட்ட மக்களை இறைப்பணிக்கு அழைத்தார். குறிப்பாக கடலோர, பேதுரு எனப்பட்ட சீமோனையும், அந்திரோயாவையும் நோக்கி என் பின்னே வாருங்கள். உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன் என்றார். (மத். 5:19) இயேசு கிறிஸ்துவின் இந்த அழைப்பு திபேரியா கடற்கரையிலும் ஒலித்தது, பேதுருவுடன் சீடர் கூட்டம் மீன் பிடித்துக் கொண்டிருக்கையில் இயேசு, பிள்ளைகளே என்று அழைத்தார் (யோவா. 21:5). குறிப்பாக ஆடுகளையும், ஆட்டுக்குட்டிகளையும் மீட்க, பணிசெய்ய பேதுருவை அழைத்தார் (யோவா. 21:15-17). தூய பவுல் ரோமருக்கு தன்னை அறிமுகம் செய்கையில் இயேசு கிறிஸ்துவின் ஊழியக்காரனும் அப்போஸ்தலானாகும்படி அழைக்கப்பட்டவனும் என்கின்றார் (ரோம. 1:1) டோனாவூர் ஐக்கியத்தை உருவாக்கிய ஏமி கார்மைக்கல் அம்மையாரை இறைவன் 1892 ஆம் ஆண்டு ஜனவரி 13 ஆம் நாள் தம் பணக்கு அழைத்தார். அழைப்பு வரலாற்றில் தொடருகின்றது. நம் காதுகளில் ஒலிக்கின்றதா?

### 2. இறைவனின் வேதனை :

இறைவன், மானுட உணர்வுகளுடன் உறவு கொள்பவர். உண்மையான உணர்ச்சி வெளிப்பாடுகளுடன் தன்னை ஒன்றிணைத்த காயீனை நோக்கி, உன் சகோதராகிய ஆபேல் எங்கே, என்பதும் இறைவனின் இதய வேதனையின் வெளிப்பாடுகளாகும் (தொநூ. 3:9, 4:9). இதய வேதனையின் வெளிபாட்டை தொடக்க நூலாசிரியர் தாம் பூமியிவே மனுஷனை உண்டாக்கினதற்காகக் கர்த்தர் மனஸ்தாபப்பட்டார், அது அவர் இதயத்திறகு விசனமாயிருந்தது என்கின்றார் (தொநூ. 6:6). ஏசாயா நூலில் இறைவனின் இதய வேதனையினை வானங்களே, கேளுங்கள் பூமியே செவி கொடு; கர்த்தர் பேசுகிறார். நான் பிள்ளைகளை வளர்த்து ஆதரித்தேன் அவர்களோ எனக்கு விரோதமாய்க் கலகம் பண்ணினார்கள் என்னும் திருவசனத்தில் வெளிப்படுகிறது. (ஏசா. 1:2). இயேசு கிறிஸ்து தன் இதய வேதனையை வெளிப்படுத்துகையில், நியாயத்தீர்ப்பு நிகழ்ச்சியில் சபிக்கப்பட்டவர்களே, என்னை விட்டு பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள் என்கின்றார் (மத். 25:4). இறைவனை வேதனைப்படுத்தும் செயல்களை மானுடம் தொடர்ந்து செய்து வருகிறது. தூய பவுலாருக்கு இயேசு கிறிஸ்து தன்னை வெளிப்படுத்துகையில் நீ என்னை ஏன்

துன்பப்படுத்துகிறாய் என்றார் (அப். 9:4). வரலாற்றில் இறைமகனை துன்புறுத்துவது தொடர் நிகழ்ச்சியாயுள்ளதை ஒரு தரம் பிரகாசிப்பிக்கப்பட்டும் பரம ஈவை ருசிபார்த்தும், தேவனுடைய நல் வார்த்தையை இனிவரும் உலகத்தின் பெலன்களையும் ருசிபார்த்தும், மறுதலித்துப் போனவர்களை மறுபடியும் தேவனுடைய குமாரனை சிலுவையில் அறைகின்றார்கள் என எபிரேய நூலாக்கியோன் எழுதுகின்றார். (எபி. 6:6) வேதனையை பகிர்ந்து கொள்ள மண்ணில் மக்கள் இல்லாததால் தான் இயேசு கிறிஸ்துவின் பாடுகள் பகிர்ந்து கொள்ள மோசேயும். எலியாவும் வரவேண்டியதானது (லூக். 9:30,31) அழைப்பை பெற்றவர்கள் அவர் பாடுகளை பகிர்ந்து கொள்ள தகுதியுடையவர்களாவோம்.

### 3. இறைப்பணியரின் பொறுப்பு :

இறைப்பணி இம்மைக்கும் மறுமைக்கும் உதவும் திருப்பணி, இறைவாக்கினர் வழி இறைவன் தெளிவாக தெரிவித்துள்ளார் (எசே. 33:8). பல்வேறு பணிகள் இருப்பினும் இது ஆத்மாவுக்கு உத்தரவாதமான பணி (எபி. 13:17) அவலட்சணமான ஆதாயத்திறகாக அல்லாமல் மனப்பூர்வமாய் செய்ய வேண்டிய பணி (Iபேதுரு 5:2). பொறுப்பான இந்த பணி நீடிய பொறுமையுடன் செய்யபட வேண்டியது. சாந்ததத்துடன் செய்யப்பட வேண்டியது (எபே. 4:2,3) இறைப்பணியாளர் மோசே, கலகமுள்ள சமூகத்துள் செய்தார், இப்பணி, இப்படிப்பட்ட சமூகத்துள் தான் தொடர்ந்து செய்யப்படும் என்பதை இயேசு கிறிஸ்துவும் தெரிந்திருந்தார் (மத். 10:16).

இறைப்பணியில் இறைப்பணியாருக்கு சட்டங்களுண்டு, மாதிரிகளுக்கு சடங்குகளுண்டு, பாரம்பரியங்களுண்டு, இப்பணியில் இயேசு கிறிஸ்து கிறிஸ்துவை மாதிரியாய் ஏற்றல் நலம் பயக்கும் (யோவா. 13:15) தூய பவுலாரும். பேதுருவும் இயேசு கிறிஸ்துவை முன் மாதிரியாய் கொள்ளுங்கள் என்கின்றனர். (ரோம. 15:6, பேது 2:21). நற்செய்தி நூற்கள் காட்டும் இயேசுகிறிஸ்துவை, மாதிரியாய் ஏற்று வாழ்ந்து வையகத்திற்கு அந்த மாதிரியைக் காட்டினால் மானுடம் இறைவனை அறியும் பேச்சில் மட்டுமல்ல செயலிலும் இயேசுவைக் காட்டல் இன்றியமையாதது.

இறைவனின் அழைப்பினை எற்று இறைவனின், இறைமகனின் இதய வேதனை அறிந்து, தூயாவியாரின் துணையுடன் இயேசு கிறிஸ்துவை உலகிற்கு காட்டும் பொறுப்புடைவர்களாய் பணி செய்வோம், உலகம் உய்யும்.

அருள்திரு. **பாலஸ் செல்வமணி**

01-08-2011

*அருணோதய ஆராதனை*

# விடுவிக்க இறங்கி வரும் கடவுள்

விப. 3:1-10

*" ................... தேசத்திலே கொண்டு போய்ச் சேர்க்கவும் இறங்கினேன்." விப. 3:8ஆ*

கடவுள் விடுதலையாளர் என்கின்ற செய்தி திருமறையில் ஆழ்ந்த அழுத்தம் பெறுகிறது. விடுதலைப் பயணம் நூல், கடவுள் தம்முடைய மக்களை அடிமைத்தனத்திலிருந்து விடுப்பதற்காக எந்தெந்த முயற்சிகளை மேற்கொண்டார் என்பதை தெளிவாக விளக்குகிறது. அதோடு அவர்களை விடுதலையாக்கி கானானில் குடியமர்ததுவதற்காக அழைத்து வந்த வழிகளில் அவர்களைச் சிறப்பாக வழிநடத்தி வந்ததையும். தேவைகளைச் சந்தித்ததையும் காணமுடியும். அவ்வாறே, எல்லா மனிதரும் சுதந்திரர்களாக, விடுதலை பெற்றவர்களாக வாழ்வதையே கடவுள் விரும்புகிறார். எனவே எங்கெல்லாம் விடுதலைக்கான குரல் முழங்குகிறதோ அங்கெல்லாம் கடவுள் தம்மையும் இணைத்துக் கொள்கிறார் என்பதை இஸ்ரயேலரின் வரலாற்றிலிருந்து அறிந்து கொள்ளலாம் (விப. 3:7). அதோடு கடவுள் விடுதலை தருவதற்காக இறங்கி வருகிறார் என்பது திருமறை அளிக்கும் ஆற்றல் மிகுந்த செய்தியாகும்.

நமது இந்தியத் திருநாடும் 1947 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 15 ஆம் நாள் அன்னிய ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்றது. விடுதலையைக் கொண்டாடும் இத்திங்களில் கடவுளின் விடுதலை வேட்கையைப் புரிந்து கொள்வதோடு அவர் தரும் விடுதலையின் செய்தியை தியானிப்பது பொருத்தமுடையதாகும்.

## 1. விடுதலை வேட்கையை அறியும் ஆண்டவர் : (விப. 3:7)

இஸ்ரயேலர் 430 ஆண்டுகாலம் எகிப்தில் அடிமைகளாக இருந்தனர். எகிப்தியர்கள் இஸ்ரயேலர் மீது திணித்த கடின வேலை, ஒடுக்குதல் போன்ற நிலையிலிருந்து எழுப்பிய ஓலக்குரல்கள் அனைத்தையும் ஆண்டவர் செவிமடுத்துக் கேட்டார். அவரது நிலைப்பாட்டினை, என் மக்களின் பாடுகளை நான் பார்த்தேன், கண்ணீரைக் கண்டேன் அவலங்களை அறிந்திருக்கிறேன் (விப. 3:7) என கூறுவதிலிருந்து அறிந்து கொள்ள முடியும். பலர், தங்களுடைய வாழ்வில் வேதனைகளும், கடினப்பாடுகளும் வரும்போது கடவுள் தம்முடைய கண்களை மூடி, முகத்தைத் திருப்பிக் கொள்கிறார் என எண்ணுகின்றனர்.

ஆனால் நமது கடவுள் எவ்வாறு செயல்படுகிறார் என்பதை இந்நிகழ்வு தெளிவாக உணர்த்துகிறது. 430 ஆண்டுகளாக அவர்கள் வாழ்வில் அனுபவித்து வந்த எல்லா வேதனைகளையும், அவர்களது வாழ்விலிருந்து வெளிப்பட்ட விடுதலைக்கான ஏக்கங்களையும் அவர் தெளிவாக அறிந்திருந்தார். இயேசுநாதரும் நீண்ட காலம் உடல் ஆரோக்கியமிழந்து விடுதலை பெற ஏங்கி நின்ற மனிதரைக் குறித்து தெளிவாய் அறிந்திருந்தார் (யோவா. 5:6). இன்றும், நமது ஏக்கங்களையும் பெருமூச்சுகளையும் அவர் அறிந்திருக்கிறார், காண்கிறார் என்பதை உணர்ந்து அவர் திருமுன்னிலையில் கடந்து வருவோமாக.

### 2. விடுதலையருளும் கடவுள் : (விப. 3:8)

விடுதலைக்கான ஏக்கத்தை அறிகிற கடவுள் ஏற்ற வேளையில் விடுவிக்க வருகிறார். அதுவும் கடவுள் தம்மைக் குறித்து இறங்கினேன் (Came down) என்று கூறுவது மாபெரும் ஆற்றல் மிகுந்த செய்தியாகும். அதாவது, விடுவிப்பதற்காக அல்லது விடுதலை வாழ்வை வழங்குவதற்காக, கடவுள் நேரடியாக வந்து செயல்படுகிறார் என்பதை காணமுடிகிறது. அதற்காக அவர் மோசேயை ஆயத்தம் செய்து அனுப்புகிறார். ஆபத்து வேளையில் தம்மை நோக்கிக் கூப்பிட்டால் விடுதலையருள்வேன் (திபா. 91:15) என்றவர், விடுதலை வழங்குபவரானார். திருப்பாடகர் கடவுள் தம்முடைய வாழ்வில் விடுதலையருளியதை நினைவு கூர்ந்து அவரைப் போற்றுகிறார் (திபா. 54:7). சிறைபட்டவர்களுக்கு விடுதலையருள்பவர் கடவுள் என ஏசாயா இறைவாக்கினர் குறிப்பிடுகிறார் (ஏசா. 61:1)

திருமைந்தர் இயேசு கிறிஸ்துவும் விடுதலை வழங்குபவராக இவ்வுலகில் சுற்றித் திரிந்தார். அவர் வழங்கும் விடுதலையே உண்மையானதும், முழுமையானதுமாகும் (யோவா. 8:36). இயேசு கிறிஸ்துவோடு ஏசாயாவின் இறைவாக்கினை இணைத்து வெளிப்படுத்தும் மத்தேயு நூல் ஆசிரியர் இருளில் இருந்த மக்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள் (மத் 5:15) என்கிறார். இயேசு கிறிஸ்துவும் தம்முடைய பணித்திட்டத்தை அவ்வாறே வெளிப்படுத்துகிறார் (லூக். 4:18-21). இன்றும் விடுதலையருள்கிறவராகவே ஆண்டவர் நம்மோடு இருக்கிறார். வாழ்வில் எப்பேர்ப்பட்ட அடிமைத்தனம் இருந்தாலும் விடுதலையருளி வாழ்வருள்பவர் அவரே.

### 3. விடுதலை பணி செய்யும் திருச்சபை :

விடுவிக்க இறங்கி வந்து விடுதலையளித்திருக்கும் கடவுள் மானுடர் விடுதலை பெற்றவர்களாகவே வாழவேண்டும் என்று விரும்புகிறார். அதோடு அவ்விடுதலை வாழ்வில் தொடர்ந்து

நிலைத்திருக்கவும், பவுலார் கூறுவது போன்று, மீண்டும் அடிமைத்தன நுகத்திற்குட்படாதபடி கிறிஸ்து அளித்த விடுதலை வாழ்விலே நிலை கொண்டு வாழவும் (கலா. 5:1) எதிர்பார்க்கப்படுகிறோம். இந்த விடுதலை பெற்ற மானுடர் இணைந்து வாழும் (செயல்படும்) திருச்சபை, விடுவிக்க இறங்கி வந்து மக்களோடு செயல்படுகின்ற கடவுளின் இருப்புநிலையைப் (Presence) புரிந்து கொண்டு விடுதலை பணி செய்து வாழ வேண்டும் என்பதே ஆண்டவரின் திருவிருப்பாகும். எனவே நம்மை விடுவித்திருக்கும் ஆண்டவர் இன்றும் விடுதலை வீரராக செயல்பட்டு கொண்டிருக்கிறார் என்பதை உணர்ந்து சக மனிதரோடு இவ்விடுதலை வாழ்வைப் பகிர்ந்து வாழ எதிர்பார்க்கப்படுகிறோம். நம்மில் பழைய வாழ்வின் நிலைகள் ஓங்கி வருகிறதென்றால் பவுலாரின் கூற்றின்படி 'இனி வாழ்வது நானல்ல; என்னில் விடுதலையருளும் கிறிஸ்து வாழ்கிறார்' (கலா 2:20) என்பதை உணர்வோம். பக்தரின் பாடல் வரிகளில், "..............பழைய பாவத்தாசை வருகுதோ ............... நீயுனக்குச் சொந்தமல்லவே................. என்கிறார். எல்லா தீமைகளிலிருந்தும் விடுவிக்க இறங்கி வரும் ஆண்டவரை உணர்ந்து அவர் அளிக்கும் விடுதலையின் ஆற்றல் பெற்று புதிய மாதத்தில் வெற்றியாய் முன்னேறிச் செல்வோமாக.

அருள்திரு. **A. பிரைட் சாலேமோன்**

*தேவன் பேரில் பற்றுதலாய் வாழ்ந்தவர்களுக்கு, இறுதிகாலம் தேவ வருகையினை எதிர்பார்க்கும் காலம். தேவனற்றவர்களுக்கோ அது கொடிய காலம்.*

ஸ்டான்லி ஜோன்ஸ்

07-08-2011

# அருட்பணி : மானுடத்திற்கு தொண்டாற்றுதல்

**MISSION : SERVICE TO HUMANITY**

ஏசா. 42:1-9 திப. :13-1-12

திபா. 146 யோ. 13:1-17

*"பர்னபாவையும் சவுலையும் ஒரு தனிப்பட்ட பணிக்கென நான் அழைத்திருக்கிறேன் அந்தப்பணிக்காக அவர்களை ஒதுக்கி வையுங்கள்." திப. 13:2*

**மன்றாட்டு : அரவணைக்கும் கடவுளே, வாழ்வின் தாழ்நிலையில் இருப்போருக்கு ஆற்றும் சேவை தமக்கே ஆற்றுவது என எங்கள் ஆண்டவர் இயேசுகிறிஸ்து கற்றுத்தந்தார். நாங்கள் பணிவிடை செய்யும் நிலையில் பிறருக்கு நன்மையாற்ற உந்தனின் உந்துதல் தாரும். மானுட பணிவிடை பாதையில் பயணிக்கும் அனைவரும் சிறப்பாய் உமதருளோடு தொடர்ந்து சேவையாற்ற எங்களுக்காக உயிர்விடுத்து வாழ்வு தந்த வல்லவர் இயேசுகிறிஸ்து வழி கேட்கிறோம். - ஆமென்.**

தற்கால அருட்பணி இயக்கத்தினுடைய தந்தையென்று வில்லியம் கேரி அழைக்கப்படுகிறார். அருள்நாதர் இயேசுகிறிஸ்து சீடர்களை தெரிந்து பயிற்சி கொடுத்து அனைத்து படைப்பிற்கும் நற்செய்தியை அறிவிக்கவும் அருட்பணியர்களை சமுதாய சீர்கேடுகளை (உடன்கட்டை ஏறுதல், குழந்தைகள் திருமணம், தோள்சீலை அணிய உரிமை) அகற்றவும் அனுப்பினார்

## *1. அறிமுகப்படுத்துவது :* தி.ப. 13:2

அந்தியோக்கியா திருச்சபை பல இன்னல்களை சந்தித்த மக்கள் ஒன்றிணைந்து உருவாக்கிய திருச்சபை. அப்போஸ்தலனாகிய யாக்கோபு வாளால் அறுப்புண்டு கொலை செய்யப்பட்டார். இந்த திருச்சபையில் கிரேக்கர், ரோமர் ஏரோதுடனே கூட வளர்க்கப்பட்ட மனாயீனும், யூதர்கள் என பல கலாச்சாரம் நிறைந்த மக்கள் அங்கத்தினர்களாக இருந்தார்கள். இவர்கள் எருசேலேம் மக்கள் பஞ்சத்தில் வாடிய போது அவர்களுக்கு உதவ முன் வந்தார்கள் (திப. 12:25). இந்த இறைமக்கள் பவுலையும் பர்ணபாவை கற்பித்து அறிவூட்டி தலைமேல் கைகளை வைத்து கிறிஸ்துவின் திருவிருப்பத்தை நிறைவேற்றுவதற்கு அறிமுகப்படுத்தியது (சமூக பணி, ஆன்மீக பணி)

பவுல் இளைஞனான தீமோத்தேயுவுக்கு சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் திருவசனத்தை கவனமாக அறிவிக்கவும், போதிக்கவும் கிறிஸ்துவின் திருவிருப்பத்தை நிறைவேற்றவும் பணிக்கிறார்.

## 2. அனுப்புவது : திப. 13:3

அந்தியோக்கியா திருச்சபை ஆண்டவரை ஆராதிப்பதிலும் ஜெபிப்பதிலும் உபவாசிப்பதிலும் இணைந்து நின்றது. இந்த சிறப்பு பண்புகள் பவுலையும் பர்ணபாவையும் அருட்பணியாற்ற உந்தித் தள்ளியது. ஏனென்றால், மத். 12:29 (தீயோனை) பலவானை முந்திகட்டினாலொழிய பலவானுடைய வீட்டிற்குள் புகுந்து கொள்ளையிடலாம், இல்லாவில்லாவிட்டால் கொள்ளையிட முடியாது. நாம் வாழ்கின்ற உலகில் அருட்பணி செய்ய ஆராதனை செய்தல், உபவாசித்தல், ஜெபித்தல் இருந்தால் தீயோனை மேற்கொள்ளவும் அருட்பணியாற்றிடவும் இயலும்.

ஆண்டவர் இயேசுகிறிஸ்து சீடர்களுடைய கால்களை கழுவும் நிகழ்ச்சியில் பேதுரு மறுக்கிறார்; ஆண்டவர் சொல்லுகிறார், என்னுடன் உனக்கு பங்கு இல்லையென்று அப்பொழுது பேதுரு சொல்கிறார் கால்களை மட்டுமல்ல என்னை முற்றிலும் கழுவ வேண்டும் என்று. அருட்பணி சவால் நிறைந்தது, கிறிஸ்தவ பண்புகளால் அலங்கரிக்கப்பட்டு தொண்டாற்றும் போது மற்றவர்கள் கவரப்படுவார்கள். இதை உணர்ந்து அந்தியோக்கியா திருச்சபை அருட்பணிக்கு அனுப்பியது.

## அறிவிப்பது : தி.ப. 13:5

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவே மீட்பர் என்ற நற்செய்தியை உலகிற்கு கொடுப்பது சுலபமான ஒன்று அல்ல, மாறாக கடினம் நிறைந்தது பாடு நிறைந்தது பவுல் IIகொரி. 11:26-27 அருட்பணியில் சந்தித்த இடர்களை சுட்டுகிறார் ஆறுகளால் வந்த மோசம் சொந்த ஜனங்களால் வந்த மோசம், பட்வுணங்களில் உண்டான மோசம், சமுத்திரத்தில் உண்டான மோசம், சகோதரால் உண்டான மோசம், பசி, தாகம் கண்விளிம்பு, குளிர்நிர்வாணம் இவற்றின் மத்தியில் தான் கிறிஸ்துவை உலகிற்கு கொடுத்தார்.

கலா. 4:13 சரீர பலவீனங்களின் மத்தியில் அருட்பணியாற்றினேன் என்கிறார். எப்பொழுதும் குத்திக் கொண்டிருக்கும் முள் இருந்தது என்கிறார் பவுலின் மூன்றாவது மிஷனறி பயணத்தின் போது கப்பல் அலைக்கழிக்கப்பட்டது. மரத்துண்டை பிடித்து கரை சேர்ந்தார். குளிர் காய விறகு பொறுக்கச் சென்ற போது விரியன் பாம்பு தீண்டியது. இத்துணை இடர்கள் மத்தியிலும் கிறிஸ்துவை உலகிற்கு கொடுப்பதில் உறுதி தளராது மானிடம் ஈடேற்றம் பெற தொண்டாற்றினார். நாமும் இறையாற்றல் பெற்று உறுதிதளராது மானிட ஈடேற்றத்திற்கு நம்மை அர்ப்பணிப்போம்.

அருள்திரு. **J. றசல் ஐசக்**

**14-08-2011**

# கிறிஸ்தவ திருமணம்

## CHRISTIAN MARRIAGE

தொநூ. 2:18-25 1கொரி. 13

திபா. 91 மாற். 10:1-12

*"அன்பு அனைத்தையும் பொறுத்துக்கொள்ளும்; அனைத்தையும் நம்பும்." 1கொரி. 13:7*

**மன்றாட்டு : குடும்பங்களை வடிவமைக்கும் கடவுளே, அன்பை பகிரும் நிலையில் ஆணையும், பெண்ணையும் சிறப்பாய் படைத்தீர். திருமண உடன்பாட்டில் அமைந்திருக்கும் அனைவர் மேலும் உமது முகத்தின் வெளிச்சம் வீசுவதாக. அவர்கள் ஒருவரிலொருவர் மகிழவும், மன்னிக்கவும், மதிப்பளிக்கவும் கிருபை செய்வீராக. அவர்களை நம்பிக்கையினால் நிறைத்து, ஒருவருக்கொருவர் உதவி புரிந்து வாழ வாய்ப்பருள வேண்டுதல் செய்கிறோம். - ஆமென்.**

வாழ்க்கை பயணத்தில் திருமணம் மிக முக்கியமான நிகழ்ச்சியாகும். இந்த அமைப்பில் தம்பதியர் இன்பத்தையும் அன்பின் ஆழத்தையும் தரமான பாதுகாப்பையும் பெறுவதோடு எதிர்கால சந்ததி உருவாகவும் முடிகின்றது. திருமணம் கணவன். மனைவி வாழ்வின் இறுதிவரை இனிதுடன் வாழ துணை செய்கின்றது. மனிதன் தீய வழியில் சென்று கெட்டுவிடாதபடி ஒரு தோழமையை உருவாக்கி இன்பத்தையும், துன்பத்தையும் சேர்ந்து அனுபவிப்பது மட்டுமல்ல ஒருவரை ஒருவர் சார்ந்து வாழவும் துணை செய்கிறது.

### 1. திருமண வாழ்வுக்கு அடிப்படை தேவைகள் :

அ. பிரிதல்

ஆ. இணைதல்

இ. ஒன்று வாழ்தல்

**பிரிதல் :**

பிரிதல் என்பது இன்னொரு நெருங்கிய உறவை ஏற்படுத்தும் நிகழ்வு ஆகும். (தொநூ. 2 : 24; மத்தேயு 19 : 6) இது பெற்றோரிடமிருந்து பிரிந்து தனியாக வாழும் நிலை. புதிய ஒரு குடும்பம் அமைய பிரிதல் அவசியம். இது கடவுளாலும் சமுதாயத்தாலும் இதுவரை பெற்றோரை சார்ந்து இருந்தவர்கள் பிரிந்து கணவன் மனைவி என்ற புது உறவை உருவாக்கி நம்பிக்கை உரியவர்களாக சேர்ந்து வாழ்கின்றனர். இந்த பிரிதலில் நம்பிக்கை, மகிழ்ச்சி, நிறைவு ஒன்றித்து இருக்கின்றன.

**இணைதல்**

(இச. 24:5) இது ஆண், பெண் இசைவையும் நெருக்கத்தையும் பாசத்தையும் உருவாக்குகிறது. இவ்இணைப்பு வாழ்வின் இறுதிவரை அமைகிறது. மரணம் ஒன்றுதான் பிரிக்க முடியும் என்ற சிந்தனை இவ்விசைவில் காணப்படுகிறது. இது உடல் இணைவு மட்டுமல்ல மனமிசைந்த வாழ்வையும் வெளிப்டுத்துகிறது. திருமணத்திற்கு பின் இணைந்து வாழ்வது உறுதியான பாசத்தையும் மனநிலையையும் வளர்த்து கொள்ளும்.

**ஒன்றாகுதல்** (தொநூ. 2 : 23)

இவர்கள் இருவரல்லர் ஒருவர் என்ற உயர்ந்த ரகசியம் உருவெடுக்கிறது. இது ஒரே உடல், ஒரே மனம், ஒரே எண்ணம் என்ற சிந்தனை ஆகும். இவள் என் எலும்பில் எலும்பு, என் மாமிசத்தில் மாமிசம் மாமிசமாய் என்ற பார்வை ஆகும். இங்கு உடல் மாத்திரமல்ல எண்ணங்கள், உணர்வுகள், மகிழ்ச்சி, துன்பங்கள், வெற்றிகள், தோல்விகள் அனைத்தையும் பகிர ஒன்றாகுதல் ஆகும். ஒன்றாகும் நிலை என்பது எல்லா துறைகளிலும் சரிசமமாக்குதல் என்பதாகும்.

## *2. திருமண வாழ்வுக்கு செய்ய வேண்டியவைகள் :*

(மாற்கு 10:6-9)

மகிழ்வான குடும்பம் பாசங்களைப் பயிற்றுவிக்கும் இடம், இதில் முக்கிய இடம் வகிப்பவர்கள் கணவன் மனைவியாகும். முதலாவது கடவுளுக்குப் பயன்படும் பயம் வேண்டும் (தி.பா. 128 : 1) மனைவியிடம் தியாக அன்பாயிருத்தல், திருமணத்தின்போது இருந்த அன்பு வாழ்நாள் முழுவதும் இருத்தல், உடல் இச்சைகளைத் தணிக்கக் கிடைத்த பொருள் என நினைக்காதிருத்தல், மிகப் பாசத்துக்குரியவள் என எப்போதும் நினைத்தல் வேண்டும். அன்பான வார்த்தைகளால் பாராட்டுவது (நீதி. 31 : 29) கசந்து கொள்ளாது இருத்தல். குடும்ப வாழ்விற்கு இனிமை தரும்.

மனைவி, கணவன் கடவுளால் தரப்பட்ட பெரிய பரிசு என எண்ண வேண்டும். மனைவிக்கு இருக்க வேண்டிய முக்கிய கடமை நற்குணமுள்ளவளாக இருக்க வேண்டும். இது எல்லா அறங்களுக்கும் மேலாகும். மனைவி புத்தி தெளிந்தவளாக இருக்க வேண்டும். (1தீமோ. 2:10) மனைவி அடக்கமுள்ள (1தீமோ. 2:10,11) கற்றுக்கொள்ளும் நற்சுபாவமுள்ளவளாக கணவனின் நம்பிக்கைக்குரியவளாக (நீதி 31:15) தன்னை ஒழுங்காக அலங்கரிக்கிறவளாக சுத்தம் ஆடை அணிவது, அமைதி போன்ற நற்குணங்களால் தன்னை அலங்கரிக்கிறவளாக இருப்பது அவசியம்.

இப்படியாக வாழும் அமைப்பில் பிறக்கும் பிள்ளைகள் கூட நற்பேறு பெற்ற பிள்ளைகளாக அமைவர். நீதிமான் உத்தமத்தில் நடக்கிறான் அவன் பிள்ளைகளும் பாக்கியவான்களாயிருப்பர் (நீதி. 20 : 7) நல்ல குடும்பத்தில் நல்ல தலைமுறை மறைந்திருக்கிறது.

## 3. திருமண வாழ்வில் நல் எதிர் நோக்கு :

(தி.வெளி 19 :7-9; தி.வெளி. 21 : 2,3)

இவ்வுலக குடும்ப வாழ்வின் நோக்கம் நாம் பூரணர் ஆக்கப்பட்டு மணவாளனாகிய ஆட்டுகுட்டியோடு இணைந்து கொள்ளுதல் ஆகும். இதற்கு பரலோகத்தில் மணவாளன் வரும்போது நாம் ஆயத்தமுள்ள கன்னியர்களாக இருக்க வேண்டும். நமது செயல்பாடு இறைவன் விரும்பதக்கதாக அமைய வேண்டும். மேலும் இறைவனுடைய அரசிற்கு நம்மை பூரணபடுத்தும் குடும்ப வாழ்வாக இருப்பது நல்லது. (மாற்கு 12:25-ல்) மரித்தோர் உயிரோடு எழுந்திருக்கும்போது கொள்வினையும் கொடுப்பினையும் இல்லை. அவர்கள் பரலோகத்திலிருக்கும் தேவதூதர்கள் போல் இருப்பார்கள் என்பது ஒரு பூரண வளர்ச்சியினை காட்டுகிறது. இது இவ்வுலகத்தின் நம் குடும்ப வாழ்க்கையில் செயல்படுத்தும் புனித தன்மையினை வலியுறுத்துகிறது எனலாம். இந்த மேலான சிந்தனைகளோடு இல்லறவாழ்க்கையினை இனிதுடன் நடத்த இறைவன் துணை செய்வாராக.

அருள்திரு. **Dr. P.J. ஜெயசீலன்**

**15-08-2011** | *இந்திய விடுதலைத் திருநாள்*

# நீதிக்கான விடுதலை

## FREEDOM FOR JUSTICE

விப. 23:1-9 கலா. 5:1-6

திபா. 18:16-24 லூக். 6:20-26

*"கிறிஸ்து அடிமை நிலையிலிருந்து நம்மை விடுவித்து நமக்கு உரிமை வாழ்வை அளித்துள்ளார். அதில் நிலைத்திருங்கள். மீண்டும் அடிமைத்தளை எனும் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக் கொள்ளாதீர்கள்." கலா 5:1*

**மன்றாட்டு :** விடுதலையருளும் கடவுளே, எங்களுக்கு விடுதலை வழங்கி நாட்டை சிறப்பாய் கட்டும் பணிக்கு அழைக்கிறீர். உண்மையான சிறந்த பாதையை எங்களுக்கு கற்றுத்தந்து, பணிவிடையேற்க அல்ல பணிவிடை செய்ய எனும் கிறிஸ்துநாதரின் மனநிலையோடு பொதுநலன் பேண உமதருள் பெற வேண்டிக்கொள்கிறோம். - ஆமென்.

ஆங்கிலேயரின் ஆளுகைக்குட்பட்டிருந்த நாம் 1947 ஆகஸ்ட் 15 அன்று விடுதலையடைந்தோம். விடுதலை என்பதன் கிரேக்கச் சொல் "Eleutheria". இதன் பொருள்,'உரிமை பெற்றவன்' என்பதாகும். விடுதலை மானுடம் சார்ந்தது மட்டுமல்ல முழு படைப்புக்கும் உரியது. கடவுள் தம் திருமைந்தர் இயேசு கிறிஸ்துவை உலகுக்கு தந்து முழு படைப்புக்கும் நீதிக்கான விடுதலை அளித்திருக்கின்றார்.

இயேசு கிறிஸ்துவின் சிலுவைப்பாடு, மரணம், உயிர்த்தெழுதலினாலும் தூய ஆவியாரின் துணையுடன் மனுக்குலம் நீதிக்கான விடுதலையை பெற்றுள்ளது என்று தூய பவுலடியார் கலாத்தியருக்கு கடிதம் எழுதுகின்றார். விடுதலை தரும் உண்மைகளை தியானிப்போம்.

### *1. அடிமை நிலையிலிருந்து விடுதலை :*

கிறிஸ்து அடிமை நிலையிலிருந்து நம்மை விடுவித்தார் (கலா. 5:1). விடுதலை மனிதரின் பிறப்புரிமை. எல்லா மனிதர்களும் விடுதலைக்காக போராடவும், தியாகம் செய்யவும் தயாராயிருக்கிறார்கள். இயேசு கிறிஸ்துவின் விடுதலைப் பணி தரித்திரர், பாதிக்கப்பட்டவர்கள், சிறைப்பட்டவர்கள் என்று எல்லோரையும் இணைத்து செயல்படுத்தப்பட்ட பணியாகும். இது உரோ. 6: 17-18-லும் தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது. விடுதலை எப்படியும் வாழலாம் என்பதற்கு அல்ல நிபந்தனைகளை கைக்கொண்டு வாழவே. மனிதன் தீமை செய்யும்போது விடுதலை

பாதிக்கப்படுகின்றது. சுற்றுப்புற சூழல் மாசுபடுத்தப்படும்போது மற்றவர்களின் விடுதலை பறிபோகிறது. நாம் அனைவரையும் விடுதலை நிலைக்கு வழி நடத்த வேண்டும்.

கறுப்பின மக்களின் விடுதலைக்காகவும் சமூக அமைதிக்காகவும் போராடியவர் தென் ஆப்பிரிக்க தலைவர் நெல்சன் மண்டேலா, அமைதிக்காக நோபல் பரிசு பெற்றவர். அவரது பிறந்த நாளான ஜூலை 18-ம் தேதி ஆண்டுதோறும் சர்வதேச மண்டேலா தினமாக கொண்டாடப்படுகிறது. நெல்சன் மண்டேலா பணபலம், அதிகாரபலம் இல்லாமல் மக்களுக்காக போராட்டம் நடத்தி வெற்றி பெற்றவர் என்று புகழாரம் சூட்டியுள்ளார்கள். அனைவரும் அடிமை நிலையிலிருந்து விடுதலை பெற்றனர்.

## 2. அழியா வாழ்வு பெற விடுதலை :

....நமக்கு உரிமை வாழ்வை அளித்துள்ளார்; அதில் நிலைத்திருங்கள். (கலா. 5:1)

அன்பர்களே, நாம் அழியா வாழ்வு பெற மாமிச செயலை விட்டுவிடுவோம். நாம் உரிமை வாழ்வுக்கு அழைக்கப்பட்டிருக்கிறோம். அந்த உரிமை வாழ்வு தீய செயல்களுக்கு வாய்ப்பாய் இராதபடி பார்த்துக் கொள்ளுங்கள் என்கிறார் பவுலடியார். இயேசு கிறிஸ்துவில் பெற்றுக்கொண்ட விடுதலையை சாதகமாக கொண்டு மாம்சத்தின் போக்கில் செல்ல நாம் இடமளிக்கக்கூடாது, இது அழிவுக்கு வழி நடத்தும், (கலா. 5:15; உரோ 8:6).

இந்தியா சுதந்திரம் பெற காரணமாக அமைந்த போராட்டங்களுள் மிக முக்கியமானது ‘வெள்ளையனே வெளியேறு’ போராட்டம். இதில் லட்சக்கணக்கான மக்கள் ஒன்று திரண்டு ஆங்கிலேயர்களுக்கு எதிராக போராட்டம் நடத்தினார்கள். இதில் பேசிய மகாத்மா காந்தி ‘செய்’ அல்லது ‘செத்துமடி’ என்ற கோஷத்துடன் துவக்கி வைத்தார். காந்தி, நேரு , உள்ளிட்ட அனைத்து காங்கிரஸ் தலைவர்களையும் ஆங்கிலேயர், சிறையிலடைத்தார்கள். இதனையடுத்து இப்போராட்டம் நாடு முழுவதும் தீவிரமடைந்தது. இது ஆங்கிலேயரின் மனதில், இனிமேலும் இந்தியாவை நாம் ஆள முடியாது என்று உணர வைத்தது. 1947 ஆகஸ்ட் 15 ஆம் நாள் இந்தியா சுதந்திரக் காற்றை சுவாசித்தது, அழியா வாழ்வு பெற வழி நடத்தினார்கள்.

## 3. அனைவருக்கும் விடுதலை :

மீண்டும் அடிமைத்தளை எனும் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக் கொள்ளாதீர்கள் (கலா. 5: 1).

இயேசு கிறிஸ்து உலக மீட்பர் என்பதே சத்தியம். நாம் அவரை நம் சொந்த வாழ்வில் மீட்பராக ஏற்றுக் கொண்டால் நாம் அனைவரும் விடுதலை பெறுகிறோம். பாவத்தின் தண்டனையிலிருந்து விடுதலை. பயத்தினின்று விடுதலை, சுயத்தினின்று விடுதலை, மனிதரினின்று விடுதலை பெற்றுக் கொள்கிறோம். கிறிஸ்துவின் கட்டளை எது? அன்பின் அடிமைகளாயிருங்கள். ஒருவர் மற்றவருடைய சுமைகளை தாங்கிக் கொள்ளுங்கள். இவ்வாறு கிறிஸ்துவின் சட்டத்தை நிறைவேற்றுவீர்கள் (IIகொரி. 9:19, Iபேதுரு. 2:16).

நல்ல வாழ்வு தியாகம் நிறைந்தது. யாரோ ஒரு சிலருக்காகவே அனைவரும் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். கிறிஸ்தவர்கள் சக மனிதர்களுக்காக வாழ வேண்டும். அனைவருக்காகவும் வாழவேண்டும். கிறிஸ்து அருளும் விடுதலை முழுமையான விடுதலை. சமயம், சமூகம், கலாச்சார தகவுகளை தகர்த்து உண்மையினால் அருளப்படும் விடுதலை அதுவே முழுமையாக அனைவருக்கும் கிடைக்கும் விடுதலை.

சுதந்திர போராட்டத்தில் மிக குறைந்த வயதில் தூக்கிலிடப்பட்டவர் குதிராம்போஸ். பிளேக் நோய் பாதித்த மக்களை தனியே அடைத்து சித்திரவதை செய்த பிரிட்டிஷ் அதிகாரிகளை குதிராம் போஸ்சும், பிரபுல்லசகியும் சுட்டனர். எனினும் அதிகாரிகள் தப்பிவிட்டனர். பிரபுல்லசகி தற்கொலை செய்து கொண்டார். குதிராம்போஸ் தனது 15-ம் வயதில் தூக்கிலிடப்பட்டார். இவ்வாறு அனைவருக்கும் விடுதலைக்காக வித்திட்டவர்களை நன்றியுடன் நினைவுகூருவோம்.

ஆங்கில அடிமைத்தனத்திலிருந்து நாம் விடுதலை பெற்றும் முழு விடுதலையினை நாம் பெற்றுள்ளோமா? ஜனநாயக உரிமைகளை நாம் அடைந்துள்ளோமா? இனம், மொழி, நிறம், இடம், பொருளாதாரம், கலாச்சாரம் என பிரிவுபட்டுள்ளோமே. கிறிஸ்து இயேசுவில் கிடைக்கும் விடுதலையுடன் விடுதலை திருநாளை கொண்டாடுவோம்.

அருள்திரு. **M.P. *விஜயகுமார்***

**21-08-2011**

# திருமுழுக்கு எனும் திருவருட்சாதனம்

## THE SACRAMENT OF BAPTISM

விப. 14:15-31 தீத். 3:3-8
திப. 32 யோவா. 3:1-8

*"நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின் படியே மறு ஜென்ம முழுக்கினாலும் பரிசுத்த ஆவியருடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார்." தீத்து. 3:5*

**மன்றாட்டு : என்றென்றும் வாழும் கடவுளே, உமது பேரிரக்கத்தால் திருமுழுக்கின் வாயிலாய் நீர் எங்கள் ஆண்டவரென்றும், நாங்கள் உமது மக்கள் என்றும் உறுதி செய்துள்ளீர். உமது உடன்படிக்கையில் எங்களை ஏற்றுக்கொண்டிருப்பதற்காக நன்றி படைக்கின்றோம். எங்களை உமது அன்பிலும், வழிகாட்டுதலிலும், நம்பிக்கையிலும் மேலும் வளரச்செய்து சோதனைகளுக்கும், தீமைகளுக்கும் நீங்கலாக்க வேண்டிக்கொள்கிறோம். - ஆமென்.**

உண்மையான ஆன்மீக வாழ்வின் சான்றிற்கும், அனுபவத்திற்கும் வெளிப்படையான அடையாளங்களாக திருச்சபையில் (சீர்திருத்தச் திருச்சபைகள்) இருபெரும் திருவருட்சாதனங்கள் சிறப்பிடம் பெறுகின்றன. அவை திருமுழுக்கு, திருவிருந்து என்பவைகள். மனமாற்றம் பெற்ற மனிதன் வெளிப்படையாக தான் பெற்ற மனமாற்றத்திற்கு அடையாளமாக திருமுழுக்கை பெற்ற திருச்சபையின் உறுப்பினராகின்றார் கிறிஸ்துவின் அடியவர்களாக திருமுழுக்கின் வழி தன்னை இணைத்து கொள்கின்றனர். இன்று திருமுழுக்கை ஓர் சடங்காகவும் கடமையாகவும் கருதுவதால் அதன் முக்கியத்துவம் உணர முடியாநிலை ஏற்பட்டுள்ளது. இதனால் கிறிஸ்தவர்களிடேயே குழப்பங்கள் ஏற்பட காரணம் திருமுழுக்கு பற்றிய தெளிவான போதனை இன்மையே ஆகும். திருமுழுக்கு புதுவாழ்வுக்கு உட்படுதல் என்ற ஆன்மீக பொருளை உள்ளடக்கியது என்பதை நமக்கு வலியுறுத்துகிறது. இந்த உண்மை செய்தியினை முழுக்கு முனிவர் யோவானின் பணியில் நாம் காணமுடியும் (மாற். 1:4,5) (மத்தேயு 3:4-11). திருமுழுக்கின் உண்மையை இன்று நாம் வாசிக்க கேட்ட திருமறை பகுதியினூடாய் அறிந்து கொள்ள முயல்வோம்.

## 1. *திருமுழுக்கு புதுவாழ்வுக்கு அடையாளம் :* (வி.பா. 14:15)

இஸ்ரவேலர் அடிமைத்தன வாழ்வின் கொடுமையிலிருந்து தப்பி விடுதலை வாழ்வுக்கு சுதந்திர மனிதராய் புதுவாழ்வுகாண இந்நிகழ்வு காரணமாய் அமைந்தது. Iகொரி. 10:2-ன் படி அவர்கள் அனைவரும் மோசேயாக இணைந்திருக்கும்படி மேகத்தாலும், கடலாலும் திருமுழுக்குப் பெற்றார்கள். இங்கு எகிப்தில் இஸ்ரவேலர் அடைந்த 400 வருட அடிமைத்தன வாழ்விலிருந்து விடுதலை வாழ்வு நோக்கி திரும்பும் அடையாளமாகிறது எனலாம். இந்த புதுவாழ்வு இஸ்ரவேலர்களை உடன்படிக்கைக்குரியவர்களாக வாழ வாக்குத்தத்த நாட்டை சுதந்தரிக்க, இறை சமுதாயமாய் செயல்பட வழிகாட்டியது. தி.ப. 2:38-ன் படி பாவங்களிலிருந்து மன்னிப்பு பெறுவதற்காக பேதுரு அழைக்கிறார். மனம்திரும்பி பாவ மன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் திருமுழுக்கு பெற்றுக்கொள்ளுங்கள். புதுவாழ்வுக்கு அடையாளம் திருமுழுக்கு. அதன்வழி புதுவாழ்வுக்கு ஆயத்தப்படுத்தும்போது தூயஆவியரின் அருள் கொடையால் சகல உண்மைக்குள் வழி நடத்தப் பெற்று பாவத்தைக் குறித்தும் நீதியைக் குறித்தும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும் எச்சரிக்கப்பட்டு புதுவாழ்வில் நிறைவடைய அடித்தளமாகிறது திருமுழுக்கு.

## 2. *திருமுழுக்கு மறுபிறப்பின் அடையாளம் :* (தீத்து 3:5)

இறைவனின் இரக்கத்தால் புதுபிறப்பு அளிக்கும் திருமுழுக்கின் வழி புதுப்பிக்கும் தூய ஆவியராலும் இறைவன் நம்மை மீட்டார். கிறிஸ்துவை அறியும் ஒருவன் வாழ்வில் ஏற்படும் மாற்றம் ஓர் சீர்திருத்தமல்ல. அது மறுபிறப்பாகும். மறுபிறப்பு நமக்குள் இங்கேயே இப்பொழுதே நிகழும் ஒன்று. யோவான் 3:5-ன் படி ஒருவன் தண்ணீரினாலும் தூய ஆவியராலும் பிறந்தால் ஒழிய இறையாளுகைக்கு தகுதியுடையவன் ஆகான் என இறைமகன் இயேசு நிக்கேதேமுடம் கூறுகின்றார். நற்செய்தியாகிய இயேசு கிறிஸ்துவால் வாழ்வின் புத்தாக்கம் பெற்றவன் திருமுழுக்கின் வழி மறுபிறப்பின் நிச்சயத்தை தனக்கு சொந்தமாக்குகின்றான். பாவ சாயலில் பிறந்த மனிதன் நற்செய்தியின் தாக்கத்தால் புதுவாழ்வுக்கு அடி எடுத்து வைத்தல் ஆவியரால் பிறப்பதாகும். எனவே தான் தீத்துவுக்கு எழுதிய நிருபத்தில் இறைவன் நாம் செய்த நீதியின் படி இரட்சியாமல் தமது இரக்கத்தின்படியே மறுஜென்ம முழுக்கினாலும் பரிசுத்த ஆவியருடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார் என்கிறார்.

## 3. திருமுழுக்கு திருச்சபையின் ஒருமைப்பாட்டிற்கு அடையாளம் : (கலாத்தியர் 3 : 27-28)

திருமுழுக்கு பெற்ற அனைவரும் இயேசு கிறிஸ்துவுக்குள் ஒன்றாக்கப்படுகின்றார்கள். திருச்சபை என்னும் கிறிஸ்துவின் ஆளுமை தண்டையில் அனைவரும் ஒன்று என்ற உணர்வை திருமுழுக்கு நமக்கு தருகிறது.

இந்த அரிய உண்மைக்கு சான்றாய் வாழ்பவரே தூய ஆவியரால் புதுபிறப்படைந்தவர்கள். இவர்கள் அடிமைத்தளையிலிருந்து விடுதலை பெற்று கிறிஸ்துவின் வழி தந்தையாகிய கடவுளை அப்பா என அழைக்கும் உண்மை உறவில் நிலை நிற்பவர்கள். தூய திருமுழுக்கின் வழி மனுகுலத்திலிருந்த வேறுபாடாகிய கிரேக்கர், அடிமைகள், யூதர் என்ற பிரிவினை தன்மைகள் முற்றிலும் அழிக்கப்பட்டு அனைவரும் இறைவனின் சாயலில் புதுப்பிக்கபட்ட இறைமக்கள் என்ற ஒன்றுபட்ட வாழ்வுக்கு அடையாளமாகின்றனர். திருமுழுக்கின்வழி இனம், பால், நிலை அனைத்தும் கடந்து ஒன்றாக நிற்கும் ஒற்றுமையின் உணர்வை அடைய செய்கிறது. இதன் வெளிப்பாட்டை விசுவாச வாழ்வின் மூலம் இறை சமுதாயத்தை கட்டி எழுப்பவும் திருமுழுக்கு அடிதளமாய் அமைகிறது.

திருமுழுக்கு என்னும் சாக்கிரமந்து நமக்கு உணர்த்தும் இத்தன்மைகளை புரிந்து திருமுழுக்கின் போது அறிக்கையிட்ட விசுவாச அறிக்கையினை மீண்டும் தற்பரிசோதனை செய்வோம். திருமுழுக்கின் உண்மைக்கு சான்றாவோம். இறையாசி பெறுவோம்.

அருள்திரு. **J. ஜேம்ஸ் ஞானறோஸ்**

**28-08-2011**

# திருவிருந்து எனும் திருவருட்சாதனம்

## THE SACRAENT OF HOLY COMMUNION

இச. 26:1-11 மாற். 14:12-26

திபா. 16 Iகொரி. 11:23-34

*"ஆதலால் நீங்கள் இந்த அப்பத்தை உண்டு கிண்ணத்திலிருந்து பருகும்போதெல்லாம் ஆண்டவருடைய சாவை அவர் வரும்வரை அறிவிக்கிறீர்கள்." 1கொரி. 11:26*

**மன்றாட்டு : உன்னதரான கடவுளே, திருமைந்தர் இயேசுவின் வழியாய் மானுட வாழ்வின் முழுமையை எங்களுக்கு வெளிப்படுத்தியிருக்கிறீர். அனைவரையும் அன்பு செய்த அவரது மாதிரியை நாங்களும் செயல்படுத்தி நாங்கள் அவருக்குரியவர்கள் என்பதை உறுதிசெய்ய அருள் தாரும். என்றும் எங்களுள் வாழ்ந்து வழிகாட்டும் இறைமைந்தர் இயேசுகிறிஸ்து வழி வேண்டிக்கொள்கிறோம். - ஆமென்.**

முற்காலத்தில் உரோமைப் படையில் சேருவோர் பிறர்முன் வாக்குறுதிகளைக் கூறி, பதிவேட்டில் கையெழுத்திடுவது மரபு. தொடர்ந்து மேலதிகாரிகள் அவர்கள் காதுகளின் பின்புறம் அவர்களின் பதிவெண்களையும் பதிப்பர். அதனால் படைவீரர்கள் ஒருபுறம் படையில் சேருவதால் கிட்டும் வாய்ப்பு வசதிகளை நன்றியுடன் பறைசாற்றினர். மறுபுறம், தங்கள் பொறுப்புகளை உள்ளுணர்ந்து சிரமேற்றனர். இந்நிகழ்வையே சாக்கிரமந்து எனும் இலத்தீன் வாக்கு முதன்முதல் குறிப்பிட்டது. இவ்வாக்கிற்கு இணையான *மிஸ்டீரியம்* எனும் கிரேக்கச் சொல் வெளியாகும் மறைப்பொருள் என்பதைச் சுட்டும். இப்பின்னணியம் சார்ந்து வட ஆப்பிரிக்க பேராயர் அகுஸ்தீன் (கி.பி. 354-430) திருவிருந்து எனும் தூய கூட்டுறவில் உள்ளாக மறைந்து செயல்படும் இறைவனின் பல்வேறு இறைச் செயல்களையே அப்பமும் இரசமும் அடையாளம் ஆக்குகின்றன என்கிறார்.

### *1. தூய கூட்டுறவில் மலரும் துதிமலர்கள் :* (இச. 26:11)

கானானில் குடியேறியதும் ஆண்டுதோறும் கோதுமை அறுவடை முதல் நாள் முதல் ஏழு வாரங்கள் நன்றிப் பண்டிகைக் கொண்டாட இஸ்ரவேலருக்கு மோசே ஆணையிடுகிறார். 'நன்றி' என்பதற்கு, மோசே பயன்படுத்தும் பாராக் என்னும் எபிரேயச்சொல் 'துதி செலுத்தல் அல்லது இறைவனுக்கு நன்றிக்கடன்படுதல்' எனப் பொருள் தரும். அதன்படி இன்றும் இஸ்ரேல் குடும்பத்தலைவர்கள் கூடைகளில் முதற்பலன்களை

தொழுகைத்தலத்துக்கு சுமந்துவந்து ஆயரிடம் அதைக் கையளித்து இறைவா நீர் வாக்களித்த கானான் நாட்டில் நான் புகுந்துள்ளேன் என அறிக்கையிடுவர் (வ3). கானானில் புகச்செய்து, நிலங்களை ஈந்து, தங்கள் முயற்சிகளை வாய்க்கச் செய்த இறையருட்செயல்களுக்குரிய வெளி அடையாளங்களாகவே கூடையின் முதற்பலன்களை படைப்பர். தங்கள் சமகால மக்கள் நிலத்தை கடவுளாய் வழிபட்டு அவருக்காய் உழைத்து அவருக்கு தினமும் உணவூட்டுகையில், இஸ்ரேலர் 'நிலங்களைப் படைத்து, அவற்றை ஈவாய் தந்து' பராமரிக்கும் பொறுப்பு தந்து, கடவுளே தங்கள் முயற்சிகளுக்கு பலனாக காய் கனிகளை உருவாக்கினார் என அவருக்கு துதிமலர் சாற்றினர்.

மேலும் முதற்பலன் ஏந்திவரும் குடும்பத்தலைவர்கள், என் முன்னோர் நாடோடியராய் அலைந்து வாழ்வு தேடி எகிப்து சென்றனர். எகிப்தியர் எங்களை ஒடுக்குகையில் கடவுள் எங்கள் அழுகுரல்கேட்டு, தம் பலத்த கரத்தால் எங்களை விடுவித்து, செழுமைமிகு கானானில் புகச் செய்தார் என அறிக்கையிடுவர் (வ.5 9). இஸ்ரேலர் தம் வாழ்வு வரலாறு பிறப்பின்று, நீ பிறருக்கு ஆசீர்வாதமாயிருப்பாய் என தங்கள் முன்னோருக்கு கடவுள் அளித்த வாக்குறுதியில் ஆரம்பிக்கக் கண்டனர். தம் முன்னோரைத் தெரிவுசெய்து, அழைத்து, தம்முடன் தூய கூட்டுறவு (ஒப்பந்த) வாழ்வு வாழவைக்கிறார். தீமைகளிலிருந்து விடுவித்து புது நாட்டில் (கானானில்) புகவைக்கும் அவர் தம் வாக்குறுதி மற்றும் திருநோக்கைத் தங்களில் நிறைவேற்றுவார் எனும் தங்களது கடந்த, நிகழ், எதிர்கால இறையருட் செயல்களுக்கு அடையாளமாகவே கூடையின் முதற்பலன்களைக் கண்டனர்.

இயேசுநாதர் திருவிருந்தெனும் தூயகூட்டுறவின்போது, தமது உடல் மற்றும் குருதியை அப்பமும் திராட்சை இரசமும் அடையாளமாக்குவதாய் சுட்டி "நான் என்னை உங்களுக்கு ஈவாகத் தருகிறேன்" என்கிறார். வாழ்வின் இருப்பிடமான தம் குருதியை சிலுவையில் சிந்துவதாலும் வாழ்வின் அப்பமாகிய தம்மை சிலுவையில் நொறுக்கக் கையளிப்பதாலும் படைப்பனைத்தும் (மனுகுலம்) பெறும் பாவமன்னிப்பு, புது ஒப்பந்தத்தில் மலரும் தூய கூட்டுறவு போன்ற இறையருட் செயல்களையே அப்பமும் இரசமும் அடையாளமாக்குவதாகக் கூறி நன்றிப்படையலுக்கு அவர் இஸ்ரேலரையும், முழுமனுகுலத்தையும் அழைக்கிறார் (மாற். 14:22-23; எரே. 31:31-33; 2கொரி. 9:15).

## 2. தூயக் கூட்டுறவில் கனியும் அருட்பணிக் கனிகள் :

இஸ்ரேலரின் நன்றிப் பண்டிகையில் குடும்பத் தலைவர்கள் கொணரும் முதற்பலனை ஆயர் பெற்று பலிபீடமருகில் சமைப்பார். அதில் எழும் வாசனை இறைவனிடம் குடும்பத்தலைவர்களின் மன்றாட்டுகளைத் தெரிவிக்கிறது. பின் ஆயர் சமைத்த திருவுணவை குடும்பத் தலைவர்களுடன் பகிர்ந்து பேசுவர். அம்மகிழுவு விருந்தினை இறைவன் அளிப்பதாய் உணர்ந்து அவரது தூய்மையாக்குதல் மற்றும் உடன்படிக்கை உறவில் வளரும் வாய்ப்பாக அதனைக் கொள்வர்.

இத்தகைய எபிரேய பின்னணியத்தில் ஆண்டவர் இயேசு இறைமக்களுடன் (குறிப்பாக பாவிகள், ஏழைகளுடன்) தூயக்கூட்டுறவு பந்தியமர்ந்தார். அங்கு அவர் பகிர்ந்த இறைமன்னிப்பு மற்றும் புதுவாழ்வின் உறுதிபெற்றோர் (எ.கா. சகேயு, மகதலெனா மரியாள் போன்றோர் லூக் 19, மாற் 14) தம் குறைகளை அறிக்கையிட்டு இறையாளுகை தகவுகள் மிக்க புதுவாழ்வு புகுந்தனர். நிறை அன்புடன் இறைச்சான்று பகிரவும், அருட்பணிபுரியவும் அவர்கள் முன் வந்தனர்.

இயேசுநாதர் ‘அப்பத்தை’ இறைஅருட்பணிக்கு அடையாளமாக வைத்து பேசினார். செயல்பட்டார். எ.கா. ஐயாயிரம் மற்றும் ஏழாயிரம் மக்களுக்கு உணவூட்டும் நிகழ்வுகள், யூதர் மற்றும் பிற இனத்தவரை உள்ளடக்கும் நிறைவாழ்வூட்டும் அருட்பணி அடையாளங்களாய் அமைந்தன (யோவா. 6:32-33; மாற் 6:37-38; 8:8-9). தொடர்ந்து அநீதி, அழிவுகளின் ஆற்றல் அதிகாரங்களை முறியடித்து உயிர்த்தெழுந்த ஆண்டவர் மீண்டும் திருவிருந்து எனும் தூயக் கூட்டுறவுகளை தம் சீடருடன் தொடருகிறார் (லூக். 24:30; 39-44; யோவா. 21:12). இனிமேல் திருவிருந்தை ‘இறுதி இராவிருந்து’ என்பதைவிட ‘ஆண்டவரின் அருள்விருந்து’ என்பதே பொருத்தம்.

இன்று திருவிருந்தை ‘இறையாளுமையின் விருந்து’ அல்லது ‘முழுபடைப்பையும் புதுமையாக்கும் இறையரசின் முன்சுவையாய்’ காண்கிறோம். எங்கெல்லாம் உடைந்த உள்ளங்கள் குணமாகின்றனவோ, சிறையுற்றோர் விடுதலையடைகின்றனரோ, ஏழைகள்-தேவையிலிருப்போர்-நோயுற்றோர் நிறைவாழ்வு நற்செய்தி பெறுகின்றனரோ அங்கு அவையெல்லாம் முழுபடைப்பையும் புதுப்பிக்கும் இறையருட்செயல்களின் வெளி அடையாளங்கள் ஆகின்றன. திருவிருந்தெனும் தூயகூட்டுறவுகளில் பங்கேற்போர் அவ்வருட்செயல்களில் பங்கேற்கின்றனர் (லூக். 4:18-22; மத். 11:3- 6; 25:34-40).

'ஆண்டவரை நினைவுகூருதலே' தூய கூட்டுறவின் மையச் செயல். 'நினைவுகூரல்' என்பது 'கடந்த கால தூய கூட்டுறவு நிகழ்வுகளை நினைத்துப் பார்த்தல்' மட்டுமன்று உயிர்த்த ஆண்டவருடன் இணைந்து அவர் கடந்த-நிகழ் எதிர் காலங்களில் தொடரும் அருட்செயல்களை அடையாளங் கண்டுணர்ந்து துதிமலர் சாற்றுவதுடன் அவர் தரும் ஆணை-ஆலோசனைகளை உரோமை படைவீரர்போல் சிரமேற்று அவரது அருட்பணிக்கனிகளை ருசித்தலும் வேண்டும்.

அனைத்திலும் சிறப்பாக, தற்பரிசோதனையிலும், தாழ்மையுடன் திருந்துவதிலுமே தூய கூட்டுறவு நிலைக்கிறது, (உங்களில் ஒருவரது மனநிலை) மாய்மால வாழ்வு, பண பதவி ஆசை என்னையே காட்டிக் கொடுத்து விடுகிறது எனக்கூறி இயேசுநாதர் தம் சீடர்களை திருவிருந்தின் முதற்கட்டத்திலேயே தற்பரிசோதனைச் செய்யவைக்கிறார் (மாற். 14:18-19). கொரிந்து திருச்சபையிலும் செல்வம், செல்வாக்குடையோர் தம் இல்லங்களைத் தொழுகை இடமாக கொடுத்திருந்தனர். அவர்கள் அடிமையாய் பிறர்கால்களைக் கழுவி, சிலுவையேற்றி பணிபுரியும் கிறிஸ்துவின் சிற்ப்புவிருந்தினராய் வறியோரைக்கண்டு. அவர்களுடன் ஒரே அப்பத்தில் பங்கேற்கும் பல்வேறு பங்காளிகள் (ஒரே ஆயரின் மந்தை, தலையுடனிணைந்த ஒருடலின் பல்வேறு உறுப்புகள் கொரி. 10:16-17; 12:17. ஆண்டவரது ஒரே பாத்திரத்தின் பங்காளிகள்) எனக் கண்டு கொண்டு தூய கூட்டுறவில் தொடரக்கேட்கிறார் பவுல் அடியார்.

**நிறைவுரை:**

தூய கூட்டுறவு திருவிருந்தின் நிறைவாக இயேசுநாதரும், சீடர்களும் 'நன்றிப்பாடி' புறப்பட்டுச் சென்றனர் (மாற். 14:26). தூய கூட்டுறவை உருவாக்க அருட்பணித் தொடர்ச்செயல்வதில் திருப்பாடல்கள் தனியிடம் பெறுகின்றன. 'ஆண்டவர் என் பாத்திரத்தின் பங்கு..... நான் அசைக்கப்படுவதில்லை' போன்ற திருப்பாடல்கள் (திபா.1 6 : 5-8) கடவுள் நம்முடனும் நம் முன்னோருடனுமிருந்து நமக்கு கடந்த காலத்திலும் தொடர்ந்தும் செய்யும் அருட்செயல்களை நினைவூட்டுகின்றன. எனவே அருட்பணியாளர்கள் நம் முன்னோருடன் பற்றுறுதிக்கரங் கோர்த்து, நன்றித் திருப்பாடல் பல பாடி, தூயகூட்டுறவில் என்றும் அவரடி தொடருவோம், அருள்வாழ்வில் மகிழ்வோம்.

அருள்திரு. அறிவர். **செ. டொனால்டு சாமுவேல்**

**01-09-2011** *அருணோதய ஆராதனை*

# பாதுகாக்கும் கடவுள்

விப. 13:17-22

*“ ................. பகலிலே மேகஸ்தம்பமும், இரவிலே அக்கினி ஸ்தம்பமும் ஜனங்களிடத்திலிருந்து விலகிப்போகவில்லை.” விப. 12:21,22*

பாதுகாப்பு என்பது மிக முக்கியமான ஒன்று ஆகும். பாதுகாப்பாக வாழ்வதற்கு வீடு, மதில்சுவர் ................ போன்றவைகளும், பயிர்களைப் பாதுகாப்பதற்கு வேலி போன்றவையும் பயன்படுகின்றன. அதோடு கண்விழித்துக் காவல் பணி செய்வோரையும் காணமுடியும். ஆனால், கடவுள் தாமே கண்விழித்துக் காக்கிறார் (திபா. 121:4) என்றும், அவரது காவல் இல்லையேல் காவலாளர் விழித்திருந்து காவல் செய்வது வீண் (திபா.121:2) என்றும் திருப்பாடகர் குறிப்பிடுகிறார். அதோடு, கடவுள் தம்முடைய பிள்ளைகளை வேலியடைத்துப் பாதுகாக்கிறார் என்ற உண்மையை யோபு பக்தருக்கு அவர் அளித்தப் பாதுகாவலிருந்து உணர்ந்து கொள்ள முடிகிறது (யோபு 1:10). இவ்வாறு பாதுகாப்பருளி வழி நடத்தும் கடவுள், இஸ்ரயேலரது விடுதலைப் பயணத்தில் அவர்களைப் பாதுகாத்து வழிநடத்தினார் என்ற உண்மையை அறிந்துகொள்ளலாம். இப்புதிய மாதத்தில் அடியெடுத்து வைத்துள்ள நாம் கடவுள் இஸ்ரயேலருக்கு அளித்த பாதுகாப்பை குறித்து தியானிப்போமாக.

### *1. நிழலாய் பாதுகாக்கிறார் :* (விப. 12:21)

இஸ்ரயேலர் மகிழ்ச்சியோடு தங்கள் பயணத்தைத் தொடரவும், சுட்டெரிக்கும் வெயிலின் கொடுமையிலிருந்து பாதுகாக்கப்படவும், கடவுள்தாமே அவர்களுக்கு நிழலாய் முன் செல்கிறார். பாலையின் வெப்பத் தாக்கம் கொஞ்சமல்ல. சூரியனின் ஒளிக்கற்றைகள் எரிக்கக்கூடிய அளவிற்கு ஆற்றலுடையதாய் பூமியை வந்தடையும். அதன் கொடூரம் தம்முடைய பிள்ளைகளைத் தாக்காதபடி கடவுள் அவர்களைப் பாதுகாக்கிறார். இன்று வாழ்வுப் பயணத்திலே, வாழ்வை எரித்துவிடக்கூடிய அளவிற்குப்பல்வேறு பிரச்சினைகள், நெருக்கங்கள் எதிரிட்டு வரும் வேளையில் அவை நம்மைத் தாக்காதபடி முழுமையான பாதுகாவலை ஆண்டவர் அருளுகிறார். அதிலும் சிறப்பு என்னவென்றால், அந்த கொடிய வெப்பத்தை அவர் தம்மீது விழச்செய்து அவரது பிள்ளைகளுக்கு நிழல் கிடைக்கச் செய்கிறார்(திபா.121:5). இதை ஓசாயா இறைவாக்கினர், பாடுபடும் தாசன் குறித்த சிந்தனையில் நமது துக்கங்களையும், வேதனைகளையும் அவர் சுமந்தார்.......(ஓசா. 53:4) என்கிறார். இதே போல், சாத்ராக், மேஷாக், ஆபேத்நெகோ ஆகியோர் நெருப்புச்சூளையில் தள்ளப்பட்டபோது நான்காவது ஆளாக இருந்து, நெருப்பின் அழிக்கும் ஆற்றல் முழுவதையும் பெற்றதாலேயே அந்த நெருப்பு குளிரூட்டப்பட்ட

நெருப்பாக (cool fire) அவர்களுக்கு விளங்கியது. இயேசு கிறிஸ்துவும் நமது பாவங்கள், வேதனைகள் அனைத்தையும் சுமந்தார். இப்புதிய மாதத்தில், நம்மை எதிரிட்டு வரக்கூடிய வீரிய ஆற்றல் கொண்ட நெருப்பு போன்ற அனுபவத்திலும் அவர் நமக்கு நிழலாய் இருந்து காக்கிறார் என்ற உண்மையை உணர்வோம்.

**2. ஒளியாய் பாதுகாக்கிறார் :** (விப. 13:21)

பயணத்திற்கு ஒளி மிக இன்றியமையாதது ஆகும். இஸ்ரயேலரது விடுதலைப் பயணத்திலும் அவர்கள் தடைபடாமல் தங்கள் பயணத்தைத் தொடர கடவுள் அவர்களுக்கு ஒளியாக முன் செல்லுகிறார். ஒளியின்றி பயணம் செய்யமுற்பட்டால் பாதை மாறி செல்வதற்கும், ஆபத்தில் சிக்கிக் கொள்வதற்கும் அதிக வாய்ப்புகள் உண்டு. எனவே, எப்பேர்ப்பட்ட ஆபத்துமின்றி தமது மக்களைக் காத்து வழிநடத்துவதற்குக் கடவுள் முந்திக் கொள்கிறார். நமது வாழ்வுப் பயணத்திலும், சிலவேளை அதிகமான பிரச்சனைகளும், எதிரிடையான அனுபவங்களும் நெருங்கி நிற்கும் வேளை முன்னேறிச் செல்ல முடியாதபடி பாதைகளெல்லாம் அடைப்பட்டு வெறும் இருளாகவே காட்சித் தருவதுண்டு. அப்படிப்பட்ட வேளைகளில் ஒளியாக முன்செல்லும் கடவுள் புதுவழிகாட்டி வழிநடத்த வல்லவர் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். தூய பவுலாரின் கடல் பயணத்தின் போது சுழல் காற்றில் சிக்கி வாழ்வோடுப் போராடிக் கொண்டிருந்த வேளை பதினான்காம் நாள் இரவில் தென்பட்ட ஒரு சிறிய ஒளியின் மூலம் ஒருகரை கிட்டி வருகிறதாகக் கண்டு நிம்மதி பெருமூச்சு விட்டனர் (திப. 27:27). இன்றும் ஒளியாக முன் செல்லுகின்ற ஆண்டவர் இருளின் தன்மைகளை அகற்றி ஒளி நிறைந்த பாதையிலே நம்மை வழிநடத்துவதை நன்றியுடன் நினைவு கூருவோம்.

**3. உடனிருந்து பாதுகாக்கிறார் :** (விப. 13:22)

கடவுள் தம்முடைய பிள்ளைகளின் பயணத்தில் விலகிப்போகாதபடி அவர்களோடு இணைந்திருந்தார். ஆண்டவர் உன்னைக் காக்கிறார் எனவே யாதொரு தீமையும் உன்னை வந்து அணுகுவதில்லை (திபா.121) என்ற திருப்பாடகரின் கூற்றின் படியே ஆண்டவர் உடனிருந்து பாதுகாத்து வழிநடத்துகிறார். அவர் மனிதனோடு இணைந்திருக்கிறார் என்பதாலேயே அவருக்கு அளிக்கப்பட்ட முக்கியமான பெயர்களில் இம்மானுவேல் என்பதும் ஒரு பெயராகும் (மத். 1:23). எனது பிரசன்னம் உன்னோடு செல்லும் (விப. 33:14) என்றுரைத்த ஆண்டவர் இன்றும் நிறைவான பாதுகாப்பருளி வழிநடத்த ஆற்றலுள்ளவராய் இருக்கிறார். இயேசு கிறிஸ்துவும் சீடர்களின் கடல் பயணத்தின் போது அவர்களோடு இருந்து கொந்தளிப்பகற்றி அமைதியாய் பிரயாணம் தொடர துணையருளினார் (மாற். 4:35-41). எனவே இந்த புதிய மாதத்தில் அடியெடுத்து வைத்துள்ள நம் ஒவ்வொருவரது வாழ்விற்கும் நமது ஆண்டவர் நிழலாய், ஒளியாயிருந்து

பாதுகாப்பதோடு நம்மை விட்டு நீங்காமல் உடனிருந்து பாதுகாக்கிறார் என்பதனை உணர்ந்து நம்பிக்கையுடன் முன்னேறிச் செல்வோமாக.

அருள்திரு. **A. பிறைட் சாலமோன்**

**04-09-2011**

# திருச்சபையின் கல்வித் திருப்பணி

**CHURCHS' MINISTRY OF EDUCATION**

நீதி. 8:1-12 தி.ப. 8:26-38

திப. 119:97-104 மாற். 1:21-28

*"அவருடைய போதனையைக் குறித்து மக்கள் வியப்பில் ஆழ்ந்தார்கள். ஏனெனில் அவர் மறைநூல் அறிஞரைப் போலன்றி, அதிகாரத்தோடு அவர்களுக்கு கற்பித்து வந்தார்"*

*மாற்கு 1:22*

**மன்றாட்டு : ஆற்றல் நிறைந்த கடவுளே, அருளாசி பெற்ற உம் திருமைந்தர் பன்னிரு திருத்தொண்டர்களை அழைத்து, இறையாளுகையின் இரகசியங்களை கற்பித்தார். உமது திருச்சபையின் தூய பணிக்கு ஆயத்தப்படுவோரும் உம்மிடம் கற்கவும், வழிகாட்டுதல் பெறவும் அருள்தாரும். அர்ப்பணமுள்ள தூய வாழ்வுடன், உமது திருவார்த்தைகளையும், திருவருட்சாதனங்களையும் இறைமக்களுக்கு வழங்கி அன்பும் தூய்மையுமுள்ள வாழ்வுக்கு வழிகாட்ட வழியாகும் ஆண்டவர் இயேசுகிறிஸ்து வழி வேண்டுகிறோம். - ஆமென்.**

வட இந்திய திருச்சபையின் கால அட்டவணையில் ஆண்டுதோறும் பிப்ரவரி மாதம் 12 ம் நாள் நினைவு கூரப்படும் அருட்பணியர் அலெக்சாண்டர் டப் (Alexander Duff). திருச்சபையின் கல்வித் திருப்பணிக்கு இவர் சான்றாய் அமைந்தவர் என்பதில் தவறில்லை. இவர் ஸ்காட்லாந்திலுள்ள பெர்த்செயர் (Birthshaire) என்ற இடத்தில் 1806-ம் ஆண்டு ஏப்ரல் 26ம் நாள் பிறந்தார். புனித ஆன்ட்ரூஸ் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்று ஸ்காட்லாண்டு திருச்சபையின் இந்தியாவிற்கான முதல் அருட்தொண்டராக மாறினார். ஸ்காட்லாண்டிலிருந்து இந்தியா வரும் வழியில் இருமுறை கப்பல் சேதத்தினின்று தப்பினார். இன்னலின் மத்தியில் 1830ம் ஆண்டு கல்கத்தா வந்தடைந்தார். 24 வயது நிரம்பிய துடிப்புள்ள இளைஞராக நின்று கற்ற உயர் சாதி இந்து வாலிபர்களை மனமாற்றம் செய்வதற்காக கிறிஸ்தவ போதனைகளுடன் தொடர்புடைய மேலே நாட்டு இலக்கியம், மெய்யியல் மற்றும் விஞ்ஞானம் ஆகியவற்றை ஆங்கில மொழி வாயிலாக வழங்க வேண்டுமென தீர்மானித்தார். இதற்காக கல்லூரி ஒன்றை 1830 -ல் நிறுவினார். ஐந்து மாணவர்களுடன் துவங்கிய இக்கல்வி நிறுவனம் டப் அவர்களின் கடின உழைப்பால் விரைவில் 300 மாணவர்களுடைய கல்வி நிலையமாய் வளர்ந்தது. மக்கள் கல்வியில் முன்னேற்றம் அடைந்ததால்

தங்கள் சமுதாயத்திலுள்ள குறைபாடுகளை மறையச் செய்தனர். உடன்கட்டை ஏறுதலின் கொடூரமும், குழந்தைப் பருவ திருமணமும் விடை பெற ஆரம்பித்தன. கல்விப் பணியின் இவரது முயற்சி மருத்துவக் கல்லூரித் தோன்றவும், கல்கத்தா பல்கலைக்கழகம் அமையவும் காரணமாயிற்று. திருச்சபையின் கல்வித் திருப்பணிக்கு நாம் பின்பற்றும் வகையில் பல்வேறு வகையில் அலெக்சாண்டர் டப்பின் பணி நல்ல மாதிரி.

ஜீலியஸ் நைரரே என்பவர் கூறுவது போல சமுதாயத்தின் ஒட்டு மொத்த ஒருங்கிணைந்த விடுதலை தான் கல்வியின் நோக்கம். மானிட உடல் மற்றும் உள்ளம் சார்ந்த வளர்ச்சிக்கு எவையெல்லாம் தடையோ அவற்றையெல்லாம் தூக்கி எறியும் ஆற்றலைக் கொடுப்பது தான் கல்வி. முன்னாள் பாரதப் பிரதமர் திருமதி. இந்திரா காந்தி அவர்கள் கல்வி என்பது விடுவிக்கும் ஆற்றல் (Education is a liberating force) என்று ஒருமுறை குறிப்பிட்டார்கள். இந்த நாளின் சிந்தனைக்கென்று தரப்பட்டுள்ள நற்செய்திப்
பகுதியான மாற்கு 1:21-28 வரையிலான வசனங்களை மையமாக வைத்தது சிந்திக்கையில் இயேசுவின் போதனை முறைகள் மனிதனை விடுவிக்கும் ஆற்றலை தன்னகத்தே கொண்டதாக காணப்பட்டது என உணரலாம். இத்திருமறைப் பகுதியின் பின்னணியத்தில் நின்று இன்றைய திருச்சபை இயேசுவின் அடிச்சுவடைப் பின்பற்றி எத்தகைய கல்வித் திருப்பணியை விடுதலை நோக்கில் செய்ய முடியும் என்பதனை தியானம் செய்வோமாக.

## 1. கிராமங்களில் கல்விப்பணி :

இயேசுவின் திருப்பணியில் கற்பித்தல் (Teaching) பணி முதன்மைப்பட்ட ஒன்றாகக் காணப்பட்டது என சமநோக்கு நற்செய்தி நூற்கள் குறிப்பிடுகின்றன. மாற்கு 1:21 -ல் இயேசு ஓய்வுநாளில் தொழுகைக் கூடத்திற்குச் சென்று கற்பித்து வந்தார் என குறிப்பிடப்பட்டுள்ளது. மத். 4:23-ல் அவர் கலிலேயப் பகுதி முழுவதும் சுற்றி வந்தார்; அவர்களுடைய தொழுகைக் கூடங்களில் கற்பித்தார் என காண்கிறோம். மேலும் லூக். 4:15-ல் அவர் அவர்களுடைய தொழுகைக் கூடங்களில் கற்பித்து வந்தார் என்றும் குறிப்பிடப்படுகின்றது. யூதரின் தொழுகைச் கூடங்கள் ஓய்வு நாட்களில் வழிபாட்டிற்காகவும் இதர நாட்களில் கல்வி கற்கும் பள்ளிக்கூடமாகவும் பயன்படுத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.மெய்யியல் கோட்பாட்டினரைப் போலல்லாது இயேசு தீர்க்கர்களைப் போன்று கடவுளின் திட்டமான மீட்பைக் குறித்தும் அதற்கான மக்களின் மனமாற்றத்தைக் குறித்தும் போதித்தார் (மாற்கு 1:14,15).

மேலும் சமநோக்கு நற்செய்தி நூற்கள் அவர் சுற்றிலும் உள்ள ஊர்களுக்குச் சென்று கற்பித்து வந்தார் (மாற்கு 6:6) என்றும், அவர் மறைநூல் அறிஞரைப் போலன்றி அதிகாரத்தோடு அவர்களுக்கு கற்பித்து வந்தார் (மாற். 1:22) என்றும் உவமைகளால் இறை வார்த்தையை அவர்களுக்கு எடுத்துரைத்து வந்தார் (மாற். 4:33) என்றும் அவரது போதனைகளைக் குறித்து குறிப்பிடுகின்றன. சிறப்பாக இயேசுவின் அருட்பணித்தளமாக கிராமங்களே முதன்மை பெற்றன. பெத்சாயிதா என்ற மீன் பிடிக்கின்ற கிராமம் (மாற். 6:45; லூக். 9:10) மற்றும் கலிலேய திருப்பணியின் போது கப்பர்நகூம் போன்ற கிராமிய சிறிய பட்டணங்களிலும் போதித்தார் (மத். 9:1; மாற். 1:21; லூக். 10:15) (Jesus taught in the villages rather than in the cities of Palestine) பாலஸ்தீனாவின் பட்டணங்களை விடவும் கிராமங்களிலேயே இயேசு போதித்தார் என்கிறது திருமறை. இயேசுவின் போதனை மிகவும் சிறியவர்கள், திருச்சட்டத்தை நன்கு கற்றறியாதவர்கள் மற்றும் ஆயக்காரர்கள் பாவிகளுக்குரியதாக இருந்தது. இயேசுவின் போதனையை கேட்க திறந்த உள்ளம் தேவைப்பட்டது. இயேசுவின் போதனைகள் கோட்பாடுகளுக்குப் பங்களிப்பு செய்யாமல் கடவுளின் அன்பை தொடர்புப்படுத்தியதாய் அமைந்தது. இயேசுவின் வார்த்தையிலும் செயலிலும் அன்பின் செய்தி கூறி அறிவிக்கப்பட்டது.

இன்றைய திருச்சபையின் கல்விப் பணியில் கிராமியச் சூழலிற்கு முதன்மை தரப்படுகின்றதா? பல நேரங்களில் இந்த கல்விப்பணி வியாபாரமாக்கப்படுகின்றது என்ற குற்றச்சாட்டினை சந்திக்கவில்லையா? அன்று ஒதுக்கப்பட்டோராய் இருந்த பெண்களுக்கு தனிக் கல்விச்சாலையை பல எதிர்ப்பின் மத்தியில் தரங்கம்பாடியில் 1790-ல் திறந்து பணிபுரிந்தார் சீகன்பால்க். தென்திருவிதாங்கூரில் றிங்கல் தௌபே மற்றும் அருட் தொண்டர்கள் ஆலயத்தோடு கல்விச்சாலைகளை நிறுவினர். அவை அடிமைத்தனங்களின் அடித்தளங்களை அசைத்தது, அதன் விளைவே தோள்சீலைக்கலகம் எனலாம். நாமும் இன்று கிராமங்களில் கல்விப் பணிகளை உறுதிப்படுத்துவோமாக.

## 2. *அதிகாரத்துடன் கற்பித்தார்* (Teaching with Authority)

நற்செய்தியாளர்கள் தகவல் தரும் செய்தியின்படி இயேசுவின் போதனையில் முதன்மை பெறும் தன்மை அதிகாரமாகும். மாற்கு குறிப்பிடும் கப்பர்நகூம் தொழுகைக் கூடாரத்தில் நடைபெற்ற முதல் அற்புதத்தில் இயேசுவின் கற்பித்தலைக் கேள்விப்பட்ட மக்கள் கூட்டம்

அவரது கற்பித்தலினால் ஆச்சரியப்பட்டார்கள் (மாற். 1:22). ஏனெனில் மறைநூல் அறிஞரைப் போலன்றி இயேசு அதிகாரத்துடன் கற்றுக் கொடுத்தார்.

இயேசுவின்கால மறைநூல் அறிஞர்கள் யூத சமுதாயத்தின் முதன்மையான மூன்று வர்க்கங்களில் ஒன்றைச் சார்ந்தவர்கள். மேலும் தங்களது ஆசாரிய அதிகாரத்தினால் ஆற்றலைப் பெற்றுக் கொண்டனர். அவர்களது ஆதிக்கமானது தங்கள் பிறப்பாலோ அல்லது செல்வத்தாலோ அன்றி தாங்கள் கற்ற அறிவினால் பெற்றதாகும். ஜெயோக்கிம் ஜெரோமியாஸ் என்பவர் குறிப்பிடுகின்றபடி அறிவு மட்டுமே (It was knowledge alone) மறைநூல் அறிஞர்களுக்கு அதிகாரத்தைத் தந்தது. அதாவது தாங்கள் கற்ற அறிவினாலே அவர்கள் தங்கள் அதிகாரத்தை மகிழ்வுடன் அனுபவித்தனர். தங்களது திருச்சட்ட அறிவு மற்றும் சமய அறிவு அவர்களுக்கு அரசு நீதித் துறையிலும் கல்வித் துறையிலும் முக்கிய இடங்களை மறைநூல் அறிஞர்களுக்கு வழங்க அவர்களைத் தகுதிப்படுத்தியது எனலாம். இவர்களின் அதிகாரத்தை விட இயேசுவின் அதிகாரம் வேறுபட்டது.

மறைநூல் அறிஞர்கள் அதிகாரம் கண்டிப்பாக நிறுவன நிலையான அதிகாரம் எனலாம் (Institutional Authority) ஆனால் இயேசுவின் அதிகாரம் வேறுபாடான ஒன்று. இயேசுவுக்கு அவர் சமுதாயத்தில் அதிகாரப் பூர்வமான நிலை ஒன்றுமில்லை (No official standing in his society) செல்வம் சார்ந்த அதிகாரத்தையும் அவர் பெற்றிருக்கவில்லை. அவர் தலை சாய்க்க இடமின்றி மக்களை கவர்ந்திழுக்கும் நிலையில் சுற்றித் திரிந்தார். அவர் பாடத்திட்டத்தின் அடிப்படையில் கற்று தேர்ந்தவர் அல்ல. ஆனால் இயேசுவின் அதிகாரம் தமது சமுதாயத்தின் பாரம்பரியமான நிறுவனத்தினின்று வருவதல்ல. ஆனால்

தமது ஆள் நிலையான கவர்ந்திழுக்கும் அதிகாரம் உடையவராய் காணப்பட்டார். இந்த கவர்ந்திழுக்கும் ஆளுமை நிலையான அதிகாரம் (Charismatic authority) பழைய ஏற்பாட்டு இறைவாக்கினர்களுக்கு இணையாக இறைவாக்குரை நிலை எனலாம்.

இயேசுவின் கற்றுக் கொடுத்தல் மற்றும் போதனை இறையரசினை மையப்படுத்தியது. கடவுளின் மீட்பின் செயல்பாடு அவரது வரையறை அற்ற அன்பின் வெளிப்பாட்டிலிருந்து வருவதாகும். இவ்வாறு இயேசுவின் அதிகாரம் கடவுளை அப்பா என்று புரிந்து கொள்ளும் அனுபவத்தில் முற்றிலும் வேரூன்றியதாகும். இயேசு தம் அதிகாரம் தழுவிய கற்றுக்

கொடுத்தலினால் திருச்சட்டம் வழிபாடு குறித்த அறிவு சார்ந்த திறனாய்வாளராய்க் காணப்பட்டார் (மாற். 2: 23- 28). கடவுளைக் குறித்த புரட்சிகரமான சாயல் (லூக். 15: 1-32) அவர் போதனையில் காணப்பட்டது. மேலும் தம்மைப் பின்பற்றுபவரும் இத்தகைய பகுத்தறிவு தழுவிய நிலையை மேற்கொள்ள எதிர்பார்த்தார். பொதுவாக கவர்ந்திழுக்கும் ஆளுமையுடையவர்கள் (Charismatic Leader) தம்மைப் பின்பற்றுபவர் மீது ஆளத்துவ கட்டுப்பாட்டுடன் வைத்துக் கொள்வர். ஆனால் இயேசுவின் அதிகாரம் விடுதலை செய்யும் அதிகாரம். இயேசுவின் போதனையில் அன்பு கலந்த உரையாடல் நிலை காணப்பட்டது. இவ்வாறு அதிகாரத்துடன் போதித்த கிறிஸ்துவின் அதிகாரம் தாம் இறைத் தந்தையோடு கொண்டிருந்த உயரிய நட்புறவாலும், ஒடுக்கப்பட்டோரின் விடுதலைக்காக கலங்கிப் போன கருணை குணத்தாலும் ஏற்படுத்திக் கொண்ட அதிகாரமாகும்.

இதனால் தான் சட்டம், சமய சித்தாத்தங்களைக் கற்றுச் சேர்ந்த மறைநூல் அறிஞர்களுக்கில்லாத அதிகாரம் இயேவுக்கு இருந்தது. தான் கற்பிப்பது கடவுள் தந்த ஞானத்திலிருந்து வந்தது. அதை கற்பிப்பதற்காக உயிரையேத் தருவதென்றாலும் அதற்கும் தயார் என்றிருக்கிற தைரியம் கொடுத்த அதிகாரம். இந்த அதிகாரம் உள்ளிருந்து ஊற்றெடுப்பது. இப்படிப்பட்ட அதிகார கற்பித்தல் வரத்தை இன்று கல்விப் பணியில் ஈடுபடும் ஆசிரியர்கள் கண்டிப்பாகப் பெற வேண்டும். கடவுளுடன் நெருக்கமான தொடர்பு கொண்டு, பிறருக்கெனத் தன்னை உருவாக்கிக் கொண்டு, பணிபுரிவோரால் இயேசுவுக்கு இருந்த அதிகாரத்துடன் கற்பிக்க முடியும். நம் கல்விப் பணியின் நிலையை இக்கருத்தின் அடிப்படையில் நன்கு சிந்திப்போமாக.

இவ்வாறு திருச்சபையின் கல்வி கிராமப்புறங்களுக்கும் செல்ல வேண்டும். பாமர மக்களின் வாழ்வை உயர்த்துகின்ற கல்வி நிலையங்கள் அங்கே உருவாக்கப்படல் வேண்டும். வளர்ச்சியும் மாற்றமும் பெற வேண்டும். சமூக மாற்றத்தை உருவாக்குகிற உணர்வறிவு தருகின்ற கல்வி முறைகளை நாம் உருவாக்க வேண்டும். அப்போது தான் கல்வி என்றாலே சமூக மாற்றம் காண்பதற்கு வேண்டிய தகுதி என்ற நிலை வரும். இதற்கெல்லாம் இயேசுவின் கற்பிக்கும் முறை ஓர் ஆழமான மாதிரியாயிருக்கும்.

இக்கல்லூரியின் குறிக்கோள் தேர்ச்சிகளை உருவாக்குவதல்ல மாறாக மனிதனை உருவாக்குவது என்று ஒரு கல்லூரியின் குறிப்பேட்டில் எழுதப்பட்டிருந்தது. மனிதனாகவே கிறிஸ்துவின் கண்ணோட்டத்தில் அமைக்க நம் கல்வித் திருப்பணி துணை நிற்கட்டும்.

அருள்திரு. **W. ஸ்டான்லி ஜோண்ஸ்**

**11-09-2011** *பெண்கள் ஞாயிறு*

# பெண்களை ஆற்றல்படுத்தும் இயேசு

## JESUS EMPOWERS WOMEN

எஸ். 7:1-10 லூக். 13:10-17

திபா. 46:1-6 IIதிமொ. 1:1-5

*"இயேசு அவரைக் கண்டு அருகே கூப்பிட்டு, "அம்மா, உமது நோயிலிருந்து நீர் விடுவிக்கப்பட்டுள்ளீர்."* *லூக்கா 13:12*

**மன்றாட்டு : எங்கள் தாய், தந்தையரான கடவுளே, நாங்கள் வாழ்வின் நிறைவைத் தேடுகிறோம். வலுவிழந்தோராய் வரையறுக்கப்பட்ட பெண்களையும், குழந்தைகளையும் வலுப்படுத்தும் உமது சிந்தையுடன் உண்மை வாழ்வு வாழ எதிர்நோக்கும் ஏக்கத்தைக் காண்பீராக. நாங்கள் பிறரது துயரம், மகிழ்ச்சி, பயம் இவற்றை தயவுடன் பகிர்ந்து, ஆண்களும், பெண்களும் இறைநீதி, சமாதானம் நிறைந்த சமத்துவ சமூகம் கட்டியெழுப்ப என்றும் எங்களுள் உறைந்து வாழ்வாகும் வல்லவர் இயேசுகிறிஸ்து வழி கேட்கிறோம். - ஆமென்.**

இயேசு பாதிக்கப்பட்டவர்கள் மீது அதிக அக்கரை கொண்டுள்ளார். சட்டத்தால் பெண்கள் ஆண்களை விட பின் நிலைக்கே தள்ளப்பட்டிருந்தனர். சமய வாழ்விலும் இரண்டாம் நிலை, விழாக்களின்போது பெண்கள் எருசலேமுக்கு திருப்பயணம் செய்யக்கூடாது, இத்தகைய பின்னணியில் தான் இயேசு பெண்களுக்கு மீட்பராக வந்தார். இயேசு யூதர்களின் கொடுமையான அமைப்பு முறையை உடைதெறிந்து விட்டு பெண்களை ஆற்றல்படுத்தினார். 18 ஆண்டுகளாய் நோயுற்றிருந்த பெண்ணை அன்று ஓய்வு நாளாக இருந்தாலும் கூட இயேசு குணப்படுத்துகிறார். லூக். 13:12 ஓய்வு நாள் இருப்பது மனிதனுக்காகவே, மனிதர்கள் ஓய்வுநாளுக்காக அன்று என போதித்த இயேசு, அந்த மனிதர்கள் ஆண்கள் மட்டுமல்ல, பெண்களும் ஆவர் என்பதை இதனால் தெளிவுபடுத்துகிறார். காணிக்கைப் பற்றி பேசும்போது இயேசு இரண்டு காசு போட்ட விதவை பெண்ணை பாராட்டுகிறார். ஏழை கைம்பெண்ணை புகழ்கிறார். இயேசு பாதிக்கப்பட்ட பெண்களை ஆற்றல்படுத்துகிறார்.

### *பெண்கள் நிமிர முடியாத சுமைகள்*

லூக். 13:10 "பதினெட்டு ஆண்டுகளாகத் தீய ஆவி பிடித்து உடல்நலம் குன்றிய பெண் ஒருவர் அங்கு இருந்தார்."

பாரம்பரியத்தில் மூழ்கிப்போன மக்கள் வாழ்ந்த பின்னணியத்தில் இருந்தப்பெண் 18 ஆண்டுகள் கட்டப்பட்ட பெண்ணாக வாழ்ந்திருக்கிறாள். மனிதரின் மனதையும், ஆவியையும், உடமையும் பறிக்கும் திறமைகொண்ட தீயவனால் சமூகத்துக்குள்ளே வாழவிடாதபடி 18 ஆண்டுகளாக கட்டப்பட்டிருந்தாள். கட்டவிழ்க்க பாரம்பரியம் விடவில்லை. ஜெப ஆலயத்தில் இந்த பெண்ணை மதிப்பதற்கு யாருமில்லை. இயேசு கடிந்து கொண்டார். ஆலயத்தில் வந்த மக்களுக்கு ஒரு நல்ல பாடம் புகட்ட தாகமுள்ள மிருகங்களுக்கு ஓய்வுநாளில் தண்ணீர் கொடுக்க தேவன் அனுமதிப்பாரானால் தேவ சாயலில் படைக்கப்பட மனிதன் மீது அக்கரைக்காட்டாமல் இருப்பாரா?

பழைய ஏற்பாட்டில் எஸ்தர் தனது சமூகத்தை காப்பதற்காக தனது வாழ்க்கையை கொடுப்பதற்கும் தயங்கவில்லை, தைரியமாக தனக்காக அல்ல பிறருக்காக பாடுபட கடவுளிடம் ஆற்றல் பெற்றாள். (எஸ். 7:5,6) எஸ்தர் மக்களது வருத்தத்திலும், பாடுகளிலும், பங்கேற்கிறாள். (எஸ் 4:15) இன்றும் நமது சமூகத்திலே பெண்கள் நிமிரமுடியாதபடி குடும்ப மற்றும் சமூக பிரச்சனைகளில் மூழ்கி கிடக்கின்றனர். உடன்கட்டை ஏறும்பழக்கம், பெண்சிசுகொலை தோள் சீலைக்கலகம் என்றெல்லாம் பெண்களுக்கு ஏற்பட்டதீமையின் கட்டுகளை உடைத்தோம். இன்னும் பெண்கள் சந்திக்கும் பிரட்சனைகள் ஏராளம். அவைகள் உடைக்கப்பட வேண்டும்.

## 2. இயேசுவின் கருணைமிக்க கண்கள் கண்கள் தந்த சுகம் (லூக். 13:12)

கருணை மிக்க கண்கள் இந்த சமூகத்தை பார்க்க வேண்டும். தீமையின் பிடியில் சிக்கியிருக்கும் பெண்களை இயேசு காண்கிறார். ஜெப ஆலயத்தில் பலர் கூடி இருந்தனர், ஆனால் அவரது கண்கள் தேவையுள்ள அந்த பெண்ணின் மீது பட்டன. அவளைத் தன்னருகே அழைத்தார். பழைய ஏற்பாட்டில் ஆகாரைக்கண்டார். அப்பொழுது அவள் என்னைக் காண்பவரை நானும் இவ்விடத்தில் கண்டேன் அல்லவா, என்று சொல்லி தன்னோடு பேசின கர்த்தருக்கு "நீர் என்னைக் காண்கிற தேவன்" என்று பெயரிட்டாள் (ஆதி. 16:13). ஆகாரின், பாடுகளைக் கண்ட கடவுள் இன்று நம்மையும் காண்கிறார்.

இன்று நம்மையும் காண்கிறார் என்பதை மறந்து போக வேண்டாம் சரீரத்தின் ஓர் உறுப்பில் ஏற்படும் துன்பமும் துயரமும், சரீரம்/உடல் முழுவதையும் பாதிக்கிறது. உடன் தீர்வு காண உடலுறுப்புகள் தாமாக விரைகின்றன. அதைப்போல் சமூகத்தில் காணப்படும் தீமைகளை

காண்கிறபோது திருச்சபையாக நின்று பெண்களின் மேம்பாட்டிற்கு தீர்வுகாண பாடுபட வேண்டும். இயேசு ஒதுக்கி விடப்பட்ட ஓரம் கட்டப்பட்ட பெண்களைக் கண்டார். உயிர்தெழுந்த இயேசு மகதலேனா மரியாள் என்ற பெண்ணுக்கே காட்சியளித்தார். மகதலேனா மரியாள் சீடர்களிடம் சென்று நான் ஆண்டவரைக் கண்டேன் என்றாள் யோ.20:17-18. நாமும் மற்றவர்களின் பாடுகளில் பங்களிப்போம்.

## இயேசுகிறிஸ்துவின் அருள்நிறைந்த வார்த்தைகள்

லூக். 13:12(b) அம்மா, உமது நோயிலிருந்து நீர் விடுவிக்கப் பட்டுள்ளீர்.

ஆண்டவரின் அருள்நிறைந்த வார்த்தைகள் விடுதலைப்பணிக்கு அழைப்பு விடுகிறது. அவரது வல்லமையின் வார்த்தை அவளது பெலவீனத்தை மேற்கொண்டது. இயேசு விதவையின் மகனை உயிரோடு எழுப்பும்போது அவளைப் பார்த்து கூறினார். அழாதே (லூக். 7:13) அருள்நிறைந்த ஆறுதலின் வார்த்தைகளுக்காக இன்று சமூகம் ஏங்கிக்கொண்டிருக்கிறது. இயற்கையின் கொடுமைகள் இரக்கமற்ற மனிதனின் செயல்கள், பெண் குழந்தைகளைக் கொல்லும் கொடூரம், பாலியல் கொடுமை, வரதட்சணை, என்ற சமூக குடும்ப பின்னணியங்களின் நொறுங்கிப்போன வாழ்விற்கு இயேசுவின் விடுதலையாக்கும் வார்த்தை நம்பிக்கை தருகிறது. விடுதலைப்பணி செய்ய வேண்டிய திருச்சபை தடுக்கிறது. இயேசு அவர்களைப் பார்த்து வெளிவேடக்காரரே, என்றார் (லூக். 18:16). 18 ஆண்டுகளாக பாதிக்கப்பட்ட அந்த பெண்ணிற்கு அருள்நிறைந்த வார்த்தைகளைக் கொடுத்து தேற்ற தவறிய சமூகத்தை இயேசு கடிந்து கொள்கிறார்.

## அரவணைக்கும் இயேசுவின் கரங்கள்

லூக். 13:13 "தம் கைகளை அவர் மீது வைத்தார்"

விலகிநின்று வேடிக்கைப் பார்க்கும் சமூகத்தில் இயேசு தொடுவது வியப்பாகிறது. 18 ஆண்டுகள் பாதிக்கப்பட்ட பெண்ணை அரவணைக்க வேண்டிய திருச்சபை அவர் விடுதலைக்காக உதவிக்கரம் நீட்ட வேண்டிய மக்கள் கண்டுகொள்வில்லை. சமூக தீமைகளில் கட்டிவைக்கப்பட்ட அனேகரைத் தொட்டு விடுவித்தார்.

ஒருவரை இழிவுபடுத்த யூதர்கள் அவரை சமாரியர் என்று அழைத்தனர் (யோவான் 4:48). மீட்பு எல்லோருக்கும் உண்டு என்பதை உணர சமாரிய பெண்ணிடம் இயேசு தாமே உரையாடலை ஆரம்பித்தார். அவரிடம் தண்ணீரைக் கேட்கிறார், அரவணைக்க கூடாது என்பவர்களை இயேசு அரவணைக்கிறார்.

## ஆற்றல் பெற்ற பெண்கள் கடவுளைப் புகழ்ந்தனர்

லூக். 13:13

அவள் நிமிர்ந்து கடவுளைப் போற்றிப் புகழ்ந்தார். ஆற்றல்பெற்ற பெண் உடனே நிமிர்ந்தாள்; ஜெப ஆலயத்தில் அன்று நடந்த ஆராதனையை யாரும் மறக்கமுடியாது. 18 ஆண்டுகள் தீமையினால் கட்டி வைக்கப்பட்டிருந்த பெண்ணை நிமிர்ந்து நிற்க கட்டளை இடுகிறார். இந்த தீமையின் பிடியில் விடுதலை பெற்ற பெண் கடவுளை மகிமைப்படுத்தினாள்.

இன்று திருச்சபை வழியாக வாழ்வு பெற்றோர் அனேகர். பாரம்பரிய கதை பேசி கடவுளை மகிமைப்படுத்த மறந்து வாழ்கின்றனர். வாரத்தின் முதல்நாள் நறுமண பொருட்களை எடுத்துக்கொண்டு மரியாள் கல்லறைக்குச் சென்றார் (லூக். 24:1; மாற். 6:1-2). இயேசுவின் ஆற்றல்படுத்தும் பணி ஆண் பெண் என்ற வேறுபாட்டை களைந்து இறைவனை மகிமைப்படுத்த அழைக்கிறது.

பவுல், ஆண் என்றும் பெண் என்றும் இல்லை, கிறிஸ்து இயேசுவோடு ஆற்றல் பெற்றவர்கள் ஒன்றாய் இருக்கிறார்கள். பெண்ணின் மதிப்பும், மாண்பும் ஆண்களுக்கு நிகரானது கலா. 3:28. தாழ்நிலையில் பெண்களை இயேசு ஆற்றல்படுத்துகிறார்.

திருமதி. **லலிதா தேவகடாட்சம்**

*திருச்சபையின் முழு முதல் வேலை உலகம் முழுவதும் சுவிசேஷத்தை அறிவிப்பதே.*

ஆஸ்வால்டு ஸ்மித்

**18-09-2011**

# பல்சமய சூழலும் நற்செய்தியும்

## THE GOSPEL AND RELIGIOUS PLURALISM

| | |
|---|---|
| ஏசா. 45:1-8 | தி.ப. 17:16-31 |
| தி.பா. 67 | மத். 15:21-28 |

*"அம்மா, உமது நம்பிக்கை பெரிது." மத். 15:28*

**மன்றாட்டு : மாட்சிநிறை கடவுளே பல்சமய நம்பிக்கை கொண்ட சமூக சூழலில் எங்களை அழைத்து உமது படைப்பின் பலநிலையிலான ஆசிகளை வெளிப்படுத்தியிருக்கிறீர். பிறரது சுதந்திரத்தை நாங்கள் மதித்து பூமிக்கு உப்பாகவும், உலகிற்கு ஒளியாகவும் எங்களை வெளிப்படுத்த அருள்புரிய உலகில் வாழ்ந்து வழிகாட்டிய இறைமைந்தர் இயேசுகிறிஸ்து வழிகேட்கிறோம். - ஆமென்.**

பல்வேறு சமயங்கள் நிறைந்துள்ள நாம் வசிக்கும் நாடான இந்தியா ஆசியா கண்டத்திலுள்ளது. ஆசியா கண்டம் பல்வேறு சமயங்களின் பிறப்பிடமாக இருக்கின்றது. ஒவ்வொரு சமயமும் தனக்கென கொள்கைகள், கோட்பாடுகளைக் கொண்டு தனித்துவம் பெற்று விளங்குகிறது. நமது அரசியலமைப்பு சட்டத்தின் படி ஒவ்வொரு இந்திய குடிமகனும் தான் விரும்பும் சமயத்தை பின்பற்றவும், அதனை பரப்பவும், வளர்க்கவும் உரிமை பெற்றுள்ளான்.

இத்தகைய சூழலில் கிறிஸ்தவமும் இந்தியாவில் ஒரு சிறந்த சமயமாக பரவியது. வளர்ந்தது வளர்ந்து கொண்டிருக்கிறது. பல வேளைகளில் சமயங்களுக்கிடையே அதனை பின்பற்றுகிறவர்களின் கருத்து மோதலினால் பல உயிர் பலிகளும் கை கலப்புகளும் தோன்றி மக்களை விரக்தியடையச் செய்துள்ளன. இச்சூழலில் கிறிஸ்தவ நற்செய்தியானது எதுவாக இருக்க முடியும் என்பதைப் பற்றி சிந்தித்து பார்ப்போம்.

### *பிற சமய மக்களை பாராட்டுதல் :* மத். 15:21 -28

இந்த திருமறைப் பகுதியில் திரு சீதோன் நாட்டு எல்லை புறத்தில் வசித்த ஒரு கானானிய பெண் குறித்து கூறப்பட்டுள்ளது. அந்த பெண் தன் மகள் குணமடைய வேண்டும் என்று விரும்பி இயேசு நாதரின் உதவியை நாடி வந்தாள். நாடி வந்த அவளிடம் எனது பணி காணாமல்

போன இஸ்ரவேல் மக்களுக்கு மட்டும்தான் என்று கூறினார். மேலும் பிள்ளைகளின் அப்பத்தை நாய்குட்டிகளுக்கு போடுகிறது நல்லதல்ல என்றார். எனினும் அப்பெண்மணி எஜமானின் மேஜையிலிருந்து விழும் துணிக்கைகளை நாய் குட்டிகளும் உண்ணும் அல்லவா? என்று கூறி தனது உறுதியான விசுவாசத்தை வெளிப்படுத்தினார். அவளது விசுவாசத்தைப் பாராட்டி உன் விசுவாசம் பெரிது என்று பாராட்டுகிறார். நூற்றுக்கு தலைவன் ஒருவன் தன் வேலைக்காரன் குணமடையும் படி ஆண்டவரிடம் வேண்டினான். ஆண்டவர் நான் வந்து குணமாக்குவேன் என்றார். ஆனால் நூற்றுக்கு தலைவன் நீர் என் வீட்டினுள் வர நான் தகுதியற்றவன் ஒரு வார்த்தை மாத்திரம் சொல்லும் என் வேலைக்காரன் பிழைப்பான்(லூக். 7 : 9) என்ற போது இஸ்ரவேலருக்குள்ளும் இப்படிப்பட்ட விசுவாசத்தைக் காணவில்லை என்று கூறி பாராட்டுகிறார். பல வேளைகளில் இஸ்ரவேலர் தங்களது விசுவாசத்தை விட்டு விலகி அந்நிய தேவர்களை நாடியதுண்டு. அவர்களை விட மேலானவர்களாக பிற சமய மக்களை கருதி இயேசு கிறிஸ்து அவர்களை பாராட்டியதை நாம் திருமறையில் காணலாம். அன்புக்குரியவர்களே எல்லா பிற மக்களிடமும் நல்ல செயல்பாடுகள் உண்டு. அதனை பாராட்டுகின்ற மனப்பக்குவம் நம்மிடம் வரும் போது அம்மக்களும் உண்மையாய் கிறிஸ்துவைக் கண்டு கொள்வர்.

## ***பிற சமய மக்களையும் கடவுளின் பிள்ளைகளாக உணர்தல்*** (ஏசா. 45:1-8)

இறைவாக்காளர் ஏசாயா கடவுள் கோரேஸ் என்ற புற இன அரசனை தமது தாசனாக பாவிக்கின்ற மிகச்சிறந்த போங்கை எடுத்துக்காட்டுகிறார். மேலும் கோரேஸ் அரசனை நானே அரசராக ஏற்படுத்தினேன் என்றும் விடுதலை கொடுக்கும் படி அவரது வலது கரத்தைப் பிடித்து திடன் கொள்ள செய்கிறேன். கோணலானவைகளை செம்மையாக்குகிறேன் என்று கூறுகிறார். இஸ்ரவேலர் கூறுவது போல நாங்கள் மட்டுமே கடவுளின் பிள்ளைகள் சுதந்திரங்கள் என்பது உண்மையாக இருக்குமெனில் கடவுள் கோரேஸ் என்ற புற இன மன்னனை தெரிந்து கொள்ளாமல் வேறொரு இஸ்ரவேலரை தெரிந்திருக்க முடியும். ஆனால் நேர்மாறாக அவர்களும் கடவுளின் பிள்ளைகள் தான் என்பதை உணர்த்தவே தமது மீட்பு பணியில் அவர்களை பயன்படுத்துகிறார். ஆண்டவரின் விடுவிக்கின்ற பணியை செய்கிறவர்கள் எல்லோருமே கடவுளின் பிள்ளைகள் தான் என்பதை தெளிவாக உணர்த்துகிறது. ஆமோஸ் 9:7 ல் அடிமையாயிருந்த மக்களை விடுவிக்கின்றவராக காட்டப்படுகின்றார். எனவே இந்த புரிந்து கொள்ளுதலை நமக்குள்

தெளிவுபடுத்தினால் பிற சமய உண்மையான விடுவிக்கின்ற பணியை செய்கின்ற பிள்ளைகளையும் கடவுளின் பிள்ளைகளாக ஏற்றுக் கொள்ள முடியும்.

**ஒரே கடவுளையே அறியாது வழிபடுகிறார்கள் என்பது உணர்தல் :** அப். 17:16 -31

பவுல் அத்தேனே பட்டணத்தில் நற்செய்தி பணியாற்ற சென்றிருந்தார். அத்தேனே பட்டணம் அந்நிய தேவர்களின் சிலைகளால் நிறைந்தது. அவருக்கு நற்செய்தி பணியாற்ற மிகுந்த கடினப்பாடாக இருந்தது. அவர் கூறிய நற்செய்தியை மக்கள் ஏற்றுக்கொள்ளாது அவரை வாயாடி என்று கூறினார். அப்போது பவுலடிகளார் அங்கு வாழ்ந்த மக்களின் நிலைப்பாடுளை புரிந்து கொள்ள ஆர்வம் காட்டிய பொழுது அவருக்கு நற்செய்தி அறிவிக்க புதிய வழி கிடைத்தது(வச. 23). ‘அறியப்படாத தேவனுக்கு’ என்ற வாசகம் வழியாக ஒரே கடவுளைக்குறித்து அறிவித்தார். அவர் அறிவித்த நற்செய்தி வழியாக பலர் ஒரே கடவுளை நம்புவதற்கு ஏதுவாக இருந்தது. காரணம் சில கருத்துக்கள் தவிர அவர்களும் கடவுளைப்பற்றி நம்பியிருந்தவை ஒன்றாக இருந்திருக்க கூடும். அதுமட்டுமல்ல பவுல் கூறவேண்டியவற்றை தெளிவாக திட்டமாக கூறுகிறார். மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார் என்பதே அந்த முக்கியமான செய்தி. சமயம், ஒரே கடவுள் நம்பிக்கை இவற்றின் முக்கிய நோக்கம் அனைவரும் தீமையை விட்டு விலகி நலமானதைச் செய்ய வேண்டும் என்பதே.

இன்று பலர் சமயத்தின் (கிறிஸ்தவ) சாரத்தை புரிந்து கொள்ளாது சமயம், கொள்கை அடிப்படையில் காழ்ப்புணர்ச்சி, பகையுணர்வு போன்றவற்றிற்கு இடம் கொடுத்து மனித நேயமற்ற மிருக செயல்களில் ஈடுபடுகின்றனர். மேற்கூறப்பட்ட நற்செய்தியை புரிந்து கொள்வோம். ஒரே கடவுளை ஆராதிப்போம். மனிதர்களாக வாழ்வோம். ஆமேன்.

திருமதி **ஹெர்லின் நெல்சன்**

**25-09-2011** முதியோர் ஞாயிறு

# முதியோரை ஏற்றுக் கொள்ளுதல்

## ACCEPTING THE AGED

ஏசா. 40:21-31 Iதிமொ. 5:1-10

திபா. 139:1-18 லூக். 2:25-38

*"முதியோரிடம் கடுமையாய் இராதே. அவர்களைத் தந்தையராக மதித்து ஊக்குவி." Iதிமொ. 5:1*

**மன்றாட்டு :** ஆதரவளிக்கும் ஆண்டவரே, முதிர்வதினால் பெலனிழந்து தனிமையில் தள்ளாடும் மக்களை தயவாய் கண்ணோக்கியருளும். அவர்கள் அமைதியோடும், மதிப்போடும் நடத்தப்பட்டு நம்பிக்கையில் பெலனடைந்து புதுபெலன் பெறவும், இறையன்பின் நடத்துதலையுணரவும் அருள்புரிய அரவணைக்கும் இரட்சகர் இயேசுகிறிஸ்து வழி வேண்டுகிறோம். - ஆமென்.

முதுமைப் பருவம் ஏனைய பருவங்களைப் போன்ற ஒரு பருவமாகும். திருமறையில் குழந்தைப்பருவம், வாலிபப்பருவம், முதுமைப் பருவம் என மூன்று பருவ நிலைகளும் விளக்கப்பட்டுள்ளன. இறையியல் கண்ணோட்டப்படி முதுமை என்பது வளர்ச்சி நிறைவு பெறுவதைக் குறிக்கும். ஒரு சில இடங்களில் மட்டும் முதுமை தொய்வு நிலையாக விளக்கப்பட்டுள்ளது. (திருப்பாடல் 31:9)

முதுமை எய்தும்போது நலக்குறைவு, வேலையின்மை, தனிமை இவைகள் ஏற்பட்டினும் இவைகள் வழியாக நிகழும் மறைவான வளர்வு நிலையை மறுக்க இயலாது. உடல்நிலையில் இழப்புகள் ஏற்பட்டினும் உள்ளான நிலையில் ஏற்படும் நிறைவு நிலையினை மறுப்பதற்கில்லை என புருசன் (1975) என்னும் அறிஞர் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய நாட்டுப் புள்ளி விவரப்படி 60 வயதும் அதற்கு மேற்பட்டோரும் முதியோர் என அழைக்கப்படுகின்றனர்.

1991 ம் வருட இந்திய புள்ளி விபரப்படி இந்திய மக்கள் தொகையில் 55 கோடி பேர் முதியோர். 2001 ம் ஆண்டில் இவ் எண்ணிக்கை 77 கோடியாக உயர்ந்துள்ளது. இந்தியாவின் மொத்த மக்கட்தொகையில் இது 7.7 விழுக்காடு ஆகும். முதியோர் எண்ணிக்கையில் இந்திய அளவில் மற்றெந்த மாநிலங்களைக் காட்டிலும் தமிழகமே முதலிடம் வகிக்கிறது.

உயர்ந்து வரும் இம் முதியோர் எண்ணிக்கையால் இவர்களை பராமரிப்பது தொடர்பாக குடும்பங்களிலும், சமூகத்திலும் பல்வேறு பிரச்சினைகள் உருவாகி வருகின்றன. முதியோரைப் பராமரிப்பது இந்திய

குடும்பங்களின் தலையாய கடமையாக இருந்து வந்துள்ளது. ஆனால் தற்போது இவ்வுயர்ந்த சிந்தனை பின் குறிப்பிடும் காரணங்களால் சிதைந்து வருகின்றது.

1. கூட்டுக்குடும்ப முறைகளில் ஏற்பட்டுள்ள தொய்வுநிலை.
2. குடும்பப் பொருளாதார முன்னேற்றத்தினை கருத்திற்கொண்டு ஆண்களுக்கு சமமாகப் பெண்களும் பல்வேறு பணியில் ஈடுபாடு கொள்வது.
3. அறிவியல் மற்றும் தொழில் நுட்ப முன்னேற்றத்தால் முதியோரை விட இளையோர் மதிக்கப்படுதல்.
4. நகர்மயமாதலால் மனித வாழ்க்கை இயலில் ஏற்பட்டு வரும் புதிய தகவுகளின் தாக்கங்களினால் குடும்ப உறவுகளில் ஏற்பட்டுவரும் இடைவெளி மற்றும் தலைமுறை இடைவெளி.
5. பணி மற்றும் கல்வி நிமித்தமாக பிள்ளைகள் தங்கள் பெற்றோரை விட்டுப்பிரிந்து வேறு இடம் செல்லுதல்.

முதியோரை இழிவுபடுத்தி மன உளைச்சலுக்குள்ளாகும் பழக்கம் மனித நாகரிகம் தொடங்கிய காலத்திலிருந்தே இருந்திருக்க வேண்டும். எனவே தான் இஸ்ரவேல் ஜனங்களுக்கு கடவுள் வழங்கிய நியாயப்பிரமாணத்தில் இப்பிரச்சினை இடம் பெற்றுள்ளது. மட்டுமன்றி, இயேசு கிறிஸ்துவின் போதனையிலும் இக்கருத்து சித்தரிக்கப்பட்டுள்ளது. தொடக்க திருச்சபையிலும் இப்பிரச்சனை இருந்ததால் தான் தூய பவுல் தன் கடிதங்களிலும் இதைக்குறித்து எழுதி எச்சரிக்கிறார்.

## 1. நியாயப்பிரமாணத்தின் நியமம் :

பத்துக் கற்பனைகளில் ஐந்தாவது கற்பனை"உன் தந்தையையும் உன் தாயையும் மதித்து நட" (வி.ப. 20:12; இ.ச. 5:16) என்பதாகும். இக்கற்பனைகளுக்குக் கீழ்ப்படிவது ஆயுளை நீடிக்கப்பண்ணும் எனவும் குறிப்பிட்டுள்ளார். முதியோரைத் தவறாகப் பேசி அடித்து அவமானப்படுத்துவோருக்கு மரண தண்டனை வழங்கப்பட வேண்டுமென நியாயப்பபிரமாணம் கூறுகிறது. மேலும் இக்கற்பனைக்குக் கீழ்படிவது ஜீவனையும் கீழ்படியாமலிருப்பது மரணத்தையும் கொண்டுவரும் என தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. (வி.ப. 21:15-17; மாற் 7:10) முதியோரை மதித்து நட என்னும் கட்டளைக்கு கீழ்ப்படிய முதற்படி

உடல், பொருளாதாரம் மற்றும் உளவியல் சார்ந்த நிலைகளில் முதியோரை தள்ளும் செயலில் ஈடுபடக்கூடாது. நியாயாப்பிரமாணத்தின் எதிர்பார்ப்பு யாதெனில் முதியோரின் உடல்நலம் சார்ந்த தேவைகள், பணத்தேவைகள், மன அமைதி சார்ந்த தேவைகள் பேணப்படவேண்டும் என்பதே.

முதியோரைப் பராமரித்தலுக்கான ஓர் சிறந்த எடுத்துக்காட்டை நாம் தொடக்கநூலில் 46:28-47:12 காணலாம். யோசேப்பு எகிப்து நாட்டின்

ஆளுநரானபோது தன் தந்தை யாக்கோபையும், வயது முதிர்ந்த தன் சகோதரரையும் எகிப்திற்கு அழைத்து வந்து அவர்களைப் பராமரித்த நிகழ்வு ஆகும். யோசேப்பு தம் தந்தையைக் கண்டவுடன் அவரை அரவணைத்து அவர் தோளில் சாய்ந்து கொண்டு வெகுநேரம் அழுதார் (தொ.நூ. 46:29). எகிப்தின் உயர் பொறுப்பிலிருக்கும் யோசேப்புக்கு முதிர்ந்த தன் தந்தை மற்றும் உடன் பிறப்புக்களால் எவ்வித பயனும் ஏற்படப்போவதில்லை. மாறாக ஆட்டிடையர்களான தன் குடும்பத்தினரை எகிப்து நாட்டினர் இழிவாக எண்ணுவர் என அறிந்திருந்தும் தான் கடந்து வந்த எளிய வாழ்வை மறவாத பெரிய மனதினராய் யோசேப்பு நடந்து கொண்டார்.

## 2. இரட்சிப்பின் அவசியம்

நிலை வாழ்வை உரிமையாக்கிக் கொள்ள நான் செய்ய வேண்டுவதென்ன என ஒரு இளைஞர், இயேசுநாதரிடம் கேட்டபொழுது கற்பனைகளை கடைபிடிக்கும்படி அவனுக்கு அறிவுரை கூறினார். அவைகளில் ஒன்று உன் தகப்பனையும் தாயையும் மதித்து நட (மத். 19:16-19; மாற். 10:17-19; லூக். 18:18-20) என்பதாகும். ஆக ஒருவன் நிலைவாழ்வை உரிமையாக்கிக் கொள்ள அல்லது விசுவாசத்தின் மூலம் தான் பெற்ற இரட்சிப்பு பூரணமாக தன்னைச் சார்ந்து வாழும் முதியோரை ஏற்றுக் கொண்டு அவர்களுக்குத் உதவியாயிருந்து அவர்களிடம் அன்பும், பாசமும் காட்ட வேண்டும்.

மேலும் கிறிஸ்து தமது மலைப்பொழிவில் நியாயப்பிரமாணத்தையும், தீர்க்கத்தரிசனத்தையும் உள்ளடக்கிக் கூறிய மற்றொரு கற்பனையானது பிறர் உங்களுக்குச் செய்ய வேண்டும் என விரும்புகிறவற்றை எல்லாம் நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள் (மத். 7:12) ஆகவே இன்று பலமுடையோராய் வாழும் நாமும் ஒரு முதியோராவோம் என்பதை நினைத்து, மற்றவர்கள் நம்மை எப்படி பராமரிக்க வேண்டுமென எதிர்பார்க்கிறோமோ அதையே இன்றைய முதியோருக்கு நாம் செய்ய வேண்டும்.

## 3. திருச்சபையின் கடமை

தாய் தந்தையரை பராமரிக்கத் தேவையான பணத்தை எடுத்து அதைக் காணிக்கையாகக் கொடுக்கிறேன் எனச் சொல்லித் தன் கடமை முடிந்து விட்டது என ஒதுங்கிவிட முடியாது என இயேசு கிறிஸ்து தம் போதனையில் கூறியுள்ளார் (மத். 15:4-7). இப்படிச் செயல்படுவது மனிதர் ஏற்படுத்திக் கொண்ட பாரம்பரியமே ஒழிய இது தேவகட்டளை அல்ல. மேலும் இத்தகைய முறையில் செயல்படுவோரை வெளிவேடக்காரர் எனவும் அழைக்கின்றார்.

பவுல் அடிகளார் தம் ஆவிக்குரிய மகன் திமொத்தேயுவுக்கு எழுதுகையில் முதியோர் பராமரிப்பு திருச்சபையின் கடமை என

நினைவுபடுத்தி தீமோத்தேயு ஒர் முன்மாதிரியாகத் திகழ வேண்டுமென்ற தனது விருப்பத்தினை தெரிவிக்கிறார். மேலும், எபேசு திருச்சபைக்கு எழுதிய திருமடலிலும் முதியோர் பராமரிப்பு மிகவும் அவசியம் என்பதை வலியுறுத்துகிறார். (1திமொ. 5:1-10; எபே. 6:2, 3).

இன்றைய நவீன உலகில் எத்தனையோ வசதி இருந்தும் முதிர்ந்த பெற்றோரை மனிதராக மதித்து நடத்தாதப் பிள்ளைகள் பலர் இன்றைய திருச்சபையில் உண்டல்லவா? வாழும் நாட்களில் அன்பு செய்யாமல் அவர்கள் இறந்த பிறகு ஆடம்பரமான கல்லறைகளைக் கட்டி அழகுபார்க்கும் பிள்ளைகள் எத்தனையோ பேர் உண்டல்லவா?

உன்னையும், என்னையும் பத்து மாதம் சுமந்து, பெற்றெடுத்து நமக்குத் தன் இரத்தத்தையே பாலாக்கிக் கொடுத்தவள் தாய். நம்மை குளிப்பாட்டி அழகாக அலங்கரித்து அழகு பார்த்தவள் தாய். நமக்காக எத்தனை மணி நேரங்களைச் செலவழித்திருப்பாள் நமது அன்னை. நாம் அவளுக்குக் கொடுக்கும் பரிசு என்ன தெரியுமா? முதியோர் இல்லம். முதியோர் இல்லத்தில் தன் வாழ்வை அமைத்துக் கொள்கிறாள்.

ஒரு முதியோர் இல்லத்தின் முகப்புப் பலகையில் இவ்வாறு எழுதப்பட்டு இருந்தது."மகனே நீ குடியிருக்க ஒரு இடம் தேவைப்பட்டது. பத்து மாதம் உனக்கு என் கருவறையைக் கொடுத்தேன். ஆனால் இன்று நான் இருக்க உன் அடுக்குமாடி குடியிருப்பில் ஒரு அறை கூட எனக்கில்லையே." நமது தாய் நமக்குப் பலம். வற்றாதகுளம் அவள்; நலம் தரும் வரம். அவள் சோகம் நீக்கும் சுகம்.

அருள்திரு. **S. ஜாண் சகாயம்**

**27-09-2011** — *தென்னிந்தியத் திருச்சபை நாள்*

## ஒருமைப்பாட்டில் சான்று பகருதல் (UNITED IN WITNESS)

| | |
|---|---|
| வி.ப. 4:27-31 | உரோ. 8:31-39 |
| திபா. 66 | லூக். 9:1-6 |

**மன்றாட்டு :** அனைத்து ஆற்றலுமுள்ள கடவுளே, உம்மில் நம்பிக்கை கொள்வோர் யாவரும் ஒன்றிணைந்திருக்க வேண்டுமென்பது உம் திருமைந்தரின் மன்றாட்டு. தென்னிந்திய திருச்சபையின் இணைவின் மகிழ்வை நிறைவுடன் கொண்டாடும் நாங்கள் ஓரே மனமும், சிந்தையுமுடையவர்களாய் உமது அன்பின் அருட்பணிக்கு எங்களை ஒப்படைக்க அருள்தாரும் என இணைப்பாளர் இயேசுகிறிஸ்து வழி கேட்கிறோம். - ஆமென்.

**01-10-2011** *அருணோதய ஆராதனை*

# இறை இல்லத்திலிருந்து விடுதலையருளும் ஆண்டவர்

லூக். 13:10-16

*"..........................உன் பலவீனத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டாய்............." லூக். 13:12*

இறை இல்லம் மக்கள் அனைவரும் விடுதலை பெற்று மகிழ்ச்சியோடு வாழ வழி செய்யும் இடமாகும். தேவைகளோடும், எதிர்நோக்குகளோடும் இறைஇல்லத்தில் கடந்து வருவோர் நிறைவுடன் வாழ்வு பெற்றுக் கொள்வர் என்பதை திருமறை வெளிப்படுத்துகிறது. திருப்பாடகர், 'உமது இல்லத்தில் செழுமையால் அவர்கள் நிறைவு பெறுகின்றனர் என்கிறார்' (திபா. 36:8). இவ்வாறே தொழுகைக் கூடமொன்றில் இயேசு கலந்து கொண்ட தொழுகையில் 18 ஆண்டுகளாக நிமிர முடியாதவாறு கூன் விழுந்த நிலையில் நோயினால் துன்பமேற்றிருந்திருந்த ஒரு அம்மாவும் வந்திருந்தார். அவரது வேதனையைக் கண்ட இயேசு அவருக்கு வாழ்வு வழங்கினார். தம்முடைய திருமுன்னிலையில் வாழ்வின் தேவையோடு யார் ஒருவர் கடந்து வந்தாலும் அவருக்கு வாழ்வு வழங்கி நன்மையருள ஆண்டவர் காத்திருக்கிறார். விருப்பத்தோடு இறைவனின் திருமுன் கடந்து வந்த நோய்வாய்பட்டிருந்த அம்மாவிற்கு வாழ்வருளும் ஆண்டவர் இப்புதிய மாதத்தில் அடியெடுத்து வைத்துள்ள நமக்கு தரும் செய்தியைத் தியானிப்போமாக.

## 1. *கலக்கத்தினை காண்கிறவர் :* (லூக். 1:12அ)

நம்முடைய கடவுள் காணும் கடவுள் (God of Seeing) என்று திருமறை எடுத்தியம்புகிறது. கடவுளுக்குப் புதிய பெயரளிக்கும் ஆகார் என்ற பெண்மணியும், நீர் என்னைக் காணக்கிற கடவுள் (தொநூ. 16:13) என்கிறார். அவர் இறைஇல்லத்திலிருந்து மக்களைப் பார்ப்பவராகவும் கூப்பிடுதலைக் கேட்கிறவராகவும் (2குறி. 7:15) இருக்கிறார் என சாலமேனுக்குப் பதிலுரைக்கிறார். அதுமட்டுமல்ல, இறைஇல்லம் இருந்த திசையை நோக்கி மன்றாடிய தானியேலின் விண்ணப்பத்தையும் அங்கீகரித்து வாழ்வு வழங்கினார் (தானி. 6:10). இயேசு கிறிஸ்துவும் மக்களுடைய தேவைகளை அறிந்து அவர்களுக்கு நன்மையருளினார். தொழுகைக் கூட்டத்தில் 18 அண்டுகாலமாக நோய்வாய்பட்டிருந்த நிலையில் கலங்கி நிற்கும் அம்மாவை இயேசு காண்கிறார். அவரது உள்ளத்தின் வேதனைகளை ஆண்டவரால் மாத்திரமே புரிந்து கொள்ளமுடிகிறது. ஏனென்றால், மனிதர் முகத்தைப் பார்ப்பர், ஆனால்

ஆண்டவரோ உள்ளத்தின் ஆழத்தை ஆராய்ந்து அறிகிறவராவார் (Iசாமு. 16:7). எனவே, இயேசுவும் அந்த ஏழைத்தாயின் வேதனையை அறிந்து அவரை முன்னால் அழைக்கிறார். இன்றும் யாரும் எனது வேதனையை அறியவில்லையே என்று ஏங்கும் உள்ளங்களை ஆண்டவர் கண்டு அவர்களையும் அழைக்கிறார் என்பதை உணர்வோம்.

## 2. கரிசனையை வெளிப்படுத்துபவர் : (லூக். 13:12)

வேதனையோடிருந்த அந்த ஏழைத்தாயை முன்னால் அழைத்துத் தம்முடைய கைகளை அவர்மீது வைத்துத் தம்முடைய கரிசனையை வெளிப்படுத்தினார் ஆண்டவர். தொழுகைக் கூடத்தில் இருந்திருந்த அந்த தாயார் 18 ஆண்டுகால நோயின் மத்தியிலும், தொழுகைக்கூடத்திற்கு வருவதை ஒழுங்காக வைத்திருக்கவேண்டும். இதைக்கண்ட அவரைப் பார்த்து கரிசனையோடு முன்னால் அழைத்து தமது கைகளை வைத்துத் தேற்றுகிறார். இரக்கத்தினின்று அன்பு பாய்ந்து செல்லுகிறது 'அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாள்'? என்பதற்கிணங்க தம்முடைய அன்பை கரிசனையாய் வெளிப்படுத்துகிறார். வேதனையோடிருந்து வேதனைப்படுபவர்களின் மீது தம்முடைய கரிசனையை வெளிப்படுத்துகிறார் என்பதற்கு பல எடுத்துக்காட்டுகளைக் காணமுடியும். பெத்சதா குளக்கரையில் 38 ஆண்டுகளாக விடுதலையை எதிர்பார்த்திருந்த மனிதனைத் தேடிச் சென்றார் (யோவா 5:5,6). நாயீன் ஊர் விதவைப் பெண்ணின் சோகம் நீங்க தேடிச் சென்று உதவி செய்தார் (லூக் 7:13,14). தொழுநோயாளியைத் தொட்டுத் தூக்கினார் (மத் 8:3) என அறிய முடிகிறது. இன்றும் நமது வாழ்வில் அவர் வெளிப்படுத்தும் கரிசனையை நாம் உணர்ந்து கொள்ள அழைக்கப்படுகிறோம்.

## 3. கண்ணியப்படுத்தி வாழ்விக்கிறார் : (லூக். 13:16)

18 ஆண்டு காலமாகக் கூனிக்குறுகி வாழ்வில் வேதனையோடு வாழ்ந்து கொண்டிருந்த அந்த அம்மாவை முன்னால் அழைத்துத் தம்முடைய கரத்தை நீட்டி அவரைத் தொட்டுக் குணப்படுத்தினார். வாழ்வின் வேதனையின் மத்தியிலும் ஆண்டவருடைய அடிபாதங்களில் கூடுதலை மறவாமல், தொழுகையை மறவாமல் ஒழுங்காகக் கடந்து வந்த அவரை, ஓய்வுநாள் முறைமையிலும் ஆண்டவர் கண்ணியப்படுத்துகிறார். ஆபிரகாமின் மரபில் இணைத்து, 'இவர் ஆபிரகாமின் மகள்' என்று அறுதியிட்டுக் கூறுகிறார். ஒருவேளை தொழுகைக்கூட தலைவர் உள்ளிட்டோருக்கு இதை ஏற்றுக் கொள்ள இயலாவிட்டாலும் அவரை ஆபிரகாமின் மரபில் இணைத்து கண்ணியப்படுத்தி வாழவைக்கிறார் இயேசு. அதோடு இறை இல்லக் கூட்டுறவை மறவாது வாழும் அனைவருக்கும் வாழ்வுண்டு என்ற உண்மையைக் கற்றுத் தருகிறார். புதிய மாதத்தில் அடியெடுத்து வைத்திருக்கும் நம் ஒவ்வொருவரையும் இறை இல்லத்திலிருந்து விடுதலையருளி ஆசீர்வதிக்கும் ஆண்டவர் ஆசீர்வதித்து வழி நடத்துவாராக.

அருள்திரு. **A. பிரைட் சாலமோன்**

**02-10-2011**

# அமைதியும் ஒப்புரவாகுதலும்

**PEACE AND RECONCILIATION**

| | |
|---|---|
| மீக். 4:1-8 | 2 கொரி 5:11-21 |
| திபா. 85 | மத் 10:34-42 |

*“ஓர் இனத்திற்கு எதிராக மற்றோர் இனம் வாள் எடுக்காது. அவர்கள் இனி ஒருபோதும் போர்ப்பயிற்சி பெறமாட்டார்கள்.” மீக். 4:3*

**மன்றாட்டு : இரக்கம் நிறைந்த கடவுளே, பெருகி வரும் வன்முறை, தீவிரவாதம், அழிவு சக்திகளின் செயல்கள் எங்களை இம்மண்ணுலகினில் அந்நியராக்குகின்றன. ஆதரவாய் தழுவிச் செல்லும் தென்றல்போல் உமது அமைதியின் ஆவி எங்கள் சந்தேக பாலைவனங்களை மாற்றுருவாக்கம் செய்து, ஒப்புரவாக்குதலின் கருவிகளாய் எங்களை மாற்றட்டும். சமாதானத்தின் நம்பிக்கை இம்மண்ணினில் துளிர்க்க உம்மருள் ஈந்து எங்களை பயன்படுத்த மன்றாடுகிறோம். - ஆமென்.**

“மனிதன் மீனைப்போல நீந்த கற்றுள்ளான். பறவையைப்போல பறந்து செல்லவும் கற்றுள்ளான். ஆனால் சகோதரத்துவ உறவினில் நடந்துகொள்ள கற்றுக்கொள்வில்லை.

உலகம் முழுவதும் அமைதியின்மையும், வன்முறையும் பரந்துவிரிந்து காணப்படுகின்றன. ஒருபுறம் நாடுகளிடையே நல்லிணக்கம் மலர்ந்துவரும் சூழலில் மறுபுறம் போருக்கான முழக்கங்களும், தெருச்சண்டைகளும், வன்முறை கலாச்சாரங்களும் பெருகி வருகின்றன. சமய அமைப்புகளை கவனித்தால் இனம், சமயம், கலாச்சாரம் போன்றவற்றால் மனுக்குலம் பிரிவினைச் சுவர்களை எழுப்புகின்றன. கூட்டுக்குடும்பங்கள் சிதைந்து தனி குடும்பங்கள் உருவெடுக்கின்றன. மொத்தத்தில் ஒருமைப்பாடு குலைந்து சமூகத்தில் அமைதி இழந்த சூழலைப் பார்க்கிறோம். அமைதி குறைவதற்குக் காரணம் மக்கள் கடவுளை சார்ந்திருக்க மறந்து போவதுதான். அமைதி, கடவுளோடு உடன்பட்டு அவரது திருவுளத்துக்கு இசைந்து வாழும் வாழ்வைக் குறிக்கும். அதில் நீதியும், அன்பும் உண்டு; போருக்கு இடமில்லை. எபிரேயத்தில் ‘சாலோம்’ என்ற வார்த்தை முழுமையான நிலையை அல்லது பிரிவினை அற்ற நிலையை வெளிப்படுத்துகிறது. ‘சாலோம்’ என்ற வார்த்தைக்கு காயம் ஏற்படாத நிலை என்றும் பொருள் உண்டு. அமைதி நிறைந்த சமூகத்தில் ஒருவர் மற்றவரை எந்நிலையிலும் காயப்படுத்தமாட்டார்.

மீக்கா இறைவாக்கினர், அமைதியின்றி வன்முறைகளைக் கரத்திலெடுத்து வாழும் மக்களுக்கு கடவுளின் அமைதியை ஒரு வலுவான

அடித்தளமாக சுட்டிக்காட்டுகிறார் (மீக். 4:1,2). இத்தகு அமைதி (சமாதானம்) போக்கினால் அனைத்து மக்களினங்களும் ஒன்றுபடும் காலம் வரும்.

## 1. இறைவாக்கினில் அமைதி (மீக். 4:2)

“........ கடவுளது கோயிலுக்குப்போவோம்; அவர்தம் வழிகளை நமக்குக் கற்பிப்பார்”

கடவுளின் திருசட்டத்தைத் தாங்கியிருக்கும் எருசலேமில் பெரிய கோயில் உள்ளது. இங்கு சமூகத்தில் காணப்படும் சண்டை, சச்சரவுகளை திருச்சட்டத்தின் தீர்ப்புக்காக எருசலேமுக்குக் கொண்டு வருவார்கள். எருசலேமில்தான் ஆண்டவரின் வார்த்தையைக் கேட்க முடியும். ஆண்டவரின் வழிகள் குற்றம் சுமத்தப்பட்டவருக்கும், ஒடுக்கப்பட்டவருக்கும் அறிவிக்க வேண்டிய வழிகள் (திபா. 25:4,5)இங்கு மீக்கா இறைவாக்கினர் எதிர்காலத்தைப் பற்றிய இறைவாக்குகளை அறிமுகம் செய்கிறார். சீயோன் உயர்த்தப்படும். ஆண்டவரின் உயிரூட்டும் ஆற்றல், நீதியின் தோற்றம், மீட்பின் வலிமை அங்கு கொடி கொண்டிருக்கும். மக்கள் அதன்மீது பசிதாகம் கொள்வர். மக்களினங்கள் அதை நோக்கி சாரை சாரையாக வருவார்கள். ஆண்டவரின் கோவிலில் கடவுள் தம் வழிகளை நமக்குக் கற்பிப்பார். (மீக். 4:2) அங்கிருந்து ஆண்டவர் வாக்குபுறப்படும். அவர் வழக்குகளைத் தீர்த்து வைப்பார், நீதி வழங்குவார். ஆண்டவரின் அரியணை போர்க்களத்தில் நிறுவப்படுகிறது. அங்கு அமைதி ஏற்படுகிறது. அவர்களிடையே காணும் வெறுப்பு, பகைமை, பிளவு பொறாமை யாவற்றையும் ஆண்டவர் மறைத்து விடுவார். போர்கள் நிறுத்தப்படும் போர்கருவிகள் பயன்படும் கருவிகளாக மாற்றப்படும். மனித வளங்கள்; மனித வளர்ச்சிக்குத் திருப்பப்படும் (தி.பா. 46:9, 76:3). கடவுளின் அமைதியை வலுவான அடித்தளமாக சுட்டிக்காட்டுகிறார். இறைவனின் வார்த்தையே அமைதிக்குக் காரணம். அமைதி ஏற்படுத்துவதே இறைவனின் பணி என திருமறை தெளிவுபடுத்துகிறது. ஏசாயா 2:1-4, 1:9 மக்களை மீட்க வரும் மேசியாவிற்கு, உலக மீட்பருக்கு தரப்படும் பெயர் அமைதியின் அரசர். (ஏசாயா 9:6). இயேசு கற்றுத்தந்ததும், வைத்துப்போனதும் அமைதியே. அசிசி நகரத்தின் புனித பிரான்சிஸ் என்பவர் ‘இறைவா என்னை உமது அமைதியின் கருவியாக உருவாக்கும் ’என்று வேண்டுதல் செய்தார்.

## 2. இறை வாக்கினை ஏற்பதில் அமைதி (மீக். 4:5)

நாமோ கடவுளின் பெயருக்கு பணிந்திருப்போம்.

கடவுளின் வார்த்தையை கடைபிடிக்கும்போது உழைப்போர் உரிமையுடன் செயல்படும் நல்ல சமூகச் சூழலை இறைவாக்கினர்

சுட்டிக்காட்டுகிறார். உழைப்போர் தங்கள் உழைப்பின் பலனை அமைதியாக அனுபவிப்பர். நீங்கள் என் நியமங்களை கவனமாய் கைக்கொண்டு கட்டளைகளை நிறைவேற்ற அவற்றிற்கேற்ப நடந்தால் வயல்கள் பலனைத் தரும். நீங்கள் விரும்புபவற்றை உண்டு நாட்டில் நலமாய் வாழ்வீர்கள் (லேவி. 26:4,5). நாட்டிற்கு அமைதி அருள்வேன். அச்சுறுத்துவாரின்றி படுத்துக் கொள்வீர்கள் (லேவி 26:6). கடவுளின் வார்த்தையைக் கடைபிடிப்போர் திராட்சைத் தோட்டத்தின் நடுவிலும், அத்திமரத்தின் அடியிலும் அமர்ந்திருப்பர். அவர்களை அச்சுறுத்துவார் எவருமில்லை. (மீக். 4:4). கடவுளின் வார்த்தை கேட்கிறது, மிக கடினமான சூழலுக்குப் போகிறார்கள் இஸ்ரவேலர். ஆண்டவரின் வார்த்தையை கேட்பவர்கள் நாட்டின் வார்த்தையைக் கேட்டவுடனேயே ஆண்டவரின் வார்த்தையை கடைபிடிக்கவில்லை. தங்கள் கொள்கையில் நிலைத்து நின்று யூத சமய கொள்கையில் தங்களுக்கு ஏற்புடையதை மட்டும் கடைபிடித்தனர். இறைவாக்கினை ஏற்பதும், அதனடிப்படையில் வாழ்வினை நெறிப்படுத்தி கொள்வதுமே நல்லுறவுக்கு அடித்தளமாகிறது. ஆகவே அமைதியான வாழ்விற்கு முழுமைப்படுத்துகிறது. மட்டுமல்ல இயேசுவில் நம்மை ஒன்றுபடுத்துகிறது.

## 3. இறைஉறவினில் மலரும் ஒப்புரவாகுதல்

IIகொரி. 5:18 "இவையாவும் கடவுளின் செயலே; அவரே கிறிஸ்துவின் வாயிலாக நம்மைத் தம்மோடு ஒப்புரவாக்கினார்."

கடவுள் மனிதனோடு ஒப்புரவாகுதலை உடன்படிக்கை வழியாக ஏற்படுத்துகிறார் (தொநூ.15). எனவேதான் இஸ்ரவேல் எங்கிருந்தாலும் ஒன்று சேர்ப்பார். எந்தெந்த நாடுகளில் வாழ்ந்தாலும் அவர்களை மீட்டுக்கொண்டுவர பின்வாங்கமாட்டார் என்ற கருத்து பழைமை வாய்ந்த புதிய உடன்படிக்கையிலிருந்த பிறந்துள்ளது. நொடிப்பொழுதே நான் உன்னைக் கைவிட்டேன்; பேரிரக்கத்தால் உன்னை மீண்டும் ஏற்றுக் கொள்வேன். (ஏசா 54:7. 58:8) எரே. 23:3, எசே. 11:17; செப். 3:18) மக்கள் கடவுளின் வாக்கை கடைபிடிக்க தவறியதால் நாடு கடத்தப்பட்டனர். ஆண்டவர் அவர்களை காப்பாற்ற விழைகிறார். மக்களின் குற்றங்கள் அவர்களை மேற்கொள்ளாதவாறு தடுக்கிறார். இச. 32:39, எசே. 6:1; யோபு:5:18. இஸ்ரயேலரை எகிப்திலிருந்து கானானுக்கு அழைத்து அவர்களை வாழ்வின் உயர்நிலைகளில் மேன்மைப்படுத்தின ஆண்டவர் அவர்களின் தடுமாற்றத்தினாலும், தவறுகளினாலும் மனமாற்றமடைய எச்சரிப்பினை தருகிறார். இஸ்ரயேலரின் மாற்றம் கடவுளோடு மீண்டும் ஒப்புவாகுதலை ஏற்படுத்தியது. கடவுளே அவர்களை ஒன்று சேர்க்கிறார் (மீக். 4:7).

மீக்கா இறைவாக்கினர் கூற்றுபடி இறைவன் எல்லா மனிதருடைய வழக்கைத் தீர்த்து தீர்ப்பு செய்து மனிதனுடன் ஒப்புவாகுதலை ஏற்படுத்துகிறார். இங்கே உளம் சார்ந்த வேறுபாடுகளுக்கு இடம் இல்லை. கொரிந்து மக்கள் மத்தியில் யூத கட்சியினர் புகுந்து பவுலை வசைமொழி கூறி பிரிவினையை ஏற்படுத்தி அமைதியை குலைத்தனர். அந்த நிலையில் அவர்களோடு இறைவாக்கினால் புதிய உடன்படிக்கையின் பணியை (ஒப்புரவு திருப்பணியை) விளக்குகிறார். உலகின் குற்றங்களை பொருட்படுத்தாமல் கடவுள் கிறிஸ்துவின் வாழியாக அவர்களை தம்மோடு ஒப்புரவாக்கினார் (II கொரி. 5:19). பாவத்தினால் ஏற்படும் பிரிவினையும், பகைமையும் சீர்படுத்த இஸ்ரவேல் மக்கள் ஆண்டுதோறும் பாவக்கழுவாய் நாளன்று கிடாய் ஒன்றை இறைவனுக்கு செலுத்துவர். தலைமைகுரு இரத்தத்தை அரியணை மீதும், மக்கள் மீதும் தெளிப்பார் (லேவி.16). இந்த பாவ கழுவாய் பலி கிறிஸ்துவின் சிலுவைச் சாவில் நிறைவேறுகிறது (II கொரி. 5:21. உரோ 5:10).

அமைதியும், ஒப்புரவாகுதலும் வலுப்பெறும்போது தனி மனிதனிலும், சமூகத்திலும், திருச்சபையிலும் சீரமைப்பு நிகழ்கின்றது. இவைகள் இரண்டும் இருகண்கள் என எண்ணி இறைவார்த்தைக்கு கட்டுப்பட்டு செயல்படுவோமானால் நம்மில், நம் குடும்பத்தில் நாட்டில், திருச்சபையில் பிரிவினைச் சுவர்களைத் தகர்த்து நியாயமான சுகவாழ்வை ஏற்படுத்த முடியும்.

அருள்திரு. **T. ராஜன்**

**09-10-2011**

# மாற்றுதிறன் கொண்டோருடன் கூட்டொருமைப்பாடு

## SOLIDARITY WITH THE MENTALLY AND PHYSICALLY CHALLENGED

| | |
|---|---|
| 2சாமு. 9:1-13 | 1 தெச. 5: 12-22 |
| திபா. 38 | 2மத். 11:1-6 |

*"………நீ எப்போதும் என்னுடன் உணவருந்துவாய்." 2 சாமு. 9:7*

**மன்றாட்டு :** **அறிவாற்றல் நிறைந்த கடவுளே, உள, உடல் நிலையினில் மாற்றுத்திறன் படைத்தோருக்கு பலமும், ஆறுதலும் அருளுகிறீர். அவர்களுக்கு தைரியமும், தன்னம்பிக்கையும் ஈந்து உமது இரக்கத்தையும், புத்துணர்வையும் கண்டுகொள்ள துணைசெய்யும். அவர்கள் சமூகத்தில் தகுதியான மரியாதையுடன் நடத்தப்பட இவ்வுலகினில் மாற்றுத்திறன் படைத்தோருடன் தம்மை அடையாளப்படுத்திய அருள்நாதர் இயேசுகிறிஸ்து வழி கேட்கிறோம். - ஆமென்.**

கடவுள் படைத்த மனிதர்களிடையே ஏன் ஏற்றத்தாழ்வுகள்? ஒருவர் குட்டையாக, ஒருவர் நெட்டையாக, ஒருவர் பார்வையற்றவராக ஒருவர் நடக்க முடியாதவராக, ஒருவர் காது கேளாதவராக என பல விதங்களில் மனிதர்கள் படைக்கப்பட்டதின் காரணம் என்ன? இவைகளுக்கெல்லாம் உடனடியாக நாம் விடை கொடுக்க முடியாததுதான் இருந்தாலும் இந்தியாவில் மட்டும் கிட்டத்தட்ட 10% மக்கள் மாற்றத்திறன் உள்ளோராக படைக்கப்பட்டுள்ளனர். இவர்களைக் குறித்து கிறித்தவர்கள் கவலைப்பட வேண்டும். ஏனெனில் அப்படிப் பிறந்தோரை சமயத்தின் பெயரால் அவர்களை இதுவரை இழிவுபடுத்தியுள்ளனர். கிறித்துவுக்கு முந்திய யூத சமயத்தை சடங்குகளின் படி அவர்களை ஆலயம் செல்லவோ, காணிக்கை படைக்கவோ தகுதிபெற்றவர் அல்லா (லேவி 21: 17-23) என ஒருகாலத்தில் பார்க்கப்பட்டனர். யூத சமயத்தை கடைபிடித்துவந்த தாவீது அரசனும் மாற்றுத்திறன் கொண்டோரை தமது ஆரம்பகாலத்தில் வெறுத்து, அழித்ததாக நாம் படிக்கிறோம் ( 2 சாமு 5: 6-10) மொத்தத்தில் உடல்குறைபாடு கொண்டோரை சாபத்திற்குரியோராக, பாவத்தின் தண்டனையாக புரியப்பட்ட ஒரு காலத்தை தாண்டி நாம் இன்று வந்திருக்கிறோம் (யாத் 4:11, யோ 9: 1-4) இயேசுநாதரின் வேறுபட்ட புரிதலில் அவர்கள் இசுரவேலின் காணாமற்போன ஆடுகள் (மத் 15:24) என புரிந்துக் கொண்டார். எனவே தேடிச் செல்லவேண்டிய கடமை நம்மிடம் உண்டு.

இயேசுநாதரால் மிக மதிக்கப்பட்ட தாவீது நமது வாழ்வில் தன் பார்வையை மாற்றிக் கொண்ட நிகழ்வை இன்று நம் அருளுரைக்குரிய

மைய கருப்பொருளாக எடுத்துக்கொள்ளலாம்., இன்றைய படிக்கப்பட்ட பகுதியில் (2 சாமு 9: 1-13) தாவீதுக்குள் ஒரு மாற்றத்தை பார்க்கமுடிகிறது. தாவீது அரசராக முடிசூட்டப்பட்டார். பலரும் அவரை அங்கீகரித்து விட்டனர். மாற்றுத்திறன் கொண்டவர்களை அழித்து அப்பகுதியிலேயே தாவீதின் நகரம் நிறுவனம் செய்யப்பட்டுவிட்டது. தன் அதிகாரத்தை முழுமையாக நிறுவிவிட்ட பின்னரே தாவீதுக்குள் மனிதநேயம் புக ஆரம்பித்தது. இது இன்றைய நடைமுறைக்கு மாறாக இருப்பதைக் காணலாம். பொதுவாக மனிதர்கள் பணமும் அதிகாரமும் பெற்றபின் அவர்களிடம் மற்றவர்களை குறிப்பாக ஏழைகளை பற்றிய கரிசனை அகன்றுவிடும். அதுபோன்று தாவீது நடக்கவில்லை. தாவீது தன்னைப் பழிவாங்க நினைத்த சவுலின் குடும்பத்தைக் குறித்த காழ்ப்புணர்ச்சியை நீக்கி, தனக்கு இளவயதில் அன்பு பாராட்டிய யோனாத்தானிமித்தம் சவுலின் குடும்பத்துக்கு நன்மைசெய்ய முடிவெடுத்தார். இந்த முயற்சியில்தான் குழந்தையாயிருக்கும்போது கீழே விழுந்து நடக்கமுடியாத கால் ஊனமான யோனாத்தானின் மகன், மேவிபோசேத்து என்பவரைக் கண்டுபிடித்து தம் இல்லத்தில் சேர்த்துக் கொள்கிறார்.

***1. உதவி புரியும் தாவீது*** (9:1) தமக்கு வசதியும், அதிகாரமும் படை பலமும் வந்தபின் உடல் ஊனங்கொண்ட ஒருவரிடம் தாவீது சிறப்பு கவனம் காட்டியது ஒரு சிறப்பான செய்தியாகும். ஒரு வேளை தன் உயிர் நண்பனுக்காக, அல்லது தனது மனைவியின் சொந்தக்காரன் என்ற முறையிலும் அன்புக் காட்டியிருக்கலாம். பலருக்கு நேரடி துன்பங்களை கண்டபின்னரே அம்மக்களைக் குறித்த கரிசனை அதிகரிக்கும். சிலர் தங்களது வருமான வரி சலுகைக்காக, பரிதாபத்தோடு அவர்கள் பாவம் என்ற சிந்தனையோடு உதவுவதும் உண்டு. பரிவு காட்டி, பிச்சையிட்டு, பின்னர் சிறிது நேரத்தில் நம் கடமை தீர்ந்தது என எண்ணும் பார்வையால் எந்த விடிவும் ஏற்படுவதில்லை ஒரு சாலையை கடக்கக் கடினப்படும் பார்வையற்றவர்க்கு உதவி செய்ய அலுவலகத்துக்கு அவசரமாகச் செல்லும் நேரத்தில் சாத்தியமா? அப்படிப்பட்டோர் நம்மிடம் முன் வைக்கும் கோரிக்கைகளை கடுக்கடுப்பாக நோக்காது கனிவு வேண்டும். வாய்ப்பு, வசதி உள்ளோரை கவனிப்பதற்கும், ஏனையோரை கவனிப்பதற்கும் நாம் பொதுவாக வேறுபாடு காட்டுவதுண்டு. நம் அணுகுமுறையில் இயலாதோர்க்கு காட்டும் உதவி கடவுளுக்குச் செய்யும் உதவியாகப் பார்க்க வேண்டும். தாவீது மேவிபோசேத்துக்கு காட்டிய கருணை சாதாரண கருணையல்ல. முழுமையாக தன் வீட்டில் அரண்மனையில் வாழும் வாய்ப்பை அருளினார்.

***2. உரிமைகளைப் நிலைப்படுத்திய தாவீது*** (9.7): தன் கருணைப் பார்வை ஒன்றன் பின் ஒன்றாக செயல்வடிவம் பெற தாவீது இடங்கொடுத்தார். மேவிபோசேத்துக்கு உரிய குடும்ப நிலம் மீண்டும் அவர் வசம் ஒப்படைக்கப்பட்டது. சில தீர்வுகள் பிச்சை கொடுப்பது போன்றவை.

சில தீர்வுக்கு வழிவகுப்பவை. நம் கிறித்தவ அணுகுமுறைகளும் நிரந்தர தீர்வுக்கு வழி வகுப்பனவாக அமைய வேண்டும். நம் நாட்டில் உழுவோர்க்கு நிலம் என்ற ஒரு கருத்தியல் அதிகமாக வலியுறுத்தப்பட்டாலும், நேரடி நிலத்தில் வேளாண்மை செய்யாதவரே பெரும்பாலான நிலத்தைத் தம் வசம் பெற்றிருக்கின்றனர். எனவேதான், வறுமைக்கு இதுவரையிலும் நிரந்தர தீர்வு ஏற்படவில்லை. மேற்கு நாடுகளில் உடல் ஊனமுற்றோர் பிறர் உதவியின்றி தம் வாகனத்திலேயே எல்லா இடத்திறகும், ஆலயம் உட்பட செல்ல சிறப்பு வழி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

சீன நாடு மாற்றுத்திறன் கொண்டோர்க்கு ஒலிம்பிக் போட்டி நடத்தியது குறிப்பிடத்தக்க நிழ்வாகும். மனித குலத்தில் அதிகாரத்தில் இருப்பபோர் பிறரைக்குறித்த, குறிப்பாக பலவீனர்களைக் குறித்த கரிசனை அதிகரிக்க மனந்தளர்ந்திருப்போர் உற்சாகப்படுவர் (1 தெச 5:14) அப்போதுதான் அவர்களது திறமைகள் முழுமையாக வெளிப்பட முடியும். அமெரிக்க ஐக்கிய நாட்டிலுள்ள ஸ்டீபன் ஹக்கின் என்ற தலைசிறந்த அறிவியலாளராக மாற்றியுள்ளது. வேலை வாய்ப்புகளில் செயற்குழுக்களில், ஆலோசனைக் குழுக்களில் அவர்கள் பங்கேற்க யார் உதவ முடியும் என்பதே நம் முன் நிற்கும் அறைகூவல்.

**3. உணர்வுகளை மதித்த தாவீது** (9:7) மாற்றுத்திறன் கொண்டோர் அனைவரும், உடலமைப்பில் சில வேறுபாடுகளைபெற்றிருக்கின்றனரே தவிர, உள்ளத்தளவில் நம்மைபோன்ற அனைத்து உணர்வுகளையும் பெற்றவர்களே தாவீது அப்படிப்பட்ட உணர்வுகளைப் புரிந்துக்கொண்டு உரிமைகளை கொடுத்ததோடு திருப்தி கொள்ளாது, தன் வீட்டில், தன்னோடு உணவு எடுப்பது என்பது எளிய செயல் அல்ல. இன்றைய அரசியல்வாதிகள் இதனை வாக்குபெறும் வங்கியாக சமபந்தி போன்ற ஐக்கிய உணவு முறைகள் பயன்படுத்துவது போன்று தாவீது செய்யவில்லை. உடல் ஊனமுற்றவர்களை, தேவையற்றவர்கள், பயன்படாதவர்கள் என்று தனது வாலிப வயதில் பார்த்த தாவீது, இப்போது தன் பார்வையில் பெரும் மாற்றம் பெற்றிருக்கிறார். இனிமேல் அவர்கள் ஊனமுற்றவர்கள் அல்ல, அவர்கள் வேறு வகையில் திறன்பெற்றவர்கள், மாற்று வழிகளில் திறன்பெற்றவர்கள் என்ற கருத்தை புரிந்துக் கொண்டதற்கு ஒருவேளை அவர் வழிபட்ட கடவுளைப்பற்றிய பார்வையில் ஏற்பட்ட தெளிவு என்றுதான் கூற வேண்டும். நாம் நம்பும் கடவுள் தகுதியற்றோரை தகுதிப்படுத்துகிறவர் என்று புரிய வேண்டும்.

நம் சமூக சூழலில் மாற்றுத்திறன் பெற்றவர்களை குறிப்பிடும்போது நாம் பயன்படுத்தும் தமிழ்சொற்களை ஒரு நொடி சிந்திப்போம் உடலைக் கொண்டு உள்ளத்தையும் ஊனமாக்கும் சொற்கள் எத்தனையோ மிக அழகிய சொற்களை நாம் முதலில் அகற்ற வேண்டும். நாம் வலுவுள்ளவர் என்ற அகந்தை அகற்றப்படவேண்டும். பவுல் அடிகளார் தனது

எழுத்துக்களில் கடவுள் பலவீனரோடு தம்மை அடையாளப்படுத்தும் கடவுளாக கூட்டொருமைப்பாட்டை வெளிப்படுத்தும் கடவுளாக நாம் திருமறையில் தொடர்ச்சியாகப் பார்க்கிறோம். மதுரையில் ஒரு பெரிய ஆலயத்தின் ஞாயிறு வழிபாட்டில் மாற்றுத்திறன்பெற்ற குழந்தைகள் அனைவரும் ஒரு திருவிவிலிய வாக்கியத்தை கூறும் பழக்கத்தை ஏற்படுத்தி கரவொலி எழுப்பி ஊக்குவிப்பதை கண்டிருக்கிறேன்.

இன்றைய சூழலில் ஊனம் என்பது எப்படி ஏற்படுகிறது என்ற விழிப்பும் நம்மிடையே அவசியம். எப்போதும் கடவுளைக் குற்றம் சாட்டிக் கொண்டிருக்க முடியாது. தவறான மாத்திரைகள், புகை போதை பழங்கங்கள், நச்சு உணவுகள், மாசுபட்ட குடியிருப்புகள், கதிர்வீச்சுக்ள ஊனங்களை பெருக்குகின்றன. கடற்கரை ஓரங்களில் மணல்களில் உலர்த்தப்படும் கருவாடு போன்ற உணவுப் பொருட்களால் பல ஊனம் உருவாகின்றன என ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர். ஏனெனில் கடற்கரைப் பகுதியில் ஏராளமான கதிர்வீச்சு நிறைந்த மணல் உள்ளன. ஆனால் சுரங்கம் தோண்டுவது மூலமாகவும் மணல் ஆலைகள் அமைப்பது மூலமாகவும் அதிக ஊனங்கள் ஏற்பட வாய்ப்புள்ளன. இவைகளை கூட்டாக அகற்றுவதும், மாற்றுத்திறன் படைத்தோரை முழுமை நலத்துடன் வளர்த்தெடுக்கும் பணிகளை மெசியாவின் பணியாகச் செய்வது அவசியம். இயேசுநாதர் அப்படிப்பட்ட மாற்றுத்திறன் படைத்தோரை, எருசலேம் ஆலயத்துக்கு அழைத்து சென்று குணமாக்கியதாக மத்தேயு காட்டுகிறார் (21:14). இப்படிப்பட்ட மாற்றுத்திறன் கொண்டோர் முழுநலம் பெறுவதே மெசியாவின் பணி நிறைவேற்றம் என்று முழுக்குநர் யோவானுக்கு உணர்த்தினார் (மத் 11: 1-6). அப்படிப்பட்ட இயேசுநாதரின் அடியொற்றி மாற்றுத்திறன் கொண்டோரை தாவீதைப் போன்று முழுமைக்கு நேராக அழைத்து செல்வது கிறித்தவர் ஒவ்வொருவரின் கடமையாகும். அப்படிப்பட்ட அருட்பணியைக் குறித்த நல்லப்புரிதலை, நமக்கு ஆண்டவர் தந்தருளுவாராக. ஆமென்

**அருள்திரு. அறிவர். சாலமன் விக்டசு**

**16-10-2011** *இளையோர் ஞாயிறு*

# தொழில்நுட்ப காலத்தில் ஆன்மிகம்

**SPIRITUALITY IN THE AGE OF TECHNOLOGY**

1 சாமு. 17:32-50 பிலி. 3:1-16

திபா. 111 மாற். 10:17-31

*"ஆண்டவர் வாளினாலும் ஈட்டியினாலும் மீட்கின்றவர் அல்லர்."* 1 சாமு. 17:47

**மன்றாட்டு : அரவணைத்து ஏற்கும் கடவுளே, இளையோரை அழைத்து நல்மாற்றமும், புதுநம்பிக்கையும் துளிர்க்க செய்கிறீர். தொழில்நுட்ப உலகில் வாழும் இளையோர் உம்மேல் தம் பார்வை பதித்து பற்றுறுதியில் வளர துணைபுரிவீராக. நீர் அங்கீகரித்தவைகளையே தம் சிந்தையில் கொண்டு தடம் மாறாது சிலுவையில் தம்மை ஈந்து வாழ்வாகும் இளையோர் இயேசுவின் வழிநடக்க அருள்தாரும். தீமைக்கு நடத்தும் தீயோனின் பிரிவினை செயல்பாடுகளை நன்குணர்ந்து இறையரசின் மகிழ்வு நிலைக்க நேராக நடத்தப்பட இறைமைந்தர் இயேசுகிறிஸ்து வழி மன்றாடுகிறோம். - ஆமென்.**

## *முன்னுரை*

இன்றைய உலகை தொழில் நுட்ப உலகு என அழைக்கின்றனர். சிறுவர்கள் முதல் பெரியவர் வரை அலைபேசியும் கணினியும் இன்றி வாழ இயலாத நிலையில் உள்ளனர். மனிதன் செய்ய வேண்டிய அனேக வேலைகளை ரோபோட் போன்ற இயந்திர மனிதர்களைக் கொண்டு செய்யப்பட்டு இயந்திரங்கள் மனிதனை ஆளுகை செய்யும் காலமாக இக்காலம் மாறிவிட்டது. விஞ்ஞானமும் அதன் தொழில் நுட்பமும் இணைந்து விண்வெளி, விண்மீன்கள், ஆழ்கடல் அதிர்வுகள், மருத்துவம், தொடர்புத்துறை, போக்குவரவு, நிலவளம், நீர்வளம், கனிம வளம் போன்றவற்றை ஆய்வு செய்து அவற்றைப் பயன்படுத்தி மனிதன் சுலபமாய் வாழ கற்று வருகின்றான். கணினியின் ஆதிக்கத்தால் உலகத்தை கை விரலில் வைத்து இயக்குகின்றனர் இளைஞர்கள். வலையப் பின்னல் வர்த்தகங்கள், விண்வெளி சாட்டிலைட் சூப்பர் சோனிக் விமான போக்குவரத்துகள், தேசிய நெடுஞ்சாலை நுண் அறிவு போக்குவரத்து முறை, மருத்துவத்தில் உடல் உறுப்புகள் மாற்றம் செய்தல், கம்பி இல்லா தந்திகள், ஆளில்லா விமானப் போக்குவரத்துகள் யாவும் தொழில் நுட்பத்தினால் ஏற்பட்ட விளைவாகும். இந்நிலையில் இளைஞர்களின்

இறைப் பற்று, இறை வார்த்தையில் நம்பிக்கை இறைத் தொழுகையில் ஆர்வம் ஆகியவை எந்த அளவிற்கு வளர்ந்துள்ளது என்பதை அறிய தாவீதின் சீரிய வாழ்வை அடிப்படையாகக் கொண்டு சிந்திப்போம்.

**பழக்கமில்லாதவன் பயன்படுத்தப்பட்டான்** (1சாமு. 17:39)

"இவற்றுடன் என்னால் நடக்கவியலாது ஏனெனில் இதில் எனக்குப் பழக்கமில்லை".

தொழில் வளம் மிக்க இருபத்து ஒன்றாம் நூற்றாண்டின் தொழில் நுட்ப வளர்ச்சியை உற்றுப் பார்க்கையில் சமூகத்தின் முந்தைய கால வரலாற்றையும் அமைப்பு முறைகளையும் முற்றிலுமாக விழுங்கி விடுமோ என்ற அச்சம் எழாமல் இல்லை. தற்கால தலைமுறையினில் மூத்தவர்கள் கூட பழகாமலும் அனுபவம் இல்லாததுமான தொழில் நுட்பத்தால் ஈர்த்துக் கொள்ளப்பட்டார்.

சவுல் தன்னுடைய படைக்கல உடைகளை எடுத்து தாவீதுக்கு அணிவித்து வெண்கல தலைக் கவசத்தையும் அவன் தலை மீது வைத்து மார்புக் கவசத்தையும் அவனுக்கு அணிவித்தார். சவுலின் கூரிய வாளை தன் உடைமீது கட்டிக் கொண்டு நடக்க இயலவில்லை. ஆகவே சவுலிடம் "இவற்றுடன் என்னால் நடக்கவியலாது ஏனெனில் இதில் எனக்குப் பழக்கமில்லை" என்று சொன்னான்.

அரசனின் தொழில் நுட்பத்தில் தாவீதுக்கும் பழக்கமில்லை. தாவீதின் தொழில் நுட்பத்தில் அரசனுக்கும் பழக்கமில்லை. தாவீதுக்குள் புதைந்து கிடந்த தொழில் நுட்பத்தை வலுவூட்டுகின்ற இறைவனின் ஆற்றலில் அவன் மிகவும் பழக்கமானவன். அவனுடைய தொழில் நுட்பத்தில் அவனுக்குத் தேவையானது கோலும், கூழாங்கற்களும் கவணும் மட்டுமே (1 சாமு. 17:40). இந்த உபகரணங்களைப் பயன்படுத்தி பெலிஸ்தியனை வீழ்த்தும் சக்தி இறைவனிடம் உள்ளது என்று உறுதியாய் நம்பினான் தாவீது. (1 சாமு. 17:37). பழக்கமில்லாத தொழில் நுட்பத்தால் பயனில்லை. பழக்கமில்லாதவன் தன்னை இறைவனின் கையில் ஒப்படைக்கும் போது கர்த்தர் பயன்படுத்துகின்றார். தாவீதின் பற்றுறுதியில் இறைவன் அவனுக்கு துணை நின்றார். புதுமையான தொழில் நுட்பங்களும் கண்டு பிடிப்புகளும் பழகிப்போன தொழில் நுட்பங்களும் செயல்பாடுகளும் பொய்த்துப் போகலாம். ஆனால் இறைவன் மீது வைக்கும் நம்பிக்கை ஒருபோதும் ஒருவரையும் அபத்தமாக்காது. கர்த்தரின் வல்லமையை உணர்த்த தாவீது சொன்னார். ஆண்டவர் உன்னை என் கைளில் ஒப்புக் கொடுப்பார்...... இது ஆண்டவரின் போர். ( 1 சாமு. 17: 46,47). கர்த்தர் பழக்கமில்லாதனையும் அவர் பணிக்காக பயன்படுத்துகிறார்.

## பழித்துரைக்கப்பட்டவன் புகழப்பட்டான் (1 சாமு. 17:44)

"அருகே வா! வானத்துப் பறவைகளுக்கும் வனத்து விலங்குகளுக்கும் உன் உடலை இரையாக்குவேன்." இது பெலிஸ்தியனின் சவால். இன்று தொழில் நுட்பத்தை கையில் வைத்துக் கொண்டு வல்லரசு நாடுகள் பிற நாடுகளை அடக்கி ஆளுவதும் தொழில் நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டு நாடுகள் தன்னிறைவு பெற்ற நாடுகள் பின் தங்கிய நாடுகள் வளரும் நாடுகள் என்றும் பகுக்கப்பட்டுள்ளன. படை பலமும் பொருளாதாரமும் இதில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

கோலியாத் என்று சொல்லப்பட்ட பெலிஸ்தியன் பல்லாண்டு காலமாக இஸ்ரவேலை அச்சுறுத்திக் கொண்டிருந்த மாவீரன். மிக உயரமானவன் மிகுந்த ஆற்றல் உடையவன். தகுந்த போர் பயிற்சியும் பழக்கமும் உள்ளவன். அவன் முன் நிற்க எவராலும் கூடாது. அவன் இஸ்ரவேலரைக் காணும் பொழுதெல்லாம் வாழும் கடவுளையும் அவருடைய சொந்த ஜனத்தையும் இகழ்ந்து பேசுவது வழக்கம். ஆனால் தாவீது ஒரு இளைஞன். மெல்லிய உடல் அமைப்பும் குள்ளமான தோற்றமும், சிவந்த மேனியும் கொண்டவன். கோலியாத்தின் முன் நிற்க எந்த தகுதியும் இல்லாதவன். அவன் சிறுமையும் எளிமையானவன்.

இறைவனின் திட்டத்தை நிறைவேற்றி இஸ்ரவேலை மீட்க வேண்டும் என்ற தீர்மானத்தை நிறைவேற்ற தாவீது தன்னுடையதும் மிகவும் பழகிப் போனதுமான மிகச்சிறிய தொழில் நுட்பத்தைப் பயன்படுத்துகின்றார். அவனுடைய போர்க்கருவிகள் மிகவும் சாதாரணமானவை. ஆனால் அவனுடைய தொழில் நுட்பம் இறைவன் மீது கொண்டுள்ள நம்பிக்கை மட்டுமே. அதைப் பயன்படுத்தி தன் ஆட்டு மந்தையை சிங்கத்தின் வாய்க்கும், கரடியின் வாய்க்கும் தப்புவித்தான் ( 1 சாமு. 17: 34,37).

பெலிஸ்தியன் வாளோடும், ஈட்டியோடும் எறி வேலோடும் யுத்தத்துக்கு வந்து நிற்கிறான். தாவீது இஸ்ரவேலரின் படைத்திரளின் கடவுளாகிய ஆண்டவரின் திருப்பெயரில் பெலிஸ்தியனோடு போருக்கு வந்து நிற்கின்றார். நம்பிக்கையயை ஆயுதமாக கொண்ட தாவீது பெலிஸ்தியனைக் கொன்று வீடு திரும்பும் போது இஸ்ரவேலின் எல்லா நகர்களிலிருந்தும் தாவீதுக்கு புகழாரம் சொல்லி பல்வேறு இசைகளை மீட்டி பாடல் பாடினர். சவுல் ஆயிரம் பேரைக் கொன்றார்.தாவீது பதினாயிரம் பேரைக் கொன்றார் எனப் புகழ்ந்து பாடினர். பெலிஸ்தியனால் பழித்துரைக்கப்பட்டவன் புகழப்படுகின்றான், நம்பிக்கைக்குரிய தொழில் நுட்பம் புகழ்ச்சியை கொணர்ந்தது.

**பட்டயத்தால் ஆகாதது பக்தியினால் ஆகும்** (1 சாமு. 17:47)

"ஆண்டவர் வாளினாலும் ஈட்டியினாலும் மீட்கிறவர் அல்ல", இறைவனின் முன் பட்டயமோ, ஈட்டியோ வெற்றி பெறாது. முற்கால தொழில் நுட்பத்தின் படி யுத்தத்திற்குப் போர்க்கருவிகள் மிக முக்கியமானவை. ஆனால் படைகளின் ஆண்டவர் தொழில் நுட்பத்துடன் கூடிய ஆயுதம் உடையவர் அல்ல. அவரோடு போருக்குச் செல்வோரிடம் இருக்க வேண்டிய தொழில் நுட்பம் இறை பக்தி மட்டுமே. இறை நம்பிக்கையும் இறை பக்தியும் உடையவர் தங்கள் வாள்களை கலப்பைக் கொழுக்களாகவும் தங்கள் ஈட்டிகளை கருக்கலிவாள்களாகவும் அடித்துக் கொள்வர் (ஏசா. 2:4). சவுலின் போர்க்கருவிகள் தாவீதுக்குப் பொருத்தமானதாகவும் அதில் அவர் பழக்கப்பட்டதாகவும் இல்லை. இறை பக்தியும் பற்றுறுதியுமே அவர் தொழிலின் நுட்பமாய் இருந்தது.

கோலியாத்துடன் செய்யும் போர் ஆண்டவரின் போர் என தாவீது நம்பினார். ஆண்டவரின் போர் வாளினாலும் ஈட்டியினாலும் செய்யப்படுகின்றது அல்ல என்று தாவீது நம்பித் துணிவுடன் யுத்தத்திற்கு செல்கின்றார், வெற்றியும் பெற்றார். இன்று படைக்கருவிகள் பல்வேறு நாடுகளின் தொழில் நுட்பங்களின் பிரதிபலிப்பாக இருந்தும் தொழில் நுட்பக் கருவிகளான படைக்கலன்களினாலும் நாட்டைப் பாதுகாத்துக் கொள்ளலாம் என்று எண்ணிய காலம் கடந்து விட்டது. இன்று அணு ஆயுதங்கள் பயன்படுத்தலாகாது என்ற காலம். தாவீது இதனை முன்கூட்டியே அறிந்திருந்தபடியால் இறை பக்தி மட்டுமே சிறந்த ஆயுதம் என எண்ணி அதனைப் பிடித்துக் கொண்டு படைகளின் ஆண்டவர் வெற்றி சிறப்பார் எனக் கூறிக் கொண்டு யுத்தத்திற்குச் சென்றார், வெற்றி பெற்றார். தற்கால தொழில் நுட்பத்தினால் வாழ்வில் வெற்றி பெறலாம் என்று நம்பியவர் பலர் பக்தியை இழந்து பற்றுறுதியிலிருந்து விலகி அழிந்து போனார்கள். படைக்கருவியை விட பக்தி வாழ்வில் முன்னேறி சர்வ வல்லவரே மீட்கும் கடவுள் என நம்புவோம்.

***முடிவுரை***

இன்று நாட்டின் வளர்ச்சி தொழில் நுட்பத்தின் அடிப்படையில் அமைந்துள்ளது. விஞ்ஞானம், பொருளாதாரம், கணிதம், மருத்துவம் போன்ற துறைகளின் வளர்ச்சிக்கு கண்ட இளைஞர் சமூகம் இறை பக்தியில் வளரத் தான் இந்த தொழில் நுட்பத்தை பயன்டுத்த வேண்டும். தொழில் நுட்பமும் இறை வார்த்தையும், பற்றுறுதியும் இணைந்து அமைதி, நீதி, சமாதானம் ஆகியவற்றை உருவாக்கி விரிசல்கள் நீங்கி உறவில் மகிழ தொழில் நுட்பம் பயன்படட்டும்.

அருள்திரு. **S. ஐசாயா**

**23-10-2011**

# கடவுளின் சாயலும் - மானுட மேன்மையும்

## GOD'S IMAGE AND HUMAN DIGNITY

யோபு 36:1-15 | கொலோ. 3:5-11
திபா. 8:146 | லூக்கா 4:16-21

*"புதிய மனித இயல்பை அணிந்திருக்கிறீர்கள். அவ்வியல்பு தன்னை உண்டாக்கினவரின் சாயலுக்கேற்ப புதுப்பிக்கப்படுகிறது...."* கொலோ 3:10

**மன்றாட்டு : மானுடரை தமது சாயலில் படைத்த கடவுளே, உம்மால் படைப்பில் மகுடமாக ஏற்படுத்தப்பட்ட மானுடர்கள் பல நேரங்களில் வெறுக்கப்பட்டு, உரிமைகள் மறுக்கப்பட்டு மரியாதை இழக்கின்றனர். உமது பரிவு அவர்கள் மேல் பரவட்டும். கிறிஸ்துவின் மாதிரியை நாங்கள் ஏற்று, கடினங்கள் கண்டு தளராமல் அநீதி, அடிமைத்தனம், பயம், நோய், மரணம் எனும் இன்னல்களோடு போராடும் மக்களுக்கு துணை நிற்க வழிநடத்துவீராக. அமைதியாய் அவர்களை வலுப்படுத்தி, உமது எழுந்தருளுதலால் உற்சாகமூட்டி புது சமூக விடியலின் நம்பிக்கை பெறவும், அனைத்து மக்களும் நல்லுறவுடன் இணைந்து வாழவும் அருள்புரிய வேண்டுகிறோம். - ஆமென்.**

கடவுளை காண முடியாது என்றிருந்தும் கடவுளை காண வேண்டும் எனும் ஆர்வத்தினால், தேவையினால் மனித உருவத்தில் கடவுளை காண முற்பட்டதும் சமயங்களின் வரலாறு ஆகும். குறிப்பாக நமது திருமறையும் அதற்கு தெளிவான சான்று பகருகிறது. "மனித உருவத்தில் இறைவனின் சாயல்" எனும் கருத்து, படைப்பின் வரலாற்றிலும் (தொ.நூ. 1:26-28). கிறிஸ்துவின் மனித சாயலிலும் (யோவா. 1:18; 14:9) நிரூபிக்கப்பட்டுள்ளது. இதில் மனிதசாயல் என்பது இறைசாயல் என்பதால் அது அதிக உயர்வுக்குரியது என்பதும் பேருண்மையாகும் (திபா. 8 : 5). காரணம், இம்மேன்மைக்குரிய சாயலில் மூன்று சிறப்பான தன்மைகள் முதுகெலும்பாய் அமைந்துள்ளன. அவையாதெனில்,

1. தலை நிமிர்ந்து நடத்தல் (Walking erect)
2. சிந்தித்து பேசும் செயல் (Thinking and talking around)
3. அன்பில் வாழ்தல் (Living together in love & attection)

இக்குணங்கள் மனிதசாயலின் மேன்மையையும், மாண்பையும் வெளிப்படுத்துகிறது எனலாம். தூய பவுல் இம்மூன்று கருத்துகளையும் (கொலே. 3:5-11) அடிப்படையாக கொண்டு சாயலை விளக்குகிறார். இதனையே ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவும் தம் 'நாசரேத்தூர் பிரகடன' (Nazareth Manifesto) அறிக்கையில் மானுட மாண்பு காக்கப்பட தமது ஆர்வத்தையும், அக்கறையையும் வெளிப்படுத்துகிறார். கறைபட்டுப் போன மானுட வாழ்வை மீண்டும் புனர் அமைத்திட, புது

வாழ்வின் அடையாளத்தை தருகிறார் எனலாம். குழந்தைகள், பெண்கள், வறியவர், துன்புறுவோர் ஆகியோர் வாழ்வு சூழலில் புறக்கணிக்கப்படுவதை மாற்ற, தம் புரட்சி அறிக்கையை தருகிறார்.

தூய பவுல் தம் மடலில், கறைபடிந்த மானுடத்திற்கு புது வாழ்வாகிய இறைசாயலை அடையாளப்படுத்த சில உண்மைகளைத் தருகிறார்.

## 1. தேவையற்றதை விட்டுவிடுவது புதுவாழ்வின் அடையாளம்

புதுவாழ்வுக்கு அடையாளமாய் சினம், சீற்றம், தீமை, பழிப்புரை, வெட்கக்கேடான பேச்சு இவைகளை விட்டுவிடுங்கள் என்பது பவுலின் அறிவுரை (கொலோ. 3:8). காரணம், நாம் கடவுளின் சாயலை பெற்றவர்கள். எனவே, மனித வாழ்வுக்கு தேவையற்றது நமக்கு வேண்டாம். இது தலை நிமிர்ந்து நடப்பதற்கு இணையானது. ஒருவருக்கொருவர் கோபம் கொண்டு தேவையற்ற வம்பு வார்த்தைகளை பேசுவது இன்றைய நாகரிகமாகிவிட்டது. விட்டுவிடுதல் என்பதில் மிக முக்கியமான கருத்து "தேவையற்ற வம்பு வார்த்தைகளை பேச வேண்டாம்" என்பதாகும். பெரியவர்கள் சொல்வார்கள் ஒரு காரியத்தை செய்யும் முன் இரண்டு முறை பேசு, பேசுமுன் மூன்றுமுறை யோசி. எனவேதான் இறைவனின் படைப்பில் வாய் ஒன்று, காது இரண்டு. இதற்கு என்ன பொருள் என்றால், 'எவ்வளவு வேண்டுமானாலும் கேள் என திறந்த இரண்டு காதுகள், ஆனால் கொஞ்சமாய் பேசு என்பது போல் மூடப்பட்ட நாவு. இதற்கு வாய்வீடு, பற்காவல், இதழ் பூட்டு - என மூன்று காவல். மனித சாயலில் வெளிப்பட்ட இயேசு கிறிஸ்து பிலாத்துவுக்கு முன் பேச வேண்டிய இடத்தில் மட்டுமே பேசுவார். வள வளவென்று பேசிகொண்டே இருக்க மாட்டார். நாம் பேசுகிற ஒவ்வொரு வார்த்தைக்கும் கணக்கு கொடுக்க வேண்டும் (மத். 12:36,37). ஆக எவைகள் எல்லாம் கடவுள் தந்த சாயலுக்கு தேவையில்லையோ அவைகளை விட்டுவிட்டு நம் சாயலை புதுப்பித்து கொள்ள வேண்டும். 'பிற ஒன்றின் மேல் தீ மூட்டி அழிக்கும், தீக்கட்டையும் அந்த தீயால் அழிந்தே தீரும்' எனவே, நாம் நம்மை புதுப்பிப்பது தேவையானதே.

## 2. தேவையற்றதை பேசாதிருப்பது புதுவாழ்வின் அடையாளம்

'கெட்டவார்த்தை எதுவும் உங்கள் வாயினின்று வரக்கூடாது' (எபே. 4:29). பொய்யும், தேவையில்லாத வார்த்தைகளும் மனிதத்தை அழித்துவிடுகிறது. இறைசாயலில் இருந்து நம்மை தனிமையாக்கி விடுகிறது. எதைப் பேசினாலும் சிந்தித்துப் பேச வேண்டும். ஆதாமின் சமாளிப்பு, காயீனின் சமாளிப்பு, யோசேப்பின் சகோதரர்களின் சமாளிப்பு, இவர்களின் பொய்கள் உலக வரலாற்றையே மாற்றியது. மாறாத ஆண்டவரை விட்டு தூரமாக்கியது. மூன்று காரியத்தை திரும்ப பெற முடியாது என்பர் அவைகள் இழந்த வாய்ப்பு, கொட்டிய பால், பேசிய வார்த்தை எனவே தான் தூய பவுல் மீண்டும் மீண்டும் கூறுகிறார். "பொய் பேசாதீர்கள்" (கொலோ. 3:9). உலகில், விளையாடுகிற பிள்ளை அம்மா

அப்பாவிடம் பொய் சொல்கிறது. கடமையை செய்யாதவர் ஆசிரியரிடம் பொய் சொல்கிறார். பணியாளர் அதிகாரியிடம் பொய் பேசுகிறார். இதனால் குடும்ப வாழ்வில். சமூகத்தில் குழப்பங்கள் நாளுக்கு நாள் வளர்கின்றன. நாவை அடக்காதவரின் சமயப்பற்று பயனற்றது (யாக். 1:26) என்றும், நாவை அடக்க கடிவாளம் போல் நிதானம் தேவை, சுக்கான் போல் நல்ல வார்த்தை தேவை, நெருப்பு போல் கவனம் தேவை என்றும் திருமறை அறிவுறுத்துகிறது (யாத். 3 : 170). தங்களுக்குள் பேசாது, வெறும் எழுத்து மூலம் பேசுகிற கணவன் மனைவி. ஒருநாள் கணவன் மனைவியிடம் தான் வெளியூருக்கு செல்ல வேண்டும் காலை 4.00 மணிக்கு எழுப்பிவிடவும் என ஒரு பேப்பரில் எழுதி மனைவிக்கு தெரியும்படி எழுதிவைத்துவிட்டு தூங்கிவிட்டார். திடீரென்று காலையில் கண்விழித்து பார்த்தார். நேரமோ 8.00 மணி கோபத்தில் மனைவியிடம் ஏன் என்னை எழுப்பவில்லை என கோபத்தில் கேட்டார். அதற்கு மனைவியோ நான் 4.00 மணிக்கு முன்னதாகவே நேரம் ஆகிவிட்டது எழும்பவும் என ஒரு பேப்பரில் எழுதி உங்கள் தலையணை பக்கத்திலே வைத்தேனே பாருங்கள் என்றாள். ஆக பேச்சு அவசியம் ஆனால் அது தூய்மையாக இருக்க வேண்டும்.

### 3. தேவையானதை சிந்திப்பது புது வாழ்வின் அடையாளம்

இன்றைய சமுதாயத்தில் எங்கு நோக்கினும் பிரச்சனைகள், பிரிவினைகள், குடும்பத்தில் கணவன் மனைவி, ரோட்டில் எல்லை பிரச்சனை, உயர்ந்தோர் தாழ்ந்தோர் பிரிவினை. எனவேதான் திருமறை நமக்கு, தருகிற போதனை ‘எல்லாரும் ஒன்றித்து வாழ வேண்டும்’ என்பதாகும். அன்பில் இணைந்து வாழ்தல் தேவை. இறைசாயல் மானுட மாண்பில் எதிர்பார்ப்பது, இந்த ஒன்றித்து வாழ்தலைதான். ஏசா, யாக்கோபு இணைவதை போல் ஒன்றிப்பு தேவை. பிலோயாமை போல் நேர்மையை தூண்டுபவர் அவசியம். அப்பொழுதான் இந்த ஒன்றிப்பு வளர முடியும். மாணவர்களிடம் ஆசிரியர் ஒருவர் ஒரு நல்ல 100 ரூபாய் தாள் யாருக்கு வேண்டும்? என்று கேட்டார். பின் அதனை கசக்கி, அழுக்காக்கி இப்பொழுது கேட்டார் யாருக்கு வேண்டும்? அப்பொழுதும் எல்லோரும் வேண்டும் என்றே சொன்னார்கள். இதனை போன்று ஆண்டவரும் உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்றில்லாமல் அனைவரிடத்தும் இணைந்து செயலாற்றுகிறார். வேறுபாடு இல்லாமல் கிறிஸ்துவே அனைவருக்குள்ளும் அனைத்துமாயிருப்பார் (கொலே. 3:11). எனவே சாயலைப் பெற்ற நாம் அவரின் எண்ணத்தை வெளிப்படுத்த வேண்டும்.

ஆக இறைசாயல் என்பது இறைவன் தமக்கு தந்த (மனித உருவம்) சாயலில் எதனை எதிர்பார்த்தாரோ அதனை நிறைவேற்றுவதே மானிட மாண்பின் சிறப்பாகும். இதற்காக எவைகளை நம்மிடம் இருந்து விடுவது, ஏற்பது என்பதனை சிந்தித்து, நல்முடிவெடுத்து அனைவரும் இணைந்து வாழ முயல்வோம்.

அருள்திரு. **P. இராஜா ஸ்டாலின்**

**30-10-2011** *சீர்திருத்த ஞாயிறு*

# பற்றுறுதியை மீண்டும் கண்டறிதலும் அதன்படி வாழ்தலும்

## RE-DISCOVERING AND RELIVING THE FAITH

2 குறி. 34:8-21 யூதா. 17:25
திபா. 112 யோவா. 2:13-22

*"என் தந்தையின் இல்லத்தை சந்தை ஆக்காதீர்கள் ." யோவா. 2:16*

**மன்றாட்டு : என்றும் வாழும் எங்கள் கடவுளே, உமது திருமைந்தர் வாயிலாய் அன்பிலும், அமைதியிலும் மகிழச்செய்யும் மாட்சிக்காய் நன்றி. தொடர்ந்து உமது திருச்சபையில் சமாதானமும், அன்பும், நீதியும், சீர்திருத்தங்களும், ஒருங்கிணைப்பும் உருவாகவும், மானுடம் முழுவதிலும் அனைத்து படைப்புகளிலும் நீரே நிறைந்து, இசைவு தந்து வழிநடத்த இயேசுகிறிஸ்து வழி மன்றாடுகிறோம். - ஆமென்.**

கிறிஸ்தவத்திற்கு வெளியே இருந்து வரும் சவால்களை விட திருச்சபைக்கு உள்ளிருந்து வரும் சவால்கள் தான் கிறிஸ்தவத்தை அசைத்திருக்கின்றது, உயிர்ப்பித்திருக்கின்றது. 16-ம் நூற்றாண்டில் திருச்சபையின் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படுத்த சீர்திருத்த விதையை விதைத்தவர் மார்டில் லுத்தர். 1577-ல் அக்டோபர் 31-ம் தேதி தனது 95 நியாயங்களை (Written Burg) விட்டன்பர்க் ஆலய வாயிலில் வைத்து சமய சீர்திருத்தத்திற்கு அடி வகுத்தார். அதன் விளைவே இறைமக்கள் இறைவனோடு விசுவாசத்தால் மன்றாடலாம் (ரோமர் 1:17) என்று புரட்சி விதை பிறந்தது. நீ பெயரளவில் தான் உயிரோடிருக்கிறாய், உண்மையில் இறந்து விட்டாய் (திரு.வெளி 3:11) என்று சர்தை சபைக்கு தரும் அறைகூவல் நமக்கு தரப்படுகிறது. இன்றைய திருச்சபை எதிர்கொள்ளும் சவால்களை சிந்திப்போம்.

### *வியாபாரமயமான ஆன்மீகம்*

இன்று உலகில் எங்கும், எதிலும் வியாபாரமயமான காலம். விண், மண், நீர், காற்று, நெருப்பு என்று எல்லாம் வியாபாரமாகி கொண்டிருக்கின்றது. கிறிஸ்தவமும் இதற்கு தப்பவில்லை, திருச்சபை தியாகத்தை மறந்து லாபமா? நஷ்டமா? என்று கணக்கு பார்ப்பது, கிறிஸ்துவை சிதைப்பது போன்று ஆகும்.

நாபோத், ஆள்பலம், படைபலம், பணப்பலம் (Man power, Muscle Power, Money Power) பெற்றிருந்தும், ஒரு ஏழையின் நிலத்தை

பெற்றுக்கொள்ள வியாபாரம் பேசுகின்றான். அதைப்பெறுவதற்கு தன்னுடைய அதிகாரத்தை தவறாக பயன்படுத்துகின்றான். திருச்சபையும் ஆண்டவர் தந்த வரங்களை விற்பனை செய்வது ஒன்றுமறியாத ஏழை இறைமக்களின் விசுவாசத்தை விற்பனை செய்வது போன்ற நிலையன்றோ? சமாரியாவில் சீமோன் தன் மாயவித்தையால் அநேகரை பின்பற்றி வர செய்தான். இச்சூழலில் பிலிப்பு தூய ஆவியரின் ஆற்றலால் அநேகரை விடுவித்தபோது தன் கரத்திலுள்ள ஆற்றலைப் பார்க்கிலும் பிலிப்புவிடம் உள்ள ஆற்றல் பெரிதென்று பணத்தால் பெற முயன்றான். இன்றைய திருச்சபைபும் பணம், பொருள், என்ற கண்ணோட்டத்தில் செயலாற்றுவதால் கிறிஸ்துவை இழந்து நிற்கின்றது.

## ஆசீர்வாத ஆன்மீகம்:

இன்றைய காலச் சூழலில் கட்டிடம், சொத்து, நகை, பணம், கல்வி, சமூக அந்தஸ்து இவைகள் தான் ஆசீர்வாதம் என்ற போதனைகள் வலுப்பெற்று நிற்கின்றன. இத்தகைய போதனைகளால் பாடுகள், கண்ணீரில், வேதனைகளில் வழி நடத்தும் இறைவனின் முகம் மறைக்கப்படுகிறது.

ஒரு விவசாயி நல்ல விளைச்சலை நிலத்தில் பெற்றுக் கொள்கின்றான். எனவே தன் வருங்காலத்தை நன்றாக அமைக்க திட்டமிடுகின்றான். லூக். 12:19 “என் நெஞ்சமே, உனக்குப் பல்லாண்டுகளுக்கு வேண்டிய பலவகை பொருள்கள் வைக்கப்பட்டுள்ளன, நீ ஓய்வெடு, உண்டு, குடித்து, மகிழ்ச்சியில் திளைத்திடு” என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டான். இத்தகைய மனநிலையில் உள்ளவரைக் குறித்து ஆண்டவர் கூறும்போது லூக். 12:21-ல், “கடவுள் முன்னிலையில் செல்வம் இல்லாதவராய் தமக்காகவே செல்வம் சேர்ப்பவர் இத்தகையோரே” என்று உரைக்கப்படுகின்றது.

கடவுளற்ற சமூகம் இன்றும் உண்டு, ஆசீர்வாதம் தான் கடவுள் என்று வாழ்வது ஆன்மீக வாழ்வின் சவாலன்றோ.

## மனித வணக்கம் நிறைந்த ஆன்மீகம்

முன் காலங்களில் அரசர்களை தெய்வமாக வணங்கும் பாரம்பரியம் வழக்கில் இருந்தது. இன்றும் உலகில் எதாவது சாதித்தவர்கள், சாதனை படைத்தவர்கள், சமூக மாற்றத்திற்கு காரணமானவர்களை Hero-க்கள் ஆக்குவது உண்டு. குறிப்பாக கலை உலகை சார்ந்தவர், விளையாட்டு நட்சத்திரங்கள், அரசியல் தலைவர்கள் பிரதானமான இடத்தை பிடிக்கின்றனர். இன்றைய கிறிஸ்தவமும் இதை சந்திக்கின்றது. மதிப்பும், மரியாதையும் தவறல்ல ஆயினும் கடவுளுக்கான இடத்தை மனிதர்களுக்கு கொடுப்பது தான் பிரச்சனை.

கொர்நேலியு நேர்மையான இறைமனிதன். கடவுளை தேடுவதிலும், ஆன்மீக வாழ்விலும் முன்னேற வாஞ்சித்தவர். பேதுரு அவரை சந்தித்தபோது இராணுவ முறை மரியாதை கொடுக்க வேண்டியவர், பேதுருவின் காலில் விழுந்தார். பேதுரு ஆவரைப் பார்த்து 'எழுந்திடும்; நானும் ஒரு மனிதன் தான்' (தி.ப. 10:26). லிஸ்திராவில் பவுல் பிறவியில் கால் ஊனமுற்றவரை குணமாக்கியபோது 'தெய்வங்கள்.....வந்திருக்கின்றன' (தி.ப. 14:11) பவுல் பதிலாக உரைக்கும்போது நாங்களும் உங்களைப் போன்ற மனிதர்கள் தாம்...? ஆண்டவரிடம் திரும்பங்கள் என்றார். பவுல் கப்பல் பயணத்தில் சிக்குண்டு ஒரு தீவில் கரை சேர்ந்த போது ஒரு விரியன் பாம்பு கையைப்பற்றிக்கொண்டது (தி.ப. 28:3) ஆயினும் பவுலுக்கு தீங்கு நேராதபடியால், தெய்வமென்றனர்.

இன்னும் கிறிஸ்தவத்தில் வரங்களால் அநேகர் தங்களை முன்னிலைப்படுத்துவது நாம் கண்காணும் செயல் இதுவும் ஆன்மிக வாழ்வின் சவாலன்றோ?

ஒரு குரு ஒருவர் தன்னுடைய ஆசிரமத்தில் ஒவ்வொரு நாளும் சீடர்களோடு தியானம் செய்வது வழக்கம். அப்படி தியானம் செய்யும்போது அந்த அறையின் முன்பு ஒரு பூனையை கயிற்றால் கட்டி வைப்பது வழக்கம். ஒரு நாள் குரு வெளியயூர் பயணமாக சென்றார், சீடர்களும் வழக்கம்போல பூனையை கட்டி வைத்துவிட்டு தியானம் செய்தனர். ஒருநாள் தியான வேளையில் குரு வெளியூரிலிருந்துஆசிரமத்துக்கு திரும்பினார். பூனையை கட்டி கொண்டிருந்த சீடர்களிடம் ஏன் பூனையை கட்டுகிறீர்கள் என்று கேட்டார். சீடர்கள் பதிலாக கூறினர் நீங்கள் தினமும் செய்வதை தான் செய்கிறோம் என்றனர். குரு பதிலாக சொல்லும்போது தியானத்திற்கும் பூனைக்கும் சம்மந்தமில்லை, அது தியான வேளையில் அங்குமிங்கும் ஓடுவதால் தான் கட்டினேன் என்றார்.

இன்றைய திருச்சபைக்குள்ளும் நம்மை அறியாமலே சில பாரம்பரியங்களையும், பழக்கவழக்கங்களையும் நுழைத்துள்ளோம். சீர்திருத்தங்கள் சமயத்திலும், சமூகத்திலும் தொடர்ந்து நடைபெற வேண்டிய ஒன்று (Reformation as on going process) அந்த சிந்தையோடு செயலாற்றுவோம்.

அருள்திரு. **C. கில்டன் தயானந்த்**

**01-11-2011**

***சகல புனிதர்கள் தினம்***
**ALL SAINTS DAY**

| | |
|---|---|
| எரே. 31:31-34 | வெளி. 7:2-4; 9-17 |
| திபா. 150 | மத். 5:1-12 |

**01-11-2011** *அருணோதய ஆராதனை*

# புது நம்பிக்கையருளும் கடவுள்

எசே. 37: 1-10

*"................... அவர்கள் உயிரடைந்து காலூன்றி, மகா பெரிய சேனையாய் நின்றார்கள்."*
*எசே. 37:10அ*

புதிய மாதத்தில் அடியெடுத்து வைத்துள்ள அனைவருக்கும் நம்பிக்கையருளி வழிநடத்தும் ஆண்டவர் புதுநம்பிக்கையருளி வழி நடத்துகிறார் என்பது திருமறை கற்றுத் தரும் செய்தியாகும். ஒருமுறை எசேக்கியேல் இறைவாக்கினரின் மீது ஆண்டவரின் கரம் வந்து அமர்ந்து, எலும்புகள் உயிரடையுமா? என்று கேட்கப்படும் கேள்வி நம்பிக்கையற்றச் சூழ்நிலையிலிருந்து நம்பிக்கை கிடைக்குமா என்பதேயாகும். மனித சிந்தனையில் அப்பேர்ப்பட்ட நம்பிக்கை ஏற்படுவதற்கான சாத்தியமே இல்லாத காரணத்தால் இறைவாக்கினரும் 'கடவுளே நீரே அதை அறிவீர்' என்கிறார் (37:3). இஸ்ரயேலரது வாழ்வில் சிறையிருப்புகள், போர் அபாயங்கள் என்று விரக்தியோடும் வேதனையோடும் வாழ்ந்து கொண்டிருப்பவர்களுக்கு புதிய நம்பிக்கை பிறக்கும் என்ற செய்தியை இதன்மூலம் ஆண்டவர் அருளுகின்றார். எசேக்கியேல் இறைவாக்கினர் சந்திக்கும் உலர்ந்த எலும்புகள் காட்சியினுடாய் புதிய மாதத்தில் அடியெடுத்து வைத்துள்ள நமக்கு ஆண்டவர் கற்றுத்தரும் உண்மைகளாவன.

## 1. உலர்ந்து போன எலும்புகள் : (எசே. 37:2)

பள்ளத்தாக்குக்கு அழைத்துச் செல்லப்பட்ட எசேக்கியேல் அங்கு காணும் காட்சி மிகுதியாய்ச் சிதறிக்கிடந்த உலர்ந்த எலும்புக் கூட்டமாகும். காய்ந்து போன இந்த எலும்புகள் முழு நம்பிக்கையற்றச் சூழ்நிலையையே (Hopeless situation) காட்டுகிறது. அப்படியென்றால் இனி உயிரடைவதற்கே சாத்தியமில்லை என்பது தான் இதன் உண்மையான பொருள். இனி கருதரிப்பதற்கான சாத்தியம் இல்லை என்று அறியப்பட்ட சாராள் (தொ.நூ. 17:17), பாலை நிலத்தில் தண்ணீர் கிடைப்பது சாத்தியமில்லை என எண்ணிய ஆகார் (தொ.நூ. 21:15,16), பாலைநிலத்தில் தண்ணீரும் மாமிச உணவும் எப்படி சாத்தியமாகும் என எண்ணிய இஸ்ரயேலர், பின்னால் பார்வோனின் படைவீரர்கள் முன்னால் செங்கடல் இவற்றிற்கு இடைப்பட்ட இடத்தில் சிக்கி, இனி பிழைப்போம் என்ற நம்பிக்கை அற்றுப் போன இஸ்ரயேலர் (விப. 14:11,12)................ போன்றோரது வாழ்வில் நம்பிக்கையிழந்த நிற்பதையே அறிய முடிகிறது. இதேபோன்று வாழ்க்கை பயணத்தில் காய்ந்து போய் நம்பிக்கையிழந்து சூழ்நிலைகள் சூழ்ந்திருக்கின்றன என்கிறோமா? நம்மை கடவுள் காண்கிறார்.

### 2. உயிரற்ற எலும்புகள் : (எசே. 37:8)

இறைவாக்கினர் பார்த்துக் கொண்டிருந்த வேளை உலர்ந்த எலும்புகள் தன்தன் எலும்போடு இணைந்து கொண்டன. அது மட்டுமல்ல அவற்றின் மீது நரம்புகளும் தோலும் உண்டானது உயிரற்றிருந்த நம்பிக்கையற்ற நிலையிலிருந்து ஒரு சிறு நம்பிக்கை தரும் நிகழ்வாக (Hope with out Life) இது அமைந்துள்ளது. நம்பிக்கை முழுவதுமாக அற்றுப் போகாதபடி ஒரு வேளை வாழ்வு கிடைக்கலாம் என்கின்ற ஏக்கத்தோடிருக்கின்ற ஒரு நிலையைக் காணமுடிகிறது. பஞ்சம் ஏற்பட்ட வேளை எலிய இறைவாக்கினர் சந்தித்த சரெப்தா ஊர் கைம்பெண்ணிடம் கொஞ்சம் மாவு, கொஞ்சம் எண்ணெய் இதுதான் தங்கள் வாழ்வின் கடைசி நம்பிக்கை (Iஅர. 17:12) என கூறுவது போன்றும், இறைவாக்கினர் எலிசாவை சந்திக்கின்ற தாயார் கடன் தொல்லையினால் வாழ்வின் அடித்தளத்திலிருக்கிறோம் இனி வாழ்வது என்பது சாத்தியமாய் தெரியவில்லை, கொஞ்சம் என கூறுவது போன்றும், திரள் சுட்டம் மக்களுக்கு நடுவில் ஐந்து அப்பமும், இரண்டு மீனும் மட்டும் வைத்திருப்பது (யோவா. 6:9) போன்றும் அமைந்துள்ளது. சிறு நம்பிக்கையுடன் ஏசேக்கியேலும் காத்து நிற்கிறார். நமது வாழ்விலும் சிறு துளி நம்பிக்கையோடே நிற்கிறோமா? ஆண்டவரை நோக்கிப் பார்ப்போம்.

### 3. உயிரடையும் எலும்புகள் : (எசே. 37:10)

மாமிசம் பெற்றுத் தோலினால் நிரப்பப்பட்ட எலும்புகள், இறைவாக்கினர் இறைவாக்குரைக்கின்ற போது மிக பெரிய திரளாய் உயிரடைந்து நின்றன. நம்பிக்கையற்ற நிலையிலிருந்து, துளி நம்பிக்கை பெற்று புது நம்பிக்கை பிறந்தது (New Hope). மனிதரால் கூடாதது கடவுளால் கூடும் என்பதற்கிணங்க நம்பிக்கையற்ற நிலையிலிருந்து புதுநம்பிக்கையை முழுமையான நம்பிக்கையைக் கடவுள் வெளிப்படுத்துகிறார். வயது முதிர்ந்த சாராளுக்குப் பிள்ளை, செங்கடலைப் பிளந்து பாதை, கண்மலையைப் பிளந்து தண்ணீர். பாலையில் உணவு ................ என்று நம்பிக்கையிழந்த நின்ற மக்களுக்குப் புதுநம்பிக்கையருளிய கடவுள் ஏசேக்கியேலுக்கு அளிக்கும் நம்பிக்கையுரையும் காட்சியினூடாய் நம்பிக்கையிழந்த இஸ்ரயேலருக்குப் புது நம்பிக்கையருள்கிறார். இன்றும் வாழ்க்கைப் பயணத்தில் நம்பிக்கையிழந்து சோர்ந்து வாழ்வில் போராட்டத்தோடே வாழ்கிறோமா? நமது ஆண்டவர் இப்புதிய மாதத்தில் புது நம்பிக்கையருளி நம்மை வழி நடத்துவார் என்பதற்கு சந்தேகமில்லை.

அருள்திரு. **A. பிறைட் சாலமோன்**

---

**02-11-2011**

**சகல பரிசுத்தவான்கள் தினம்**
**ALL SOULS DAY**

| | |
|---|---|
| ஏசா. 25:6-9 | 2 கொரி. 5:1-10 |
| திபா. 118:14-15; 17-21 | மத். 11:21-27 |

**06-11-2011** *உலக ஞாயிறு பள்ளி தினம்*

# பற்றுறுதியில் வளர்த்தல்

## NURTURING IN FAITH

நீதி. 23:15-26 எபி. 12:1-13

திபா. 1 யோவா. 6:1-14

*"மகனே, நான் சொல்வதைக் கவனி; என் வழிகளில் உன் கவனத்தை செலுத்து." நீதி. 23:26*

**மன்றாட்டு : அன்புறவின் கடவுளே, குழந்தைகளை இறையரசின் சுதந்திரராய் இயேசுகிறிஸ்து வழி ஏற்றுக்கொண்டுள்ளீர். அனைத்து குழந்தைகளும் பற்றுறுதியில் பலம் பெறவும், வாழ்வின் முழு வளர்ச்சி நிலைகளுக்கு வாய்ப்பு பெறவும் வேண்டுகிறோம். நீரே அவர்களுக்கு ஆசிரியராகவும், வழிகாட்டியாகவும் அமைந்து பிரகாசிக்கச் செய்ய வேண்டுமென கிறிஸ்துநாதர் வழியாக வேண்டுகிறோம். - ஆமென்.**

பிள்ளைகளை வளர்த்தல் என்பதே சவாலான பணி. அதிலும் பற்றுறுதியில் வளர்த்தல் என்பது அதி சவாலான பணி. குழந்தை உளநல கல்வியாளர்கள். பிள்ளைகளின் மனநிலையை அடிப்படையாக வைத்து அவர்களை மூன்று பிரிவாக பிரித்திருக்கின்றார்கள்.

1. மெழுகுவர்த்தி புத்தி பிள்ளைகள்
2. மரக்கரிப் புத்தி பிள்ளைகள்
3. வாழைத்தண்டு புத்தி பிள்ளைகள்

மெழுகுவர்த்தியில் தீபம் உடனே பற்றிக் கொள்ளும் மரக்கரியில் தீயை பற்ற வைக்க சற்று சிரமம் எடுக்க வேண்டும். காற்றை திரும்பத் திரும்ப ஊதும் போதுதான் கரியில் தீபற்றும். வாழைத் தண்டில் தீயை பற்ற வைக்க மிகமிக கஷ்டப்பட வேண்டும்.

பற்றுறுதியில் வளர்ப்பதையும். வளர்வதையும் இருதயத்தில் பற்ற வைத்து, தீபம் ஏற்றுவதற்கு இணையாகவே பவுல் அப்போஸ்தலர் சொல்லுவதை 1தீமோ. 4:14; 2தீமோ. 1:16 - ஆகியவைகளில் வாசிக்கலாம்.

பற்றுறுதியில் வளர தீமோத்தேயுவிற்கு சொல்லப்பட்ட ஆலோசனைகள் போலவே நீதி. 23:15-26-ல் சில வாழ்வியல் ஆலோசனைகள் கூறப்படுகின்றன. அவ்வாலோசனைகளை செவிமடுத்து கவனத்தோடு கேட்டு வாழ்வை பற்றுறுதி வழியில் ஒருங்கமைத்துக் கொள்ள நீதி. 23:26-ல் அழைப்பு விடுக்கப்படுகிறது.

பற்றுறுதியில் வளர பகிரப்பட்டுள்ள ஐந்து ஆலோசனைகளை தியானிப்போம்.

### 1. உதடுகளின் நேர்மை : (Social skill)

நீதி. 23 : 16 "உன் நாவு நேர்மையானவற்றைப் பேசினால், என் உள்ளம் களிகூரும்".

நாவை பயன்படுத்துவதை சமூகவியல் திறன் (Social skill) என்று உளவியலாளர் சொல்லுவார்கள். நண்பர்கள் (Peers), ஆசிரியர்கள் போன்றோர்களுடன் பேசவும், கற்கவும், கருத்துக்களை பகிர்ந்து கொள்ளவும் 'நாவு' பயன்படுத்தப்படுகிறது. நாவு கறைபட்டுவிட்டால் உடல் முழுவதும் கறைபட்டு விடுகிறது (யாக். 4:6). நாவை நேர்மையாக பயன்படுத்த பழகும்போது பற்றுறுதியில் 'உறுதி' குறையாது.

நாவை நேர்மையாக பயன்படுத்த வலியுறுத்தி தமிழகத்தில் ஒரு நாடோடி கதை வழங்கப்படுகிறது. ஒரு ஏரியில் இரண்டு கொக்குகளும், ஆமை ஒன்றும் நண்பர்களாக வசித்து வந்தன. ஏரியில் தண்ணீர் வற்றிப் போகிற சூழ்நிலை வந்த போது கொக்குகள் வேறு ஏரிக்கு போக தீர்மானித்தன. தங்களது நண்பனான ஆமையிடம் தங்களது தீர்மானத்தை சொல்லி, "நீயும் வாயை திறக்காமலிருந்தால் எங்களுடன் உன்னையும் வேறு ஏரிக்கு தூக்கிக் கொண்டு போவோம்'' என்றன. ஆமையும் சம்மதித்தது. கொக்கு ஒரு நீண்ட, உறுதியான குச்சியை எடுத்து வந்தது. கொக்குகள் இரண்டும் அக்குச்சியின் இரு முனைகளையும் கவ்விக் கொண்டன. அக்குச்சியின் நடுவில் ஆமையைத் தன் வாயால் இறுகக் கவ்வச் செய்தன. பிறகு ஆமையுடன் வேறு ஏரி நோக்கி பறந்தன. ஓரிடத்தில் ஒரு கிராமத்திலுள்ள சிறுவர்கள் ஆமையுடன் கொக்குகள் பறந்து செல்வதைக் கண்டு குதித்து கூச்சலிட்டனர்.

சிறுவர்களது கூச்சலைக் கேட்ட ஆமை வெறுப்புற்றது. தனக்குள் ''இக்குழந்தைகளுக்கு நற்புத்தியில்லை. இதை நான் அவர்களிடம் கூறுகிறேன்" என்று தன்னை மறந்து வாயை திறந்தது. அந்தோ பரிதாபம், வெகு உயரத்திலிருந்து கீழே விழுந்து படுகாயமடைந்து இறந்தது.

நாவை நேர்மையாக பயன்படுத்துவதென்பது எந்த இடத்தில், எந்த வகையில் பயன்படுத்துவது என்பதை தெரிந்து தெளிதலாகும்.

உதடுகளை நேர்மையுடன் பயன்படுத்தி கிறிஸ்தவ பற்றுறுதிக்கு களங்கம் வராமல் வாழ பிள்ளைகள் பழக வேண்டும்.

### 2. மனதின் மென்மை : (Cognitive skill)

நீதி. 23 : 17 "வளமுடன் இருக்கும் பாவிகளைப் போல நீயும் இருக்க வேண்டுமென்று ஏங்காதே, ஆண்டவரிடம் எப்போதும் அச்சம் உள்ளவனாயிரு".

மனதை மென்மையாக வைத்துக் கொள்ள இந்த ஆலோசனை வழங்கப்படுகிறது.

மனதிலே ஆண்டவர் கொடுத்துள்ள மாபெரும் சக்தியால் பல பொருட்களை குறித்தும், பார்க்கும் மக்களை குறித்தும், சந்திக்கிற புது நிகழ்வுகள் குறித்தும் ஏற்கனவே நமக்கிருக்கும் அறிவினாலே அலசி ஆய்ந்து, கூடுதல் அறிவு பெறப்படுகிறது. மனம் மென்மையாக இருந்தால் மட்டுமே இவைகள் சாத்தியம்.

13-17 வயது வரையிலான (early adolesence period) பருவத்தில் பிள்ளைகளிடம் மனோரீதியாக ஒரு சமநிலை அற்ற நிலை ஏற்படுகின்றது. அத்துடன் யாவற்றையும் அறிய விரும்பும் (curiosity) நிலையும் காணப்படுகின்றது. இந்த பருவம் பிள்ளைகள் கெட்ட பழக்க வழக்கங்களை எதிர் கொள்ளும் பருவம். இதிலே கெட்ட பழக்க வழக்கங்களை அவர்கள் ஏற்றுக் கொள்ளாமல், வெறுக்க ஆண்டவரிடம் எப்போதும் அச்சமுள்ளோராய் இருக்க தூண்ட வேண்டும்.

பிள்ளைகளின் மனதில் ஏற்படும் மாறுதல்களை அவர்கள் செயல்களை பார்த்து கவனித்து, அவர்கள் மனதை மென்மையாக வைத்துக் கொள்ள பெற்றோரும், பெரியோரும், மூத்த சகோதர சகோதரிகளும் உதவ வேண்டும். அதுவே இறைவனில் அவர்கள் பற்றுறுதி கொள்ள உதவும்.

### *3. செவி கொடுத்து ஞானடைதல் :* (Physical Skill)

நீதி. 23:19 "பிள்ளாய், இதைக் கவனி, ஞானமுள்ளவனாயிரு, உன் மனத்தை நன்னெறியில் செலுத்து".

பிள்ளைகளுக்கு இருக்கும் 'கவனித்து அறியும் ஆவல்' (Curiosity instinct) அவர்களை செயல்திறன் மிக்கவர்களாக (Active) வாழ வைத்திருக்கிறது.

அதனால் தான் தற்போது கல்வி முறையிலே செயல்வழி கற்றலை செயலாக்கத்திற்கு கொண்டு வந்திருக்கிறார்கள். இதனால் அவர்கள் உடலும் ஆரோக்கியமாக இருக்கும். Illinois University-யில் விஞ்ஞானி வில்லியம் கிரீனாஃப் நடத்திய ஆராய்ச்சியில் ஆள் வளர உதவும் உடற்பயிற்சி மூளை வளரவும் உதவுகிறது. நமது மூளை பெருமூளை (Cerebrum), சிறுமூளை (Cerebellum), முகுளம் (Medulla oblongata) என்ற மூன்று பகுதிகளாலானது. இதில், பெருமூளையில் அமைந்துள்ள Cortex என்ற நரம்பு நார் கற்றை செயல்பாடுகளை தூண்டுவது. உடலை உடற்பயிற்சிக்கு உட்படுத்தும் போது அதிகமான ரத்தம் கடத்தப்பட்டு மூளைக்கு oxygen அதிகம் கிடைத்து active - ஆக இருக்க முடியும். Developing motor and fine motor skills help children to get a sense of rhythm.

நீதி. 23:19-ல் ''..கவனி, ஞானமுள்ளவனாயிரு'' நீதி. 23:20 ''குடிகாரரோடு சேராதே, பெருந்தீனி யரோடு சேர்ந்து கொண்டு அவர்களைப் போலப் புலால் உண்ணாதே" என்ற அறிவுரைகள் செவிக் கொடுத்து, சரீரத்தையும் பெலப்படுத்தி ஞானமடைவதை குறிக்கிறது.

'ஞானமடைவது' என்பது பற்றுறுதியிலே முதிர்ச்சியடைகிற நிலை என்பதை பிள்ளைகள் மறக்கலாகாது.

### *4. செவிகொடுத்து கனப்படுத்தல் :* (Psychological skill)

நீதி. 23 : 22 "பெற்ற தந்தைக்கு செவி கொடு, உன் தாய் முதுமை அடையும்போது அவளை இழிவாக எண்ணாதே".

பிள்ளைகளுடைய ஊக்கமான செயல்பாட்டிற்கு காரணம் உணர்ச்சி குணங்கள் (Emotional behaviour) - பயம், கோபம், அன்பு, துக்கம், மகிழ்ச்சி போன்றவை. இவ்வுணர்ச்சி குணங்களை நெறிப்படுத்தி நடத்தும் போது பிள்ளைகளில் பொறுப்புணர்வு (sense of responsibility), ஒழுங்கு (orderliness), கணக்கொப்புவிக்கும் கடமை (Accountability), நேரந்தவறாமை (Punctuality) ஆகிய ஆளுமை குணங்கள் (Personanlity Traits) மிளிர்கின்றன.

நீதி 23:22 -ல் கூறப்பட்டுள்ள அறிவுரைக்கேற்ப பெற்ற தந்தைக்கு செவி கொடுத்து கட்டுப்படும் போது உணர்ச்சி குணங்கள் நெறிப்படுத்தப்படுகின்றன. தாய் வயது சென்ற நிலையிலிருக்கும் போதும், அவளது சொல்லுக்கு செவி சாய்த்து, கட்டுப்படுத்தும் போது உணர்ச்சி குணங்கள்' தெறிப்படுத்தப்பட்டு, 'ஆளுமை குணங்கள்' பெருகுகின்றன.

பற்றுறுதியில் வளர்ந்து பெருகிட, நெறிப்படுத்தப்பட்ட உணர்ச்சி குணங்களும், ஆளுமை குணங்களும் மிகவும் அவசியமானவைகளாகும்.

**5. வாங்கி ஓங்கி வளருதல் :** (Intellectual and Spiritual skill)

நீதி. 23 : 23 "மெய்ம்மையை விலை கொடுத்தாயினும் வாங்கு, அதை விற்பனை செய்யாதே, அவ்வாறே ஞானத்தையும் நல்லுரையையும் உணர்வையும் விலை கொடுத்துப் பெறு".

தமிழிலே 'கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே'

என்ற மூதுரையை விட மேற்படியான அறிவுரை கூறும் நல்லுரையே நீதி. 23 : 23.

பற்றுறுதியில் நிலைத்து வளர இவைகளை பிள்ளைகள் வாங்கிக் கொண்டே இருக்க வேண்டும்.

உலகில் இயந்திரம் கொண்டு அச்சிடப்பட்ட முதல் புத்தகம் 'திருமறை'. இதற்கு Guttenbery Bible என்று பேரிடப்பட்டது. அழியாமல் பாதுகாக்கப்பட்ட இப்பதிப்பின் 21 பிரதிகளில் ஒன்று 1978-ல் இங்கிலாந்தில் மிக அதிக விலைக்கு (12,65,000 Ponds) விற்கப்பட்டு வாங்கப்பட்டது. உலகில் மிக மிக அதிக அளவில் விற்பனை செய்யப்பட்ட புத்தகமும் திருமறை தான். 1815 லிருந்து 1975 வரை 250 கோடி பிரதிகள் விற்பனையாகி உள்ளன.

உலகில் பல மக்களால் வாங்கப்பட்ட சத்தியத்தை (திருமறை) மெய்ம்மையை (நீதி 23 : 23) பிள்ளைகள் மாதிரியும் வாங்க வேண்டும் அப்படியே ஞானத்தையும், நல்லுரையையும் உணர்வையும் (நீதி 23 : 23) மூதாதோர் வாயிலிருந்தும், வழிகளிலிருந்தும் கல்வி ஏட்டிலிருந்தும், நூல்களிலிருந்தும் பெற்று பற்றுறுதியில் உறுதி பெற வேண்டும். திருமறைப்பள்ளி இவ்வுலகில் ஏழை மனிதரை தூய்மை செய்யும் செயல்வழி கல்வி என்பதை மறவாமல், அதற்கு முன்னுரிமை கொடுத்து இறைவனுக்கு மாட்சி பெருக வாழ்வோம்.

திரு. **J. பிரகாஷ் நாயகம்**

**13-11-2011**

*ஐக்கிய ஞாயிறு*
**CSI-CNI-MTC**

# தொழுகையின் ஒன்றுபடுதல்

## UNITY IN WORKSHIP

எசேக்கியேல் 37:15-23 — எபேசியர் 4:1-6

திபா. 95 — யோவான் 4:19-26

*“அமைதியுடன் இணைந்து வாழ்ந்து தூய ஆவி அருளும் ஒருமைப்பாட்டைக் காத்துக்கொள்ள முழு முயற்சி செய்யுங்கள்.” எபேசியர் 4:3*

**மன்றாட்டு : ஒற்றுமையும், இசைவும் அருளும் கடவுளே, ஒரே கூட்டுறவில் இணைந்து வழிபட நீர் வழங்கியிருக்கும் வாய்ப்புகளுக்காய் நன்றி. நாங்கள் ஒரே இறைசமூகமாக உம்மை உண்மையோடும், ஆவியோடும் வழிபாட்டு ஒரே மந்தை ஒரே மேய்ப்பன் எனும் உமது எதிர்நோக்கில் இசைந்திட உதவிபுரிவீராக. இந்த இணைவின் வழிபாடு இவ்வுலகில் எங்களை சான்றுகளாக்க இறைமைந்தர் இயேசுகிறிஸ்து வழிகேட்கிறோம். - ஆமென்.**

கிறிஸ்தவர்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்கு பாத்திரவான்களாய் நடந்து கொள்ள, ஒருமைப்பாட்டுக்கு அவசியமான பண்புகளை கூறும்போது தனி வாழ்விலும் கூட்டு வாழ்விலும் எத்தகைய பண்புடையோராய் வாழ வேண்டும் என்று பவுல் கூறுகிறார். தனி வாழ்வில் ஒருமைப்பாட்டை காத்துக் கொள்ள வேண்டும். நாம் ஒருமைப்பாட்டை உண்டாக்க முயற்சிப்பதை விட இருப்பதை காத்துக் கொள்ள வேண்டும்.

தொழுகையில் பங்கு பெறும் நாம் வசனத்தில் கூறப்பட்டுள்ள ஏழு உண்மைகளையும் அதாவது ஒரே நம்பிக்கை., ஒரே சரீரம், ஒரே ஆவி, ஒரே கர்த்தர், ஒரே விசுவாசம், ஒரே ஞானஸ்நானம், ஒரே கடவுள் என்பதைக் கொண்டு ஒருமைப்பாட்டை வெளிப்படுத்த வேண்டும்.என்று இங்கு பவுல் குறிப்பிடுகிறார்.

கிறிஸ்தவ தொழுகை ஒருமைப்பாட்டை வளர்க்கும் ஓர் ஒழுங்காகும். குடும்ப ஜெபம், உபவாசக் கூடுகை, திருமறை ஆய்வு நேரம் ஆகியவை கிறிஸ்தவர்கள் ஐக்கியமாக இருக்க உதவுகின்றன. ஒருமைப்பாட்டை பறைசாற்றிய திருச்சபையாக முதலாம் நூற்றாண்டின் சபையைக் காணலாம். திப. 2:4-47.

அந்த ஒழுமைப்பாட்டின் வெளிப்படையான செயல்களாக

- அனைவரும் ஒன்றாயிருந்தனர்
- தங்கள் உடைமைகளை விற்று தேவைக்கேற்ப பகிர்ந்தளித்தனர்

- ஒவ்வொரு நாளும் ஒரே மனதோடு ஆலயத்தில் தவறாது கூடினார்கள்.
- வீடுகள் தோறும் அப்பம் பிட்டு உணவை பகிர்ந்து உண்டனர்.

1947-ல் உருவான தென்னிந்திய திருச்சபை தொழுகையில் ஒன்று படுதலுக்கு சான்றாக உள்ளது. நமது மிஷனரிகள் மற்றும் திருச்சபை தலைவர்கள் ஒன்று சேர்ந்து ஜெபித்து, ஆலோசித்து ஐக்கிய திருச்சபையாக உருவாகியது. C.S.I சின்னத்தில் உள்ள சிலுவை சம அளவு கொண்டதாக இருக்கிறது, இது சமத்துவத்தைக் குறிக்கிறது. இதில் உள்ள இந்திய தேசிய மலர் தாமரை. இது இச்சபையானது இந்நாட்டின் கலாச்சாரத்தை உறிஞ்சி வளரவேண்டும் என்னும் கருத்தை எடுத்துக் காட்டுகிறது. இச்சின்னத்தில் கொழுந்துவிட்டு எரியும் நெருப்பு திருச்சபையில் தூய ஆவியரின் ஆற்றலைக் குறிக்கிறது. இச்சின்னதின் மேல் எல்லோரும் ஒன்றாக இருப்பார்களாக (யோவான் 17:21) என்னும் திருமறைப்பகுதி ஒருமைப்பாட்டையும் கடவுளின் வார்த்தையை இந்த திருச்சபை மேன்மைப்படுத்த வேண்டும் என்பதையும் காட்டுகிறது.

இன்று இந்த அடிப்படையில் தொழுகையின் ஒன்றுபடுகிறவர்களாக நாம் இருக்கிறோமா என்று சிந்திக்க அழைக்கப்படுகிறோம். நாம் நற்செய்தி பகுதியாக தெரிந்து கொண்ட பகுதியில் சமாரியா பெண் இன வேறுபாடு (4:9) பாரம்பரிய பிடிப்பு (4:12) சமய சடங்குகளை (4:20) பெரிதாகக் கூறிக் கொண்டிருந்தார். அவளுக்கு இயேசு உண்மையை தொழுகையை கூறி ஒன்றுபடுதலின் அவசியத்தை குறிப்பிடுகிறார் யோவான் 4:21-24.

இன்றைய பழைய ஏற்பாட்டின் பகுதியைப் பார்க்கும்போது யூதாவும் இஸ்ரவேலும் ஒரே அரசாகும். இனி பிரிந்திருப்பதில்லை. அந்நிய தெய்வங்களை வணங்காமல் அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள். நான் அவர்கள் தேவனாயிருப்பேன் என்று ஒன்றுபடுதலையும் தொழுகையையும் எசேக்கியேல் தீர்க்கன் வாயிலாக வெளிப்படுத்துகிறார். ஆக இன்றைய திருமறைப் பகுதிகளை நாம் சிந்திக்கும் போது.

### *1. நட்புறவில் ஒன்று படுவோம் :*

இன்று எங்கு பார்த்தாலும் சமாதானக் குறைவு தான். வீட்டிலும், திருச்சபையிலும், சமூகத்திலும், நாட்டிலும் அமைதிக் குழுக்கள் செயல்படுவதை நாம் அறிகிறோம். சமாதான பிரவுவாகிய இயேசுவை நம்முடைய திருச்சபைகள் குடும்பங்கள் தலைவராகக் கொண்டு செயல்படும் போது உண்மையான அமைதியை நாம் காண முடியும் என்பதில் சந்தேகமில்லை. அதற்காகவே கிறிஸ்து உலகில்வந்தார் லூக்.1:79; 2:14; 19:42; யோவா. 14:27.

## 2. நல்சான்றுடன் வாழ்வோம் :

ஒருமைப்பாடு தனிமனிதனால் உண்டாவதல்ல. அது தூய ஆவியின் வழியாக ஏற்படுகிறத. கிறிஸ்துவின் அன்பும் உண்மையும் நம்மில் வெளிப்படும் போது திருச்சபைக்காக கிறிஸ்து மன்றாடிய ஒருமைப்பாடு (யோவான் 17:21) நம்மில் நிறைவு பெறும். இது உலகிற்கு நம்மை காட்சிகளாக்கும். இன்று ஒருமைப் பாட்டுக்கு சாட்சியாக உள்ள தென்னிந்திய திருச்சபை தனது தொழுகை, அமைப்பு, ஆளுகை, திருப்பணிகள் அனைத்திலும், ஒன்றுபட்டு வந்த திருச்சபைகளின் இணைவே ஆகும். இதனால் உலகுக்கு கிறிஸ்துவை மீட்பராக சான்று பகர்வதோடு நற்செய்தி பணியிலும் அருகிலும் தூரத்திலும் சிறப்பாய் இந்த திருச்சபை செயல்பட்டு பல நற்செயல்களைச் செய்வதோடு திருச்சபைகளையும் கட்டி எழுப்புகிறது. திப. 2:46,47

## 3. நலமானதை செய்வோம் :

சாதி, இன,மொழி, பாலின வேறுபாடுகள் நிறைந்த நமது நாட்டில் அனைவரும் ஒன்று என்ற நிலையில் ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனும் நிலை ஏற்பட நம்மால் இயன்றதை செய்ய வேண்டும். யோவான் 10:16. நமது தனித்திருச்சபை அதற்கு முன் மாதிரியாய் அமைய வேண்டும். இன்ற இந்திய திருச்சபை உருவாக C.S.I. C.N.I, மார்த்தோமா திருச்சபைகளுக்குள் நடைபெறும் முயற்சிகளுக்கு கிறிஸ்துவின் துணை கொண்டு செயல்பட வேண்டும்.

அப்போது கிறிஸ்துவின் மீட்பு அனைவருக்குமுரியதாகி அனைவரும் கர்த்தரின் மக்களாகவும் அவரை நமது ஆண்டவராகவும் கொள்ள இறைவன் அருள் செய்வார் நாம் தொழுகையில் ஒன்றுபட்டு சாட்சிகளாவோம். ரோமர் 10:12

அருள்திரு. **J. ஜெயக்குமார்**

**20-11-2011** *பெண் குழந்தைகள் ஞாயிறு*

# பெண் குழந்தைகளுக்கு நல் எதிர்காலத்தை உறுதிப்படுத்தல்

## ASSURING A FUTURE FOR THE GIRL CHILD

2அர. 5:1-5a எபே. 6:1-4
திபா. 8 மாற். 5:21-43

*"அவளுக்கு உணவு கொடுக்கவும் சொன்னார்." மாற். 5 : 43b*

**மன்றாட்டு :** இரக்கமுள்ள கடவுளே, பலமிழந்தவரை பலமுள்ளவராயும் புறக்கணிக்கப்பட்டோரை ஏற்கப்பட்டோரையும் உம்திருமைந்தர் மாற்றியமைத்தற்காய் உம்மைப் புகழுகிறோம். புறக்கணிப்பின் நிலவையிலுள்ள பெண்குழந்தைகளை கரிசனையாய் ஏற்று புதுநம்பிக்கை அருள்வீராக. நாங்களும், பெண்குழந்தைகளை சமூகத்தின் முழு அங்கத்தினராய் ஏற்கவும், அவர்களுக்குரிய சமூக மரியாதை கிடைக்கவும் உழைக்க துணைதாரும். நீர் அவர்களில் வழங்கியுள்ள திறமைகள் சமூகத்தை வளமையாக்கும் வழிகாட்டும் என வழி வழங்கும் மீட்பர் இயேசுகிறிஸ்து வழி வேண்டுகிறோம். - ஆமென்.

அறிவியல் வளர்ச்சி அடைந்துள்ள இக்காலத்திலும், மக்களுடைய வாழ்வு உறுதி செய்ய முடியவில்லை. குழந்தைளுடைய எதிர்காலம் கேள்வியாக உள்ளது. குறிப்பாக பெண் குழந்தைகளுடைய எதிர்காலம் மிகமிக கீழ்நிலையிலுள்ளது. இந்தியாவில் ஆண்டுதோறும் ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகள் 20 லட்சம் பேர் இறக்கின்றனர். உலக அளவில் போதிய எடையின்றி பிறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை 12 கோடியே 90 லட்சம். அவற்றுள் இந்தியாவில் மட்டும் 5 கோடியே 40 லட்சம். 6-59 மாத குழந்தைகளில் 70% குழந்தைகள் இரத்த சோகை நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். 20-30% குழந்தைகள் 2.500 kg எடைக்குக் குறைவாக பிறக்கின்றனர். 52% தாய்மார் கல்வியறிவு அற்றவர்கள் 55% தாய்மார் இரத்த சோகையால் பாதிக்கப்பட்டவர்கள். போதிய ஊட்டச்சத்து கிடைப்பதில்லை. உடல்நலன் பராமரிக்க அல்லது பேணுவதற்கான வாய்ப்பும் கொடுக்கப்படவில்லை. 2008-ம் ஆண்டு விடுதலை திருநாள் பிரதமரின் உரையில், "சரியான ஊட்டச்சத்து இல்லாத பிரச்சனையே வேதனை. நாம் இதனை மாற்ற வேண்டும்" என்று கூறியுள்ளார்.

கடந்த 30 வருடங்களாக ICDS (Integrated Child Development Service) பல்வேறு திட்டங்களை அமல்படுத்தியும் ஒரு பயனுமில்லை. ஊட்டச்சத்து குறைவுக்குக் காரணம் உணவு பற்றாக்குறையோ, உணவு உற்பத்தியின்மையோ அல்ல. மாறாக சுத்தமான குடிநீர், உடல்நலன்

பேணுதல், சுகாதாரம், அடிப்படைக்கல்வி போன்றவை நீண்ட காலமாக மறுக்கப்பட்டன என JEAN DREZE என்ற பொருளாதார நிபுணர் கூறுகின்றார். மேலும் பொருளாதார, சமூக, அரசியல், கலாச்சார ஏற்றதாழ்வுகளும் காரணமாக அமைகின்றன. இதனால் குழந்தை உழைப்பு, வரதட்சணை கொடுமை, பாலியல் துன்புறுத்தலுக்கு உட்படுதல் போன்ற தீமைகள் வளர்ந்து பெண் குழந்தைகளின் எதிர்காலத்தை சாகடிக்கின்றன. இச்சூழலில் மாற். 5 : 21-43 வரையிலான திருமறைப்பகுதியின் வாயிலாக இயேசு நாதரின் பணி எவ்விதம் பெண் குழந்தைகளுக்கு நல்வருங்காலத்தை உறுதிப்படுத்தியது என்பதை அறிய முயற்சி செய்வோம்.

மாற். 5:21-43 வரையிலான பகுதியில் இரண்டு நிகழ்வுகள் கூறப்பட்டுள்ளன. ஒரு நிகழ்வு நடைபெறும் வேளையின் இடையே மற்றுமொரு நிகழ்வு நடைபெறுகிறது. இந்த இரண்டு நிகழ்விலும் பல ஒத்தமைவு காணக்கிடக்கின்றன, அவை.

1. இருவரும் பெண்கள்.
2. இருவரும் சாதாரணமான இயல்பு வாழ்வு இல்லாதவர்கள் - நோய்.
3. சிறுமியின் வயது - 12, மற்றவர் நோயுற்ற ஆண்டு - 12.
4. இருவரின் பெயரும் குறிப்பிடப்படவில்லை.
5. இருநிகழ்விலும் மக்கள் கூட்டம்.
6. இருவருக்குள்ளும் மாற்றம்
    a. தனக்கு நேர்ந்ததை அறிந்தாள் 5 : 33
    b. சிறுமி எழுந்து நடந்தாள் 5 : 42.
7. இருவருக்கும் எதிர்காலம் இயேசு கிறிஸ்துவால் உறுதி செய்யப்படுகின்றது.
    a. நீ நோய் நீங்கி நலமாயிரு 5 : 34.
    b. உணவு கொடுங்கள் 5 : 43b.

இங்கு சிறுமியை பற்றிய நிகழ்வினை மட்டுமே நாம் சிந்திப்போம்.

1. யவீரின் எதிர்நோக்கு

யவீர் என்ற பெயர் பழைய ஏற்பாட்டில் பலவிடங்களில் சிறப்பு மிக்க ஒன்றாய் வருகின்றன.

1. எண். 32:41- சிற்றூர்களை கை பற்றிய வீரன்.
2. நியா. 10:3f - நீதி தலைவன்
3. எஸ். 2:5-6 - மொர்தகாயின் தந்தை
4. மாற். 5:22-ல் தொழுகை கூடத்தலைவன்

இங்கு யவீர் என்ற பெயரை ஓர் அடையாள சொல்லாக பயன்படுத்தியுள்ளார் மாற்கு நற்செய்தியாளர். அதாவது, யவீர் என்பதின் பொருள் “அவர் ஒளியூட்டுகின்றார் (அல்லது) அவர் துயிலெழுப்புகின்றார்”. யவீரின் கூற்று மிக பொருளுடைய கூற்றாகவுள்ளன.

### (a) ***"என் மகள் சாகுந்தருவாயில் இருக்கிறாள்"*** 5 : 23

அடிமைத்தனம், ஏற்றத்தாழ்வு போன்ற தீமையான காரணிகளால் எளியோர் மற்றும் சிறுவர்களின் வாழ்வு இழக்கும் நிலையை குறிப்பிடுகின்றார். இயேசு கிறிஸ்துவே உண்மையாக ஒளியூட்டுபவராவும், இயக்கமற்ற மரண நிலையிலிருந்து துயிலெழுப்புகின்றவராகவும் சுட்டிக் காட்டுகின்றார் மாற்கு நற்செய்தியாளர்.

### (b) ***அவள் மீது கைகளை வையும்*** மாற். 5:23

மாற்கு நற்செய்தி நூலில் இயேசு கிறிஸ்து கைகளை வைத்து குணமாக்கிய நிகழ்வுகள் பல குறிப்பிடப்பட்டுள்ளன (மாற். 6:5; 7:32; 8:25). யவீரின் முதல் கூற்று செய்தி வாக்கியம், அடுத்தகூற்று வேண்டுதலாக அமைகின்றது. ஒரு செய்தியை சொல்லி அதிலுள்ள தீமை தீர கிறிஸ்துவின் செயல்பாட்டுக்காக வேண்டுகின்றார்.

### (c) ***அப்பொழுது நலம் பெற்று பிழைத்துக்கொள்வாள்*** 5:23

இங்கு பிழைத்துக்கொள்வாள் என்பது வாழ்வு பெற்றுக் கொள்ளலைக் குறிக்கின்றது. குணமாகும் என்ற நம்பிக்கையை வெளிப்படுத்துகின்றது. வாழ்வு இழந்து மரண எல்லையில் வாழும் மகள் வாழ வேண்டும் என்ற கருத்தோட்டமும் அதனூடே நம்பிக்கையையும் இக்கூற்று வெளிப்படுத்துகின்றது. வாழ்வு என்பதின் எல்லா பொருளும் அன்பு மற்றும் பணியில் இருக்கின்றது என Sigmund Frued என்னும் உளவியல் மேதையின் கூற்றுக்கு ஏற்ப கிறிஸ்துவின் அன்புமிக்க பணியில் வாழ்வு பெற்றுக்கொள்ள வழிவகை செய்கிறது.

## *2. இயேசு கிறிஸ்துவின் வல்ல செயல் :*

### a) நம்பிக்கையை ஊட்டியது

அ) அஞ்சாதீர் நம்பிக்கையை மட்டும் விடாதீர் 5:36,

ஆ) சிறுமி இறக்கவில்லை 5:39

அங்கு கூடியிருந்த திரள்மக்கள் எதிர்நோக்கியிருந்த கருத்துருவாக்கம் பரிசேயர்களின் போதனையின் பின்னணியை சார்ந்திருந்தது. அது எனன்வெனில் ஆதி. 47:30-''நான் என் மூதாதையரோடு துஞ்சிய பின்.... மூதாதையரின் கல்லறையில் அடக்கம் செய்" சிறுமி இறந்து விட்டாள் என்ற செய்திக்கு பின்பு மக்களுடைய எதிர்நோக்கு இந்த அடிப்படையில்தான் அமையும். அப்படியிருக்க இயேசு கிறிஸ்து, நம்பிக்கையை மட்டும் விடாதீர், சிறுமி இறக்கவில்லை என்ற கூற்றுகள் கூடியிருந்தோரை நகைப்புக்குள்ளாக மாற்றியதில் வியப்பில்லை. இங்கு குறிப்பிடும் அடையாள செய்தி என்னவெனில் மரணம் என்பது இறுதியானது அல்ல. கிறிஸ்து அனைவரையும் இறுதிநாளில் எழுப்புவார். மரணத்தில் நம்பிக்கைக்கொள்ளாது வாழ்வில் நம்பிக்கை கொள்ள செய்கிறார்.

## b) ஆற்றல் அளிக்கும் வாக்கு - தலித்தாகூம்

இது ஒரு அரமேய சொற்றொடர். தலித்தா என்பதின் பொருள் - செம்மறியாட்டுக் குட்டி (அல்லது) வலுவற்றவர் (அல்லது) இளயர். கூம் என்பதின் பொருள் செய் (அல்லது) செயல்படு மாற்கு நற்செய்தி நூலில் அதிகமான அரமேய சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. மாற். 7:11; 34:11; 9:14; 36:15; 22:34. ஆனால் மாற். 5:41- "தலித்தா கூம்" 7:34- "எப்பத்தா" என்ற இரண்டு சொற்கள் மட்டுமே வல்ல செயல்நடை பெறுவதற்கு பயன்படுத்தப் பட்டுள்ளன. காரணம், இயேசு கூறிய அதே வார்த்தையை நினைவு கூருவதும், அதன் உள்ளார்ந்த மதிப்பீடுகளின் முக்கியத்துவத்தை கூறுவதுமாகும். உள்ளார்ந்த மதிப்பீடானது வலுவற்றவர்களை செயல்பட தூண்டும் ஆற்றலை கொண்டுள்ளது. அந்த ஆற்றல் சிறுபெண்ணை எழுந்திருக்க செய்தது.

## c) வருங்காலத்தை உறுதி செய்யும் வாக்கு

அ) யாருக்கும் தெரிவிக்க கூடாது 5:43 (a)

ஆ) உணவு கொடுக்க சொன்னார் 5:43 (b)

யாருக்கும் தெரிவிக்க கூடாது என கண்டிப்பாய் கட்டளையிட்டார். மாற். 1 : 24,25-ல் தீய ஆவி இயேசுவை நீர் கடவுளுக்கு அர்ப்பணமானவர் என்ற போது "வாயை மூடு" என கட்டளையிட்டார். வாழ்வை அழிக்கும் தீயோனின் செயல்களை அகற்றி வாழ்வை வழங்கும் பணி வெளிப்படையாக தப்பட்டை அடிப்பது அன்று அது அடியாளங்களில், இரத்த நாளங்களிலிருந்து செய்யப்பட வேண்டியது. உணவு கொடுக்க சொன்னார். தொ.நூ. 2:16,17 - "உன் விருப்பம் போல் உண்ணலாம்..." ஆனால் விலக்கப்பட்ட ஏழைகளின் உணவினை நீ சுரண்டி சாப்பிடாதே அவர்களுக்குரிய உணவை அவர்களுக்கு கொடு. உணவு வாழ்வின் அடிப்படை, அவ்வடிப்படையில் உணவு கொடுக்க செய்து வாழ்வுக்கான எதிர்காலத்தை உறுதி செய்கின்றனர்.

## இறுதியாக

மாற். 5 : 37- பேதுரு, யாக்கோபு, யோவான் மூவரையும் தன்னுடன் அழைத்து செல்கின்றார் என்பது, மாற். 9 : 2 பேதுரு, யாக்கோபு, யோவான் - மிக முக்கிய நிகழ்வான இயேசுவின் தோற்றம் மாறுதல் 14 : 33- கெத்சமனே தோட்டத்தில் மூவரையும் அழைத்து செல்லுதல், ஆக இந்நிகழ்வும் மிக முக்கியமான ஒரு நிகழ்வு என்பதை மாற்கு நற்செய்தியாளர் கூறுகின்றார்.

இந்நிகழ்வு இயேசுவின் மாட்சிமை மிக்க தோற்றமாற்றத்தையும் பாடுகளின் துயரத்தையும் வெளிப்படுத்துகின்றது. இங்கு சொல்லப்பட்ட வாழ்விழந்து போகின்ற வலுவற்றவர்களை செயல்பட வைக்கும் வாழ்வை வழங்கும் கிறிஸ்துவின் பணி மிக முக்கியமான பணி. அப்பணி செய்து எதிர்கால வாழ்வை உறுதி செய்வோம்.

அருள்திரு. **M. கிங் தனேஷ்குமார்**

**27-11-2011** **வருகையின் ஞாயிறு**

# கிறிஸ்துவின் வருகைக்கான மகிழ்வின் எதிர்நோக்கு

## JOYFUL EXPECTATION OF CHRIST'S COMING

தொநூ. 33:1-17 Iதெச. 3:6-13
திபா. 68:11-20 லூக்கா 1:39-45

"*ஆண்டவர் உமக்குச் சொன்னவை நிறைவேறும் என்று நம்பிய நீர் பேறு பெற்றவர்.*" லூக். 1:45

**மன்றாட்டு : மானுடரில் கரிசனை கொள்ளும் கடவுளே, எங்களை உமது திருமைந்தர் வழி சந்தித்து, விடுவித்தீர். நாங்கள் அவரது பிறப்பைக் கொண்டாடிட தயாராகும் நாட்களில் எங்கள் உள்ளங்களை மகிழ்ச்சியால் நிறைத்து, உம் திருவார்த்தைகளின் சத்தத்தால் நிறைப்பீராக. இவற்றை மீண்டும் வரவிருப்பவரான எங்கள் ஆண்டவர் இயேசுகிறிஸ்து வழி கேட்கிறோம். - ஆமென்.**

நாம் எதிர்பார்த்திருக்கின்ற மிகவும் விரும்பத்தக்க ஒருவரை பார்க்கும் போது அதிகமாக மகிழ்வை வெளிப்படுத்துகிறோம். நண்பர்கள் இருவர் ஒன்றுக்கொன்று சந்திக்கும்போது தங்கள் உணர்வுகளை பகிர்ந்து கொண்டு மகிழ்கின்றனர். திருமறையில் குறிப்பாக பழைஏற்பாட்டு காலமுதலே தங்களுக்காக மேசியா வருவார் தங்கள் துன்பங்களை நீக்கி மகிழ்விப்பார் என்று மக்கள் ஆவலாக காத்திருந்தனர், இந்த எதிர்பார்ப்பை நிறைவு செய்யும் வகையில் வரலாற்றை உருவாக்கிய இறைவன் வரலாற்றில் செயல்பட்ட இறைவன் புதுப்புது திருப்பங்களைக் கொணர்ந்து புரட்சி உண்டாக்கியவர் தன்னை எளியோரின் தோழனாக உலக வரலாற்றில் வெளிப்படுத்தி, தாம் படைத்த வரலாற்றை மாபெரும் நிறைவுக்கு நேராக நடத்திச் செல்ல வருகிறார். நம்பிக்கை இழந்த சூழலில் துன்பங்கள் பாடுகள் நிறைந்த வாழ்வில் இறைவருகை மகிழ்வை கொண்டு வருகிறது. இந்த மகிழ்வான கிறிஸ்துவின் வருகையை நாம் எப்படி எதிர்நோக்குவதென சிந்திப்போம்.

### *1. ஆர்வமுள்ள ஆயத்தம்* (Preparing Eagerly) I தெச. 3:6-13

தூய பவுல் தெசலோனிக்க திருச்சபையை கிறிஸ்துவின் வருகைக்காக ஆயத்தப்படுத்த விரும்புகிறார். அதற்காக இரண்டாம் வருகையைப் பற்றியும் கிறிஸ்துவின் மரணம் உயிர்த்தெழுதல் பற்றியும் கற்றுக் கொடுக்கிறார். கிறிஸ்துவின் வருக்கைக்காக ஆயத்தமாக இருக்க

வேண்டும் ஆர்வம் குறைந்து விடக் கூடாது என்று அறிவுறுத்துகிறார். அதோடு தூய பவுல் தெசலோனிக்க மக்களுக்காக வேண்டுதல் செய்கிறார். அனுதின வாழ்வில் ஒருவருக்கொருவர் அன்பு காட்டி கிறிஸ்தவ வாழ்வில் உண்மையான உறவில் பெருக வேண்டும் என்கிறார்.

தூய பவுல் இம்மக்களின் வருங்கால பாதுகாப்பையும் கருத்தில் கொண்டு கிறிஸ்துவின் இரண்டாம் விடுதலை நடுதீர்ப்புக்கு முன் குற்றமற்றவராய் நிற்க தூயவர்களாய் வாழ வேண்டும் என்றும் மக்களிடம் கேட்டு இறைவனிடம் மன்றாடுகின்றார். நீதிமக்களாய் வாழ்ந்து கிறிஸ்துவின் விடுதலையில் அவரை சந்திக்க ஆயத்தப்படவேண்டும். கிறிஸ்துவின் மக்களாக இருக்க ஆர்வத்தோடு காத்திருக்க வேண்டும்.

நாம் இன்று விளம்பரங்கள் நிறைந்த உலகில் இருக்கிறோம். இந்த விளம்ரங்கள் பல்வேறு ஆர்வங்களை மக்களுக்குள் ஏற்படுத்துகிறது. இதனால் கவர்ச்சியான பொருட்களை வாங்க விரும்புகிறோம். சுய நலம் பெருகி, ஆடம்பர வாழ்க்கை அதிகரித்து அதுதான் வாழ்க்கை என்று எண்ணுகிறோம். கிறிஸ்துவின் இரண்டாம் விடுதலைபற்றிய உணர்வு திருச்சபைக்குள்ளேயும் குறைந்து கொண்டே வருகிறது என்று இங்கு பவுல் திருச்சபையைப்பார்த்து கூறுகிறார். உண்மையான பரிசுத்தாவி கிறிஸ்துவின் வாழ்வில் இருக்க வேண்டும் என்றால் அன்பு காட்டி, பற்றுறுதியில் வளர்ந்து. பிற மக்களோடு நல்லுறவு கொண்டு நமது ஆவி, ஆத்துமா, சரீரத்தை ஆயத்தப்படுத்த வேண்டும் என்கிறார். கிறிஸ்துவின் விளக்காக நாம் ஆர்வத்தோடு ஆயத்தப்படுகிறோமா?

## ***உணர்வுமிகு மன்றாடு*** **(Praying Fervently)** லூக்கா 1:39-45

வான தூதருடைய சந்திப்பை பெற்ற பின் முதிர் வயதில் தாயாகும் பேற்றைப் பெற்ற தனது உறவினரைக் கண்டு அவளை வாழ்த்தி அவளது மகிழ்ச்சியில் பங்கு கொள்ளவும், தனது அனுபவத்தைப் பகிர்ந்து கொள்ளவும் எலிசபெத்தின் ஊருக்குச் செல்கிறாள் மரியாள். இவ்வூர் நாசரேத்திலிருந்து ஏறத்தாள 90 மைல் தூரத்தில் உள்ளது. மூன்று நான்கு நாட்கள் பயணம் செய்ய வேண்டும். அன்பால் விரைந்து செல்கிறாள் மரியாள். மரியாளின் வாழ்த்தொலியைக் கேட்டவுடன் எலிசபெத் தனது வயிற்றில் குழந்தையின் அசைவை உணர்கிறாள். வயிற்றிலிருக்கும் ஆறு மாத குழந்தை அசைவது இயற்கை. இவ்வசைவு மீட்பைச் சந்திப்பதால் எழும் மகிழ்ச்சியின் அடையாளமாக எலிசபெத்திற்கு தோன்றுகிறது. மேசியாவின் தாயைக் கண்டதால் குழந்தை மகிழ்ச்சியாய் துள்ளியது என அறிகிறாள். சாதாரணமாகக் கருதக்கூடிய நிகழ்ச்சி எலிசபெத்

தனிப்பொருள் அறிகிறாள். இரு பெண்களும் மகிழ்ச்சி வெள்ளத்தில் திளைத்து நிற்கின்றனர். இறைவாக்கு அளிக்கும் ஆவியால் நிரப்பப்பெற்று எலிசபெத் மரியாளிடம் நிகழ்ந்துள்ள அருஞ்செயலை உணர்கிறாள். யூத சமூகத்திற்கு, மேலான விதத்தில் சேவை செய்த பெண்களை 'பெண்களுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டவளே' என்று போற்றுதல் எபிரேய மரபு. இவ்வகையில் மரியாளும் போற்றப்படத்தக்கவர் என்பதை எலிசபெத் உணர்ந்து வாழ்த்துகிறார். மரியாளின் வெற்றி மேசியாவை சார்ந்தது. அவர் சிறப்பு பெற்ற பெண்களில் ஒருத்தி. அவளது குழந்தையும் மிகவும் ஆசீர்வதிக்கப்பட்டது. அதோடு மரியாள் பெருமையை உணர்ந்த எலிசபெத் அவளை வரவேற்க தனக்கு தகுதியில்லை என்கிறார். இறைவனின் திட்டத்தை தயக்கமின்றி மரியாள் ஏற்றாள். ஆகவே அவள் பேறு பெற்றவள்.

மேசியாவுக்காக காத்திருந்த இருவரும் அவரது வருகையை அறிந்து மகிழ்ந்து ஒருவருக்கொருவர் வாழ்த்துவது உணர்ச்சி மிகுதியாய் எழும் அன்பின் வெளிப்பாடு. அதுமட்டுமல்ல அவர்களது வாழ்த்துக்கள் தங்கள் ஜெபத்தின் வெளிப்பாடு. சாதாரணமாக, இந்த வாழ்த்துக்கள் வெளிப்படுவதில்லை. நமக்கு இந்த உணர்வு மிக்க மன்றாட்டால் வெளிப்பட்ட வாழ்த்துக்கள் கிறிஸ்துவின் வருகைக்காக ஜெபத்தோடு காத்திருக்க, ஆயத்தப்பட உந்துதல் தருவதாக அமைய வேண்டும். ஒருவரையொருவர் வாழ்த்தி மகிழ்வை பகிர்தல், மற்றவர்களும் மகிழ்வை அறிய அடையவேண்டும் என்ற ஆர்வம், அதற்கான மன்றாட்டு கிறிஸ்துவின் வருகையில் நம்மை பங்காளிகளாக்கும்.

## 3. மகிழ்வூட்டும் நன்கொடை (Presenting Pleasingly)

(ஆதி. 33:1-17)

ஆயத்தமும் மன்றாட்டும் கிறிஸ்துவின் வருகையில் அவரை சந்தித்து நம்மை அவருக்கு நன்கொடையாக கொடுக்க உதவுகிறது. ஒரு நபரை நாம் பார்க்க செல்லும் போது அழகாக ஆடை உடுத்து நம்மை அழகுபடுத்தி மகிழ்வூட்டும் அடிப்படையில் செல்கிறோம். ஒரு நபரை நாம் பார்க்க விரும்பினால் அவரிடம் எதாகினும் பிரச்சனை இருந்தால் அதை ஒரு நபரை அனுப்பி முன்பே முடித்து விட்டு பார்க்கிறோம். இத்திருமறை பகுதியில் அவருக்கு நன்கொடை யாக்கோபு ஏசாவை சந்திக்க செல்லும்போது தனக்கு முன்பாக கொடுத்து அனுப்பினார். தந்தையை, சகோதரனை, மாமனாரை ஏமாற்றியவர் யாக்கோபு. ஆனால், ஏசாவின் செயல் ஆச்சரியப்படத்தக்கது. ஏசா ஓடிவந்து தன் சகோதரனை கட்டி

அணைத்து முத்தமிட்டார் (ஆதி. 33:4). அவர்களது உரையாடலைத் தொடர்ந்து யாக்கோபு சொல்கிறார் நான் உங்கள் முகத்தைப் பார்த்ததும் கடவுளின் முகத்தைப் பார்த்தது போல் இருக்கிறது. நல்ல உறவுக்கு இது ஒரு எடுத்துக்காட்டு. இங்கு நன்கொடை என்பது ஏசாவுக்கு கொடுத்த பொருள் அல்ல. யாக்கோபு சொன்ன வார்த்தைகள், ஏசாவின் பதில் அவர்களுக்குள் ஏற்பட்ட ஒப்புரவாகுதல், ஒருவருக்கொருவர் மன்னித்தல் இவை எல்லாம் மகிழ்வூட்டும் நன்கொடையாக அமைந்தது. ஒருவருக்கொருவர் மன்னிக்கும் போது கடவுள் முகத்தைப் பார்க்கிறோம்.

நாம் திருச்சபையை கிறிஸ்துவின் விளக்காக ஆயத்தப்படுத்த வேண்டும். இந்நாட்கள் நம்முடைய உறவுகள் எப்படி இருக்கிறது என்று கேட்டுப், பகிர்ந்து, உடைந்தவைகளை சீர்படுத்தி, கிறிஸ்துவின் வருகைக்கான மகிழ்வை எதிர்நோக்குவோம்.

அருள்திரு. N. **ஸ்பர்ஜன்**

**28-11-2011**

***வட இந்தியத் திருச்சபை நாள்***

| | |
|---|---|
| ஏசா. 65:17-25 | 1கொரி. 12:12-26 |
| திபா. 22 | யோவா. 17:17-26 |

01-12-2011

அருணோதய ஆராதனை

# சமாதானம் அருளும் ஆண்டவர்

லூக். 2:8-14

"......................பூமியிலே சமாதானமும்................உண்டாவதாக............." லூக். 2:14

சமாதானம் அல்லது அமைதி' என்பது மனித வாழ்வில் மிக தேவையான ஒன்றாகும். எனவே இந்த அமைதியான வாழ்வைப் பெறுவதற்காக அனைவரும் ஏங்கி நிற்பர்; அதோடு அமைதியைத் தேடி பல இடங்களுக்குச் செல்வதும் உண்டு. ஆனால் நமது ஆண்டவர் சமாதானம் அருளகிறார் என்பது திருமறை நமக்குக் கற்றுத்தரும் உண்மையாகும். கிறிஸ்தவ நற்செய்தியே சமாதானத்தின் நற்செய்தியாகும். இந்த சமாதானத்தின் நற்செய்தியை கூறி அறிவிக்கும் நற்செய்தியாளரின் பாதங்கள் மலைகளின் மேல் அழகாயிருக்கிறது என்கிறார் இறைவாக்கினர் (ஏசா. 52:7) திருப்பாடகர், 'ஆண்டவர் தமது மக்களுக்குச் சமாதானம் கட்டளையிடுகிறார்' என்று குறிப்பிடுகிறார் (திபா. 29:11, 85:8). ஏசாயா இறைவாக்கினர் வெட்டப்பட்ட ஈசா என்னும் அடிமரத்திலிருந்துத் தோன்றும் துளிருக்கு அளிக்கப்பட்டுள்ள பெயர்களில் ஒன்று 'சமாதானப் பிரபு' என்பதாகும் (ஏசா.9:6). சமாதானப் பிரபுவாக இம்மண்ணில் கடந்து வந்த இயேசு கிறிஸ்து மானுடர்க்கு சமாதானம் அருளுகிறவராயிருக்கிறார். இப்புதிய மாதத்தின் முதல் நாளாகிய இந்த நாளில் இயேசு நாதர் அருளும் சமாதானத்தைக் குறித்துத் தியானிப்போமாக.

## 1. மனு உருவேற்று சமாதானம் அருள்பவர் :

இயேசுநாதர் குழந்தையாய் மனு உருவேற்று பிறந்த போது தூதர்கள் பாடிய பாடல்வரிகளில் மிக முக்கியமானது 'மண்ணில் சமாதானம் 'என்பதாகும் (லூக். 2:14). சமாதானம் அற்ற மானுடம் சமாதானத்தைப் பெற்றுக் கொள்ளவும், சமாதானத்திற்காக ஏங்கி நிற்போர் சமாதானத்தோடு வாழவுமே இவ்வுலகில் மனு உருவேற்றார் என புரிந்து கொள்ள முடிகிறது. இஸ்ரயேலின் ஆறுதலக்காகக் காத்திருந்த சிமியோன் என்னும் இறையடியார், இயேசு குழந்தையைக் கையிலேந்தி கடவுளைப் புகழ்ந்து இப்போது அடியேனை சமாதானத்தோடே போகவிடுகிறீர் என்றார் (லூக். 2:19). லூக்கா நற்செய்தி நூல் ஆசிரியர் இயேசுவின் பிறப்பு தொடங்கி 'சமாதானம்' என்ற உண்மையை மூன்று நிலைகளில் விளக்குகிறார். இயேசு பிறந்தபோது பூமியில் சமாதானம் (2:4) என்றும், அவர் எருசலேம் நோக்கி பேரணியாகச் செல்லும் போது விண்ணில் சமாதானம் (19:48) என்றும், உயிர்த்தெழுந்த இயேசு, இணைந்திருந்த சீடர்கள் நடுவில் வந்து மீண்டும் உங்களுக்குச் சமாதானம் (24:36) என்று கூறுவதாகவும் குறிப்பிடுகிறார். அமைதியை விதைக்க வந்த

இயேசுகிறிஸ்து எருசலேம் மக்களின் தீமையான செயல்களினால் அமைதியிழந்து நிற்பதாகக் கூறி, சீடர்கள் இணைந்து வரும்போது அவர்களைச் சந்தித்து அமைதி அருளுகிறார். இந்த சமாதானம் இன்று நமது வாழ்விற்கும் அருளப்பட்டிருக்கிறது.

## 2. மானிட வாழ்வின் வழி சமாதானம் அருள்பவர் :

இயேசு கிறிஸ்து இந்த உலகில் சுற்றித்திரிந்த காலத்தில் அமைதியிழந்திருந்த ஒவ்வொருவருக்கும் அமைதி வாழ்வருளி, ஆதரித்து வந்தார். நோயினால் ஆரோக்கியமிழந்து அமைதியிழந்திருந்த மக்களை சந்தித்து சுகமருள்வதோடு சமாதானமாய் வாழ அனுப்பி வைத்தார் (லூக். 8:48). தூய பவுலாரும், இயேசுகிறிஸ்து மானுடரின் சமாதானத்திற்குக் காரணமானவர் என்று வலியுறுத்துகிறார் (எபே. 2:14,17). அது மட்டுமல்ல, அவர் சிந்திய உதிரத்தினால் சமாதானத்தை அருளியிருக்கிறார் எனவும் கூறுகிறார் (கொலொ. 1:20). தூய பேதுரு அடிகளார் தமது உரையில், கடவுள் இயேசு கிறிஸ்துவின் வழியாகத் தம்முடைய சமாதானத்தின் நற்செய்தியை இந்த பூமியிலே அறிவித்திருக்கிறார் என்கிறார் (திபா.10:36). தூய பவுலார், சமாதானத்தின் கடவுள் என திரும்ப திரும்ப வலியுறுத்துகிறார். இயேசுகிறிஸ்துவும் இவற்றுக்கெல்லாம் மேலாக, 'என்னுடைய சமாதானத்தை உங்களுக்குக் கொடுப்பதோடு அதை இந்த மண்ணில் வைத்துப் போகிறேன். இந்த சமாதானம் சிறப்பு வாய்ந்தது' என்கிறார் (யோவா. 14:27). இந்த சமாதானத்தை நாம் ஒவ்வொருவரும் பெற்று வாழ அழைக்கப்படுகிறோம்.

## 3. மானிட சமாதானத்தின் கருவிகளாக அழைப்பவர் :

தூய பிரான்சிஸ் அசிசி தம்முடைய மன்றாட்டில், 'ஆண்டவா! அமைதியின் கருவியாக என்னை உருவாக்கிடும். நான் இருள் கவ்வும் இடத்தில் ஒளியை ஏந்திச் செல்லவும், பகை மூளும் இடத்தில் மன்னிப்பை அருளவும் உறவுகள் உடைகையில் இணைக்கும் பாலமாகிடவும்.................. நீர் உதவி செய்யவேண்டும்' என்று மன்றாடுகிறார். இயேசு கிறிஸ்துவும், சமாதானம் பண்ணுகிறவர்கள் பூமியைச் சுதந்தரிப்பார்கள் (மத். 5:9) என்கிறார். இந்த சமாதானத்தை எல்லா இடங்களிலும் அறிவிக்கவே ஆண்டவர் அடியார்களைத் தெரிந்து கொண்டு அனுப்பினார் (லூக். 10:17). தூய பவுலார் கூறும் ஆவியின் கனியில் சமாதானமும் மிக முக்கிய இடம் பெற்றுள்ளது (கலா. 5:22). மேலும் சமாதானமாயிருக்கும் படிக்கே கடவுள் நம்மைத் தெரிந்து கொண்டார் என்கிறார் (Iகொரி. 7:15). அதோடு சாமாதானக் கட்டினால் இணைக்கப்பட வேண்டும் என்று எபேசு திருச்சபைக்கு எழுதுகிறார் (எபே. 4:3). நாம் இந்த சமாதானத்தை எல்லா மக்களும் வாழ்வில் அனுபவிக்கச் சாமாதான வாய்க்கால்களாக, கருவிகளாக நம்மை அர்ப்பணிக்க அழைக்கப்படுகிறோம்.

சமாதானம் அருளும் ஆண்டவர் இப்புதிய மாதத்தில் நமக்கு சமாதானம் அருளிச் அந்த சமதானத்தின் கருவிகளாக நம் ஒவ்வொருவரையும் பயன்படுத்துவாராக.

அருள்திரு. **A. பிறைட் சாலோமன்**

**04-12-2011** **விவிலிய ஞாயிறு**

*வருகையின் இரண்டாம் ஞாயிறு*

# இறைவாக்கு வாழ்வருளும் அப்பம்

## WORD OF GOD "THE BREAD OF LIFE"

| | |
|---|---|
| எசா. 55:1-13 | உரோ. 15:1-6 |
| திபா. 119:105-112 | யோவா. 6:35-51 |

*"கடவுள் தரும்உணவு வானிலிருந்து இறங்கி வந்து உலகுக்கு வாழ்வு அளிக்கிறது." யோ. 6:33*

**மன்றாட்டு : எல்லாவற்றையும் படைத்து செயல்படுத்தும் கடவுளே, அனைத்து படைப்புகளும் உமது வார்த்தைகளால் வடிவம் பெற்றன. எழுதப்பட்ட உம்திருவார்த்தைகளை கற்று அவற்றின் ஆற்றலை புரிந்துகொள்ள துணைசெய்யும். அவற்றிலுள்ள வளமையான போதனைகள் தெளிவான பாதையில் எங்களை நடத்தவும், சீர்படுத்தவும் இறைபாதம் பணிந்து வேண்டுகிறோம். - ஆமென்.**

தொடக்கத்தில் இருந்த வாக்கு, மாமிசமாகி ஒரு மாட்டுக்கொட்டகையிலே பிறந்தது. அவர் வளர்ந்து நம்மிடையே வாசம் பண்ணினார். அவருக்கு சொந்தமானவர்கள் அவரை நிராகரித்தனர். சிலர் வாக்கை ஏற்றனர், சிலர் சந்தேகித்தனர், சிலர் கேள்வி கேட்டனர், இன்றும் அதே நிலைதான். இறைவாக்குக்கு மரியாள் அடிபணிந்தபோது, அவளது கருவறையில் பாலகன் இயேசு உருவானார் (லூக். 1:38) இறைவாக்கின் ஆராய்ச்சியில் மூழ்கியிருந்த இளைஞன்இயேசு தம் பெற்றோரையும் மறந்துவிட்டார் (லூக். 2:42-49) இறைவாக்கைக் கேட்டு அதன்படி செய்கிறவர்களே எனக்குத் தாயும் எனக்கு சகோதரருமாயிருக்கிறார்கள் என்று சொல்லுமளவிற்கு வாலிபன் இயேசு இறைவாக்கை நேசித்தார் (லூக். 8:21) காரணம், அது வாழ்வளிக்கும் அப்பம். வேதத்தைப் பற்றி இயேசு கூறியதாக எழுதப்பட்டுள்ள முதல் வசனம் மத்தேயு 4:4 "மனிதன் அப்பத்தினாலே மட்டுமல்ல, கடவுளுடைய வாயிலிருந்து புறப்படும் ஒவ்வொரு வாக்கினாலும் பிழைப்பான் என்றார். கடவுள் அன்றும் பேசினார், இன்றும் பேசுகிறார், என்றும் பேசுவார். ஆனால், அவர் குரலை உலக வார்த்தைகளுக்கிடையே அடையாளம் காணத் தெரியவேண்டும்.

இயேசு தரும் வாழ்வளிக்கும் அப்பத்தை அனுதினமன்னாவாக ஏற்கும்போது, அவ்வப்பம் மூன்று நிலைகளில் வாழ்வளிக்கும்.

## 1. திசை திருப்பும் அப்பம் யோவா. 4:29

“நான் செய்த எல்லாவற்றையும் என்னிடம் சொன்ன மனிதரை வந்து பாருங்கள், அவர் மெசியாவாக இருப்பாரோ!” என்றாள். சமாரியப் பெண்ணிடம் இயேசு பேசியபோது அவளது தற்சமய நிலையை உணரச்செய்தது, ஆகவே அவளது வாழ்க்கை திசை மாறியது ஏசாயா-55:11-ல் “அப்படியே, என் வாயிலிருந்து புறப்பட்டுச் செல்லும் வாக்கும் இருக்கும், அது என் விருப்பத்தை செயல்படுத்தி எதற்காக நான் அதை அனுப்பினேனோ அதை வெற்றிகரமாக நிறைவேற்றாமல் வெறுமையாய் என்னிடம் திரும்பி வருவதில்லை” கடவுளுடைய வாக்கை புறக்கணிப்பதினால் அபாய விளைவுகளைச் சந்திக்க நேரிடும். 1சாமுவேல். 15:23 “நீர் ஆண்டவரின் வாக்கை புறக்கணித்தீர், அவரும் உம்மை அரச பதவியினின்று நீக்கி விட்டார்” என அறியலாம். இயேசுவின் எல்லா பிரசங்கங்களையும் யூதாஸ் கேட்டாள். மனந்திரும்பியிருந்தால் மன்னிப்பு கடவுளிடம் திரும்பவில்லை. யாத். 8:15,19 மோசே மூலமாக பார்வோனுக்கு கடவுளின் வாக்கு தெளிவாய் வந்தது. அவரோ வாக்குக்கு எதிராய் இருதயத்தை கடினப்படுத்திக்கொண்ட போதெல்லாம் கடவுள் எகிப்தை தண்டித்ததினால் தேசம் நிர்மூலமாயிற்று. தி.ப. 24:25-பவுல், நீதியையும் இச்சையடக்கத்தையும், இனிவரும்நியாயத்தீர்ப்பையும் குறித்துப் பேசுகையில், பேலிக்ஸ் பயமடைந்து இப்பொழுது நீ போகலாம், எனக்கு சமயமானபோது உன்னை அழைப்பேன் என்றான். பேலிக்சுக்கு இன்னொரு சமயம் வாய்க்கவேயில்லை.

## 2. தெளிவுபடுத்தும் அப்பம் யோவா. 3:9

நிக்கேதேமு இயேசுவை நோக்கி, “வயதானபின் ஒருவர் எப்படிப் பிறக்க முடியும்? அவர் மீண்டும் தாயின் வயிற்றில் புகுந்து பிறக்க முடியுமா? என்று கேட்டான். அவன் இயேசுவிடம் வந்து தன் சந்தேகங்களைத் தீர்த்துக்கொண்டான், தெளிவுபட்டான். கூடுதல் வெளிச்சத்துக்காக வேதத்தை ஆராய்ந்து பாருங்கள். இயேசுவின் போதனைபடி நடப்பது கடினம்தான், ஆனால் பழகிக்கொண்டால் மகிமையான நித்திய வாழ்வு உண்டு. லூக். 1:34-38 தூதன் மரியாளிடம் பேசியபோது அவள் கன்னிகையிருந்தபடியால் அவள் “எப்படியாகும்” என்று கேட்டாள். அது எப்படியாகும் என்று அவன் விளக்கின உடனே அடிபணிந்தாள். கடவுளின் கடினமான வழி நடத்துதலுக்கு அடிபணிய மனமுள்ளவர்கள் தானா? தி.பா.119:15 ‘உமது நியமங்களைக் குறித்து நான் சிந்திப்பேன், உம் நெறிகளில் என் சிந்தனையைச் செலுத்துவேன்’. கடவுள் வாக்கை சிந்தனை செய்தால்

வாழ்வின் இடர்பாடுகளில் தெளிவடைய முடியும். இயேசுவின் பாதத்தில் அமர்ந்தவுடன் மற்ற எல்லாவற்றையும் மறந்துவிட்ட மரியாளைப்போல சில காரியங்களை செய்யாமல் விட வேண்டியும் இருக்கும்.

## *3. பற்றி எரிய வைக்கும் அப்பம்*

லூக். 24:32 அப்பொழுது அவர்கள் ஒருவரையொருவர் நோக்கி, "வழியிலே அவர் நம்மோடு பேசி, மறைநூல் விளக்கும்போது நம் உள்ளம் பற்றி எரியவில்லையா?" என்று பேசிக்கொண்டார்கள். இயேசு பேசினபோது அவர் வாக்கை கேட்ட சீடரின் இதயங்கள் கொளுந்துவிட்டு எரிந்தன. இந்த அனுபவத்துக்குள் வராதவரை வானின்று வந்த அப்பம் சுவையைத்தராது. இயேசுவின் வாக்கை சுவைத்த மீனவர்கள் (லூக். 5:11) எல்லாவற்றையும் விட்டுவிட்டு அவரை பின்செல்ல துணிச்சல் உண்டோ? கதரேனர் நாட்டில் பிசாசு பிடித்தவன் இயேசுவின் வாக்கை கேட்டவுடன் ஏற்றுக்கொண்டு எல்லோரும் ஆச்சரியப்படும்வண்ணம் தெக்கபோலி பட்டணத்தில் போய் பிரசங்கம் பண்ணினான் (மாற். 5:20) கடவுளுடைய வாக்கை மரக்காலிலே மூடி வைக்கிறோமா? இடையர் அந்த பிள்ளை குறித்து தங்களுக்கு சொல்லப்பட்ட சங்கதிகளை பிரசித்தம் பண்ணினார்கள் (லூக். 2:17)

வாழ்வுதரும் அப்பம் அவரே.

அருள்திரு. **J. ஆலிவர் ஸ்டான்லி**

*ஒரு பெண்ணை தாயில்லாமல் மனிதனின் விலாவிலிருந்தெடுத்த தேவன் ஒரு மனிதனை தகப்பனில்லாமல் பெண்ணில் உற்பவித்து எடுத்தார்.*

மத்தேயு ஹென்றி

**11-12-2011**

*வருகையின் மூன்றாம் ஞாயிறு*

# விடுதலை வாழ்வின் நம்பிக்கை

**HOPE OF SALVATION**

செப். 3:14-20 1பேது 3:8-16
தி.பா. 43 மாற். 13:24-27

*"மிகுந்த வல்லமையோடும் மாட்சியோடும் மாட்சியோடும் மானிடமகன் மேகங்கள் மீது வருவதைக் காண்பார்கள்."* மாற்கு 13:26

**மன்றாட்டு : அனைத்தையும் படைத்து பாதுகாக்கும் கடவுளே, மீட்பின் நம்பிக்கையை உமது திருமைந்தர் இயேசுகிறிஸ்து வழியாய் எங்களுக்கு வழங்கினீர். தொடர்ந்து உலகினில் மாற்றத்தையும், நீதியையும் ஏற்படுத்த நீர் செயலாற்றுகின்றீர் எனும் நம்பிக்கையில் நாங்கள் வளர துணை செய்வீராக. நாங்கள் சந்திக்கும் துயர்களிலும், உடைவுகளிலும் உமது மீட்பின் செயலாக்கத்தைக் காண அருள்தாரும். விடுதலையின் எதிர்நோக்குடன், விடுதலையாளர் இயேசுகிறிஸ்து வழி மன்றாடுகிறோம். - ஆமென்.**

உலகு சார்ந்த வாழ்வானது உபத்திரவங்களும், வேதனைகளும், பாடுகளும், பாதிப்புகளும் நிறைந்ததாகும். பாவங்களின் பெருக்கத்தினால் மனித நேயம் மறைந்து வன்முறைகளும் தீவிரவாதமும் அதிகரித்து மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு அச்சுறுத்துதலாய் அமைந்துள்ளது. இத்தகைய பேரழிவுகள், பொல்லாத நோய்கள், பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் போன்றவை ஆரோக்கியமான மனித வாழ்வுக்கு பெரும் சவாலாக மாறியுள்ளன. இத்தகைய சூழலில் மனித வாழ்வு மகிழ்ச்சியாய் அமைய விடுதலை வாழ்வு குறித்த நம்பிக்கை மிகவும் அவசியமான ஒன்றாகும்.

### *1. இறைவனை தேடுங்கள்* (செப். 2:3)

புனித பூமியாக கருதப்பட்ட எருசலேம் பாவத்தினால் பழுதடைந்து போயிற்று. அமைதி பூங்காவாக கருதப்பட்ட சீயோன் கலவர பூமியாக காட்சியளித்தது. அதன் மன்னர்களும், மனிதர்களும் இறை பயமற்றவர்களாய் மாறினர். அதன் ஆசாரியர்கள் வீண் பெருமையும், வஞ்சகமும் கொண்டவர்களாகி பரிசுத்த இடத்தை பரிசுத்த குலைச்சலாக்கி இறை வார்த்தையை மீறி இறைவனின் கடும் கோபத்து ஆளாகிய இந்நிலையில் செப்பனியா யூதா மக்கள் இறைவனைத் தேடும்படி அழைப்பு விடுத்தார் (செப். 2:1-3).

பண்பு கெட்ட இனமே, பகுத்தறிவோடு நடந்து கொள்
பதரைப் போல் நீங்கள் துரத்தப்படுமுன்னே
ஆண்டவரது கடும் சினம் உங்கள் மேல் விழுமுன்னே
ஆண்டவரது சினத்தின்கண் உங்கள் மேல் விழுமுன்னே
அனைவரும் ஆண்டவரைத் தேடுங்கள், நேர்மையை நாடுங்கள்
ஒருவேளை உங்களுக்குப் புகலிடம் கிடைக்கும்.

கர்த்தரிடம் திரும்பி அவரில் அன்பு கூரும் இதயம் மகிழ்ச்சியில் நிரம்பும், அதிலிருந்து நன்றியும் துதியும் கலந்த பாடல்கள் புறப்பட்டுவரும். காரணம் அந்த இதயத்தில் ஏற்பட்ட மகிழ்ச்சி உலக இயல்பானதல்ல. மாறாக விடுதலை வாழ்வு குறித்த நம்பிக்கையினால் ஏற்படுகின்ற அசாதாரண ஆனந்த களிப்பு ஆகும். ஆண்டவர் தண்டனைத் தீர்ப்பை தள்ளி விட்டார். பகைவர்களை அப்புறப்படுத்தி அவர்களின் நடுவில் அமர்ந்திருப்பார். எனும் எதிர்பார்ப்புடன் இனி எந்த தீங்கிற்கும் அஞ்சாது வாடி ஆண்டவர் தம் அன்பினால் அளிக்கும் புத்துயிர் குறித்ததான நல் எதிர்நோக்குடன் கூடிய விடுதலை வாழ்வின் மகிழ்ச்சியை இறைமக்கள் அனுபவிக்க இறைவார்த்தை அழைப்பு விடுக்கிறது.

"மகளே, சீயோனே மகிழ்ச்சியால் ஆர்ப்பரி."

## 2. இறை பண்பை வளர்த்திடுங்கள் (1பேது. 3:11)

இறைவன் அருளும் விடுதலை வாழ்வின் மகிழ்ச்சியை விசுவாச பின்னணியத்தில் அனுபவிக்க இவ்வுலகில் ஏற்படும் துன்பங்களும் துன்புறுதல்களும் பெரும் தடையாக அமைந்து விடுகின்றன. கிறிஸ்து இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குப் பின் உலகின் நாலா திசைகளிலும் நற்செய்தி வெகுவேகமாக பரவியது போன்று விசுவாசிகளுக்கு உபத்திரவங்களும் நாளுக்குநாள் அதிகரித்தது. அக்காலத்தில் விசுவாசிகள் தளர்ந்து போகாத வகையில் தைரியமூட்டும் விதமாக பேதுரு அப்போஸ்தலர் அறிவுரை கூறுகிறார்.

வாழ்க்கையில் இன்பம் காணவும், நல்ல நாட்களைக் காணவும் விரும்புவோர் தம் நாவைக் காத்து, தீமையை விட்டு நன்மை செய்து நல்வாழ்வை நாடி, நன்மை செய்வதில் ஆர்வம் கொண்டு, நீதியின் பொருட்டு துன்புற வேண்டியிருப்பினும், மனங்கலங்காமல் உங்கள் உள்ளத்தில் கிறிஸ்துவை ஆண்டவராகக் கொண்டு அவரை தூயரெனப் போற்றுங்கள் ஏனெனில் நீங்கள் எதிர் நோக்கியிருப்பதைக் குறித்து யாராவாது விளக்கம் கேட்டால் விடையளிக்க எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள் (1பேதுரு 3:10,15). விடுதலை வாழ்வு பெற எத்தகைய துன்பத்தையும் சகிக்கவும், எந்த தியாத்தை புரியவும் ஆயத்தாமாயிருக்க வேண்டும்.

"நீதியின் பொருட்டுத் துன்புற வேண்டியிருப்பினும் நீங்கள் பேறுபெற்றவர்களே"

### *3. இயேசுவின் வருகைக்கு விழிப்பாயிருங்கள்* (மாற். 13:27)

இயேசு இறுதி நாட்களில் இறை மக்களுக்கு வரப்போகும் கொடும் வேதனைகளை (13:14,21) வரிசைப்படுத்தி இதோ மேசியா இங்கே இருக்கிறார்; அதோ அங்கு இருக்கிறார் என போலிகள் தோன்றி பொய் கூறினால் நீங்கள் நம்ப வேண்டாம் ஏனெனில் போலி இறைவாக்கினர் கடைசி நாட்களில் உலகில் தோன்றி முடியுமானால் தேர்ந்து கொள்ளப்பட்டவர்களாகியே நெறி தவறச் செய்ய அடையாளங்களையும், அருஞ்செயல்களையும் செய்து காட்டுவர். எனவே இறைமக்களே நீங்கள் கவனமாயிருங்கள் என்றார்.

கொடிய வேதனைகளுக்குப் பின்பு கதிரவன் இருண்டுவிடும். நிலா ஒளி கொடாது. விண்மீன்கள் விழுந்து போகும், வான்வெளிக்கோள்கள் அதிரும் அப்போது மனுஷகுமாரன் வருவதை மனுமக்கள் காண்பார்கள். அவர் வானதூதரை அனுப்பி விசுவாசிகளை சேர்ப்பார் (13:24,27). இறைமக்கள் விசுவாச பரீட்சைக்கு உடன்பட்டோர், இறுதி மட்டும் விசுவாசத்தில் உறுதியாயிருந்தோர் மீட்பின் மகிழ்ச்சியை பெற்றுக் கொள்வர்.

இவ்வருகையின் நாட்கள் கிறிஸ்து அருளும் விடுதலை வாழ்வுக்கான நம்பிக்கையை நம்மில் உறுதிப்படுத்துவதாக அமைவது அவசியம். கிறிஸ்துவின் பிறப்பு எல்லா மக்களினத்துக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியாகவும், கிறிஸ்துவின் வார்த்தைகளும் வாழ்வும், சிலுவைச்சாவும் பாவங்களிலிருந்தும் சாபங்களிலிருந்தும் நமக்கு கிடைக்கிற விடுதலை வாழ்வை பறைசாற்றுவதாகவும், அவரது உயிர்த்தெழுதல் நாமும் உயிர்பெற்று அவருடன் வாழ்வோம் எனும் உண்மையை உணர்த்துவதாகவும் அமைவதாக. ஏனெனில் இரட்சிப்பு இறைமக்கள் அனைவருக்கும் இன்றியமையாத ஒன்றாகும்.

"மனுஷ குமாரன் மிகுந்த வல்லமையோடும் மாட்சியோடும்
மேகங்கள் மீது வருதைக் காண்பீர்கள்"

அருள்திரு. **D. ஜாண் ஜெபதாஸ்**

**18-12-2011**

*வருகையின் நான்காவது ஞாயிறு*

# அக்களிப்போம் ஆண்டவர் அருகில்

**REJOICE THE LORD IS NEAR**

செக். 2:10-13 பிலி. 4:4-9

திபா. 50:1-15 லூக். 1:46-56

*"மகளே சீயோன் ! அகமகிழ்ந்து ஆர்ப்பரி; இதோ நான் வருகிறேன்; வந்து உன் நடுவில் குடிகொள்வேன் என்கிறார் ஆண்டவர்" செக். 2:10*

**மன்றாட்டு : எங்களை தேற்றி ஆற்றல்படுத்தும் கடவுளே, இரவு சென்றுவிட்டது பகல் அருகில் வந்துவிட்டது என்பதை கற்றுத் தந்து, விழித்தெழுந்து இறையரசின் சான்றுகளாக எங்களைத் தூண்டியிருக்கிறீர். பற்றுமையில் எங்களை பலப்படுத்தி எங்கள் நம்பிக்கையை புதுப்பித்தருளுவதன் வாயிலாய் கிறிஸ்துவின் வருகையினை அகமகிழ்வுடன் எதிர்கொள்ள துணைசெய்ய இயேசுகிறிஸ்து வழி வேண்டிக்கொள்கிறோம். - ஆமென்.**

முழுமையான அக்களிப்பைத் தேடுகின்ற உலக வாழ்வில் மனிதர்கள் குறைவுடைய அக்களிப்பையே வாழ்வில் பெறுகின்றார்கள். காரணம் கடவுள் இல்லாத உலக வாழ்வில் வரும் அக்களிப்பு குறைவுடையதாகவே அமைந்திடும். இஸ்ரவேல் மக்கள் மேசியாவில் வரும் அக்களிப்பை உலக பார்வையில் தேடினார்கள். அரசனால் அக்களிப்பு வரும் என்று அதிகமாக நம்பினார்கள். இவைகளால் வந்த அக்களிப்புகள் நிரந்தரமில்லாதவையாகவும் அழுகுரலாகவும் மாறியது. சகரியா தீர்க்கர் மேசியாவால் வரும் நிரந்தரமான ஆன்மீக அக்களிப்பை கூறுகின்றார்.

### 1. *உடன் வாசம் பண்ண அருகில்* (செக். 2:10)

மேசியா அரண்மனையில் வருவார் என்ற எதிர்பார்ப்பு இஸ்ரவேலரிடம் அதிகம் இருந்ததால் ஒவ்வொரு அரசனது அபிஷேகத்திலும் மேசியா ஆளுகையை எதிர்பார்த்தனர். சகரியா தீர்க்கர் மேசியா அரண்மனையில் அல்ல மனிதனோடு உடன் வாழ அருகாமையில் வந்துவிட்டார் என்று கூறி அரண்மனையிலிருந்து வரும் அக்களிப்பு அல்ல உள்ளங்களிலிருந்து புறப்படும் அக்களிப்பை கூறினார். ஆண்டவர் உடன் வாசம் பண்ண எப்படி வருகின்றார். முதலாவது கிறிஸ்து எனும் மானிட வடிவில் இரண்டாவது, தீர்ப்பு அருளும் வருகையின் மூலம் உடன் வாசம் பண்ணுவார். இந்த இரண்டு வகைக்கும் ஆயத்தங்கள் தேவை. ஆண்டவர் வாசம் பண்ணவரும் இடம் எப்படி ஆயத்தப்படுத்தப்பட வேண்டும். தலைவர்கள் வருகைக்கு வரவேற்பு ஆயத்தங்கள் தேவை. மேசியா வரும்போது வரவேற்பு ஆயத்தம் அல்ல வாழ்வின் ஆயத்தமே தேவை.

சகேயுவை தேடிவந்த போது உள்ளம் மாற்றமடைந்தது (லூக். 19:5,8) சகரியா இத்தகு மாற்றத்தை, உடன் வாசம் பண்ணும் கடவுளால் தீமைகள் அகலும் என்கிறார் (3:14,15).

கடவுள் ஆலயத்தில் வாசம் பண்ணுபவர் என்ற அசையா ஆன்மீகம் இஸ்ரவேலரிடம் உண்டு. ஆலய அழிவால் இந்த நம்பிக்கையும் மாற்றமடைந்து மக்களுடன் வாசம் பண்ணும் ஆண்டவராக சகரியா விளக்குகின்றார் மறைந்த உருவில் உடன் இருந்த கடவுள் மானிட உருவில் உடன் வாழ அருகிலிருப்பதால் வரவேற்பு ஆயத்தங்களை விட்டுவிட்டு வாழ்வின் ஆயத்தங்களால் சந்தித்தால் அக்களிப்பை பெற்றுக்கொள்ள முடியும்.

## 2. *உறவின் வாழ்வு தர அருகில்* (செ. 2:11)

"வேற்றினத்தார் பலர் ஆண்டவரிடம் வந்து சேர்வார்கள் அவர்கள்
அவருடைய மக்களாய் இருப்பார்கள் அவர் உன் நடுவில்
தங்கியிருப்பார்"

இறை உறவில் வரும் இழப்புகளே மனித உறவுகளின் உடைவுகளுக்கு அடித்தளம். உடைவுபடும் உறவுகளால் அக்களிப்பு அகன்று அழுகை ஆரம்பமாகின்றது. ஒன்றாயிருந்த இஸ்ரவேல் நாடு இறை உறவின் சீர்குலைவுகளால் இரண்டாக உடைவுபட்டது. உடைவுபட்ட யூதா, இஸ்ரவேலும் உருவிழந்து அழிந்து போன காலச்சூழல் சகரியாவின் காலம். இரண்டு பிரிந்த நாடுகளும் இல்லாச் சூழலில் இணைந்த உறவு கடவுள் வாசம் பண்ண வரும்போது உருவாவதாக குறிப்பிடுகின்றார். பல நாடுகள் ஒன்றாகும், பல இனங்கள் ஒன்றாகும். பல குழுக்கள் ஒன்றாகும், யூதர் கிரேக்கர் ஒன்றாவார்கள். உலக நாடு உலகம் சார்ந்த ஆசிகளால் ஆற்றல், அதிகாரம், யுத்தம் போன்ற காரியங்களால் வருகின்ற அக்களிப்பை தேடுகின்றது. திருமறை இறைவனது பாதைக்கு திருப்பப்படுவதால் வரும் அக்களிப்பை கூறுகின்றது. (ஏசாயா 2:3) உலக எல்லையிலிருந்து உறவுக்குள் திரும்புவார்கள் கடவுள் அவர்களை நடத்துவார் (எரே. 31:8,9). பல பட்டணங்கள் இணையும் (செக். 8:20) தூர உறவு இசைகின்ற போது யுத்த எண்ணம், கொலை எண்ணம் உழைப்பின் எண்ணமாக மாறும் யுத்தமில்லா புது உறவு உருவாகும் (மீக். 4:1-3)

சகரியா சொல்லும் அக்களிப்பு கிறிஸ்துவின் பிரசன்னத்தால், பல இன மக்களின் இசைவினால், வருகின்ற அக்களிப்பு ஆகும். இசைவுடன் கூடிய உறவு முழுமையான மன மாறுதலின் அனுபவத்தால் வரும் தனித்தனியாக வரும் மனம் மாறுதல் மட்டுமல்ல முழு தேசமும் மாறும் மாற்றம் ஆகும். நினிவே அரசன் முதல் மக்கள் வரை முழுமையான மாற்றம் வந்தது போல (யோனா. 3:5) எருசலேம் முதல் அனைவருக்கும் வரும் மாற்றம் (மீக். 24:47). இந்த மனம் மாறுதலால் வரும் புது உறவுக்கு ஆண்டவர் இயேசுவே தலைமை ஏற்பதால் முழுமையான அக்களிப்பு பெறலாம்.

### 3. உண்மை வாழ்வுக்கு வழிகாட்ட அருகில் (செக். 8:3)

“எருசலேம் நடுவில் குடியிருக்கப் போகிறேன் எருசலேம்
உண்மையுள்ள நகர் என்றும் ... பெயர் பெற்று விளங்கும்”

கடவுள் வாசம்பண்ண வரும்போது மனித வாழ்வு மட்டுமல்ல நாடு முழுமையும் உண்மைக்கு சான்றாக மாறும். எருசலேம் உண்மையுள்ள நகர் என்ற புதுப்பெயரால் அழைக்கப்படும். மீட்பு சந்திக்கும்போது புதுப்பெயர் சூட்டப்படும். ஏசாயா மீட்பின் அனுபவத்தில் பரிசுத்த ஜனம், தேடிக்கொள்ளப்பட்டவன், கைவிடப்படாத நகரம் என்ற பெயர் கொடுக்கிறார் (62:12) எசேக்கியேல் தீர்க்கர் மீட்பின் அனுபவத்தை கடவுள் இங்கிருக்கிறார் என்ற பொருளுடன் ‘யெகோவா ஷம்மா’ என்று பெயர் கொடுக்கிறார் (48:35) சகரியா மக்களும் நாடும் உண்மை வாழ்வுக்கு திரும்பு (8:8) என்கிறார்.

இறை நம்பிக்கையும் நல்வாழ்வும் இணைந்து செல்வதே உண்மை வாழ்வு. இந்த உண்மை வாழ்வுக்கு கடவுளின் உடனிருப்பால் வழிகாட்டப்படுகின்றது. இவ்வழிகாட்டலால் உள்ளத்தின் பொல்லாத எண்ணம் அகலும் (எபே. 3:17) பவுல் கூறும்போது உண்மை, கண்ணியம், நேர்மை, தூய்மை, விரும்பத்தக்கவை, பாராட்டுதற்குரியவை, நற்பண்புகளை மனதில்கொள்ளும்போது கடவுள் தரும் அக்களிப்பை பெற முடியும் (பிலி. 4:4,8) என்கிறார். உண்மையை தேடுவது மட்டுமல்ல கடைபிடிக்க வேண்டும். செல்வம் நிறைந்த வாலிபன் உண்மையை தேடினான். வழிகாட்டப்பட்டபோது கடைபிடிக்க முடியவில்லை (மத். 19:22) மேசியாவின் உண்மை வழிகாட்டுதலை பின்பற்றுகிறவர் புதுவாழ்வில் நுழைந்திடுவர் (ஏசாயா 26:2) உண்மை வாழ்வுக்கு அடையாளமாக பரிசுத்தம் என்ற முகவரியை பெறுவர். (செக். 14:20)

கடவுள் உடன் வாசம் பண்ண உறவின் வாழ்வு தர உண்மை வாழ்வுக்கு வழிகாட்ட அருகில் இருப்பதால் அக்களிப்போம்.

அருள்திரு. I. **ரெஞ்சித் வேதகுமார்**

**21-12-2011** — ***மார் தோமா திருச்சபை நாள்***

| | |
|---|---|
| ஏசா. 22:2-24 | பிலி. 3:12-21 |
| திபா. 100 | யோவா. 14:1-14 |

24-12-2011

கிறிஸ்மஸ் காலம்

# பூமியின் மேல் சமாதானம்
## PEACE OF EARTH

ஏசாயா 9:2-9 | Iதீமோ. 3:1-6
திபா. 89:14;19-29 | லூக்கா 2:1-14

*"அவர் திருப்பெயரோ...........'அமைதியின் அரசர்' என்று அழைக்கப்படும்." ஏசா. 9:6*

**மன்றாட்டு : எங்கள் மீட்பரான கடவுளே, எங்களையும் முழு படைப்பையும் மீட்டு தூய்மைப்படுத்த இயேசுகிறிஸ்துவை அருட்கொடையாக்கினீர். அவரை ஆண்டவராகவும், மீட்பராகவும் அனுபவித்தறியவும், மீட்பின் மகிழ்வை எங்கள் வாழ்வில் வழங்கவும் என்றும் உம்மோடும், தூய ஆவியரோடும் வாழ்ந்து ஆளுகை செய்யும் இயேசுகிறிஸ்து வழி மன்றாடுகிறோம். - ஆமென்.**

சமாதானம் இல்லாத மன்னன் ஞானி ஒருவரை சந்தித்து "நான் சமாதானமற்று அலைந்துக் கொண்டிருக்கிறேன். நான் எப்படி உண்மையான சமாதானத்தை பெற்று கொள்ளுவது?" என்று கேட்டான். அதற்கு அந்த ஞானி நன்கு யோசித்து விட்டு "உன் நாட்டில் கவலையே இல்லாமல் சமாதானமாய் வாழும் மனிதன் ஒருவனை கண்டுபிடித்து அவனின் சட்டையை 24 மணி நேரம் அணிந்து கொள், அப்பொழுது சமாதானம் பெறுவாய்" என்றார். உடனே சேவகர்கள் கவலையே இல்லாமல் சமாதானமாய் வாழும் மனிதனை கண்டுபிடிக்க குதிரைகளில் சென்றனர்.

ஏறத்தாழ 3 மாதங்கள் கழித்து சேவகர்கள் மன்னனிடம் வந்து "மன்னா, கவலையே இல்லாமல் சமாதானமாய் வாழும் மனிதன் ஒருவனை கண்டு பிடித்துக் கொண்டு வந்திருக்கிறோம். ஆனால், அணிந்து கொள்ள அவனுக்கு சட்டை இல்லை" என்றார்.

இப்படித்தான் அனைத்துமிருந்தும் இன்று சமாதானமிலாமல் ஏங்கும் மக்கள் பலரை பார்த்திருக்கிறோம். இம்மன்னனைப் போல் சமாதானத்திற்கான ஏக்கம் இன்று உலகம் முழுவதையும் பற்றி பிடித்திருக்கிறது. அதாவது காந்தியடிகள் அன்று ஊன்றி நடந்த அகிம்சை என்னும் ஊன்று கோலை இன்று உலகம் தேடுகிறது. மேலும், தென் அமெரிக்க விடுதலையாளர் மார்ட்டின் லூதர் கிங் கற்று தந்த அறவழியை இன்று உலகம் தேடுகிறது. இச்சூழலில் ஏசாயா இறைவாக்கினர்

முன்னறிவிக்கும் அமைதியின் அரசர் இயேசு கிறிஸ்து பகிர்ந்தளிக்கும் சமாதானத்தை நாம் சிந்திக்க அழைக்கப்படுகிறோம். உலகின் மன்னர்களும் தலைவர்களும் கொண்டு வரும் சமாதானம் தற்காலிகமானது. அது தொலைந்து போகும். பன்னெடுங்காலமாக, சமாதான குறைவு நிறைந்த இப்பூவுலகில் இயேசு கிறிஸ்து மட்டுமே சமாதானத்தின் மையமாக இருக்கிறார். எனவே 'சமாதான பிரபு' என தீர்க்கன் ஏசாயாவால் அழைக்கப்பட்ட 'சமாதான காரணா' என் தீர்க்கன் மீக்காவால் முன்னறிவிக்கப்பட்ட சமாதான கிறிஸ்து தரும் சமாதானத்தின் படி நிலைகளை சிந்திப்போம்.

## 1. அமைதியற்ற சூழலில் சமாதானம் தருகிறார்

போராட்டம் இல்லாத வாழ்க்கை என்பது சமாதான வாழ்வல்ல. மாறாக கொந்தளிப்புக்களின் மத்தியிலும் பயப்படாமலும், திகிலடையாமலும் இருக்கும் நிலைதான் சமாதானம். அதாவது நமது வாழ்க்கை கொந்தளிப்பு நிறைந்த அனுபவத்திலிருந்தாலும் இறைசமாதானம் நம்முடனிருக்கிறது என்பதை புரிந்து கொள்ள வேண்டும். தீர்க்கன் ஏசாயா இதைக் குறித்து விளக்கும் போது "மலைகள் நிலை சாயினும், குன்றுகள் இடம் பெயரினும் உன் மீது நான் கொண்ட பேரன்போ நிலை சாயாது. ஏன் சமாதான உடன்படிக்கையோ அசைவுறாது.." என்கிறார். சிறந்த ஆன்மீக நூலாசிரியர் என்று பெயர் பெற்ற பியர்ஸன் "அனைத்து விதமான உலக சூழல்களிலும் இறைவனை நோக்கி மன்றாடி, அவன் மீது ஆழமான நம்பிக்கை வைக்கிற மனிதனின் உள்ளத்தில் ஆழத்தில் கிடக்கிற அமைதியே சமாதானம்" என்கிறார்.

அன்று இயேசுவின் சீடர்களுக்கு கொந்தளிக்கும் சூழல் உருவானதற்கு காரணம் (மத். 6:45-51) இயேசு நாதரை விட்டு விட்டுக் கடலில் பெத்சாயிதாவுக்கு நேராக பயணம் மேற்கொண்டனர். ஆனால், தொடர முடியாதபடி எதிர்காற்று வீசி பயணத்தை அலைக்கழித்தது, அவர்களின் சமாதானத்தைக் குலைத்தது. சமாதானம் வேண்டும் என்ற ஏக்கம். இயேசு கடந்து வந்து கொந்தளிக்கும் கடலை அடக்கி சமாதானம் கட்டளையிட்டார். சீடர்களின் சமாதானமில்லா பயணத்துக்கு காரணம் இயேசுவை கரையிலே விட்டு சென்றனர். நாமும் பல வேளைகளில் இயேசுவை தனியே விட்டு விட்டு சுய பலத்தை, சுய அறிவை நம்பி விடுகிறோம். விளைவு கொந்தளிப்பு.

இத்தகைய கொந்தளிப்பின் சூழலிலிருந்து மக்களுக்கு தீர்க்கன் ஏசாயாவின் கூற்று ஏசாயா 26:3 "அவர்கள் மன உறுதி கொண்டவர்கள்.

உம் மீது நம்பிக்கை உடையவர்கள், அவர்களை அமைதியால் நீர் உறுதிப்படுத்துகின்றீர்'' இயேசுவின் அடியவர்களாக வாழ வேண்டுமென்றால் கிறிஸ்துவைப்போல துன்பத்தை தாங்கக் கூடியவர்களாகவும், உண்மையான சமாதானத்தை நிலை நாட்டக் கூடியவர்களாகவும் இருக்க வேண்டும்.

## 2. அமைதியின் கருவிகளாக மாற்றுகிறார்

இறைமகன் இயேசு நம் வாழ்வில் சமாதானத்தின் உறைவிடமாக இருக்கிறார். மட்டுமல்ல பிறருடைய சமாதானத்திற்காக செயல்படும் படியும் அழைக்கிறார் ''ஷாலோம் ''என்கிற எபிரேய சொல் தமிழில் சமாதானம் என மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. இச்சொல் பழைய ஏற்பாட்டில் ஒருவர் மீது ஒருவர் கொள்ளும் உறவு சார்ந்த பொருளாக கொள்ளப்படுகிறது. ஒரு எபிரேயன் மற்றவரை சந்திக்கும்போது இவ்வார்த்தை பயன்படுத்துவார்களாம். இதன் பொருள் என்னவென்றால் தான் மட்டுமல்ல, மற்றவர்களும் சமாதானமாக இருக்க வேண்டுமென்பதே. ஆகவே தான் இயேசு தனது மலைப்பொழிவில் மத்தேயு 5:9-ல் ''அமைதி ஏற்படுத்துவோர் பேறு பெற்றோர், ஏனெனில் அவர்கள் கடவுளின் மக்கள் என அழைக்கப்படுவர்'' என்று கூறினார்.

கிறிஸ்து நம்மில் எதிர்பார்க்கும் அமைதி ஏற்படுத்துதல் என்பது பயத்தினால் அல்லது மிரட்டலினால் ஏற்படுத்தும் அமைதியல்ல. ஏனென்றால், அது வெளிப்படையாக தோன்றுவது மட்டுமே. உள்ளே புகைச்சலும், வெறுமையும், கோபமும், மகிழ்ச்சியற்ற தன்மையும் குடிக்கொண்டிருக்கும். மாறாக, நீதியில் கனியும், மானிட உரிமையில் பிறக்கும் நேயத்தையும், அநீதிகள் ஒழிந்த வாழ்வையும் சார்ந்த சமாதானம் நம்மிலே கனியவே நம்மில் ஆண்டவர் விரும்புகிறார். சமாதானத்தின் அரசராக விளங்கும் கிறிஸ்து கூறும் நீதியில் கனியும் அமைதியை நாமும் பெற்று ''அமைதியின் கருவியாய் ஆண்டவா அடியேனை அனுதினம் உருவாக்கிடும்''என்ற வேண்டுதலோடு செயல்பட்டு அமைதியின் அரசரை உள்ளத்தில் வரவேற்க ஆயத்தமாவோம்.

அருள்திரு. **ஜாண் A. ஸ்மித்**

**25-12-2011**

**கிறிஸ்மஸ்**

# கடவுள் நம்மோடு

## GOD WITH US

ஏசா. 11:1-9 கொலோ. 1:13.20

திபா. 85:8-13 மத். 1:18-25

*"இம்மானுவேல் என்றால் கடவுள் நம்முடன் இருக்கிறார்." மத். 1:23*

**மன்றாட்டு :** விடுதலை வழங்கும் கடவுளே, உமது திருமைந்தரை எங்களோடிருக்க இவ்வுலகுக்கு அனுப்பினீர். எங்கள் வாழ்வின் அனைத்து காலங்களிலும் எங்களுள் உமது உறைதலை உணர்த்தி ஒளிவீச அருள்தாரும். உம் எழுந்தருளுதலால் எங்கள் வாழ்வில் தூயமாற்றம் பெற்று உம்மைப் புகழ என்றும் எங்களை வழிநடத்தும் வல்லவர் இயேசுகிறிஸ்து வழியாக வேண்டிக்கொள்கிறோம். - ஆமென்.

அலங்காரங்களும், ஆர்ப்பாட்டங்களும், ஆனந்த களிப்புகளும் அகிலத்தினையே ஆட்கொண்டிருக்கும் இந்த நாள் சிறப்பு நாளே. வீழ்ந்து போன மானுடத்திற்கு வியக்கத்தகு ஒளியை வெளிப்படுத்தியிருக்கும் பேருவுவகையின் நாள். வியாபாரமாக்கப்பட்ட நிலையில் முனை ஒடிந்து வரும் ஆன்மீகத்தின் இதயத்துடிப்பைப் பிடித்துப்பார்த்து எழுச்சியூட்டும் திருநாள். அடையாளங்களையும், அற்புதங்களையும் நம்பி இதுவே கிறிஸ்தவம் என்ற நிலையில் விரைந்திருக்கும் கால்களைப் பிடித்து நிறுத்தி அக தெளிவூட்டும் ஆர்ப்பரிப்பின் நாள். குழப்பத்தின் நடுவில் குறுகி கூன் வீழ்ந்திட்ட நிலையில் காணப்படும் மானிட உள்ளங்களில் மறுமலர்ச்சி ஏற்படுத்தும் மகிழ்வின் திருநாள். வாருங்கள் வரலாற்று தடயங்களில் வாழ்வு தரும் சிந்தனைக்கு ஒருமுகப்படுவோம்.

இம்மானுவேல் நம்முடன் இருப்பவர் என்று தெளிவுப்படுத்தப் பட்டுள்ளது. இவர் மக்களின் எதிர்ப்பார்ப்புக்குரியவர். மானிட வறட்சியில் உருவாகும் துளிரானவர். அமைதியிழந்து அடிமைத்துவ சிந்தையில் அங்கலாய்ப்படைந்திருக்கும் மானிட நிலையில் அமைதியை தரும் அடிமரமானவர். கிறிஸ்துபிறப்பு பெரு மங்கல பெருவிழா நாளில் புரிந்து கொள்ளும் உண்மையை சிந்திப்போமாக.

### *1. இரக்கத்தால் இறங்கினார்* (மத். 1:20)

வாழ்க்கையினில் துன்பங்கள் அழுத்துகின்ற போது எழுகின்ற கேள்வி கடவுள் எங்கே என்பது தான். (நீதி. 6:13) இயேசுவின் பிறப்பு சூழலிலும் இத்தகைய நிலையை நாம் அறிய முடிகின்றது.

நெருக்கடிகளிலும், வேதனைகளிலும், அரசின் அடிமைத்தன நிலைகளிலும் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களுக்கு நம்பிக்கையின் வாக்காக இம்மானுவேல் இறங்கி நம்மிடையே வந்தார் என அறிவிக்கப்படுகிறது. அளவில்லாத வல்லவர், உலகத்தைத் தாங்கினவர், மழலையாக மாமரியின் கருவில் தன்னை சுருக்கிக் கொள்கிறார். பழைய ஏற்பாட்டு பின்னணியத்தையும் இந்நிகழ்வோடு திருப்புகின்ற போது உண்மைகள் வெளிப்படுகிறது. ஏசா. 7:1 இல் அமைதி நிறைந்த எருசலேம் கலக்கமடைந்து காணப்படுகிறது. காரணம் என்னவெனில் யூதா நாட்டை ஆகாசு ஆட்சி செய்த நாட்களில் இட்சின் என்னும் சிரியா நாட்டு அரசரும் பெக்கா எனும் இஸ்ரயேல் நாட்டு அரசரும் இணைந்து எதிர்த்தனர். ஆகவே ஆகாசின் உள்ளமும் அவர் நாட்டு மக்களின் உள்ளமும் பெருங்காற்றினால் காட்டு மரங்கள் அலையதிர்வு கொள்வது போல அலைக்கழிக்கப்பட்டன (ஏசா. 7 : 2). இந்நிலையில் கலக்கமடைந்த ஆகாசு அசீரிய அரசரான திக்லத்பிலேசரிடம் விண்ணப்பித்தான் மட்டுமல்ல அரச கருவூலத்தை அவனுக்கு தாரை வார்த்துக் கொடுத்தான். இவ்வாறு நிலையற்றிருக்கும் சூழலில் இறைவாக்கினர் ஏசாயா வழியாக கடவுளின் வாக்கு உறுதிப்படுத்தப்படுகிறது (ஏசா. 7:14). அதுவே இம்மானுவேல் தரப்படுகிறார் என்பதாகும். மத். 1:18 இல் குழப்பத்தினில் உறைந்து நிற்கும் யோசேப்பு. விடை காண முடியாத கேள்விகளும், நெருடல்களும், யோசேப்பை நெருக்க, நிலை தடுமாறி நிற்கிறார். இந்நிலையில் இறைவெளிப்பாடு பெறுகிறார். அமைதியற்ற நிலையில் பெறும் அமைதியும், அர்ப்பணமும் இவ்வுலகத்திற்கு இம்மானுவேல் இரக்கத்தின் அடையாளம் என்பதை நிலை நிறுத்துகிறது. தூய ஆவியாரில் மரியா கருவேற்றுள்ளார் என்பது குழப்பத்தின் விடையாகிறது. இன்றும் அமைதியிழந்து, முடிவெடுக்க முடியாத கலக்கத்தினால் கலங்கி நிற்கும் மக்களுக்கு, நம்பிக்கையின் இறைவாக்காகவே இறங்கி வந்தார் (பிலி. 2:7) நம்மிடையே குடி கொண்டார் (யோவா. 1:14). என்ற வாக்கு உரைக்கப்படுகிறது.

### 2. *இறை அன்பால் நெருங்கினார்* (மத். 1:21)

யோசேப்பின் கலக்கத்திற்கு தரப்பட்ட இறை வெளிப்பாடே மானுடத்தை மீட்டெடுக்க மானிட மகன் இவ்வுலகில் வந்தார் என்பதே ஆகும். கடவுளின் திருமைந்தர் மனு உரு ஏற்றார். உடல் ஏற்றார். "உரு" என்பது வடிவம், தன்மை சார்ந்ததாகும். இவை இரண்டும் இயேசுவில் இருந்தது. (பிலி. 2:5-8) ஆனால் மனித நிலையில் சற்று வேறுபட்டு நிற்கிறார். என்னவெனில் ஆதாமின் வழியான பாவம் மானிடம் மீது படர்ந்து

வருகிறது. அது விலக்க முடியாதது. ஆனால் இயேசு ஆதாமின் பாவமில்லா நிலையில் வருகிறார் (யோவா. 3:6). வீரமாமுனிவர் தேம்பாவணியில் இவ்வாறு குறிப்பிடுகிறார்.

" உருவில்லான் உருவாகி
கருவில்லா கரு தாங்கி
கன்னித்தாய் ஆயினையே "

மூல பாவமில்லாத நிலையில் வருகிறார். முதன்மை காரணராக வருகிறார். (கொலோ. 1:17) வீழ்ந்து போன மானிட உறவை சீரமைப்பதற்காக, எவரையும் அழியாமல் பாதுகாக்க, நிலை வாழ்வு தர (யோவா. 3:16) நெருங்கினார். கடவுளுக்கும் மனிதருக்கும் இடையே இணைப்பை (1திமோ. 2:5) ஏற்படுத்துவதே இம்மானுவேலரின் நோக்கம். ஆகவே கடவுள் என்னிடத்தில் நெருங்கி வருகின்றார். என்னை மன்னித்து கை தூக்கி விடுகிறார். வாழ்விக்கிறார், விடுவிக்கிறார் என்ற தெளிவான சிந்தை இயேசுவில் உறுதிப்படுத்தப்படுகிறது (கொலோ. 1:19). இறை அன்பில் நெருங்கின வருக்கு உலகம் இடம் தரவில்லை (யோவா. 1:11) விடுதியிலும் இடம் மறுக்கப்பட்டது. (லூக். 2:7) தீவன தொட்டியில் கிடத்தப்பட்ட நிலை. மானிட மகன் இவ்வாறு தன்னை வெளிப்படுத்தி இறையன்பினை உறுதிப்படுத்தினார். மட்டுமல்ல மானிடமும், படைப்பும் விடுவிக்கப்பட்டது. (கொலோ. 1:13; எபி. 2:14-16; உரோ. 8:19-22) வாழ்வு தேடும் மக்களுக்கு வாழ்வின் நம்பிக்கை இம்மானுவேல் இறை அன்பால் நெருங்கினார் என்பதாகும்.

### 3. *இறை மேன்மையால் நிரப்பினார்* (மத். 1:23)

உடனிருக்கும் உன்னத அனுபவத்தில் பெற்றுக் கொள்ளும் உறுதியே மேன்மைக்கு திருநிலைப்படுத்துகிறது. உன்னதரான இயேசு உயர்ந்த மேன்மையை உதறி தள்ளி உலகில் வர காரணமென்ன, மானிடம் இழந்த மேன்மை பெற வேண்டுமென்பதற்காகவே, ஆகவே தான் ஏசா. 11:1 இல் ஈசாய் எனும் அடிமரத்திலிருந்து துளிர் ஒன்று துளிர் விடும். அதன் வேர்களிலிருந்து கிளை ஒன்று வளர்ந்து கனி தரும் எனகுறிப்பிடுகிறார். இதையே பேரன்பும், உண்மையும் சந்தித்து நீதியும், நிறைவாழ்வும் இணைந்த புதிய வாழ்வின் தகவுகளுடன் மேன்மைவெளிப்படும் என்கிறார். (தி.பா. 85 : 10) தன்னை கருவில் சுருக்கி மானிடத்தை மேன்மைப்படுத்த இம்மானுவேலராக நம்மிடையே குடிகொண்டார். ஆதாம், ஏவாள் பாவத்தில் விழுந்த போது உரைக்கப்பட்ட வாக்குரையின் படி (தொநூ. 3:15) வல்லவர் வந்தார். இழந்த உருவினை கொடுத்தார். வாழ்வின் மேன்மையாக விண்ணரசை உறுதிப்படுத்தினார்.

மட்டுமல்ல புதிய வாழ்வின் தகவுகளால் அதிகாரப்படுத்தினார். (எசா.11:6-9) நம்மோடு இருப்பவர் கிறிஸ்துவில் நம்மை ஒட்டியுள்ளார். (உரோ.11:17-21; யோ. 15:1) அந்த ஒட்டுதலில் சுவையுள்ள கனி கொடுக்கவும், பிறர் சுவை பெற்றிடவும் ஒப்படைப்பது தானே உயர்வான கிறிஸ்து பிறப்பு கொண்டாட்டம். நம்மோடு குடி கொள்ளும் ஆண்டவரை அகிலத்தினில் காட்டுவோம். அசைக்க முடியாத உறுதியுடன் துன்ப அழுத்தங்களை மகிழ்வோடு ஏற்கும் திறன் பெற்ற யோசேப்பு போன்று வலுப்பெறுவோம். குளிரையும், இருளையும், அச்சத்தையும், அச்சுறுத்துத்தலையும், அமைதியற்ற நிலையினையும் அர்ப்பணத்தோடு யோசேப்பு ஏற்றுக் கொண்டாரே, காரணமென்ன இம்மானுவேலின் வெளிப்பாடும் அதன் வழியாக தான் பெற்றுக் கொண்ட உறுதியுமே.

இந்த பெருவிழா கொண்டாட்டங்கள் நமக்குள்ளே எழுகின்ற கேள்விகளுக்கு விடையாகட்டும். எதிர்பார்ப்புகள் ஏமாற்றங்களாகலாம், பழிச்சொற்கள் அவமரியாதைகளும் ஏற்படலாம். எந்நிலையிலும் இறையன்பில் வளர்ந்திடுவோம். கடவுள் நம்மோடு என்பதை வார்த்தைகளாலல்ல பொருள் நிறைந்த வாழ்வால் வெளிப்படுத்துவோம். குடும்பங்கள் சிதையாது, குழந்தைகள் வாழ்வுக்கு மறுமலர்ச்சி உருவாகி குவலயம் மீட்கப்படும் என்ற இயேசுவின் பிறப்பில் மலர்ந்த செய்தியின் உண்மையில் உலகினை மறு வடிவமாக்கிட முனைப்புடனும், இறை பார்வையுடனும் முன்னேறுவோம்.

அருள்திரு. **இரா. சாம் பிறின்ஸ்**

31-12-2011

*வருட இறுதித்தொழுகை*

# கடவுளில் நம்பிக்கை கொள்ளுங்கள்

**TRUST IN THE LORD**

| | |
|---|---|
| வி.ப. 33:12-23 | 1தெச. 5:23,24 |
| தி.பா. 90:136; 1-9; 23-26 | லூக். 12:22-34 |

*"சிறு மந்தையாகிய நீங்கள் அஞ்சவேண்டாம்." லூக். 12:32*

**மன்றாட்டு : என்றென்றும் வழிநடத்தும் கடவுளே, அனைத்து படைப்பிற்கும் ஆதாரமானவரே எமது காலங்கள் உமது கரத்தில் உள்ளன. வாழ்வின் அனைத்து நெருக்கடியான நிலைகளிலும் உயர்வான உம் ஆசிகளை தினமும் எங்கள் வாழ்வில் அனுபவிக்க வாய்ப்பருளினீர். எங்கள் நம்பிக்கையினை முழுமையாய் உம்மில் வைத்து வாழ்வு தொடரவும், நிலைவாழ்வுக்கு ஆயத்தப்படவும் எம்மை வலுப்படுத்த என்றும் உம்மோடும், தூய ஆவியரோடும் வாழ்ந்து ஆளுகை செய்யும் இயேசுகிறிஸ்து வழி மன்றாடுகிறோம். - ஆமென்.**

ஒருநாள் அதிகாலை நேரம் மருத்துவமனை அறுவை சிகிச்சை அறைக்கு முன்னால் பெருங்கூட்டம் மக்கள் நின்று கொண்டிருந்தார்கள். அப்பொழுது அறுவை சிகிச்சை மருத்துவர் குழு ஒருவருக்கு மூளையில் அறுவை சிகிச்சை செய்து கொண்டிருந்தது. திடீர் என்று அறுவை சிகிச்சை கதவு திறந்தது. மருத்துவர் ஒருவர் வெளியே வந்தார். கூடியிருந்தவர்களிடம், நாங்கள் எங்கள் கடமையை செய்துவிட்டோம். நீங்கள் கடவுளிடம் வேண்டிக்கொள்ளுங்கள் என்றார். கடவுளிடம் கொள்ளும் நம்பிக்கை மட்டுமே மனிதசக்திக்கப்பால், மனிதனை சக்திபடுத்த வல்லது. உறுதியாய் நிற்க வைக்க வலு வாய்ந்தது. கடவுள் நம்பிக்கை மனித வாழ்வில் அருளியுள்ள ஆசீர்வாதங்கள் ஈண்டு காண்போம்.

## 1. கரத்தினால் மூடுவதை அனுபவிப்பர்

இஸ்ரவேல் மக்களை எகிப்திலிருந்து மீட்க இறைவன் பயன்படுத்தியவர் மோசே. இஸ்ரவேல் மக்கள் சமூகத்தை உலகறியச் செய்த பெருமைக்குரியவர். திருச்சட்டங்கள் இவர் மூலம் மானுடச் சமூகத்திற்கு தரப்பட்டது. மோசே கடவுள் நம்பிக்கையுடையவராய் வாழ்ந்தார். ஒருவன் தன் சினேகிதனோடே பேசுவது போல கர்த்தர் மோசேயோடே பேசினார். (யாத் 33 : 11 ) நெருங்கிய உறவில் வாழ்ந்த மோசே, கடவுளிடம் நம்பிக்கை

கொண்டு வாழ்ந்ததுடன், நம்பியவருடன் பயணிக்க விரும்பினார் (யாத். 33:15). மோசே கடவுளிடம் அவருடைய மகிமையை காணவேண்டும் என்னும் தன்னுடைய விருப்பை தெரிவித்தார். கடவுள் மோசேயைப் பார்த்து நீ என் முகத்தை காணமாட்டாய். என் மகிமை கடந்து போகும் போது என்கரத்தினால் உன்னை மூடுவேன் என்றார் (யாத். 33:22) நம்பிக்கை கொண்ட மோசே கடவுளின் கரத்தை காணும் பேற்றையும், அவர் தொடும் தொடுதலையும் அனுபவித்தார்.

இயேசு கிறிஸ்துவில் நம்பிக்கை கொண்ட சீடர்கள் கூட்டம் வாழும் இயேசு கிறிஸ்துவின் ஆசீர்வதிக்கும் கரங்கள் கண்டார்கள். அவர்தம் அடியவர்கள் பெத்தானியாவரைக்கும் அழைத்துக்கொண்டு போய் தம்முடைய கைகளை உயர்த்தி அவர்களை ஆசீர்வதித்தார். (லூக் 24 : 50) ஆபத்துகளும், பாடுகளும், மரணமும், மானுடத்தை விட்டலாத மண்ணில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். எல்லாவேளைகளிலும் கிறிஸ்துவிடம் நம்பிக்கை வைத்திருந்தால் அவர் நம்முடனிருப்பதையும், அவர் நம்மை மூடிக்கொண்டிருப்பதையும் உணர்வோம். அனுபவிப்போம். நம்பிக்கையில் பெலப்படுவோம்.

## 2. கடவுளின் விடுதலையை அனுபவிப்போம்

கர்த்தரை நம்பினோர் கர்த்தர் மூலம் வருகின்ற விடுதலையை சொந்தமாக்கினார்கள். சங்கீதக்காரர் தாவீது குறிப்பிடுகையில் எங்கள் பிதாக்கள் உம்மிடத்தில் நம்பிக்கை வைத்தார்கள். நம்பின அவர்களை நீர் விடுவித்தீர் என்கின்றார் (சங். 22:4) யோபு பாடுகளை அனுபவித்த மனிதர். பாடுகள் மிகுந்த வேளையில் அவர் என்னை கொன்று போட்டாலும் அவர் மேல் நம்பிக்கையாயிருப்பேன் (யோபு 13:15) என்றார். யோபுவின் வாழ்ந்து அழிந்து போகவில்லை. இருள் அகன்று, கடவுளால் விடுவிக்கப்பட்டு மகிழும் வாழ்வை சொந்தமாக்கினார் (யோபு 42:12 ). ஏசாயா குறிப்பிடுகையில் தேவனே என் இரட்சிப்பு நான் பயப்படாமல் நம்பிக்கையாயிருப்பேன். கர்த்தராகிய யெகோவா என் பெலனும் என்கீதமுமானவர், அவரே எனக்கு இரட்சிப்புமானவர் என்கின்றார் (ஏசா. 12:2).

இயேசு கிறிஸ்துவின் மானுடம் வைக்கும் நம்பிக்கை மரணத்தினின்றும் நம்மை விடுவிக்குமென்று தூய பவுலார் குறிப்பிடுகின்றார். (கொரி. 1:10) மக்களை, மக்களும், மக்களுடைய, செல்வமும், ஆற்றலும் விடுவிக்குமென்று மக்கள் நம்புகின்றனர். ஆனால் ஒரு எல்லைக்கு அப்பால் அனைத்தும் இழந்துபோகின்றனர். எனவே வாழும் காலத்தில் கடவுளில் நம்பிக்கை வைத்தால், மக்களால் விடுவிக்க முடியாத இடத்தில் கடவுள் நம்மை விடுவிப்பார். படைப்புக்களும் விடுவிக்கப்படும்.

## 3. கடவுள் நம்பிக்கையால் கவலையின்றி வாழ்தல்

மனிதவாழ்வில் மனிதன் விரும்பாத கவலைகள் மனிதனைப் பற்றிக்கொள்ளுகின்றன. குறிப்பாக இந்த கவலைகள் அடிப்படை தேவைகள் சார்ந்தவைகள் உண்ணும் உணவிற்காகவும், உடுக்கும் உடைக்காகவும் கவலைப்படுவர். இயேசு கிறிஸ்து குறிப்பிடுகையில் காகங்கள் தங்கள் உணவிற்காக கவலைப்படுவதில்லை. காட்டுப்பூக்கள் தங்கள் ஆடைக்காக கவலைப்படுவது இல்லை (லூக். 12:27) இவைகள் இறைவனில் நம்பிக்கை வைத்து வாழ்கின்றன. ஏற்ற வேளையில் இறையருளால் இவற்றின் தேவைகளை இறைவன் நிறைவு செய்கின்றார்.

கொஞ்சகால உலகில் கடவுள் நம்மையும், நம் சந்ததியையும் நடத்துவார் என்னும் நம்பிக்கையில்லாமல் நாமாகவே நமக்கும், நம் சந்ததிக்கும் சேர்த்து வைக்க விரும்பினால் நாம் சேர்த்து விடலாம் என்னும் நம்பிக்கை வீணாகும். நாம் முயன்று எதையாவது பிடித்து விடலாம் என்று நினைத்தால் சில வேளை சீடர்களின் நிலை வரலாம் (யோவா. 21:5) ஐசுவரியத்தை சேர்க்க வேண்டும் என்று விரும்பிச் சேர்த்து இதிலே நம்பிக்கை வைத்து கொண்டிருந்தால் இறையரசிற்குள் செல்வது கடினமாகும் (மாற். 10:24).

இரட்சகராகிய வாழும் கடவுள் மேல் நம்பிக்கை வைத்திருந்தால் அவர் கரங்கள் நம்மை மூடும் இருளின் ஆதிக்கத்திலிருந்து நாம் விடுவிக்கப்படுவோம். இம்மை வாழ்வில் கவலை நிறைந்த உலகில் கவலையின்றி வாழ்வோம்.

அருள்திரு. **A. இன்பதாஸ்**

*விழாக்கால அருளுரை*

# திருமறைப்பள்ளி ஆண்டுவிழா
## "இறை இல்லத்தில் இன்பச் சிறார்கள்"

1சாமு. 3:1-21 எபே. 6:1-4
தி.பா. 119:97-104 மாற். 10:13-16

*"அவர்களை அணைத்துக்கொண்டு அவர்கள் மேல் கைகளை வைத்து அவர்களை ஆசீர்வதித்தார்." மாற்.10:16*

குடும்பத்தில் குழந்தைகளைச் "செல்வம்"என்று சொல்லுவார்கள். பிள்ளைச் செல்வம் இதற்கு மிஞ்சிய செல்வம் எதுவும் இல்லை. ஒருவரிடம் பல்லாயிரம் கோடி மதிப்புள்ள இரத்தினங்கள் இருப்பினும் அதனைக் கொஞ்சி மகிழ முடியாது. ஆனால் தன் முன் இருக்கும் மழலையை அணைத்து மகிழ்வதில்தான் இறை அன்பின் சுவை வெளிப்படுகின்றது.

இவ்வித அன்பும், அரவணைப்பும் உலகிலுள்ள எல்லா குழந்தைகளுக்கும் உண்டா என்று பார்த்தால், பல குழந்தைகளுக்கு இல்லை என்றே பதில் கூறலாம். பாலவயதில் பெற்றோரை இழந்த குழந்தைகள், பால் பருவம் மறந்தவுடன் செங்கல்சூளை, முந்திரிதொழிற்சாலை, தீப்பெட்டி அலுவலகம், பட்டாசுக்கடைகள், உணவகங்களில் பகல் முழுதும் பணிசெய்து வாழ்க்கை நடத்தும் பிஞ்சுகள். பள்ளிக்கூடத்தை தங்கள் கண்ணால் கூட பார்க்க வாய்ப்பு இல்லாமல் வாழும் "கர்த்தரால் வந்த சுதந்திரங்கள்" இவர்கள். குழந்தைகள் வரும்காலத் திருச்சபைகள், சித்திரம் தீர்ந்த அரண்மனை மூலைக்கற்கள், தாழ்பாள்களை உறுதிப்படுத்தும் அச்சாணிகள், கர்த்தரால் கிடைக்கப்பெற்ற பலாபழங்கள் இவர்கள் வாழ்வு, இவர்களின் வழி, இவர்களின் நெறி ஆகியவற்றைக் குறித்து சிந்திப்பது மிகவும் அவசியம். இந்நிலையிலுள்ளவர்க்கு நாம் செய்ய வேண்டுவது என்ன? என்றும் அவர்கள் தங்கள் வாழ்வில் காத்துக்கொள்ள வேண்டியவை யாவை என்றும், எவ்விதம் இறை அரசின் சொந்தக்காரர் ஆகலாம் என்றும் ஆழ்ந்து நோக்குவது புது செயல்திட்டத்துக்கு வழிவகுக்கும்.

### 1. இடறல் உண்டாக்காதிருங்கள் : மாற். 10:14

திருச்சபை என்பது கிறிஸ்துவின் சரீரம். சரீரமாகிய சபையில் குழந்தைகள், இளைஞர்கள், பெரியவர்கள் ஆகியோர் இணைந்து இருப்பர். இவர்களில் 50% முதல் 60% அங்கத்தினர்களைக் கொண்டது திருமறைப்பள்ளி. திருச்சபை உருவாக்கத்தின் முதல்படி திருமறைப்பள்ளி.

இவர்களை சமுதாயத்தைக் கட்டும் சிற்பிகளாக மாற்றுவதில் திருச்சபை மூப்பர்களுக்கு பெரும் பொறுப்பு உண்டு. ஆகவே பிள்ளைகளை தடைபண்ணாதிருங்கள்.

பிள்ளைகளின் முதல் பாடசாலை அவர்கள் பிறந்த இல்லங்கள். முதல் ஆசிரியர் தங்கள் பெற்றோர். முதல் பாடம் “இயேசு தேவனே என் ஜீவனே ஏழைப்பிள்ளை நான் என்னை இரட்சியும்” இவ்வித இல்லங்கள் ஒரு இறைஇயல்பள்ளி. இங்கே பாடல்கள், திருமறை ஆய்வு, ஜெபம், அன்பு, ஒழுக்கம், கல்வி ஆகியவை கற்பிக்கப்பட வேண்டும்.

குழந்தைகளிடம் போகாதே, பேசாதே, செய்யாதே, தொடாதே என்ற எதிர்மறை வார்த்தைகளுக்குப்பதில் இங்கே வா, இப்படிச் சொல், இப்படிச்செய், இதை எடுத்துக்கொள் என்று நேர்முகமான நம்பிக்கையூட்டும் சொற்களைப் பேச வேண்டும். ஏனெனில் பிள்ளையின் நெஞ்சில் மதியீனம் ஒட்டிக்கொண்டிருக்கும் இதனை மாற்ற திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலை அனுதினமும் ஊட்ட வேண்டும் (உபா. 6:6-18).

முற்காலத்தும் பெண்கள் தங்கள் குழந்தைகளுக்குப் பாலூட்டும்போது தாலாட்டுப்பாடல்கள் பாடுவார்கள். பாடலைக்கேட்டு பாலுண்டு பிள்ளைகள் தூங்கிவிடும். யூதப் பெண்கள் தங்கள் குழந்தைகளுக்குப் பாலூட்டும்பொழுது நியாயப்பிரமாணத்தைப் பாடலாகப்பாடுவார்கள். கிறிஸ்தவத் தாய்மார் கிறிஸ்தவப் பாடல்களைப் பாடி குழந்தைகளை வளர்க்க வேண்டும்.

சிறியர் ஒருவருக்கு இடறல் உண்டாக்குபவரின் கழுத்தில் இயந்திரத்தின் கல்லைக்கட்டி ஆழ்கடலில் அமிழ்த்த வேண்டும் (மாற். 9:42). கிறிஸ்துவைக் கற்றுக்கொடுக்கும் திருமறைப்பள்ளி ஆசிரியர் பிள்ளைகளைக் கோபப்படுத்தாமல் கர்த்தருக்கு ஏற்ற சிட்சையிலும் போதனையிலும் வளர்க்க வேண்டும் (எபே. 6:4). இவர்கள் பிள்ளைகளுக்கு முன்மாதிரியாய் இருக்க வேண்டும். அப்போது திருச்சபையில் எதிர்காலத்துக்கு நல்ல தலைமைத்துவம் உருவாகும். திருமறையைக் கற்றுக்கொள்ளுங்கள் அதில் விலை உயர்ந்த முத்துக்களைக் காண்பீர்கள்.

யோசேப்பு யாக்கோபின் 11-வது மகன் (தொ.நூ. 37:18) சகோதரர் இவர்மேல் எரிச்சல், கோபம், கொலைவெளி கொண்டனர். அவரை விலைக்கு விற்றனர். இடறல் உண்டாக்கினர். ஒருநாள் அவன் முன்பு இதே சகோதரர்கள் உணவுக்காக மண்டியிட்டு நின்றனர். அவர் எல்லாவற்றையும் மன்னித்து மறந்து உணவு கொடுத்து ஆதரித்தார் (தொ.நூ. 37:18-35). இன்று

இடறல் உண்டாக்கினால் பின்பு அவர்முன் தலைகுனிந்து நிற்க வேண்டியது வரும். ஆகவே இடறல் உண்டாக்காமல் திருமறையைக் கற்றுக்கொடுத்து பிள்ளையானவனை நடக்க வேண்டிய வழியில் நடத்துவோம்.

**2. இடறி வீழ்ந்திடாதீர்கள் :** (தொ.நூ. 39:12)

இன்று குழந்தைகளுக்கு கொடுக்கவேண்டிய முக்கியமான போதனை இடறி வீழ்ந்திடாதிருங்கள் என்பதாகும். நகரிய பாரம்பரியம் தொலைக்காட்சிகள், செய்தித்தாள்கள் திருமறையை தூரத்தில் தள்ளிவிட்டு, உலக நடப்புகளும் நாகரீக கவர்ச்சிகளிலும் குறிப்பாக இளைஞர்கள் இழுத்துக்கொள்ளப்பட்டு இடறல் செய்கின்றது. இதினால் அனேக இளைஞர்கள் இடறிவிழுந்து விட்டனர். இதிலிருந்து தப்பித்துக்கொள்ள, பிள்ளைகள் பெற்றோருக்கு கீழ்படிய வேண்டும் (எபே. 6:1) தகப்பனையும் தாயையும் கனம்பண்ண (யாத். 20:12) இது கர்த்தருக்குப்பிரியமானதும் ஆயுத நாட்களைப் பெருகச் செய்வதுமாயிருக்கின்றது.

ஏலி என்ற ஆசாரியன் தன் பிள்ளைகளுக்கு எவ்வளவோ உபதேசம் கொடுத்தும் பிள்ளைகள் கீழ்படியவில்லை. இதனால் தேவகோபம் வந்தது அழிவை சந்தித்தனர். ஒப்பினி பினேகாஸ் துன்மார்க்கமாய் நடந்தனர் (1சாமு. 2:23-25) கர்த்தருக்கு விரோதமாய் பாவம் செய்து இடறினார்கள். கர்த்தர் அவர்களை சங்கரிக்கச் சித்தமானார். ஒப்பினி என்றார் சண்டைககாரன். இவர்களைக் கவர்ந்தது இச்சை, பேராசை இதனால் குடும்பம் முழுவதும் அழிந்தது. பலமுறை சாமுவேல் எச்சரித்தும் அதனை அசட்டை செய்தனர். பெலிஸ்தரோடு நடந்த யுத்தத்தில் கர்த்தருடைய பெட்டி பிடிக்கப்பட்டு குடும்பம் முழுவதும் அழிந்தது. (1சாமு. 4:10-18).

சிம்சோன் என்னும் மாபெரும் பலசாலி இருந்தான். இவன் சூரியனைப் போன்றவன். இஸ்ரவேலின் பெயர் பெற்ற நியாயாதிபதி. இஸ்ரவேலை 20 ஆண்டுகள் நியாயம் விசாரித்தவர். பிரதிஸ்டைக்கு உண்மையாய் இருந்தவர். பெரிய தைரியசாலி, தன்னை இச்சைக்கு இடம் கொடுத்தான். இடறி விழுந்தான் செத்துப்போனான் (நியா. 16:18-24).

யோசேப்புக்கு மாபெரும் இடறல் உண்டாக்கினாள் போத்திப்பாரின் மனைவி. ஆனால் அவன் தன்னைக் காத்துக்கொண்டான். தன் ஆடையைக் கூட விட்டுவிட்டு தகாத இடத்திலிருந்து தப்பித்து ஓடினான் (தொ.நூ. 39:13) சந்தர்ப்பம், சூழ்நிலை, மனிதனை தகாத இடத்துக்கு அழைத்துச் செல்லலாம். ஆனால் இடறிவிழாது நம்மைக் காப்பது நம் கடமை.

### 3. *இறைப்பற்றுடன் வாழ்ந்திருங்கள் :* (தொ.நூ. 39:2)

இன்றைய குழந்தைகள் நாளையத் தலைவர்கள்.திர்காலத்திருச்சபை. புது சமுதாயத்தைப் படைக்கின்றவர்கள், திருமறைப்பள்ளி புதுவாழ்வு குறித்து கற்பிக்கும் கல்விக்கூடம் இயேசுவிடம் வந்த குழந்தைகளைத் தடுத்த சீடர்களுக்கு தடுக்காதீர்கள். அவர்களை என்னிடம் வர அனுமதியுங்கள் எனக்கூறி அவர்களை அணைத்துக்கொண்டு ஆசீர்வதித்தார். கர்த்தர் யோசேப்போடே இருந்தார். இந்த யோசேப்புக்கு தன் சொந்த சகோதரர்களால் இடறல் உண்டானது. ஆனால் ஒரு நாள் இவர்கள் யோசேப்பின் முன்பாக நிறுத்தப்பட்டனர். யோசேப்பின் உள்ளம் உடைந்தது. இலவசமாக உணவு கொடுத்து சகோதரர்களையும் தந்தையையும் சிறப்புடன் பராமரித்தான். அவனில் இருந்த இறைப்பற்று சசோதரர்களின் கொடிய செயலை மன்னிக்க வைத்தது. தன் சகோதரருக்கு தன்னை வெளிப்படுத்தியபோது சொன்னார். ஜீவரட்சணை செய்வதற்கு தேவன் என்னை உங்களுக்கு முன்னே அனுப்பினார். (தொ.நூ. 45:5)

சகோதரர்கள் கலங்கினர், குற்ற உணர்வுடன் நின்றுகொண்டிருந்தனர். ஆனால் யோசேப்பு சகோதரர்களைத் தேற்றுகின்றார். இது தேவனுடைய செயல் உங்களுடையது அல்ல என்று கூறி தன் பற்றுறுதியை வெளியே கொண்டு வருகின்றார். இறைப்பற்றாளன் யோசேப்பு இறை இரகசியங்களை தகப்பனுக்கும் சகோதரருக்கும்அறிவித்தான். தேவன் அவனோடிருந்தபடியால் எகிப்து தேசம் அனைத்துக்கும் அதிபதி ஆனார். எகிப்து தேசம் பெரும் செழிப்பைக் கண்டது. சொப்பனத்தையும் அதன் அர்த்தத்தையும் விளக்கிச் சொல்ல வைத்தது. அப்போது "நான் அல்ல தேவன் பார்வோனுக்கு மங்களமான உத்தரவு அருளிச்செய்வார்" (தொ.நூ. 41:16) இறைப்பற்றுடன் வாழ்ந்த யோசேப்பைப் பார்த்து பார்வோன் "தேவ ஆசியைப்பெற்ற இந்த மனுஷனைப்போல வேறொருவள் உண்டோ" ......... உன்னைப்போல ஞானமும் விவேகமும் உள்ள வேறொருவரும் இல்லை. "நீ அரண்மனைக்கு அதிகாரியாய் இருப்பாய்" (தொ.நூ. 41:38-40) என்று கூறினார்.

அருள்திரு. **S. ஐசாயா**

*விழாக்கால அருளுரை*

# பக்தி முயற்சிசங்க ஆண்டுவிழா

நீதி. 31 : 1-8

*"நீ எதைச் செய்தாலும் ஆண்டவரை மனதில் வைத்துச் செய்; அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செம்மையாக்குவார்." நீதி. 3:6*

இளையோர் வேகமான இயக்கமும், அதிகமான செயல் திட்டங்களும் கொண்டோர். காட்டாற்று வெள்ளம் போல் தடைகள் கண்டு தளராது பயணிப்பவர்கள். ஆனால், அவர்களது வேகம் விவேகமாய் கட்டுப்படுத்தப்படாவிடில் விபரீதங்கள் விளையலாம். கட்டுப்பாடுகளின்றி கரைபுரண்டோடும் காட்டாற்று வெள்ளம் அணையினால் தடுக்கப்பட்டு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டால் மிகுதியான பலன் உண்டு; விவசாயம் செழிக்கும், மின் உற்பத்தி பெருகி தொழில்கள் வளம்பெறும். எனவே, அவர்களை நெறிப்படுத்தி முறைப்படுத்தி செயல்படத் தூண்டுவதில் பக்தி முயற்சி சங்கத்தின் பங்களிப்பு மிகச் சிறப்பானது. திருச்சபைக்கும், சமூகத்திற்கும் பயனுள்ளவர்களாய் வடிவமைக்கப்பட இளையோர் அனைவரும் பக்திமுயற்சி சங்கத்தில் அங்கத்துவம் வகிக்க வேண்டும். பக்திமுயற்சி சங்க ஆண்டுவிழாவினை கொண்டாடும் இந்நேரம் இறைவனின் எதிர்நோக்கினை திருவார்த்தைகள் வழியாய் அறிவோம்.

### *1. இயக்கமிழக்கின்ற இளையோர் :*

நீதி. 3 : 5b உன் சொந்த அறிவாற்றலைச் சார்ந்து நில்லாதே.

அறிவியல் வளர்ச்சி உச்சத்திற்கு சென்று கொண்டிருக்கிறது. இளையோரின் உலகியல் அறிவும் வளர்ச்சிப் பாதையில் முன்னேறுகிறது. திருத்தியமைக்கப்டட்ட பாடத்திட்டங்களும், செய்முறை பயிற்சிகளும் புதிய அறிவியல் சிந்தனைகளை துளிர்க்க வைக்கிறது. இவையெல்லாம் அவசியமானவைகளாயினும் வாழ்வின் நன்மைக்காய் செயல்பட வேண்டிய கண்டுபிடிப்புகள், வாழ்வில் வழிதவற ஏதுவாகிவிட்டதோ எனும் அச்சம் எழுகின்றது. உதாரணமாக, அலைபேசியும் இணையதள பயன்படும் மிக அத்தியாவசியமாகிவிட்டது. எந்நேரமும் அலைபேசியுடனும், இணையத்துடனும் வீணாக பொழுதுபோக்கும் இளையோர் ஏராளம். அதனூடாய் பரிமாறப்படும் தகவல்களால் எழும் பிரச்சனைகளும் தாராளம். அலைபேசியின் பயன்பாடு செவித்திறனை பாதிக்கும், மனத்தடுமாற்றத்தை ஏற்படுத்தும் எனவும், இன்னும் பல

இடையூறுகளும் எழும் எனவும் ஆராய்சியாளர்களும், சமூக ஆர்வலர்களும் எச்சரிக்கின்றனர். சுய அறிவையும், ஆற்றலையும் சார்ந்திருத்தல் மடமை என திருவாக்கு எச்சரிக்கின்றது.

திபா. 11:9, ஏசா. 5:11, நீதி. 23:29-32, ஓசே. 4:11 ஆகிய விவிலிய பகுதிகள் போதையினால் ஏற்படும் தீமைகளை பட்டியலிடுகின்றன. தற்போது, இளையோர் கல்விக்காகவும், வேலைக்காகவும் வெளியூர்களுக்கும், வெளிநாடுகளுக்கும் செல்லும் போது கண்காணிப்போர் இல்லையென்ற எண்ணத்தில் போதை பழக்கங்களுக்கு உட்படும் நிலைகள் ஏற்படுகிறது. ஒரு கட்டத்தில் 'விளையாட்டு வினையாயிற்று' என்றாற்போல் உடல்நலமும், மன அமைதியும் கெட்டு வாழ்வு கேள்விக் குறியாகிவிடுகிறது. எச்சுழலிலும் இறைநெறியில் வாழ்ந்து தீமைக்கு விலக, இளைஞர் தானியேல் நமக்கு சான்றாகிறார்.

ஏசா. 45:10 ஏன் என்னைப் பெற்றெடுத்தீர்கள் என தாய் தந்தையரிடம் கேள்வி எழுப்புவோருக்கு தீங்கு வருமென எச்சரிப்பு விடுக்கப்படுகிறது.

இத்தகு கேள்வி எழுப்பும் பிள்ளைகள் மனம் வருந்தி மன்னிப்பு கேட்க வேண்டும். உங்களுக்கு என்ன தெரியுமென, அறிவொளியூட்டி நல்வழி காட்டும் பெற்றோரிடம் கேள்வி எழுப்பி தடுமாறும் இளையோர் தங்களை திருத்திக்கொள்ள வேண்டும். பிள்ளைகளின் நல்வாழ்விற்காய் தங்களையே தியாகம் செய்யும் பெற்றோரிடம் பேசிக் கொள்ளாமல் தலைமுறை இடைவெளி ஏற்படுத்தும் பிள்ளைகளே சீர்பொருந்துங்கள் (நீதி. 1:8,9).

படிப்பில் கரிசனையின்றியிருந்த மகனிடம் தந்தை கூறினார் "படி மகனே" என்று. மகன் திருப்பி கேட்டான் என்ன கிடைக்கும்? தந்தையின் பதில்-வெற்றி கிடைக்கும். வெற்றி கிடைத்து என்ன பயன்?-இது மகன். தந்தை கூறினார், நல்ல வேலை கிடைக்கும். மகன்-ஆகா! அப்படியா, வேலை கிடைத்தால் எனக்கென்ன? தந்தையின் பதில்-சாய்வு நாற்காலியில் ஒய்யாரமாய் உட்கார்ந்து சாப்பிடலாம். மகன் கேட்டான், என்னப்பா கூத்து, நீங்கள் கடைசியாக சொன்னதைத்தானே நான் செய்து கொண்டிருக்கிறேன். இளையோரே, இறைவனின் அருட்கொடையே பெற்றோர். அவர் தம் வாக்கிற்கு செவிமடுப்போம், இடறாது நடப்போம்.

## 2. இனிதாகும் இறைவழி :

நீதி. 3:5 ......அவர் உன் பாதைகளைச் செம்மையாக்குவார்.

நம் வாழ்வில் வழிகாட்டுதல்கள் அவசியமானவை. உயர்கல்விக்கு வழிகாட்டுவோர், பணி வாய்ப்புகளுக்கு வழி காட்டுவோர், பயணத்துக்கு வழி காட்டுவோர் என பலரை நாம் சந்திக்கிறோம், வழிகாட்டுதல்களை பெறுகின்றோம். கடவுள் நம் வாழ்வில் எப்போதும் எல்லாவற்றிலும் வழி காட்டுகின்றார். நம் வழிகளை சீர்படுத்துபவர் அவரே. தி.பா. 32:8-இல் அறிவு புகட்டி, வழி காட்டும் இறைவனின் வாக்குறுதி வெளிப்படுகிறது. நீதி. 14:12 நாம் சுயமாக நல்வழி என தீர்மானிப்பது அழிவுக்கு நடத்துபவையாக இருக்கலாம். எனவே இறைவழி காட்டுதல் சார்ந்து செயல்படுவதே நலம் பயக்கும். இயேசு கிறிஸ்து இளைஞராய் வாழ்ந்து நமக்கு முன்மாதிரியுள்ளார். யோவா. 14:6 வழியும், உண்மையும், வாழ்வும் நானே என குறிப்பிடுகிறார். எனவே அவரின்றி இனிய வழி வேறில்லை என்பது தெளிவு.

மத். 7:13,14 இடுக்கமான வாசல் வழி பயணிக்க இயேசுநாதர் அறிவுறுத்துகின்றார். அழிவுக்கு செல்லும் அகன்ற வழியை நாட வேண்டாம் என எச்சரிக்கின்றார். மனதை மயக்கும் தீய செயல்கள் அகன்ற வழிக்கு நம்மை நடத்தும் என்பதை தெளிவாக புரிந்து கொள்வோம். குறுகலான பாதை வாழ்வுக்கு நடத்தும். அதை கண்டுபிடிப்பதும், அதில் பயணிப்பதும் கடினம். கடிவாளம் கட்டப்பட்ட குதிரையின் பார்வை தெளிவாய் இலக்கு நோக்கியதாய் உள்ளது. எனவே அதன் பயணமும் சீராய் அமைகிறது. தி.பா. 119 : 105 என் காலடிக்கு உம் வாக்கே விளக்கு! என் பாதைக்கு ஒளியும் அதுவே! திருவாக்கே பாதைக்கு ஒளி என்பது தாவீது மன்னரின் தெளிவான நம்பிக்கை. அதுவே இனிய வழிகாட்டியாய் தடுமாற்றமின்றி நம்மை நடத்தும். இனிதாகும் இறைவழி நாடி தினமும் அவ்வழி பயணிப்போம்.

## 3. இதமான புதுவாழ்வு :

நீதி. 3:8 அப்பொழுது உன் உடல், நலம் பெறும்; உன் எலும்புகள் உரம் பெறும்.

உலர்ந்த எலும்புகள், வாழ்விழந்த நிலைக்கு அடையாளமாக விவிலியத்தில் கூறப்படுகிறது. வலுப்பெற்ற எலும்புகளும், உடல் நலமும் புதுவாழ்வை குறிப்பிடுகிறது. ஆண்டவருக்கு அஞ்சி, தீமையை விலக்கி இறைவழியில் நடப்போர் புதுவாழ்வு பெறுவர் (மலா. 4 : 2). ஆண்டவருக்கு அஞ்சி நடப்போர் மேல் நீதியின் கதிரவன் எழும்; கொழுத்த கன்றுகளைப்

போன்ற ஆசி நிறைந்த வாழ்வு துளிர்க்கும் என காண்கிறோம். செழுமையான வாழ்வுக்கு குறுக்கு வழிகளே சரியென்பது உலக நடைமுறைகள் கற்றுத்தரும் பாடம். ஆனால் ஆண்டவருக்கு அஞ்சி, அநீதி தவிர்த்து அறவழியாம் அவர்வழி நாடுவோரே நன்மை பெறுவர் என்பது திண்ணம்.

எரே. 17:5-8 வசனங்களில் மனிதரில் நம்பிக்கை கொள்வோர் பாலை நிலத்து புதர்ச்செடி போலும், ஆண்டவரில் நம்பிக்கை வைப்போர் கால்வாய் அருகில் நடப்பட்ட மரம் போல் என்றும் வளம் பெறுவர் எனும் செய்தியை காண்கிறோம். நீதி. 19:6......ஆண்டவருடைய வழிகளைக் கவனியாது நடப்பவர் அழிந்து போவர் என சாலமோன் எச்சரிக்கிறார். அவரது வழிகளில் நடப்போர் புதுவாழ்விற்குள் புகுவர். நீதி. 19:23 ஆண்டவருக்கு அஞ்சி நடந்தால் மனநிறைவுள்ள, நீடித்த ஆயுள் கிட்டும் என அறிகிறோம். இயேசுநாதர், 'நானே வாழ்வு' என வாக்குரைத்துள்ளார். அவரில் இணைவோர் பழமை வாழ்வை விட்டு புது வாழ்வினை அடைவர்.

திருவாக்கு தெளிவாய் கூறும் செய்தி, இறையுறவும் வழிகாட்டுதலுமின்றி வாழ்வை தெளிவாக புரிந்து கொள்ளவோ முழுமையாக வாழவோ இயலாது. வாழ்வை நாம் சுயமாய் கையாளவும், எதிர்கொள்ளவும் முயலுவதன் முடிவு தோல்வியே. இறைவனின் இனிய வழிகாட்டுதல் இடறிய நிலையினின்று நம்மை மீட்டு இதமான புது வாழ்வுக்கு நடத்தும். நீதி. 17 : 25 மதிகெட்ட மகனால் தந்தைக்கு கவலை; பெற்ற தாய்க்கு துயரம். மேலும் வேண்டாம் இந்நிலை. நம் நல்வாழ்வால் பெற்றோர் மகிழட்டும், மற்றுள்ளோர் பயன்பெறட்டும். இறையன்பர்களான இளையோரே, மீண்டும் உங்களை கிறிஸ்துவுக்கும், திருச்சபைக்கும் அர்ப்பணித்து உங்கள் வாழ்வில் இறைகுணம் நிறைந்து நற்செயல்களால் மணம் பரப்புங்கள். இறையருள் உங்களில் தங்கி வழிநடத்துவதாக.

அருள்திரு. **R. ஹென்ஸ்லின் நேசராஜ்**

*விழாக்கால அருளுரை*

## பெண்கள் சங்க ஆண்டுவிழா

யாத். 15:1-21 அப். 4:32-37
லூக். 1:46-55

*"ஆண்டவரை எனது உள்ளம் போற்றிப் பெருமைப்படுத்துகின்றது. என் மீட்பராம் கடவுளை நினைத்து எனது மனம் பேருவகை கொள்கின்றது." லூக்கா 1:47*

உலக மீட்பராகிய இயேசு கிறிஸ்துவின் பிறப்பிற்கு கருவியாக இறைவன் மரியாளைத் தெரிந்து கொண்டார். அதனடிப்படையில் இயேசுவின் பிறப்பின் செய்தி தூதன் வழியாக மரியாளுக்கு அறிவிக்கப்பட்டது. (லூக் 1:26-38) இச்செய்தியை கேட்ட எலிசபெத் மரியாளை வாழ்த்தினாள். (லூக் 1: 39-45) எலிசபெத்தின் வாழ்த்துதலைப் பெற்ற மரியாள் இறைவனைப் புகழ்ந்து பாடினாள் (லூக். 1:46-55). இப்பாடல் இயேசுவின் சிறப்புத் தன்மையை வெளிப்படுத்துகிறது.

மரியாள் மாபெரும் ஆசீர்வாதத்தைப் பெற்றபோது இறைவனைப் புகழ்ந்து பாடினார்கள் (லூக். 1:46-55).

### *மனநிறைவுடன் பாடினார்கள் :*

மனுக்குலத்தை மீட்கும்படியாக இயேசு உலகில் பிறக்க, இறைவன் மரியாளை தெரிந்து கொண்டபோது, இதோ நான் ஆண்டவருக்கு அடிமை உம்முடைய வார்த்தையின்படி எனக்கு ஆகக்கடவது என்று தன்னை முழுமையாக அர்ப்பணித்து, அத்திருப்பணியை மனநிறைவுடன் ஏற்றுக் கொண்டார்கள் (லூக். 1:38).

### *மகிமை செலுத்திப் பாடினார்கள் :* லூக். 1:44-46

இறையடியவர்களாகிய நாமும் இறைவனின் கரத்தில் இருந்து பெற்றுக் கொள்ளக் கூடிய ஒவ்வொரு ஆசிர்வாதங்களுக்காக, நன்மைகளுக்காக இறைவனை மகிமைப்படுத்த வேண்டும்.

தேவதூதன் இயேசுவின் பிறப்பைக் குறித்த நற்செய்தினை மேய்ப்பர்களுக்கு அறிவித்த போது, மேய்ப்பர்கள் சென்று இயேசு பாலனை பணிந்து கொண்டு தேவனை மகிமைப்படுத்தினார்கள் (லூக். 2:20).

தொழுநோயாளியாக இருந்த சமாரியன் விடுதலை பெற்றபோது, தான் ஆரோக்கியமானதைக் கண்டு திரும்பி வந்து தேவனை மகிமைப்படுத்தினான் (லூக். 17:15). கர்த்தர் ஆற்றல் நிறைந்தவர், அவர் துயவர், அவர் இரக்கம் உள்ளவர் என்று இறைவனைப் மகிமைப்படுத்தி

மரியாள் பாடுவதைபோல நாமும் இறைவனின் கரங்களிலிருந்து பெற்றுக் கொண்ட அருட் கொடைகளை எண்ணி மகிமை செலுத்துவோம்.

***மறுமலர்ச்சியோடு பாடினாள் :*** லூக். 1:51-53

இருதய சிந்தையில் அகந்தையுள்ளவர்களை சிதறடித்தார் (உ.ம்) நேபுகாத்நேச்சார் (தானி. 4:29-33). பலவான்களை ஆசனங்களில் இருந்து தள்ளி, தாழ்மையானவர்களை உயர்த்தினார் (உ.ம்) பெல்ஷாத்சார் (தானி. 5:1-30).

சவுல் ராஜா கடளுக்கு விரோதமாகத் தன்னை உயர்த்தினபோது அவர் ஆசனங்களில் இருந்து தள்ளப்பட்டார். ஆனால் தாழ்மையாக காணப்பட்ட தாவீதோ அரசனாக உயர்த்தப்பட்டார்.

பசியுள்ளவர்களை நன்மைகளினால் நிரப்பி, ஐசுவரியமுள்ளவர்களை வெறுமையாய் அனுப்பிவிட்டார் (லூக். 1:53). ஆதி திருச்சபை மக்கள் தங்களுக்கு உரியவற்றைக் கொண்டு வந்து அப்போஸ்தவருடைய பாதத்தில் கொடுக்கப்பட்டது. அவர்கள் அனைத்தையும் பொதுவாக அனுபவித்தார்கள்

(அப். 4:32,34,35).

எ.கா. (செல்வந்தர், லாசரு (லூக். 16:19-26) பகிர்ந்து கொடுப்பதன் மூலம் இறையாட்சிக்கு நம்மை பங்காளிகளாக்க முடியும். (எ.கா.) மரியாள் மனநிறைவுடன் மகிழச்சியாக கர்த்தருக்கு மகிமையின் பாடலைப் பாடியது போல நாமும் இறைவனைப் பாடி மகிமைப்படுத்துவோம்.

கடலில் பயணம் செய்த கப்பல் ஒன்று புயலில் சிக்கியது. மாலுமிப் பயணிகளைப் பார்த்து நாம் யாவரும் மரணத்துக்கு நேராக சென்று கொண்டிருக்கிறோம். இப்புயல் அமர்ந்து நாம் காப்பாற்றப்படவேண்டுமானால் உங்கள் கடவுளை நோக்கி விண்ணப்பம் பண்ணுங்கள் என்றார். எல்லாரும் இறைவனிடம் வேண்டினர். ஆனால் அங்கிருந்த ஒரு பாட்டி மட்டும் மகிழ்ச்சியாக பாடிக்கொண்டிருந்தார்கள். மாலுமி பாட்டியிடம் கோபத்துடன் எல்லாரும் தங்கள் கடவுளிடம் வேண்டுதல் செய்யும்போது நீங்கள் மட்டும் பாடிக்கொண்டிருக்கிறீர்கள் என்ன என்று கேட்டார். அதற்கு பாட்டி இக்கப்பல் கவிழ்ந்து நான் மரித்துப் போனால் இறந்த போன என் இளைய மகனை விண்ணகத்தில் பார்ப்பேன். கப்பல் கரை சேர்ந்தால் மூத்த மகனை பார்ப்பேன் என்றார்கள். எச்சூழலிலும் பாடல்களை பாடி இறைவனை மகிமைப்படுத்த வேண்டும்.

1) இஸ்ராயேல் மக்களும் தங்களது வெற்றியினை எண்ணி களிப்படைந்து, மகிழ்வுடனும் மனநிறைவுடலும் பாடி ஆர்ப்பரித்தனர் (வி 15:11)

இறை மக்களாகிய நாமும் எந்நிலையிலும் தளர்ந்திடாமல் போதுமென்ற நல்மனதோடு கூடிய நிறைவோடு இறையவரை மாட்சிபடுத்துவோம்.

எலிசபெத்தின் வாழ்த்துதலை கேட்ட மரியாள் பேருவுவகையில் இறைவனை உளம் நிறைந்து மகிமை செலுத்தி பாடினாள்.

நம்பிக்கை இழந்த சமூகத்தினில் நம்பிக்கையூட்டுகின்றவராகவும் மக்களின் வாழ்வில் மீட்பினை நிலைப்படுத்துகிறவராகவும் அதற்காக தன்னையே பலியாக தருகிறவராகவும் இயேசு வெளிப்படுகிறார் என்பதை உணர்ந்த மரியாள் ஆண்டவரை எனது உள்ளம் போற்றிப் பெருமைப்படுத்துகின்றது. என் மீட்பராம் கடவுளை நினைத்து எனது மனம் பேருவுகை கொள்கின்றது என்ற மகிழ்வுடன் பாடுகின்றாள். மரியாளின் தியாகப் பார்வைகளை நினைந்து நாமும் கவியரசர் தாவிதின் அனுபவத்தில் இணைந்து பரமனின் பேரருளை உணர்ந்து மன மகிழவோடு எல்லா நிலையிலும் பாடுவோம் (தி.பா. 92:4-103).

அருள்திருமதி. **N. பேபி கமலா ஜஸ்டஸ்**

*விழாக்கால அருளுரை*

# பாடகர் குழு ஆண்டுவிழா

தி.பா. 98 லூக். 1:46-55

*"ஆண்டவருக்குப் புதியதொரு பாடல் பாடுங்கள் ஏனெனில் அவர் வியக்கத்தகு செயல்கள் புரிந்துள்ளார்." தி.பா.98:1*

மகிழ்வான அனுபவங்கள் கிறிஸ்தவ நம்பிக்கையில் அவற்றை வெளிப்படுத்தும் வகையில் அமைந்தது தான் பாடல்கள். அவ்வாறே துதிப்பாடல்களும் அருட்பாடல்களும் தொழுகையில் சிறப்பிடம் பெறுகிறது. மட்டுமல்ல தொழுகைமன்ற முறையின்படி திருப்பாடல்கள் இசையுடன் பாடப்பட்டது. மேலும் கிறிஸ்தவக் கருத்துக்களைக் கொண்ட புதுப் பாட்டுக்களும் இயற்றப்பட்டு தொடக்ககாலத்திலேயே தொழுகையில் பயன்படுத்தப்படலாயின. அத்தகைய பாடல் ஒன்றின் பகுதியை எபே. 5:14 இல் காணலாம். பாடல்கள் இறை வேண்டலோடு நெருங்கிய தொடர்புடையவையாதலால் பவுல் சிறையிருப்பிலிருந்த போது தாமே இறைவேண்டலுடன் கடவுளைத் துதித்து பாடினதுமன்றி (அப்.16:25) கிறிஸ்தவர்களும் தங்கள் வாழ்க்கையில் பாடல்களைப் பாடி ஆண்டவரை வழிபடும்படி வலியுறுத்துகிறார் (எபே. 5 :19; கொலோ. 3:16). திருமறையில் மக்கள் மகிழ்ச்சி ததும்பும் தருணங்களில் இறைவனைப்பாடி மாட்சிபடுத்தினதை பல இடங்களில் காண இயலும். எகிப்தின் அடிமைத்தன விடுதலை மகிழ்வை வெளிப்படுத்தும் மரியாளின் பாடல், குழந்தை இயேசுவை கரங்களில் ஏந்தி பாடின சிமியோன் இரட்சண்ணிய பாடல் இயேசு தன்னிடம் பிறக்கப் போகின்றார் என்பதை இறைதூதர் வழி அறிந்த மரியாள் பாடின புரட்சிப்பாடல் போன்றவை இவைகளில் சில. நாம் தொழுகையில் பாடுகின்ற பாடல்கள் எப்படி அமைதல் வேண்டும் என்பதை இந்த பாடகர் குழு ஆண்டு விழாவில் சிந்திப்பது சால சிறந்தது.

## *1. உணர்வுகளின் அனுபவமாய் இருத்தல் வேண்டும்*

பாடல்கள் வெறும் வார்த்தைகளல்ல. உள்ளத்தின் அடித்தளத்திலிருந்து எழும் உணர்வுகள். உணர்வுபூர்வமாய் பாடுகின்ற பாடல்கள் மக்களை உணர்வடைய தூண்டுகின்றதாய் அமைகின்றது. வானதூதரின் வாழ்த்துச் செய்தியைக் கேட்ட மரியாள் இறைமைந்தன் தன் வயிற்றில் பிறக்கவிருக்கின்றார் என்றவுடனே உளம் பூரித்துப் பொங்கி "ஆண்டவரே எனது உள்ளம் போற்றிப் பெருமைப்படுத்துகிறது. என் மீட்பராம் கடவுளை நினைத்து எனது மனம் பேருவகை கொள்கிறது" (லூக்கா 1:47) என உணர்வு பூர்வமாய் பாடுகின்றாள். மனதின் உணர்வுகளை ஆராய்ந்தறியும் கடவுள் உள்ளத்தின் அடித்தளத்திலிருந்து கிளர்ந்தெழும்

பாடல்களை ஏற்றுக் கொள்கின்றார். 1912 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 14 ம் நாள் டைட்டானிக் என்ற மிகப்பெரிதும் பிரம்மாண்டமான சொகுசு கப்பல் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட பயணிகளைச் சுமந்து கொண்டு இங்கிலாந்திலுள்ள சௌதாம்ப்டன் துறை முகத்திலிருந்து அமெரிக்காச் செல்லத் தயாராகி, கெம்பீரமாக நின்றது. அக்கப்பலை வடிவமைத்த பொறியியல் வல்லுனர்கள் "இக்கப்பல் கடலில் மூழ்குவது சாத்தியமேயில்லை" என்று பெருமையுடன் கூறினர். ஆனால் அது தன் முதற்பயணத்திலே அட்லாண்டிக் பெருங்கடலில் பனிக்கட்டிகளில் மோதி மூழ்க ஆரம்பித்தது. உயிர்காக்கும் கருவிகள் போதுமான அளவு கப்பலில் இல்லாததால் திகிலோடு மரணத்தை எதிர்நோக்கிய 2000 க்கும் மேற்பட்ட பயணிகளின் மன அமைதியைக் காக்க கப்பலின் இசைக்குழு "உம்மண்டை தேவனே நான் சேரட்டும்" (Near my God to thee) என்ற பாடலை இசைக்க ஆரம்பித்தது. அனைவரும் உள்ளத்தின் ஆழத்திலிருந்து உணர்ச்சி பொங்க இப்பாடலைப் பாடினார்கள் நாமும் உணர்வுபூர்வமாய் பாடுவோம். நம் பாடல் மூலம் கொந்தளிக்கும் இதயங்கள் ஆறுதலையும் அமைதியையும் காணட்டும்.

### 3. *உன்னதரை மாட்சிப்படுத்தல் வேண்டும்* லூக். 1:46

"ஆண்டவரை எனதுள்ளம் போற்றிப் பெருமைப்படுத்துகிறது. "

மரியாள் தன் பாடலில் கடவுளை மாத்திரம் மாட்சிமைப் படுத்துகின்ற நிலை காணப்படுகின்றது. நமது பாடல்கள் வழி கடவுள் ஒருவரே மகிமைப்படவேண்டும். கடவுள் ஒருவரே மகிமைக்கும் மாட்சிமைக்கும் உரியவர். எப்போது மனிதன் தான் ஒரு மனிதன் என்ற நிலையை மறந்து, கடவுளின் மாட்சியை தனதாக்கி கொள்கிறானோ அப்போதே அவன் வீழ்ச்சிக்கு முதற்படியில் காலடியை வைத்து விடுகிறான். நேபுகாத்நேச்சர் பாபிலோனிய வல்லரசின் தலைசிறந்த பேரரசர், ஒருநாள் தன் அரண்மனையின் மேல்தளத்தில் உலாவிக் கொண்டிருந்த போது என்னுடைய மகிமை பிரதாபத்திற்கென்று நான் கட்டின மகா பாபிலோன் அல்லவா (தானி. 4:30) எனது மாமேதையோடு கூறினார். உடனே மனிதனை மிருகங்களிலிருந்து பிரித்துக்காட்டும் பகுத்தறிவு அவரிடத்திலிருந்து அகன்றுவிட்டது மிருகம் என்ற நிலைக்கு தள்ளப்பட்டார். 19-ம் சங்கீதத்தில் தாவீது அரசன் பாடும்போது எல்லா படைப்புக்களும் கடவுளின் மாட்சியை புகழ்ந்து போற்றுவதாக குறிப்பிடுகின்றார்.

இறைவன் மண்பாண்டங்களாகிய நமக்குள் விலையேறப்பெற்ற பாடக்கூடிய வரங்களை, பொக்கிஷங்களாய் வைத்திருக்கின்றார். அந்த இறைவனை நமது பாடல்கள் மாட்சிமைப்படுத்தட்டும்.

## 4. உன்னதரின் விருப்பத்திற்கு இணக்கம் தருதல் வேண்டும் லூக். 1:38

வானதூதரின் வாழ்த்து செய்தியை கேட்ட மரியாள் நான் ஆண்டவரின் அடிமை உம்சொற்படியே எனக்கு நிகழட்டும் என தன்னை அற்பணிக்கின்றார். நம் பாடல்கள் இறைவனின் திருவுள சித்தத்திற்கு நம்மை அற்பணிக்கின்றதாய் அமைதல் வேண்டும். அனேகர் பாடல் வாயிலாய் இறைவனை வசப்படுத்தி விடலாம் என நினைக்கின்றார். கடவுளின் மனதை வசியம் செய்து சுய தேவைகளை நிறைவேற்றிவிடலாம் என பகல் கனவு காண்கின்றனர். இது தவறான சிந்தனை. கடவுள் சுய விருப்பு உடையவர். அவர் செய்ய நினைத்தது தடைபடாது என்பது திருமறை நமக்கு சுட்டிக்காட்டும் உண்மை. கடவுளை ஆண்டவர் என்று நம்புவோர் என்னை நீர் ஆளும் என அவரிடம் தங்களை முழுமையாக அற்பணிப்பார்கள். அருள் திரு. வே.சந்தியாகு பாடின கீர். 378(266) தந்தேன் என்னை இயேசுவே என்ற பாடல் நம்மை முழுமையாய் அற்பணிக்க தூண்டுகின்றது. உலக பிரசித்திப்பெற்ற கவிஞர் ஒருவர் ஒருபட்டணம் வழியாக நடந்து சென்று கொண்டிருந்தார். சிறுவன் ஒருவன் அவருடைய காலைப் பற்றிப்பிடித்தான். அவகரத்தில் ஷீ பாலீஷ் மற்றும் பிரஷ் இருந்தது. தன்னுடைய ஷீவை அவன் பாலீஷ் செய்வதற்கு தான் அவன் காலைப் பிடித்தான் என்று நினைத்த கவிஞர் காலை நீட்டி கொடுத்தார். சிறுவன் அழகாக அவரின் கால்களில் கிடந்த ஷீ வை பாலீஷ் செய்தான். கவிஞர் 10 ரூபாய் எடுத்து அவனிடம் நீட்டினார். அச்சிறுவன் கண்ணீர் மல்க எனக்கு காசு வேண்டாம் என்னைப் படிக்க வைக்க யாரும் இல்லை. நான் படிக்க வேண்டும் என்றான். அவனுடைய ஆர்வத்தை கண்ட கவிஞர் அவனை அழைத்துச் சென்று நன்றாக படிக்கவைத்து, தன்னைப்போல ஒருசிறந்த கவிஞராக மாற்றினார். அவனுக்கு தினந்தோறும் பாடல்கள் சொல்லிக் கொடுக்கும் போது கவிஞருக்கு பிடித்தமான பாடல் ஒன்றை கற்றுக் கொடுத்து நீ எங்கு பாடச்சென்றாலும் முதலாவது இப்பாடலை பாடிவிட்டு தான் மற்றப்பாடலைப் பாடவேண்டும் என்று உறுதி வாங்கிக் கொண்டார். அவனுடைய அரங்கேற்று விழாவில் திரள் கூட்டம் மக்கள் கூடியிருந்தனர். மக்களைப் பார்த்த அவனுடைய உள்ளம் குதுகலித்தது. அவன் இப்போது நேயர்கள் விருப்பம் நீங்கள் என்ன பாடல் பாட சொன்னாலும் பாடுகிறேன் என கூறி ஒவ்வொருவரின் விருப்பப்பாடலை பாடிக்கொண்டிருந்தான். திடீரென்று கூட்டத்தின் பின் வரிசையில் அமர்ந்திருந்த அவனுடைய குரு நாதரை இவன் கண்கள் பார்த்தன. அவர் வேதனையோடு அழுது கொண்டிருந்தார். உடனே திடீரென்று அவன் பாடிக் கொண்டிருந்த பாடலை நிறுத்தி விட்டு குருவின் விருப்பப்பாடலை பாடத்தொடங்கினான். குரு அழுகையை நிறுத்திவிட்டு மகிழ்ச்சி ஆரவாரம் செய்தார். நம்முடைய பாடல்களும் மக்களை பிரியப்படுத்துகின்றதாய் அமையாமல் இறைவனின் விருப்பத்திற்கு நம்மை அற்பணிக்கின்றதாய் காணப்படட்டும்.

அருள்திரு. **மேஷாக்**

*விழாக்கால அருளுரை*

# ஆண்கள் சங்க ஆண்டுவிழா

## "நாம் சகோதரர்"

தொ.நூ. 13:1-12 எபேசியர் 2:11-18
தி.பா. 85 லூக். 17:1-4

### *முன்னுரை*

"ஆண்டவர் காயினிடம், "உன் சகோதரன் ஆபேல் எங்கே?" என்று கேட்டார். அதற்கு அவன், "எனக்குத்தெரியாது, நான் என்ன, என் சகோதரனுக்கு காவலாளியோ?" என்றான். அதற்கு ஆண்டவர் "நீ என்ன செய்துவிட்டாய்? உன் சகோதரனின் இரத்தத்தின் குரல் மண்ணிலிருந்து என்னை நோக்கிக் கதறிக்கொண்டிருக்கிறது. இப்பொழுது, உன் கைகள் சிந்திய உன் சகோதரனின் இரத்தத்தைத் தன் வாய் திறந்த குடித்த மண்ணெய் முன்னிட்டு நீ சபிக்கப்பட்டிருக்கின்றாய். நீ மண்ணில் பயிரிடும்பொழுது அது இனிமேல் உனக்குப் பயன்தராது. மண்ணுலகில் நீ நாடோடியாக அலைந்து திரிவாய்" தன் சகோதரனுக்கு செய்த தீவினையால் கடவுள் கொடுத்த தண்டனை (தொ.நூ. 4:9-12). யோசேப்பு தன் சகோதரர்களுடன் பென்னியமீனையும் கண்டவுடன் தம் வீட்டு மேற்பார்வையாளனை நோக்கி நீ இம் மனிதர்களை என் வீட்டுக்கு அழைத்துச்செல் இவர்கள் பகல் உணவை இன்று என்னோடு உண்பார்கள். கால்நடை ஒன்றை அடித்து உணவு தயார் செய் என்றார். (தொ.நூ. 43:16) யோசேப்பு தன் தாயின் மகன் பென்னியமீனைப் பார்த்து "நீங்கள் என்னிடம் சொல்லியிருந்த உங்கள் இளைய மகன் இவர்தானா?" என்று கேட்டபின் "மகனே கடவுள் உனக்கு அருள்புரிவாயாக" என்று கூறினார். யோசேப்பு தம் சகோதரனைக் கண்டதும் மனம் நெகிழ்ந்து அழுவதற்கு ஒரிடம் தேடினார். உடனே தன் உள் அறைக்குள் விரைந்து சென்று கண்ணீர் விட்டார். பின்பு தன்னை அடக்கிக்கொண்டு வெளியே வந்து உணவு பரிமாறக் கட்டளையிட்டார். யோசேப்பின் முன் வைக்கப்பட்டிருந்த தட்டுளினின்று அவர்களுக்குப் பரிமாறப்பட்டது. மற்றவர்களது பங்கைப்போல் ஐந்து மடங்கு மிகுதியாக பென்னிமினுக்கு பரிமாறப்பட்டது (தொ.நூ. 43:29-34) இடுக்கணில் உதவவே சகோதரன் பிறந்திருக்கிறான் (நீதி. 17:17). இதோ சகோதரர் ஒன்றுபட்டு வாழ்வது எத்துணை நன்று எத்துணை இனியது (திருபாடல் 133:1)

உடன் பிறந்தவர்களை சகோதரன் என அழைக்கிறோம். இந்த சகோதரர்கள் பல நிலையில் வேறுபிரிக்கப்படுகின்றனர். மூத்த சகோதரன், இளைய சகோதரன், தன் இனத்தான், சுற்றத்தார், வகுப்பு இனம் ஆகியவற்றின் அடிப்படையில் பிரிக்கப்படுகின்றனர். இறைஅன்பின் அடிப்படையில் ஆவிக்குரிய சகோதரர்களாகவும் சிலர் கள்ள சகோதரர் எனவும் அழைக்கப்படுகின்றனர். இவர்களில் பெண்பாலை சகோதரி என்று அழைப்பார்கள்.

முன் சொல்லப்படதன் அடிப்படையில் சகோதரர்களை அன்பு செய்யும் சகோதரர்கள், துன்பம் விளைவிக்கும் சகோதரர் என்ற இருநிலையில் சிந்திக்க முடியும். இன்றைய சூழலில் இது மெய்யாகவே காணப்படுகின்றது. குடும்ப சூழலில் உருவாக்கப்படும் மனித உள் எழுச்சிகளைச் சீரான முறையில் சீரிசெய்யாதபோது அது துன்பம் விளைவிக்கிறது. இதனால் குடும்பத்தில் உருவாக்கப்பட்ட எழுச்சி பொது வாழ்விலும் திருச்சபையின் வாழ்விலும் பெரும் சேதத்தை ஏற்படுத்துகின்றது. இதனால் மனித உறவு உருக்குலைந்து போகின்றது. பகை உணர்வு உருவாகின்றது. பிரிவினைகள், மார்க்கபேதங்கள் சண்டைகள், கொலைகள் பெருக வாய்ப்புகள் உள்ளன. இத்தீய காலத்தில் இவைகளிலிருந்து மானிடத்தைக் காத்துக்கொள்ள தூய நற்செய்திப்பணி இன்றியமையாத ஒன்றாகும். இந்நிலையை உருவாக்க நாம் என்ன செய்ய வேண்டும் என்பதனை கீழ்க்காணும் சிந்தனைகளின் வெளிச்சத்தில் காண்போம்.

### ***வாக்குவாதம் வேண்டாம்*** (தொ.நூ. 13 : 8)

தர்க்கம் செய்து வாய்ப்பேச்சினால் சண்டைகளைப் பிறப்பிக்கிறது வாக்குவாதம். திருமறைப்பாடத்தில் ஆபிராமுக்கும் லோத்துக்கும் மிகுதியான உடமைகள் இருந்ததால் இருவரும் சேர்ந்து வாழ இயலவில்லை (தொ.நூ. 13:6). ஆபிராமின் கால்நடை மேய்ப்பருக்கும் லோத்தின் கால்நடை மேய்ப்பருக்கும் இடையே தகராறு ஏற்பட்டது. ஆகவே ஆபிராம் லோத்தை நோக்கி "எனக்கும் உனக்கும் என் ஆள்களுக்கும் உன் ஆள்களுக்கும் இடையே பூசல் ஏற்பட வேண்டாம் ஏனெனில் நாம் சகோதர உறவினர்கள்" என்று கூறினார்.

வாக்குவாதம் மனிதனின் நற்பெயரை மாற் அழைக்க எதுவாகின்றது. ஆபிரகாம் இறந்தபின் அவர் மகன் ஈசாக்கு கெரார் பள்ளத்தாக்கில் குடியேறி, வாழ்ந்தபோது ஆபிரகாம் காலத்தில் தோண்டப்பட்டு பெலிஸ்தியரால் மூடப்பட்டிருந்த கிணற்றை தூர் எடுத்த போது தண்ணீர்

பொங்கி எழுந்தது. இதனைக் கண்ட கேராலில் இருந்த மேய்ப்பர் ஈசாக்கின் மேய்ப்பர்களோடு இந்த தண்ணீர் எங்களுடையதே என்று வாக்குவாதம் செய்தனர். இவ்வாறு வாக்குவாதம் செய்து பெரும் தகராறு ஏற்பட்டது. இதனால் இந்த கிணற்றுக்கு "ஏசேக்கு" எனப்பெயர் சூட்டினர். ஏசேக்கு என்றால் "கொடுமைப்படுத்துபவன்" என்று பொருள். வாக்குவாதம் பெயரை மாற்றி அழைக்கத் தூண்டுகின்றது. (தொ.நூ.26:20) வாக்குவாதம் கொடுமையைக் கொண்டு வருகின்றது.

தன் ஆடுகளைக் காப்பாற்ற அவ்விடம்விட்டு விலகி ஈசாக்கு இன்னொரு கிணற்றையும் வெட்டினார். அங்கேயும் நல்ல தண்ணீர் பொங்கி எழுந்தது. ஆகவே அந்த இடத்திலும் கேராவிலுள்ள மேய்பர் இந்த துரவு தங்களுடையது என வாக்குவாதம் செய்தனர். இதனால் அந்த துரவுக்கு "சித்தினா"எனப் பெயரிட்டார்கள். (சித்தினா என்றால் .................................................. அர்த்தமாம்).

வாக்குவாதம் செய்ய விரும்பாத ஈசாக்கு மூன்றாவது ஒரு கிணற்றை வேறு ஒரு இடத்தில் வெட்டினார். அங்கு எவரும் வாக்குவாதம் செய்ய வரவில்லை. அப்பொழுது அந்த கிணத்திற்கு "இரகபோத்து" என்று பெயர் சூட்டினர். இரகபோத் என்றால் "ஆண்டவர் தம் எல்லையை விரிவு படுத்தினார். நாட்டில் நாம் வளர்ச்சியடைவோம்" என்று அர்த்தமாம்.

வாக்குவாதம் மனிதனின் நற்பெயரைக் கெடுக்கும் நம் எல்லைகளை சுருங்கப்பண்ணும் வளர்ச்சி குன்றும் மாமிசத்துக்கு உரியவராக்கி மனுஷமார்க்கமாய் நடக்கச் செய்யும் நமக்கு வாக்குவாதம் வேண்டாம்.

***பிரிவினை வேண்டாம்*** (எபேசியர் 2:14)

பிரிவினை ஒற்றுமையின்மையைக் குறிக்கின்றது. இது மனவிசனத்தையும், மன உளைச்சலையும், மனவிசாரத்தையும் உண்டாக்குகின்றது.

கானானியரின் இராஜாவாகிய யாபீஸின் சேனாதிபதி சிசேரா இஸ்ரவேலரை ஒடுக்கும்படி வந்தகாலத்தில், தெபோராள் தீர்க்கதரிசினி பாராக் என்பவரை அழைத்து சிசேராவுக்கு விரோதமாக யுத்தம் செய்யும்படி கூறி அவரும் கூடப் போய் யுத்தம் செய்தார். இவ்வேளையில் ரூபானியர் பிரிந்து போய் விட்டனர். இதனால் தெபோராளுக்கு யுத்தத்தில் பெரிய நஷ்டம் ஏற்பட்டது. மனப்பிரயாசமும் மிகுந்தது. இதனைத் பாடலாகப் பாடுகின்றாள் தெபோராள் (நியா. 5:15-16).

மனிதனின் அக்கிரமம் பிரிவினையை உண்டாக்கும் (ஏசா. 59:2) தனக்குத்தானே விரோதமாய்ப் பிரிந்திருக்கிற எந்த பட்டணமும் எந்த வீடும் நிலை நிற்கமாட்டாது (மத். 12:25-26).

இயேசுவின் போதனையைக் கேட்டபோது இயேசுவை மெய்யாகவே இவர் கிறிஸ்து எனவும், இவர் தீர்க்கத்தரிசி எனவும் சொன்னார்கள். சிலர் கிறிஸ்து கலிலேயாவிலிருந்தா வருவார்? அவர் தாவீதின் மரபிலிருந்தும் அவர் குடியிருந்த பெத்லகேம் ஊரிலிருந்தும் மேசியா வருவார் என்றல்லவா மறைநூல் கூறுகிறது என்றனர். இப்படி அவரைக்குறித்து மக்களிடையே பிரிவினை ஏற்பட்டது. இவ்வாறு பிரிவினைகள் வரும்போது பிரிவினைகளை உண்டாக்கும் நபர்களைவிட்டு விலகிவிடவேண்டும் எனக் கூறுகின்றார். ரோ.16:17 மேலும் பிரிவினைகளையும் தடைகளையும் உண்டாக்குகிறவர்களைக் குறித்து கவனமாய் இருப்பது அவசியம். இவ்விதமான பிரிவினைகளை உருவாக்குகின்றவர்கள் தீய காலத்தில் தீமையானவற்றை சிந்தித்து நற்செய்திபணியை கிறிஸ்துவுக்கென்று செய்யாமல் தங்களுடைய வயிற்றுக்கென்றே ஊழியம் செய்கிறார்கள். இவர்கள் இனிமையான சொல்பேசி முகஸ்திதி செய்து கபடற்ற உள்ளத்தினரை ஏமாற்றுகிறார்கள் (உரோ.16:18).

கொரிந்திய திருச்சபைக்குள் இருந்த பிரிவினையின் ஆவியை குறித்த மிகவும் கண்டிப்பான புத்திமதியை தாழ்மையுள்ள உள்ளத்தோடு கேட்டுக்கொள்கிறார். “நீங்கள் ஒத்த கருத்துடையவர்களாய் இருங்கள், உங்களிடையே பிரிவினை வேண்டாம், ஒரே மனமும் ஒரே நோக்கமும் கொண்டிருங்கள் (1கொரி.1:10) எனக் கூறுகின்றார்.

பிரிவினை மார்க்க பேதத்தை உண்டாக்கும், மனச்சாட்சியை வஞ்சிக்கும் தீவினை செய்யத் தூண்டும் நமக்குள் பிரிவினை வேண்டாம்.

***எச்சரிக்கையாயிரு*** (லூக். 17:3)

எச்சரித்தல் என்பது மனிதனை விழிப்புடன் இருக்கச் செய்தல் ஆகும். தொழிற்சாலைகள், சுரங்கங்கள் ஆகியவற்றில் பணிசெய்யும்போதும், சாலைகளில் வாகனம் ஓட்டும்போதும் எச்சரிப்பு பலகைகள் மனிதனை விழிப்புடன் செயல்பட வைக்கின்றது. உண்மையான இறை பக்தன் கடவுளை உண்மையாய்த் தேடுவதில் எச்சரிப்பாயிருக்க வேண்டும்.

மோசே இஸ்ரவேலருக்கு கொடுத்த உச்சரிப்பின் தொனி அடிமைத்தள வீடாகிய எகிப்து நாட்டினின்று உன்னை வெளியே கூட்டிவந்த ஆண்டவரை மறந்துவிடாதபடிக்கு எச்சரிப்பாயிரு (உபா. 6:12). மனிதனை அடிமை கொண்டுள்ள, பாவம், கோபம், பகைமை, வெறி களியாட்டுகள் இவற்றினின்று வாலிபனை மீட்டுக்கொண்ட இறைவனை மறவாதபடி எச்சரிப்பாயிருப்பது அவசியம். வாழ்க்கையில் பிற தெய்வங்களின் பெயரை உச்சரிப்பதிலும், பிற தெய்வ வணக்கத்தாரோடு உடன்படிக்கை

வைத்துக்கொள்வதிலும் எச்சரிக்கையாயிருக்க வேண்டும் (வி.ப. 23:13, 34:12). காரணம் அது சிக்கவைக்கும் கண்ணியாக இருக்கும்.

இளைஞர்களின் இதயம் வஞ்சிக்கப்படாமலும் வழி விலகிச்செல்லாமலும் இருந்து ஆத்துமாக்களைக் காத்துக்கொள்ள மிகவும் எச்சரிக்கையாயிருப்பது அவசியம் (உபா.4:19). மனிதன் தன் ஆத்துமாவைக் குறித்து எச்சரிக்கையாயிருந்தால் நாம் கிறிஸ்து இயேசுவில் அன்பாயிருப்போம். யோசேப்பு தன் ஆத்துமாவைக் காத்துகொண்டாள். தன் ஆடையையும் விட்டுவிட்டு ஆத்துமா காக்கப்படும்படியாக ஓடினான் (தொ.நூ. 39:12). ஊழியன் தன் ஊழியத்திலும் எஜமான் தன் உத்திரவாதத்திலும் எச்சரிப்பாய் இருப்பது தீவினைகளிலிருந்து மனிதனைத் தப்புவிக்கும்.

மாயையும் கள்ள உபதேசத்தையும் பற்றிக்கொள்ளும் இத்தீய காலத்தில் மனிதனின் மனம் பொருளாசையைக் குறித்து அதில் சாய்ந்துபோகும்போது அதுவே ஜீவன் என்று எண்ணுகிறவன் மிகவும் எச்சரிக்கையாய் இருக்கவேண்டும் (லூக்.12:15). மனிதன் தேவ எச்சரிப்பைப் பெற்று கிறிஸ்துவின் வருகையின் நாளைக்குறித்து மிகவும் எச்சரிப்புடன்இருப்பது அவசியம். மனித இதயம் குடிவெறி கொண்டு, களியாட்டத்தால் நிறைந்து இவ்வுலக வாழ்க்கைக்குரிய கவலையினாலும் சிக்குண்டு சீரழிந்துவிடாதபடி வாழ்ந்து, அவர் வரும் நாளைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள் (மாற். 13:33).

கிறிஸ்துவின் வருகைக்காகவும் அவரோடு நித்திய காலமாகவுள்ள நிலையான வாழ்வுக்கு ஆயத்தப்படும் ஆன்மாக்களுக்குள்ளே வேண்டாம், வாக்குவாதங்கள், பிரிவினைகள் இவை நீங்கி அன்புடன் வாழ எச்சரிக்கையிருப்போம்.

அருள்திரு. **S. ஐசாயா**

*விழாக்கால அருளுரை*

# சங்கப் பண்டிகை
# "நிறைவு தரும் நன்றிப்படையல்"

உபா. 26:1-13

IIகொரி. 8:1-9

லூக். 6:36-38

> *"நாங்கள் எதிர்பார்த்ததற்கு மேலாக அவர்கள் தங்களை முதன்மையாக ஆண்டவருக்கு அர்ப்பணித்தார்கள்; நாங்கள் கடவுளின் திருவுளப்படி செயல்படுவதால், எங்களுக்கும் தங்களை அர்ப்பணித்தார்கள்."* IIகொரி. 8:5

திருச்சபையின் வாழ்வில் கடவுளுக்கு நன்றிப்படையல் செலுத்தும் சங்கப் பண்டிகை நாள் மிகவும் முக்கியமான நாளாகும். இது, கடவுளுக்கு நம்மை ஒப்படைக்கும் அடையாளமாகவும், திருப்பணிக்கு உதவுதல், திருச்சபையின் தேவைகளில் உதவுதல் மற்றும் கடவுளுக்கென கொடுக்கும் நிலைகளிலான நன்றிப்படையலாக அமைகின்றது. சில வேளைகளில் இந்நன்றிப்படையல்கள் பாரம்பரியம், பெயர் புகழ் எனும் நிலையிலே மாறி விடுகின்றன. நன்மை பெற்றவன் நன்மை செய்தவருக்குத் திருப்பி செய்வது நன்றியாகும். கடவுள் மனிதனுக்கு செய்துள்ள நன்மைகள் ஏராளம். ஆகவே மனிதன் கடவுளுக்கு நன்றி படைக்க கடமைப்பட்டுள்ளான். யூதமரபில் நன்றிப்படையல்கள் படைத்து கடவுளைத் துதிப்பது முக்கியமாக கருதப்பட்டது. பாவத்தில் வீழ்ந்துபோன மனுக்குலத்திற்கு இறைமகன் இயேசு செய்திட்ட மீட்புப்பணி, செய்வதற்கரிதான பேருதவியாக வரலாற்றில் அமைந்துவிட்டது. நமக்கு வாழ்வுதந்து, உதவிகள் பல ஈந்திட்ட இறைவனுக்கு செய்யும் உயரிய செயல்வடிவமே நன்றிப்படையல் இதனை மூன்று நிலைகளில் சிந்திப்போம்.

### 1. *மீட்பை நினைவுகூரும் நன்றிப்படையல்* உபா. 26:6-9

இஸ்ரவேல் மக்கள் எகிப்தின் அடிமைத்தனத்தினின்று விடுதலைபெற்று கானான் நாட்டிற்குள் பிரவேசித்து கடவுளை தேடுகையில், பெற்றுக்கொண்ட விடுதலையை நினைவுபடுத்தி கடவுளுக்கு நன்றிப்படையல் செலுத்தும் நிகழ்வு குறிப்பிடத்தக்கது. அத்துடன் எங்களுக்குத் தந்த நிலத்தின் விளைபலன்களும் கடவுளுக்கு உரியவையே என ஆண்டவரைப் புகழும் நிகழ்வும் குறிப்பிடத்தகுந்ததே. இது இறைவன் எகிப்திய அடிமைத்தனத்தினின்று அருளிய விடுதலை எனும்போது, மானுடத்தின் கறையான பாவம் இயேசு கிறிஸ்துவின் மூலம் நீக்கப்பட்டு (மத். 10;45) அவர் வழியாக நமக்குக் கிடைத்த மீட்புக்கு நன்றிக்குரியவர்களாக உள்ளோம். இந்நிலை நம் வாழ்வில் எப்போதும் நினைவுப்படுத்தப்படக்கூடியவையே. ஆக கிறிஸ்துவின் சிலுவை வழி மீட்பு பெற்ற நாம் அவருக்கு நன்றிச்செலுத்தும் விதமாய் நம் படையல்கள் அமைவது சிறப்பானது.

### 2. தங்களையே கொடுக்கும் நன்றிப்படையல் : IIகொரி. 8:5

பவுலடியார் மக்கெதோனியா திருச்சபை விசுவாசிகளின் படையல்களை குறிப்பிடுகையில், முன்பு தங்களைத்தாமே கர்த்தருக்கும் பின்பு எங்களுக்கும்............................ என சான்று பகருகிறார். மனிதன் முதலில் தனது வாழ்வு முழுமையையும் இறைவனிடத்தில் படைக்க வேண்டும். ஏனெனில் இவை அனைத்தும் கர்த்தருடையது. IIகொரி. 8:5-ல் மக்கெதோனியா மக்கள் தங்கள் வறுமை, துன்பம், தோல்வி வந்தபோது கடவுளின் சித்தத்தினாலே தங்களைத்தாமே உணர்ந்து கொடுத்தார்கள். கடவுள் மீதுள்ள அன்பு பெருகி நல்ல பண்புகளைப் பெற்றார்கள். மீட்புப் பெற்ற மக்கள் கடவுளுக்காக தங்கள் செல்வத்தையும் மகிழ்ச்சியுடன் கொடுக்கும் உதாரக்குணம் பெற்றார்கள். IIகொரி. 9:10-12-ல் புசிக்கிறதற்கு ஆகாரத்தைக் கொடுக்கிறவர் உங்களுக்கு விடுதலை அளித்து அதைப் பெருகப்பண்ணி........... தங்கள் மிகுந்த உதாரக்குணத்திலே நீங்கள் எவ்விதத்திலும் சம்பூரணமுள்ளவர்காவீர்கள் என பவுலடியார் குறிப்பிடுகிறார். பிரசங்கி 5:19-ல் கர்த்தர் ஐசுவரியத்தையும், சம்பத்தையும் எவனுக்குக் கொடுத்திருக்கிறாரோ அதில் அவன் புசிக்கவும், தன் பங்கைப் பெறவும், தன் பிரயாசத்திலே மகிழ்ச்சியாயிருக்கவும் அவனுக்கு அதிகாரம் அளிப்பது கடவுளின் அனுக்கிரகம். அவ்வனுக்கிரகத்தை நாம் பெற வேண்டுமானால் கடவுளுக்கு கொடுத்துத்தான் ஆக வேண்டும்.

### 3. நன்றிப்படையலால் உண்டாகும் நற்பலன் மல். 3:10

கடவுள் நன்றி படையல் செலுத்துவோருக்கு அருளும் பாக்கியம் குறித்து லூக். 6:38-ல் காணமுடிகிறது. நாம் எந்த அளவில் கொடுக்கிறோமோ அதைவிட மேலாக நமக்கு அவர் தந்து நம்மை ஆசீர்வதிக்கிறார். மல். 3:10-ல் கடவுளுக்கு நன்றி படையலாக கொடுப்பதினால் கிடைக்கும் ஆசீர்வாதம் நிச்சயம் என்பதை மல்கியா திர்க்கன் மூலம் வாக்கு தருகிறதைக் காணலாம். சங். 96:8-ல் கடவுளின் நாமத்திற்குரிய மகிமையைச் செலுத்தி காணிக்கைகளோடு அவர் பிரகாரங்களில் பிரவேசியுங்கள் என்றும், நீதி. 3:9:10-ல் உன் எல்லா பொருளாலம், விளை பொருளின் முதற்பலனாலும் கர்த்தரை கனம் பண்ணு; அது ஆசீர்வாதமான, மகிழ்ச்சியான வாழ்வைத்தரும். கடவுளுக்கு செலுத்தும் நன்றிப்படையல் நமது வாழ்வோடு இணைந்ததாய் அமைவது சிறப்பு. அதுவே வளமான வாழ்வுக்கு ஏற்றதாய் உள்ளது.

சங்கப்பண்டிகையினைக் கொண்டாடும் இறைமக்களாகிய நாம் நமது நன்றிப்படையல்களை அவர் நமக்கு அருளிய மீட்பை நினைவுபடுத்துவதாகவும், நம்மையே கொடுக்கும் நன்றிப்படையலாகவும், அவற்றின் வழியாய் வரும் ஆசீர்வாதங்களுக்கு பங்காளிகளாக ஈடுபடுத்துவோம். படைப்பாளராம் ஆண்டவரின் பாதத்தில் நமது நன்றிப்படையல்களை செலுத்தி சீரிய வாழ்விற்கான ஆசிகளை இறைவன் கரத்திலிருந்து பெற்று வாழ்வோமாக!

அருள்திரு. **ஜாண்ஜெரேஷ்**

*விழாக்கால அருளுரை*

# நன்றியறிதல் விழா

*“அவர்கள், திருத்தூதர் கற்பித்தவற்றிலும், நட்புறவிலும், அப்பம்பிடுவதிலும், இறை வேண்டலிலும் உறுதியாய் நிலைத்திருந்தார்கள்.” திப. 2:42.*

“நல்ல” என்பதற்கு ஆங்கில வார்த்தை “WELL” என்பதாகும். ஒரு திருச்சபை “நல்ல” திருச்சபையாக இருக்கவேண்டுமெனில் “WELL” என்ற சொல்லில் வரும் நான்கு எழுத்துக்கள் அறிவுறுத்தும் செய்தியை உள்ளடக்கியதாக இருக்கவேண்டும்.“W” என்றால் WORSHIP; “E” என்றால் EVANGELISE; “l” என்றால் LEARN; “L’ என்றால் Love, தொழுகை, நற்செய்திபணி, கற்றுக்கொள்ளுதல், அன்பு செய்தல் என்னும் நான்கும் இருக்கிற சபைதான் “A Well Church” -ஒரு நல்ல திருச்சபையாகும். தொடக்க கால திருச்சபை ஒரு நல்ல திருச்சபையாக இருந்தது. நமது திருச்சபையும் நல்ல சபையாக இருக்க....

## *1. கற்பித்தவற்றில் உறுதியாய் இரு*

தி.ப. 2:42 அவர்கள் திருத்தூதர் கற்பித்தவற்றில் உறுதியாய் நிலைத்திருந்தார்கள்.

கல்விப்பணி தொடக்ககால திருச்சபையின் ஒரு சிறந்த பணியாக விளங்கினது. தி.ப. 2:42; 4:1,2; 5:21, 28 மீட்பின் அனுபவதிற்குள் வருபவர்கள் இயேசுகிறிஸ்துவையும், அவரது போதனைகளையும் அறிந்து கொள்வதற்காக கொடுக்கப்படும் கல்வியாகும். பேதுரு திருத்தூதர் இயேசுகிறிஸ்துவையும் அவரது போதனைகளையும் அறிந்து கொள்வதால் எற்படும் நன்மைகளை குறிப்பிட்டிருக்கிறார். அவைகள்: (a) அருளும் நலமும்பெருகும் (IIபேதுரு 1:2) (b) இறைப்பற்றுடன் வாழ்வதற்கான ஆற்றல் அருளப்படும் (IIபேதுரு 1:3) (c) உலகத்தின் அழிவு சக்திகளிலிருந்து தப்பலாம் (IIபேதுரு 2:20).

இன்றைய திருச்சபையில் மந்த நிலையும், தேக்க நிலையும் ஏற்படக் காரணம் கல்விப் பணியில் எற்பட்டிருக்கும் தொய்வாகும். உயிரோட்டமுள்ள திருச்சபையாக அமைய கல்விப்பணியை திருச்சபை ஊக்குவிக்கவேண்டும்.

## *2. நட்புறவில் வளரு :*

தி.ப. 2:42 அவர்கள் நட்புறவில் உறுதியாய் நிலைத்திருந்தார்கள்.

நட்புறவு என்னும் வார்த்தை புதிய ஏற்பாட்டில் 18 தடவை சொல்லப்பட்டிருக்கின்றன.

திருச்சபையின் உருவாக்கம் சிலுவையின் அடிவாரம் எனலாம். இயேசு தனது தாயாகிய மரியாளைப் பார்த்து யோவானை மகனாக ஏற்கும்படி கேட்கிறார். யோவானிடம் மரியாளை தனது தாயாக ஏற்கும்படி கூறினார். அவர்கள் இரத்த சம்பந்தமான உறவு முறையில் தாயும் மகனும் அல்லர். திருச்சபை இரத்த சம்பந்த உறவுகளையெல்லாம் தாண்டியது இறைமக்கள் ஒருவருக்கொருவர் பெற்றோரும், பிள்ளைகளும், சகோதரனும், சகோதரியுமாவர். திருச்சபை சகோதரத்துவத்தின் சின்னமாக அமைந்துள்ளது. இதனை திருத்தூதர் பணிகளில் உள்ள ஒரு நிகழ்ச்சி தெளிவுபடுத்துகிறது. தி.ப. 9:17 சகோதரர் சவுலே.

கிறிஸ்தவர்களை துன்புறுத்தினவரான சவுலை சகோதரன் என்கிறார் அனனியா ஒரே சவுல் இப்போது திருச்சபை என்னும் குடும்பத்தின் மகன் ஆகிவிட்டார். அவரது கடந்த காலமெல்லாம் மறக்கப்பட்டு நட்புறவுக்குள் ஏற்றுக்கொள்ளப்பட்டார். கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்கள் தங்களைப் பிரிக்கிறவைகள் மீது அல்ல தங்களை ஒன்றுபடுத்துகிறவைகள் மீது கவனம் செலுத்த வேண்டும். தொடக்ககால திருச்சபை நட்புறவில் வளர்வதற்கு காரணம், பகிர்ந்த வாழும் வாழ்க்கையுடையதாய் விளங்கினதாகும். தி.ப. 2:45 அனைவருக்கும் அவரவர் தேவைகளுக்கேற்ப பகிர்ந்தளித்தனர். இன்றைய திருச்சபையில் நட்புறவைப் பார்க்க முடிகிறதா?

## 3. ஆராதனை செய்

தி.ப. 2:42 அவர்கள் அப்பம்பிடுவதிலும், இறைவேண்டலிலும் உறுதியாய் நிலைத்திருந்தார்கள்.

தி.ப. 2:46 ஒவ்வொரு நாளும் அவர்கள் ஒரே மனத்தோடு கோவிலில் தவறாது கூடி வந்தார்கள்.

தி.ப. 2:47 அவர்கள் கடவுளைப்போற்றி வந்தார்கள்.

இளய பிளினி என்பவர் பித்தானியாவில் ஆளுனராக இருந்தார். இவர் திரயன் என்னும் பேரரசர்க்கு கி.பி. 112-ல் ஒரு கடிதம் எழுதினார். அக்கடிதத்தில் பித்தானியாவில் கைதிகளாக இருந்த கிறிஸ்தவர்களின் வாழ்வு முறைகளை குறிப்பிட்டிருந்தார். அதிகாலை இருட்டோடே ஓர் இடத்தில் அவர்கள் கூடி வருகிறார்கள். ஸ்தோத்திரப்பாடல்களைப் பாடுகிறார்கள். நிருந்தோம் பார்க்கிறார்கள்; கூடி ஜெபிக்கிறார்கள்; வாழும் சமூகத்தில் யாதொரு குற்றமும் செய்யமாட்டோம் என உறுதி மொழியெடுக்கிறார்கள்; அதன்பின் கலைந்து செல்கிறார்கள் என் எழுதியிருந்தார்.

இன்று நமது தொழுகை எவ்விதம் இருக்கிறது? சாது சுந்தர்சிங் அவர்கள் இன்று பல கிறிஸ்தவர்களின் ஜெபங்களும், ஆராதனைகளும் தொட்டால் சிணுங்கியைப் போலவும், குளம் அசையாது ஒரு கரைமேல் நிற்கும் நாரையைப்போலவும் இருக்கிறது என கூறினார். தொழுகையின்போது இறை மகிமையை சற்று உணர்கிறார்கள். சிறிது நேரம் தொட்டால் சிணுங்கியைப்போல தங்கள் தலைகளை வெகுசிரமமாய் சாய்க்கிறார்கள்.

ஆலயத்தை விட்டவுடன் பழைய நிலைக்கு வந்துவிடுகிறார்கள் நாம் அவ்வாறு இருக்கையில் நிற்கும் நாமெல்லாம் பார்க்கும்போது அது இந்த மகிமைப்படும். வல்லமையையும் தியானிக்கிறதையும். கூறுவதாகும். எதிர்கரிக்கிறதற்கும் தண்ணீர் வேறெவ்வு சிறப்பானது எனவும் சிந்திக்கிறதுபோல அது காட்சியளிக்கலாம். ஆனால் அது இல்லைகளைப்பற்றி ஒரு நினைவும் நினைக்காமல் தவ்வொன்றையுமோ நீளையோ கண்ட மாத்திரத்தில் பிடித்து விழுங்க பசி நேரங்களாக காதநு நிற்கிறது என்பது உண்மை தொழுகையில் இனிய ஆற்றலையும். அழகையும். தூய்மையாக்கப்படுகிறதையும். உணருகிறோமா? ஆண்டவருக்கான உண்மையான அர்ப்பணிப்பை ஏற்படுத்துகிறதா? அல்லது உலக காரியங்களுக்காக தொழுகிறோமா? மன்றாடுகிறோமா? நாம் நமது உதடுகளால் மாத்திரம் தொழுது ஸ்தோத்தரிக்காமல் இருதயத்தாலும். ஆவியாலும் தொழுது ஸ்தோத்தரிக்க வேண்டும். உறுதியோடு இந்த வார்த்தைகளுக்கு கீழ்ப்படிய வேண்டும்.

## நற்செய்தியை அறிவி

'அவர்கள்...... இயேசு கிறிஸ்துவைப்பற்றிய நற்செய்தியை அறிவித்தார்கள்'' தி.ப. 5:42. நற்செய்தியென்றால் என்ன? அருள்நாதர் இயேசுகிறிஸ்து மீது நம்பிக்கைகொள்ளும் எவரும் அழிவில்லாத நிலைவாழ்வு பெறுவர் யோவா 3:16 என்று நற்செய்தியாகும் இச்செய்தியை கூறி அறிவிக்க வேண்டியது திருச்சபையின் தலையாய கடமையாகும் தொடக்ககால திருச்சபை. தெருக்கள் சாலைச்சந்திப்புகள் நகரங்கள். பட்டணங்கள். கிராமங்கள் ஆகிய இடங்களில் நற்செய்தியை அறிவித்தது துன்பகாலத்தில் சிதறப்பட்ட கிறிஸ்தவர்கள் தாங்கள் சென்ற இடங்களிலெல்லாம் நற்செய்தியை கூறி அறிவித்தனர்.

நற்செய்திப்பணிக்கு அச்சாணியாய் விளங்கினவர் தூய பவுலார் ஆவார். நற்செய்திப்பணி பூமியெங்கும் அனைத்து மக்களை சந்தித்திடும் செய்யப்பட வேண்டும் என்றும் தூரக்காட்சியுள்ளவர் தூய பவுல் அவர் எருசலேம் தொடங்கி இல்லிரிக்கம் வரை நற்செய்தியை அறிவித்தார் இப்போதுள்ள துருக்கி முதல் கிழக்கு ஐரோப்பா முழுவதும் எல்லாம் ஆனால் இன்று இங்கு திருச்சபைகள் இருக்கிறதா? போய் நிற்கில் அவர்கள் இந்த பகுதிகளில் எந்த கிறிஸ்தவனையும் காண்பது அரிது என நிறுத்தப்பட்டிருக்கிறது காரணம் நற்செய்திப் பணி தொடர்ச்சியாக செய்யப்படாததாகும் நமது நாட்டில் தென்னகத்திலும் வடகிழக்கு பகுதியிலும் திருச்சபைகள் ஓரளவு வளர்ச்சியடைந்ததாக இருக்கிறது இந்திய நாடு முழுவதும் இயேசு கிறிஸ்துவுக்குச் சொந்தமாக திருச்சபை தனது நற்செய்திப்பணியினை அர்ப்பணத்துடன் அதிவேகமாக செய்ய கடமைப்பட்டுள்ளது.

நமது திருச்சபைகள் "நல்ல" திருச்சபைகளாக விளங்கட்டும். கற்பிப்பதிலும், நட்புறவில் வளர்வதிலும், தொழுகை செய்வதிலும், நற்செய்திப்பணியாற்றுவதிலும் அர்ப்பணிக்கட்டும்.

அருள்திரு. **A. வில்லியம்தாமஸ்**

H.M.S. ஞாயிறு

விழாக்கால அருளுரை

# நற்செய்தியை வாழ்விடத்தில் பறைச்சாற்றுவோம்

1அரா. 7:3-10

தி.ப. 11:19-30

லூக். 19:1-10

*"இந்நாள் நல்ல செய்தியின் நாள். நாளைக் காலைவரை இதை வெளியிடாது மௌனமாய் இருந்தால் நாம் குற்றவாளிகள் ஆவோம். நாம் போய் இதை அரச மாளிகையில் அறிவிப்போம்." 1அர. 7:9*

## சுதேச மிஷனறிச் சங்கத்தின் தோற்ற சுருக்க வரலாறு

முதல் நூற்றாண்டிலேயே நற்செய்தியை அறிந்து வந்தவர்கள் முதன் முதல் திருவிதாங்கூர் பகுதியை வந்தடைந்திருக்கிறது. 1795 - இங்கிலாந்தில் நிறுவப்பட்ட லண்டன் மிஷன் சங்கத்தின் மூலம் இந்தியாவுக்கு முதல் மிஷனரியாக அனுப்பப்பட்ட உல்லியம் தோயியாஸ் றிங்கல் தௌபே ஐயர் 1806- ம் ஆண்டு ஏப்ரல் 25-ம் நாள் தென் திருவிதாங்கூர் பகுதியான மயிலாடிக்கு வந்து ஒரு சபையை நிறுவினர் . கல்வி பணியும், மருத்துவமனைகளும் ஏற்படுத்தப்பட்டன. திருவிதாங்கூரில் திருப்பணி தொடங்கிய 69-ம் ஆண்டு (1574) குமரி முதல் கொல்லம் வரை நிறுவப்பட்ட திருச்சபைகள் அறிவிலும், பக்தியிலும், ஒழுங்கிலும், நாகரீகத்திலும் நன்முயற்சியிலும், ஒன்றுப்பட்டு வளர்ச்சியடைவதற்கு தேவையான தீர்மானங்களை நிறைவேற்றி செயல்படுவதற்கென்று சுதேச போதகர்களும் ஊழியர்களும் அடங்கிய தென் திருவிதாங்கர் சபாலோசனைச் சங்கம் உருவாக்கப்பட்டது. ஆண்டிற்கு ஒருமுறை கூடின இச்சங்கம் சபையார் சாட்சியுள்ள வாழ்க்கை நடத்தவும், பிறச்சமய மக்களுக்கு நற்செய்தியை கூறி அறிவிக்கவும் முக்கிய தீர்மானமாக ஏற்று செயல்பட்டதே சுதேச மிஷனறிச் சங்கம் உருவாக காரணமாக அமைந்தது. 1899 ஆண்டு மார்ச் மாதம் 22, 23 நாட்களில் திட்டுவிளையில் கூடிய சபலோசனைச் சங்க கூட்டத்தில் சுதேச மிஷனறிச் சங்கம் தோற்றுவிக்க முடிவுக்கு வந்தன. 1900 ஆண்டு மார்ச் 15-ம் நாள் சுதேச மிஷனரி சங்கம் திருப்பணி ஆரம்பமானது. முதல் திருச்சபை கொல்லம் அருகில் முகத்தலை திருச்சபையாகும். தென் திருவிதாங்கூர் இருபேராயமாக உருவாகின போது குமரிப் பேராய H.M.S. என்றும், தென் கேரளா H.M.S. என்று பிரிக்கப்பட்டும் இறைப்பணி நடைபெற்று வருகிறது. இங்கு குமரிப்பேராய H.M.S. ஆல் போல் தளைத்து வளர்ந்து கொண்டிருக்கிறது. நாம் வாழ்விடத்தில் ஆண்டவரை அறியாதவர்களுக்கு நற்செய்தி தொழிற்கூடம், பள்ளிக்கூடம், பாலர்

பள்ளிகள் மூலமும் அறிவிக்கப்படுகிறது. இவைகளின் வழியாய் திருச்ச பைகள் நிறுவப்பட்டு வளர்ச்சியடைந்த பிற்பாடு பேராயத்துடன் இணைக் கப்படுகிறது. 73 திருச்சபைகள் பேராயத்திற்கு கொடுக்கப்பட்டு இருக்கி றது. இதில் இன்று சேகர, பாஸ்ட்ரேட், கிளைச்சபைகளாய் செயல்படுகி றது. இவ்வாறு சுதேச மிஷனரி சங்கம் நம்மவர்களுக்கு நம்மவர்களாலே நற்செய்தி தெரிவித்து நம் பேராயத்தை வலுவடையச் செய்கிறது. H.M.S. ஞாயிறாம் இந்நாள் நற்செய்தியை வாழ்விடத்தில் பறைச்சாற்றுவது எங்ங னம்? என்று திருமறை வாயிலாக ஈண்டு தியானிப்போம்.

***அறியாமையில் முடங்கி கிடப்போர்க்கு நற்செய்தி*** 2அர. 7 : 9

இந்நாள் நல்லச் செய்தியின் நாள். நாளைக் காலைவரை இதை நாம் வெளியிடாது இருந்தால் நாம் குற்றவாளிகளாவோம். வாருங்கள் நாம் போய் அரச மாளிகையில் இதை அறிவிப்போம் என்று தொழுநோ யாளிகளில் ஒருவர் மற்றவர்களுக்கு சொல்லுகிறதை தான் அறியாமை யால் இருப்போர்க்கு அறிவிக்க இந்நாள் நல்ல நாள் என நாம் புரிந்து கொள்கிறோம். காலம் நமக்காய் காத்திருக்க காலத்தை சேமிக்கவும் முடி யாது. நாம் காலத்தை பயன்படுத்தி நற்செய்தியை அறியாமையில் முடங்கி கிடப்போர்க்கு அறிவிப்பதே நமது கடமையாகும். தி.ப. 2-ல் நாம் படிக்கும் போது பேதுரு நற்செய்தி அறிவித்த பொழுது அறியாமையால் இருந்த பற்பல ஜனங்களும் ஆண்டவரை அறிந்து கொண்டார்கள். தி.ப.2.41 - ல் அறிந்து கொண்டவர்களோ திருமுழுக்கு பெற்றவர்களை நம் வாழ்விடத் திலும் நற்செய்தியை அறியாமையினால் முடங்கி கிடப்போர்க்கு நற்செய் தியை அறிவிக்க வேண்டியது நம் கடமையாகும். நாம் வாழ்வின் செய லாக்கத்திலேயே இந்நிலை நமக்கு தேவையானதாகும். இந்நாள் நற்செய்தி அறிவிக்கும் நாள். அறிவிக்காவிடில் குற்றம் நம் மேல் சுமரும். ஒவ்வொ ரு இறைமக்களும் நாம் பெற்றிருக்கின்ற இன்பத்தை பிறருக்கு வாழ் வினூடாக நற்செய்தி அறிவிப்போம் அறியாதவர்கள் முடங்கி கிடப்போ ரையும் ஆண்டவரின் மந்தைக்குள் சேர்ப்போம்.

***அறியப்பட்டோரின் வாழ்வை முதன்மையாக்கும் நற் செய்தி***

தி.ப. 11:19

அந்தியோக்கிய பட்டணம் ஆண்டவரைக் குறித்து அறியப்பட்டி ருந்தது. திருச்சபை இருந்தது. திருத்தொண்டர் ஸ்தேவானின் மரணத்தை தொடர்ந்து ஏற்பட்ட துன்புறுத்தலால் சிதறிப்போயினர் கிறிஸ்தவர்கள். யூதருக்கு இறைவார்த்தையை அறிவித்தனர். அவர்களும் சைப்பிரசு,

சிரேன் ஆகிய இடங்களை சேர்ந்த சிலர் அந்தியோகியாவில் கிரேக்கருக்கு ஆண்டவராகிய இயேசுவைப்பற்றி நற்செய்தியை அறிவித்தார்கள். ஆண்டவரின் கைவன்மையை அவர்கள் பெற்றிருந்தார்கள். பெருந்தொகையான மக்கள் நம்பிக்கைக் கொண்டு ஆண்டவரிடம் திரும்பினர். அறியப்பட்டோரின் வாழ்வு சிதறிப்போனபோது நம்பிக்கையுடன் நற்செய்தி அறிவிக்கப்பட்டது. அவர்கள் வாழ்வுகள் முதன்மையாக்கப்பட்டது. இன்றைய நிலையும் இப்படிதான் ஆண்டவரைக்குறித்து அறிந்திருக்கிறோம். ஆனால் அறியாதவர்களைப் போல வாழ்ந்து வருகின்றோம். நற்செய்தியை நம்பிக்கையுடன் உள்ளார்ந்த நிலையில் ஏற்றுக் கொள்ளும் போது வாழ்வு நற்செய்தியின் சாரத்தால் முதன்மையாக்கப்படுகிறது.

### ***அவல நிலைகளை மாற்றும் நற்செய்தி*** லூக்.19:1-10

சகேயுவின் வாழ்வு அவல நிலையாக காணப்பட்டது. சகேயுவை அவனின் செயல்பாடுகளால் மக்கள் வெறுக்கிறார்கள். அநியாயமாக வரி வசூலித்து ரோமானியர்களுக்கு கொடுத்ததினால் மக்கள் முறுமுறுப்புடன் காணப்பட்டார்கள். உலகப் பிரகாரமான காரியங்களில் அவல நிலையோடு வாழ்ந்த சகேயு இயேசு வருகிறார் என்று கேள்விப்பட்டு இயேசுவை காண விரும்புகிறான். ஆனால் இயேசு அவனை அறிந்திருந்தார். அவர் அருகில் சென்று சகேயுவை பெயர் சொல்லி அழைத்து உன் வீட்டில் நான் தங்க வேண்டும். சீக்கிரமாய் வா என்று மகிழ்வோடு இல்லத்திற்கு அழைத்து சென்றார். இதைக்கண்ட ஜனங்கள் அவல நிலையோடு வாழ்கிறவன் இல்லத்திற்கு போகிறார் என்று முறுமுறுத்தார்கள். அவல நிலையோடு வாழ்ந்த சகேயுவின் இல்லத்திலும், உள்ளத்திலும் ஏற்றுக் கொண்டபோதோ அவன் தவறை உணர்ந்து அறிக்கையிட்டு அற்பண வாழ்வுக்கு நெறிப்படுத்தப்படுகிறார். " இன்று இந்த வீட்டுக்கு மீட்பு உண்டாயிற்று" இழந்து போனதை தேடி மீட்கவே மானிட மகன் வந்திருக்கிறார். சுதேச மிஷனரிச் சங்கத் திருநாளில் நாமும் நம் உள்ளத்திலும் இல்லத்திலும் சமூக வாழ்விலும் நற்சாட்சியாகிய கிறிஸ்துவை ஏற்று நம்மையும் அற்பண வாழ்வுக்கு நெறிப்படுத்தி நற்செய்தியில் சாரத்தை ஏற்று நானிலத்திற்கு நல்லவர்களாய் வாழ்வோம். நம் வாழ்வு ஒளிரட்டும். குன்றின் விளக்காய், மிளிரட்டும், வைரக்கல்லாய் பரவட்டும் எட்டுத்திக்காய் நிலைக்கட்டும் நிலை வாழ்வு. இறையாசி நம்மோடு இருப்பதாக.

திரு. ***பிரவின் செல்வமணி***

*இந்திய சுதேஷ மிஷனெறி சங்க*
N.M.S. *ஞாயிறு*

*விழாக்கால அருளுரை*

# அருட்பணி செய்யுங்கள்

ஆமோஸ் 2: 4-8 தி.ப. 1:4-8
திபா. 82 மத். 28: 16-20

*"நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள் தந்தை மகன் தூய ஆவியார் பெயரால் திருமுழுக்குக் கொடுங்கள். நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்களும் கடைபிடிக்கும் படி கற்பியுங்கள்." மத். 28:19-20* a

'Mission' என்கிற ஆங்கிலச் சொல் இலத்தீன் மொழியிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. 'மிட்டரே' (mittere) என்ற வினைச்சொல்லுக்கு 'அனுப்பு' (to send) என்று பொருள். 'மிஷியோ' (misseo) என்பது இதன் வினைப்பெயராகிய 'அனுப்புதல்' என்பதாகும். 'பாஸர்' (Ba sar) 'ஷாலஹு'(Shalah) என்கிற எபிரேயச் சொற்களும்,'அப்போஸ்றெலோ (apostelo)என்கிற கிரேக்கச் சொல்லும் அனுப்புதல் (send) என்று மொழிபெயர்க்கப்படுகிறது.

திருமறை அருட்பணிக்கான அடித்தளத்தினை சிறப்புடன் அமைத்துள்ளது. இறைவன் சிலரை அனுப்புகின்றவராக அல்லாமல் தன்னை அனுப்பப்பட்டவராக அருட்பணியில் அழைத்து இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்புக்கு பின் தம் சீடரை அழைத்து அதிகாரப்படுத்தி கட்டளைக் கொடுத்து அனுப்புகின்றார். அக்கட்டளை இன்று நம்மை அருட்பணிச் செய்ய அறைகூவல் விடுக்கின்றது. இந்திய சுதேச அருட்பணி இயக்க (NMS) ஞாயிறாகிய இன்று நாம் அருட்பணி செய்ய கிறிஸ்து விடுக்கும் கட்டளை என்ன என்பதை சிந்திப்போம்.

## 1. ஆற்றல் நிறைந்த அருட்பணி :

உலகம் இறைவனால் படைக்கப்பட்டது. உலகத்தின் படைப்புகளும் இறைவனுடையவைகளே. ஆனால் உலகில் தீமைகள் மலிந்து காணப்படுகின்றன (Iயோவா. 5:19). தீமைகள் நிறைந்த உலகினுள் தீமையை வேரறுக்க அருட்பணி செய்ய இறைவன் தமது சீடர்களுக்கு ஆற்றல்படுத்தி கட்டளை கொடுகின்றார்.

8-ம் நூற்றாண்டில் இறைவாக்குரைத்த இறைவாக்கினாகிய ஆமோஸ் நியாயம் நீதி புரட்டப்பட்டு நேர்மையாளர் பணத்துக்கும், வறியவர் செருப்புக்கும் விற்கின்ற தீமை மலிந்து காணப்பட்டதை

(ஆமோஸ் 2:6) இறை ஆற்றலோடு வன்மையாக கண்டிக்கிறார். இயேசு கிறிஸ்துவும் நீதியற்ற நிலை சமூக பொருளாதார அரசியல், சமய நிலைகளில் காணப்படுகின்ற ஏற்றத்தாழ்வுகள் பிரிவினைகள், பாரம்பரிய கோட்பாடு சார்ந்த அடிமைநிலை இவைகளை கண்டித்தார். மட்டுமல்ல சீடர்களை அனுப்புகின்ற போதும் இவைகளெல்லாம் வேரறுக்கப்பட வேண்டுமென்ற நோக்கிலே ஆற்றல்படுத்தி அனுப்பினார். மட்டுமல்ல தீய ஆவிகளின் ஆற்றலை தகர்த்து ஆவியின் ஆற்றலுடன் பணியாற்ற திருநிலைப்படுத்துகிறார். இவைகள் செய்து நிறைவேற்ற இறைமக்களாக இறைவானல் அழைக்கப்படுகின்றோம்.

## 2. அறைகூவல் விடுக்கும் அருட்பணி :

வார்த்தை ஆற்றல் உள்ளது. வார்த்தை ஆக்கச் செயல்களுக்கு பயன்பட வேண்டுமே தவிர அழிவிற்கு அல்ல. அருட்பணியை இறைவாக்கின் வழிகாட்டுதலில் தொடர வேண்டும். ஆமோஸ் இறைவாக்கினர் சமுதாயத்தின் அவல நிலையைக் கண்டபோது அறைகூவல் நிறைந்த இறைவாக்கினை தெளிவாக எடுத்துரைத்தார். மட்டுமல்ல இறைவார்த்தையால் மக்கள் மனம் மாறிட வேண்டுமென எச்சரிக்கவும் செய்கின்றார். மக்களின் சிந்தையில், வாழ்வில், செயல்முறையில் மனமாற்றம் பெற்றிட இறைவார்த்தை மூலம் விழிப்புணர்வு தருகின்றார் (ஆமோஸ் 5).

இயேசுகிறிஸ்துவின் திருப்பணி நாட்களில் மக்களிடம் காணப்பட்ட அவலங்களை அகற்றி மக்களை நல்வழிப்படுத்தும் போதனையை கூறினார். அதோடு நெறியுடன் வாழ்ந்திட அறைகூவல் விடுக்கின்றார்.

இன்றும் மக்கள் மத்தியில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகள், பிரிவினைகள் சமய வன்முறைகள், மனித நேயமற்றச் செயல், அறியாமை இவைகள் இறைநீதிக்கு எதிரானவை என்பதை இறைவார்த்தை மூலம் எடுத்துரைத்து அருட்பணிச் செய்ய இறைவன் அறைகூவல் தருகின்றார்.

## 3. அதிகாரப்படுத்தும் அருட்பணி :

நம்பிக்கையும், நல்நடத்தையும் நல்எதிர்நோக்கும் அருட்பணியின் இயக்கிகள். அதன் அடிப்படையிலே அருட்பணி செய்ய வேண்டும் என இறைவன் விரும்புகின்றார். சமுதாயத்தின் நிலையை உற்று நோக்கி அதில் காணப்படுகின்ற குறைகளை இறைவார்த்தை மூலம் சுட்டிக்காட்டி தூய்மையான வாழ்வு வாழ்வதும் பிறருக்கு உதவி செய்வதும் அருட்பணியின் அளவுகோலாயிருக்கிறது. மத் 25: 31-46 எல்லா மக்களினத்தாரும் கூடியிருக்கும் நிலையில் தம்முடைய வாழ்வை

மற்றவர்களோடு பகிர்ந்தளிக்கும் மக்களின் அருட்பணியை இயேசு கிறிஸ்து மெச்சுகிறார். பாதிக்கப்பட்டோருக்கும் தேவையிலிருப்போருக்கும் செய்திடும் பணியானது? இறைவனுக்கு செய்யும் பணி என இயேசு கிறிஸ்து கூறுகின்றார் (மத் 25:40) இறையடியவர்களின் வாழ்வினை பார்க்கின்ற மக்கள் இறைவனைக் கண்டு கொள்கின்ற நிலையில் வாழ்தல் அவசியம். அருட்பணி செய்ய இறைவனால் அதிகாரப்படுத்தப்படுகின்றோம். இந்த அதிகாரம் இறைப்பணியின் எல்லையை விரிவாக்கம் செய்கிறது. ஆகவே அருட்பணி தடத்தினில் நடத்துதலுக்கு அர்ப்பணித்து பணி தொடருவோம்.

இயேசு கிறிஸ்துவில் இணைந்து விட்ட அருட்பணியை எப்படி பிரிக்க முடியாததோ அப்படியே இறை அடியவர்களின் வாழ்வோடும் அருட்பணி இணைந்துவிட்ட ஒன்றாகும். எனவே தெளிந்த பார்வையுடன் உலகிற்குள் சென்று அருட்பணியை தொடருவோம். நற்செய்தியை சொல், செயல், சிந்தனை வாழ்வு இவைகளின் வழியாக சான்றுரைப்போம். இருள் நிறைந்த உலகில் ஒளியூட்டும் சுடர்களாக அருட்பணி செய்து ஒளிர்ந்திடுவோம். இறையாளுமையில் இணைந்து இறையவரின் திரு விருப்பத்தை நிறைவேற்றுவோம்.

திரு. **R. *டேவிட் ஜெப சிங்***

*விழாக்கால அருளுரை*

# குடும்ப ஞாயிறு

ஆதி 2 : 18-24

எபே. 5 : 21-6:4 யோவா. 2 : 1-10

*"இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான்." ஆதி. 2:24*

படைப்பாளராகிய கடவுள் தமது சாயலிலே மனிதனை ஆணும் பெண்ணுமாகப் படைத்து அவர்களை படைப்பாளரின் மகுடமாக, குடும்பமாக, படைப்பனைத்தையும், பண்படுத்தி, பயன்படுத்தி வாழும் நல்வாழ்வை வழங்கினார். அத்தகைய நல்வாழ்வு, தற்காலத்தில் பல குடும்பங்களில் தடம் புரளக் காரணம் என்ன? உளவியல் அறிஞர்கள் கூறும்போது, இன்றைய குடும்பங்களை 'நான்' (Ego) என்னும் சிந்தை ஆட்டிப் படைத்து குடும்ப உறவையும், மகிழ்வையும் சீர்குலைக்கின்றது என்கின்றார். அப்படியானால் குடும்பங்கள் கடவுளின் திருவுள சித்தத்தின்படி நல்வாழ்வு பெற குடும்ப அங்கத்தினர்கள் எப்படி செயலாற்ற வேண்டும் என்பதை திருமறைக் கண்ணோட்டத்தில் சிந்திப்போம்.

## *குடும்ப தலைவர் கிறிஸ்து*

லூக்கா. 1 : 6 இல் சகரியாவும், எலிசபெத்தும் "கடவுள் பார்வையில் நேர்மை (நீதி) யானவர்களாய் நடந்து வந்தார்கள்" என்று சொல்லப்பட்டுள்ளது. இங்கு நேர்மை அல்லது நீதி என்ற வார்த்தையின் பொருள் என்ன? சாதாரணமாக 'just' அல்லது 'righteous' என்னும் ஆங்கில வார்த்தையின் அடிப்படையில் நீதிமன்றங்களில் வழங்கப்படும் நீதி அல்லது சில தகவுகளின் அடிப்படையில் வாழும் வாழ்க்கை என பொருள் கொள்வோம். ஆனால் திருமறையில் இதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ள கிரேக்க வார்தை 'dikaios' (டிக்காயியோஸ்) மேற்கூறப்பட்டுள்ள பொருள்களோடு ஆழமான பொருள் ஒன்றையும் பொதிந்து நிற்கிறது. "to do the will of God". அதாவது, லூக்கா 23:47-ல் தலைவன் இயேசுவை 'இவர் உண்மையாகவே நேர்மையாளர்' என்பது இயேசு கடவுளின் சித்தத்தைத் தமது மரணத்தின் வாயிலாக நிறைவேற்றினார். ஆக லூக். 1 : 6-ன்படி குடும்ப வாழ்வு கடவுளின் திருவுளச் சித்தத்தை நிறைவேற்றும் வண்ணமாக அமைய வேண்டும்.

யோவான் 2 : 5-ல் குறைவுபட்ட திருமண இல்லத்தில் குறைவு நீங்க கிறிஸ்துவுக்கு கீழ்படிய ஆலோசனை சொல்லுகிறாள் மரியாள்.

இல்லங்களில் "இவ்வீட்டின் தலைவர் கிறிஸ்து" என்ற வாசகங்களைப் பொறித்து வைத்துள்ளோம். ஆனால் உண்மையிலேயே கிறிஸ்துவை தலைவராகக் கொண்டு அவருடைய திருவுளச் சித்தம் செய்ய நம்மை அர்ப்பணித்து, குடும்ப அங்கத்தினர்கள் ஒவ்வொருவரும் அவரவர் கடமைகளை நிறைவேற்றுகின்றோமா? பக்தன் பாடல் ஒன்றிலே இவ்விதமாக கூறுகின்றனர்.

"இல்லத்தின் தலைவராய் இயேசு இருந்தால்,

இல்லை என்பதில்லையே."

காளை வண்டியில் பூட்டப்பட்ட இரண்டு மாடுகளும் வண்டிக்காரனுக்கு இசைந்து, அவன் கட்டளைப்படி செயலாற்றுவது போல கிறிஸ்துவுக்கிணங்கி கணவனும் மனைவியும் நான் என்னும் சிந்தையைத் துறந்து செயல்பட்டால் பிள்ளைகளும் அவ்விதம் செயல்படுவர். குடும்பம் வாழ்வு பெறும்.

## குடும்பத்தின் தலையாய பண்பு அன்பு

Iகொரிந்தியர் 13-ம் அதிகாரத்தில் தூயப் பவுலடியார் அன்பின் இலக்கணத்தை தெளிவாக வரையறுக்கின்றார். தற்புகழ்ச்சிக்கும், தன்னலத்துக்கும் அன்பு செலுத்தும் குடும்பத்தில் இடமே இல்லை. தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் "நான், நீ என்று சொன்னால் உதடுகள் ஒட்டிக்கொள்வதில்லை'' நாம் என்று சொல்வதிலேயே இணைவும், உறவும் ஏற்படுகிறது என்கிறார். அன்பு இருந்தால்தான் நான் எனும் சிந்தை மாறி நாம் என்னும் சிந்தை உருவாகி உறவு பலமடையும். தற்காலத்தில் பெண்ணுரிமை இயக்கத்தினர் குடும்பங்களில் ஆணாதிக்கம் தலைதூக்கி பெண்கள் அடிமைப்படுத்தப்பட்டு விட்டனர், திருமறையும் அந்த அடிப்படையிலேயே எழுதப்பட்டுள்ளது என்று குறை சொல்வர். இந்தக் கருத்தை முழுமையாக ஏற்றுக் கொள்ள முடியாது. ஆதியில் கடவுளின் படைப்பிலேயே, ஆணும் பெண்ணும் சமநிலையில் படைக்கப்பட்டுள்ளனர். ஆதி. 1 : 27 பெண்ணை ஆணுக்குத் துணையாகவும், எலும்பின் எலும்பும், சதையின் சதையுமாக, இருவரும் ஒரே உடலாய் இருப்பார்" என்றும் தெளிவுபடக் கூறுகிறது.

குடும்ப பிரிவினைகளைத் தூண்டும் சிந்தனைகளையும், சுயம் சார்ந்த கேள்விகளையும், தன்னலம் மேலோங்கும் எதிர்பார்ப்புகளையும் களைந்து, ஒருவருக்கொருவர் இசைந்து நாம் எனும் உறவு நிலையில் அன்பெனும் பண்பால் குடும்பத்தின் நல்வாழ்வை பேணுவோம்.

## குடும்பத்தின் தலையாய கடமை சாட்சி

யோசுவா 24 : 15-ல் "நானும் என் வீட்டாரும் ஆண்டவருக்கே ஊழியம் செய்வோம்" என்று யோசுவா இஸ்ரவேல் மக்களினத்தைப் பார்த்து அறைகூவல் விட்டார். இந்த அறைகூவலின் பின்னணியத்தைப் பார்த்தால் (முந்தைய வசனங்களில் வாசிக்கலாம்) தனது குடும்பத்தின் கடந்த கால நிலைகளை, யோசுவா தானும், தனது ஜனங்களும் கடந்து வந்த பாதைகளைப் பட்டியலிடுகிறார். இறைவன் எகிப்தின் அடிமைத்தனத்தின் நுகத்தை முறிந்து, பாதைகளின் கடினபாடுகளில் பாதுகாத்து, பாலும் தேனும் வழிந்தோடும் கானானின் வாழ்வைக் கொடுத்துள்ளார். ஆசீர்வாதங்களை எண்ணிப் பார்த்த படியால் யோசுவா மற்றவர்களுக்கு குடும்பமாகச் சாட்சியாக நின்றான்.

இன்றைய காலகட்டங்களில் குடும்பங்கள் சாட்சியற்று போவதற்கு காரணங்கள் என்ன? கடந்து போன வாழ்வில் நாம் பெற்றுக் கொண்ட நன்மைகளை எண்ணிப்பாராமையும், கடந்த கால வாழ்வின் கடினங்களை இன்றைய வாழ்வோடு ஒப்பிட்டு பாராமையுமே ஆகும். மாறாக, அண்டை அயலகத்தாரின் வாழ்வையும், தமது வாழ்வையும் ஒப்பிட்டுப்பார்த்து நாங்களும் அந்த நிலையை எட்ட முடியவில்லையே என ஏங்கிக் கொண்டிருக்கும் தாழ்வு மனபான்மையுடன் காணப்படுகின்றோம். இச்சூழல் திருப்தியற்ற, மனநிறைவற்ற பண்பினை குடும்ப வாழ்வில் புகுத்தி ஒருவரை ஒருவர் குறை சொல்லி குடும்ப ஐக்கியத்தை சீர்குலைக்கின்றது. தூய பவுலடியார் தீமோத்தேயுவிடம் மன நிறைவுள்ளவர்களுக்கே இறைப்பற்று பெரும் ஆதாயம் தரும் (1தீமோ. 6 : 6) என்று கூறி தொடர் வசனங்களில் திருப்தி அடைவதற்கான ஆலோசனைகளை தருகிறார். ஆக, எட்டமுடியாத ஐசுவரியத்தையும், பெருமை வாழ்வினையும் நாடாது, கடவுள் கடந்த காலங்களில் அருளிச் செய்த நன்மைகளை எண்ணி, மேன்மை அடைந்திருக்கிறோம் என்ற மனநிறைவோடு வாழ்ந்தால் குடும்ப ஐக்கியம் சாட்சியின் வாழ்வை கடைபிடிக்க இயலும்.

ஆக, கடவுளின் திருவுளச் சித்தத்தின்படி, கிறிஸ்துவின் தலைமைத்துவத்தில், அன்பெனும் பண்போடு, சாட்சியாய் நிலை நின்று குடும்ப வாழ்வின் உறவில் பலப்படுவோம். வாழ்வை அர்த்தமுள்ளதாய், பயனுள்ளதாய், மகிழ்வின் நிறைவாய் பெற்றனுபவிப்போம்!

அருள்திரு. **D. சேம் கிறிஸ்டோபர்**

மாணவர் ஞாயிறு | விழாக்கால அருளுரை

# அறிவும் ஞானமும் கடவுளின் அருள் கொடை

நீமொ. 2:1-12 | யாக். 3:13-18

தி.பா. 119:6-16 | லூக். 2:41-52

*"ஏனெனில் ஞானத்தை அளிப்பவர் ஆண்டவரே, அறிவிற்கும் விவேகத்திற்கும் ஊற்றானவர் அவரே" நீமொ. 2:6*

மாணவர்கள் எதிர்கால சமுதாயத்தின் சிற்பிகள். எதிர்கால உலகை வடிவமைக்கும் கடவுளின் கருவிகள். அவர்கள் கடவுளால் தங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் அருள்கொடைகளை அறிந்து கொள்வதும், அதனை பயன்படுத்த வேண்டியதும் மிக அவசியமானதும் ஆகும். பெற்றோரும் ஆசிரியர்களும் மாணவர்களுள் மறைந்திருக்கும் ஆற்றலை, கடவுள் அவர்களுக்கு அளித்திருக்கும் அருட்கொடைகளை அறிந்து கொள்ள உதவுவதும் மிகவும் அவசியமாகும்.

## *முயற்சி திருவினையாக்கும்*

...அதிகாலையில் என்னை தேடுகிறவன் கண்டடைவார்கள். நீமொ. 8:17

ஆண்டவர் ஞானத்தை நமக்கு தந்திருக்கிறார் (நீமொ. 2:6) அதை தேடி அடைபவர் நற்பேறு பெற்றோர் (நீமொ. 3:13). கடவுள் நமக்கு தந்திருக்கும் ஞானத்தை இரட்டிப்பாக பெருக்கி கொள்வது நமது கடமை (மத். 25:20,21) என்பதை இயேசு கிறிஸ்து தாலந்து உவமை மூலமாக நமக்கு கற்று தருகிறார். அதை பெருக்காது மறைத்து வைப்பவர் சோம்பேறி, தண்டனைத் தீர்ப்புக்கு உரியவராவர் (மத். 25:26) என்று இயேசு கிறிஸ்து கூறியுள்ளார். பொருளீட்ட ஒருவர் வியர்வை சிந்தி உழைப்பது போன்று உழைக்க வேண்டும் என்று புதையலை மிகுந்த ஆவலோடு தேடுவது போன்ற ஆர்வமும் நமது முயற்சியில் காணப்படும் (நீமொ. 2:4). -அதிகாலையில் எழுந்து படிப்பது மிகுந்த பயனை தரும்.

- கற்பிக்கும்போது கவனமாய் கவனித்து. புரிந்து கொள்வது மிகுந்த பயனைத்தரும்.
- புரிந்து கொண்டு மனப்பாடம் செய்வது மறந்து போகாது.
- மீள் பார்வை செய்திட வேண்டும்.

"முயற்சி தன் மெய்வருந்த பலனைத்தரும்" என்பது முதியோர் கூற்று.

இயேசு கிறிஸ்துவின் சீடர்கள் மூன்றரை ஆண்டுகள் தரமான பயிச்சியினை அவரோடு வாழ்ந்து, அவரோடு பயணித்து, அவரது அருளுரைகளை கவனமாய் கவனித்தனர். நற்செய்தி நூற்களும், திருமுகங்களும் அவர்கள் கடினமாக உழைத்து பெற்ற பயிற்சியின் விளைவாக பெற்றவையே. தானியேலும் அவனது நண்பர்களும் மிகச் சிறந்த மாணவர்கள் ஆவர். அவர்கள் ஏற்கெனவே எல்லா ஞானத்திலும் தேர்ச்சி பெற்றிருந்தனர், அறிவிலும் உணர்விலும் கல்வியிலும் சிறந்து விளங்கினர். (தானி. 1:4) ஆயினும் அவர்கள் கல்தேய நாட்டு மொழியை எழுதவும் பேசவும், அரண்மனையில் பணியாற்றும் திறமையுடையவர்களாய் மாற்றும் நெபு கத்நேசரின் செயல்திட்டத்தில் இணைந்து மூன்று ஆண்டுகள் தரப்பட்ட பயிற்சியில் (தானி 1:5) கட்டுப்பாடுடன், கடினமாய் உழைத்து பிறரை காட்டிலும் பத்து மடங்கு சிறந்தவர்களாய் விளங்கினர். (தானி 1:20).

உலகம் போற்றும் அறிஞர்கள் பயறும் கடின உழைப்பில் நம்பிக்கை வைத்து சோர்ந்திடாது முயன்று உயர்ந்தவர்களாகும்.

## 2. கடவுளின் அருளை பெறு

"ஆண்டவரிடம் கொள்ளும் அச்சமே ஞானத்தின் தொடக்கம்..... நீமொ 1:7a

மாணவர்கள் என்றாலே பாடசாலையும், கல்லூரிகளும் நினைவில் வருகின்றன. பாடசாலை மற்றும் கல்லூரிகள் மாணவர்களுக்கு அறிவு புகட்டும் கேந்திரங்களாக திகழ்கின்றன. எனினும் மாணவர் இந்த அறிவு புகட்டும் இடங்களில் பயிற்சி பெற இணைவதன் மூலம் மட்டுமே அறிவை பெற்றுவிட முடியாது. இறை அச்சமும், ஒழுக்கமுள்ள வாழ்வுமே தகுதியான கல்வியின் பயனைத் தரமுடியும்.

''....ஞானத்தை அளிப்பவர் ஆண்டவரே., அறிவிற்கும் விவேகத்திற்கும் ஊற்றானவர் அவரே'' (நீமொ. 2:6) என திருமறை கூறுகிறது. எனவே குறைவான ஞானமுடையவர் கடவுளிடத்தில் கேட்குப் பெற்றுக் கொள்ளலாம் (யாக். 1:5) தாவீது பேரரசர் தன் மகன் சாலமோன் சிறப்பாக ஆளுகை செய்வதற்கு ஞானம் தேவை என்பதை உணர்ந்து கொள்கிறார். (1குறி. 22:12) காலமோனும் வெகு திரளான மக்களை வழிநடத்தும் ஞானம், அறிவுக்காய் கடவுளிடம் மன்றாடி பெற்றுக் கொள்கிறார். (2குறி. 1:10)

இயேசு கிறிஸ்து ஞானத்திலும் உடல் வளர்ச்சியிலும் மிகுந்திருந்தார் (லூக். 2:52) என்றும், தனது பெற்றோருக்கு கீழ்படிந்து கற்றுக்கொண்டார் எனவும் திருமறை கூறுகிறது. தனது தாயார் தற்றுத்தந்த

இறையுண்மைகளையெல்லாம் 12-ம் வயதில் தேவாலயத்து அறிஞர்களோடு பேசினதையும் (லூக். 2:46,4) படிக்க முடிகிறது.

- கல்வியறிவில் சிறந்தோங்கிட மன்றாட்டு தேவை 1குறி. 22:12; 2குறி. 1:10; யாக். 1:15.

- கல்வியறிவில் சிறந்தோங்கிட ஆலய தொழுகை தேவை (லூக் 2:46)

- கல்வியறிவில் சிறந்தோங்கிட திருமறை படித்தல் அவசியம் (லூக் 2:46.47)

- கல்வியறிவில் சிறந்தோங்கிட நன்னடக்கை அவசியம் (யாக். 3:13).

## 3. நன்னடத்தையுடன் கூடிய கல்வி முழுபலனைத் தரும்

".....ஞானம் தரும் பணிவாலும் நன்னடைத்தையாலும் அவற்றைக் காட்டட்டும்" யாக். 3:13

சாலமோன் கடவுளிடமிருந்து ஞானத்தை பெற்றுக்கொண்டார். காலமோனிடம் இறையச்சமும், தன்னடக்கமும், நல்ல குணசீலஙக்ளும் மிகுந்திருந்த போது அவரது ஆளுகை சீரும், சிறப்புமாயிருந்தது. இறையச்சம் அகன்ற போது ஒழுக்கக் கேடுகளும், பெருமையும் சீர்குலைவுகளும் ஏற்பட்டது. அவரது ஒழுக்ககேடுகள் அவரது ஞானத்தை மறைத்து போட்டன.

இயேசு கிறிஸ்து ஞானத்தின் ஊற்றாக இருந்தாலும் நாசரேத்தில் தன் பெற்றாருக்கு பணிந்து நடந்தார் (லூக். 2:51) என்று படிக்கிறோம்.

தானியேலும், அவனுடைய நண்பர்கள் அனைவரும் கடவுளிடமிருந்து வரும் ஞானத்தை பெற்றவர்களாய் இருந்தனர். உயர் பதவி பெற்றிருந்தனர். ஞானிகளுக்கு மேலாய் உயர்தரப் பட்டிருந்தனர். எனினும் மது அருந்தினதில்லை (தானி. 1:18), உணவு தீட்டுபடுத்த அனுமதித்ததில்லை (தானி 1:18)

கீழ்படிதலற்ற ஞானம் பயனற்றது. ''நீங்கள் அனைத்திலும் ஆண்வருக்கு உகந்தவற்றை செய்து அவருக்கு ஏற்புடையவர்களாய் நடந்து கொள்ள வேண்டும். (கொலோ 1:10). அது தூய்மையானது, அமைதியை நாடும், பொறுமை கொள்ளும், இணங்கிப்போகும், இரக்கமும் நற்செயல்களும் நிறைந்தது, நடுநிலை தவறாதது வெளி வேடமற்றது (யாக். 3:17).

சிறந்த கல்வியாளராக திகழ கடினமாய் உழைத்திட வேண்டும். இறையருளை பெற்றவர் உயர்ந்த அடைக்கலத்தில் வைக்கப்படுவர். கற்றவற்றை செயல்பாட்டினால் வெளிப்படுத்துங்கள் ஞானிகளாய் வாழுங்கள்.

## பெற்றோர்கள் குழந்தைகளுக்கு பங்களிக்க வேண்டியவை

1. தன்னம்பிக்கை
2. ஊக்கம்
3. படிக்கிற சூழல்
4. தேவையான வசதிகள்
5. நல்ல பழக்க வழக்கங்களை மேற்கொள்ள தூண்டுதல்
6. தீய சவகாசம் தவிர்த்தல்
7. அன்பான அணுகுமுறை
8. வாய்ப்புகளை ஏற்படுத்துதல்
9. பிரச்சனைகளை பகிர்தல்
10. கலந்தாலோசித்தல்

## மாணவர்கள் கடமைகள்

1. வகுப்பறையில் ஆழ்ந்து கவனித்தல்
2. செய்முறை வகுப்புகளில் விழிப்புணர்வு
3. சந்தேகங்களை உடனுக்குடன் போக்கி கொள்ளுதல்
4. நேர்மையான உழைப்பு
5. ஆசிரியர்களுக்கு மரியாதை
6. வீட்டுபாடங்களை சுயமாக நிறைவேற்றுதல்

## ஆசிரியர் கடமைகள்

1. மாணவர்களுக்குத் தகுந்த அணுகுமுறை
2. உற்சாகமூட்டும் முறையில் வகுப்புகள்
3. மாணவர்கள் அதிகம் பங்கெடுக்கும் வகையில் சொல்லிக்கொடுக்கும் முறை
4. மாணவர்களின் படைப்புத் திறனை தூண்டுதல்
5. காட்சி - கேள்வி உபகரணங்களை அதிகமாக உபயோகித்தல்
6. மாணவர்களின் தன்னம்பிக்கையை பெருக்க உதவி செய்தல்

அருள்திரு. **J. ஸ்பர்ஜன் இன்பஜெயா**

*விழாக்கால அருளுரை*

# கல்விகூட திறப்பு நாள்

நீதி. 4:1-13

***"அதை (ஞானத்தை) அடைவதில் நாட்டங்கொள்." நீதி. 4:6***

ஆஸ்திரேலியாவை சார்ந்த வாலிபன் ஒருவன் ஒலிம்பிக் போட்டியில் கலந்து கொண்டு வெண்கலப் பதக்கத்தை வென்றான். அந்த செய்தியை தொலைக்காட்சியில் பார்த்துக்கொண்டிருந்த அவனுடைய நண்பர்கள் சிலர் உற்சாக மிகுதியோடு அவனுடைய தந்தையை சந்தித்து வாழ்த்து கூறச் சொன்னார்களாம். ஆனால் மகன் வெண்கலப் பதக்கம் வென்ற செய்தியால் எந்த மகிழ்ச்சியும் அடையாத தந்தையாக அவரை அவர்கள் கண்டு ஆச்சரியப்பட்டனர். ஏன்? என்று வினவின போது, என் மகன் தங்கப்பதக்கம் பெறுமளவிற்கு அவனுக்கு பயிற்சி கொடுத்திருந்தேன். அவன் அதை எப்படி இழந்தான் என்று வருத்தத்தோடு கூறினார் அந்த தந்தை. இப்படியே பிள்ளைகளை பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கிற பெற்றோரின் மன நிலையும் இருக்கிறது. பிள்ளைகள் கல்விநிலைகளில் சிறிது தடுமாறும்போது தங்கள் எதிர்பார்ப்புகளில் ஏமாற்றம் ஏற்பட்டது என வருத்தப்படுகிறார்கள். உண்மையிலேயே பிள்ளைகள் கல்வியில் சிறிது தடுமாறுவதற்கு காரணம் ஞானத்தை அடைய வேண்டும் என்கிற ஆர்வமின்மையும், நாட்டமின்மையுமே ஆகும். இச்சூழலில் ஞானி சாலமோன் தரும் ஆலோசனை என்னவென்றால் ஞானத்தை அடைவதில் நாட்டங்கொள் (4:6) செல்வத்தை நாடுவதுபோல் ஞானத்தையும் நாடி புதையலுக்காக தேடும் ஆர்வத்தோடு அதைத்தேடி (2:4) என்பதாகும். எனவே புதிய கல்வியாண்டில் ஞானத்தை அடைவதில் நாட்டங்கொண்டு கடின உழைப்புடனும், விடா முயற்சியுடனும் வாழ அழைக்கப்படுகிறோம். ஆகவே மாணவ செல்வங்களாகிய நாம் எப்படி? எதற்காக? நாட்டங்கொள்ள வேண்டும் என தியானிப்போம்.

## 1. புறக்கணியாதே - நாட்டங்கொள்

பாடசாலைக்கு செல்லவேண்டும், கட்டுப்பாட்டுடனும், ஒழுக்கத்துடனும் பாடங்களை கற்க வேண்டும் என்பதால் புதிய கல்வியாண்டின் ஆரம்பம் சிலருக்கு மகிழ்ச்சியையும், பலருக்கு வெறுப்பையும் ஏற்படுத்துகிறது. மேலும், பெற்றோரின் உயர்ந்த எதிர்பார்ப்பை நிறைவேற்ற வேண்டும், ஆசிரியர்களின் சீரிய வழிநடத்துதலின் அடிப்படையில் பயில வேண்டும் என்னும் மன அழுத்தத்துடன் பாடசாலைக்கு அடியெடுத்து வைக்கும் மாணவர் பலருக்கு கல்வியை குறித்து கசப்புணர்வு ஏற்படுகிறது. ஆனால் விவிலியம் தரும் அறிவுரை என்னவென்றால் ஞானத்தைப் புறக்கணியாதே ... அதை அடைவதில் நாட்டங்கொள்... ஞானத்தைத் தேடி பெறுவதே ஞானமுள்ள செயல். உன் சொத்துகள் எல்லாம் கொடுத்தாயினும் மெய்யுணர்வைத்

தேடிப்பெறு (4:6.7) வாழ்வில் செல்வம் தேவை என்றாலும் ஞானமில்லாத செல்வம் வாழ்வில் நிறைவை தராது என்பது திண்ணமே. சில மாதங்களுக்கு முன் தினத்தந்தி செய்தி தாளில் 16 செல்வங்களை பட்டியலிட்டனர். அதில் முதல் செல்வம் கல்வி/ஞானம் என மக்களுக்கு தெளிவுபடுத்தியிருந்தது. திருவள்ளுவர் தம் 400-வது குறளில் யாராலும் எவ்வகையிலும் கேடு விளைவிக்க முடியாது சிறந்த செல்வம் கல்வி செல்வமாகும். ஏனைய செல்வங்கள் அத்தகைய பெருமையை அடைய முடியாதெனவும் அழியக்கூடியனவுமாம் என்கிறார். மேலும் தமிழக மாநில அரசு கூட மாணவ செல்வங்களுக்கு பற்பல புதிய சலுகைகளை தொன்று தொட்டே அறிவித்து கொண்டு வருகிறது. மேலும் கிராம மாணவர்களை உற்சாகப்படுத்தும்படி உயர் கல்விகளுக்கு இட ஒதுக்குகளை ஏற்படுத்தி வருகிறது. இதற்கு மூலகாரணம் மாணவர்கள் ஞானத்தை புறக்கணியாது அதன் பெயரிலே நாட்டங்கொள்வதற்காகவே அன்பான மாணவ செல்வங்களே கல்வியை சுமையாகக் கொண்டு புறக்கணியாமல் ஆர்வத்துடன் நாடி தேடி வெற்றி வாழ்வை நாடுங்கள்.

## 2. புகழுக்காக - நாட்டங்கொள்

ஞானத்தை உயர்வாய்க் கொள், அது உன்னை உயர்த்தும்; அதை நீ தழுவிக்கொள் அது உன்னை மாண்புறச் செய்யும், அது உன் தலையில் மலர் முடியைச் சூட்டும், மணிமுடி ஒன்றை உனக்கு அளிக்கும் (நீதி. 4:8) மேலும் சாலமோன் (பிர. 8:1) ஞானம் ஒருவன் முகத்தை ஒளிமயமாக்கும் என குறிப்பிடுகிறார். ஆழமாக ஆராய்ந்து கல்வி கற்றவர்கள் எந்த ஊருக்குச் சென்றாலும், எந்த நாட்டுக்குச் சென்றாலும் சிறப்பு எய்துவர் என்பது உண்மையே ஏனென்றால் உண்மையான கல்வி அறிவுடையோர் நன்மை, தீமை எது என்பதை வேறு பிரித்தறிந்து செயல்படுவதால் தடுமாற மாட்டார்கள். ஒருவேளை செல்வமுடையோர் இகழ்ச்சியடைந்தாலும் ஞானமுடையோர் புகழ்ச்சியடைவார்கள். நமது கல்வி நமது கழுத்துக்கு அணிகலனாக இருந்து நாம் மாண்புறவும் செய்யும். ஆகவே ஞானத்தை அடைய ஆர்வமுடன் நாடுவோம்.

## 3. புதுமை படைக்க - நாட்டங்கொள்

இயேசுவானவர் சிறுவதிலிருந்தே ஞானத்திலும் உடல் வளர்ச்சியிலும் மிகுந்து வந்தார் என அறிவோம். இப்படி அவர் ஞானத்தால் மிகுந்து வந்தபடியால் எருசலேம் தேவாலயத்தில் போதகர் நடுவில் இருந்து திருச்சட்டத்தில் புரியாத புதிராக காணப்பட்ட புதுமையான உண்மைகளை புரிய வைத்தார். இவற்றை கேட்ட அனைவரும் அவருடைய புரிந்து கொள்ளும் திறனையும் அவர் அளித்த பதில்களையும் கண்டு மலைத்துப் போயினர் (லூக். 2:47) இயேசுவானவரைப் போல கடவுளால் படைக்கப்பட்ட ஒவ்வொரு பிள்ளைகளும் புதுமை படைக்கும் ஆற்றலுடையவர்கள். ஆகவே இப்புதிய கல்வியாண்டை வீணடிக்காதபடி ஞானத்தில் மிகுந்த புதுமைகளை படைப்போம். நாம் புதுமை படைப்பதை மற்ற மாணவர்களும் நமது ஆசிரியர்களும், சமூகமும் கண்டு கடவுளை மாட்சிமைபடுத்தும் பொருட்டு, ஞானத்தை அடைய நாட்டங்கொள்வோம்.

அருள்திரு. **G.S. அஸ்வின் ஜெய்சிங்**

*விழாக்கால அருளுரை*

# நூலக ஆண்டுவிழா

அப். 8:27-36

*"ஒருவன் எனக்குத் தெரிவிக்காவிட்டால் அது எனக்கு எப்படித் தெரியும்." அப். 8:31*

21-ம் நூற்றாண்டில் வாழும் நாம் நூலகத்தின் பயன்கள் மற்றும் அதன் சிறப்புகளை அறிந்திருக்கிறோம். அரசின் நடவடிக்கைகள் துரிதபடுத்தப்பட்டு நூலகமில்லாத கிராமங்களில்லை என்ற நிலை நாட்டில் உருவெடுத்துள்ளது. இறையறிவு, பொது அறிவு ஆகியவைகள் நூலகத்தை பயன்படுத்துவதால் கிடைக்க பெறும் அரிய அழிவில்லாத பெட்டகங்களாகும். நூலகம் மக்களை எல்லா காலத்திலுமுள்ள நடப்புகளை அறிவதும், அவற்றை உள்வாங்கி செயல்படுத்தி வாழவும் உதவிசெய்கிறது. ("Library help persons for all ages to accumulate knowledge and how to apply to their lives") இத்தகைய மானிடத்தின் நன்மையான வாழ்வுக்கு குடும்பம், சமூகம், திருச்சபை இவைகளை குறித்து அறிதல் நமது முக்கிய கடமையாகும்.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்" என ஔவையாரு, "எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும் கண்ணென்ப வாழும் உயிற்கு" என வள்ளுவரும் குறிப்பிட்டிருப்பது மனிதனுக்கு அறிவாற்றல் எல்லா சூழ்நிலைகளிலும் தவிர்க்கமுடியாதது என்பதை உணர்த்துகிறது. பட்டறிவை போன்று நூலறிவும் பல்கலைகழகத்தின் நூலகத்தில் கண்டெடுத்த வாசித்த திருமறை பகுதிகள் அவரில் மனத்தெளிவையும் உண்மைக்காய் போராடும் தைரியத்தை ஏற்படுத்தி திருச்சபை மற்றும் சமூகத்தில் 16-ம் நூற்றாண்டில் நிலவிய ஆன்மீக செயல்முறைகளில் சீர்திருத்தம் ஏற்பட தூண்டியது. திருமறை கண்ணோட்டத்தில் நூலகத்தை பயன்படுத்தி எவ்விதம் வாசகர்களுக்கும் மக்களுக்கும் பயனாளிகளாய் வாழமுடியும் என்பதை வலியுறத்துவதே 2011-ம் ஆண்டு நூலகவிழாவின் செய்தியாகும்.

## 1. *நல் எதிர்நோக்குடன் படியுங்கள்* (ஏசாயா 34:16)

'திரை கடல் தாண்டியும் திரவியம் தேடு' என்பது முதுமொழி? நல்ல புத்தகங்களையும் நூலகத்தையும் நாடி முயன்று படித்தது அவசியமானது. ஏசாய தீர்க்கமாக இறைவார்த்தைகளின் ஆற்றலை கண்டடையும் விதமாக இஸ்ரவேல் மக்கள் வாசகர்களாக மாறவேண்டும் என்பதையும், கர்த்தருடைய வார்த்தைகளை தேடி கண்டுபிடித்து வாசிக்கும் பழக்கத்தை

வளர்த்துக்கொள்ள வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகிறார். நெகெமியாவின் காலத்திலும் இடிந்த அலங்கம் கட்டப்பட்டு, பழுதுபார்த்து, புனரமைக்கப்பட்டபின்பு இறைவார்த்தைகளை மக்களுக்காக வாசிக்கப்பட்டது அதற்கு மக்கள் செவிசாய்த்தார்கள். (நெகே. 8:1-3). இயேசு நாதரின் காலத்திலும், ஆலயத்திற்கு சென்று (லூக்கா 4:20). நாம் தேடி படிக்கும் பகுதிகள் நமக்கும் அதை கேட்பவருக்கும் பயனுள்ளதாக அமையவேண்டும். நாம் கண்டுபிடிக்கும் வாசகங்கள் மக்களை கவர்ந்திழுப்பதாகவும், தற்கால வாழ்வு சூழலுக்கு பயனுள்ளதாகவும் அமைதல் வேண்டும். படிக்க எடுத்துக்கொள்ளும் முயற்சி மற்றவர்களையும் வாசிக்கவும் சிந்திக்கவும் தூண்ட வேண்டும். கடவுளின் வார்த்தை பொன், வெள்ளியை பார்க்கிலும் உயர்வானதும் நலமானதும் என்று தாவீது அரசர் பாடுகிறார் (திபா. 119:72). திருமறையை முயன்று படிக்கும் வாசகவட்டமாக திருச்சபை மாறவேண்டும். படிக்கும் பழக்கம் எல்லாகாலத்திற்கும் அவசியமானது இதற்கு வயதை காரணமாக காட்டிக்கொள்ள முடியாது. முயன்று படிக்கும் புத்தகங்கள் நமக்கும் மக்களுக்கும் பயன் சேர்ப்பதாக அமைதல் வேண்டும். ஆகவே நாம் எடுத்து அல்லது தெரிந்து படிக்கும் புத்தகங்களின் ‘தரம்’ அதனுடைய ‘நோக்கம்’ இவற்றை கருத்தில் கொண்டு படிக்க வேண்டும். வாசகர்கள் எந்த செய்தி அல்லது புத்தகம் நல்லது என்பதை ஆராய்ந்து அறிந்து தேடி கண்டுபிடித்த படிக்கும் வாசகர்களாக காணப்பட்டால் புதிய தடயங்களை எடுத்து துறைகளில் பதிக்க முடியும்.

### 2. *நலமானதை அறிந்து படியுங்கள்* (திபா. 8:27-36)

படிக்கும் பகுதிகள் எவை என்பதை அறிந்து படிப்பது ஏற்புடையதாகும். எத்தியோப்பிய மந்திரி எசாயா இறைவாக்கினரின் நூலை வாசித்துக்கொண்டிருப்பதை கேட்ட பிலிப்பு அதனடைய பொருளை உணர்த்த மந்திரியோடு பயணம் செய்து, தெளிவுபடுத்தி அவனை திருமுழுக்குக்கு வழிநடத்தினார். படித்தவைகள் மனதில் ஆழத்தில் பதிந்து கிடந்தால் அவைகள் மற்றவர்களின் வாழ்வுக்கு பயன்படும். எத்தனை முறை திருமறையை படித்தீர்கள் என்பதை கேட்டு திருச்சபைகளில் பரிசு கொடுத்து உற்சாகப்படுத்திய காலங்கள் மாறிவிட்டன. மேலும் எப்படி படித்திருக்கிறாய் என்பதில்தான் நமது முக்கியத்துவம் அமைந்திடல் வேண்டும். எத்தியோப்பிய மந்திரிக்கு சொன்னால் தான் விளக்கம் தெரியும் (தி.ப. 8:31) படித்து அறிந்து மனதில் நிறுத்தினவர்கள் அதனுடைய பொருளை சொல்லும் தகுதியுடையவர்கள் என்பதை பிலிப்புவின் அனுபவவாழ்வு நமக்கு பாடமாக சொல்லப்படுகிறது. கடவுளை அறிவதிலும், ஆலயத்தின் மகத்துவத்தை உணர்ந்து கொள்வதிலும் நமது படிப்புக்கள் துணை நிற்க வேண்டும். நெகேமியாவின் காலத்தில்

திருமறைப்பகுதிகளை அறிவதற்கு மக்கள் ஆர்வம் காட்டினார்கள். அதை கற்றுக்கொடுத்தவர்களும் தெளிவாய் கற்றுக்கொடுத்து புதிய சமூகம் உருவாக காரணமானார்கள். (நெகே. 9:188) புதிய சமூகத்தை உருவாக்கும் முயற்சியில் இறங்கியிருக்கும் நாம் நமது நூலகத்தை பயன்படுத்தி காரியங்களை எல்லாகாலத்திற்கும் பயன்பெறும் விதத்தில் மனதில் நிறுத்தும் ஆற்றலுடையவர்களாய் படிக்க வேண்டும்.

### 3. *நல் தடயங்களை பதித்திட படியுங்கள்* (எரேமியா 15:16)

நமது படிப்பு நம்மை முன்மாதிரியாக நிறுத்தவேண்டும். எரேமியா தீர்க்கர் கடவுளின் வார்த்தை உட்கொண்டவர்களின் பட்டியலின் மாதியாய் மாறினார். மேலும் கடவுளுடைய வார்த்தை மகிழ்ச்சியும் உள்ளத்திற்கு உவகையும் ஏற்படுத்தியதாக கூறகிறார். படித்து வார்த்தைகளை மனதில் நிறுத்துகிறவர்கள் முன்மாதிரி வாசகர்களாக சமூகத்தில் வாழ்பவர்கள். முயன்று, மனதில் நிறுத்தி படித்தால் ஆபத்து நேரங்களில் அவைகள் நமக்கு கைகொடுத்து அத்தகைய சூழலை வெற்றிக்கொள்ள உதவிசெய்கிறது. இயேசுநாதர் தான் படித்து மனதில் நிறுத்திய வார்த்தைகளை தனது சோதனை நேரத்தில் சரியாய் பயன்படுத்தி சோதனைகாரனை வெற்றி கொண்டார் (மத். 4:4-10). படித்து அறிந்தவைகள் வாழ்வில் செய்லபடுத்த வேண்டியவைகள். வாழும் சமூகத்தில் படித்தவர்கள் முன்மாதிரிகளாக வாழவேண்டும் அறிந்தவற்றை மற்றவர்களும் அறிந்துக்கொள்வதற்கு வாசகர் வட்டத்தை விரிவுபடுத்த வேண்டும். தரமான படைப்புகளை வரும் தலைமுறையினருக்கு பயன்படும் விதமாய் எழுதி அவைகள் வெளியீடுகளாய் வருவத்றகான முயற்சியில் இறங்கவேண்டும். பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாடு காலத்தில் கண்டவற்றையும், படித்தவற்றையும், கேட்டதையும் எழுத்து வடிவில் தருவதற்கான முயற்சியில் இறங்கி வெற்றி கண்டவர்களே இன்று நம் திருமறையில் முன்மாதிரிகளாய் நிற்பவர்கள். முன்மாதிரிகளாக வரவேண்டும் என்ற எண்ணத்தோடும் மனநிலையோடும் படிப்பவர்கள் சமூகத்தில் பல சரித்திர படையல்களையும் தடயங்களையும் உருவாக்க முடியும்.

திருமறை அறிவு, பொது அறிவு, கல்வி அறிவு, போன்றவைகளை அறிந்துக்கொள்ள நூலகம் பெரிதும் பயன்படுகிறது. எல்லா புத்தகங்களையும் விலைக்கு வாங்கி படிக்கவும் அவைகளை பத்திரமாய் பாதுகாக்கும் வசதியும் நம்மில் இல்லாமலிருக்கலாம். ஆகவே சமநோக்கு பார்வையோடு செயல்படும் இத்திருச்சபையின் நூலகத்தை பயன்படுத்தி முயன்று, மனதில் நிறுத்தி, முன்மாதிரிகளாக படித்து சாதனை படைப்போம்.

அருள்திரு. **முத்துசுவாமி கிறிஸ்துதாஸ்**

*விழாக்கால அருளுரை*

# இறைமக்கள் திருப்பணி - இறைமக்கள் அனைவரும் ஆசாரியரே!

**MINISTRY OF THE LAITY-PRIESTHOOD OF ALL BELIVERS**

2அரச. 7:3-10 திப. 8:1-25
திபா. 78:1-8 மத். 4:23-25

*“சிதறிய மக்கள் தாங்கள் சென்ற இடமெல்லாம் நற்செய்தியை அறிவித்து வந்தனர்.” தி.ப 8:4*

தொடக்கக்கால கிறிஸ்தவத் திருச்சபைகளில் ஆசாரியர்கள் இறைமக்கள் என்ற பாகுபாடு இல்லை. தி.ப. 6:2-4 இல் நாம் காண்பது போல திருத்தூதர்கள் கற்பிப்புப் பணியில் நிலைத்திருக்க பந்தி பரிமாறும் பணிக்காக இறைமக்கள் சிலரை நியமித்துக் கொண்டனர். தி.ப. 2:42-45 வசனங்களில் சொல்லப்பட்டபடி கற்பிப்புப்பணி மற்றும் திருப்பணிகளை அனைத்தும் அப்பம் பிட்குதல் உட்பட இறைமக்களால் இல்லங்கள் தோறும் நடத்தப்பட்டன. யூத சமயம் மற்றும் பிறசமயங்களில் இருந்தது போன்ற ஆசாரியப்பணி தொடக்கத் திருச்சபைகளில் இல்லை. ஆனால் கி.பி நான்காம் நூற்றாண்டின் தொடக்கத்தில் உரோமைப் பேரரசர் கான்ஸ்டன்டைன் கிறிஸ்தவத்தைத் தழுவியதும் அரச தொழுகைக்காக பேராலயங்களைக் கட்டினார். உரோமை நகரில் மற்ற சமயங்களுக்கு வழங்கப்பட்டது போன்று கிறிஸ்தவ சமயத்திற்கும் “ஆசாரியர் ஊதியம்” ஒதுக்கீடு வழங்கப்பட்டது. இந்த அரச ஊதியம் பெற கிறிஸ்தவர்களை சிலரை முன் நிறுத்த வேண்டியது ஏற்பட்டது. இவ்விதம் ஆசாரியர்கள் என்ற அதிகாரம் மிகுந்த தனிப்பிரிவு திருச்சபையின் தலைமைத்துவத்தையும், அதோடு அனைத்துத் திருப்பணிகளையும் தனக்கென எடுத்துக் கொண்டது. ஆனால் 1 பேதுரு இறைமக்கள் எல்லோர்கள் அமைதியாக ஆசாரியர்களை சார்ந்து வாழ்வோர் அன்று மாறாக இறைமக்கள் அனைவரும் ஆசாரியர்களே என்கிறார் (1பேதுரு 2:9). ஏனெனில் திருச்சபையின் அங்கங்கள் இறைமக்களே. அதோடு திருச்சபை என்பது கிறிஸ்துவைத் தலையாகக் கொண்டு மக்களால், மக்களுக்காக இயங்குகின்ற மக்களின் இயக்கமே ஆகும். எனவே இன்றைய திருமறைப் பகுதிகள் வழியாக இறைமக்களின் இறைப்பணிகள் எவைகள் என ஆய்வோம்.

**1. *துணிவுடன் நற்செய்தி அறிவித்தல் :*** 2அரசர்கள் 7:3-10

இன்றைய முதல் திருமறைப் பகுதியில் தொழுநோயாளிகள் நற்செய்தியை உரைத்த நிகழ்வு சொல்லப்பட்டுள்ளது. யூத சமய சட்டப்படி தொழுநோயாளர்கள் நகருக்குள் அனுமதிக்கப்படுவதில்லை (லேவி 13:45) அவர்கள் தொலைவில் வரும் போதே தீட்டு தீட்டு என சத்தமிட வேண்டும். இவர்கள் வாழ்வதற்கு பிறரின் உதவி

அவசியமாயிருந்தது. இச்சூழலில் நான்கு தொழுநோயாளர்கள், சீரியரின் முற்றுகையிடப்பட்டதால் ஏற்பட்ட பஞ்சத்தினால் மிக மோசமான வறுமை நிலவியது. பட்டினி நிலைக்கு தள்ளப்பட்டனர். பஞ்சத்தினால் எட்டியும் சாவது உறுதி எனில் எதிரிகளின் பாசறைக்குள் செல்வது என முடிவெடுத்தனர் (2 அரசர் 7:4). அவ்வாறு அங்கு செல்ல சீரியர் படையினர் தேர்களை, குதிரைகளை, பெரும்படையின் சத்தம் கேட்டு ஏற்கனவே ஓடியிருந்தது தெரிய வருகிறது (2 அரசர் 7:6). இதனால் சீரியர் பாசறைக்குள் நுழைந்த தொழுநோயாளிகள் நன்கு உணவு உண்டதோடு இச்செய்தியை பிறருக்கும் சொல்லாவிட்டால் குற்றம் நம்மீது சுமரும் என்ற உணர்வுடன் நற்செய்தியை நாமுரைக்க தீர்மானித்தனர். தி.ப. 8:4 இல் சிதறிய மக்கள் அனைவரும் நற்செய்தியை நன்றுரைத்த குறிப்பு உள்ளது. சமுதாயத்தால் கைவிடப்பட்டவராக எண்ணப்பட்ட இடையர்கள் இயேசுவின் பிறப்பு செய்தியை நற்றுரைத்தனர் (லூக்கா 2:17). இறைமக்களின் இறைப்பணி நற்செய்தியை நன்றுரைத்தல்.

**2. துணிவுடன் துன்பம் ஏற்றல்** தி.ப. 8:1-25

இன்றைய இரண்டாம் திருமறைப் பகுதியில் கிறிஸ்துவுக்காகவும், நற்செய்திக்காகவும் தொடக்கத் திருச்சபையினர் ஏற்ற துன்பங்கள் சொல்லப்பட்டுள்ளன. இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்புக்குப் பின் அவரது சீடர்கள் ஒருசேர ஒருமையமாக கொண்டு இறைபணி செய்ததன் ஆர்வம் பக்தி வைராக்கியம் கொண்ட யூத மார்க்கத்தாரின் துன்புறுத்தலால் அவர்கள் சிதறடிக்கப்பட்டதோடு, சிறையிலும் அடைக்கப்பட்டனர் (தி.ப 8:3). உடலளவிலும் மனதளவிலும் வெகுவாக துன்பப்பட்ட தொடக்ககால திருச்சபை பற்றாளர்கள் துன்புறுத்தலால் சிதறி சென்ற இடங்களிலெல்லாம் நற்செய்தியை சுமந்து சென்று மக்களுக்கு அறிவித்தனர் (தி.ப 8:4). அதிலும் பிலிப்புவின் பணி மிகச் சிறப்பானதாக அமைந்தது. ஏனென்றால் யூதர்கள் சமாரியர்களோடு எந்த உறவும் வைத்துக் கொள்வதில்லை. "ஒரு சமாரியனிடத்திருந்து பெற்ற அப்பத்துண்டு. பன்றி இறைச்சியை விட கேவலமானது என தால்மூட் சட்டதொகுப்பு சொல்லுகிறது. அந்த அளவுக்கு கேவலமாக" தரம் குறைவாக யூதர்கள் சமாரியர்களை எண்ணினர். எனினும் பிலிப்பு சமாரியா நகர் சென்று அங்குள்ள மக்களுக்கு மெசியாவைப் பற்றி அறிவிக்கிறார். இதனால் பலர் இயேசுவை ஏற்றுக் கொண்டனர் (தி.ப 8:5-8). எந்த துன்பம் வந்தாலும் இயேசுவுக்காக, நற்செய்திக்காக அவற்றை துணிவுடன் ஏற்போரே இறைமக்கள்.

தொழுநோயாளர்கள், இயேசுவின் சீடர்கள், தொடக்கத் திருச்சபை பற்றாளர்கள் அனைவரும் இறைமகன் இயேசுகிறிஸ்துவை போல துணிவுடன், துன்பங்கள் ஏற்று நற்செய்தியை பறைசாற்றினார். இறைமக்களாகிய நாமும் சமயம் வாய்க்கும் போதெல்லாம் துணிவுடன் துன்பம் ஏற்று, இயேசு கிறிஸ்துவை மாதிரியாக கொண்டு நற்செய்தியை நன்றுரைத்து வாழ்வோம்! இறையரசை விரிவாக்குவோம்.

அருள்திரு. **J. நேச பிரின்ஸ்**

*சபை நாள் விழா* *விழாக்கால அருளுரை*

# திருச்சபை

திப. 2:41-46

"*இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார்.*"
*திப. 2:47*

## *திருமறைப்பாட பகுதிகள்*

திருச்சபைகள் உருவாக காரணமாக அமைந்த பல நிகழ்வுகளை மையமாக கொண்டு நடைபெறும் சிறப்பு கூடுகையில் நாம் பயணித்த பாதைகள், சபைகளுக்காய் அடித்தளம் அமைத்தவர்கள், துவக்ககால தலைவர்கள், இணைந்து செயல்பட்டவர்கள் பொருளாலும் நல் ஆலோசனைகளாலும் தாங்கி வந்த விசுவாச குடும்பங்கள், சபை பெற்றுக்கொண்ட வளர்ச்சி நிலைகள் திருச்சபை எனும் உறவினில் எப்படி பயணிக்க வேண்டுமென்பதை திருமறை வழிகாட்டுதலில் சிந்திக்க அழைப்பு விடுக்கின்றேன்.

### ***1. இறையுறவில் நடத்தல் :*** திபா. 2:41

பரிசுத்த பேதுருவின் பணிவிடை நாட்களில் வாழ்ந்த இறைமக்களைப் போல ஒற்றுமை, புரிந்துணர்வு கபடமில்லாத இருதயம், மகிழ்ச்சி, பகிர்வு போன்ற நற்குணங்களோடு சபைகள் வளர வேண்டும். அவைகள் திருச்சபையின் வாழ்வுக்கு அடித்தளமாக இருக்கும். மானிட உறவினில் இணக்கமான பங்களிப்பும், விட்டு கொடுத்தல் மனப்போங்கும் இளைய நல்ல வளர்ச்சியின் ஊடகங்களே. அந்த நிலையில் செய்யபட வேண்டும். விசுவாச பற்றாளர்களாக, வியத்தகு எண்ணங்களில் வளர இறையுறவு முக்கியமானது. இறை வார்த்தை பகிர்வு, இறைவேண்டல் இறைஇல்ல ஆர்வம் இவையே திருமக்களின் வளர்ச்சிக்கு ஏற்கத் தக்கதான ஆன்மீகமாகும்.

### ***2. இறையுரை முன்னிலைப்படுத்தல் :*** மத். 3

இறைமக்கள் இணைந்து இறைவனை தொழும் இடம் இறை இல்லம். இந்த இடத்தினில் இறைவன் இருக்கிறார் எனும் போது நமது எண்ணங்களில் தெளிவும் ஒப்படைப்பும் உயர்ந்த பார்வையும் உயர்ந்து

நிற்கிறது. காரணம் கடவுளே நம்முள் உறைந்து இருக்கிறார். எல்லாவற்றுக்கும் எல்லாமாக இருக்கிறார். இத்தகைய பற்றுமையில் இறையிலரை முதன்மையாக கொள்வதே சிறப்பு (தி.ப 11:21, 12:5 மத் 24: 1,2)

### *3. இறையாளுமையில் இணைதல் :* 2:46

இறையாளுமையில் இணைப்பதே உள்ள மாற்றம். அதுவே சீரான, சிறப்பான வழிமுறைகளுக்கு வழிகாட்டுகிறது. இணைந்து செயல்படும் போது மட்டுமே இறையாளுமையின் மேன்மையை அனுபவித்துக் கொள்ள முடியும்.

இறைமக்களாகிய நாமும் இத்தகைய பண்புகளை பதித்துக் கொண்டவர்களாக புதிய பார்வையுடன் செயல்படுவோம். திருச்சபை எனும் சமூக உறவினில் சான்றுள்ள நெறியாளர்களாக வாழ்ந்திடுவோம். அத்தகைய எதிர்நோக்கினில் இறையவரை போற்றி புகழ்ந்து மாட்சிபடுத்துவோம்.

திரு. **R. அன்புமணி**

*விழாக்கால அருளுரை*

# ஜெபக்குழு ஆண்டுவிழா
# “பதில் தரும் ஜெபம்”

எபி. 5:1-10 மத். 4:23-25

***“அவர் இவ்வுலகில் வாழ்ந்த காலத்தில், தம்மைச் சாவிலிருந்து காப்பாற்ற வல்லவரை நோக்கி உரத்த குரல் எழுப்பி, கண்ணீர் சிந்தி, மன்றாடி வேண்டினார்.” எபி. 5:7***

கிறிஸ்தவ வாழ்வில் ஜெபம் முக்கியமானது. வானத்தையும் பூமியையும் உண்டுபண்ணிய நமதாண்டவரோடு அவரது பிள்ளைகள் பேசுவது. ஒவ்வொரு நாளும் ஆண்டவரோடு பேசுவது விசுவாசிக்கு இன்றியமையாதது. ஜெபம் என்பது நமது உலகப் பிரகாரமான தேவைகளை சந்திக்கும்படி கடவுளிடம் கேட்பதல்ல. மாறாக அவர் நமக்கு வாக்குபண்ணியிருக்கிறதான நித்திய ராஜியத்தில் பிரவேசிக்கும்படியாக நமக்குத் தேவைப்படும் ஆன்மீக நன்மைகளுக்காக அவரிடத்தில் வேண்டுவதுதான் ஜெபம். திருமறையில் பார்க்கும்போது அவருடைய பிள்ளைகள் தங்கள் உறவை எல்லா நேரத்திலும் கண்ணீரோடு ஆபத்து நேரங்களில் காத்து இருந்து ஜெபித்து மேன்மைபடுத்தி இருக்கிறார்கள்.

## 1. *கண்ணீரோடு ஜெபியுங்கள்* எபி. 5:7

இயேசு ஜெபித்தப்போது வியர்வை சிந்தி, கண்ணீரோடு வேண்டினார் திருப்பணியிலும் தனிவாழ்விலும் குடும்ப வாழ்விலும் கண்ணீர் சிந்தி அர்ப்பணத்தோடு ஜெபிக்கும்போது விடை மகிழ்ச்சியாகிறது. ஜெபவீரராகிய ஒரல்ராபர்ட்ஸ் முழங்கால்படியிட்டு உபவாசித்து கண்ணீரோடு ஜெபித்தபோது ஆவியின் நல் வரங்களினால் நிரப்பப்பட்டார் ஆத்தும பாரம் அவருக்குள் வந்தது (திபா. 56:8) என் கண்ணீரை உம்முடைய துருத்தியில் வையும் அவைகள் உம்முடைய கணக்கில் அல்லவோ இருக்கிறது (எரே. 9:1). எரேமியாவின் மேல் இருந்த விண்ணப்பபாரம் நான் இரவும் பகலும் அழுதேன் (2இரா. 20:5) எசேக்கியாவை பார்த்து உன் விண்ணப்பத்தைக் கேட்டேன் உன் கண்ணீரை கண்டேன் நீ கர்த்தருடைய ஆலயத்துக்குப் போவாய். ஆம் அவருடைய வியாதி நீங்கி 15 வருடங்கள் ஆயிசு நாட்களை கூட்டித்தருகிறார். (1சாமு. 1:10) அன்னாள் ஆலயத்தில் மனம் கசந்து மிகவும் அழுது கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணி, குழந்தையை கண்டுகொண்டார்கள். (லூக். 7:38) பாவியாகிய பெண்மணி இயேசுவின் பாதத்தில் கண்ணீரால் நனைத்தாள் இயேசு அவளுடன் பேசுகின்றார் அவள் பாவங்கள் மன்னிக்கப்பட்டது.

வேல்ஸ் தேச எழுப்புதலுக்காக கடவுள் பயன்படுத்தின பாத்திரம் ஈவன் ராபர்ட்ஸ். ஒரு முறை போதகர் ஜெபிக்கும்போது ஈவான்

ராபர்ட்ஸ்க்கு சிலுவையின் தியாக பலியைப்பற்றிய ஒரு தரிசனம் வந்தது ஆட்டுகுட்டியானவரின் விலையோறப் பெற்ற இரத்தம் தன்னைப் பரிசுத்தப்படுத்துவதாகக் கண்டார். பாவியான என்மேல் எவ்வளவு அன்பு வைத்தீரோ தேவா! என்று கதறி அழ ஆரம்பித்தார். கல்லவாரி அன்பு உள்ளத்தில் கரைபுரண்டு ஓடிக் கொண்டே இருந்தது. கண்ணீர் பெரு மழையைப் போல சொரிய ஆரம்பித்தது. அவர் புதிய எழுப்புதல் வீரராக வெளியே வந்தார். (திருப்பணியின் வெற்றியின் இரகசியம் விசுவாசிகளின் உருக்கமான கண்ஷீரின் ஜெபம்.

## 2. ***கலக்கத்தின் நடுவில் ஜெபியுங்கள்*** அப். 7 : 59

தங்கள் இக்கட்டு நேரங்களில் பற்றுறுதியில் வல்லவர்களாக இருந்து, தங்கள் உயிரையோ, உலகப் பிரகாரமான ஆஸ்திகளையோ எண்ணாதபடிக்கு அழைத்த ஆண்டவரை முற்றிலும் நம்பி இயேசுவோடு ஜெபித்த படியினால், தங்கள் இக்கட்டு நேரங்களில் மகிமையான பரலோக இராஜியத்தை நாடும்படியான தைரியமும், நம்பிக்கையும் திருமறையில் உள்ள அனேகருக்கு வந்தது. புனித ஸ்தேவான் தன்னுடைய வாழ்வில் போராட்டம் வந்தபோது (அப். 7 : 51-60) உபத்திரவத்தை ஒரு பொருட்டு என்று எண்ணாமல் தூய ஆவியரால் நிறைந்தவராகி வானத்தை அண்ணாந்து பார்த்து ஜெபித்தார். தன் ஆபத்து நேரத்தில் ஆண்டவரை கூப்பிட்டபடியினால் தன் உடலில் விழுந்த கற்களை கூட பொருட்படுத்தவில்லை. அது அவருக்கு வலிமைக் கொண்டுவரவும் இல்லை. மாறாக தன்னை கல்லால் எறிந்து கொல்லுகின்ற விரோதிகளுக்காக முழங்கால்படியிட்டு மன்றாடினார்.

(தானி. 6:11) தானியேல் ஜெபம் பண்ணியது அவருக்கு கண்ணியாயிற்று. சிங்ககெபியில் ஜீவனுள்ள ஆண்டவர் தானியேலை தப்புவித்து உயர்த்தினார். பரி பவுல் அடிகளார் வாழ்வில் வந்த ஆபத்துகள், துயரங்கள் மரணக் கண்ணிகள் யாவும் முழங்கால் யுத்தம் ஜெபிக்கச் செய்தது (2நாளா. 20 : 21) யோசபாத் அரசனுக்கு போர் வந்தது. ஆபத்து சூழ்ந்து கொண்டது. கர்த்தரைத் துதித்துக் கொண்டே போருக்குச் சென்றான். போரில் ஜெயம் கர்த்தர் கட்டளை இட்டார். ஆபத்து நேரங்களில் துதியின் பட்டயமே நமக்கு மேன்மைகளையும், விடுதலையையும் கொண்டுவரும். (யோவா. 1:19) இவ்உலகில் இயேசுவந்த நோக்கமே எந்த மனிதனையும் பிரகாசிக்க செய்வது. ஆகவே ஆபத்துகளும், இருளும் நம்மை சூழ்ந்து கொள்ளும்போது ஜீவ ஒளயில் நம்மை நடத்த ஊக்கமாக ஜெபிப்போம்.

## 3. ***காத்து இருந்து ஜெபியுங்கள்*** நீதி. 20 : 22

அதிகாலை ஜெபம், உபவாச ஜெபம், சங்கிலித் தொடர் ஜெபம், முழுஇரவு ஜெபம், காத்து இருந்து ஜெபம் என பல நிலைகளில் மன்றாடலாம். காத்து இருந்து ஒருமனதுடன் மன்றாடும் போது காரியங்களை வாய்க்கச் செய்யும் நம்பிக்கை பெறுவோம். காத்து இருந்து

ஜெபிக்கும்போது பரிசுத்த ஆவியர் நம்மை நடத்துவதை உணரமுடியும். அது வாழ்வில் வெற்றியைத் தரும் (நீதி. 20:22; எபி. 9:28) கர்த்தருக்கு காத்து இருப்பவர்கள் இரட்சிப்பில் சந்தோஷம் சுதந்திரித்துக் கொள்ள முடியும் (ஏசா. 4:31). கர்த்தருக்கு காத்து இருப்பவர்கள் புது பெலன் கண்டடைய முடியும் (ஏசா. 49:23) கர்த்தருக்கு காத்து இருப்பவர்கள் ஒரு போதும் வெட்கமடைந்து போவதில்லை (ஏசா. 64:4) கர்த்தருக்கு காத்து இருப்பவர்களுக்கு சகலமும் செய்து நிறைவேற்றுகிறவர் கர்த்தரே.

ஜார்ஸ் முல்லர் என்ற பரிசுத்தவானின் வாழ்வில் ஜெபம் உயிர் றநாடியாக இருந்தது. முழங்காலில் நின்றே ஆயிரமாயிரம் சிறுவர்களுக்கு உணவு, உடை, உறைவிடம் அத்தனையும் பெற்றுக் கொண்டார். அவர் தனது ஜெப குறிப்பேட்டில் எந்த ஜெபத்திற்கு பதில் கிடைத்து இருக்கிறது. பதில் பெற வேண்டிய ஜெபம் எவ்வளவு இருக்கிறது என்பதைப் பார்த்து, விசுவாசித்து பதிலை காத்து இருந்து பெற்றுக் கொள்வார் (மாற். 11:24). ஆகையால் நீங்கள் ஜெபம் பண்ணும்போது எவைகளை கேட்டுக் கொள்வீர்களோ அவகைளைப் பெற்றுக் கொள்வோம் என்று விசுவாசியுங்கள். அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும். இயேசுக் கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர். காத்து இருந்து அவரது அதிசயங்களை வாழ்வில் காண்ப்போம்.

ஜெபத்தின் இன்றியமையாத ஈவுகளை நாம் வாழ்வில் புரிந்து கொண்டு இன்றைய சவால்களை அன்றாடம் சந்திக்கும் முன் ஒவ்வொரு காயங்களுக்காகவும் முழங்கால் படியிட்டு குடும்பமாக மனம் ஒன்றித்து மன்றாடுவோம். எத்துணை ஆபத்துக்களோ, பாடுகளோ, ஒடுக்கப்பட்ட அனுபவங்களோ கடந்து செல்ல வேண்டியது வந்தாலும் விண்ணப்பத்திற்கு செவி சாய்கிற கர்த்தர் நமக்கு குண்டு என்று நிச்சயத்தோடு வாழ்வில் இயேசுக் கிறிஸ்துவின் இலக்கம் பெறுவோம்.

அருள்திரு. **T. ஜாண் பீற்றர்**

2011-ம் ஆண்டின் தொடக்க வார இறைவேண்டலின் தலையங்கம்

**எருசலேமில் உள்ள திருச்சபை-நேற்று, இன்று, நாளை.**

விவிலியப்பகுதி : தி.ப 2: 42-47

***முன்னுரை :***

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தொடக்க கால கிறிஸ்தவ பற்றுமையாளர்கள் பெந்தக்கோஸ்து அனுபவமாகிய தூய ஆவியாரின் அருள் பொழிவு மற்றும் கிறிஸ்துவின் திருவுடலின் ஒருமைப்பாடு இவற்றின் அடிப்படையில் ஒன்று கூடினார்கள். மட்டுமல்ல, இந்த ஒருங்கிணைப்பில் இயேசு கிறிஸ்துவை அரசராகவும், விடுதலையாளராகவும் (மீட்பராகவும்) அறிவித்தார்கள். தொடக்க கால கிறிஸ்தவர்கள் துன்பத்தின் அழுத்தங்களிலும், பற்றுமையிலும், அப்பத்தை பிட்டு, உணவைப் பகிர்ந்து கொள்வதிலும் இறைவேண்டலிலும் உறுதியுடனிருந்தார்கள் இதனடிப்படையில் இன்றைய எருசலேம் திருச்சபை ஊக்கப்படுத்துதல் மற்றும் புதிதாக்குதலுக்காக அழைப்பு விடுக்கிறது. மட்டுமல்ல மக்களின் கூடிவருதல், சபையின் ஒருமைப்பாடு இவைகளை நினைந்து பார்க்க தூண்டுகிறது. மேலும் இவைகளே சமுதாய வாழ்விற்கு அடையாளங்களாக அமையும் என்றும் நம்புகின்றனர்.

திருச்சபையின் புரிந்து கொள்தலின் படி

1. வார்த்தையானது திருத்தூதர்களால் அனுப்பப்பட்டது.
2. ஒன்று கூடும் போது பகிர்வு முக்கிய அடையாளமாக உறுதிப்படுத்தப்பட்டது.
3. அப்பம் பிட்குதல் இயேசு கிறிஸ்துவின் துன்பம் மரணம், உயிர்த்தெழுதல் வழியான புதிய உடன்படிக்கையின் நினைவு கூருதலாக ஏற்கப்பட்டது.
4. இறைவேண்டலில் உறுதியுடனிருத்தல் ஊக்கப்படுத்தப்பட்டது.

இந்த நான்கு அடிப்படை தகவுகளும் திருச்சபையின் வாழ்வாகவும் ஒருமைப்பாட்டிற்கு தூண்களாகவும் இருக்கிறது என்பதும், கிறிஸ்தவ சமூகமானது இவற்றுக்கு முக்கியத்துவம் தரவேண்டும் என்ற எதிர்ப்பார்ப்பும் மேன்மையாக வெளிப்படுத்தப்படுகிறது. மேலும் எருசலேமின் கிறிஸ்தவர்கள் அனைத்துலக சகோதர சகோதரிகளையெல்லாம் தங்களுடன் இணைந்து அவர்களின் நீதி, அமைதி (சமதானம்) மகிழ்வு இவைகளுக்காகவும், இவைகளை நிலைநிறுத்த பாடுபடும் அனைவருக்காகவும் இறை வேண்டல் ஏறெடுக்க அழைப்பு தருகின்றனர்.

*நாள் 1*

# எருசலேம் திருச்சபை

யோவே. 2:21-22; 28-29 திப. 2:1-12
திபா. 46 யோவா. 14:15-21

கிறிஸ்தவ ஒருமைப்பாட்டின் இந்த இறைவேண்டல் நாட்களின் பயணம் எருசலேமின் பெந்தெக்கோஸ்து சபையின் தொடக்க பயணம்.

தி.ப. 2:42 -ன் அடிப்படையிலே இந்த நாட்களில் சிந்தனையை தொடர இருக்கிறோம். கிழக்கத்திய நம்பிக்கையின்படி திருச்சபையின் வெற்றி தொடக்க கால கிறிஸ்தவ சமூகமாகிய எருசலேமிலிருந்து வெளிப்படுத்தப்பட்டது. திருத்தூதுவர் காலத்தில் எருசலேம் திருச்சபையை விண்ணக எருசலேம் திருச்சபையோடு தொடர்புபடுத்தினார்கள். அதினுடைய வெளிப்பாடாகவே குறிப்பிடும் அனைத்து திருச்சபைகளும் அதன் அடையாளத்தைக் வழக்கத்திற்குட்படுத்தினர். தொடக்க கால வழிபாட்டு முறையாகிய திருத்தூதர் கற்பித்தவற்றிலும், நட்புறவிலும், அப்பம் பிடுவதிலும் இறைவேண்டுலலிலும் உறுதியாய் நிலைத்திருந்தார்கள் (திப. 2:42) என்பதும் நடைமுறைப்படுத்தப்பட்டது.

### *எருசலேம் திருச்சபை :*

1. ஒருங்கிணைப்பின் அடையாளம் ( யோவா 14:17-20)
2. ஓங்கி வளரும் அமைதியின் அடையாளம் (தி.பா. 46:10)
3. ஒப்புரவாக்குதலின் அடையாளம் (யோவே 2:28)

இன்றைய கால எருசலேம் திருச்சபை திருத்தூதர்களின் எருசலேம் திருச்சபையின் தொடர்ச்சியாகவே இருக்கிறது. உண்மைகளே சான்றுகளாக, பறைசாற்றும் வாக்காக உள்ளது. இதுவே இன்றும் அநீதிக்கு எதிராக போராடுகிறதாகவும், ஒருமைப்பாட்டிற்கான வழிமுறைகளான சமாதானம், நீதி இவைகளை நிலைநாட்டும் ஊடகமாக உள்ள இறைவேண்டலை நினைவூட்டுவதாகவுமே அமைந்துள்ளது.

### *இறைவேண்டல் :*

1. அனைத்துலக திருச்சபைக்காக C.S.I, C.N.I, மார்த்தோமா, மெதடிஸ்ட் ஆங்கிலிக்கன் ........
2. ஒருமைப்பாட்டிற்கான வாயில்கள் திறக்கப்பட
3. ஒரே கூட்டுறவில் கிறிஸ்தவர்கள் ஒருங்கிணைக்கப்பட
4. உலகின் எல்லா துறைகளிலும் கிறிஸ்தவர்களின் பங்களிப்பு ஒப்புரவாக்குதலுக்கு வித்திட (மருத்துவம், அறிவியல், பொறியியல் கல்வி,சுகாதாரம்)

***நாள் 2***

# அனைவரும் ஒரே உடலின் உறுப்புகள்

ஏசா. 55: 1-4 — I கொரி. 12:12-27
திபா. 85: 8-13 — யோவா. 15: 1-13

திருத்தூதர் பணிகளில் உள்ள எருசலேம் திருச்சபை நாம் அனைவரும் எதிர்பார்க்கும் ஒற்றுமையின் வழிகாட்டியாக விளங்குகிறது. இதயங்களோடுள்ள இசைவும். இணைவுமே வேற்றுமையில் ஒற்றுமை எனும் சூழமைவை ஏற்படுத்த முடியும்.

திருத்தூதரான பவுலாரின் நாட்களில் எருசலேம் திருச்சபை எல்லா மக்களையும் உள்ளடக்கியிருந்தது. கடற்கரை பகுதியிலிருந்து தொலைதூர நிலத்தினில் வாழ்ந்த மக்கள் பண்பாடு பழக்க வழக்கங்கள் பல தரப்பட்ட மொழி, பற்றுமை இவைகளுக்குட்பட்டிருந்தாலும், அவரவரது வழக்க மொழியிலே நற்செய்தியைக் கேட்டனர். மட்டுமல்ல திருமுழுக்கு, தூய ஆவியாரின் அருள் பொழிவையும் பெற்றார்கள், பவுலார் I கொரி 12:13-ல் இதையே தெளிவாக வெளிப்படுத்துகிறார். வேறுபாடு இல்லாத ஒருமைப்பாடு உள்ளடக்கிய சமுதாய அமைப்பே தேவை. இத்தகைய எதிர்பார்ப்பை நிறைவேற்றுவதில் திருத்தூதர்களின் கற்பித்தலின் முறை முக்கியத்துவம் பெற்றது. பலதரப்பட்ட சூழமைவுகள் நிறைந்திருந்தன என்பது திருமறை வெளிப்படுத்தும் வாக்காகும் (தி.ப. 1:6) இவைகளை தாண்டிய ஒருங்கிணைப்பே கிறிஸ்துவாகிய செடியில் கொடிகளாக எருசலேமின் கிறிஸ்தவர்களை பிணைத்துள்ளது (யோவா 15:5) இதுவே இன்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இன்றைய எருசலேம் வேறுபாட்டின் சிறப்புகளை சுட்டுகின்ற போது தொடக்க கால எருசலேம் திருச்சபையின் வேறுபாட்டில் ஒருங்கிணைவு என்ற சிந்தையை பற்றுமையின் படி நிலையாக நினைவூட்டுகிறார்கள்.

திருச்சபை ஒரு உடல் எனும் சிந்தை எதற்கு அடையாளமானவை

1. வேற்றினத்தாரையும் இணைக்கும் அடையாளம் ஏசா. 55:4.
2. வெட்டப்படாத ஒன்றிப்பிற்கான அடையாளம் கொரி. 12:12-27.
3. வேரூன்றி நிற்பதின் அடையாளம் யோவா. 15:1-13.

***இறைவேண்டல் :***

1. திருச்சபை கிறிஸ்துவின் திருவுடல் எனும் சிந்தை கிறிஸ்தவர்களிடத்தில் வெளிப்பட.
2. திருச்சபைகள் வேறுபாடுகளை களைந்து ஒற்றுமையில் ஒளிர்ந்திட.
3. திருச்சபைகள் இறையாளுமையின் இயக்கமாக செயல்பட.
4. திருச்சபைகளுக்குள் ஊனியல்பின் செயல்கள் வேரறுக்கப்பட்டு தூய ஆவியாரின் கனி வெளிப்பட.

*நாள் 3*

# திருத்தூதர்களின் கற்பித்தல் ஒருங்கிணைக்கிறது

ஏசா. 51:4-8 உரோ. 1:15-17

திபா. 119:105-112 யோவா. 17:6-19

திருத்தூதர் பணிகளில் எருசலேம் திருச்சபை ஆன்மீக நெறியின் கற்பித்தலில் பண்பாடு, மொழி, இனம் போன்ற பகையுணர்வை தாண்டி ஒற்றுமைப்படுத்துகிறது. வேறுபாடுகளுக்கு முன்னுரிமை தராமல் கற்பித்தலில் ஒருமுக பார்வையை வெளிப்படுத்தினர்.

திருத்தூதர்களின், கற்பித்தல், சான்று நெறி, வாழ்வுமுறை போன்றவை இயேசு கிறிஸ்துவின் இறப்பு உயிர்த்தெழுதலுக்கு சான்றாக அமைந்திருந்தது. திருத்தூதர்களின் கற்பித்தலை பவுலார் நற்செய்தி என்கிறார். மேலும் திருத்தூதர்களின் கற்பித்தலுக்கு பேதுருவின் அருளுரை முன் காரணியாக அமைந்தது (தி.ப 3: 11 4:31) யோவேல் இறைவாக்கினரின் வெளிப்பாட்டில் திருச்சபையின் இறைமக்கள் கடவுளோடு இணைவு பெறுகிறார்கள். (யோவே 2:21-22; 28-29) துன்பம், துயரம், துக்கம் அவமரியாதை பழித்துரைத்தல் எனும் வேறுபாடுகளை தாண்டி கடவுளின் வாக்கு அனைவரையும் ஒருங்கிணைக்கிறது. ( தி.பா. 119:105-112)

இன்றைய எருசலேம் திருச்சபை திருத்தூதர்களின் கற்பித்தலை தனித்துப் பாராமல் நிறைவுடன் பார்க்க அழைக்கிறது. அப்படியெனில் அது கற்பித்தலாகவோ, போதனையாகவோ தெரியாது. மாறாக தொடக்ககால திருச்சபையை ஒருமைப்பாட்டுக்கு நெறிப்படுத்தியதாகவும் வழிபாட்டின் வழிகாட்டியாகவும் வெளிப்படுகிறது. இத்தகைய வழிபாட்டின் தொடர் நிகழ்வே பவுலாரின் வாழ்வுக்கு அடையாளமாயிற்று. அதோடு நின்று விடாமல் மீட்பளிக்கும் ஆற்றல் நிறைந்த ஆண்டவரை அறிவிக்கவும் உந்தியது. ஏசாயா இறைவாக்கினரில் நினைவூட்டப்படுவது இறைவாக்கு கற்பிப்பது மானுடத்தை நீதியின் ஒளியாகிய கடவுளிடமிருந்து பிரிக்க முடியாது என்பதாகவே. வாழ்வின் நெறியினில் கற்பிக்கப்படும் இறைவாக்கு தரும் செய்தி.

1. விடுவிக்கிறது ஏசா 51:4-8
2. வியத்தகு செயலுக்கு திரு நிலைப்படுத்துகிறது உரே 1:15-17
3. விழாமல் காக்கிறது யோவா 17:15

***இறைவேண்டல் :***

1. இறைவாக்கு மானுட உள்ளங்களில் வேருன்றப்பட
2. இதயத்தினில் பற்றியிருக்கும் ஊனியல்பின் தன்மைகள் மாற்றப்பட
3. இறைவாக்கு கற்பிக்கப்படும் போது தூய ஆவியாரின் ஆற்றல் திருமக்களை நிரப்ப
4. மக்கள் ஒருங்கிணைவு பெற (சமய, சமூக, பாரம்பரிய சடங்கு, கலாச்சாரம் சார்ந்த பிரிவினைகள் மாறிட)

*நாள் 4*

# ஒருமைப்பாடு - பகிர்தல், அறிவித்தல்

ஏசா. 58:6-10 தி.ப. 4:32-37

திபா. 37:1-11 மத். 6:25-34

எருசலேம் திருச்சபையின் திருத்தூதுரை அடையாளத்தின் தொடர்ச்சியாகவே ஒருங்கிணைப்பு படி நிலைகள் அடையாளப் படுத்தப்பட்டுள்ள. (தி.ப. 2:42) தற்கால சூழலில் நடைமுறைக்கேற்ப திருத்தூதுப் பணியை நினைவிற்கு கொண்டு வர வேண்டுமென்றும் இன்றைய எருசலேம் திருச்சபை அழைப்பு தருகின்றது. திருத்தூது கற்பித்தலின் பொதுவான தேவைக்கேற்றதான பகிர்வு முக்கியத்துவம் பெறுகிறது. (தி.ப 2: 44-45) ஆற்றல் நிறைந்த பகிர்வுக்கு இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் சான்றும், ஆண்டவரின் பேரருளுமே அவர்களை இயக்கியது. இதுவே ரோம ஆட்சியாளர்களின் காலத்தில் கொடுக்கப்பட்ட துன்பத்தின் கொடூர நிலையிலும் ஒருவரோடொருவர் அன்பு கொள்வதற்கு ஏற்புடையதாக அமைந்தது.

இன்றைக்கும் எருசலேம் திருச்சபை தன்னிடத்திலுள்ள வளங்களை பங்கிடக்கூடிய தன்மையில் நிறைந்துள்ளனர். இதற்கு காரணியாக இருப்பது தொடக்க கால கிறிஸ்தவர்களின் அடையாளத்துவமே. இது எருசலேம் திருச்சபைக்கு மட்டுமல்ல அனைத்து திருச்சபைகளுக்கும் இறைமக்களுக்கும் அறைகூவல் மற்றும் அடையாளமுமேயாகும். மட்டுமல்ல, நற்செய்தி அறிவிப்புடனும் பாஸ்கா கொண்டாட்டத்துடனும், கிறிஸ்தவ சமூக ஒன்றிப்புடனும், வேறுபாடின்றி அடிப்படை நீதியுடன் இணைக்கப்படுகிறது.

பகிர்வு இயேசு கிறிஸ்துவில் ஒன்றிக்கப்பட்டு எருசலேம் திருச்சபையின் அடையாளமாக்கப்பட்டுள்ளது. இறைமக்கள் அனைவரும் வேறுபாடில்லாத ஒருமைப்பாட்டின் அடையாளங்களே. திருத்தூதுரைப் பணியினில் எருசலேம் திருச்சபை ஒருவரையும் விட்டுவிடவில்லை. ஒவ்வொருவரின் துன்பத்தையும் சுமைகளையும் அழுத்தங்களையும் பகிர்ந்து கொண்டனர். மட்டுமல்ல அவர்களது மகிழ்வு, அரும் பெரும் செயல், ஆசிகள், ஆரோக்கியம் எனும் இவைகளையும் பகிர்ந்தனர். அதோடு கிறிஸ்தவர்களின் ஒருமைப்பாட்டுணர்வை வளர்க்கும் நிலையிலே உள்காட்சிகளை அன்பு பரிசாக திருச்சபை ஒரு பாரம்பரிய வழக்கத்திலிருந்து மற்றொரு நிலைக்கு பங்களித்தது. அந்த பகிர்வு உலகளாவிய ஒருமைப்பாட்டின் பங்களிப்புக்கு பரிசாக அமைந்தது. திருத்தூதர்களின் கற்பித்தல், நட்புறவு, இறைவேண்டல் இவையே கிறிஸ்தவ ஒருமைப்பாட்டிற்கு அடித்தளமாக அமைந்துள்ளது. பகிர்வுக்கும், அறிவித்தலுக்கு அடையாளமாக இருப்பது.

1. இறைநம்பிக்கை தி.பா. 37:5
2. இருப்பதை இழப்பது தி.ப. 4:342
3. இதய மாற்றம் மத். 6:25-34

***இறைவேண்டல் :***

1. திருச்சபைக்குள் சகோதரத்துவம் தழைத்திட.
2. இறைமக்களுக்குள் மற்றவர்களை குறித்த சிந்தை வளர்ந்திட.
3. பகிரும் தன்மை உள்ளத்தினில் வேருன்றிட.
4. துன்பங்களிலிருப்போருக்கு நற்பணி செய்திட (வியாதி, கடன் பிரச்சனை, குடும்பத்தில் கருத்து வேறுபாடு).

## நாள் 5

# நம்பிக்கையில் உடைக்கப்படும் (பிட்கப்படும்) அப்பம்

வி.ப. 16: 13b-21 b                                I கொரி. 11:17-18 23-26

திபா. 116:12-14, 16 - 18                          யோவா. 6 : 53-58

எருசலேமின் தொடக்க கால திருச்சபையிலிருந்து இன்று வரை அப்பம் பிட்குதல் என்பது கிறிஸ்தவ வாழ்வில் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். தற்கால எருசலேம் கிறிஸ்தவர்களின் வழக்கத்தினில் அப்பம் பகிருதல் என்பது நட்பு, மன்னிப்பு. மற்றவர்களோடுள்ள ஒப்படைப்பு என்ற நிலையிலே சிறப்பு பெறுகிறது. இறைவாக்கின் வெளிப்பாடுகளோடு இந்த உலகின் வேறுபாடகளை தாண்டி ஒருங்கிணைப்பில் அப்பம் பிட்குதல் அறைகூவல் தருகிறது. இதுவே அனைத்து மானிடத்திற்கும் நம்பிக்கையின் இறைவாக்காக வெளிப்பட்டுள்ளது. பல்வேறு வழிகளில், பல்வேறு அமைப்புகளில் அப்பம் பிட்குதல் புதிய நிலையை பெற்றுள்ளது.

தற்கால நிலையில் அப்பம் பிட்குதல் உயர்ந்த நற்குணங்களோடு, மகிழ்வான உள்ளத்தோடும், பலதரப்பட்ட அனுபவங்களோடும், நினைந்து கொள்ள வேண்டும். அதில் அதிகமாக ஒற்றுமையற்ற தன்மையை வலிகளோடு நினைவுகூருதல் வேண்டும்

நம்முடைய கற்றுக் கொள்ளுதல், நம்பிக்கையின் வழியில் கடவுளின் நன்மையை பெற்றுக் கொள்தல் என்பதை தெளிவுபடுத்துகிறது எனலாம். இஸ்ராயேலரின் பாலை நில பயணத்தில் கடவுளின நடத்துதல் வியக்கும் தன்மையையே வெளிப்படுத்துகிறது. நிறைவற்ற நிலையில் வாழ்ந்து வந்த இஸ்ராயேல் மக்களை விடுவிப்பதும் அவர்களது தேவைக்கேற்ப உணவூட்டுவதும் கடவுளின் சிறப்பு நிலையாகும். எந்த நிலையிலும் குறையாமலும், மீதம் எடுக்காமலும் நிறைவாக அவர்களுக்கு தரப்பட்டது. அதுவே கடவுளின் அருட்கொடையான மன்னா என்பதையும் அறிதல் வேண்டும்.

தூய பவுலார் அப்பம் பிட்குதல் கொண்டாட்டமான மாறாக நிகழ்வு என்றும் அது உலகிற்கான கிறிஸ்துவின் திருவுடல் என்றும் குறிப்பிடுகிறார். மட்டுமல்ல இந்த திருவிருந்து கிறிஸ்தவ சமூகமாக வாழவும் கிறிஸ்துவோடு கொண்டிருக்கும் ஆனமீக உறவு நிலையில் நிலையூன்றி நிற்பதற்குமேயாகும். இந்த உறவு நிலைக்கு கடினமான உலகினில் நாம் வாழும் வாழ்வே நிலைநிறுத்துகிறது. மேலும் மானிட வாழ்வு நினைந்து தொடங்குதலிலே சிறப்பு பெறுகிறது.

தூய யோவான் இறைமக்கள் அனைவரும் நிலை வாழ்வுக்குரியவர்கள் என்றும், அந்த வாழ்வு நிறைவானது என்றும் கற்பிக்கிறார். அப்பம் பிட்குதல் எனும் கிறிஸ்தவ சாக்கிரமெந்து, நமது வாழ்வின் துன்பம் நிறைந்த மற்றும் நம்பிக்கையின் நிலையினில் எப்படி வாழ்வது என்ற அறைகூவலை தருகிறது. எவ்வாறாக நம்பிக்கையிலும், மகிழ்விலும் சான்றுடன் வாழ்வது என்பது எருசலேம் கிறிஸ்தவர்களின் அறைகூவலாகவே இருக்கிறது. அப்பம் பிட்கும் இந்த பற்றுமையின் நிகழ்வு தரும் செய்தி என்ன?

1. பசியகற்றுகிறது வி.ப. 16 15
2. பாடுகளை நினைவூட்டுகிறது கொரி. 11:24
3. பரம உறவில் இணைக்கிறது யோவா. 6:56

***இறைவேண்டல் :***

1. பொருள் உணர்ந்து அப்பம் பிட்குதல் எனும் விசுவாச அனுபவத்தில் இணைக்கப்பட.
2. ஒற்றுமையுணர்வுடன் திருப்பந்தி முறைப்படுத்தப்பட.
3. ஆயத்தம் ஆன்மீக ஈடுபாடு ஆர்ப்பணம், எனும் சிறப்பான பண்பு நிலைகள் மானிட உள்ளங்களில் உறுதிப்படுத்தப்பட.
4. ஏழ்மையில் தரித்திரத்தில், பொருளாதார நெருக்கடியுல் தளர்ந்திருப்போருக்காக.

*நாள் 6*

# இறைவேண்டல் செயல்பட அதிகாரப்படுத்துகிறது

யோனா 2:1-9 | Iதீமொ. 2:1-8
திபா. 67:1-7 | மத். 6:5-15

திருத்தூதர்களின் கற்பித்தலில் ஒற்றுமை வாழ்வு, அப்பம் பிட்குதல் எனும் சிந்தனையை தொடர்ந்து இறைவேண்டல் அழுத்தம் பெறுகிறது. தொடக்ககால திருச்சபையின் இறைவேண்டல் வாழ்வு, ஆற்றலையும், வலிமையும் தந்தது. அனைத்து இடங்களிலிருந்தவர்களும் அனுபவித்தார்கள். தற்கால நிலையினில் அநீநி, ஒற்றுமையின்மை வேருன்றியுள்ள நிலையினில் சான்றுடன் வாழ இறைவேண்டலே சிறந்த ஊடகம் என்பதை எருசலேம் திருச்சபை உணர்ந்து அழைக்கிறது.

யோனாவின் வேண்டுதலால் மீன் அவரை கரையினிலே வாந்தி பண்ணியது. யோனாவின் இறைவேண்டல் உள்ளத்தின் ஆழத்திலிருந்து வெளிப்பட்டது. இறை விருப்பத்திற்கு எதிராக நடந்ததை உணர்ந்து வெளிப்பட்டது. கடவுளின் வாக்கினை நினிவேக்கு அறிவிக்க அறிவுறுத்தப்பட்ட யோனா கீழ்ப்படியாமல் சுய ஆற்றலை நம்பின படியால் அவர் எதிர்பாராத நிலையினில் தள்ளப்பட்டார். உணர்ந்து ஏறெடுக்கப்பட்ட வேண்டுதலால் காப்பாற்றப்பட்டார். தாவீது அரசர் அவரது முகத்தின் ஒளி நம்மேல் வாழ வேண்டுமென்று வேண்டுதல் ஏறெடுக்க அழைப்பு தருகிறார். மட்டுமல்ல தனிப்பட்ட நன்மை மட்டுமன்றி அவருடைய மாட்சியையும், ஆட்சியையும் அனைத்து நாடுகளுக்கும் அறிவிக்கவும் அழைப்பு பெறுகிறோம்.

நமது ஆற்றலுக்கும் வலிமைக்கும் ஊடகமாயிருப்பது இறைவேண்டலாகும். மட்டுமல்ல இதுவே உலகத்திற்கு எடுத்துரைக்கும் இறைவாக்கின் வெளிப்பாட்டுக்கும் அழுத்தமாக இருக்கிறது. இந்த உண்மை தொடக்க கால திருச்சபையில் நமக்கு நினைவூட்டப்படுகிறது. பவுலார் திமொத்தேயுவுக்கு அறிவுறுத்தும் போது அனைவருக்காவும் குறிப்பாக உலகின் அதிகாரத்திலிருப்போருக்காகவும் வேண்டுதல் செய்ய கூறுகிறார். இறைவேண்டலால் நாம் சமாதானத்துடனும், மேன்மையுடனும் இணைந்து வாழ முடியும். கூட்டுறவுக்காக சமுதாய இணைப்புக்காக ஏறெடுக்கும் இறைவேண்டல் முழு உலகையும் சென்றடையும்.

இந்த ஆற்றல் நிறைந்த இறை வேண்டல் வாழ்வு சீடர்களுக்கு கற்றுக் கொடுத்தலில் வேருன்றியது. பணிவும் ஒப்படைப்பும் கூட்டுறவும், தந்தையின் திரு விருப்பத்திற்கு நம்மை நடத்துகிறது. ஆண்டவரின்

அரசை பூமியில் கட்டி எழுப்பவும் மற்றவர்களை மன்னிக்கக் கூடிய வாழ்க்கை வாழ்வதற்கும் இயேசுவின் அழைப்பு தொடருகின்றது.

இறைவேண்டல் என்பதற்குரிய புரிந்து கொள்ளல்

1. இறை உறவின் இணைப்பு (Iதிமோ. 2:5)
2. இடங்களை தகர்க்கும் ஊடகம் (யோனா 2:5)
3. இறைவிருப்பத்திறகு பணிந்தடங்குதல் (மத். 6:10)

***இறைவேண்டல் :***

1. வாழ்வின் சூழல்களில் பின் வாங்காமல் விசுவாசத்தில் உறுதியுடன் முன்னேற
2. நாட்டை ஆளுகை செய்வோர் அதிகாரத்திலிருப்போர், அனைவருக்காகவும்.
3. முதன்மை பேராயர், துணை பிரதமப் பேராயர், அனைத்து பேராய பேராயர்கள், ஆயர்கள், திருப்பணியாளர்கள், அருட்பணியாளர்கள் அனைவருக்காக
4. இறையாளுமையை உறுதிப்படுத்தும் பணியில் செயல்படும் அனைத்து ஆன்மீக நிறுவனங்களுக்காக, பணியாளர்களுக்காக.

*நாள் 7*

# உயிர்த்தெழுதலின் நம்பிக்கையில் வாழ்வு

எசா. 60:1-3; 18-22 உரோ. 6:3-11

திபா. 118:1; 5-17 மத். 28:1-10

தொடக்க கால கிறிஸ்தவர்கள் திருத்தூதர்களின் கற்பித்தல், நட்புறவு அப்பம் பிட்குதல் இறைவேண்டல் இவைகளில் உறுதியுடன் நிலை கொண்டிருந்தனர். அவர்கள் எல்லாவற்றுக்கும் மேலாக உயிர்த்தெழுந்த இயேசுவின் ஆற்றலில் நடைமுறைப்படுத்தினர். இந்த ஆற்றல் இன்றும் உயிருடன் இருக்கிறது; மட்டுமல்ல, தற்கால எருசலேம் கிறிஸ்தவர்களுக்கு சான்றாகவும் உள்ளது. மட்டுமல்ல தங்களது துன்ப அழுத்தங்களிலும் அவர்களையே நினைந்து கொண்டார்கள். இத்தகைய பாடுகளின் பாதைகள் கெத்சமனி, கொல்கொதா ஆகியவைகளின் வடிவங்களாகவே உணர்ந்தனர். இயேசுவின் உயிர்த்தெழுதலின் உண்மையை விசுவாசத்தோடு ஏற்கும் போது அனைத்தும் புதுப்பிக்கப்படும் என்பதையும் தெளிவாகவே அறிந்திருந்தனர்.

உயிர்த்தெழுதலின் நம்பிக்கையும் ஒளியும் அனைத்தையும் மாற்றும் என்ற நம்பிக்கையும் அவர்களிடம் வெளிப்பட்டது. இதையே ஏசாயா இறைவாக்கினரும் காரிருளில் நடந்தவர்கள் பேரொளியை கண்டார்கள் (ஏசா. 9:2) என்கிறார் எருசலேம் உயிர்த்தெழுதலின் ஆற்றலை வெளிப்படுத்துமிடமாகவும், இயேசுவின் சிலுவை துன்ப நிலைகளை பறைசாற்றுமிடமாகவும், அனைத்துலக அரசவையும் ஒளிக்குள் இணைத்துக்கொள்ளும் வலிமை நிறைந்ததாகவும் காட்சி தருகிறது. வன்செயல் ஒரு பக்கமிருந்தாலும் புது வாழ்வு, மீட்பு, போற்றுதல், பாதுகாப்பு ஆகியவை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. திருப்பாடலில் கடவுளின் வாக்கு மரண பிடியிலிருந்து வாழ்வினுள் பயணிக்கும் கிறிஸ்தவர்களை ஒருமுகப்படுத்துகிறது. என்றும் கடவுளின் நிலையான அன்பு, மரண பயத்தை அகற்றி புதிய வாழ்வு பாதை இவைகளில் இணைக்கிறது என்றும் தெளிவுப்படுத்தப்பட்டுயிருப்பதை அறியலாம். (தி.பா. 23)

தூய பவுலார் திருமுழுக்கினில் இயேசுவுடன் அடக்கம் பண்ணப்பட்டு அவருடனே கூட எழுந்திருந்தோம் என்றும், அவருடனே மரித்த நாம் அவருடைய உயிர்த்தெழுதலை பகிர்ந்திடவே வாழ்கிறோம் என்கிறார். ஆகவே தான் உலகினை நாம் பரிவோடும், சமாதானத்தோடும், அன்போடும், நம்பிக்கையோடும் பார்க்கிறோம். மேலும் கிறிஸ்தவ நற்செய்திக்கு இயேசுவின் உயிர்ப்பு உயிர்துடிப்புடன் செயல்பட தூண்டும் வேராகவே உள்ளது. அச்சம் அகற்றி, அவரோடு இணைந்து செயல்பட அழைக்கிறார்.

இயேசுவின் உயிர்த்தெழுதல் நிகழ்வு திருச்சபைக்கு தரும் அழுத்தம்.

1. உடைவுகளை சீர்படுத்துகிறது (ஏசா. 60:20; தி.பா. 118:15-17)
2. உணர்வுகளை ஊக்குவிக்கிறது (உரோ. 6:9)
3. உலகினில் சான்றுக்கு நிலைப்படுகிறது (மத். 28:10)

***இறைவேண்டல் :***

1. நற்செய்தியாகிய இயேசுவில் அனைத்துலகும் இணைக்கப்பட்டு எங்கும் இறை ஆற்றல் வெளிப்பட.
2. நறுமணம் நிறைந்த கடவுளின் வாக்கால் அனைத்து உள்ளங்களின் அழுக்குகளும் கழுவப்பட மரண பயத்தியிருந்து விடுவிக்கப்பட்டு ஆற்றலுடன் செயல்பட.
3. நம்பிக்கையிழந்து நிற்கும் கைம்பெண்கள் ஆதரவற்றோர், கைவிடப்பட்டோர், நிராகரிக்கப்பட்டோர் ஆகியோரின் வாழ்வில் நம்பிக்கையின் ஒளி ஒளிர்ந்திட.

4. நாட்டினில் வன்செயல் புரிந்து, அமைதியை குலைத்து மனித நேயத்தை வேரறுக்கும் அனைவரும் மாற்றம் பெற்று புதிய வாழ்வு வாழ.

***நாள் 8***

## சேவை மற்றும் ஒப்புரவாக்குதலுக்கான அழைப்பு

| | |
|---|---|
| தொ.நூ. 33:1-4 | 2கொரி. 5:17-21 |
| திபா. 96:1-13 | மத். 5:21-26 |

இந்த வாரத்தின் இறைவேண்டல்களெல்லாம் இறைமக்களாகிய நம்மை ஒருமித்த பயணத்திற்கு வழிநடத்துகிறது. தரப்பட்ட இறைவாக்கின் வழிகாட்டுதலோடு தொடக்கக் கால கிறிஸ்தவத்திற்கு திரும்ப அழைக்கப்பட்டிருக்கிறோம். திருத்தூதர்களின் கற்பித்தலில் (தி.ப. 2:42) உண்மை நிலைக்கு திரும்ப அழைக்கப்படுகிறோம். கருத்து முரண்பாடுகள் குறைவுகள், ஏமாற்றுதல் அநீதி நிறைந்த சூழலில் எதற்காக இந்த வார இறைவேண்டல் ஒருமைப்பாட்டிற்காக ஏறெடுக்கப்பட்டது என எருசலேம் திருச்சபை கேள்வி கேட்கிறது. இக்கேள்விக்கான பதிலையும் எருசலேம் திருச்சபையே தருகிறது. அது ஒப்புரவாகுதலின் பணியைச் செய்வதற்கே என்பதாகும். திருச்சபையானது அரசியல் பிளவுகளையும், அநீதிகளையும் மாற்றியெடுக்கும் அடையாளமான ஊடகமாகும்.

அனைத்து தரப்பட்ட சமய மக்களோடும் விசுவாச சமூகங்கள், அவிசுவாச சமூகங்கள் என எல்லா நிலையில் வாழ்வோரின் நடுவிலும் ஒப்புரவாக்குதலின் பணி அழைப்பிற்கேற்ப பொறுப்பு நிறைந்ததாக இருக்க வேண்டும்.

ஏசா, யாக்கோபு இருவருமே சகோதரர்கள், ஆனால் பகைமை தன்மையால் விரோதிகளானார்கள். இந்நிலையை விட்டு, கோபத்தினை துறந்து அன்புறவில் இணைந்த போது ஒப்புரவாகுதல் மலர்ந்தது ஆகவே இருவரும் கட்டித் தழுவி அழுதார்கள்.

ஒற்றுமையானது கிறிஸ்தவர்களை மற்றவர்களுக்கு அடையாளப்படுத்துகிறது. மட்டுமல்ல நீதியால் உலகை ஆளும் கடவுளை மகிமைப்படுத்துகிறது.(தி.பா. 96) மேலும் கிறிஸ்து வழியாக கடவுள் ஒப்புரவாக்குதலை அனைத்து மானிடமும் உறுதிப்படுத்தினார். தூய பவுலார் இதை ஒரு புதிய படைப்பு என்கிறார். இதற்காகவே கடவுளின் ஆற்றல் புதிதாக்க அழைப்பு விடுக்கிறது, நற்செய்தி என்பது புதுப்பிக்கப்பட்ட வாழ்வு வாழ்வதே ஆகும். இதுவே இயேசுவின் அறை கூவல் நிறைந்த செய்தியாக மத்தேயு குறிப்பிடுகிறார். பலிபீடத்தின் முன் காணிக்கை செலுத்துவது ஒப்புரவாக்குதலில் செலுத்தப்பட வேண்டும்.

நல்லுறவுக்கு தடையாக இருக்கும் பிரிவினைக்கும் அநீதிக்கும் நாமே பொறுப்பேற்க வேண்டும். கிறிஸ்தவ ஒற்றுமைக்கான இறைவேண்டலின் அழைப்பு செயல் சார்ந்ததாக இருக்க வேண்டும். சேவை மற்றும் ஒப்புரவாகுதலின் பணியை செய்ய தரப்படும் சிந்தை என்ன?

1. மாற்றம் பெறுதல் (மத். 5:23-24)
2. மறுமலர்ச்சி அடைதல் (தொ.நூ. 33:4; 2கொரி. 5:17)
3. மருவுருவாக்கத்திற்கு இணங்குதல் (2கொரி 5:20; தி.பா. 96:2)

### *இறைவேண்டல் :*

1. குடும்பங்களில் ஒப்புரவுக்காக சகோதரத்துவ உறவுகளின் நல்லுறவு ஏற்பட.
2. திருச்சபைகளில் காணப்டும் பிரிவினைகள் மாற்றப்பட்டு ஒப்புரவாகுதலின் திருப்பணி தொடர்ந்திட.
3. ஒப்புரவுக்கு இடையூறாக இருக்கும் சுய நலம், சுய பெருமை சுய மேட்டிமை மாறி இயேசு கிறிஸ்துவின் நல் சிந்தை அனைவரிலும் வேரூன்றிட.
4. கிறிஸ்தவ வாழ்வின் சான்றுள்ள நல் நடத்தையால் முழு உலகமும் மீட்கப்பட.

அருள்திரு. **இரா. சாம்பிரின்ஸ்**